செம்மொழித் தமிழ்
அகப்பொருள் களஞ்சியம்

தொகுதி–4

ஒருவழித்தணத்தல், வரைவு நீட்டிப்பு,
வரைவு கடாயது

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

செம்மொழித் தமிழ்
அகப்பொருள் களஞ்சியம்
தொகுதி 4

ஒருவழித்தணத்தல், வரைவு நீட்டிப்பு, வரைவு கடாயது

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

பழனியப்பா பிரதர்ஸ்
'கோனார் மாளிகை'
25, பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
தொலைபேசி : 044-28132863 / 43408000
e-mail: sales@palaniappabrothers.com
கிளைகள்
திருச்சி - 620 002 சேலம் - 636 001
கோயம்புத்தூர் - 641 001 மதுரை - 625 001
ஈரோடு - 638 001

முதல் பதிப்பு : 2017
© உரிமை – ஆசிரியருக்கு

ISBN: 978-81-8379-767-2 (Set of 14)
978-81-8379-771-9 (Vol-4)

தனிப்பிரதி விலை ரூ. 600/-
(தொகுதி-4)

மொத்த விலை ரூ. 7200/-
(14 தொகுதிகள்)

கணினி அச்சு : திருமதி இந்திராகாந்தி ரவி
ரமணா கணினி வரையகம், 97890 65515

ஏசியன் பிரிண்டர்ஸ், சென்னை - 600 014.

PB

கிளைகள்

திருச்சி
பழனியப்பா பிரதர்ஸ்
அஞ்சல் பெட்டி எண். 312,
தெப்பக்குளம்,
திருச்சிராப்பள்ளி – 620 002
தொலைபேசி : 0431-2702160

சேலம்
பழனியப்பா பிரதர்ஸ்
கதவு இலக்கம் 77,
(பழைய எண் 39) செர்ரி சாலை,
சேலம் – 636 001
தொலைபேசி : 0427-2450711

கோவை
பழனியப்பா பிரதர்ஸ்
683, ராஜா தெரு,
கோயமுத்தூர் – 641 001
தொலைபேசி : 0422-2393704

மதுரை
பழனியப்பா பிரதர்ஸ்
23-A, மேற்கு கோபுரத் தெரு,
மதுரை – 625 001
தொலைபேசி : 0452-2346258

ஈரோடு
பழனியப்பா பிரதர்ஸ்
950, ப்ரோக் சாலை,
ஈரோடு – 638 001
தொலைபேசி : 0424-2256261

பொருளடக்கம்

களஞ்சிய வாயில் xvi

மதிப்புரை xxi

பதிப்புரை xxii

அகத்திணை xxiv

ஒருவழித்தணத்தல்

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐங்குறுநூறு 161	பெருங்கடல்	அம்மூவனார்	9
ஐங்குறுநூறு 162	பெருங்கடல்	அம்மூவனார்	7
ஐங்குறுநூறு 163	பெருங்கடல்	அம்மூவனார்	10
ஐங்குறுநூறு 199	கானல்அம்	அம்மூவனார்	14
ஐங்குறுநூறு 214	சாரல்	கபிலர்	2
ஐங்குறுநூறு 221	அம்ம	கபிலர்	3
ஐங்குறுநூறு 225	அம்ம	கபிலர்	13
ஐங்குறுநூறு 227	அம்ம	கபிலர்	28
ஐங்குறுநூறு 231	யாங்கு	கபிலர்	31
ஐங்குறுநூறு 232	போதார்	கபிலர்	34
ஐங்குறுநூறு 233	வருவை	கபிலர்	5
ஐங்குறுநூறு 285	பின்இரும்	கபிலர்	32
ஐங்குறுநூறு 297	விரிந்த	கபிலர்	6

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
கலித்தொகை 53	வறன்உறல்	கபிலர்	39
கலித்தொகை 121	ஒண்சுடர்	நல்லந்துவனார்	35
கலித்தொகை 137	அரிதே	நல்லந்துவனார்	22
கைந்நிலை 49	நாவாய்	புல்லங்காடனார்	12
திருக்குறள் 1125	உள்ளுவன்	திருவள்ளுவர்	43
திருக்குறள் 1126	கண்உள்ளின்	திருவள்ளுவர்	44
திருக்குறள் 1127	கண்ணுள்ளார்	திருவள்ளுவர்	46
திருக்குறள் 1128	நெஞ்சத்தார்	திருவள்ளுவர்	47
நற்றிணை 38	வேட்டம்	உலோச்சனார்	20
நற்றிணை 199	ஓங்குமணல்	பேரிசாத்தனார்	18
நற்றிணை 338	கடுங்கதிர்	மதுரை ஆருலவிய நாட்டு ஆலம்பேரி சாத்தனார்	16
நற்றிணை 348	நிலவே	வெள்ளிவீதியார்	26
நற்றிணை 382	கானல்	நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனார்	29

வரைவு நீட்டிப்பு

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐங்குறுநூறு 117	அம்ம	அம்மூவனார்	110
ஐங்குறுநூறு 119	அம்ம	அம்மூவனார்	111
ஐங்குறுநூறு 204	அன்னாய்	கபிலர்	113
ஐங்குறுநூறு 216	குறுங்கை	கபிலர்	114
ஐந்திணை எழுபது 58	என்னைகொல்	மூவாதியார்	116
கலித்தொகை 42	மறங்கொள்	கபிலர்	88
கலித்தொகை 43	வேங்கை	கபிலர்	94
கலித்தொகை 131	பெருங்கடல்	நல்லந்துவனார்	117
குறுந்தொகை 25	யாரும்	கபிலர்	50
குறுந்தொகை 53	எம்அணங்	கோப்பெருஞ்சோழன்	53
குறுந்தொகை 54	யானே	மீனெறி தூண்டிலார்	55
குறுந்தொகை 97	யானே	வெண்பூதி	57
குறுந்தொகை 105	புனவன்	நக்கீரர்	51
குறுந்தொகை 111	மென்தோள்	தீன்மதி நாகன்	106
குறுந்தொகை 112	கெளவை	ஆலத்தூர் கிழார்	58
குறுந்தொகை 117	மாரி	குன்றியனார்	76
குறுந்தொகை 125	இலங்குவளை	அம்மூவனார்	108
குறுந்தொகை 133	புனவன்	உறையூர் முதுகண்ணன் சாத்தனார்	60
குறுந்தொகை 152	யாவதும்	கிள்ளிமங்கலங்கிழார்	61
கைந்நிலை 1	நுகர்தல்	புல்லங்காடனார்	63
கைந்நிலை 2	வெந்த	புல்லங்காடனார்	64
கைந்நிலை 3	பாசிப்	புல்லங்காடனார்	65
கைந்நிலை 4	ஓங்கல்	புல்லங்காடனார்	66

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
கைந்நிலை 5	இரசம்கொண்(டு)	புல்லங்காடனார்	68
கைந்நிலை 6	மரையா	புல்லங்காடனார்	69
கைந்நிலை 7	கல்வரை	புல்லங்காடனார்	70
திருக்குறள் 1147	ஊரவர்	திருவள்ளுவர்	85
திருக்குறள் 1148	நெய்யால்	திருவள்ளுவர்	87
நற்றிணை 53	யான்அஃது	நல்வேட்டனார்	81
நற்றிணை 116	தீமை	கந்தரத்தனார்	132
நற்றிணை 117	பெருங்கடல்	குன்றியனார்	135
நற்றிணை 125	இரைதேர்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	74
நற்றிணை 135	தூங்கல்	கதப்பிள்ளையார்	83
நற்றிணை 211	யார்க்குநொந்து	கோட்டியூர் நல்லந்தையார்	100
நற்றிணை 233	கல்லாக்	அஞ்சிலாந்தையார்	102
நற்றிணை 272	கடல்அம்	முக்கல் ஆசான் நல்வெள்ளையார்	71
நற்றிணை 275	செந்நெல்	அம்மூவனார்	137
நற்றிணை 304	வாரல்	மாறோக்கத்து நப்பசலையார்	139
நற்றிணை 309	நெகிழ்ந்த	கபிலர்	126
நற்றிணை 327	நாடல்	அம்மூவனார்	142
நற்றிணை 347	முழங்குகடல்	பெருங்குன்றூர் கிழார்	78
நற்றிணை 357	நின்குறிப்பு	குறமகள் குறியெயினி	128
நற்றிணை 388	அம்ம	மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார்	130
நற்றிணை 399	அருவி	தொல்கபிலர்	104

வரைவு கடாயது

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 2	கோழிலை	கபிலர்	412
அகநானூறு 10	வான்கடல்	அம்மூவனார்	191
அகநானூறு 12	யாயே	கபிலர்	421
அகநானூறு 60	பெருங்கடற்	குடவாயிற் கீரத்தனார்	383
அகநானூறு 72	இருள்கிழி	எருமை வெளியனார் மகனார் கடலனார்	335
அகநானூறு 92	நெடுமலை	மதுரைப் பாலாசிரியர் நற்றாமனார்	354
அகநானூறு 100	அரையுற்று	உலோச்சனார்	271
அகநானூறு 112	கூனல்	நெய்தற் சாய்த்துய்த்த ஆவூர் கிழார்	457
அகநானூறு 118	கறங்குவெள்	கபிலர்	424
அகநானூறு 132	ஏனலும்	தாயங்கண்ணனார்	442
அகநானூறு 150	பின்னுவிட	குறுவழுதியார்	416
அகநானூறு 156	முரசுடைச்	ஆவூர் மூலங்கிழார்	366
அகநானூறு 168	யாமம்	கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான்	323
அகநானூறு 172	வாரணம்	மதுரைப் பாலாசிரியர் நப்பாலனார்	289
அகநானூறு 202	வயங்குவெள்	ஆவூர்கிழார் மகனார் கண்ணனார்	326
அகநானூறு 218	கிளைபா	கபிலர்	351
அகநானூறு 270	இருங்கழி	சாகலாசனார்	346
அகநானூறு 282	பெருமலைச்	தொல்கபிலர்	188

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 288	சென்மதி	விற்றூற்று மூதெயினனார்	418
அகநானூறு 318	கான	கபிலர்	328
அகநானூறு 320	ஓங்குதிரைப்	மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்	152
அகநானூறு 394	களவும்	நன்பலூர்ச் சிறுமேதாவியார்	463
ஐங்குறுநூறு 142	எக்கர்	அம்மூவனார்	318
ஐங்குறுநூறு 179	நல்குமதி	அம்மூவனார்	180
ஐங்குறுநூறு 180	சிறுநனி	அம்மூவனார்	198
ஐங்குறுநூறு 186	நாரை	அம்மூவனார்	411
ஐங்குறுநூறு 193	வலம்புரி	அம்மூவனார்	301
ஐங்குறுநூறு 194	கடல்கோடு	அம்மூவனார்	409
ஐங்குறுநூறு 196	கோடூர்	அம்மூவனார்	218
ஐங்குறுநூறு 234	மின்அவிர்	கபிலர்	236
ஐங்குறுநூறு 236	அன்னையும்	கபிலர்	220
ஐங்குறுநூறு 238	வார்கோட்டு	கபிலர்	302
ஐங்குறுநூறு 245	பொய்யா	கபிலர்	435
ஐங்குறுநூறு 251	குன்றக்	கபிலர்	316
ஐங்குறுநூறு 260	குன்றக்	கபிலர்	232
ஐங்குறுநூறு 264	இளம்பிறை	கபிலர்	296
ஐங்குறுநூறு 266	சிறுகண்	கபிலர்	453
ஐங்குறுநூறு 275	குரங்கின்	கபிலர்	304
ஐங்குறுநூறு 276	மந்திக்	கபிலர்	199
ஐங்குறுநூறு 277	குறவர்	கபிலர்	295
ஐங்குறுநூறு 278	சிலம்பின்	கபிலர்	305

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐங்குறுநூறு 287	நெடுவரை	கபிலர்	201
ஐங்குறுநூறு 289	கொடிச்சி	கபிலர்	388
ஐந்திணை எழுபது 1	அவரை	மூவாதியார்	211
ஐந்திணை எழுபது 6	பொன்இணர்	மூவாதியார்	168
ஐந்திணை எழுபது 7	காய்ந்தீயல்	மூவாதியார்	395
ஐந்திணை எழுபது 8	வெறிகமழ்	மூவாதியார்	169
ஐந்திணை எழுபது 10	பிரைசம்	மூவாதியார்	253
ஐந்திணை எழுபது 14	குறைஒன்(று)	மூவாதியார்	343
ஐந்திணை எழுபது 63	கண்ணுறு	மூவாதியார்	227
ஐந்திணை ஐம்பது 15	வேங்கை	மாறன் பொறையனார்	379
ஐந்திணை ஐம்பது 16	கொடுவரி	மாறன் பொறையனார்	319
ஐந்திணை ஐம்பது 17	மஞ்(சு)இவர்	மாறன் பொறையனார்	321
ஐந்திணை ஐம்பது 18	எறிந்தெமர்	மாறன் பொறையனார்	386
ஐந்திணை ஐம்பது 19	நெடுமலை	மாறன் பொறையனார்	342
ஐந்திணை ஐம்பது 44	கொண்கன்	மாறன் பொறையனார்	397
ஐந்திணை ஐம்பது 45	ஈர்ந்தண்	மாறன் பொறையனார்	145
ஐந்திணை ஐம்பது 46	ஓதம்	மாறன் பொறையனார்	298
ஐந்திணை ஐம்பது 48	எக்கர்	மாறன் பொறையனார்	163
கலித்தொகை 44	கதிர்விரி	கபிலர்	283
கலித்தொகை 46	வீயகம்	கபிலர்	202
கலித்தொகை 48	ஆம்இழி	கபிலர்	375
கலித்தொகை 52	முறஞ்செவி	கபிலர்	445
கலித்தொகை 125	கண்டவர்	நல்லந்துவனார்	249
கலித்தொகை 126	பொன்மலை	நல்லந்துவனார்	237
கலித்தொகை 127	தெரிஇணர்	நல்லந்துவனார்	241

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
கலித்தொகை 129	தொல்லூழி	நல்லந்துவனார்	164
கலித்தொகை 132	உரவுநீர்த்	நல்லந்துவனார்	155
கலித்தொகை 133	மாமலர்	நல்லந்துவனார்	208
கலித்தொகை 135	துணைபுணர்ந்து	நல்லந்துவனார்	307
கலித்தொகை 149	நிரைதிமில்	நல்லந்துவனார்	159
குறுந்தொகை 18	வேரல்	கபிலர்	258
குறுந்தொகை 48	தாதில்	பூங்கணுத்திரையார்	186
குறுந்தொகை 55	மாக்கழி	நெய்தற் கார்க்கியர்	264
குறுந்தொகை 90	எற்றோ	மதுரை எழுத்தாளன் சேந்தன்பூதன்	299
குறுந்தொகை 179	கல்லென்	குட்டுவன் கண்ணன்	467
குறுந்தொகை 244	பல்லோர்	கண்ணன்	400
குறுந்தொகை 246	பெருங்கடற்	கபிலர்	372
குறுந்தொகை 303	கழிதேர்ந்து	அம்மூவனார்	381
குறுந்தொகை 324	கொடுந்தாள்	கவை மகனார்	431
குறுந்தொகை 332	வந்த	மதுரை மருதங்கிழார் மகன் இளம்போத்தன்	146
குறுந்தொகை 342	கலைகை	காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார்	407
குறுந்தொகை 353	ஆர்கலி	உறையூர் முதுகூத்தன்	356
குறுந்தொகை 375	அம்ம	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	358
குறுந்தொகை 393	மயங்குமலர்க்	பரணர்	269
கைந்நிலை 52	அன்னையும்	புல்லங்காடனார்	315
சிலப்பதிகாரம், கானல்வரி 5	கரியமலர்	இளங்கோவடிகள்	147

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
சிலப்பதிகாரம், கானல்வரி 6	காதலர்	இளங்கோவடிகள்	149
சிலப்பதிகாரம், கானல்வரி 7	மோதுமுது	இளங்கோவடிகள்	151
சிலப்பதிகாரம், கானல்வரி 29	மறையின்	இளங்கோவடிகள்	276
சிலப்பதிகாரம், கானல்வரி 30	உண்டாரை	இளங்கோவடிகள்	278
சிலப்பதிகாரம், கானல்வரி 37	நல்நீத்	இளங்கோவடிகள்	279
சிலப்பதிகாரம், கானல்வரி 38	வாரித்	இளங்கோவடிகள்	281
சிலப்பதிகாரம், கானல்வரி 39	புலவுற்று	இளங்கோவடிகள்	282
திணைமாலை நூற்றைம்பது 18	என்ஆம்கொல்	கணிமேதாவியார்	394
திணைமாலை நூற்றைம்பது 25	கொல்இயல்	கணிமேதாவியார்	344
திணைமாலை நூற்றைம்பது 26	கருங்கால்	கணிமேதாவியார்	345
திணைமாலை நூற்றைம்பது 27	பனிவரைநீள்	கணிமேதாவியார்	398
திணைமாலை நூற்றைம்பது 34	தாமரை	கணிமேதாவியார்	339
திணைமாலை நூற்றைம்பது 35	புலால்அகற்றும்	கணிமேதாவியார்	360
திணைமாலை நூற்றைம்பது 36	முருகுவாய்	கணிமேதாவியார்	212

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
திணைமாலை நூற்றைம்பது 37	ஓதநீர்	கணிமேதாவியார்	214
திணைமாலை நூற்றைம்பது 43	கடல்கோ(டு)	கணிமேதாவியார்	215
திணைமாலை நூற்றைம்பது 46	தந்தாயல்	கணிமேதாவியார்	452
திணைமாலை நூற்றைம்பது 50	திமில்களி	கணிமேதாவியார்	216
திணைமாலை நூற்றைம்பது 52	திரைபாகன்	கணிமேதாவியார்	439
திணைமாலை நூற்றைம்பது 53	பாறு	கணிமேதாவியார்	440
திணைமாலை நூற்றைம்பது 54	வாராய்	கணிமேதாவியார்	441
திணைமாலை நூற்றைம்பது 55	கண்பரப்பக்	கணிமேதாவியார்	265
திணைமாலை நூற்றைம்பது 57	வருதிரை	கணிமேதாவியார்	217
திணைமாலை நூற்றைம்பது 59	பகல்வரின்	கணிமேதாவியார்	359
திணைமொழி ஐம்பது 2	கணமுகை	கண்ணஞ்சேந்தனார்	387
திணைமொழி ஐம்பது 7	யாமும்	கண்ணஞ்சேந்தனார்	322
திணைமொழி ஐம்பது 10	பலவின்	கண்ணஞ்சேந்தனார்	373
திணைமொழி ஐம்பது 42	முத்தம்	கண்ணஞ்சேந்தனார்	230

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
திணைமொழி ஐம்பது 44	இனமீன்	கண்ணஞ்சேந்தனார்	171
திணைமொழி ஐம்பது 45	கடல்கொழித்(து)	கண்ணஞ்சேந்தனார்	172
திணைமொழி ஐம்பது 46	முருகியல்	கண்ணஞ்சேந்தனார்	173
திணைமொழி ஐம்பது 50	பவளமும்	கண்ணஞ்சேந்தனார்	187
திருக்குறள் 1107	தம்இல்	திருவள்ளுவர்	469
திருக்குறள் 1108	வீழும்	திருவள்ளுவர்	470
திருக்குறள் 1109	ஊடல்	திருவள்ளுவர்	472
திருக்குறள் 1141	அலர்எழ	திருவள்ளுவர்	473
திருக்குறள் 1142	மலர்அன்ன	திருவள்ளுவர்	474
திருக்குறள் 1143	உறாஅதோ	திருவள்ளுவர்	475
திருக்குறள் 1144	கவ்வையால்	திருவள்ளுவர்	477
திருக்குறள் 1145	களித்தொறும்	திருவள்ளுவர்	478
திருக்குறள் 1146	கண்டது	திருவள்ளுவர்	479
நற்றிணை 4	கானல்அம்	அம்மூவனார்	267
நற்றிணை 15	முழுங்குதிரை	பாண்டியன் அறிவுடைநம்பி	274
நற்றிணை 19	இறவுப்புறத்து	நக்கண்ணையார்	254
நற்றிணை 23	தொடிபழி	கணக்காயனார்	221
நற்றிணை 55	ஓங்குமலை	பெருவழுதி	223
நற்றிணை 57	தடங்கோட்டு	பொதும்பில் கிழார்	390
நற்றிணை 67	சேய்விசும்பு	பேரி சாத்தனார்	465
நற்றிணை 93	பிரசம்	மலையனார்	256

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
நற்றிணை 96	இதுவே	கோக்குளமுற்றனார்	293
நற்றிணை 98	எய்ம்முள்	உக்கிரப் பெருவழுதி	233
நற்றிணை 108	மலைஅயல்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	245
நற்றிணை 145	இருங்கழி	நம்பிகுட்டுவன்	369
நற்றிணை 154	கானமும்	நல்லாவூர் கிழார்	331
நற்றிணை 159	மணிதுணிந்து	கண்ணம்புல்லனார்	460
நற்றிணை 172	விளையாடு	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	225
நற்றிணை 182	நிலவும்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	362
நற்றிணை 188	படுநீர்ச்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	184
நற்றிணை 195	அருளாய்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	247
நற்றிணை 203	முழங்குதிரை	உலோச்சனார்	259
நற்றிணை 206	துய்த்தலைப்	ஐயூர் முடவனார்	450
நற்றிணை 222	கருங்கால்	கபிலர்	427
நற்றிணை 223	இவள்தன்	உலோச்சனார்	349
நற்றிணை 227	அறிந்தோர்	பூதன்தேவனார்	262
நற்றிணை 231	மைஅற	இளநாகனார்	310
நற்றிணை 247	தொன்றுபடு	பரணர்	228
நற்றிணை 253	புள்ளுப்பதி	கபிலர்	401
நற்றிணை 257	விளிவுஇல்	வண்ணக்கன் சொருமருங்குமரனார்	340

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
நற்றிணை 259	யாங்குச்செய்	கொற்றங்கொற்றனார்	392
நற்றிணை 261	அருளிலர்	சேந்தன் பூதனார்	333
நற்றிணை 263	பிறைவணப்பு	இளவெயினனார்	313
நற்றிணை 282	தோடுஅமை	நல்லூர் சிறுமேதாவியார்	429
நற்றிணை 283	ஒள்நுதல்	மதுரை மருதனிளநாகனார்	182
நற்றிணை 288	அருவி	குளம்பனார்	433
நற்றிணை 295	முரிந்த	ஔவையார்	403
நற்றிணை 317	நீடுஇருஞ்	மதுரைப் பூவண்ட நாகன் வேட்டனார்	364
நற்றிணை 326	கொழுஞ்சுளைப்	மதுரை மருதனிளநாகனார்	287
நற்றிணை 345	கானல்	நம்பி குட்டுவனார்	174
நற்றிணை 354	தான்அது	உலோச்சனார்	405
நற்றிணை 355	புதல்வன்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	196
நற்றிணை 365	அருங்கடி	கிள்ளிமங்கலங் கிழார் மகனார் சேரகோவனார்	194
நற்றிணை 375	நீடுசினைப்	பொதும்பில்கிழார் மகன் வெண்கண்ணி	455
நற்றிணை 385	எல்லை	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	437
நற்றிணை 395	யாரை	அம்மூவனார்	176
நற்றிணை 396	பெய்துபோகு	முத்தூற்று மூதெயினனார்	178

களஞ்சிய வாயில்

சிலம்பொலி சு. செல்லப்பன்

ஒரு மொழியின் பயன்பாடு உயிர்ப்புடன் இருக்க வேண்டுமெனின் அம்மொழிக்குரிய வேர்களை உயிர்ப்புடன் திகழுமாறு காக்க வேண்டும். மொழிக்கு வேர்கள் என்பவை அதன் இலக்கியங்களே! நூல்களெங்கும் பரந்து கிடக்கும் இலக்கியச்சுவை, ஒரு பூவினடியில் அமைந்திருக்கும் அமிழ்தத்தை ஒத்தது. ஒட்டுமொத்த தமிழ்ச்சமுதாயமும் இலக்கியங்களின் சுவையை அறிந்து மகிழுமாறு செய்ய, ஒவ்வொரு பூவிலும் உறிஞ்சி எடுத்த அமிழ்தத் துளிகளைச் சேகரித்துச் சுவையான தேனடையாக உருவாக்கித் தரும் தேனீயின் உழைப்பினையொத்த அயராத பணி இன்றியமையாததாகிறது. இவ்வாறான பணியை ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு தமிழறிஞர்கள் மேற் கொண்டுள்ளனர் என்றாலும், 'செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்' என்னும் இந்நூலின் தொகுதிகள் உருவாக மேற் கொள்ளப்பட்ட முயற்சி தனித்தன்மை வாய்ந்ததாகும்.

இதுவரை சொல்லப்பட்ட எதையும் தாண்டிச் சொல்லப்படவில்லை என்றாலும், இதுவரை சொல்லப்பட்ட ஒன்றை, இதுவரை யாரும் சொல்லாத முறையில் சொல்ல மேற்கொண்ட முயற்சியால் உருவானதே இக்களஞ்சியமாகும்.

'உரை' என்பதற்கும் 'திரட்டு' என்பதற்கும் உழைப்பு அளவிலேயே வேறுபாடு இருக்கிறது. சிலப்பதிகாரம் உள்ளிட்ட எத்தனையோ நூல்களுக்கு உரை எழுதியிருக்கிறேன். அவை ஒரு நெடுஞ்சாலைப் பயணம்போல் சீராகத் தொடங்கி முடிந்துள்ளன. ஆனால், குறிப்பிட்ட ஒரு பாடுபொருளை, குறித்த ஒரு கால எல்லைக்குள், அது

பாடப்பட்டுள்ள இலக்கிய நூல் ஒன்றுவிடாமல் தேடியெடுத்து, உரிய விளக்கத்துடன் தந்துள்ள இம்முயற்சி, என் வாழ்நாளில், எனக்கு வாழ்க்கை தந்த தமிழுக்கு, என் நன்றிக் கடனைச் செலுத்தக் கிடைத்த ஒரு நல்வாய்ப்பாய் எண்ணி மகிழ்கிறேன்.

'செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியத்தை' உருவாக்க நான் மேற்கொண்ட முயற்சி ஓர் அகழ்வாராய்ச்சிக்கு இணையானது எனலாம். செம்மொழித் தமிழ் இலக்கிய நூல்களிலுள்ள 2586 அகப்பாடல்கள் பதினான்கு தொகுதிகளில் விளக்கம் பெற்றுள்ளன. இக்களஞ்சியம் வெறும் அகத்திரட்டு மட்டுமன்று; ஒரு யுகத்திரட்டு. ஒரு வகையில் இதனைத் தமிழ் அகப்பொருள் கலைக்களஞ்சியம் (Encyclopedia) என்று கூடச் சொல்லலாம்.

நூல் உருவாக்கம்

தமிழ் அகத்திணையில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம், குறியிடம், சிறைப்புறம், ஒருவழித்தணத்தல், வரைவு நீட்டிப்பு, வரைவு கடாயது, அறத்தொடு நிற்றல், வரைவிடைப் பிரிவு, வரைவு மலிதல், உடன்போக்கு, ஏறு தழுவுதல், மங்கல மனையறம், பொருள்வயிற் பிரிவு, பரத்தையிற்பிரிவு என்பவற்றோடு இன்னும் பல துறைகள் உள்ளன. ஒவ்வொரு துறை சார்ந்த பாடல்கள் ஒவ்வொரு நூலினின்றும் முதலில் திரட்டப்பட்டன; பின்னர் ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்கள் அனைத்தும் ஒன்று சேர்க்கப்பட்டு இக்களஞ்சியம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்கள் அனைத்தையும் ஒரேயிடத்தில், நிகழ்ச்சி நடைபெறும் வரிசை முறையில், தக்க விளக்கத்துடன் இக்களஞ்சியத்தில் காணமுடியும். களவு, கற்பு என்னும் நிலைகளில் ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்களைத் தனியே ஓரிடத்தே காண்பதற்கான வாய்ப்பு இக்களஞ்சியத்தில் உள்ளது.

பதிப்பில் பின்பற்றப்பட்டுள்ள நெறிமுறைகள்

மூல பாடம் பலவற்றுள் சிறந்தது என்று கருதப்பட்டது இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளது.

அக்காலப் பாடல் நடையமைப்புச் சற்றுக் கடினமானதுதான். ஆதலின் எளிதில் படித்துப் பொருளறியும் முறையில் சொற்கள் பிரிக்கப்பட்டு அசையும் சீரும் சிதையாவண்ணம் பாடல்கள் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடலும் யாருடைய கூற்று என்பது முதலில் தரப்பட்டுள்ளது. அடுத்த அடியில் அப்பாடல் எந்த நூலில் எத்தனையாவது எண்ணில் அமைந்துள்ளது என்பதும், அதனை இயற்றிய ஆசிரியர் எவர் என்பதும் தரப்பட்டுள்ளன. அடுத்துப் பாடல் எத்திணையைச் சார்ந்தது என்பது கொடுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்துப் பாடலின் கூற்றும், கூற்று விளக்கமும் இடம் பெற்றுள்ளன. இவற்றையடுத்துப் பாடலும், பாடலின் தெளிவுரையும், கருத்துச் சுருக்கமும் உள்ளன.

மேற்கொண்டு விளக்கமும், தேவையான குறிப்புகளும் உள்ளன. சில பாடல்களுக்கு இறைச்சி, உள்ளுறைப் பொருள் ஆகியன தரப்பட்டுள்ளன. இறுதியில் பாடலிலுள்ள இன்றியமையாச் சொற்களுக்குப் பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. சொல்லுக்கு நேரடிப் பொருளோடு, பாடலைப் புரிந்துகொள்ளும் வகையில் மேலும் தேவைப்படும் சொற்களும் இணைக்கப்பட்டுள்ளன. அதனால், பாடலையும் சொற்பொருளையும் ஒன்றிணைத்துப் படித்தால் பாடலின் பொருள் உரையின்றியே நன்கு விளங்குவதை அறியலாம்.

நன்றி மலர்

களஞ்சியத்தை உருவாக்க எனக்குத் துணை நின்றவர், பலர்.

நான் எழுதியதைச் செப்பனிட்டு வரிசையாக்கி, நூல் முழுவதையும் படித்துத் தக்க திருத்தங்களை வழங்கியவர், என் மருகர் பொறிஞர்

நா. புஷ்பராசு. அவருக்கு வாழ்க்கைத்துணையாக மட்டுமன்றி இப்பணிக்குப் பெரிதும் துணை நின்ற என் மகள் முனைவர் மணிமேகலை, இவர்களுக்கு இனிய ஒத்துழைப்பு நல்கிய பொறிஞர் அ. இரவீந்திரன்,

நூல் முழுமைக்கும் மெய்ப்புப் பார்த்துத் துணை செய்ததோடு 'அகத்திணை அஞ்சிறைத் தும்பி' எனப் பாராட்டுரையையும் தந்துள்ள கவிமாமணி தேனி திருமாவளவன்,

'ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம்' எனும் நுண்ணிய ஆய்வுரையை வழங்கியுள்ள பேராசிரியர் முனைவர் இராம. குருநாதன்,

உள்ளம் கொள்ளை கொள்ளும் வகையில் அருமையானதோர் அணிந்துரை நல்கியுள்ள பேராசிரியர் முனைவர் மறைமலை இலக்குவனார்,

எத்தனை திருத்தங்கள், மாற்றங்கள் செய்தாலும் சலிப்பின்றி அத்தனையையும் உடனுக்குடன் கணினிமூலம் செம்மையாய்ச் செய்து வெளிவர உதவிய திருமதி இந்திரா காந்தி ரவி,

தரமான இலக்கிய நூல்களைப் பதிப்பிப்போர் என்றதும் முதலில் நினைவில் நிற்பவர் பழனியப்பா பிரதர்ஸ் நிறுவனத்தார் ஆவர். அவர்கள் இக்களஞ்சியத்தைக் காண்பவர் பாராட்டும் வகையில் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர். அவர்கள் தந்துள்ள பதிப்புரை என் நெஞ்சில் என்றென்றும் பதிந்திருக்கும். அத்தகைய பதிப்பக உரிமையாளர் திரு. ப. செல்லப்பன், பதிப்பில் எனக்கு எல்லா வகையிலும் துணை நிற்கும் சுப்பு என்கிற திரு. இராம. சுப்பையா, களஞ்சியம் சிறந்த முறையில் உருவாக முன்னின்று முழு மூச்சுடன் பாடுபட்ட முனைவர் ப. முத்துக்குமாரசாமி,

முகப்போவியத்தை அழகுற வடிவமைத்துத் தந்துள்ள ஓவியர் ஜீவா,

கடின உழைப்பில் என் உடல் நலம் கெட்டுவிடாதவாறு பேணி வந்ததோடு, களஞ்சியம் வெளிவருவதில் பெரிதும் ஆர்வம் காட்டிய

என் மகன் செ. கொங்குவேள், மருமகள் மருத்துவர் ஈஸ்வரி மற்றும் குடும்பத்தினர் ஆகிய

அனைவரையும் பாராட்டிப் புகழ ஏற்ற சொற்கள் எனக்குக் கிட்டவில்லை என்பதால், 'நன்றி' என்னும் ஒரு சொல்லை என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படுத்தி வணங்குகின்றேன்.

களஞ்சியப் பொருளைப் பாதுகாத்தல் மட்டும் போதாது; அதனை நாமும் துய்த்து அனைவர்க்கும் வாரிவாரி வழங்க வேண்டும். களஞ்சியத்தைத் துய்த்தால், தமிழரின் வீரம் செறிந்த, அறஞ்சார்ந்த காதல் வாழ்க்கை முறையினைச் சற்றே வாழ்ந்துவிட்ட நுகர்வும், இவ்வளவு மென்மையும் உயர்வும் அரியதும் ஆனதா தமிழ்க்காதல் என்னும் உள்ளுணர்வும் மேலோங்கி நிற்கும் என்பது உறுதி.

களஞ்சியத்தைப் பயன்படுத்துங்கள்; மேலும் மேலும் விரிவடையச் செய்யுங்கள்.

என்றும் உங்கள்



மதிப்புரை

அகத்திணை அஞ்சிறைத் தும்பி

கவிமாமணி தேனி **திருமாவளவன்**

தனி ஒருவராய், இருபது ஆண்டுகள் இடைவிடாது முயன்று, பல மணி நேர உழைப்பை நல்கி, வெற்றிகரமாய் முடித்துள்ளார், சிலம்பொலி. இந்த இமாலயச் சாதனையை எவ்வாறு போற்றிப் புகழ்வது? சிலம்பொலியின் இந்நூல் தமிழறிவைத் தழைத்திடச் செய்யும். பேச்சாற்றலைப் பெருக்கிடப் பயன்படும். ஆராய்ச்சியாளர்க்கு அருந்துணையாகும். மாணவர்க்கு மாங்கனியாகும். ஆசிரியருக்கு உரை நூல் ஆகும். இந்நூலை ஒவ்வொருவரும் பயின்று, "பெருமை கொள்வாய் தமிழா – தமிழ்நாட்டில் பிறந்ததனால் மிகச் சிறந்தவன் நான் என்று" மகிழ்ந்திட வேண்டுகிறேன்...

ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம்

பேராசிரியர் முனைவர் **இராம. குருநாதன்**

அகப்பொருள் சார்ந்த இப்பெருநூலினைத் தமிழுலகம் நன்கறிந்த முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பனார் இலக்கிய இன்பம் தோய இதனைப் படைத் துள்ளார். இந்நூல் செல்லப்பனாரின் சொற்சிற்பச்சிகரம் என்று செப்புவது மிகையான கூற்றன்று. அகப்பொருள் கருத்தாக்கத்தை இவர் போல் சொல்லு வதற்கு இனி ஒருவர் உண்டோ என்று சொல்லும் அளவிற்கு இந்நூல் சிறந்து விளங்குகிறது. இஃது இவரது வாழ்நாள் சாதனை என்று நவின்று, இதற்கு வரவேற்பு வளையம் வைத்துக் கொண்டாடலாம். இந்நூலினை உருவாக்கி உலவ விட்டமைக்குத் தமிழுலகம் நன்றி சொல்லும். கொண்டாடும்...

தமிழ்க்களஞ்சியத்திற்கு ஒரு தங்கத் திறவுகோல்

பேராசிரியர் முனைவர் **மறைமலை இலக்குவனார்**

மிக எளிமையாகவும், இனிய எளிய நடையிலும், பாடல்களில் கருத்து களையும் சிறப்புகளையும் சுவைபடவும், பயன்பாடு மிக்கதாகவும் சிலம்பொலி செல்லப்பனார் வழங்கியுள்ள அகப்பொருள் களஞ்சியம் தமிழ்கூறும் நல்லுலகத் திற்கு ஒரு மகத்தான கொடை என உறுதியாகக் கூறலாம். மிகவும் அரிதின் முயன்று, நீண்ட காலம் அயராது உழைத்து, சங்க இலக்கியம் எனும் கடலில் மூழ்கிச் சிறந்த முத்துகளைத் தேடியெடுத்தது போன்று மிகச் சிறந்த படைப்பு களுள் ஒன்றாகவும், தமிழிலக்கியச் செவ்வியற்கால அகப்பொருள் செய்திகளை நிரல்படக் கூறும் கருத்துப்பெட்டகமாகவும் விளங்குகின்றது. தமிழ்க்களஞ்சியத் திற்கு ஒரு தங்கத் திறவுகோலை இதோ சிலம்பொலி செல்லப்பனார் வழங்கி யுள்ளார். களஞ்சியப் பொருளைக் கைக்கொள்க! பயன் பெறுக!

பதிப்புரை

சொல்வேந்தர் சிலம்பொலிக்குச் சூட்டுகின்றோம் மணிமகுடம்

பழனியப்பா பிரதர்ஸ்

பொன்னொளியே! பூமழையே!
    பூவணியும் காவிரியே!
தண்ணமுதே! தாமரையே!
    தாழம்பூ நறுமணமே!
தென்பொதிகைச் சந்தனமே!
    தேனிழைக்கும் வண்டினமே!
கன்மலையின் நறுஞ்சுனையே!
    கண்ணகலா ஆழ்கடலே!
செண்பகமே! கற்பகமே!
    சிலம்பொலியே! வலம்புரியே!

பண்டையநல் புலவர்களும்
    பாராட்டும் வகையினிலே
கண்டுகண்டு பாடல்களைக்
    காட்சிவழி நீதொகுத்துச்
செண்டெனவே தந்தனையே
    செந்தமிழர் கரங்களிலே!
இன்தமிழும் புதியதொரு
    ஏற்றமுற வழியமைத்தாய்!
குன்றெனவே இமயமலை
    குன்றிடவே நீஉயர்ந்தாய்!

என்னபணி! இரவுபகல்
    எத்தனைநாள் பேருழைப்பு!
என்னுமொரு சிந்தனையில்
    எம்இதயம் கனக்கிறது!
உன்நூல்கள் பலதொகுப்பாய்
    நன்னூலாய் யாம்அளித்தோம்!

உன்கழுத்தில் இன்றணியும்
ஓவ்வொருபூ மாலையிலும்
நன்மலரை ஒன்றிணைக்கும்
நாரெனவே யாம்அமைந்தோம்!

கங்குகரை காணாத
கடல்மூழ்கி எழுவோரே
சங்கொடுநல் முத்துகளைத்
தாம்வாரிக் கொணர்ந்திடுவார்!
பொங்கியெழும் நறுமணத்தைப்
பூங்காவில் நுழையாமல்
எங்ஙனந்தான் பெறக்கூடும்
இயம்பிடுக தோழர்களே!
அங்ஙனமே நீர்விரும்பி
இந்நூலின் தொகுதிகளை

வாங்கிடுக! படித்திடுக!
வரிவரியாய்ப் பொருளறிந்தே
ஓங்கிடுக! உணர்ந்திடுக
உள்ளூறும் கலைநயத்தை!
தேங்கிநின்று மறைபொருளாய்த்
திரட்டுப்பால் போலினிக்கும்
பாங்கான உவமைநலம்
பலர்போற்றும் 'இறைச்சி'யுமே!
வீங்கிடுமே உம்முடலும்
விள்ளரிய பெருமிதத்தால்!

பல்கலையின் கூடமன்றோ
பழனியப்பா பிரதர்ஸும்!
நல்லறிஞர், கவிவல்லார்,
நாடறிந்த பேச்சாளர்,
துள்ளுநடை சிறுவர்க்குச்
சுவைக்கதைகள் படைத்திடுவோர்,
வல்லமையால் எழுத்துலகில்
வந்தமர்ந்தோர் நடுவினிலே
சொல்வேந்தர் சிலம்பொலிக்குச்
சூட்டுகின்றோம் மணிமகுடம்!

அகத்திணை

பொழிலிலோ புனத்திலோ எழிலார்ந்த வேறோர் இடத்திலோ ஆண்மகன் ஒருவன், பெண்மகள் ஒருத்தி, தன் விளையாட்டுத் தோழியர் எவருமின்றித் தனித்து நிற்பதைக் காண்கிறான். எல்லா வகையிலும் தன்னை ஒத்திருக்கும் அவள்பால் அவனையுமறியாமல் ஓர் இயற்கை ஈர்ப்பால் அவள் ஒருத்திமீது மட்டுமே அவன் உள்ளம் செல்லுகிறது. அவளும் அவனை மட்டுமே விரும்புபவளாய் இருக்கிறாள். எதிர்ப்படும் எல்லாரிடமும் ஆண், பெண் உள்ளம் சென்றுவிடாது. அவளது அழகு கண்டு, 'இவள் தெய்வ மகளோ', 'உண்மையிலேயே மானிடப் பெண்தானோ' என ஐயுறுகிறான்; சில செய்கைகளால் அவள் மானிடப் பெண்ணே என்று தெளிவடைகின்றான். தன்னைப்போல அவளும் தன்னை விரும்புகிறாளா என்பதைக் குறிப்புகளால் உணர்கிறான். இருவரும் ஒருவரையொருவர் காண்கின்றனரெனினும், பெண்ணை ஆண் கண்டான் என்று சொல்வதே செய்யுள் வழக்கம். அவ்வாறு காதல் கொள்பவருள் ஆண்மகனைக் 'காதலன்' என்றோ, 'தலைவன்' என்றோ, 'கிழவன்' என்றோ, பெண்மகளைக் 'காதலி' என்றோ, 'தலைவி' என்றோ, 'கிழத்தி' என்றோ இலக்கியங்கள் வழங்குகின்றன.

தலைவனும் தலைவியும் ஒரு நிலத்தைச் சார்ந்தவராகவோ, வெவ்வேறு நிலத்தைச் சார்ந்தவராகவோ இருக்கக்கூடும். ஐவகை

நிலங்களுள் எந்நிலத்தவராயும் இருக்கலாம். எனினும், காதலனும் காதலியும் குறிஞ்சி நிலத்தில் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொள்கின்றனர் என்று சொல்வதே அக இலக்கிய வழக்கம். எல்லா நிலங்களிலும் காதல் தோன்றத்தான் செய்யும்! 'பின்புலம் இயற்கை யழகு வாய்ந்ததாய் இருந்தால்தான் காதல் காட்சி சிறப்புறும்.' பாலைநிலத்திலும் கடுமையாய் வெயில் வீசும் பசுமையற்ற பின்புலத் திலும் காதல் காட்சியைக் காண எவரும் விரும்பார். எனவேதான், குறிஞ்சி நிலத்தைப் பின்புலமாய்க்கொண்டு, அங்கு ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டுக் காதல் கொள்வதாய் அமைக்கின்றனர். இவ்வாறே காதல் கொள்ளும்போது ஏற்படும் மாறுபட்ட நிலைகளுக் கேற்பப் பின்புலங்களாய் முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியன அமையும்.

ஒருவனும் ஒருத்தியும் கண்டுகொள்வதைக் 'காட்சி' என்பர். தான் கண்ட பெண் எவ்விடத்தினளோ, யார் மகளோ, நம் காதலுக்கு இசைவளோ என்றெல்லாம் ஆண்மகன் ஐயுறுவான். இஃது 'ஐயம்' எனப்படும்.

அணிகலன்கள் அணிந்திருத்தல், காமப் பார்வை பார்த்தல், புதிதாய்த் தன்னைக் கண்டதால் உடலில் நடுக்கம் தோன்றுதல், தான் நோக்கும்போது அவள் தன்னைப் பார்க்காது நிலத்தைப் பார்த்தல், தான் காணாதிருக்கும்போது அவள் தன்னை நோக்குதல் போன்ற குறிப்புகளால் ஆண்மகன் ஐயம் நீங்கி அவள் தன்மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிவடைகிறான்.

தலைவி அணிந்துள்ள பூக்களில் வண்டுகள் மொய்த்திருத்தல், சிறந்த அணிகலன்களை அவள் அணிந்திருத்தல், அவள் மார்பு மற்றும் உடலில் ஓவியம் எழுதப்பட்டிருத்தல், அணிந்துள்ள மலர்மாலையில் மலர் வாடியிருத்தல், மருண்ட பார்வை கொண்டிருத்தல், கண்களை இமைத்தல், முகத்தில் அச்சம் தோன்றுதல் போன்றவற்றாலும் இன்ன பிறவற்றாலும் காதலன் தன் ஐயம் நீங்கி அவள் மானிடப் பெண்ணே என முடிவு செய்வான்.

"வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சம் என்(று)
அன்னவை பிறவும் ஆங்கவண் நிகழ
நின்றவை களையும் கருவி என்ப" (தொல். கள. 4)

என்பது தொல்காப்பிய நூற்பா.

இயற்கைப் புணர்ச்சி

தலைவி தன்மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிந்த தலைவன், தன் காதலை உணர்த்தத் துணிவான்; தலைவியும் தன் காதற்குறிப்பை உணர்த்துவாள். நாணத்தால் தலைவி, தன் காதலை வெளிப்படையாய் உணர்த்தாது குறிப்பினாலேயே உணர்த்துவாள்.

தன்னை அவள் விரும்புவதுணர்ந்த பின்னரே அவன் அவளைத் தனிமையில் சென்றடைந்து, ஒன்றுகூடி இன்புறுவான். இவ்வாறு தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் கண்டு முதல்நாளில் கூடியிருத்தலை 'இயற்கைப் புணர்ச்சி' என்பர்.

தலைவிக்கு முதன்மைத்தோழி ஒருத்தியும், உடன் விளையாடும் மகளிரும் (ஆயத்தார்) இருப்பர். ஆண்மகனின் பாங்கறிந்தொழுகும் உயிர்த்தோழன் பாங்கன் என்று வழங்கப்படுவான்.

இடந்தலைப்பாடு

தற்செயலாய்க் கண்ட ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பி, முதல் நாள் ஒன்றுபட்டுக் காதலராயினர். இவ்வாறு இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைவன், தன் காதலியை முதல் நாள் கண்ட அதே இடத்தில் மறுநாளும் காணலாம் எனச் செல்கிறான்; காதல் மிக்க தலைவியும் அங்கு வந்து நிற்பாள். தோழியரோடு விளையாடாது, பூப்பறித்து மாலை தொடுத்திடாது தனித்திருக்கும் தலைவியிடம் தலைவன், "தனித்து நிற்கும் நீ யாரோ? உன்னைத் தொழுது கேட்கிறேன்" என்று தன் காதல் உள்ளத்தை வெளிப்படுத்துவான். அது கேட்டுத் தலைவி நாணி நிற்பாளேயன்றி மறுமொழி எதுவும் கூறமாட்டாள். தலைவன் அவளை நெருங்கித் தன் காதலை உறுதிப்

படுத்திக்கொள்வான். யாருமறியாதவாறு தலைவன் தனியே வந்து, தலைவியை முதல்நாள் கண்ட அதே இடத்திலேயே இரண்டாம் நாளும் கண்டு, கூடிக் களிப்பது 'இடந்தலைப்பாடு' எனப்படும்.

பாங்கற்கூட்டம்

தலைவியைக் கண்டது முதற்கொண்டு தலைவன் மனஞ்சோர்ந்து, உடல் தளர்ந்து உயிர்க்களையற்றிருப்பான். ஆண்மை மிக்க அவன் அவ்வாறு சோர்ந்திருப்பது எதனால் எனப் பாங்கன் கேட்பான். அது பெண் ஒருத்தியால் நிகழ்ந்ததென்பான், தலைவன். பகைவரும் கண்டஞ்சும் வீரமிக்க அவன், பெண் ஒருத்தியால் இடிந்துபோய் இருத்தல் கூடாதெனப் பாங்கன் இடித்துரைப்பான். இதனைப் பாங்கன் கழறுதல் (இடித்துரைத்தல்) என்பர். பாங்கன் இடித்துரைத்ததை மறுத்துத் தலைவன், 'நீ அவளைக் கண்டாயானால் என்னை இவ்வாறு இழிவாய்ப் பேசமாட்டாய்' என்று கூறுவான். தோழனின் கூற்றினைத் தலைவன் மறுத்துப் பேசுவதைக் 'கழற்றெதிர் மறை' என்பர்.

தலைவனின் காதற்பெருக்கையும், அதை அவன் தாங்க இயலாது தவிப்பதையும் கண்டு, "அப்பெண் யார்? எவ்விடத்துள்ளாள்? எத்தன்மையள்?" என்று பாங்கன் கேட்டறிந்து, அவ்விடம் சென்று, தலைவன் குறிப்பிட்ட அவளைக் கண்டு, தலைவன் அவளை விரும்பியது சரியெனத் தெளிவான்; தலைவனுக்கு எல்லா வகையிலும் துணை நிற்கவும் உறுதி பூணுவான்; தலைவனைத் தலைவி இருக்கு மிடத்திற்கு அழைத்துச் செல்வான். தலைவி இருக்கும் இடத்தைப் பாங்கன் காட்டத் தலைவனோடு தலைவிக்கு ஒருநாள் கூட்டம் நிகழும். இது 'பாங்கற்கூட்டம்' எனப்படும்.

பாங்கியிற்கூட்டம் (தோழியிற்புணர்ச்சி)

தலைவிக்கு விளையாட்டுத்தோழியர் பலராய் இருப்பர். தலைவி அவர்களை விட்டுப்பிரிந்து எப்பொழுதும் மறைந்து செல்லல் அரிது. அவர்களைத் தனியே விட்டுப் பிரிந்து சென்றால் திடீரென்று வந்து தலைவியை அடைவர், தோழியர். இது போன்ற இடையூறுகளை

யெல்லாம் கடந்து, தலைவியைத் தன்னிடம் கொண்டுவந்து விடத் தலைவிக்குத் தோழியராய் உள்ளவருள் முக்கியமான ஒருத்தியை அறியத் தலைவன் முற்படுவான்.

தலைவியைப் பெற்றெடுத்தவள், நற்றாய்; வளர்த்தவள், செவிலித் தாய். நற்றாய், செவிலிக்குத் தலைவியும் தோழியும் ஆவாள். அதே போலவே, செவிலிக்கு மகள், நற்றாய் பெற்ற மகளான தலைவிக்கு உயிர்த்தோழியாய் இருப்பாள். இருவரும் ஈருடலும் ஒருயிருமாயிருப்பர். அத்தகைய தோழியை அறிந்து, அவளிடம் தன் குறையைக் கூறி, அவள் வழிநடத்துதலின்படி தலைவியைக் கூடிடத் தலைவன் விரும்புவான்.

தலைவியைச் சூழ ஒரு படைபோலக் கூட்டமாய்த் தோழியர் வருகின்றனர். அவர்களுள் யார் முதன்மையானவள் என்பதை எவ்வாறு அறிவது? தோழியர் கூட்டத்தை நன்கு கவனித்துப் பார்க்கிறான், தலைவன். அவர்களுள் ஒருத்தி எதைச் சொன்னாலும் தலைவி அதை ஏற்பதையும், அவள் செய்வதுபோலவே தலைவி செய்வதையும் கண்டு, அவள்தான் தலைவிக்கு உயிர்த்தோழி என்றறிகிறான்.

குறையிரத்தல்

அத்தோழியின் தோழமையைப் பெற்றாலன்றித் தலைவியின் நட்பைப் பெறுதல் அரிது என்றுணர்ந்தான், தலைவன். அவன், தான் தலைவி மீது கொண்டுள்ள காதலை அத்தோழியிடம் தெரிவிப்பான். தலைவியைத் தனியே சந்திக்க இயலாதிருப்பதைக் கூறி, அக் குறையை நீக்கித் தான் தலைவியை அடையத் துணை நிற்குமாறு மிகவும் இரங்கிக் கேட்பான். இது 'குறையிரத்தல்' எனப்படும்.

தோழியும் தலைவியும் ஒருங்கே இருக்கும்போது சென்று, வெளிப் படையாகவோ குறிப்பாகவோ தன் நிலையைத் தலைவன் நயமாய்ப் புலப்படுத்துவான். முதலில் தோழி தலைவனுக்குத் துணை நிற்க மறுப்பாள்.

மதியுடம்பாடு

தலைவன் தன்னிடம் கூறியவற்றையும், தலைவியின் செயல்களையும் தனித்தனியாகவும், சேர்த்தும் ஆராய்ந்து, அவர்கள் இருவரும் ஒரே வகையான இன்பதுன்பங்களைக் கொண்டிருத்தலையும், இருவர் அறிவும் ஒன்றாய் இருத்தலையும் தோழி உணர்ந்தறிவாள். தலைவன் தலைவியர் உணர்வோடு தோழியின் உணர்வும் ஒத்துச்செல்லும் நிலை உண்டாதலை, 'மதியுடம்பாடு' என்பர்.

மதியுடம்பட்ட தோழி, தலைவியின் குறிப்பறிய முற்படுவாள். தலைவி, தான் ஒருவனைக் கண்டு காதலுற்றிருப்பதை நாண மிகுதியால் தோழியிடம் கூறமாட்டாள். தலைவி ஆயத்தோடு கூடாது தனித்திருத்தல், ஏதோ ஒன்றை நினைந்து வருந்தியிருத்தல் போன்ற நிகழ்வுகளால், அவள் காதலைத் தான் அறிந்திருந்தும் அறியாதவள் போலத் தலைவியிடம் மறைமுகமாய்க் கூறி, தலைவியின் நாணம் ஊறுபடாதவாறு, தோழி அவள் நெஞ்சக்கருத்தை அறிவாள்.

சேட்படை

தோழியைக் குறையிரந்து வரும் தலைவன், காணிக்கை (கையுறை)யாய் அரிய தழை, முத்து முதலியவற்றைக் கொண்டுவந்து அவற்றைத் தலைவியிடம் தந்து, அவளை எவ்வாறாயினும் தன்னுடன் கூட்டி வைத்திடுமாறு தோழியிடம் வேண்டுவான்.

'நாம் விரும்பியபடி இவள் எளிதிலே நமக்குக் கிடைக்கக் கூடியவள் அல்லள்' என்று கருதும் தலைவன், தழையும் கண்ணியும் கொண்டு வந்து தோழிக்குப் பின்னின்று குறையிரப்பான். அவன் உணரும்படியாகத் தோழி அவனைச் சேட்படுத்துவள் – அஃதாவது, தலைவனைத் தலைவியுடன் நெருக்கமாய்ப் பழக விடாது சற்று அகற்றி வைப்பாள் (சேட்படுத்தல் – அகற்றுதல்).

மடலேறுதல்

தலைவன் தலைவியரின் ஆழமான காதலை அறிந்த பின்னும் தோழி, அவர்கள் எளிதில் சந்திக்க இடமளிக்க மாட்டாள்; காதலன் அரிதின்

முயன்று ஆர்வத்தோடு கொண்டுவரும் கையுறையை ஏற்க மறுப்பாள்; பல்வேறு தடைகளை ஏற்படுத்துவாள். தலைவன் தலைவிமீது கொண்டுள்ள காதல் உறுதியானதுதானா என்பதை அறிவதற்கே இத்தகு செயல்களைத் தோழி செய்வதற்கான நோக்கமாகும்.

தோழி வேண்டுமென்றே தன் குறைக்குச் செவிசாய்க்காது காலங் கடத்துவதைக் காணும் தலைவன், தன் எண்ணம் ஈடேறுவதற்காகத் தான் மடலேற உறுதி பூண்டுள்ளதைத் தோழியிடம் தெரிவிப்பான்.

மடல் மா என்பது பனங்கருக்கினால் செய்யப்பட்ட குதிரையைக் குறிக்கும். தான் காதலித்த பெண்ணை எய்தப்பெறாதவன் தன் உடல் முழுவதிலும் திருநீற்றைப் பூசிக்கொண்டு, ஆவிரம் பூ மாலையை மார்பிலும், எருக்கம்பூ மாலையைத் தலையிலும் அணிந்துகொண்டு பனங்கருக்கால் செய்யப்பட்ட குதிரைமேல் ஏறிக்கொள்வான்; தான் விரும்பும் காதலியின் படத்தைத் துணியில் எழுதிக் கையில் பிடித்திருப்பான். அக்குதிரையைச் சிலர் வீதியில் இழுத்துச் செல்வர். இது மடலேறுதல் எனப்படும். இதனால் அவன் உறுதியான காதல் வெளிப்படும்; மேலும், அரம் போன்ற பனங்கருக்கு உடலினை அறுத்தலால் வெளிப்படும் குருதிப்பெருக்கும் இரக்கத்தை ஏற்படுத்தும். ஊரார், இவ்வளவு காதல் கொண்டுள்ளவனுக்கு மகளைக் கொடுக்க மறுக்கலாமா எனப் பெண்ணைப் பெற்றோரைக் குறை கூறுவர்; அவர்களை அணுகி, எடுத்துரைத்து, அவளை அவனுக்கு மணம் முடித்து வைப்பர். மடல் ஏறுவேன் என வாயளவில் சொல்லுவது ஐந்திணையின்பாற்படும்; சொன்னபடி மடலேறிக் காட்டுவது பெருந்திணையின்பாற்படும். சங்க இலக்கியங்களில் மடலேறுவதாய்ச் சொல்லும் நிலை மட்டுமே உள்ளது; மடல் ஏறியதாய்ப் பாடல் எதுவும் இல்லை.

மடலேறுவேன் என்று தலைவன் சொன்னதும், அவனது காதல் திட்பத்தினைக் கண்ட தோழி, அவனுக்குத் துணை செய்ய முற்படுவாள்.

குறியிடம்

தலைவன் தந்த கையுறையைத் தலைவியிடம் கொடுத்து, அவள் குறிப்பினை உணர்ந்துகொள்வாள், தோழி. தலைவன் குறையைத்

தலைவி நயக்கவே, அவ்விருவரும் ஒருவரை ஒருவர் சந்திப்பதற்கேற்ற வகையில் 'இன்ன இடத்திற்கு வந்தால் தலைவியைக் களவிற் கூடலாம்' என்று தோழி குறியிடங் கூறுவாள்.

தலைவியைத் தலைவன் பகலில் கூடுதற்கு ஓர் இடத்தை வரையறுத்துத் தோழி குறிப்பிடுவாள். இது 'பகற்குறி' எனப்படும்.

அடுக்காய் உள்ள மலைப்பக்கமாகவோ, அழகிய மலர்ச் சோலையாகவோ, காதலுணர்வை மிகுவிக்கும் இன்ன பிற இடங்களாகவோ பகற்குறி அமையும். அவ்விடங்கள் பலவகைப்பட்ட மரங்களால் பொலிவு பெற்றனவாயும், வெளியிலிருப்போர் உள்ளிருப்போரை எளிதில் காண்பதற்கு இயலாதனவாயும், ஆனால், உள்ளே இருப்போர் வெளியிலிருப்பவரை எளிதில் கண்டு கொள்ளத்தக்கனவாயும், ஆசைகளை விட்டொழித்தோரையும் ஆசை கொள்ளத் தூண்டும் தன்மையனவாயும் இருக்கும். பகலில் கூடுமிடம் வீட்டிற்குப் புறத்தே, தலைவி வழியறிந்து வரக்கூடியதாயும், அவளுக்குப் பழக்கமான இடமாயும் அமைந்திருக்கும்.

பகற்குறி நாடி வந்த தலைவன், அக்குறிக்கண் செல்ல இயலாதவாறு தடைகள் சில நேர்வதுமுண்டு. (பகற்குறி இடையீடு)

அந்நிலையில், தலைவன் விருப்பத்தை ஈடேற்றுதலை அறமாய்க் கருதும் தலைவி, அவன் விரும்பியவாறே இரவில் வந்து தன்னைச் சந்திப்பதற்கு வரையறுத்துரைக்குமிடம் 'இரவுக்குறி' எனப்படும். அவ்விடம் தலைவியின் இல்லத்து மதில் எல்லைக்குள் இருக்கும்; இல்லத்தவர் பேசும் பேச்சினை வெளியிலிருந்து கேட்குமளவிற்கு அண்மையில் அகமனைக்கும் புறமனைக்கும் நடுவே அமைந்திருக்கும். அது, தலைவியின் வீட்டு எல்லைக்கு உட்பட்டிருக்கும் செய்குன்று, இளமரக்கா, பூப்பந்தர், விளையாட்டிடம் போல்வனவற்றுள் ஏதேனும் ஒன்றாயிருக்கும். தலைவன், தான் இரவுக்குறியிடத்துக்கு வந்திருப் பதைத் தெரிவிக்க அங்குள்ள நீர்நிலையில் கல்லெறிந்து ஒலி எழுப்பல், மரங்களில் தங்கியிருக்கும் பறவைகளை எழுப்பிவிடல் போன்ற

அடையாளக்குறிகளைச் செய்வான். அவ்வொலி கேட்டுத் தலைவி அங்கு வந்து சேர்வாள்.

சில சமயம், தலைவன் செய்ய வேண்டிய குறி காற்றசைவு போன்றவற்றால் இயற்கையாய் நிகழ்ந்துவிடும். அதை அவன் செய்ததாய் எண்ணி வந்து தலைவி ஏமாந்து திரும்புவாள். பிறகு அங்கு வந்த தலைவன் குறி எழுப்ப, அதைக் கேட்கும் தலைவி, அது தலைவன் எழுப்பிய குறியன்று என்று கருதி வாராதிருப்பாள். அதனால் தலைவன் சந்திப்பு நேராமலே திரும்புவான். இஃது 'அல்ல குறிப்படுதல்' ஆகும்.

சிறைப்புறம்

ஒருவரை ஒருவர் கண்ணால் பார்க்க வாய்ப்பு இல்லாததாயும், ஆனால், ஒருவர் கூறியதை மற்றவர் காதால் கேட்கும் தொலைவில் உள்ளதாயும் இருக்கும் பகுதி 'சிறைப்புறம்' எனப்படும். அதை வீட்டருகே உள்ள ஓர் இடம்; பச்சை உயிர்வேலி எனலாம்.

தோழிக்கும் தலைவிக்கும் இடையே நிகழும் உரையாடல்களைத் தலைவன் மறைந்திருந்து கேட்டு அறிதற்கு வசதியாய் மனைக்குப் புறமாய்க் காவலாய் அமைக்கப்பட்டுள்ள வேலி அமைப்பினைச் சிறைப்புறம் எனலாம்.

இற்செறிப்பு

தலைவன் தலைவியரிடையே ஏற்பட்டுள்ள களவுறவை ஊரார் அறிந்து பழிச்சொல் கூற முற்படுவர். இப்பழிச்சொல் 'அலர்' எனப்படும். ஊரெங்கும் பழிச்சொல் ஏற்பட்டிடவே தலைவி வீட்டார் அவளை வீட்டை விட்டு எங்கும் வெளிச் செல்லாதவாறு வீட்டுக்காவலில் வைப்பர். இஃது 'இற்செறிப்பு' எனப்படும்.

தலைவியின் தோற்ற மாறுபாட்டைக் கண்டும், ஊரவர் குறிப்பாய்ப் பேசிக்கொள்வதைக் கேட்டும், விளையாடல் முதலியவற்றிற்குத் தன் இல்லத்தைவிட்டுத் தலைவி வெளியே செல்ல இயலாதவாறு செவிலி அவளை இல்லத்திற்குள்ளேயே தங்கச்செய்வாள்.

ஒருவழித்தணத்தல்

அலர் அடங்குமாறு தலைவன் தலைவியைக் காண வாராது, தன் ஊரிலேயே சில காலம் தங்கி இருப்பான். இதனை 'ஒருவழித்தணத்தல்' என்பர்.

வரைவு கடாயது

தலைவன் சிறைப்புறத்தானாயிருக்க, ஊரார் அலர் கூறுவதையோ, தலைவிக்கு இற்செறிப்பு ஏற்பட்டிருப்பதையோ, அயலவர் மணம் பேசி வருகின்றனர் என்பதை அறிவித்தோ, இனியும் களவொழுக்கம் நீட இடந்தரலாகாது என்றும், உடனே அவன் வரைவு மேற்கொள்ள வேண்டும் என்றும் தலைவியும் தோழியும் வற்புறுத்திக் கூறுவர். தலைவன் சிறைப்புறமிருக்க, தலைவியும் தோழியும் அவன் கேட்குமாறு தம்முள் பேசி, அவனை உடனடியாக வரைந்துகொள்ளவும் தூண்டுவர்.

வெறியாட்டு

தலைவனோடு களவொழுக்கம் மேற்கொண்டுள்ள தலைவி, அவன் பிரிவைப் பொறுக்க இயலாது உடல் மெலிவாள். தன் மகளின் உடல், நாள்தோறும் மெலிவதற்கான காரணத்தை அறியாது அவள் தாய் கலங்குவாள். உடல் மெலிவு முருகனால் ஏற்பட்டது என நம்பி, செவிலி முருக பூசை செய்ய முனைவாள். முருக பூசை செய்வதற்குரிய பூசாரி, வேலன் எனப்படுவான். அவன் முருகனைக் கூவி அழைத்தும், வெறி யாட்டுக் கூத்தாடியும், கழற்சிக்காயிட்டும் தலைவியின் நோய்க்குக் காரணம் முருகனே என்பான்.

தெய்வம் மக்கள்மீது ஏறி ஆடுவதை 'வெறியாட்டு' என்பர். வெறியாடுபவன் தன் கையில் வேலைத் தாங்கி ஆடுவான். ஆதலின், இவன் வேலன் என்று வழங்கப்பட்டான்.

வெறியாடும் இடத்தில் பல்வகை மலர்களையும் பரப்பி, அழகுறச் செய்து முருகனை வழிபட்டு வேலன் வெறியாட்டயர்வான். அவ் விடத்தை 'வெறியாடு களம்' என்பர். அங்கு வேலன், ஆட்டுக்குட்டியை வெட்டிப் பலி கொடுத்துப் பூசை செய்வான்.

கட்டுவிச்சியை அழைத்து மகளின் நோய்க்குக் காரணம் யாது என வினவுவதும் உண்டு. முறத்தில் நெற்களைப் பரப்பி, எண்ணிக் குறி சொல்வது கட்டுவிச்சியின் வழக்கம்.

அறத்தொடு நிற்றல்

வெறியாட்டு நடத்தச் செவிலி முற்படும்போது தலைவி தோழியிடம், தன் காதலைத் தக்கவாறு செவிலியிடம் கூறி வெறியாட்டினை நிறுத்துமாறு வேண்டுவாள். இஃது 'அறத்தொடு நிற்றல்' எனப்படும்.

செவிலித்தாய் தோழியிடம் 'தலைவிக்கு இவ்வேறுபாடு எதனால் ஏற்பட்டது?' என்று கேட்பாள். தோழி மிக்க கவனத்தோடும் விழிப்போடும், எவர்க்கும் கெடுதியும் துன்பமும் நேராதபடி செவிலி யிடம் உரைப்பாள். கற்பு அழியாதவாறு, தலைவி தலைவனொடு ஒழுகிவந்த களவொழுக்கத்தைப்பற்றிச் செவிலியிடம் வெளிப் படுத்துவாள். இது, 'தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்' எனப்படும். தலைவி தோழியிடமும், தோழி, தன் தாயாகிய செவிலியிடமும் அறத்தொடு நிற்பர். செவிலி, தன் தோழியும், தலைவியைப் பெற்றெடுத்தவளுமாய நற்றாய்க்கு அறத்தொடு நிற்பாள். நற்றாய் தலைவியின் தமையன்மார்க்கும் தந்தைக்கும் அறத்தொடு நிற்பாள். தலைவியின் ஆழ்ந்த காதலை அறிந்த அவள் பெற்றோர் திருமணத் திற்கு உடன்படுவர்.

வரைவிடைப்பிரிவு

அறத்தொடு நின்ற நிலையில், பெற்றோர் வரைவுக்கு உடன்படு வராயின், மகட்கொடையாகவும் மண நிகழ்வுக்காகவும் தலைவியைப் பெற்றோர்க்குத் தலைவன் பொருள் தரவேண்டும். இவ்வாறு அளிக்கப்படும் பொருள், மகட்கொடை, முலை விலை என்னும் பெயர்களால் வழங்கப்படும். இப்பொருளைத் தேடி வரத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வான். இது 'வரைவிடைப்பிரிவு' எனப்படும். வரைவிடைப்பிரிவால், தலைவி ஆற்றாது வருந்தத் தோழி அவளைத் தேற்றுவிப்பாள்.

தலைவன் வரைபொருட்காகப் பிரிந்து சென்று, பொருள் திரட்டி மீண்டதும் தன் சுற்றத்தவர்களை முற்கொண்டு, தலைவியில்லம் போந்து, பெண் தருமாறு வேண்டுவான்; சுற்றத்தவர் அல்லாமல் அறநிலை சான்ற வேறு சான்றோர்களை முற்கொண்டும் பெண் தருமாறு வேண்டுதலுமுண்டு; பின்னர், முறைப்படி திருமணம் நிறைவேறும். (வதுவை அயர்தல்)

உடன்போக்கு

பெற்றோர் சிலர் தம் மகளின் களவொழுக்கத்தை அறியாத நிலையிலும் அறிந்த நிலையிலும் தலைவியை வீட்டை விட்டு வெளிப் போகாதவாறு வீட்டினுள் வைத்துக் காத்து வருவர். அந்நிலையில் தலைவியின் வருத்த மிகுதியைக் காணும் தோழி, தலைவி, தலைவன் ஆகிய இருவர் ஒப்புதலையும் பெற்று, எவருமறியாதவாறு தலைவியைத் தலைவனுடன் அவன் ஊர் செல்ல அனுப்பி வைப்பாள். அவ்வாறு தலைவனுடன் தலைவி செல்லுதல் ‘உடன்போக்கு’ என்றும், ‘கொண்டுதலைக் கழிதல்’ என்றும் வழங்கப்பெறும். ஏதமிக்க காட்டு வழியில் தன்னுடன் வரும் தலைவிக்குத் துன்பம் எதுவும் தோன்றா வண்ணம் தலைவன் அவளிடம் இன்மொழி பேசியும் நற்செயல்களைச் செய்தும் அழைத்துச் செல்வான்.

உடன்போகும் காதலர்களை வழியிடையே காண்பவர் அவர்கட்கு ஆதரவாய் இருப்பர். ‘பொழுது சென்று இருள் வந்தது; வழி துன்பமானது. இந்நேரத்தில் தனியே செல்லுதல் தகாது. இரவு எம்மூரில் தங்கிச் செல்லுங்கள்’ என்று அன்போடு வேண்டுவர்.

தலைவி தம் வீட்டை விட்டு வெளியே சென்றதை அறிந்த நற்றாயும் செவிலியும் மிகவும் வருந்துவர். ‘காதலனிடம் மகள் கொண்ட அன்பு இவ்வளவினது என யாம் அறிந்திருந்தால் எம் வீட்டிலேயே திருமணத்தை முடித்து வைத்திருப்போமே’ என்பர். உடன்போக்குச் சென்ற மகளைச் செவிலித்தாய் தேடியும் செல்வாள். அவளை எதிர்ப் படும் ஆன்றோர், அவள் நிலை கண்டு இரங்கி, “உன் மகள் அறவழி

யினையே மேற்கொண்டுள்ளாள். அவளைத் தடுக்க வேண்டா; அவளை அவள்வழிச் செல்ல விடுங்கள்" என ஆறுதல் கூறி அனுப்பி வைப்பர்.

தலைவன் தலைவியைத் தன்னூர் அழைத்துச் சென்றதும் அங்கு அவளை மணந்துகொள்வான். களவொழுக்கத்தைத் தலைவியைப் பெற்றோர் ஏற்றனரென்றால் திருமணம் அவர்கள் வீட்டிலும், அவ்வாறன்றித் தலைவனுடன் தலைவி உடன்போக்கில் சென்றால் திருமணம் தலைவன் இல்லத்திலும் நடைபெறும். திருமணம் எங்கு நடைபெற்றாலும் திருமணத்திற்குப் பின்பு இருவீட்டாரும் ஒன்று பட்டிருப்பர்.

மங்கல மனையறம்

திருமணத்தின் பயனாய்த் தலைவன் தலைவியர் இல்வாழ்க்கை யினை மேற்கொள்ளத் தலைப்படுவர். இல்வாழ்க்கை மேற்கொள்ளும் தலைவனுக்குத் தன்னைச் சார்ந்த மனைவி, மக்கள், பெற்றோர், உற்றார், ஏனை உறவின் முறையினர், ஆன்றோர், விருந்தினர் ஆகியோரை உண்டி, உடை, உறையுள் முதலியவற்றால் பாதுகாக்கும் கடமையும், இவையொழிய இன்னும் ஏனையவாயமைந்துள்ள இல்வாழ்க்கைக் கடமைகளும் உண்டாகின்றன. அவ்வெல்லாக் கடமைகளையும் முறைப்படி அவ்வக் காலங்களில் செய்வதற்குப் பொருள் இன்றியமையாததாகும்.

பொருள்வயிற் பிரிவு

தலைவன் திருமணம் செய்துகொள்ளுதற்கு முன் வரைதற் பொருட்டுப் பொருள் தேடியது, திருமணக் கடமைகளுக்காக மட்டுமே. திருமணத்திற்குப் பின்னர்த் தனது இல்வாழ்க்கைக்குரிய கடமைகளை நிறைவேற்றும்பொருட்டும் பொருளைத் தேட வேண்டியவனாகிறான்.

முன்னோர் தேடிய பொருள் தன்னிடம் மிகுதியாய் இருக்குமாயினும் தலைவன் தன் முயற்சியால் பெற்ற பொருள் கொண்டு இல்வாழ்க்கை யினை நடத்துவதையே பெருமையாகவும் சிறப்பாகவும் கருதுவான்.

பொருள் தேடி வரச் செல்லக் கருதும் தலைவன், தலைவி தன் பிரிவை ஆற்றியிராள் என்பதுணர்ந்து சில காலம் பயணத்தைத் தவிர்ப்பான். பின்னர்த் தோழியிடம் கூறித் தலைவியிடம் தன் பிரிவை அறிவிக்கச் சொல்வான். முதலில் தோழியே செலவினை மறுப்பாள்; நீண்ட பிரிவாய் இருக்குமென்பதால் தலைவியும் ஒருப்படாள்; ஆயினும், அறங்கருதித் தலைவி இசைவாள். நாடுகளை நீங்கியும் காடுகளைக் கடந்தும் தொலைவில் சென்று, பொருளீட்ட வேண்டும். இச்செயலைச் செய்து முடிக்க வேனிற்காலமே ஏற்றதாகும். வேனிற்பருவத்தே பிரிந்து செல்லும் தலைவன் கார்காலத் தொடக்கத்தில் திரும்பி வருவதாய்க் கூறிச் செல்வான்.

தலைவன் சென்றதும் தலைவி துயர் தாளாது மிகவும் வருந்தி யிருப்பாள்; தோழி அவளை ஆற்றுவிப்பாள். தான் புறப்படும்போது சொல்லிச் சென்றவண்ணம் கார்காலத் தொடக்கத்தே தலைவன் வாராதிருப்பின் தலைவியின் துயரம் மிகுதியாகும். கார்காலத்திற்குரிய அறிகுறிகள் தென்பட்டாலும் அவை கார்காலத்திற்குரியவை அன்று என்று கூறித் தலைவியைத் தோழி தேற்றுவிப்பாள்.

பொருள் தேடப் பிரிந்த தலைவனும், தலைவியைப் பிரிந்திருக்க இயலாதவனாய்த் தவிப்பான்; இடைவழியிலேயே திரும்பிவிடலாமா என்றுகூட எண்ணுவான்; ஆயினும், கடமையில் கருத்தூன்றி, பொருள் தேடி முடித்த பின்னரே திரும்புவான். திரும்புங்கால், விரைந்து சென்று தலைவியை அடைய வேண்டும் என்னும் வேட்கையில் தேரினை விரைவாய்ச் செலுத்துமாறு பாகனிடம் கூறுவான். அவ்வாறே பாகனும் செலுத்தத் தலைவன் தன் இல்லமடைந்து தலைவியைக் கூடி மகிழ்ந்து இனிதே நல்வாழ்க்கை நடத்துவான். இனிய மக்கட்பேறும் வாய்க்க அவர்கள் இல்லறம் மேலும் சிறப்புறும். காதலர் அன்புடையராய், விருந்தோம்பி, நடுவுநிலைமை மேற்கொண்டு, ஒப்புரவறிந்து, ஈகை மேற்கொண்டு புகழ் வாழ்வு வாழ்வர்.

தலைவன் பொருள் தேடுவதற்காக மட்டுமன்றி, உயர்கல்வி கற்பதற்காகவும், அரசனுக்காகப் போர்மேற்செல்வதற்காகவும் பிரிந்து செல்வதுண்டு.

களவுக்காலத்தில் ஒருவழித்தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் எனத் தலைவன் பிரியும் நிலைகள் உண்டு.

கற்புக்காலத்தில் ஓதல், காவல், தூது, பொருள் தேடல், வேந்தற்கு உற்றுழி உதவல் முதலியன கருதித் தலைவியை விடுத்துப் பிரிதல் உண்டு.

தலைவன் பிரிந்திருக்கும் காலங்களில் தோழி தலைவியைத் தேற்றுவித்துத் துணை நிற்பாள்.

பரத்தையிற்பிரிவு

இல்லற வாழ்வில் தலைவனோடு தொடர்பு கொள்வதைத் தன் வாழ்க்கைநெறியாய்க் கொண்டிருப்பவள் மனைவி. அவ்வாறு அல்லாது ஆடவர் பலரோடு தொடர்பு கொள்ள விரும்பும் மகளிர் பரத்தையர் எனப்படுவர். இவர்கள் திருமணம் என்னும் வரையறைக்கு உட்பட்டவர் அல்லர். தம்மை நாடி வருபவர்க்கு இன்பமளிப்பதே இவர் தொழில். அதனால் இவரை, 'வரைவின் மகளிர்', 'பொருள்விலைப் பெண்டிர்' என்றும் கூறுவர்.

தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று, பரத்தையர் இல்லத்தில் தங்கி இன்பம் பெறுவதுண்டு.

தலைவன் தன்னைப் பிரிந்து பரத்தையிடம் சென்றதால் தலைவி வெகுண்டு ஊடியிருப்பாள். தலைவனது இல்வாழ்க்கையில் நிகழும் ஊடல் முதலியவற்றைப் போக்கும் வழிகளாய் இருப்பவர் 'வாயில்கள்' எனப்படுவர்.

பரத்தையிற்பிரிவுக்குப்பின் தன் இல்லத்திற்கு வரும் தலைவன், ஊடிய தலைவியை நேர்விக்கத் தோழியை வாயிலாக வேண்டுவான். வாயிலாக வந்தவர்க்கு முகங்கொடுக்க மறுத்தல் 'வாயில்' மறுத்தலாம். தோழியே தலைவனைக் கண்டித்து வாயில் மறுப்பாள். பாணன், விறலியர் முதலியோரையும் தலைவன் வாயிலாக அனுப்புவதுண்டு. தோழியும் தலைவியும் அவர்களைக் கடிந்து திருப்புவர்.

தலைவன் பல முறை பணிந்து வேண்டியதால், தோழி மனமிரங்கித் தலைவியிடம் உரையாடி, தலைவனை ஏற்று ஊடல் தணியுமாறு செய்து வாயில் நேர்விப்பாள்.

வாயிலை ஏற்று, தலைவனுக்கு இடங்கொடுத்து அவனைத் தலைவி சேர்த்துக்கொள்வாள். ஊடலும் கூடலுமாய் அவர்கள் வாழ்க்கை இன்பமாய் அமையும்.

வாழ்க்கை, காதல் ஒழுக்கத்தால் அமைவது. தமிழ் மக்களின் காதல் வாழ்க்கை களவு, கற்பு என இரு வகைப்படும். தலைவன், தலைவியைக் கண்டு காதல் கொண்டது முதல் அவளைத் திருமணம் செய்து கொள்ளும்வரை உள்ள பகுதி களவு எனப்படும். இது களவியல், களவு நெறி, களவொழுக்கம் என்றும் வழங்கப்பெறும்.

திருமணம் முடிந்த பின் தொடங்கும் இல்லற வாழ்க்கை, கற்பொழுக்கம் என்று வழங்கப்படும்.

நாகரிகத்தில் மேம்பட்டிருந்த பண்டைக் காலத்தில் தமிழர் மேற்கொண்டிருந்த இனிய இல்லற நெறிகளே களவும் கற்புமாகும்.

ஒருவழித்தணத்தல்

பக். 1 - 48

வரைவு நீட்டிப்பு

பக். 49 - 143

வரைவு கடாயது

பக். 144 - 480

ஒருவழித்தணத்தல்

வரைதலுக்கு முயலாமல் களவொழுக்கத்தினையே விரும்பி, பகலும் இரவும் குறியிடம் சென்று, தலைவியோடு தலைவன் கூடிவந்தனன். தலைவன் தலைவியரின் மறை வொழுக்கம் வெளிப்பட்டு ஊரில் பழிச்சொல் மிகுந்தது.

அப்பழிச்சொல் அடங்குதற்காக, சில காலம் தலைவன் தலைவியைக் காண வாராதிருப்பான். அவ்வாறு தலைவன் நீங்கியிருத்தல் 'ஒருவழித்தணத்தல்' எனப்படும்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 214 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன், 'ஒருவழித்தணப்பல்' என்று கூறிய அதனை அவன் சிறைப் புறத்தானாகத் தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைக் களவிற்கூடி இன்புற்ற பின், தன் ஊருக்குச் சென்று சின்னாள் கழித்து வருவதாய்த் தோழியிடம் கூறித் தலைவியை ஆற்றுவிக்குமாறு வேண்டினான். அவன் அங்ஙனம் பிரிதலைத் தான் விரும்பவில்லை என்பதனை அவன் சிறைப்புறத்தே நிற்கையில் அவன் கேட்கும்வண்ணம் தலைவியிடம் தோழி கூறியது.

சாரல் பலவின் கொழுந்துணர் நறும்பழம்
இருங்கல் விடர்அளை வீழ்ந்தென, வெற்பில்
பெருந்தேன் இறாஅல் கீறு நாடன்,
பேர்அமர் மழைக்கண் கலிழத்தன்
சீருடை நல்நாட்டுச் செல்லும் அன்னாய்!

தெளிவுரை

"தலைவியே! மலைச்சாரலில் உள்ள பலாமரத்தின் செழுமை மிகுந்த கொத்திலுள்ள இனிய பழம், கரிய மலைப்பிளவில் வீழ்ந்து, அங்குப் பாறையில் கட்டப்பட்டிருந்த பெரிய தேனடை யினைக் கிழித்தது. இத்தகைய மலைநாட்டிற்குரிய நம் தலைவன், பெரிய, மதர்த்த, குளிர்ச்சி பொருந்திய உன் கண்கள் கலங்கி நீர் சொரியுமாறு தன் பெருமை மிகுந்த நாட்டிற்குச் செல்லு கின்றானாம்! (இதனை நீ அறிக.)"

கருத்து

தலைவியே! உன் கண் கலங்கத் தன் நாடு செல்வதாய்த் தலைவன் கூறுகிறான்.

குறிப்பு

பலாப்பழம் கற்பிளவில் விழுந்து தேன் இறாலைச் சிதைக்கும் என்பதன் வாயிலாய், தலைவன் பிரிவு, தலைவியின் மேனி நலத்தைச் சிதைக்கும் என்னும் குறிப்புப் பொருள் பெறப்படுகிறது.

விளக்கம்

பலாச்சுளை தேனோடு சேரும்போது பெருஞ்சுவை உண்டாகும். ஆனால், பலாப்பழம் தேனடையைக் கிழித்து, தேனடையிலிருந்த தேனைக் கெடுத்தொழித்துத் தானும் வீணானது. அதுபோல, தலைவன் தன் நாட்டிற்குச் செல்வதால் தலைவியொடு கூடுதலின்றி, தலைவியின் நலத்தைச் சிதைத்துத் தானும் பயன் பெறாதவனாகிறான்.

சொற்பொருள்

1. பலவு - பலா மரம்; கொழுந்துணர் - செழுமை மிகுந்த கொத்து; நறும் பழம் - இனிய பழம்.
2. இருங்கல் - கரிய மலை; விடர் - பிளவு; அளை - முழை, குகை; வெற்பு - மலை.
3. இறாஅல் - தேனடை; *கீறு* - கிழித்துச் சிதைக்கும்.
4. பேர் அமர் - மிகவும் விரும்பத்தக்க; கலிழ - கலங்கி நீர் சொரிய.
5. *சீருடை* - சிறப்பு மிக்க.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 221 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

'ஒருவழித்தணந்து வரைதற்கு வேண்டுவன முடித்து வருவல்' என்று தலைமகன் கூறக் கேட்ட தலைமகள் அவன் சிறைப்புறத்தானாய்க் கேட்பத் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவுக்காலத்தில் சில காலம் பிரிந்து சென்று திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து மீள்வதாய்த் தலைவன் கூறக் கேட்ட தலைவி, தன் இல்லத்தைச் சூழ்ந்த வேலியருகே தலைவன் நிற்கையில், அவன் கேட்கும் வகையில் தோழியிடம் கூறியது.

அம்ம வாழி, தோழி! காதலர்
பாவை அன்னஎன் ஆய்கவின் தொலைய,
நன்மா மேனி பசப்பச்
செல்வல் என்பதம் மலைகெழு நாட்டே!

தெளிவுரை

தோழியே! பாவை போன்ற என் நுட்பமான அழகு நீங்கும் படியும், மாமை நிறங்கொண்ட என் அழகிய மேனியில் பசலை படரும்படியும் என்னைவிட்டுப் பிரிந்து, மலைகள் நிறைந்த தன் நாட்டிற்குச் செல்வதாய்க் காதலன் கூறுகிறான்! (நான் என்ன செய்ய இயலும்?)

கருத்து

தோழியே! என் நிலையை ஆராய்ந்து பாராமல் தன்னூர்க்குச் செல்வதாய்க் கூறுபவனை நான் என்ன செய்ய இயலும்?

விளக்கம்

தன் மேனிநலம் கெடுவதற்கு முன் விரைவில் வந்து தலைவன் தன்னை மணக்க வேண்டும் என்பதைத் தலைவி, அவன் உணருமாறு உரைக்கிறாள். சிறைப்புறத்தானாகிய தலைவன், தான் கூறுவதைக் கேட்டுத் தன்னை விரைவில் மணந்துகொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்பதே தலைவியினது கூற்றின் குறிப்பு.

சொற்பொருள்

2. பாவை - பொம்மை; ஆய் - நுட்பமான; கவின் - அழகு; தொலைய - நீங்க.
3. நன்மாமேனி - மாமை நிறம் பொருந்திய நல்ல அழகிய மேனி; பசப்ப - பசலை படர.
4. செல்வல் - செல்வேன்; என்ப - என்று கூறுவான்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 233 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

'ஒருவழித்தணந்து வரைய வேண்டும்' என்ற தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

களவுக்காலத்தில் சின்னாள் பிரிந்து சென்று, திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து மீள்வதாய்க் கூறிய தலைவனிடம் பிரிய வேண்டா எனத் தோழி கூறியது.

வருவை அல்லை வாடைநனி கொடிதே
அருவரை மருங்கின் ஆய்மணி வரன்றி
ஒல்லென இழிதரும் அருவி,நின்
கல்லுடை நாட்டுச் செல்லல் தெய்யோ.

தெளிவுரை

தலைவ! நீ சென்றால் உடனே திரும்பமாட்டாய். வாடைக் காற்றோ மிகவும் கொடியதாய் வீசுகின்றது. உயர்ந்த மலைகளில் தோன்றிய ஒளிமணிகளை வாரிக்கொண்டு மிகுந்த ஆரவாரத் தோடு வீழும் அருவிகளைக் கொண்ட உன் மலைநாட்டிற்கு இப்போது செல்ல வேண்டா.

கருத்து

தலைவ! கொடிய வாடை வீசும் இப்போது நீ பிரிந்து செல்ல வேண்டா.

விளக்கம்

இவளைப் பிரிந்து நீ செல்லின் இவள் ஆற்றாமையினால் மிகவும் துன்புறுவாள். ஆதலின், இவளுடன் இருந்தபடியே உன் உற்றார் உறவினருடன் தொடர்புகொண்டு திருமணத்திற்கு வேண்டியவற்றைச் செய்க என்று தோழி உட்பொருள் தோன்றக் கூறுகிறாள்.

குறிப்பு

உன் நாட்டு அருவி, மணிகளை வாரிக்கொண்டு ஆரவாரத்தோடு விழுவதுபோல, நீயும் வரைவதற்கு வேண்டிய பொருளை ஈட்டித் திருமணத்திற்குரிய ஆரவாரத்தோடு விரைந்து வர வேண்டும் என்பது குறிப்புப் பொருள்.

சொற்பொருள்

1. வருவை அல்லை - (விரைவில்) திரும்ப மாட்டாய்; வாடை - வாடைக்காற்று; நனி - மிகவும்.
2. அருவரை - கடத்தற்கரிய மலை; மருங்கின் - பக்கத்தே (கிடக்கும்); ஆய்மணி - ஆராய்தற்கரிய மணிகளை; வரன்றி - வாரிக்கொண்டு.
3. ஒல் என - 'ஒல்' எனும் ஒலியுடன்; இழிதரும் - கீழிறங்கும்.
4. கல்லுடை - மலைகளைக்கொண்ட; செல்லல் - செல்லாதே.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 297 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

ஒருவழித்தணந்து வரைய வேண்டுமென்ற தலைமகற்குத் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

களவுக்காலத்தில் சில நாள் பிரிந்து சென்று மீளும் கருத்துடைய தலைவன் அதனைத் தோழியிடம் கூறியபோது அவள், பிரியும் அவன் வரைவொடு வரவேண்டும் எனக் கூறியது.

விரிந்த வேங்கைப் பெருஞ்சினைத் தோகை
பூக்கொய் மகளிரின் தோன்றும் நாட!
பிரியினும் பிரிவது அன்றே
நின்னொடு மேய மடந்தை நட்பே!

தெளிவுரை

மலர்ந்த மலர்களைக் கொண்ட வேங்கைமரத்திலேறி மலர் கொய்யும் மகளிரைப் போல, அம்மரத்தின் பெரிய கிளையில்

அமர்ந்துள்ள மயில் தோன்றுதற்கிடனான மலைநாடனே! நீ என் தலைவியை விட்டுப் பிரிந்தாலும், என் தலைவி உன்னோடு கொண்டுள்ள நட்பு என்றுமே பிரிவறியாதது. (ஆதலின், உடனே அவளை மணந்துகொள்.)

கருத்து

தலைவ! நீ பிரியினும் உன்னோடு தலைவி கொண்டுள்ள நட்பு என்றும் பிரிவறியாதது.

விளக்கம்

மலர்ந்த வேங்கைக் கிளையில் அமர்ந்துள்ள மயில், மலர் கொய்யும் மகளிர்போலத் தோன்றும் என்னும் தொடர்மூலம், தலைவன் தலைவிக்கு நல்லது புரியானாயினும் நன்மை செய்வதுபோலத் தோன்றுகின்றான் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. விரிந்த - பூக்கள் மலர்ந்துள்ள; வேங்கை - வேங்கை மரத்தின்; பெருஞ்சினை - பெரிய கிளை; தோகை - மயில்.
3. பிரியினும் - (நீ தலைவியைப்) பிரிந்தாலும்.
4. மேய - உண்டான; மடந்தை - பெண் (தலைவி).

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 162 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

ஒருவழித்தணந்துழி ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைமகள் ஆற்றாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவுக்காலத்தில் ஊரில் அலர் தோன்ற, அது அடங்குதற்பொருட்டுச் சில நாள் தலைவியைக் காணவாராமல் தலைவன் தன் வீட்டிலேயே இருந்தான். அப்போது, தலைவி பிரிவாற்றாமையால் வருந்தினாள்; தன்னை

ஆற்றுவித்த தோழியிடம், தான் வருந்தியதற்கான காரணத்தைத் தலைவி கூறியது.

பெருங்கடல் கரையது சிறுவெண் காக்கை
நீத்துநீர் இருங்கழி இரைதேர்ந்து உண்டு,
பூக்கமழ் பொதும்பர்ச் சேக்கும்
துறைவன் சொல்லோ பிறஆ யினவே!

தெளிவுரை

பெரிய கடற்கரையில் வாழும் சிறுவெண் காக்கை ஆழமான நீர்ப்பரப்பில் தனக்குரிய உணவைத் தேர்ந்தெடுத்து உண்ட பின்னர், மலர் மணம் கமழும் பூஞ்சோலையில் கவலையின்றித் தங்கும் துறையினைக் கொண்டவன், தலைவன். அத்தலைவன் முன்பு சொன்ன சொற்கள் இன்று பொய்யாயின. (தலைவன் சொல்லிய சொல் வேறாய், செயல் வேறாய் உள்ளன.) இந்நிலையில், அவன் பிரிந்ததால் ஏற்பட்ட துன்பத்தை நான் எவ்வாறு ஆற்றியிருக்க இயலும்?

கருத்து

தோழியே! 'உன்னை எந்நாளும் பிரியேன்' என்று முன்பு சொன்ன தலைவன் இப்போது பிரிந்து சென்றனனே!

குறிப்பு

களவொழுக்கத்தின்போது தலைவன் தலைவியிடம், 'நான் உன்னை உடனே மணப்பேன்' என்ற உறுதி கூறியிருந்தான். இப்போது அம்மொழி யினின்றும் தவறினான்.

உள்ளுறை

சிறுவெண் காக்கை சிறுமீனை உண்டு பசி தீர்ந்ததும் மலர்ச் சோலைக்குச் சென்று தங்கியிருந்தது என்னும் தொடர்மூலம், தலைவனும் களவுப் புணர்ச்சியின்போது தன் ஆர்வந் தீரத் தலைவியின் நலனை நுகர்ந்துவிட்டு இப்போது வரைதற்கு எம் முயற்சியும் மேற்கொள்ளாமல் தன் வீட்டில் மகிழ்வோடு தங்கி யுள்ளான் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

2. நீத்து நீர் - நீந்துகின்ற அளவுக்குள்ள நீர் (நீத்து - நீச்சு).
3. பொதும்பர் - சோலை; சேக்கும் - தங்கும்.
4. சொல்லோ பிற ஆயின - சொல்லும் செயலும் வேறு வேறு ஆயின.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 161 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

ஒருவழித்தணந்துழி ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைமகள் ஆற்றாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவுக்காலத்தில் தலைவன் தலைவியைச் சிறிது காலம் பிரிந்திருந்தான். அதனைப் பொறுத்துக்கொள்ளாது வருந்திய தலைவியைத் தோழி தேற்ற, அவளிடம் தலைவி கூறியது.

பெருங்கடல் கரையது சிறுவெண் காக்கை
கருங்கோட்டுப் புன்னைத் தங்கும் துறைவற்குப்
பயந்துநுதல் அழியச் சாஅய்,
நயந்த நெஞ்சம் நோய்ப்பால் அஃதே!

தெளிவுரை

பெரிய கடற்கரையில் கழுத்தில் சிறிதளவு வெண்மை நிறம் கொண்ட சிறிய காக்கை, புன்னை மரத்தின் கரிய நிறக் கிளையில் தங்கும். இத்தகைய கடல் துறையினைக் கொண்டவன், தலைவன். அவன் பொருட்டு என் நெற்றி பசலை பாயப்பெற்று, ஒளி மழுங்கியது. என் நெஞ்சமும் இப்போது பிரிவுத் துன்பத்தால் உழல்கிறது. (இவ்வாறிருக்கும் நான் எவ்வாறு ஆற்றியிருக்க இயலும்?)

கருத்து

தோழியே! தலைவன் பிரிவால் நான் அழகிழந்து மெலிவுற்றுத் துன்பமுற்றுள்ளேன்.

உள்ளுறை

சிறுவெண் காக்கை தனக்கு வேண்டிய கூட்டினைத் தான் அமைத்துக்கொள்ளாமல் புன்னை மரக்கிளையில் தங்கும். இத்தொடர்மூலம், தலைவனும் வரைதற்கு வேண்டிய முயற்சி செய்யாமல் தன் வீட்டிலேயே தங்கியிருக்கிறான் என்பது பெறப் படுகிறது.

சொற்பொருள்

1. வெண் காக்கை - கழுத்தில் சிறிதளவு வெண்மை (சாம்பல்) நிறமுள்ள காக்கை.
2. கருங்கோடு - கரிய நிறக் கிளை.
3. பயந்து - பசந்து, பசலை பாய்ந்து; நுதல் - நெற்றி; அழிய - ஒளி மழுங்க; சாஅய் - மெலிந்து.
4. நயந்த - காதல் கொண்ட; நோய்ப்பாலது - துன்பத்தில் உழல்கின்றது.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 163 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

ஒருவழித்தணந்துழி ஆற்றுவிக்குந் தோழிக்குத் தலைமகள் ஆற்றாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவுக்காலத்தில் தலைவன் தலைவியைச் சில நாள் பிரிந்து தன்னூர்க்குச் சென்றான். அப்பொழுது பிரிவாற்றாது வருந்திய தலைவியைத் தோழி தேற்றினாள். அவளிடம் தலைவி கூறியது.

பெருங்கடல் கரையது சிறுவெண் காக்கை
இருங்கழித் துவலை ஒலியில் துஞ்சும்
துறைவன் துறந்தெனத் துறந்துஎன்
இறைஏர் முன்கை நீங்கிய வளையே.

தெளிவுரை

ஆழமான கழியில் நீர்த்துவலை தெறிப்பதால் உண்டாகும் பேரொலியைப் பொருட்படுத்தாமல் பெரிய கடற்கரையிலுள்ள சிறுவெண் காக்கை இனிதே உறங்கும் கடல் துறைக்கு உரியவன், தலைவன். அவன் நம்மைப் பிரிந்த அப்பொழுதே என் அழகிய முன்கையிலிருந்த வளையல்கள் எல்லாம் கழன்று வீழ்ந்து விட்டனவே. (இந்நிலையில் நான் எவ்வாறு ஆற்றியிருக்க இயலும்?)

கருத்து

தோழியே! தலைவன் பிரிவால் என் உடல் மெலிவுற்றதால் அழகிழந்தேன்.

குறிப்பு

நீரின் ஒலி கேட்டுப் பறவைகள் துயிலும். காக்கை உப்பங்கழி நீரின் ஓசை கேட்டுத் துயில்வதாய்ப் பாடலில் கூறப்பட்டுள்ளது.

உள்ளுறை

காக்கை, கழியின் துவலை எழுப்பும் பேரொலியையும் பொருட்படுத்தாது உறங்கும். இத்தொடர்மூலம், தலைவனும் இவ்வூரவர் கூறும் பழிச்சொற்களைப் பற்றிக் கவலை ஏதும் கொள்ளாமல் தன் மனையில் இனிதே தங்கியிருக்கிறான் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

2. துவலை ஒலி - அலைகள் உடைந்து சிதறுவதால் உண்டாகும் ஒலி; துஞ்சும் - தூங்கும்.
3. துறந்து என - நீங்கினனாக.
4. இறைஏர் - அழகு பொருந்திய முன்கை; வளை - வளையல்.

தலைவி கூற்று

கைந்நிலை 49 **புல்லங்காடனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகள் தன் துன்பத்தைத் தலைமகனுக்குத் தெரிவிக்கும் முகமாகத் தோழியிடம் சொல்லுதல்.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவால் தான் உடல் மெலிந்திருக்கும் செய்தியைத் தலைவனிடம் கூறித் தன் துன்பம் தீர வழி செய்யுமாறு தோழியிடம் தலைவி கூறினாள்.

நாவாய் வழங்கு நளிதிரைத் தண்கடலுள்
ஓவா கலந்(து)ஆர்க்கும் ஒல்லென் இறாக்குப்பை!
பாஆர்அும் சேர்ப்பற்(கு) உரையாய் பரியாது
நோயால் நுணுகிய வாறு

தெளிவுரை

"*மரக்கலங்கள் செல்லும் செறிந்த அலைகள் கொண்ட குளிர்ச்சி பொருந்திய கடலுள் நீங்காமல் ஒன்றுகூடி ஒல் என ஒலிக்கும் இறால் மீன்களின் கூட்டம் நிறைந்திருக்கும் கடற் கரையைக் கொண்டவன், நம் நெய்தல் நிலத் தலைவன். பிரிவு நோயைப் பொறுக்க இயலாது நான் உடல் மெலிந்திருத்தலை நீ அவனிடம் சொல்" என்று தலைவி, தோழியிடம் கூறினாள்.*

கருத்து

தோழியே! என் பிரிவுத் துன்பத்தைப் பற்றித் தலைவனிடம் கூறு.

குறிப்பு

தலைவன் தன்னை மணந்து பிரிவு நோயைப் போக்க வேண்டும் என்பது தலைவியின் நோக்கமாகும்.

சொற்பொருள்

1. நாவாய் - மரக்கலம்; நளி - செறிந்த; திரை - அலை; தண் - குளிர்ந்த.
2. ஓவா - நீங்காமல்; ஆர்க்கும் - ஒலிக்கும்; இறா - இறால் மீன்; குப்பை - குவியல்.

3. பா - பரவிய, நிறைந்த; ஆர்அம் - அழகிய; சேர்ப்பன் - கடல்நிலத் தலைவன்; பரியாது - பொறுத்திட இயலாது.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 225 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

மெலிவு கூறி வரைவு கடாவக் கேட்ட தலைமகன் தான் வரைதற்பொருட் டால் ஒருவழித்தணந்து நீட்டித்தானாக, ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவால் தலைவி மெலிவதைப் பற்றிக் கூறி அவளைத் திருமணம் செய்துகொள்ளுமாறு தோழி தலைவனிடம் வற்புறுத்தினாள். தலைவன் திருமண ஏற்பாடுகளைச் செய்யும் பொருட்டுப் பிரிந்து சென்றவன், நீண்ட காலமாயும் வாராதிருந்தான். தலைவி ஆற்றாதவள் ஆயினாள். அவளிடம் தோழி ஆறுதல் கூறியது.

அம்ம, வாழி, தோழி! பைஞ்சுனைப்
பாசடை நிவந்த பனிமலர்க் குவளை
உள்அகம் கமழும் கூந்தல் மெல்இயல்
ஏர்திகழ் ஒள்நுதல் பசத்தல்
ஓரார் கொல்?நம் காத லோரே.

தெளிவுரை

தலைவியே! பசிய நிறம் அமைந்த சுனையில் பச்சை நிறம் கொண்ட இலைகளுக்கிடையே குளிர்ச்சி பொருந்திய குவளை மலர் உயர்ந்து தோன்றும். அக்குவளை மலரின் உள்ளகம்போல நறுமணம் கமழும் கூந்தலும் மெல்லிய இயல்பும் கொண்ட அழகிய ஒளி பொருந்திய உன் நெற்றி பசலை பாய்ந்து கெடும் என்பதை நம் தலைவன் எண்ணாதிருப்பானோ? (எண்ணுவான்; ஆதலின், விரைவில் வருவான்; வருந்தற்க.)

கருத்து

தலைவியே! உன் நுதலில் பசலை பாய்தலைத் தலைவன் அறிவான்; ஆதலின், விரைவில் வருவான்; வருந்தாதே!

சொற்பொருள்

1. பைஞ்சுனை - பசிய சுனை.
2. பாசடை - பசுமை இலை; நிவந்த - மேலெழுந்த; பனிமலர் - குளிர்ந்த மலர்.
3. உள்அகம் - உள்ளிடம்; கமழும் - மணம் வீசும்; மெல் இயல் - மெல்லிய இயல்பு கொண்ட.
4. ஏர் - அழகு; திகழ் - பொருந்திய; ஒள்நுதல் - ஒளி பொருந்திய நெற்றி.
5. ஓரார் கொல்? - எண்ணாதிருப்பானோ?

தோழி கூற்று

ஐங்குறுநூறு 199 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் ஒருவழித்தணந்துழி ஆற்றாளாகிய தலைமகளை ஆற்று விக்கும் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

களவுக்காலத்தில் தலைவன், ஊர் அலர் நீங்கும் பொருட்டுச் சில நாள் தன்னூரில் தங்கினான். அப்பிரிவினைப் பொறுக்கவியலாது தலைவி வருந்தியது கண்டு அவளை ஆற்றுவிக்கும் தோழி கூறியது.

கானல்அம் பெருந்துறைக் கலிதிரை திளைக்கும்
வான்உயர் நெடுமணல் ஏறி, ஆனாது,
காண்கம் வம்மோ தோழி!
செறிவளை நெகிழ்த்தோன் எறிகடல் நாடே!

தெளிவுரை

தலைவியே! செறிந்திருக்கும் உன் வளையல்கள் கழன்று விழுமாறு நம் கடல்நாட்டுத் தலைவன் பிரிந்து சென்றனன். கடற்கரைச்சோலையருகே உள்ளதும், கடல்அலைகள் வந்து தழுவிச் செல்லுவதுமாகிய மிக உயர்ந்த நெடிய மணல்திட்டின் மேல் ஏறி நின்று அவன் நாட்டினை இடைவிடாது காண்போம், வா!

கருத்து

'நம் வளை நெகிழ்த்தோன் நாட்டினை நெடுமணற்குன்றில் ஏறி நின்று காண்போம், வா!' என்று தோழி தலைவியை ஆற்றுவித்தாள்.

விளக்கம்

தலைவனது பொருளைக் காணின் தலைவனைக் கண்டாற் போன்ற ஆறுதல் உண்டாகுமாதலின், 'அவன் நாட்டைக் காண்போம் வா' எனத் தலைவியைத் தோழி அழைக்கின்றாள்.

சொற்பொருள்

1. கானல் - கடற்கரைச்சோலை; அம் - அழகிய; பெருந்துறை - பெரிய துறை; கலிதிரை - ஆரவாரிக்கும் கடல்அலை; திளைக்கும் - வந்து தழுவிச் செல்லும்.
2. வான் உயர் - வானளவு உயர்ந்துள்ள, மிக உயர்ந்த; ஆனாது - இடைவிடாது.
3. காண்கம் - காண்போம்.
4. செறிவளை - செறிந்திருக்கும் வளையல்; நெகிழ்த்தோன் - நெகிழச் செய்தவன்; எறிகடல் - அலை வீசும் கடல்.

தலைவி கூற்று

நற்றிணை 338 **மதுரை ஆருலவிய நாட்டு ஆலம்பேரி சாத்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

ஒருவழித்தணந்தகாலை, ஆற்றாத தலைமகள், வன்பொறை எதிர் மொழிந்தது.

(வன்பொறை - வலிமையான பொறுமை, பிரிவாற்றாமையைப் பொறுத்துக்கொள்ளுதல்; எதிர்தல் - மாறுபட்டுக் கூறுதல்; வன்பொறை எதிர்தல் - பிரிவை ஆற்றியிருக்குமாறு கூறிய தோழியிடம் தலைமகள் மாறுபட்டுக் கூறுதல்.)

கூற்று விளக்கம்

தலைவன் களவுக்காலத்தில் ஏதோ ஒரு காரணம்பற்றிப் பிரிந்து இருந்தனன். அது பொறாத தலைவி வருந்தி நலிய, 'வருந்தாதிரு' எனத் தோழி தேற்றுகிறாள். அவளிடம் தலைவி மனந்தளர்ந்து எதிர்மொழிந்தது.

கடுங்கதிர் ஞாயிறு மலைமறைந் தன்றே,
அடும்புகொடி துமிய ஆழி போழ்ந்து,அவர்
நெடுந்தேர் இன்ஒலி இரவும் தோன்ற;
'இறப்ப எவ்வம் நலியும், நின்நிலை;
நிறுத்தல் வேண்டும்' என்றி; நிலைப்ப
யாங்ஙனம் விடுமோ மற்றே! – மால்கொள
வியல்இரும் பரப்பின் இரைஎழுந்து அருந்துபு,
புலவுநாறு சிறுகுடி மன்றத்து ஓங்கிய
ஆடுஅரைப் பெண்ணைத் தோடுமடல் ஏறி,
கொடுவாய்ப் பேடைக் குடம்பைச் சேரிய,
உயிர்செலக் கடைஇப் புணர்துணைப்
பயிர்தல் ஆனா பைதல்அம் குருகே.

தெளிவுரை

தோழியே! கடுமையான கதிர்கள் கொண்ட கதிரவனும் மேற்றிசையில் மலைக்குப் பின்னே மறைந்துவிட்டனன். தேர்ச் சக்கரங்கள் அடும்பின் கொடிகள் சிதையும்படி வழியைப் பிளந்து கொண்டு வரும் தலைவனுக்குரிய நெடிய தேரின் இனிய ஒலி,

இரவு நேரம் இவ்வளவு கழிந்தும் இன்னும் கேட்கவில்லை. எல்லை கடந்த காமநோயும் என்னை மெலியச் செய்கிறது. இந்நிலையில் என்னை நெருங்கி, 'உன் துயரை மற்றவர் அறியாதபடி மறைத்தொழுக வேண்டும்' என்று கூறுகின்றாய்!

கடற்பரப்பிலே நாரை பறந்து இரை தேடி உண்டது. இருள் தோன்றியதும், புலவு நாற்றம் கொண்ட நம் சிறுகுடியிருப்பின் மன்றத்திலே வளர்ந்துள்ளதும், காற்றால் அசையும் பருத்த அடிமரத்தைக் கொண்டதுமான பனைமரத்தின் மடலின்மீது ஏறித் தங்கியது. அங்கிருந்தவாறு, வளைந்த வாய் கொண்ட தன் பேடையைக் கூட்டிற்கு வருமாறு கூவி அழைத்தது. அப்பேடை வந்து தன்னோடு கூடிக் கலந்து இன்பம் தரும்வரை தன் உயிரே போகும்படியாக அழைத்துக்கொண்டேயிருந்தது.

இதைக் கண்டும் என் துயரை மறந்து எங்ஙனம் ஆற்றியிருக்க இயலும்? (அஃது என்னால் இயலாது.)

கருத்து

தோழியே! தலைவனைக் காணாமல் ஆற்றியிருக்க இயலவில்லையே!

குறிப்பு

கடல்நாரையும் தன் பேடையிடம் அன்பு காட்டி மகிழ்ந்திருக்கிறது. ஆனால், தலைவன் இத்தகைய அன்பின் திறத்தை உணரவில்லையே என்பது குறிப்பு.

சொற்பொருள்

2. துமிய - அறுபட; ஆழி - தேர்ச்சக்கரம்; போழ்ந்து - பிளந்து.
3. தோன்றாது - கேட்கவில்லை.
4. இறப்ப - மிகுந்து; எவ்வம் - துன்பம்; நலியும் - வருத்தும்; நின் நிலை - உன் அழுகையை.
5. என்றி - என்று சொல்லுகின்றாய்.
6. மால் - மயக்கம்.
7. வியல் இரும் பரப்பு - அகன்ற பெரிய கடற்பரப்பு.
8. புலவு நாறு - புலால் நாறும்; மன்றத்து - மன்றத்தில்; ஓங்கிய - ஓங்கி வளர்ந்துள்ள.
9. ஆடு அரை - (காற்றால்) அசையும் அடிப்பகுதி (கொண்ட); பெண்ணை - பனைமரம்.

10. கொடு வாய் - வளைந்த வாய்; பேடை - தன் பெடையை; குடம்பை - கூடு; சேரிய - சேர்வதற்காக.
11. உயிர்செல - தன் உயிரே போகும்படியாக; கடைஇ - ஒலித்து.
12. பயிர்தல் - அழைத்தல்; ஆனா - குறையாத; பைதல் - வருத்தம்; அம் குருகு - அழகிய நாரை.

தலைவி கூற்று

நற்றிணை 199 **பேரிசாத்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

வன்புறை எதிரழிந்தது. (வன்புறை எதிரழிதல் - தோழி வற்புறுத்தியதை ஏற்காமல் தலைமகள் வருந்திக் கூறுதல்.)

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவைத் தாங்க இயலாத தலைவியை நோக்கி, 'நீ வருந்தாதே, பொறுத்துக் கொள்' என்று தோழி ஆறுதல் கூறினாள். தோழி வற்புறுத்தியதை ஏற்காது தலைவி வருந்திக் கூறியது. (வன்புறை - தோழி வற்புறுத்தியதனை ஏற்காது தலைவி வருந்திக் கூறியது.)

ஓங்குமணல் உடுத்த நெடுமாப் பெண்ணை
வீங்குமடற் குடம்பைப் பைதல்வெண் குருகு,
நள்ளென் யாமத்து உயவுதோ றுருகி,
அள்ளல் அன்னஎன் உள்ளமொடு உள்ளுடைந்து,
உளெனே வாழி தோழி வளைநீர்க்
கடுஞ்சுறா எறிந்த கொடுந்திமில் பரதவர்
வாங்குவிசைத் தூண்டில் ஊங்குஊங்கு ஆகி,
வளிபொரக் கற்றை தாஅய் நளிசுடர்,
நீல்நிற விசும்பின் மீனொடு புரையப்
பைபய இமைக்குந் துறைவன்
மெய்தோய் முயக்கங் காணா ஊங்கே!

தெளிவுரை

தோழி! நீ வாழ்வாயாக! சூழ்ந்துள்ள கடல் நீரில், விரைந்து செல்லும் சுறாமீனைப் பிடிக்க வலை வீசும் வளைந்த படகைக்

கொண்ட பரதவர் இழுக்கும் விசைமிக்க தூண்டிலின் இடையிடையே புகுந்து காற்று அலைத்தலால், படகிலுள்ள கதிர்த்திரள் கொண்ட செறிந்த சுடர்விளக்குகள், நீல நிறமுள்ள வானத்தில் தோன்றும் விண்மீன்களைப் போல விட்டுவிட்டு ஒளி வீசும். அத்தகைய துறையினைக் கொண்ட தலைவனது உடலில் படிந்து பெறும் தழுவுதலை நான் அடையப் பெறாதவளாயுள்ளேன்.

உயர்ந்த மணல் பரந்த இடத்தில் நிற்கும் நீண்ட கரிய பனை மரத்தின் விரிந்த மடலில் அசையும் கூட்டிலுள்ள வெண்ணிறம் கொண்ட நாரை, தன் துணையைப் பிரிந்து, இரவு நடுயாமத்தில் வருந்தி ஓசை உண்டாக்கும் போதெல்லாம் சேறுபோற் குழம்பிய என் உள்ளம் உருகி உடைந்து இன்னும் உயிரோடே இருக்கின்றேன், காண்.

கருத்து

மீன் வேட்டுச் சென்ற தன் துணைக் குருகு வாராமையால் கூட்டிலே தனித்துறையும் பெடைக்குருகு அதனை நினைந்து நள்ளிரவுப்போதிலும் நரலுதலை ஒழிவதில்லை. அதனைக் கேட்கும்தோறும் என் உள்ளமும் பிரிந்துறையும் காதலரை நினைந்து வருந்தியிருக்கும்.

நாம் ஆற்றியிருக்கத் துணிந்தோமாயினும், சூழ்நிலை நம் உள்ள உறுதியை உடைத்து உருகுவிக்கின்றது.

குறிப்பு

காற்று வீசினாலும் அவியாது மங்கித் தோன்றும் விளக்குப்போல், அவர் வருவார் என்னும் நம்பிக்கையால் பசலை உண்ட மேனி மழுங்கத் தோன்றி உயிருடன் இருக்கின்றது.

சொற்பொருள்

1. ஓங்குமணல் - உயர்ந்த மணல்; உடுத்த - பரந்துள்ள இடம்; நெடு - நீண்ட; மா - கரிய; பெண்ணை - பனைமரம்.
2. வீங்கு - விரிந்த; குடம்பை - கூடு; பைதல் - வருந்துதல்; குருகு - நாரை.
3. நள்ளென் யாமம் - நடு இரவு; உயவு - வருத்தம்.
4. அள்ளல் - சேறு.
5. வளைநீர் - சூழ்ந்துள்ள கடல் நீர்.

6. கடுஞ்சுறா - விரைந்து செல்லும் சுறாமீன் (சுறா - சுறாமீன்); எறிந்த - வீசிய; கொடுந்திமில் - வளைந்த படகு.
7. வாங்கு - இழுக்கும்; ஊங்குஊங்கு - இடையிடையே.
8. வளி - காற்று; பொர - மோத; கற்றை - திரள்; நளி - செறிந்த.
9. நீல்நிற - நீல நிறமுள்ள; விசும்பு - வானத்திலுள்ள; மீன் - விண்மீன்.
10. பைபய - விட்டுவிட்டு; இமைக்கும் - ஒளிவீசும்.
11. மெய்தோய் - உடலில் படிந்தது; முயக்கம் - தழுவுதல்; ஊங்கு - பொழுது.

தலைவி கூற்று

நற்றிணை 38 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகள் வன்புறை எதிரழிந்து சொல்லியது. (வன்புறை எதிரழிதல் - வற்புறுத்தும் தோழி சொல்லை மறுத்து தலைவி வருந்தி உரைத்தல்.)

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் மகிழ்ந்த தலைவன் தலைவியைப் பிரிந்தனன். பிரிவை ஆற்றாத தலைவி வருந்தியிருந்தாள். தோழி, தலைவியை நோக்கித் துன்பத்தைப் பொறுத்து இருக்குமாறும், இல்லையெனில் களவுக் காதல் வெளிப்பட்டு ஊர் பழிக்கும் என்றும் கூற, அதற்குத் தலைவி, தோழி கூறியதை ஏற்காமல் கூறியது.

வேட்டம் பொய்யாது வலைவளம் சிறப்ப,
பாட்டம் பொய்யாது பரதவர் பகர,
இரும்பனந் தீம்பிழி உண்போர் மகிழும்
ஆர்கலி யாணர்த்து ஆயினும், தேர்கெழு
மெல்லம் புலம்பன் பிரியின், புல்லெனப்
புலம்பு ஆகின்றே தோழி! கலங்குநீர்க்
கழிசூழ் படப்பைக் காண்ட வாயில்,
ஒலிகா வோலை முள்மிடை வேலி,
பெண்ணை இவரும் ஆங்கண்
வெண்மணற் படப்பைஎம் அழுங்கல் ஊரே!

தெளிவுரை

“தோழியே! கலங்கலான நீரைக் கொண்ட கழிகள் சூழ்ந்த தோட்டங்களைக் கொண்டது, ‘காண்டவாயில்’ என்னும் ஊர். ஒலிக்கின்ற முதிர்ந்த பனையோலைகளோடு முள்ளையும் சேர்த்துக் கட்டப்பட்ட வேலிகளால் சூழ்ந்திருப்பது, அவ்வூர். அவ்வேலியினுள்ளே பனை மரங்கள் உயர்ந்து வளர்ந்திருக்கும். அங்கே வெள்ளிய மணல்திட்டில் ஆரவாரம் மிக்க நம் சேரி உள்ளது. கடலில் மீன் வேட்டைக்குச் சென்றவர்க்குத் தப்பாமல் மீன்கள் மிகுதியாய்க் கிடைக்கும். அம்மீன்களைப் பரதவர் பிற நாட்டிற்குச் சென்று, விற்றுப் பெற்ற பொருளைத் தந்து, கரிய பனைமரத்தின் இனிய கள்ளை வாங்கி உண்டு மகிழ்ந்து ஆரவாரித்திருப்பர். ஆயினும், தேரூர்ந்து வந்து நமக்கு அருளுகின்ற சிறப்புப் பொருந்திய கடல்நாட்டுத் தலைவன் நம்மைப் பிரிந்திருக்கும்போதோ இவை அனைத்தும் பொலிவிழந்து நமக்கு வருத்தம் தருகின்றனவே! இந்நிலையில் நான் எவ்வாறு ஆற்றியிருப்பேன்?” என்று தலைவி தன்னைத் தேற்றும் தோழியிடம் கூறுகிறாள்.

கருத்து

காதலனைப் பிரிந்துறையும் எனக்கு நான் இருக்கும் ஊரும் சூழ்நிலையும் எத்துணைச் செல்வமும் சிறப்பும் கொண்டனவாயிருப்பினும் அவை இன்பம் தாரா; வருத்தத்தையே மிகுவிக்கும். இந்நிலையில் நான் எவ்வாறு ஆற்றியிருப்பேன்?

விளக்கம்

பனங்கள்ளை உண்டு மக்கள் மகிழ்ந்திருத்தல்போல, நாமும் தலைவனுடன் காம இன்பத்தைப் பெற்றுக் களிக்க இயலவில்லையே!

சொற்பொருள்

1. வேட்டம் - (மீன்) வேட்டை; பொய்யாது - தப்பாது.
2. பாட்டம் - மழை, மேகம்; பகர - (விலை) கூற, விற்க.
3. பனந்தீம்பிழி - பனைமரத்தின் இனிய கள்.
4. ஆர்கலி - ஆரவாரம்; யாணர்த்து - புதுவருவாய் கொண்டது.
5. புலம்பன் - நெய்தல்நிலத் தலைவன்.

6. புலம்பு - வருத்தம்.
7. படப்பை - தோட்டம்; காண்ட வாயில் - ஓர் ஊர்.
8. காவோலை - முற்றின பனை ஓலை; முள்மிடை - முள்ளைச் சேர்த்துக் கட்டிய.
9. பெண்ணை - பனைமரம்; இவரும் - உயர்ந்து வளரும்; ஆங்கண் - அவ்விடத்தில்.
10. அழுங்கல் - ஆரவாரம்.

தலைவி கூற்று

கலித்தொகை 137 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவுநீட ஆற்றாளாயின இடத்துத் தலைமகள் ஆற்றாமையை அவள் தன்னானே தலைமகற்கு அறிவிக்கலுற்ற தோழி, தலைமகன் சிறைப்புறத் தானாகத் தலைமகளை வற்புறுக்க, அவள் வன்புறை எதிரழிந்து கூறியது.

கூற்று விளக்கம்

வரைவுக்குக் காலந்தாழ்ந்தபோது தலைவி அதனைப் பொறுக்க இயலாத வளானாள். அந்நிலையை அவள் வாய்ச் சொல்லாகவே தலைவனுக்குக் கூறச் செய்ய வேண்டும் என்று விரும்பிய தோழி, அவன் ஒருநாள் இரவு தலைவியைக் காணவந்து வேலிக்கு மறுபுறம் நிற்க, அவன் காதில் விழுமாறு தலைவியைப் பிரிவினைப் பொறுத்திருக்குமாறு வேண்டினாள். அதை ஏற்றுக் கொள்ள மறுத்துத் தலைவி தன் துயரத்தை வெளிப்படுத்தியது.

அரிதே, தோழி!நாண் நிறுப்பாம் என்றுணர்தல்,
பெரிதே காமம்,என் உயிர்தவச் சிறிதே;
பலவே யாமம்; பையுளும் உடைய;
சிலவே, நம்மோடு உசாவும் அன்றில்;
அழல்அவிர் வயங்கிழை ஒலிப்ப, உலமருந்து,
எழில்எஞ்சு மயிலின் நடுங்கிச் சேக்கையின்,
அழலா கின்று,அவர் நக்கதன் பயனே.

மெல்லிய நெஞ்சு பையுள் கூரத்,தம்
சொல்லினான் எய்தமை அல்லது, அவர்நம்மை

வல்லவன் தைஇய வாக்கமை கடுவிசை
வில்லினால் எய்தலோ இலர்மன்; ஆயிழை!
வில்லினும் கடிது,அவர் சொல்லினுள் பிறந்தநோய்.;

நகைமுத லாக, நட்பினுள் எழுந்த
தகைமையின் நலிதல் அல்லது, அவர்நம்மை
வகைமையின் எழுந்த தொல்முரண் முதலாகப்
பகைமையின் நலிதலோ இலர்மன்; ஆயிழை!
பகைமையிற் கடிது,அவர் தகைமையின் நலியும்நோய்.

'நீயலேன்' என்றுஎன்னை அன்பினால் பிணித்துத்தம்
சாயலின் சுடுதல் அல்லது, அவர்நம்மைப்
பாயிருள் அறநீக்கும் நோய்தபு நெடுஞ்சுடர்த்
தீயினால் சுடுதலோ இலர்மன்; ஆயிழை!
தீயினும் கடிது,அவர் சாயலிற் கனலும்நோய்.

ஆங்கு–
அன்னர் காதல ராக, அவர்நமக்கு
இன்னுயிர் போத்தரும், மருத்துவ ராயின்
யாங்கா வதுகொல்? தோழி! – எனையதூஉம்.
தாங்குதல் வலித்தன்று ஆயின்.
நீங்கரிது உற்றன்று,அவர் உறீஇய நோயே.

தெளிவுரை

தலைவியின் ஆற்றாமையை அறிந்த தோழி, அவளை ஆற்றியிருக்குமாறு வேண்டிக் கொண்டபொழுது, தலைவி, தோழியை நோக்கி, "தோழி! நாணத்தைக் கடைப்பிடிப்போம் என்று எண்ணுதல் இயலாததுபோலும்! காரணம், எனக்குற்ற காமநோய் நாணத்தைவிடப் பெரிதாயிற்று; என் உயிரின் (மன) வலிமையோ மிகவும் குறைவு. நான் அந்நோயால் வருந்தி உறங்காது கழிக்கும் இரவுகளோ பல. துணையைப் பிரிந்து தனிமையில் துயிலாது வருந்தும் அன்றில் பறவைகளே என் துயரைப் பங்கிட்டுக் கொள்கின்றன. தலைவன் என்னோடு நட்புக் கொண்டதனால் நான் பெற்ற பயன், என் அழகு அழிந்து போனது ஒன்றுதான்; தோகையை இழந்த மயில்போலப் பொலிவிழந்துள்ளேன்; நாணம் காரணமாகப் படுக்கையில்

கிடந்து உறக்கம் கொள்ளாமல் நடுங்குகின்றேன். நெருப்பென ஒளி வீசும் அணிகலன்கள் என்னுடைய உடல் மெலிவால் ஒன்றோடொன்று மோதி ஒலி எழுப்புகின்றன. இதன் காரணம் அவர் எனக்களித்த காமத் தீயன்றோ?" என்று கூறினாள்.

அது கேட்ட தோழி தலைவியை நோக்கி, "ஆராய்ந்து அணிந்த அணிகலன்களை உடையவளே! உன் நெஞ்சம் வலிமை மிக்கதாய் இல்லை. அதனால்தான் வருத்தமடைகிறாய். தலைவன் 'என்றும் உன்னைப் பிரியேன்' என்று கூறிச் சொல்லம்பினால்தானே எய்தான்; தொழில் வல்லவன் உருவாக்கிய வில்லினால் எய்யவில்லையே!" என்றாள்.

அது கேட்ட தலைவி, "அவன் சொல் அம்பால் விளைந்த துன்பம், வில் அம்பால் உண்டாகும் துன்பத்தைவிடக் கடுமையானதாயிருக்கிறது" என்றாள்.

உடனே தோழி, "இயற்கைப் புணர்ச்சியில் அவனைக் கண்டு காதல் அன்பால் நீ மெல்லப் புன்னகை காட்ட, அதனடியாகத் தொடர்ந்த உங்கள் நட்பில் வெளிப்பட்ட அவரது நற்பண்பு களால்தான் அவர் உன்னை வருத்துகிறார். அதுவன்றி வேறு பல காரணங்களால் தோன்றும் மாறுபாட்டின் காரணமாக உன்னிடம் பகை கொண்டார் என்று கூறமுடியாது" என்று கூறினாள்.

அதைக் கேட்ட தலைவி, "அவனது பண்பால் விளைந்த துயர், பகைமையால் உண்டாகும் துயரினை விடக் கொடுமையான தாயிருக்கிறதே" என்றாள்.

தலைவி கூறியதைக் கேட்ட தோழி, 'தலைவியே! உன்னைப் பிரியேன்' என்று கூறி, உன்னைத் தன் அன்பால் பிணித்து, தன் மென்மைப் பண்பால்தான் துன்புறுத்தியுள்ளாரேயன்றி, பரந்த இருளை முழுவதுமாக நீக்கும் கொழுந்துவிட்டெரியும் நெருப்பைப் போல உனக்குத் துன்பம் தரவில்லையே' என்று ஆறுதல் சொன்னாள்.

தோழியின் மொழி கேட்ட தலைவி, "ஆயிழாய்! அவன் தன் மென்மையான நோக்கினால் தந்த இக்காமநோய் (காதலால் விளைந்த துயரம்) தீயினால் ஏற்படும் துயரைவிடக் கொடுமை

யானதாக இருக்கிறதே” என்று தோழியிடம் வன்புறை எதிரழிந்து கூறினாள். (இவ்வாறு உரையாடியிருக்கையில் தலைவி தன் பிரிவுத் துன்பத்தைச் சிறைப்புறமாக இருந்த தலைவன் அறிய அவன் கேட்குமாறு பேசினாள்.)

“தோழி! காதலன் ஏற்படுத்திய, உள்ளத்தில் கொழுந்து விட்டெரியும் காமநோயை நான் சிறிதும் தாங்க இயலாதவளாய் உள்ளேன். அதனால் நீங்கும் என் உயிரை மீட்டுத் தரும் மருத்துவன் அவனைத் தவிர வேறு ஒருவர் இல்லை. என் உயிரை என்று தலைவன் நிலைநிறுத்தப் போகிறானோ?” என்று தன் ஆற்றாமையை வெளிப்படுத்தினாள்.

கருத்து

தலைவனால் தலைவி அடைந்துள்ள துன்பம் தாங்க முடியாதது. ‘அவன் சொல்லினுள் பிறந்த நோய் வில்லினும் கடிது; அவன் பண்பின் நலியும் நோய் பகைமையின் கடிது; அவன் சாயலின் வருத்தும் நோய் தீயினும் கடிது.’ நோயை உண்டாக்கிய அவனால்தான் நோயைக் களைய முடியும்.

குறிப்பு

இது கேட்ட தலைவன் விரைவில் தலைவியை வரைந்து கொள்வான் என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. நிறுப்பாம் - கடைப்பிடிப்போம்.
2. தவ - மிக.
3. யாமம் - இரவு; பையுள் - துன்பம்.
4. உசாவுதல் - நலம் கேட்டல்.
5. அழல் அவிர் - ஒளி வீசும்; வயங்குதல் - விளங்குதல்; உலமருதல் - சுழலுதல், புரளுதல்.
6. எஞ்சுதல் - விலகுதல்; சேக்கை - படுக்கை.
7. நக்கது - கூடியது.
8. கூர - மிகும்படி.
9. எய்தமை - விடுத்தது.
10. தைஇய - அமைத்த; வாக்கு - வடிவு; கடு - மிகுதி.
12. கடிது - கொடியது.

13. நகை - புன்னகை; நட்பு - இயற்கைப் புணர்ச்சி.
14. தகைமை - நற்பண்பு; நலிதல் - வருந்துதல்.
15. வகைமை - கூறுபாடு; முரண் - மாறுபாடு.
18. நீயலேன் - (நான் உன்னைப்) பிரியேன்; நீத்தல் - பிரிதல்.
19. சாயல் - மென்மை.
20. பாயிருள் - பரவிய இருள்; நோய்தபு - துன்பத்தை நீக்கும்; நெடுஞ்சுடர் - கொழுந்து விட்டு எரியும் சுடர்.
22. கனலும் - சுடும்.
25. போத்தரும் - மீட்டுத் தரும்.
27. தாங்குதல் வலித்தன்று - தாங்கும் வலிமைக்குட்பட்டதன்று.
28. நீங்கரிது உற்றன்று - நீங்குதல் அரியதாக வந்தமைந்தது.

தலைவி கூற்று

நற்றிணை 348 **வெள்ளிவீதியார்**

திணை : நெய்தல்

கூற்று

வேட்கை பெருகத் தாங்கலளாய், ஆற்றாமை மீதூர்கின்றாள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவாலே பொங்கி எழும் ஆற்றாமையைத் தாங்க இயவாத தலைவி தன் துயரை நினைந்து புலம்பிச் சொல்லியது:

நிலவே, நீல்நிற விசும்பில் பல்கதிர் பரப்பி,
பால்மலி கடலின், பரந்துபட் டன்றே;
ஊரே, ஒலிவரும் சும்மையொடு மலிதொகுபு ஈண்டிக்
கலிகெழு மறுகின் விழவுஅய ரும்மே;
கானே, பூமலர் கஞலிய பொழில்அகம் தோறும்
தாம்அமர் துணையொடு வண்டுஇமி ரும்மே;
யானே, புனைஇழை ஞெகிழ்த்த புலம்புகொள் அவலமொடு
கனைஇருங் கங்குலும் கண்படை இலெனே;
அதனால், என்னொடு பொரும்கொல், இவ்வுலகம்?
உலகமொடு பொரும்கொல்,என் அவலம்உறு நெஞ்சே!

தெளிவுரை

நிலவோ, நீல நிறம் பொருந்திய ஆகாயத்தில் பல கதிர் களையும் பரப்பிப் பால் நிரம்பிய கடலைப் போல எங்கும் ஒளிபரப்பியுள்ளது. ஊராரோ, பெருகும் ஆரவாரத்துடன் மிகுதியாய்க் கூடி ஓசை நிறைந்துள்ள தெருவெங்கும் திருவிழாக் கொண்டாடுகின்றனர். காட்டிலோ, பூக்கள் நிறைந்துள்ள பொழில்கள் தோறும், தாம் விரும்பும் துணையோடு கூடியவாய், வண்டினங்கள் ஒலி செய்வனவாய் உள்ளன. நானோ, புனைந்து கொண்ட அணிகள் கழன்று விழுமாறு, தனிமையால் உண்டான வருத்தத்தோடு, மிகுந்த இருளைக் கொண்ட இந்த இரவுப் பொழுதிலும் கண்மூடாதவளாய் இருக்கின்றேன்.

அதனால் இந்த உலகம் தன்னோடு மகிழவில்லையென்று என்னோடு வந்து போரிடுமோ? அல்லது அவலமுற்ற என் நெஞ்சு இவ்வுலகத்தோடு போர் செய்யுமோ? (எனக்கு எதுவும் தோன்றவில்லையே.)

கருத்து

திங்கள் எழுந்து பால் போல் நிலவைப் பொழிகின்றது; ஊரவர் விழாக் கொண்டாடி ஆரவாரம் செய்கின்றனர்; சோலைகளில் தேனையுண்ட வண்டினமும் பெடையுடன் இன்பமாய்ப் பாடியிருக்கின்றது. உலகமே மகிழ்ந்திருக்கும்போது தான் மட்டும் துயருற்றவளாய் இருத்தலால், 'இந்த உலகம் என்னோடு போர் தொடுக்கிறதா? அன்றி என் நெஞ்சம் உலகொடு போர் தொடுக்கிறதா? அதனை அறிதல் வேண்டும்' என்று தலைவி தன் வேட்கை வெளிப்படக் கூறுகிறாள்.

குறிப்பு

நிலவு காதலரோடு கூடியிருப்போர்க்கே மகிழ்ச்சி செய்யும்; விழாக் கொண்டாட்டமும் துணையோடிருப்பவர்க்கே இன்பந்தரும். சிற்றறிவினவாய வண்டினமும் துணையோடிருக்கும்போதே மகிழ்கிறது. கூடினாரிடம் மட்டுமே இன்பம் தவழ்கிறது. பிரிந்திருப்பவளாகிய எனக்கு வருத்தத்தைத் தவிர வேறு துணை ஏது?

சொற்பொருள்

1. நீல் நிறம் - நீல நிறம்.
2. பால்மலி கடல் - பால் நிறைந்த கடல்.
3. கம்மை - பேரொலி; மலிதொகுபு - மிகுதியாய்க் கூடி; ஈண்டி - நிறைந்து.
4. கலி - ஆரவாரம்; கெழு - பொருந்திய; மறுகு - தெரு; அயரும் - கொண்டாடும்.
5. கான் - காடு; கஞலிய - மிகுந்த.
6. அமர் - விரும்பும்; இமிரும் - ஒலிக்கும்.
7. புனை இழை - புனைந்து கொண்ட அணிகலன்கள்; ஞெகிழ்த்த - கழன்றன; புலம்பு - தனிமைத் துயரம்; அவலம் - துன்பம்.
8. கனை - மிகுதியான; கங்குல் - இரவுப் பொழுது; கண்படை - கண் மூடுதல், தூங்குதல்.
9. பொரும் - போரிடும்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 227 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

ஒருவழித்தணந்துவந்த தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

களவுக்காலத்தின்போது தலைவன் சில காலம் பிரிந்திருந்து மீண்டும் வந்து தலைவியின் இல்லத்தருகே நின்றபொழுது அவன் கேட்கும் வண்ணம் தோழி தலைவியிடம் கூறியது.

அம்ம, வாழி! தோழி! நாளும்
நல்நுதல் பசப்பவும், நறுந்தோள் ஞெகிழவும்
'ஆற்றலம் யாம்'என மதிப்பக் கூறி,
நப்பிரிந்து உறைந்தோர் மன்ற;நீ
விட்டனை யோஅவர் உற்ற சூளே?

தெளிவுரை

தலைவியே! 'உன் அழகிய நெற்றியில் பசலை படர்ந்திடுமாறும் நறுமணமிக்க உன் தோள்கள் மெலிந்திடுமாறும் நான் செயல்பட மாட்டேன்' என்று நாளும் நம் மனம் கொள்ளும்படியாய் உறுதிமொழி பலவும் கூறிய தலைவன், இன்று நம்மைப் பிரிந்து சென்று வேறிடத்தில் இருக்கிறான். அவன், முன்னர்ச் சொன்ன உறுதிமொழிகளை நீ மறந்துவிட்டாயா?

கருத்து

தலைவியே! தான் கூறிய உறுதிமொழியினின்றும் தலைவன் தவற மாட்டான்; உடனே வருவான்; வருந்தாதே!

சொற்பொருள்

2. நல் நுதல் - அழகிய நெற்றி; பசப்பவும் - பசப்பெய்தவும்; ஞெகிழவும் - மெலியவும்.
3. ஆற்றலம் யாம் - நான் பிரிதல் ஆற்றேன்; மதிப்பக் கூறி - மதிக்குமாறு கூறி.
4. நப்பிரிந்து - நம்மைப் பிரிந்து; உறைந்தோர் - தங்கியிருப்பவர்.
5. நீ விட்டனையோ - நீ மறந்துவிட்டாயோ?; அவர் உற்ற சூள் - அவர் சொன்ன உறுதிமொழி.

தலைவி கூற்று

நற்றிணை 382 **நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனார்**

திணை : நெய்தல்

கூற்று

ஒருவழித்தணந்தகாலத்துப் பொழுதுபட ஆற்றாளாகி நின்ற தலைமகளைத் தோழி ஆற்றுவிக்கல்லாள் ஆயினாட்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவுக்காலத்தில் இடையில் ஏதோ ஒரு செயல்பற்றித் தலைவன் சில நாள்கள் வாராதிருக்கின்றான். அக்காலத்து மாலை வேளைகளில் தலைவி

படும் துயரைக் கண்டு தோழி மிகவும் வருத்தமுற்றுச் சோர்ந்துவிடுகின்றாள். அவளைத் தேற்றும் வகையில் தலைவி தான் ஆற்றியிருப்பதாய்க் கூறியது.

கானல் மாலைக் கழிநீர் மல்க,
நீல்நிற நெய்தல் நிரைஇதழ் கூம்ப
ஆனாது அலைக்கும் கடலே;மீன் ஆர்ந்து,
புள்ளினம் குடம்பை உடன்சேர்பு உள்ளார்,
துறந்தோர் தேஎத்து இருந்து, நனிவருந்தி,
ஆர்உயிர் அழிவது ஆயினும், நேரிழை!
கரத்தல் வேண்டுமால் மற்றே, பரப்புநீர்த்
தண்ணம் துறைவன் நாண,
நண்ணார் தூற்றும் பழிதான் உண்டே.

தெளிவுரை

நேர்த்தியான அணிகலன்களை அணிந்தவளே! பரந்து கிடக்கும் கடல்நீரைக் கொண்ட குளிர்ந்த துறைக்குத் தலைவன், நம் காதலன். கடற்கரைச்சோலையிலே மாலைப்பொழுதிலே கடல்நீர் மிகுதியாய்ப் பெருகியுள்ளது. இதழ்கள் நிரல்பட அமைந்து குவிந்துள்ள நீல நிற நெய்தல் மலர்கள் ஒரே நிலையில் நிற்க இயலாதவாறு அவற்றின்மீது அலைகள் வீசிக்கொண்டிருக்கின்றன. மீன்களை அருந்திய பறவைக்கூட்டங்கள் தம் கூடுகளைச் சென்றடைகின்றன. இத்தகைய மாலைப்பொழுதில் நம்மோடு சேர வேண்டும் என்னும் நினைவு இல்லாதவனாயுள்ளான், நம் தலைவன். நம்மைப் பிரிந்து வேறு நாடு சென்றுள்ள தலைவனை நாம் இங்கிருந்தபடியே நினைந்து நினைந்து மிகவும் வருந்தி நம் உயிரே அழிவதாயினும் அழியட்டும்! நம் துயரைப் பிறர் காணாதவாறு மறைத்துக் கொள்ளுதல் வேண்டும். இல்லாவிட்டால், குளிர்ச்சி பொருந்திய துறைக்குத் தலைவனான அவன் வெட்கமடையுமாறு பிறர் தூற்றும் பழிச்சொற்கள் உண்டாகிவிடும். (ஆதலின், தோழியே! நீயும் வருந்தாதே.)

கருத்து

தோழியே! நம் தலைவனுக்குப் பழி நேரக் கூடாதென்பதால் நான் என் வருத்தத்தை மறைத்திருக்கிறேன்! நீயும் வருந்தாதே!

குறிப்பு

அலைவீசும் கடலில் மீன்களைப் பிடித்து உண்ட பறவையினங்கள் மாலை வந்ததும் தங்கள் கூடுகளைச் சென்றடைகின்றன. ஆனால், தலைவனோ தன் வினையை முடித்துக்கொண்டு மீண்டுவந்து கூடினான் இல்லையே!

சொற்பொருள்

1. கழிநீர் - உப்பங்கழிநீர்; மல்க - பெருக.
2. நீல் நிற - நீல நிற; நிரைஇதழ் - நிரல்பட அமைந்த இதழ்கள்; கூம்ப - குவிய.
3. ஆனாது - இடையறவின்றி; ஆர்ந்து - உண்டு.
4. புள்ளினம் - பறவைக்கூட்டம்; குடம்பை - கூடு; உடன்சேர்பு - ஒன்றாய்ச் சேர்ந்து செல்லுதலை; உள்ளார் - நினையார்.
5. துறந்தோர் - பிரிந்து சென்ற காதலர்; நனி - மிகவும்.
6. ஆர் உயிர் - அரிய உயிர்; நேரிழை - நேர்த்தியான அணிகலன்களை அணிந்தவளே!
7. கரத்தல் - மறைத்தல்; பரப்பு நீர் - பரந்த நீர் கொண்ட.
8. துறைவன் - கடல்துறைக்குத் தலைவன்; நாண - நாணமடையுமாறு.
9. நண்ணார் - ஏதிலார்; பழிதான் உண்டு - பழிச்சொற்கள் உண்டாகி விடும்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 231 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

ஒருவழித்தணந்து வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

களவுக்காலத்தில் சிறிது காலம் பிரிந்து சென்று மீண்டுவந்த தலைவனிடம் தோழி கூறியது.

யாங்கு வல்லுநையோ ஓங்கல் வெற்ப!
இரும்பல் கூந்தல் திருந்திழை அரிவை
திதலை மாமை தேயப்
பசலை பாயப் பிரிவு தெய்யோ.

தெளிவுரை

உயர்ந்த மலைக்குத் தலைவனே! கரிய திரண்ட கூந்தலையும் திருந்திய அணிகலன்களையும் கொண்ட தலைவியின் தேமல் பொருந்திய மாமை நிறம் மாற்றமுற்று, அவ்விடத்தில் பசலை பரவும்படியாய் அவளைப் பிரிந்து செல்லும் வல்லமையை நீ எவ்வாறு பெற்றாய்?

கருத்து

தலைவ! தலைவியைப் பிரிந்து செல்லும் வல்லமையை நீ எவ்வாறு பெற்றாய்?

விளக்கம்

ஒளிமுன் உள்ள ஒரு பொருள், அவ்வொளி நீங்கும்போது தன் பொலிவினை இழத்தல்போல, தலைவன் பிரிந்த காலத்தில் தலைவியின் மாமை நிறம் மங்கிவிட்டது என்பதாம்.

சொற்பொருள்

1. யாங்கு வல்லுநை - வல்லமையை நீ எவ்வாறு பெற்றாய்?; ஓங்கல் - மலை; வெற்ப - தலைவ.
2. இரும்பல் கூந்தல் - கரிய திரண்ட கூந்தல்; திருந்திழை - திருந்திய அணிகலன்களை அணிந்த; அரிவை - பெண் (தலைவி).
3. திதலை - தேமல்; மாமை - மாந்தளிர் நிறம்; தேய - அழிய.
4. பாய - படிய; பிரிவு - பிரிந்து செல்ல (எவ்வாறு இயன்றது?)

தோழி கூற்று

ஐங்குறுநூறு 285 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

ஒருவழித்தணந்து வந்த தலைமகற்குத் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தின்பொழுது சிறிது காலம் தலைவன் பிரிந்து சென்று திரும்பியபொழுது, அவன் தலைவியைத் தனியே விடுத்துப் பிரிந்தமை பற்றி, தோழி வருந்திக் கூறியது.

பின்இரும் கூந்தல் நல்நுதல் குறமகள்
மென்தினை நுவணை உண்டு, தட்டையின்
ஐவனச் சிறுகிளி கடியும் நாட!
வீங்குவளை நெகிழப் பிரிதல்
யாங்குவல் லுநையோ, ஈங்குஇவள் துறந்தே?

தெளிவுரை

பின்னிவிடப்பட்ட கரிய கூந்தலினையும், அழகிய நெற்றியினையும் கொண்ட குறமகள், வெண்மையான தினைமாவை உண்டு, மலைநெல்லில் படியவரும் கிளிகளைத் தட்டை என்னும் கருவியால் ஓட்டிக்கொண்டிருக்கும் மலைநாட்டிற்குரியவனே! இறுகிய கைவளைகள் நெகிழ்ந்து கழலுமாறு இத்தலைவியை விட்டுப் பிரிந்து செல்லும் வல்லமையை எவ்வாறு பெற்றாய்?

கருத்து

மலை நாட! இவள் கைவளைகள் நெகிழ இவளைப் பிரிந்து செல்லும் ஆற்றலை எங்கிருந்து பெற்றாய்?

விளக்கம்

தலைவி, தலைவனுடன் இருந்தபொழுது மகிழ்ச்சியால் அவள் பூரித்தமையால் வளை செறிந்து கிடந்தது; அவன் பிரிந்தவுடனே மேனி வாடி வளை கழன்றோடியது.

உள்ளுறை

குறமகள் தினைமாவை உண்டு தட்டையால் கிளி கடிவள் என்னும் தொடர்மூலம், தலைவி தன் பிரிவுத்துன்பத்தைப் பொறுத்துக்கொண்டு, களவொழுக்கத்தைப் பிறரறியாமல் நீக்கினாள் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. பின் இரும் - பின்னிவிடப்பட்ட கரிய.
2. நுவணை - மாவு; தட்டை - கிளிகளை ஓட்டப் பயன்படும் கருவிகளுள் ஒன்று.
3. ஐவனம் - மலைநெல்; கடியும் - ஓட்டும்.
4. வீங்கு வளை - செறிந்த வளையல்; நெகிழ - கழல.
5. இவள் துறந்து - இவளை விட்டு.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 232 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

ஒருவழித்தணந்து வந்த தலைமகன், 'நான் பிரிந்த நாட்கண் என் செய்தீர்' எனக் கேட்கத் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

திருமணத்திற்குமுன் சிறு பிரிவு பிரிந்து திரும்பி வந்த தலைவன், 'நான் பிரிந்திருந்த நாள்களில் என்ன செய்தீர்கள்?' என்று கேட்டான். அதற்குத் தோழி கூறியது.

போதார் கூந்தல் இயலணி அழுங்க
ஏதி லாளனை நீபிரிந் ததற்கே
அழல்அவிர் மணிப்பூண் நனையப்
பெயல்ஆ னாஎன் கண்ணே தெய்யோ!

தெளிவுரை

"தலைவ! மலர்கள் பொருந்திய கூந்தலைக் கொண்ட என் தலைவிக்கு நீ அயலவன்போல ஆகி அவள் இயற்கை அழகு நீங்க நீ பிரிந்தாய். அதனால், அழல்போல் ஒளிவிடும் மணிகள் பதிக்கப்பட்ட என் பூண்கள் நனையுமாறு என் கண்கள் இடையீடின்றி நீரைச் சொரிந்தவண்ணம் இருந்தன. (இது உன்

தகுதிக்குப் பெருமை தருவது ஆகுமா?)" என்று தோழி கூறினாள்.

கருத்து

தலைவ! நீ பிரிந்திருந்தபோது ஓயாது எம் கண்கள் அழுதன.

விளக்கம்

தலைவி உன் நெஞ்சில் நிறைந்த காதலியாயினும், முன் அறியாத யாரோ ஒருத்திபோல அவளைக் கருதிப் பிரிந்தாய். அஃது எனக்கே பெருந்துன்பம் விளைத்து அழச்செய்ததெனில், அவளுக்கு எத்துணைப் பெருந்துயரை அளித்திருக்கும் என்பதை எண்ணிப் பார்.

சொற்பொருள்

1. போதார் - போது ஆர் - மலர்கள் பொருந்திய, சூடிய; இயல் - இயற்கை; இயல்அணி - இயற்கை அழகு; அழுங்க - நீங்க.
2. ஏதிலாளன் - அயலவன்; ஏதிலாளனை - அயலவனைப் போலக் கருதி.
3. அழல் அவிர் - அழல் போல் ஒளிவிடும்.
4. பெயல் ஆனா - கண்ணீர் சொரிதலை நிறுத்தவில்லை.

தோழி கூற்று

கலித்தொகை 121 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் ஒருவழித்தணந்த இடத்துத் தலைமகள் ஆற்றாமை கூறி, 'வரையக் கருதினாயாயின், இஃது இடம்' எனச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன் ஊருக்குச் சென்று வருவதாய்க் கூறிப் பிரிந்தபோது, தோழி தலைவியின் ஆற்றாமையை எடுத்துக் கூறி, தலைவியின் துயரைப் போக்க, 'அவனுக்கு இதுவே நல்ல நேரம்' என்று கூறியது.

தரவு

ஒண்சுடர் கல்சேர, உலகுஊரும் தகையது,
தெண்கடல் அழுவத்துத் திரைநீக்கா எழுதரூஉம்,
தண்கதிர் மதியத்து அணிநிலா நிறைத்தரப்
புள்ளினம் இரைமாந்திப் புகல்சேர, ஒலியான்று,
வள்ளிதழ் கூம்பிய மணிமருள் இருங்கழி
பள்ளிபுக் கதுபோலும் பரப்புநீர்த் தண்சேர்ப்ப!

தாழிசை

தாங்கரும் காமத்தைத் தணந்துநீ புறம்மாறத்
தூங்குநீர் இமிழ்திரை துணையாகி ஒலிக்குமே—
உறையொடு வைகிய போதுபோல், ஒய்யென
நிறைஆனாது இழிதரூஉம், நீர்நீந்து கண்ணாட்கு.

வாராய்நீ புறம்மாற, வருந்திய மேனியாட்கு
ஆர்இருள் துணையாகி அசைவளி அலைக்குமே—
கமழ்தண்தாது உதிர்ந்துஉக, ஊழ்உற்ற கோடல்வீ
இதழ்சோரும் குலைபோல, இறைநீவு வளையாட்கு.

இன்துணை நீ,நீப்ப, இரவினுள் துணையாகித்
தன்துணைப் பிரிந்துஅயாஅம் தனிக்குருகு உசாவுமே—
ஒண்சுடர் ஞாயிற்று விளக்கத்தான், ஒளிசாம்பு
நண்பகல் மதியம்போல், நலம்சாய்ந்த அணியாட்கு.

எனவாங்கு—

சுரிதகம்

எறிதிரை தந்திட, இழிந்தமீன் இன்துறை
மறிதிரை வருந்தாமல் கொண்டாங்கு, நெறிதாழ்ந்து,
சாயினள் வருந்தியாள் இடும்பை
பாய்பரிக் கடுந்திண்தேர் களையினோ இடனே.

தெளிவுரை

"கதிரவன் மறைந்தான். உலகில் ஒளி பரப்பும் குளிர்ச்சி பொருந்திய கதிர்களைக் கொண்ட சந்திரன் தெளிந்த நீருள்ள கீழ்க்கடலில் தோன்றினான். அதைக் கண்டு புள்ளினங்கள்

தமக்குரிய உணவைத் தின்று தத்தம் கூடுகளைச் சேர்ந்ததால் ஆரவார ஒலி அடங்கிவிட்டது. நீலமணி போன்ற நீர்ப்பரப் பினைக் கொண்ட உப்பங்கழியிலுள்ள மலர்களின் இதழ்கள் குவிந்தமையால், அவை துயில் கொண்டவை போன்று காட்சி யளித்தன. இத்தகைய கடல்நிலத்திற்குரிய தலைவனே!

"ஊரார் கூறும் அலர், தலைவிக்குத் துன்பம் தரும் என்றஞ்சி, நீ தலைவியைப் பிரிந்து உன் இல்லத்திலேயே தங்கிவிட்டாய். அதனால், நீர்த்துளிகள் தங்கிய மலரைப்போல் அவள் கண்களில் கண்ணீர் ததும்பிச் சொரிகின்றது. அவளுக்கு இப்போது கடலில் புரளும் அலைஓசைதான் துணையாய் இருக்கின்றது.

"உன்னைக் காணாமல் வருந்தி மெலிந்த உடல் கொண்ட தலைவியிடம் நீ கொண்டுள்ள விருப்பத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு நீ வாராதிருந்துவிட்டாய். அதனால், காந்தள் மலர் களில் உள்ள மகரந்தப்பொடிகள் கீழே உதிர, பூக்கள் ஒவ்வொன் றாய் வாடி உதிர்வனபோல் அவளுடைய வளையல்கள் முன்கையைவிட்டு நீங்குகின்றன. இரவில் மெல்லென வந்து அவளை அலைக்கழிக்கின்ற தென்றல் காற்றுத்தான் இப்போது அவளுக்குத் துணையாய் இருக்கிறது.

"இனிய துணையாகிய நீ பிரிந்ததால், நண்பகலில் ஒளி மிகும் சூரியனுக்கு முன் மங்கித் தோன்றும் மதியைப் போலத் தலைவி பொலிவிழந்துவிட்டாள். துணையைப் பிரிந்து தனிமையில் வருந்தும் பெண்குருகுதான் இப்போது அவளுக்குத் துணையாய் இருக்கின்றது.

"இனிய துறையிடத்தில் கரை நோக்கி வரும் அலையால் அடித்து வரப்பெற்று மணற்பரப்பில் கிடத்தப்பட்ட மீனை, அது வருந்தாதபடி, கடல் நோக்கிச் செல்லும் அலை திரும்பக் கொண்டுபோய்க் கடலுள் சேர்க்கும். அதுபோல, உன் பிரிவால் மெலிந்திருக்கும் தலைவியின் வருத்தத்தை நீதான் போக்க வேண்டும். ஆதலால், பறந்தோடும் குதிரையைக் கொண்ட உன் வலிய தேரில் சென்று, அவள் துயரைப் போக்கு. அதற்கு இதுவே தகுந்த காலம்" என்று தலைவனிடம் தோழி கூறினாள்.

கருத்து

தலைவன் களவொழுக்கத்தில் ஈடுபட்டிருந்ததால் ஊரில் அலர் ஏற்பட்டது. அதை அறியும் தலைவன் தன் காமத்தை அடக்கிக்கொண்டு, தலைவியைச் சந்திக்காமல் சில நாள்கள் தன் இல்லத்திலேயே தங்கி விடுவான். இதனை 'அகநூலார்' ஒருவழித்தணத்தல் என்பர்.

ஒருவழித்தணந்து வந்த தலைவனுக்குத் தோழி தலைவியின் நிலைமையை விளக்கிக் கூறி, 'தலைவியை மணந்துகொள்ள இதுவே தகுந்த காலம்' என வற்புறுத்திக் கூறுகிறாள்.

விளக்கம்

'கடல் அலையும், தென்றல் காற்றும், குருகுப் பறவையும் தலைவியின் துயர் நீக்கத் துணையாய் இருக்கும்போது, அவள் வருத்தத்தைப் போக்க வேண்டிய நீ துணையாய் இருத்தல் வேண்டாவா? உடனே சென்று அவள் துயரைப் போக்கு' எனத் தலைவனிடம் தோழி கூறினாள்.

உள்ளுறை உவமங்கள்

1. *கதிரவன் மலையில் சென்று மறைந்தது என்னும் தொடர், தலைவன் தலைவியைச் சந்திக்காமல் தனது இல்லத்திற்குச் சென்று தங்கியிருப்பதைக் குறிப்பதாய்க் கொள்ளலாம். அப்படி மறைந்திருப்பது, களவு ஒழுக்கம் மற்றவர்க்குப் புலப்படாததாக்கிவிட்டது என்பதைக் குறிக்கும்.*

2. *சந்திரன் தோன்றி நிலவொளியைப் பரப்பியது என்னும் தொடர், தலைவன், தலைவியைச் சந்திக்க இயலாதவாறு காவல் மிகுந்துள்ளது என்னும் பொருள் தருவதாய்க் கொள்ளலாம்.*

3. *கடலின் ஆரவாரம் குறைந்து மலர்கள் துயில்வனபோலத் தென்படுகிறது என்னும் தொடர், முதலில் அலர் தூற்றிய ஊரார் பின்னர்த் தூற்றாது அடங்கினர் என்னும் பொருளை உணர்த்துவதாய்க் கொள்ளலாம்.*

சொற்பொருள்

1. ஒண்சுடர் - கதிரவன்; கல் - மலை; ஊரும் - பரவும்.
2. அழுவம் - கடற்பரப்பு; நீக்கா - நீக்கி.

3. நிறைத்தர - ஒளி பரப்ப.
4. புள் - பறவை; மாந்தி - உண்டு; புகல் - இருப்பிடம்; ஆன்று - அடங்கி.
5. வள்இதழ் - வளவிய இதழ்.
6. பள்ளி புக்கது - துயில் கொண்டது.
7. தணத்தல் - பிரிதல்; புறம்மாற - கைவிட்டு, கட்டுப்படுத்தி.
8. தூங்கு நீர் - அலைகடல்.
9. உறை - நீர்த்துளி; வைகிய - தங்கிய; போது - மலர்.
10. நிறை ஆனாது - நிறுத்த மாட்டாது.
12. அசை வளி - தென்றல்.
13. ஊழ்உற்ற - முதிர்ந்த; கோடல் - காந்தள்; வீ - மலர்.
14. இறை - முன் கை; நீவு - நீங்குகின்ற.
16. அயாஅம் - வருந்தும்; உசாவுதல் - நலம் கேட்டல்.
17. விளக்கத்தான் - ஒளியால்; சாம்புதல் - மங்குதல்.
18. சாய்ந்த - கெட்ட.
20. எறிதிரை - கரை நோக்கி எழும் அலை; இழிந்த - கிடந்த.
21. மறிதிரை - கடல் நோக்கிச் செல்லும் அலை.
22. சாயினள் - மெலிந்தனள்.
23. களையினோ - போக்குதற்கு; இடன் - தக்க சமயம்.

தோழி கூற்று

கலித்தொகை 53 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

ஒருவழித்தணந்து வந்த தலைவற்குத் தோழி, தலைமகள் ஆற்றாமையும் ஆற்றுவித்தலது அருமையுஞ் சொல்லி, வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

ஒருவழித்தணந்து வந்த தலைவனைத் தோழி கண்டு, தலைவியின் ஆற்றாமையையும், தலைவியைத் தன்னால் ஆற்றுவிக்க இயலாததையும் எடுத்துக் கூறி, விரைவில் தலைவியை மணந்துகொள்ள வேண்டும் என வற்புறுத்திக் கூறியது.

வறன்உறல் அறியாத வழைஅமை நறுஞ்சாரல்
விறல்மலை வியல்அறை, வீழ்பிடி உழையதா,
மறம்மிகு வேழம்,தன் மாறுகொள் மைந்தினால்,
புகர்நுதல் புண்செய்த புய்கோடு போல,
உயர்முகை நறுங்காந்தள் நாள்தோறும் புதிதூஉன,
அயம்நந்தி அணிபெற, அருவிஆர்த்து இழிதரும்
பயமழை தலைஇய பாடுசால் விறல்வெற்ப!

தாழிசை

மறையினில் மணந்து!ஆங்கே மருவுஅறத் துறந்தபின்,
இறைவளை நெகிழ்புஓட, ஏற்பவும் ஒல்லும்மன்;
அயல்அலர் தூற்றலின், ஆய்நலன் இழந்தகண்
கயல்உமிழ் நீர்போலக் கண்பனி கலுழாக்கால்?

இனியசெய்து அகன்று,நீ இன்னாதாத் துறத்தலின்,
'பனிஇவள் படர்'எனப் பரவாமை ஒல்லும்மன்;
ஊர்அலர் தூற்றலின், ஒளிஓடி, நறுநுதல்
பீர்அலர் அணிகொண்டு, பிறைவனப்பு இழவாக்கால்?

'அஞ்சல்'என்று அகன்று,நீ அருளாது துறத்தலின்,
நெஞ்சழி துயர்அட, நிறுப்பவும் இயையும்மன்;
நனவினால் நலம்வாட, நலிதந்த நடுங்குஅஞர்
கனவினால் அழிவுற்றுக் கங்குலும் ஆற்றாக்கால்?
எனவாங்கு—

சுரிதகம்

விளியாநோய் உழந்துஆனா என்தோழி, நின்மலை,
முளிவுற வருந்திய முளைமுதிர் சிறுதினை
தளிபெறத் தகைபெற் றாங்கு,நின்
அளிபெற நந்தும்,இவள் ஆய்நுதல் கவினே.

தெளிவுரை

"சுரபுன்னை மரங்கள் அடர்ந்துள்ள இனிய மலைச்சாரல்; அங்கு யானை ஒன்று, தன்னை விரும்பும் பெண்யானைக்கு அருகில் இருந்தது. அந்த ஆண்யானை பிறிதொரு யானைமீது

பகைகொண்டு, தன் வலிமையால் அதன் நெற்றியில் புண் உண்டாகும்படி குத்தியது; அதனால், அதன் கொம்புகள் குருதிபட்டுச் செந்நிறம் கொண்டன. அந்தக் கொம்புகளைப் போலச் சிவந்த காந்தள் மலர்கள் நாள்தோறும் அங்குப் பூக்கின்றன. பள்ளங்களெல்லாம் நீர் நிறைந்து அழகு பெறும்படி அருவி நீர் ஆரவாரத்துடன் மலையிலிருந்து கீழே வீழ்ந்து கொண்டிருக்கிறது. மேகங்கள் மலைமீது எப்பொழுதும் உலவியவாறு இருக்கும். இத்தகைய பெருமை கொண்டதும் வறுமை என்பது இன்னதென்று அறியாததுமான மலைநாட்டுக் குரிய தலைவனே!

"தலைவியைக் களவிலே கூடிப் பின்னர்ச் சில காலம் நீ கூடுதலின்றிப் பிரிந்துள்ளாய். அதனால், அவள் உடல் மெலி வுற்று, முன்கைவளைகள் கழன்று ஓடின. அவள் நிலையை அயலவர் அறிந்து அலர் தூற்றுவதால் அழுது அழுது அவள் கண்ணழகும் கெட்டது. மீனினம் உண்டு உமிழும் நீர்போல, அவள் கண்களிலிருந்து இடைவிடாது நீரும் வழிந்துகொண்டே யிருந்தது. இவ்வருத்தத்தை அவளால் தாங்கிக்கொள்ள இயலுமா?

"இன்பம் நிறையும்படி இனியன செய்த பின்னர்த் துன்புறுமாறு நீ பிரிந்ததால் அவள் மிகவும் வருத்தமுற்றாள்; அவள் படும் வேதனையை அறிந்து, அஃது அணங்கு தாக்கியதால் ஏற்பட்ட நோய் என்று கருதித் தெய்வத்திற்கு நேர்த்திக்கடன் செய்யவும் உறவினர் முயல்கின்றனர். ஊரார் அலர் தூற்றுதலால் அவள் நெற்றி ஒளியிழந்து, பீர்க்கம் பூவினைப் போன்ற பசலையைப் பெற்று, பிறை போன்ற அழகினையும் இழந்துவிட்டது.

" 'அஞ்சாது இரு' என்று கூறிய நீ, அதற்கு மாறாய்க் கருணையின்றிப் பிரிந்ததனால் அவள் நெஞ்சழிந்து ஆற்றியிருக்க இயலாதவளாயினாள். அதனால், நலமெல்லாம் அழியுமாறு பகலெல்லாம் வருத்திய பிரிவுத் துன்பம், இரவுத்தூக்கத்தில் ஏற்பட்ட கனவிலும் தோன்றித் துன்புறுத்தலால், இரவு பகலென எப்போதும் அவள் மிகுந்த ஆற்றாமை கொண்டவளாய்க் காணப்படுகிறாள்.

"இவ்வாறெல்லாம் தீராத நோயினால் வருந்தி வாடுகின்றாள், என் தலைவி! உன் மலையிலே வாடியிருக்கும் தினைப்பயிர் மழையினால் துளிர்த்து அழகு பெறுவதுபோல, உன் அன்பு மழை பெறும் அந்நேரமே இவள் நெற்றியும் எழில் கொண்டு திகழும்" என்று தோழி தலைவனிடம் தலைவியின் நிலையை விளக்கினாள்.

கருத்து

ஒருவழித்தணந்து வந்த தலைவனைத் தோழி கண்டு, அவனில்லாத காலத்தில் தலைவி பட்ட துயரங்களையும், அவளைத் தன்னால் ஆற்ற இயலாததையும் சொல்லி, அவன் அருளால் அவள் அழகு சிறப்புற வேண்டும் என்றுரைத்தாள்.

விளக்கம்

தலைவி கொண்டுள்ள துயரம் மறைக்க இயலாத அளவுக்கு வெளிப்பட்டுத் தோன்றுகிறது. அவள் அழகு சிறப்புறவும், துயர் அழிந்திடவும், தலைவன் அவளிடம் கருணைகொண்டு திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்பது தோழியின் விருப்பம்.

குறிப்பு

ஒரு யானை மற்றொரு யானையைக் குத்தியதால் குருதி படியப்பெற்ற அதன் தந்தத்தைப் போலக் காந்தள் அரும்பு விடும் என்பது, நற்பண்பு கொண்ட தலைவன் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யாமல் கொடியவனாய்த் தோன்றுகிறான் என்பதையும்,

பள்ளம் நிறையும்படி அருவி நீர் விழும் மலை என்பது, ஊரார் பழி தூற்றுவதால் தலைவி பெருந்துன்பமடையுமாறு தலைவன் களவு ஒழுக்கம் ஒழுகுகின்றான் என்பதையும் குறிப்பாய்க் காட்டும்.

சொற்பொருள்

1. வறன் உறல் - வறட்சி உறுவதை; வழை - சுரபுன்னை மரம்; நறுஞ் சாரல் - இனிய மலைச்சாரல்.
2. விறல் மலை - வெற்றி பொருந்திய மலை; வியல் அறை - அகன்ற பாறை; வீழ் பிடி - விரும்புகின்ற பெண்யானை; உழையதா - அருகே இருக்க.

3. மறம்மிகு - வலிமை மிக்க; மாறு கொள் - பகை கொண்டு; மைந்து - வலிமை.
4. புகர்நுதல் - புள்ளி பொருந்திய நெற்றி; புய்கோடு - பிளக்கும் தந்தம்.
5. புதிது ஈன - புதிதாய்ப் பூக்க.
6. அயம் - பள்ளம்; நந்தி - நிறைந்து.
7. பயமழை - பலனைத் தரும் மழை; தலைஇய - பொருந்திய; பாடு - பெருமை.
8. மறையினில் மணந்து - களவிலே கூடி; மருவுதல் - சேர்தல்.
9. இறை - முன் கை; நெகிழ்பு ஓட - கழன்று ஓட; ஒல்லும் - பொருந்தும்.
10. அயல் - அயலார்; ஆய் நலன் - ஒப்பனை செய்யப்பட்ட அழகு.
11. கயல் - மீன்; கண்பனி - கண்ணீர்; கலுழாக்கால் - சொரிகின்றது.
13. படர் - துன்பம்; பனி - தெய்வத்தால் உண்டான நடுக்கம்; பரவாமை - நேர்த்திக்கடன் நேராமை.
14. ஒளி ஓடி - ஒளி மறைந்து; நறுநுதல் - இனிய நுதல்.
15. பீர் - பீர்க்கம் பூ.
16. அருளாது - கருணையின்றி.
18. அஞர் - துன்பம்.
21. விளியா - தீராத; உழந்து - வருந்தி.
22. முளிவுற - வறண்டு.
23. தளி - மழைத்துளி; தகை - அழகு.
24. அளி - அருள்; நந்தும் - வளரும்; கவின் - அழகு.

தலைவன் கூற்று

திருக்குறள் 1125 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

ஒருவழித்தணந்துவந்த தலைமகன், 'நீர் தணந்த ஞான்று எம்மை உள்ளியும் அறிதிரோ?' என்ற தோழிக்குச் சொல்லியது. (தணத்தல் - பிரிதல்.)

கூற்று விளக்கம்

களவுக்காலத்தே தலைவியைப் பிரிந்து திரும்பிய தலைவனிடம், 'நீர் பிரிந்திருந்தபோது எம்மை நினைத்தீரோ' என்று தோழி கேட்டபோது, தலைவன் கூறியது.

உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம்.

தெளிவுரை

ஒளி பொருந்திய விரும்பத்தக்க கண்களைக் கொண்ட தலைவியின் பண்புகளை நான் மறந்தால் அன்றோ நினைக்க வேண்டிவரும்? நான் ஒருபோதும் மறந்ததில்லையே!

கருத்து

நான் உம்மை எப்போதும் நினைந்திருந்தேன்; மறந்ததில்லை.

விளக்கம்

மறப்பதோ, நினைப்பதோ இன்றி எப்போதும் நினைவிலிருப்பதுவே காதலின்பம் எனத் தலைவன் காதற்சிறப்பினைப் பற்றிக் கூறுகிறான்.

சொற்பொருள்

1. யான் - நான்.
2. ஒள்அமர்க் கண்ணாள் - ஒளி பொருந்திய விரும்பத்தக்க கண்களைக் கொண்டவள்; குணம் - பண்பு.
1. மறப்பறியேன் - மறந்ததேயில்லை; மறப்பின் - மறந்தால் அன்றோ?; உள்ளுவன் - மீண்டும் நினைப்பேன்.

தலைவி கூற்று

திருக்குறள் 1126 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

ஒருவழித்தணப்பின்கண் தலைமகளைத் தோழி இயற்பழிக்கும் என்று அஞ்சி அவள் கேட்பத் தலைமகள் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைத் தலைவன் சிறிது காலம் பிரிந்திருந்தான். ஒருவேளை, தோழி தன் இயல்பைப் பழிப்பாளென்று அஞ்சி, தான் இருக்கும் இயல்பைத் தலைவி, தோழி கேட்பத் தன்னுள்ளே கூறியது.

கண்உள்ளின் போகார்; இமைப்பின் பருவரார்;
நுண்ணியர்எங் காத லவர்.

தெளிவுரை

என் காதலர் என் கண்ணுள்ளேயே இருக்கிறார்; அங்கிருந்து எங்கும் போகமாட்டார். நான் கண்மூடி இமைத்தாலும் அதனால் வருந்தமாட்டார்; அவர் அவ்வளவு நுட்பமானவர்!

கருத்து

என் காதலர் என் கண்களினின்று எப்போதும் அகல மாட்டார்.

விளக்கம்

"பிறர் என் காதலரை நேரில் காணாமையால் பிரிந்து சென்று விட்டதாய்க் கருதுகின்றனர். அவர் என்னைப் பிரியார்; என் கண்ணிலிருந்து நீங்கி வேறிடத்துக்குச் செல்லமாட்டார். ஒருவேளை, அவர் உள்ளிருப்பது அறியாமல் நான் கண்ணை இமைத்தாலும் தன்னை நெருக்குவதாய்க் கருதி வருந்தமாட்டார். ஆதலால், அவர் மிகவும் நுட்பமானவர்" எனத் தலைவி, தோழி கேட்குமாறு தன்னுள் பேசிக்கொள்கிறாள்.

குறிப்பு

காதலியின் உள்ளத்தில் காதலன் இடம் பெற்றுவிட்டதால், அவள் தன் கண்ணை மூடும்போதும் அவன் உருவம் அவள் கண்முன்னே தோன்றிக் கொண்டேயிருக்கிறது.

சொற்பொருள்

2. எம் காதலவர் - என் காதலர்.
1. கண் உள்ளின் போகார் - என் கண்ணின் உள்ளே இருந்து வெளியே செல்லமாட்டார்; இமைப்பின் - (அவர் உள்ளிருப்பது அறியாமல்) நான் இமைத்தாலும்; பருவரார் - (அதனால்) வருந்தமாட்டார்.
2. நுண்ணியர் - நுட்பமானவர்.

தலைவி கூற்று

திருக்குறள் 1127 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

ஒருவழித்தணப்பின்கண் தலைமகளைத் தோழி இயற்பழிக்கும் என்று அஞ்சி அவள் கேட்பத் தலைமகள் தன்னுள்ளே கூறியது.

கூற்று விளக்கம்

தலைவியைத் தலைவன் சிறிது காலம் பிரிந்திருந்தான். ஒருவேளை, தோழி தன் இயல்பைப் பழிப்பாளென்று கருதி, தான் இருக்கும் இயல்பைத் தோழி கேட்பத் தலைவி தன்னுள்ளே கூறியது.

கண்ணுள்ளார் காத லவர்ஆகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக்கு அறிந்து.

தெளிவுரை

என் காதலர் எப்பொழுதும் என் கண்ணுக்குள்ளேயே இருக்கிறார். அதனால் கண்ணுக்கு மை தீட்டினால் எங்கே மறைந்து விடுவாரோ எனப் பயந்து கண்ணுக்கு மையும் தீட்டாமல் இருக்கிறேன்.

கருத்து

மை இடுகின்ற நேரத்தில் அவர் மறைந்துவிடுவார் எனக் கருதிக் காதலி தன் கண்ணுக்கு மை தீட்டுவதில்லை.

விளக்கம்

கண்ணுக்கு மை தீட்டி அழகு செய்வது பெண்கள் வழக்கம். காதலன் காதலியைப் பிரிந்திருக்கிறான். அவன் நினைவாலேயே காதலி அவனைத் தன் கண்ணுள் வைத்துக் காத்திருக்கின்றாள். மை தீட்டும் நேரம், கண்ணைத் திறந்திட நேரும். அந்தச் சிறிதளவு நேரத்திற்குள் கண்ணினின்றும் மறைந்திடுவாரோ என அஞ்சி, அவள் தன் கண்ணுக்கு மை தீட்டாதிருக்கிறாள்.

சொற்பொருள்

1. காதலவர் - என் காதலர்; கண் உள்ளார் ஆக - என் கண்ணுள் இருக்கிறார் ஆதலால்.

2. கரப்பாக்கு அறிந்து - (அவர்) மறைந்துவிடுவார் என்பதறிந்து.
1-2.கண்ணும் எழுதேம் - கண்ணுக்கு மையும் தீட்டுவதில்லை.

தலைவி கூற்று

திருக்குறள் 1128 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

ஒருவழித்தணப்பின்கண் தலைமகளைத் தோழி இயற்பழிக்கும் என்று அஞ்சி அவள் கேட்பத் தலைமகள் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைத் தலைவன் சிறிது காலம் பிரிந்திருந்தான். ஒருவேளை, தோழி தன் இயல்பைப் பழிப்பாளென்று கருதி, தான் இருக்கும் இயல்பைத் தோழி கேட்பத் தலைவி தன்னுள்ளே கூறியது.

நெஞ்சத்தார் காத லவராக வெய்துஉண்டல்
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து.

தெளிவுரை

(என் கண்ணில் மட்டுமா என் காதலர் இருக்கிறார்?) என் நெஞ்சுள்ளேயும் இருக்கின்றார். ஆதலால், வெப்பமுள்ள உணவுகளை உண்ண அஞ்சுகிறேன். ஏனெனில், அவை அவரைச் சுட்டுவிடுமே!

கருத்து

என் காதலர் எப்பொழுதும் என் நெஞ்சத்திலேயே இருப்பதால் வெப்பமுள்ள உணவு எதையும் உண்பதை நிறுத்திக்கொண்டேன்.

விளக்கம்

தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றுவிட்டான் என்று அவன் இயல்பைத் தோழி பழித்துக் கூறினாள். 'என் காதலர் என் நெஞ்சிலேயே நிலைத்து உள்ளார் என்பதை அறியாமல் பழித்துரைக்கின்றனரே' என்று தோழி கேட்கும் வகையில் தலைவி தன்னுள்ளே சொல்லிக்கொள்கிறாள்.

குறிப்பு

‘ஒருபொழுதும் பிரியாதிருப்பானைப் பிரிந்தான் என்று பழிக்காதே’ என்று தலைவி குறிப்பாய்த் தோழியிடம் சொன்னாள்.

சொற்பொருள்

1. காதலவர் - என் காதலர்; நெஞ்சத்தார் ஆக - என் நெஞ்சுள்ளேயே இருக்கின்றார் ஆதலால்; வெய்து உண்டல் - வெப்பமுள்ள உணவுகளை உண்ண.
2. அஞ்சுதும் - அஞ்சுகின்றேன்; வேபாக்கு அறிந்து - (அது) அவரைச் சுடும் என்று அறிந்து.

வரைவு நீட்டிப்பு

களவொழுக்கத்தில் ஈடுபட்டிருந்த தலைவன் மணம் செய்துகொள்ளக் காலம் நீட்டித்தது.

தலைவி கூற்று

குறுந்தொகை 25 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது. (வரைவு - திருமணம்).

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் ஈடுபட்டிருந்த தலைவன், மணம் செய்துகொள்ளக் காலம் நீட்டித்தது கண்டு மனம் நொந்த தலைவி, தோழியிடம் தன் நிலையைக் கூறி வருந்தியது.

யாரும் இல்லை; தானே கள்வன்;
தான்அது பொய்ப்பின், யான்எவன் செய்கோ?
தினைத்தாள் அன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டு, தான்மணந்த ஞான்றே.

தெளிவுரை

தோழி! தலைவன் என்னைக் களவில் கூடிய அந்த வேளையில் அங்கு அவனைத் தவிர வேறு எவருமிலர்; 'உன்னை மணப்பேன்' என்று தான் கூறிய உறுதிமொழி பொய்யாகும்படி அவன் நடப்பானாயின் நான் என் செய்வேன்? அவன் உறுதிமொழி கூறிய அந்த நேரத்தில் அங்குத் தினைத்தாள் போன்று சிறிய பசுங்காலைக் கொண்ட நாரை ஒன்று மட்டுமே இருந்தது. அதுவும் ஓடுகின்ற நீரில், தன் உணவுக்காக ஆரல் மீனை எதிர்நோக்கி நின்றிருந்தது.

கருத்து

தலைவன் என்னை மணப்பதாய்க் கூறிய உறுதிமொழி பொய்யாகும்படி செய்து விட்டான்; எனக்குச் சான்றாவார் எவருமிலர்; நான் என் செய்வேன்?

விளக்கம்

தலைவன் என்னை மணப்பேன் என்று உறுதி கூறிய போது அங்கு அவனைத் தவிர வேறு எவருமிலர்; ஒரு குருகு மட்டுமே நின்றிருந்தது. அது தன் உணவுக்காக ஆரல் மீனை நோக்கி

யிருந்ததால், தலைவன் கூறியதை அதனால் கேட்டிருக்க இயலாது; கேட்டிருந்தாலும் அது வந்து சான்று கூற இயலாது. தலைவன் பொய்த்தால் நான் என்ன செய்ய இயலும் எனத் தலைவி கூறினாள். (இவ்வருத்தம் நீங்கத் தலைவன் இனியும் நீட்டியாது தலைவியை மணந்துகொள்ள வேண்டும் என்று தோழி கூறினாள்.)

சொற்பொருள்

1. களவன் - களவொழுக்கம் மேற்கொண்டிருந்த தலைவன்.
2. தான் - தலைவன்; அது - கூறிய உறுதிமொழி; எவன் செய்கோ? - என் செய்வேன்.
3. தாள் - பயிர்; சிறுபசுங்கால - சிறிய பசிய கால்களைக் கொண்ட.
4. ஒழுகுநீர் - ஓடுகின்ற நீர்; ஆரல் - ஆரல் மீன்.
5. குருகு - நாரை; மணந்த - கூடிய; ஞான்று - பொழுது.

தலைவி கூற்று

குறுந்தொகை 105 **நக்கீரர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள், தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவில் தலைவியைக் கூடிவந்த தலைவன், வரைவு நீட்டித்தவிடத்துத் துயரம் மிகுந்த தலைவி தோழியிடம் கூறியது.

புனவன் துடவைப் பொன்போல் சிறுதினைக்
கடிஉண் கடவுட்கு இட்ட செழுங்குரல்
அறியாது உண்ட மஞ்ஞை, ஆடுமகள்
வெறிஉறு வனப்பின் வெய்துற்று நடுங்கும்,
சூர்மலை நாடன் கேண்மை
நீர்மலி கண்ணொடு நினைப்பு ஆகின்றே.

தெளிவுரை

குறவனுடைய தோட்டத்தில் பொன்னைப் போன்று சிறிய தினை விளைந்திருந்தது. புதிய தினைக்கதிரைத் தெய்வத்திற்குப் படைப்பதற்காகக் குறவர்கள் தனியே வைத்திருந்தனர். அது அறியாது அக்கதிர்களை உண்ட மயில், தெய்வமுற்று ஆடும் தேவராட்டி போன்ற வனப்புடன் ஆடி, வெப்பமுற்று நடுங்கும். அத்தகைய அச்சம் தரும் தெய்வம் உறையும் நாடனுடன் கொண்ட நட்பு, நமக்கு நீர் நிறைந்த கண்ணுடன் நினைத்துத் துன்புறுவதற்குத்தான் இடமாயிற்று.

கருத்து

தோழி! தலைவன் தான் வாக்களித்தபடி இன்னும் வந்து வரைந்துகொள்ள வில்லை; ஆதலால், நான் வருந்தியிருக்கிறேன்.

விளக்கம்

முதல் விளைவைத் தெய்வத்திற்குப் படைத்துப் பிறகு உண்பதே வழக்கம். அவ்வாறு படைக்காது உண்டால் தெய்வக் குற்றம் உண்டாகும் என்பது நம்பிக்கை. தெய்வத்திற்குப் படைக்க வைத்திருந்த தினைக்கதிரை மயில் அதனை அறியாமல் உண்ட தால், அது மயக்கமுற்று, தெய்வமுற்று ஆடும் தேவராட்டிபோல் ஆடியது. மயிலையே தண்டித்த தெய்வம், தலைவன் தன்னைச் சான்று காட்டிச் செய்த சூளுரையை மறந்ததால் அவனை வருத்துமே என்று தலைவி அஞ்சுகிறாள்.

சொற்பொருள்

1. புனவன் - குறவன்; துடவை - தோட்டம்.
2. கடிஉண் கடவுள் - புதிது உண்ணும் தெய்வம்; இட்ட - படையலாய் வைத்த.
3. மஞ்ஞை - மயில்; ஆடுமகள் - தெய்வமேறப் பெற்று ஆடும் தேவராட்டி.
4. வெறிஉறு - வெறியுற்று; வெய்துற்று - வெப்பமுற்று.
5. சூர் - அச்சம் தரும் தெய்வம்; கேண்மை - நட்பு.
6. நினைப்பு ஆகின்று - நினைத்தபடி அமைந்துவிட்டது.

தோழி கூற்று

குறுந்தொகை 53 **கோப்பெருஞ்சோழன்**

திணை : மருதம்

கூற்று

வரைவு நீட்டித்தவழித் தோழி தலைமகற்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைவேன் என்று கூறிய காலம் கழிந்ததால் தலைவி மிகவும் வருந்தினாள். அதனைக் கண்ட தோழி தலைவனிடம், "நீ கூறிய உறுதிமொழிப்படி உடனே இவளை மணக்க வேண்டும்"என்று கூறியது.

எம்அணங் கினவே மகிழ்ந! முன்றில்
நனைமுதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்,
வேலன் புனைந்த வெறிஅயர் களந்தொறும்
செந்நெல் வான்பொரி சிதறி அன்ன,
எக்கர் நண்ணிய எம்ஊர் வியன்துறை,
நேர்இறை முன்கை பற்றிச்
சூரர மகளிரோடு உற்ற சூளே.

தெளிவுரை

எம்மை மகிழ்வித்தற்குரியவனே! வீட்டு முற்றத்தில் புன்க மரத்தின் அரும்புகள் முற்றி மலர்ந்து வெண்மணற் பரப்பில் உதிர்ந்து கிடக்கும். அவ்வெண்மணற் பரப்பு, வெறியாட்டு எடுக்க வேலன் அமைத்த இடங்களிலெல்லாம் செந்நெல்லின் வெண் பொறிகள் சிதறிக்கிடப்பதுபோலக் காட்சி தரும். அத்தகைய மணல் திட்டுகள் நிறைந்த எம் ஊரின் அகன்ற துறையில், அழகிய மணிக்கட்டுடன் கூடிய தலைவியின் முன் கையைப் பற்றிக் கொண்டு, தெய்வ மகளிரைச் சுட்டிக் கூறிய உன் உறுதி மொழிகள் எம்மை வருத்தி மெலிவிக்கின்றன.

கருத்து

தலைவ! நீ கூறிய உறுதிமொழிப்படி, தலைவியை விரைவில் மணந்து கொள்.

விளக்கம்

தலைவன் களவுக்காலத்தில் தலைவியின் கையைப் பற்றி "உன்னை விரைவில் மணந்துகொள்வேன்; வருந்தாதே!" என்று உறுதிமொழி கூறினான். "தலைவ! நீ செய்த சூளுரை உன்னை வருத்தவில்லை; எம்மை வருத்துகிறது" என்று சொல்வதன்வழி, தலைவியைத் தலைவன் விரைவில் மணந்துகொள்ளுமாறு தோழி வற்புறுத்துகிறாள்.

உவமை

வேலன் பூசை போடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கும் வெறியாடுமிடத்தில் வெண்மணலின்மேல் நெற்பொரிகளைச் சிதறியிருப்பான். அவ்வாறு சிதறப்பட்டிருப்பது மணலிலே புன்க மரத்தின் வெண்மையான மலர்கள் சிதறிக் கிடப்பதுபோலக் காணப்படுகிறது.

சொற்பொருள்

1. எம் அணங்கின - எம்மைத் துன்புறுத்துகின்றன; மகிழ்ந - தலைவ!; முன்றில் - வீட்டு முற்றம்.
2. நனை முதிர் - அரும்பு முற்றி மலர்ந்த; புன்கின் - புன்க மரத்தில்; பூத்தாழ் - பூக்கள் உதிர்ந்து கிடக்கின்ற.
3. வேலன் புனைந்த - வேலனால் அமைக்கப்பட்ட; வெறிஅயர் களம் தொறும் - வெறியாட்டு எடுக்கும் இடங்களிலெல்லாம்.
4. வான் பொரி - வெண்மையான நெற்பொரிகள்; சிதறி அன்ன - சிதறிக் கிடப்பதுபோல.
5. எக்கர் - மணல்மேடு; நண்ணிய - பொருந்திய, நிறைந்த; வியன் துறை - அகன்ற துறை.
6. நேர்இறை - அழகிய மணிக்கட்டினைக் கொண்ட.
7. சூரர மகளிரொடு - அச்சந்தரும் தெய்வ மகளிரைச் சுட்டி; உற்ற - நீ கூறிய; சூள் - உறுதிமொழி.

தலைவி கூற்று

குறுந்தொகை 54 **மீனெறி தூண்டிலார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாகிய தலைமகள், தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியை வரைந்துகொள்ள வருவதாய்ச் சொல்லிச் சென்ற காலத்தின் எல்லை கடந்ததனால் வருந்திய தலைவி தன் தோழியிடம் கூறியது.

யானே ஈண்டை யேனே; என்நலனே,
ஏனல் காவலர் கவண்ஒலி வெரீஇக்
கான யானை கைவிடு பசுங்கழை
மீன்எறி தூண்டிலின் நிவக்கும்
கானக நாடனொடு, ஆண்டுஒழிந் தன்றே.

தெளிவுரை

காட்டில் யானை ஒன்று உணவுக்காகப் பசிய மூங்கிலை வளைத்துப் பிடித்திருந்தது. தினைப்புனம் காப்போர் கவண் கல்லை வீசியதால் எழுந்த ஒலி கேட்டு யானை அஞ்சியது; அதனால் தான் பிடித்திருந்த மூங்கிலை விட்டது. விடுபட்ட மூங்கில், மீன் சிக்கிய தூண்டில் மேலே எகிறித் தூக்கப்படுவது போல நிமிர்ந்து மேலே சென்றது.

நான் இங்கே தனிமையில் உள்ளேன். என் அழகு, மலை நாடனாகிய அந்தத் தலைவனோடு அவன் சென்றுள்ள இடத் திற்கே சென்றுவிட்டது.

கருத்து

தோழியே! தலைவன் என்னை மணக்கக் காலம் நீட்டிக்கிறான். நான் மட்டுமே இங்குள்ளேன். என் அழகெல்லாம் தலைவனோடு சென்று விட்டது.

விளக்கம்

"காட்டுயானை இளமூங்கிலை வளைத்துக் குருத்தைத் தின்ன முயல்கிறது. அவ்வேளையில் அருகிலிருந்த தினைப்புனத்தில் பறவைகளை விரட்டுவதற்காகக் காவலர்கள் கவண்கல் எறிந் தனர். அந்த ஒலியைக் கேட்டு அஞ்சிய யானை, தான் வளைத் திருந்த மூங்கிலை விட்டுவிடுகின்றது. தூண்டிலை நீரில் இட்டு மீன் பிடிப்பவன், தூண்டிலில் மீன் சிக்கியவுடன் தூண்டிலை விரைந்து மேலே தூக்குவான். அப்போது தூண்டில் குச்சி விசுக்கென மேலேறும். அதுபோல, யானையின் பிடியிலிருந்து விடுபட்ட மூங்கிலும் விரைந்து நிமிர்ந்து மேலே சென்றது. இத்தகைய காட்சி கொண்ட மலைநாட்டுக்கு உரியவனொடு நான் நட்புக்கொண்டதால் இன்று நலனிழந்து நிற்கிறேன்" என்கிறாள், தலைவி.

குறிப்பு

இப்பாடலை இயற்றிய ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை. அவரால் எழுதப்பட்ட இப்பாடலில் உள்ள 'மீனெறி தூண்டில்' என்னும் அழகிய தொடரே அவருக்குக் காரணப்பெயராயிற்று.

சொற்பொருள்

1. ஈண்டையேன் - இங்குள்ளேன்; நலன் - அழகு.
2. ஏனல் - தினைப்புனம்; கவண் - கல்லெறி கருவி; வெரீஇ - அஞ்சி.
3. பசுங்கழை - பசிய மூங்கில்.
4. மீன்எறி தூண்டில் - மீன் சிக்கிய தூண்டில்; நிவக்கும் - உயரும்.
5. ஆண்டு - அவனுள்ள அவ்விடத்திற்கு; ஒழிந்தன்று - சென்று விட்டது.

தலைவி கூற்று

குறுந்தொகை 97 **வெண்பூதி**

திணை : நெய்தல்

கூற்று

வரைவு நீட்டித்தவழி, தலைமகள், தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைந்துகொள்ளாமல் நெடுநாள் காலம் கடத்துவதைக் கண்டு தலைவி வருந்திக் கூறியது.

யானே ஈண்டை யேனே; என்நலனே
ஆனா நோயொடு கானல் அஃதே;
துறைவன் தம்ஊ ரானே;
மறைஅலர் ஆகி மன்றத் தஃதே.

தெளிவுரை

தோழி! நான் இங்குத் தனித்திருக்கிறேன். என் பெண்மை அழகோ தணியாத துன்பத்துடன் தலைவனைத் தேடியபடி, கடற்கரைச் சோலையிடத்திலே உள்ளது. தலைவனோ, தன் ஊரில் இருக்கிறான். எம் களவு உறவோ, பழிச்சொல்லுக்கு ஆளாகி ஊர்ப் பொதுவிடத்தில் உள்ளது.

கருத்து

தோழி! என் நலனுண்ட தலைவன், என்னை வரைதற்குரிய முயற்சியை இன்னும் மேற்கொண்டிலன்.

விளக்கம்

என் களவுமணம் வெளிப்பட்டுவிட்டது. ஊர்மன்றத்தில் பலரும் கூடிப் பழிச்சொல் பேசும்படியாகிவிட்டது. தலைவனோ, வரைதற்குரிய முயற்சியின்றித் தன் ஊரில் இருக்கிறான். இந்நிலையில் நீதான் ஏதாவது வழி செய்ய வேண்டும் எனத் தலைவி தோழியிடம் தன் நிலையை உரைக்கிறாள்.

குறிப்பு

'யான் ஈண்டையேன்' என்பது, 'தலைவன் மணம் கொண்டு அவனோடு ஒன்றுசேர்ந்து வாழ வேண்டிய நான் இப்பொழுது இங்கே தனித்திருக்கிறேன்' என்னும் சிறப்புப் பொருள் தருகிறது.

சொற்பொருள்

1. ஈண்டையேன் - இங்குள்ளேன்; நலன் - பெண்மை அழகு.
2. ஆனா - குறையாத; நோய் - துன்பம்; கானல் - கடற்கரைச்சோலை.
3. துறைவன் - தலைவன்; ஊரானே - ஊரில் உள்ளான்.
4. மறை - களவு நட்பு; அலர் - பழிச்சொல்.

தலைவி கூற்று

குறுந்தொகை 112 **ஆலத்தூர் கிழார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு நீட்டித்தவழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைந்துகொள்வதாய்ச் சொன்ன காலம் நீட்டித்தமையால் வருந்திய தலைவி, தன் நிலையைத் தோழியிடம் கூறியது.

கௌவை அஞ்சின், காமம் எய்க்கும்;
எள்அற விடினே, உள்ளது நாணே;
பெருங்களிறு வாங்க முரிந்துநிலம் படாஅ
நாருடை ஒசியல் அற்றே ·
கண்டிசின், தோழி!அவர் உண்டஎன் நலனே.

தெளிவுரை

ஊரார் கூறும் பழிக்கு அஞ்சினால் காமம் தேய்ந்து மெலியும்; அக்காமத்தை எள்ளளவும் இல்லாமல் கைவிட்டால், நம்மிடம் நாணம் மட்டுமே இருக்கும். பெரிய ஆண்யானை உணவுக்காக வளைத்ததால் முரிந்து, நிலத்திலும் விழாது பட்டைகளுடன்

தொங்கும் ஒடிந்த கிளையைப் போலக் குற்றுயிராய்த் தடுமாறு கின்றது, அவன் நுகர்ந்த என் அழகு. தோழி! இதனைக் காண்க.

கருத்து

தோழி! தலைவன் வரைவான் என்னும் நம்பிக்கையில் என் காமம் குற்றுயிராய்க் கிடந்து தடுமாறுகின்றது.

விளக்கம்

பெருங்களிறு உண்பதற்கு ஒடித்த நாருடன் கூடிய கிளை முற்றவும் ஒடிந்து தரையில் வீழ்ந்துவிடாமல், சிறு பகுதி மரத்தோடு தங்கி விடுவதுபோலத் தலைவியின் நிலை ஆயிற்று. முரிந்த கிளை, நாரின் தொடர்பினால் மீண்டும் தழைக்கக் கூடிய நிலையில் பட்டுவிடாமல் இருக்கின்றது. அதுபோலத் தலைவியின் பெண்தன்மை அடியோடு அழிந்துவிடாமல் தங்கி இருக்கிறது. நாரின் தொடர்பினால் மீண்டும் கிளை தழைக்கக் கூடிய நிலையில் இருப்பதைப் போலத் தலைவியின் பெண் தன்மை, தலைவன் வந்து வரைவான் என்னும் நம்பிக்கையில் குற்றுயிராய்த் தடுமாறுகின்றது. விரைந்து வரைதலே தீர்வு என்பது தலைவி கருத்து.

சொற்பொருள்

1. கௌவை - பழிச்சொல்; எய்க்கும் - தேயும், மெலியும்.
2. எள்அற விடின் - அக்காமத்தை அறவே விட்டுவிடின்.
3. வாங்க - வளைக்க; நிலம்படா - நிலத்தில் படாத.
4. நாருடை - பட்டையைக் கொண்ட; ஒசியல் - ஒடிந்த கிளை.
5. கண்டிசின் - காண்க; உண்ட - நுகர்ந்த.

தலைவி கூற்று

குறுந்தொகை 133 **உறையூர் முதுகண்ணன் சாத்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு நீட்டித்த இடத்துத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் நெடுங்காலம் வரைந்துகொள்ளாமல் இருந்ததால் வருந்திய தலைவி கூறியது.

புனவன் துடவைப் பொன்போல் சிறுதினை
கிளிகுறைத்து உண்ட கூழை இருவி
பெரும்பெயல் உண்மையின் இலைஒலித் தாங்குஎன்
உரம்செத்தும் உளேனே தோழிஎன்
நலம்புதிது உண்ட புலம்பி னானே.

தெளிவுரை

மலைவாழ் குறவன் தோட்டத்தில் விளைந்த, பொன்போல் நிறம் கொண்ட சிறிய தினைக்கதிர்களைக் கிளி, அவற்றின் கதிர்ப்பகுதி குறையுமாறு கொத்தி உண்டது. அதனால் குட்டையான தினைத்தாள்கள் மட்டுமே புனத்தில் நின்றன. பெரும்மழை பெய்ததால், குறைந்த அவ்வடித்தாளில், இலைகள் தளிர்விட்டுத் தழைத்தன. அதுபோல, தலைவன் என் பெண்மை நலத்தைப் புதுவதாக நுகர்ந்து, பின்பு பிரிந்து போனமையால் தனிமை வருத்தத்தால் என் உடல் வலு அழிந்தும் இன்னும் உயிரோடு இருக்கிறேன்.

கருத்து

தோழி! தலைவன் வந்து வரையக்கூடும் என்னும் நம்பிக்கையால் இன்னும் உயிரோடிருக்கிறேன்.

விளக்கம்

“குறவனுடைய தினைப்புனத்தில் கிளிகள் கதிர்களைக் கொத்திவிடக் குட்டையாய் நின்ற அடித்தாள், மழை பெய்ததால் மீண்டும் துளிர்த்தது; துளிர் விட்டதனால் மீண்டும் தினைக்கதிர்

தோன்றும். இதைப்போல, என் காதலர் என்னை மணந்தால் நான் மீண்டும் வலுப்பெறுவேன்; இழந்த நலனையும் பெறுவேன். இந்த நம்பிக்கையினாலேயே உயிர் வாழ்ந்திருக்கிறேன்" என்று தலைவி கூறினாள்.

சொற்பொருள்

1. புனவன் - குறவன்; துடவை - தோட்டம்.
2. கூழை - குட்டை; இருவி - தினை கொய்த பின் நிற்கும் தாள்.
3. பெயல் - மழை; உண்மையின் - பெய்ததால்; ஒலித்தல் - தழைத்தல்.
4. உரம் - உடல் வலிமை; செத்தும் - அழிந்தும்.
5. புதிது உண்ட - களவுக்காலத்தில் முதன்முதலாய்க் கூடி நுகர்ந்த; புலம்பு - தனிமை.

தலைவி கூற்று

குறுந்தொகை 152 **கிள்ளி மங்கலங்கிழார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாகிய தலைமகள், நீ ஆற்றுகின்றிலை என்று நெருங்கிய தோழியிடம் சொல்லியது. (நெருங்கிய - கடிந்து பேசிய.)

கூற்று விளக்கம்

தலைவன் நெடுங்காலம் வரையாது இருந்தமையால் தலைவி வருந்தினாள். தன்னை இடித்துரைத்த தோழியை நோக்கி, முன்னிலைப் புறமொழியாய்த் தலைவி கூறியது. (முன்னிலைப் புறமொழி - எதிரில் இருப்பவரை நோக்கி நேராய்ப் பேசாமல் பிறரிடம் கூறுவதுபோலக் கூறுவது.)

யாவதும் அறிகிலர், கழறு வோரே
தாய்இல் முட்டை போல,உட் கிடந்து
சாயின் அல்லது, பிறிதுஎவன் உடைத்தோ?
யாமைப் பார்ப்பின் அன்ன
காமம், காதலர் கையற விடினே.

தெளிவுரை

ஆமையின் குஞ்சுகள் தாய்முகம் நோக்கி வளரும். நம் காமமும் தலைவனைக் காணுவதால் வளருகின்றது. நம் காதலர் பிரிந்து முற்றிலும் நம்மைக் கைவிடுவாரானால், தாய் இல்லாத முட்டை பயனின்றி அழிவதுபோல நம் காமமும் நம் உள்ளத்திலேயே வருந்திக் கெடுமே அல்லது வேறு என்ன பயனைக் கொள்ளும்? நம்மை இடித்துரைப்போர் இதைச் சிறிதும் அறியாதவர்களா யிருக்கின்றனர்.

கருத்து

தோழி! தலைவர் விரைவில் நம்மை வரைந்துகொள்ளாவிடில் என் காமம் எனக்குப் பயன் தாராது.

விளக்கம்

ஆமை, நீர்நிலையை அடுத்த மணற்பாங்கில் முட்டையிட்டு மூடி வைக்கும். அம்முட்டை வெயிலின் சூட்டினால் முதிர்ந்து குஞ்சு வெளிப்படும்; அக்காலமறிந்து தாய்ஆமை வந்து, அக் குஞ்சுகளைப் பேணி வளர்க்கும். தாய் முகம் பார்த்து வளரும் ஆமைக்குஞ்சுபோலக் காமமும் தலைவனைக் காணுவதால் வளர்கிறது.

தாய்ப்பறவையால் அடைகாக்கப்படாத முட்டையின் உள் ளிருக்கும் உயிர் வெளிவர இயலாது. அது முட்டையின் உள்ளேயே சாம்பி அழிய வேண்டியதுதான். காதலரைப் பிரிந்த மகளிர், தாய்ப்பறவையால் கைவிடப்பட்ட முட்டை போன்றவர்.

கணவனோடு சேர்ந்திருப்போரின் காமத்திற்குத் தாயின் முகம் நோக்கியிருக்கும் ஆமைப்பார்ப்பு உவமை. கணவனைப் பிரிந் திருக்கும் மகளிர் காமத்திற்குத் தாய்ப்பறவையில்லாத முட்டை உவமை.

சொற்பொருள்

1. யாவதும் - சிறிதும்; கழறுவோர் - இடித்துரைப்போர், கண்டிப்போர்.
2. உட்கிடந்து - உள்ளே கிடந்து.
3. சாய்தல் - மெலிதல்; பிறிது எவன் உடைத்து - வேறு என்ன பயனைக் கொண்டுள்ளது?

4. யாமை - ஆமை; பார்ப்பு - குஞ்சு.
5. கையற விடுதல் - முற்றும் கைவிடுதல்.

தலைவி கூற்று

கைந்நிலை 1 **புல்லங்காடனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாய தலைமகள் தோழிக்குக் கூறுதல்.

கூற்று விளக்கம்

தலைவன், தலைவியை வரைந்துகொள்ளாமல் காலம் நீட்டித்தமையால் அவள் ஆற்றாளாயினாள். அது கண்டு வருந்திய தோழியை நோக்கித் தலைவி கூறியது.

நுகர்தல் இவரும் கிளிகடி ஏனல்
நிகர்இல் மடமான் நெரியும் அமர்சாரல்
கானக நாடன் கலந்தான் இலன்என்று
மேனி சிதையும் பசந்து.

தெளிவுரை

தினைக்கதிர்களைத் தின்பதற்காக வந்து தினையின்மேல் அமரும் கிளிகளை ஓட்டும் தினைப்புனத்தில், ஒப்பில்லாத மான்கள் உலவித் திரியும் மலைச்சாரலில் கானக நாட்டுத் தலைவன் என்னைச் சேர்ந்தான். இன்று அவன் இங்கு இல்லா தவனாய் என்னை விட்டுப் பிரிந்து சென்றான் என்பதை அறிந்து என் உடலும் பசந்து அழகு சிதைந்தது.

கருத்து

தோழி! தலைவன் பிரிந்தான்; என் உடல் பசந்து அழகு சிதைந்தது. பசலை மறைய அவன் உடனே வரைவு மேற்கொள்ள வேண்டும்.

சொற்பொருள்

1. நுகர்தல் - (தினையைத்) தின்பதற்காக; இவரும் - வந்து மேலே அமரும் (இவர்தல் - ஏறுதல்); கடிதல் - ஓட்டுதல்; ஏனல் - தினைப்புனம்.

2. நிகர் - ஒப்பு; இல் - இல்லாத; மடமான் - இளைய மான்; நெரியும் - உலவித் திரியும், சிலிர்த்து நிற்கும்; சாரல் - மலைச்சாரல்.
3. கலந்தான் - கூடினான்; இலன் - (இன்று இங்கு) இலன்.
4. சிதைதல் - அழிதல்.

தலைவி கூற்று

கைந்நிலை 2 **புல்லங்காடனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாய தலைமகள் தோழிக்குக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன், தலைவியை வரைந்துகொள்ளாமல் காலம் நீட்டித்தமையால் அவள் ஆற்றாள் ஆயினாள். அது கண்டு வருந்திய தோழியை நோக்கித் தலைவி கூறியது.

வெந்த புனத்துக்கு வாசம் உடைத்தாகச்
சந்தனம் ஏந்தி, அருவி கொணர்ந்திடூஉம்
வஞ்ச மலைநாடன் வாரான்கொல்? தோழி,என்
நெஞ்சம் நடுங்கி வரும்.

தெளிவுரை

"தோழியே! தீயினால் வெந்து கருகிய காட்டுக்கு மீண்டும் நறுமணம் உண்டாகும்படி மலையினின்று வரும் அருவிகள் சந்தனக்கட்டைகளை அடித்துக்கொண்டு வந்து சேர்க்கின்ற கள்ள மனமுள்ள மலைநாட்டுத் தலைவன் இனி இங்கு வருவானோ? வாராது தவிர்த்துவிடுவானோ? அதனை அறியாது என் நெஞ்சம் நடுங்குகின்றது" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

தோழி! தலைவன் வரையாது நீட்டித்து வருகிறான்; தலைவன் வாராது இருந்துவிடுவானோ?

சொற்பொருள்

1. வெந்த - தீயினால் வெந்து கருகிய; புனம் - காடு; வாசம் - நறுமணம்.
2. ஏந்தி - தாங்கி; கொணர்ந்து இடூஉம் - கொண்டுவந்து சேர்க்கும்.
3. வஞ்சம் - கள்ளம், கொடுமை.

தலைவி கூற்று

கைந்நிலை 3 **புல்லங்காடனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாய தலைமகள் தோழிக்குக் கூறுதல்.

கூற்று விளக்கம்

தலைவன், தலைவியை வரைந்துகொள்ளாமல் காலம் நீட்டித்தமையால் அவள் ஆற்றாள் ஆயினாள். அது கண்டு வருந்திய தோழியை நோக்கித் தலைவி கூறியது.

பாசிப் பசுஞ்சுனைப் பாங்கர் அழிமுதுநீர்
காய்சின மந்தி பயின்று, கனிசுவைக்கும்,
பாசம்பட்(டு) ஓடும் படுகல் மலைநாடற்(கு)
ஆசையின் தேம்பும்என் நெஞ்சு.

தெளிவுரை

"பாசி படர்ந்த பசுமையான நீர்ச்சுனைக்குப் பக்கத்தில் பெருகுகின்ற பழமையான நீர் அடித்துவரும் பழங்களைச் சினம் கொண்ட குரங்குகள் எடுத்துச் சுவைக்கும். பாசி கொண்ட இத்தகைய அருவிநீர் ஓடும் கற்களைக் கொண்ட மலைநாட்டுக்கு உரியவனான தலைவன்மீதுள்ள அன்பு காரணமாய் என் மனம் அவனை நினைந்து தேம்புகிறது" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

தோழி! தலைவனை நினைந்து என் நெஞ்சம் தேம்புகிறது. (அவன் மணம் பேசி வரக் காலம் நீட்டிப்பானோ?)

உள்ளுறை

பாசிப் பசுஞ்சுனையைக் குறவர் குடியாகவும்; ஓடுகின்ற அருவிநீரைத் தலைவியின் இல்லமாகவும்; நீரில் அடித்து வரப்பட்ட கனியைத் தலைவியாகவும்; பழத்தை மந்தி சுவைப்பது தலைவியைத் தலைவன் கூடி இன்புறுவதாகவும்; பாசி பட்டு ஓடும் படுகல் என்றது களவொழுக்கமாகவும் உள்ளுறை உவமை கொள்க.

சொற்பொருள்

1. பசுஞ்சுனை - பசுமையான சுனை; பாங்கர் - பக்கத்தில்; அழிமுது நீர் - பெருகுகின்ற பழமையான நீர்.
2. பயின்று - பழகி.
3. படுகல் - கற்களைக் கொண்ட.
4. ஆசை - அன்பு; தேம்பும் - வருந்துகின்றது.

தலைவி கூற்று

கைந்நிலை 4 **புல்லங்காடனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாய தலைமகள் தோழிக்குக் கூறுதல்.

கூற்று விளக்கம்

தலைவன், தலைவியை வரைந்துகொள்ளாமல் காலம் நீட்டித்தமையால் அவள் ஆற்றாள் ஆயினாள். அது கண்டு வருந்திய தோழியை நோக்கித் தலைவி கூறியது.

ஓங்கல் விழுப்பலவின் இன்பம் கொளீஇய
தீங்கனி மாவின் முசுப்பாய் மலைநாடன்
தான்கலந்து உள்ளாத் தகையனோ, நேரிழாய்!
தேம்கலந்த சொல்லின் தெளித்து.

தெளிவுரை

"தோழியே! மலையில் உள்ள கருங்குரங்குகள், மாமரத்தினின் றும் பலா மரங்களுக்குத் தாவி, அப்பலா மரங்களிலுள்ள இன்பம் தருகின்ற பழுத்த இனிமையான பழங்களைப் பறிக்கும் காட்சி கொண்ட மலைநாட்டுக்குத் தலைவன், இயற்கைப் புணர்ச்சியின்போது தேன் கலந்த சொற்களைக் கூறி என்னைத் தெளிவித்துச் சேர்ந்தனன். பின்னர், அவற்றை எண்ணிப் பாராது என்னை மறக்கும் தன்மையுள்ளவன் ஆயினனோ?" எனத் தலைவி தோழியை நோக்கிக் கூறினாள்.

கருத்து

தோழியே! தலைவன் என்னை மறந்தனனோ? (அவன் வரைந்துகொள்ள வரும் நாள் எந்நாளோ?)

உள்ளுறை

குரங்கு, மாமரத்தினின்று தாவிப் பலாப்பழத்தைப் பறித்தது என்பதன் உள்ளுறைப்பொருள், மலைநாட்டிலிருந்து வந்த தலைவன் குறவர் குடியில் பிறந்த தலைவியைச் சேர்ந்தான் என்பதாகும்.

சொற்பொருள்

1. ஓங்கல் - மலை; விழு - சிறந்த; இன்பம் - சுவை; கொளீஇய - கொண்டுள்ள.
2. மா - மா மரம்; முசு - ஒருவகைக் குரங்கு; பாய் - தாவும்.
3. கலந்து - (இயற்கைப்புணர்ச்சியிலே) கூடி; உள்ளாத் தகையன் - எண்ணிப் பாராதவன்.
4. தேம் - தேன்; தெளித்து - தெளிவித்து.

தலைவி கூற்று

கைந்நிலை 5 **புல்லங்காடனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாய தலைமகள் தோழிக்குக் கூறுதல்.

கூற்று விளக்கம்

தலைவன், தலைவியை வரைந்துகொள்ளாமல் காலம் நீட்டித்தமையால் அவள் ஆற்றாள் ஆயினாள். அது கண்டு வருந்திய தோழியை நோக்கித் தலைவி கூறியது.

இரசம்கொண்(டு) இன்தேன் இரைக்கும் குரலைப்
பிரசை இரும்பிடி பேணி வரூஉம்
முர(சு)அருவி ஆர்க்கும் மலைநாடற்(கு) என்தோள்
நிரையம் எனக்கிடந்த வாறு.

தெளிவுரை

“இனிய தேனீக்கள் இன்பத்துடன் பாடும் ஒலியைக் கேட்டுக் கரிய பெண்யானை தேன் கூட்டை நாடி வரும். அருவிகள் முரசு போன்று முழங்கும். இத்தகைய காட்சி கொண்ட மலை நாட்டுக்கு உரியவனான தலைவனுக்கு, என் தோளில் சேர்கின்ற இன்பம் நரகத்தில் இருப்பதுபோல இருக்கின்றதுபோலும்!” என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

தோழி! அன்று தலைவனுக்கு இனிமை அளித்த என் தோள்கள் இன்று புளிப்பினைத் தந்தனவோ?; அதனால்தான் இன்னும் வரையாமல் இருக்கிறானோ?

உள்ளுறை

தேனீக்கள் பாடும் ஒலியைக் கேட்டுப் பெண்யானை தேன் கூட்டை நாடி வந்தது என்பதன் உள்ளுறைப் பொருள், தலைவி யின் குரலைக் கேட்டு அவள் இருக்கும் இடம் வந்து தலைவன் இன்பம் நுகர்ந்தான் என்பதாம்.

சொற்பொருள்

1. இரசம் - இன்பம்; இன்தேன் - இனிய தேனீக்கள்; இரைக்கும் - ஒலிக்கும்.
2. பிரசை - பிரசம், தேன்இறால்; பிடி - பெண்யானை; பேணி - நாடி.
3. அருவி முரசு ஆர்க்கும் - முரசைப் போல அருவி முழங்கும்.
4. நிரையம் - நரகம்.

தலைவி கூற்று

கைந்நிலை 6 **புல்லங்காடனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாய தலைமகள் தோழிக்குக் கூறுதல்.

கூற்று விளக்கம்

தலைவன், தலைவியை வரைந்துகொள்ளாமல் காலம் நீட்டித்தமையால் அவள் ஆற்றாள் ஆயினாள். அது கண்டு வருந்திய தோழியை நோக்கித் தலைவி கூறியது.

மரையா உகளும் மரம்பயில் சோலை
உரைசால் மடமந்தி ஓடி உகளும்
புரைதீர் மலைநாடன் பூண்ஏந்து அகலம்
உரையா வழங்கும்என் நெஞ்சு.

தெளிவுரை

“காட்டுப்பசுக்கள் திரியும் மரங்கள் நிறைந்த சோலையில் சிறப்பித்துக் கூறப்படும் இளமையான பெண்குரங்குகள் தாவித் திரியும். இத்தகைய காட்சி கொண்ட மலைநாட்டுக்கு உரியவன், தலைவன். அணிகலன்களை தாங்கியிருக்கும் அவன் மார்பு, என் மனத்தைக் கரைத்து அதனுள் நடக்கின்றது” என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

தோழி! என் மனத்துள் முற்றிலுமாய் நிறைந்திருக்கும் தலைவன் இன்னும் வரைவோடு வாராதிருப்பது ஏன்?

குறிப்பு

மலைநாட்டில் காட்டுப் பசுவும் மந்தியும் அங்கும் இங்கும் திரிகின்றன. அதுபோலத் தலைவன் மார்பு தலைவி நெஞ்சில் திரிவதாய்க் கூறும் குறிப்புப் பொருள் தோன்றுகிறது.

சொற்பொருள்

1. மரையா - காட்டுப்பசு; உகளும் - திரியும்; பயில் - நிறைந்த.
2. உரைசால் - சிறப்பித்துப் பேசப்படும்; மடமந்தி - இளமையான பெண் குரங்கு.
3. புரைதீர் - குற்றமற்ற; பூண் - அணிகலன்; ஏந்து - தாங்கிய; அகலம் - மார்பு.
4. என் நெஞ்சு உரையா வழங்கும். (உரையா - கரைத்து; வழங்கும் - நடக்கின்றது.)

தலைவி கூற்று

கைந்நிலை 7 **புல்லங்காடனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாய தலைமகள் தோழிக்குக் கூறுதல்.

கூற்று விளக்கம்

தலைவன், தலைவியை வரைந்துகொள்ளாமல் காலம் நீட்டித்தமையால் அவள் ஆற்றாள் ஆயினாள். அது கண்டு வருந்திய தோழியை நோக்கித் தலைவி கூறியது.

கல்வரை ஏறிக் கடுவன் கனிவாழை
எல்உறு போழ்தின் இனிய பழுங்கவுள்கொண்(டு)
ஒல்என ஓடும் மலைநாடன் தன்கேண்மை
சொல்லச் சொரியும் வளை.

தெளிவுரை

"*பாறைகளைக் கொண்ட மலையின்மீது ஆண்குரங்குகள் பகற்பொழுதில் ஏறி இனிய வாழைப்பழங்களைப் பறித்து உரித்துக் கன்னத்தில் அடக்கிக்கொண்டு விரைவாய் ஓடும். இத்தகைய காட்சி கொண்ட மலைநாட்டுக்கு உரியவனான*

தலைவனின் நட்புச்சிறப்பினைச் சொல்ல எண்ணிய அளவில், என் கைவளையல்கள் நெகிழ்ந்து விழுகின்றன" என்று தலைவி தலைவனை இயற்பழித்துக் கூறினாள்.

கருத்து

தோழி! என் கைவளையல் நெகிழுமாறு தலைவன் வரையாமல் பிரிந்துறைகின்றான்.

சொற்பொருள்

1. கல் வரை - பாறைகளைக் கொண்ட மலை; கடுவன் - ஆண்குரங்கு.
2. எல் - கதிரவன்; எல் உறுபோழ்து - பகற்பொழுது; கவுள் - கன்னம்.
3. ஒல் - ஒலிக்குறிப்பு; கேண்மை - நட்பு.
4. சொரியும் - நெகிழும்.

தலைவி கூற்று

நற்றிணை 272 **முக்கல் ஆசான் நல்வெள்ளையார்**

திணை : நெய்தல்

கூற்று

வரையாது நெடுங்காலம் வந்தொழுக ஆற்றாளாய தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் களவொழுக்கம் கொண்டு, வரைந்துகொள்ளாது காலத்தை நீட்டித்த நிலையில் தலைவி ஆற்றாது சொல்லியது.

கடல்அம் காக்கைச் செவ்வாய்ச் சேவல்,
படிவ மகளிர் கொடிகொய்து அழித்த
பொம்மல் அடும்பின் வெண்மணல் ஒருசிறை,
கடுஞ்சூல் வதிந்த காமர் பேடைக்கு,
இருஞ்சேற்று அயிரை தேரிய, தெண்கழிப்
பூவுடைக் குட்டம் துழவும் துறைவன்
நல்கா மையின், நசைபழு தாக,

பெருங்கை அற்றஎன் சிறுமை, அலர்வாய்
அம்பல் மூதூர் அலர்தந்து,
நோய்ஆ கின்(று)அது நோயினும் பெரிதே.

தெளிவுரை

நோன்பு மேற்கொண்ட மகளிர் கொடிகளைக் கொய்தலால் அழிவுற்ற தழைமிகுந்த அடும்பங் கொடிகள் பரந்த வெண்மணற் குவியலின் ஒரு பக்கத்தில், சூல் நிறைந்த கடற்காக்கைப்பேடை ஒன்று தங்கியிருந்தது. செவ்விய வாயினைக் கொண்ட அதன் சேவல் தன் விருப்பத்திற்குரிய பேடைக்கு உணவாய்க் கரிய சேற்றிலே உள்ள அயிரை மீனைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு வருவதற்காகத் தெளிந்த நீரைக் கொண்ட கழியில், பூக்கள் நிறைந்த ஆழமான நீர்ப்பகுதியில் துழாவியபடி இருக்கும் கடல் துறைக்கு உரியவன், நம் தலைவன். அவன் நமக்கு அருள் செய்யாததால் அவனுடன் இல்லறம் பேணும் நம் விருப்பம் பழுதாகிவிட்டது. அதனால் செயலிழந்து பெரிதும் வருந்தும் என் துன்பத்தை அலர் கூறும் இவ்வூரவர் அறிந்துகொண்டமை எனக்கு வருத்தம் தருகிறது. ஊரார் கூறும் அலர், அவரை நான் பிரிந்திருத்தலால் ஏற்படும் துன்பத்தினும் மிகுந்ததாயுள்ளது.

கருத்து

தோழி! தலைவன் வரைதற்குக் காலம் நீட்டியாது விரைவில் மணந்து கொண்டு ஊரில் எழுந்துள்ள பழிச்சொற்களைப் போக்க வேண்டும்.

விளக்கம்

கடற்கரை மணல்மேட்டில் தங்கியுள்ள சூல் கொண்ட காக்கைக்கு அதன் ஆண்காக்கை, கழியில் துழாவி, அயிரை மீனைப் பிடித்து வந்து உணவாய்க் கொடுக்கும் கடல்துறைத் தலைவனோடு கூடி இல்லறம் நடத்த விரும்பிய நம் எண்ணம் இன்னும் நிறைவேறவில்லை. ஊரில் வாழும் மக்கள் எம் உறவறிந்து பழி தூற்றுகின்றனர். பிரிதலினால் உண்டாகும் துயரைவிட இப்பழிச்சொற்களால் ஏற்படும் துயரம் மிகுந்த தாயுள்ளது.

உள்ளுறை

காக்கைச்சேவல் கடுஞ்சூலுடன் இருந்த தன் பேடைக்கு அயிரை மீனைத் தேடும் என்னும் உள்ளுறை, தலைவன் பொருளீட்டி வந்து, தலைவியின் பெற்றோருக்கு அளித்து அவளை மணந்து இன்புறுத்தல் வேண்டும் என்னும் பொருளைத் தருகிறது.

கருவுற்றுள்ள பேடைக்குக் கழியில் இரை தேடித் துழாவும் காக்கைச்சேவல் வாழும் துறைக்குத் தலைவனாய் இருந்தும், பெருவேட்கையுடன் இல்லத்தில் தங்கியிருக்கும் தலைவியின் பொருட்டு, வரைபொருள் தேடிவர முயலாது சோம்பியிருக் கிறான் என உள்ளுறைப் பொருளும் கொள்ளலாம்.

சொற்பொருள்

1. கடல் அம் காக்கை - கடற்காக்கை.
2. படிவ மகளிர் - நோன்பு மேற்கொண்ட மகளிர்.
3. பொம்மல் - தழை மிகுந்த; அடும்பு - அடும்பங்கொடி (படர்ந்த); ஒரு சிறை - ஒரு பக்கம்.
4. கடுஞ்சூல் - நிரம்பிய சூல்; வதிந்த - தங்கியிருந்த; காமர் - அழகிய.
5. இருஞ்சேறு - கரிய சேறு; அயிரை - அயிரை மீன்; தேரிய - தேடிப் பிடிப்பதற்கு; தெண்கழி - தெளிந்த நீரைக் கொண்ட கழி.
6. குட்டம் - ஆழம்; துழவும் - துழாவி இரை தேடும்.
7. நல்காமையின் - அருள் செய்யாததால்; நசை - (நம்) விருப்பம்; பழுதாக - பயனின்றிக் கெடுதலின்.
8. பெருங்கையற்ற - மிகவும் செயலற்று (வருந்தும்); என் சிறுமை - என் மெலிவை; அலர்வாய் - அலர் கூறும்.
9. அம்பல் மூதூர் - ஆரவாரத்தோடு பழிச்சொல் கூறும் இப்பழமையான ஊர்; அலர்தந்து - சொல்லும் அலர்.
10. நோயாகின்றது - (எனக்கு) வருத்தம் தருகிறது; நோயினும் பெரிது - அது நான் உற்ற வேட்கை நோயினும் மிக்கது.

தோழி கூற்று

நற்றிணை 125 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு நீட்டிப்ப ஆற்றாளாய தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் இரவுக்குறியில் திளைத்த தலைவன் வரைவு மேற்கொள்ளாது காலம் கடத்துதலைக் கண்ட தலைவி வருந்துகிறாள். அவள் வருத்தத்தினை அறிந்த தோழி, தலைவன் விரைவில் மணங் கொள்வான் எனத் தலைவிக்கு ஆறுதல் கூறியது.

'இரைதேர் எண்கின் பகுவாய் ஏற்றை
கொடுவரிப் புற்றம் வாய்ப்ப வாங்கி,
நல்அரா நடுங்க உரறி, கொல்லன்
ஊதுஉலைக் குருகின் உள்உயிர்த்து அகழும்,
நடுநாள் வருதல் அஞ்சுதும் யாம்'என,
வரைந்துவரல் இரக்குவம் ஆயின், நம்மனை
நல்நாள் வதுவை கூடி, நீடுஇன்று
நம்மொடு செல்வர்மன் தோழி! மெல்ல
வேங்கைக் கண்ணியர் எருதுஎறி களமர்
நிலம்கண் டன்ன அகன்கண் பாசறை,
மென்தினை நெடும்போர் புரிமார்
துஞ்சுகளிறு எடுப்பும்தம் பெருங்கல் நாட்டே.

தெளிவுரை

"*தலைவியே! 'இரையைத் தேடித் திரியும் அகன்ற வாயைக் கொண்ட ஆண்கரடி, வளைந்த மண்கோடுகளைக் கொண்ட கறையான் புற்றினைக் கண்டதும் அதனைப் பெயர்த்து, அப்புற்றிலிருக்கும் நல்லபாம்பு நடுங்குமாறு முழங்கும்; கொல்லன் உலைக்களத்துத் துருத்திபோலப் பெருமூச்சு விட்டு அகழ்ந்து, அங்குள்ள ஈசல்களை உறிஞ்சி உண்ணும். அத்தகைய கடுமையான வழியில் நள்ளிரவில் நீ வருவதை அறிந்து நாங்கள் அஞ்சுகிறோம்' என்று தலைவனிடம் கூறி, மணம் புரிந்து*

கொள்ளுமாறு வேண்டுவோம். அவ்வாறு இரந்து வேண்டினால், இனியும் நீட்டித்தலின்றி நம் மனையில் நல்ல நாளில் மணம் செய்துகொள்வான்.

"வேங்கைமலர்க் கண்ணிகளைச் சூடிய குறவர்கள், எருதுகளைக் கடாவிட்டு நெல்லடிக்கும் மருதநில உழவர் அமைத்த நெற்களம் போன்ற அகன்ற பாறையிடத்தில், தினையினைப் போரடிக்கும் பொருட்டு, தூங்குகின்ற யானைகளை வைகறையில் எழுப்பி விடுவர்.

"அத்தகைய காட்சியைக் கொண்டுள்ள மலைநாட்டுத் தலைவன், நம்மை மணந்துகொண்டதும் உடனே தன் இடத்திற்கு அழைத்துச் செல்வான்; இஃது உறுதி" எனக் கூறித் தோழி தலைவியை ஆற்றுவிக்கிறாள்.

கருத்து

தலைவியே! தலைவன் உன்னை விரைவில் மணந்து தன் இல்லத்திற்கு அழைத்துச் செல்வான்; ஆதலின், வருந்தாது ஆற்றியிரு.

விளக்கம்

"தலைவ! இரவில் கரடிகள் புற்றினை அகழ்ந்து ஈசல்களை உண்ணும் கொடிய வழிகளை நீ கடந்து வருவது எங்களுக்கு அச்சத்தினைத் தருகிறது; ஆதலால், விரைந்து வரைந்துகொள்ள வேண்டுமென்று கேட்டால், அவன் நம்மை நம் மனையில் திருமணம் செய்துகொள்வதோடு, உடனே தன் ஊருக்கும் அழைத்துச் செல்வான்; ஆதலின், நீ வருந்தாதே" எனத் தலைவியைத் தோழி தேற்றுகிறாள்.

உள்ளுறை

"தூங்கும் களிறுகளை எழுப்பிப் பணிகொள்வர், குறவர் என்னும் தொடர்மூலம், வரைந்து கொள்ளுதலில் கருத்தின்றி இருக்கும் தலைவனிடத்தில் அக்கருத்தினை உண்டாக்கி, மணமாகிய நற்பயனைப் பெறலாம்" எனத் தோழி கருதுகிறாள் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. எண்கு - கரடி; பகுவாய் - அகன்ற வாய்; ஏற்றை - ஆண்.

2. கொடு வரி - வளைந்த வரி பொருந்திய; புற்றம் - புற்று; வாய்ப்ப - காணப்பெற்றதால்; வாங்கி - (அதனைப்) பெயர்த்து.
3. நல் அரா - (அதனுள்ளே வாழும்) பெரிய பாம்பு; உரறி - முழங்கி.
4. குருகு - துருத்தியின் மூக்கு; உள்ளுயிர்த்து - பெருமூச்சு விட்டு; அகழும் - தோண்டும்.
6. வரைந்து வரல் - மணம் புரிந்துகொள்ள வருமாறு; இரக்குவம் ஆயின் - வேண்டுவோமானால்; நம் மனை - நம் இல்லத்தில்.
7. நல்நாள் - நல்ல நாளில்; வதுவை கூடி - திருமணம் செய்துகொண்டு; நீடின்று - நீட்டித்தலின்றி.
8. நம்மொடு செல்வர் - நம்மோடு அவர் இல்லத்திற்குச் செல்வார்.
9. வேங்கைக் கண்ணியர் - வேங்கைமலர்க் கண்ணிகளைச் சூடிய குறவர்கள்; எருது எறி - எருதுகளைக் கடாவிட்டு நெல்லடிக்கும்; களமர் - மருத நில உழவர்.
10. நிலம் கண்டு அன்ன - நெற்களம் போன்ற; அகன்கண் பாசறை - அகன்ற இடமுள்ள பாறை.
11. மென்தினை - மெல்லிய தினைக்கதிர்களை; நெடும்போர் புரிமார் - போரிட்டு அடிக்கும்பொருட்டு.
12. துஞ்சு களிறு - தூங்குகின்ற யானைகளை; எடுப்பும் - எழுப்பும்.

தோழி கூற்று

குறுந்தொகை 117 **குன்றியனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைந்துகொள்ளாமல் நெடுங்காலம் ஒழுகினனாக, அவ்வொழுக்கத்தால் ஏற்படும் அச்சத்தினும் அவன் வாராதிருப்பதால் ஏற்படும் துன்பம் பொறுத்துக்கொள்ளுதற்கு அரியது என்று தலைவியிடம் கூறியதன் வாயிலாய்த் தோழி வரைவின் இன்றியமையாமையைப் புலப்படுத்தியது.

மாரி ஆம்பல் அன்ன கொக்கின்
பார்வல் அஞ்சிய பருவரல் ஈர்ஞெண்டு
கண்டல் வேர்அளைச் செலீஇயர், அண்டர்
கயிறுஅரி எருத்தின், கதழும் துறைவன்
வாராது அமையினும் அமைக!
சிறியவும் உளஈண்டு, விலைஞர்கை வளையே.

தெளிவுரை

தலைவியே! மழைக்காலத்து ஆம்பல் மலர் போன்று தோற்றத்தைக் கொண்ட கொக்கின் பார்வையைக் கண்டு அஞ்சித் துன்பமுற்ற ஈர நண்டு, தாழையின் வேர்களுக்கு இடையேயுள்ள தன் வளைக்குள் செல்வதற்காக, இடையரால் பிணிக்கப்பட்ட கயிற்றை அறுத்துக் கொண்டு செல்லும் எருதைப்போல விரைந்து ஓடுகின்ற கடல் துறைக்குரியவன், நம் தலைவன். அவன் இங்கே வாராதிருந்தாலும் இருக்கட்டும். அவன் வாராமையால் உன் உடல் மெலிய, உன் கைகளில் முன்பு அணிந்திருந்த வளையல்கள் கழன்று விழ நேர்ந்தாலும், அம்மெலிவு புலப்படாமலிருக்க, சிறியனவான வளையல்களும் இங்கே விற்பாரிடத்திலே உள்ளன.

கருத்து

தலைவியே! நம் தலைவன் வரைந்துகொள்ளாமையால் உண்டான மெலிவை நாம் மறைத்து ஒழுகுவோம்.

விளக்கம்

தலைவன் வருகையால் அலர் எழுந்து நமக்கு இன்னல் விளைகிறது; வாராதிருந்தால் உடல் மெலிந்து வளையல் கழல்கின்றது. வளை கழன்றாலும் மெலிவு புலப்படாமலிருக்கச் சிறிய வளையல்களை வாங்கி அணிந்துகொள்ளலாம். அலர் எழாதிருக்க வேண்டுமென்றாலோ, தலைவன் உடனே தலைவியை மணந்துகொள்ள வேண்டும்.

இறைச்சி

கொக்கின் பார்வைக்கு அஞ்சிய நண்டு தன் வளையிடத்திலே தங்கும். இத்தொடர்மூலம், அலர் தூற்றும் ஊரார் பார்வைக்கு

அஞ்சி அவர் அறியுமுன் தலைவி தலைவன் இல்லம் புக வேண்டும் எனத் தோழி விரும்புகிறாள் என்னும் கருத்துப் பெறப்படுகிறது.

உவமை

கயிற்றை அறுத்துக்கொண்டு எருது விரைந்து ஓடுவதுபோல, நண்டு விரைந்து வளையை நோக்கி ஓடுகிறது.

சொற்பொருள்

1. மாரி ஆம்பல் - மழைக்காலத்து ஆம்பல் மலர்; அன்ன - போன்ற.
2. பார்வல் - பார்வையை; பருவரல் - துன்பங்கொண்ட; ஈர்ஞெண்டு - ஈரம் பொருந்திய நண்டு.
3. கண்டல் - தாழை; வேர்அளை - வேரில் உள்ள தன் வளைக்கு; செலீஇயர் - செல்வதற்காக; அண்டர் - இடையர்.
4. கயிறு அரி - கயிற்றினை அறுத்து; கதழும் - விரைந்து ஓடும்.
5. அமையினும் அமைக - இருப்பினும் இருக்க.
6. ஈண்டு - இங்கே; விலைஞர் - விற்போர்.

தலைவி கூற்று

நற்றிணை 347 **பெருங்குன்றூர் கிழார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரையாது நெடுங்காலம் வந்தொழுக ஆற்றாளாகிய தலைமகளைத் தோழி வற்புறுக்க மறுத்தது. (வற்புறுக்க - வற்புறுத்திக் கூறுதல்.)

கூற்று விளக்கம்

தலைவன் தன்னை மணந்துகொள்ளும் முயற்சியைத் தள்ளிக்கொண்டே செல்வதைக் கண்ட தலைவி மிகவும் கலங்கியிருந்தாள். அவளைத் தேற்று வதற்காகத் தோழி 'தலைவன், சொன்ன சொல் தவறாதவன்' என்று கூறி ஆற்றியிருக்குமாறு வற்புறுத்தத் தலைவி அதனை மறுத்துக் கூறியது.

முழங்குகடல் முகந்த கமஞ்சூல் மாமழை
மாதிரம் நனந்தலை புதையப் பாஅய்,
ஓங்குவரை மிளிர ஆட்டி, பாம்புஎறிபு,
வான்புகு தலைய குன்றம் முற்றி,
அழிதுளி தலைஇய பொழுதில், புலையன்
பேழ்வாய்த் தண்ணுமை இடம்தொட்டு அன்ன,
அருவி இழிதரும் பெருவரை நாடன்,
இன்னன் நிலையன்; பேர்அன் பினன்எனப்
பன்மாண் கூறும் பரிசிலர் நெடுமொழி
வேனில் தேரையின் அளிய,
காண விடுமோ தோழி!என் நலனே?

தெளிவுரை

முழங்கும் கடலிலிருந்து நீரை முகந்து நிறை சூலுற்ற கரு மேகங்கள், திசைகளெங்கும் மறையும்படி வானவெளி முழுதும் பரவும்; உயர்ந்த மலையுச்சிகள் புரண்டு விழுவதுபோல, பாம்புகள் தலைதெறித்து விழுமாறு இடிக்கும்; வானத்தை ஊடுருவிச்செல்லும் மலைகளைச் சூழ்ந்து படியும்; அவை மிகுதியான மழையினைப் பெய்தபொழுது, புலையன் அகன்ற வாயைக் கொண்ட தண்ணுமையின் இடப்பக்கத்தில் ஓங்கி அடிப்பது போன்று அருவி பெருமுழக்கத்துடன் வீழும். இத்தகைய மலை நாட்டிற்கு உரியவன், நம் தலைவன். இனியன், வாய்மையன், பேரன்பினன் எனப் பலவாறாய் அவன் சிறப்புகளைப் பலபட மாட்சிமையுடன் பரிசிலர் கூறும் புகழ் மொழிகள், வேனிற்காலத்தில் பெய்யும் மழைக்குக் கத்தும் தேரையின் ஒலிபோல விரும்பத்தக்கனவே; ஆயினும், தலைவனை நான் காண என் ஆற்றாமை என்னை விட்டு வைக்குமா? விடாது.

கருத்து

தோழி! தலைவன் வரைவை நீட்டிப்பது என் நலனை அழிக்காது விட்டுவைக்குமா?

விளக்கம்

தலைவன் வரையாது நீட்டித்தொழுகலால் தலைவி எய்திய வருத்தத்தைக் கண்ட தோழி, தலைவன் குணநலன்களை எடுத்தோதி, அவன் சொன்ன சொல் தவறாது வருவானாதலின்,

ஆற்றியிருக்க வேண்டுமெனத் தலைவியிடம் வற்புறுத்திக் கூறினாள். அவள் பேச்சில் அமைதி கொள்ளாத தலைவி, 'நீ மட்டுமன்று; அவனிடம் பரிசு பெற்றுத் திரும்பியவர்களும் உன்னைப் போலவே அவன் இனியன், வாய்மையன், பேரன்புள்ளவன் என மிகவும் பாராட்டிப் புகழ்கிறார்கள். அவர்கள் கூறுவது போன்றவனேயாயினும் அவன் வந்து என்னைக் காணும்வரை என் நலன் நிலைத்திராது' எனத் தன் ஆற்றாமையைப் புலப்படுத்தித் தலைவி கூறினாள்.

இறைச்சி

மலையிலே மழை பெய்த காலத்தில் புலையன் அடிக்கும் தண்ணுமையின் ஒலிபோல அருவி விழும் என்னும் தொடர் மூலம், தலைவன் வந்து தலையளி செய்து திரும்பியதும் எங்கும் அலர் எழுந்து ஒலிக்கிறது என்னும் கருத்துப் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. முகந்த - குடித்த; கமஞ்சூல் - நிறை சூலுற்ற; மாமழை - கருமேகங்கள்.
2. மாதிரம் - திசைகள்; நனந்தலை - அகன்ற இடம்; புதைய - மறையுமாறு; பாஅய் - பரந்து.
3. மிளிர - புரட்டி; வாட்டி - தாக்கி; பாம்பு எறிபு - பாம்புகள் தலைதெறித்து விழுமாறு இடிக்கும்.
4. வான்புகு தலைய - வானத்தில் ஊடுருவிச் செல்லும்; குன்றம் - மலை உச்சிகளை; முற்றி - சூழ்ந்து படிந்து.
5. அழிதுளி தலைஇய பொழுதில் - மிக்க மழையைப் பொழிந்த காலத்தில்.
6. பேழ்வாய் - அகன்ற வாயைக் கொண்ட; தண்ணுமை - தண்ணுமையின்; இடந்தொட்டன்ன - இடப்பக்கத்தில் ஓங்கி அடித்து எழுப்பும் ஓசையைப் போன்று.
7. அருவி இழிதரும் - அருவி பெருமுழக்கத்துடன் கீழிறங்கும்.
8. இன்னன் - இனியவன்; நிலையன் - வாய்மையுள்ளவன்.
9. பன்மாண் கூறும் - பலவாகப் புகழ்ந்து பேசும்; பரிசிலர் நெடுமொழி - பரிசிலர் கூறும் புகழ் மொழிகள்.
10. வேனில் தேரையின் - வேனிற்காலத்தில் பெய்யும் மழைக்குக் கத்தும் தேரையின் ஒலிபோல; அளிய - விரும்பத்தக்கனவாயினும்.
11. காணவிடுமோ - தலைவனைக் காண என் ஆற்றாமை விட்டு வைக்குமோ?

தோழி கூற்று

நற்றிணை 53 **நல்வேட்டனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு நீட்டிப்பத் தோழி சிறைப்புறமாகச் சொல்லியது.

கூற்று விளக்கம்

மணம் புரியாது காலம் நீட்டித்த தலைவன் சிறைப்புறமாய் நிற்கையில் அவன் மணம் புரிந்திட விரைய வேண்டும் எனும் கருத்தில், அவன் கேட்டு அறியுமாறு, தோழி தலைவியிடம் சொல்லியது.

யான்அஃது அஞ்சினென் கரப்பவும், தான்அஃது
அறிந்தனள் கொல்லோ? அருளினள் கொல்லோ?
எவன்கொல், தோழி அன்னை கண்ணியது?
'வான்உற நிவந்த பெருமலைக் கவாஅன்,
ஆர்கலி வானம் தலைஇ, நடுநாள்
கனைபெயல் பொழிந்தெனக் கானக் கல்யாற்று
முளிஇலை கழித்தன முகிழ்இண ரொடுவரும்
விருந்தின் தீம்நீர் மருந்தும் ஆகும்;
தண்ணென உண்டு, கண்ணின் நோக்கி,
முனியாது ஆடப் பெறின்இவள்
பனியும் தீர்குவள் செல்கஎன் றோளே!

தெளிவுரை

தலைவியே! நின் மேனியின் வாட்டத்திற்குக் காரணம் நீ தலைவனைப் பிரிந்திருத்தலால் உண்டான காமநோய்தான் என்று அன்னையிடம் கூறுவதற்கு அஞ்சியதால், அவள் பல முறை கேட்ட போதும் அதனை மறைத்தே வந்தேன். அவளோ, 'வானுற உயர்ந்த மலைப்பக்கத்தில் மேகம் இடியுடன் மழை பெய்யத் தொடங்கியுள்ளது. நள்ளிரவில் பெய்த பெருமழையால் காட்டாற்றில் பெருகிவரும் வெள்ளம், மரங்கள் உதிர்த்த சருகு களையும் பூங்கொத்துகளையும் அடித்துக்கொண்டு வருகின்றது. அந்தப் புதிய இனிய நீர் இவள் நோய் தீர்க்கும் மருந்தாகலாம். அதனால், அவ்வெள்ளத்தைக் கண்டு களித்தும், குளிர்ச்சி

யுண்டாகப் பருகியும், வெறுப்பின்றி நீராடியும் வந்தால் இவள் மேனி நடுக்கமும் தீரும். ஆதலால், அங்குச் செல்வீர்' என்றாள். அன்னை நமது களவொழுக்கத்தை அறிந்துதான் இவ்வாறு கூறினாளா? அன்றி அருளினால் கூறினாளா? அன்னையின் மனநிலை யாது என நம்மால் அறிந்துகொள்ள இயல வில்லையே!

கருத்து

தலைவியே! தாய், நம் நோய் தீரக் காட்டாற்றில் நீராடி வரக் கூறினாள். அவ்வாறு கூறியது, தாய் நம் களவொழுக்கத்தை அறிந்தா, அன்றி அறியாமலேயா என்பதறியேன்.

குறிப்பு

'இவளது வாட்டத்தை அன்னை அறிந்தனள். இனி இற்செறிப்பு நிகழும்; அதனாலே விரைந்து மணந்துகொள்' எனத் தலைவனிடம் தோழி அறிவித்தாள்.

'தலைவ! உன் நாட்டு மலையிலிருந்து வரும் நீரில் குளிக்கச் செல்லுமாறு கூறுவதால், அன்னை உன்பால் அன்புள்ளவளாய் இருக்கிறாள்; ஆதலின், நீ மணத்தொடு வரின் மறுக்காது இசைவும் தருவள்' என்பதையும் தோழி குறிப்பால் உணர்த்தினாள்.

சொற்பொருள்

1. யான் அஃது அஞ்சினென் - உன் நோய்க்கான காரணத்தைத் தாயிடம் கூற அஞ்சினேன்; கரப்பவும் - மறைக்கவும் செய்தேன்.
2. அறிந்தனள் கொல்லோ? - அறிந்து கூறினாளா?; அருளினள் கொல்லோ? - இன்றி அருளினால் கூறினாளோ?
3. அன்னை கண்ணியது எவன்கொல் – அவள் மனநிலை யாது என்பதை அறிய இயலவில்லை.
4. நிவந்த - உயர்ந்த; கவாஅன் - மலைப்பக்கம்.
5. ஆர்கலி வானம் - ஆரவாரமுள்ள வானம்; தலைஇ - பொருந்தி.
6. கனைபெயல் - மிகுமழை; கானக் கல்யாற்று - கல் எனும் ஒலி கொண்ட காட்டாற்றில்.
7. முளி இலை - உலர்ந்த சருகுகளையும்; முகிழ் இணரொடு வரும் - பூங்கொத்துகளையும் இழுத்து வரும்.

8. விருந்தின் தீம் நீர் - புதிய இனிய நீர்; மருந்தும் ஆகும் - இவள் நோய்க்கு மருந்தும் ஆகலாம்.
9. தண்ணென உண்டு - குளிர்ச்சியுண்டாகப் பருகி, கண்ணின் நோக்கி - கண்டு களித்து.
10. முனியாது - வெறுப்பின்றி; ஆடப்பெறின் - நீராடினால்.
11. பனியும் தீர்குவள் - இவள் மேனி நடுக்கமும் தீரும்.

தோழி கூற்று

நற்றிணை 135 **கதப்பிள்ளையார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவு நீட்டிப்ப, 'அலர் ஆம்' எனக் கவன்ற தோழி, (தலைமகன்) சிறைப் புறமாகச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் மணம் புரிந்துகொள்ளாது நீட்டிப்பதால் ஊரார் பழி கூறுவர் எனக் கருதிய தோழி, தலைவன் சிறைப்புறத்தானாக, அவன் கேட்டு விரைவில் மணம் புரிதல் வேண்டும் என்னும் எண்ணம் கொண்டவளாய்த் தலைவியிடம், 'தலைவனோடு பழகாதபோது இவ்வூர் இனிதாயிருந்தது; இப்போதோ, அவன் பழகிப் பிரிந்திருப்பதால் அவனில்லாமல் வருத்தம் தருவதாய் உள்ளது' என்று கூறியது.

தூங்கல் ஓலை ஓங்குமடற் பெண்ணை
மாஅரை புதைத்த மணல்மலி முன்றில்,
வரையாத் தாரம் வருவிருந்து அயரும்
தண்குடி வாழ்நர் அம்குடிச் சீறூர்
இனிதுமன்று அம்ம தானே; பனிபடு
பல்சுரம் உழந்த நல்கூர் பரிய,
முழங்குதிரைப் புதுமணல் அழுந்தக் கொட்கும்
வால்உளைப் பொலிந்த, புரவித்
தேரோர் நம்மொடு நகாஅ ஊங்கே.

தெளிவுரை

தொங்கும் ஓலையையும் நீண்ட மடலையும் கொண்ட பனை மரத்தின் கரிய அடிமரம் புதையும்படி மூடப்பட்டிருக்கும் மணல் பரந்த முற்றம்; அம்முற்றத்தே அளவிறந்த உணவுப்பொருள்களை வரும் விருந்தினர்க்குப் பகுத்துக் கொடுத்து வாழும் இயல்புள்ள மக்கள்; இத்தகைய குடிமக்கள் நிறைந்த இச்சிற்றூர் நமக்கு முன்பு இனிதாய் இருந்தது.

கடத்தற்கரிய நிலப்பகுதிகளைக் கடந்து வந்ததனால் வருத்த முற்ற நடையினையும், வெள்ளிய பிடரிமயிரால் பொலிவு பெற்றனவுமான குதிரைகள் பூட்டப்பெற்றிருந்த தேரின் சக்கரம் புதுமணலிடத்தே அழுந்திச் செல்ல இயலாது சுழலும். இத்தகைய தேரில் வரும் தலைவனைக் கண்டு, கூடி மகிழும் நிலை இல்லாத இப்போது இந்த ஊர் இனியதாய் இல்லை.

கருத்து

தலைவியே! முன்பு இனியதாய் இருந்த சிற்றூர், தலைவன் அருகே இருந்தும் வரைவு நீட்டிப்பதால் இப்போது இனிமையற்றதாய் உள்ளது.

குறிப்பு

தலைவனொடு கூடி மகிழா முன்பு உறைதற்கு மிகவும் இனியதா யிருந்தது. இச்சிற்றூர். இப்போது தலைவனோடு நாம் நட்புக்கொண்டதால் அலருரைக்கும் ஊராய் நம்மை மிகவும் வருத்துவதாயுள்ளது.

ஊரவரின் குடிப்பெருமை கூறியதன் வாயிலாய்த் தானும் அவ்வண்ணம் மணம் புரிந்து இல்லறம் பேணி விருந்தோம்ப வேண்டும் என்று தலைவி கொண்ட வேட்கை உணர்த்தப்பெற்றுள்ளது.

வழியில் புதுமணல் பரந்திருந்தமை அறியாது செலுத்தியதால் கால்கள் புதையுண்டு குதிரைகள் வருந்துகின்றன. இத்தொடர்மூலம், தலைவனோடு கொண்ட காதல் தொடர்பினை அறியாமல், தலைவிபால் தோன்றிய வேறுபாடு கண்டு பெற்றோர் உண்மை உணராது தலைவியை இற்செறித்து வருத்துகின்றனர் என்னும் கருத்து வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. தூங்கல் - தொங்குகின்ற; ஓங்கு - நீண்ட; பெண்ணை - பனைமரம்.

2. மாஅரை - கரிய அடிமரம்; மணல்மலி - மணல் மிகுந்த.
3. வரையா - அளவுபடாத; தாரம் - உணவுப்பொருள்; அயரும் - பகுத்துக் கொடுக்கும்.
4. தண்குடி - குளிர்ந்த தன்மை பொருந்திய மனைகளில்.
5. பனிபடு - குளிர்ச்சி பொருந்திய.
6. பல்சுரம் - பலவாய காட்டுவழி; உழத்தல் - வருந்துதல்; நல்கூர் பரிய - வலி குன்றிச் செல்லவியலாத.
7. அழுந்த - புதைந்து; கொட்கும் - சுழலும்.
8. வால் உளை - வெண்மையான பிடரி மயிர்; பொலிந்த - அழகு பொருந்திய; புரவி - குதிரை.
9. தேரோர் - தேர் ஊர்ந்து வரும் தலைவர்; நகாஅ ஊங்கே - கூடி மகிழ்தற்கு முன்பு.

தோழி கூற்று

திருக்குறள் 1147 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

வரைவுநீட ஆற்றாளாய தலைமகளைத் தலைமகன் சிறைப் புறத்தானாதல் அறிந்த தோழி ஊரவர் அலரும் அன்னை கடுஞ்சொல்லும் நோக்கி ஆற்றல் வேண்டும் எனச் சொல்லெடுப்பியவழி அவள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் களவொழுக்கத்தையே விரும்பி வரைவு மேற்கொள்ள முயலாதவனாய் ஒழுகினான். அவன் சிறைப்புறத்தானாய் இருப்பதை அறிந்த தோழி, "தலைவனொடு நீ கொண்டுள்ள காதலால் ஊரார் பழிச்சொல் பேசுகின்றனர்; அன்னை கடுஞ்சொல் கூறுகிறாள்; ஆதலால், நீ உன் காதல் வெளிப்படாதவாறு காத்திருத்தல் வேண்டும்" என்று, தலைவியிடம் தலைவன் கேட்டறியும் வகையில் கூறினாள்.

ஊரவர் கௌவை எருஆக அன்னைசொல்
நீர்ஆக நீளும்இந் நோய்.

தெளிவுரை

ஊராரின் பழிச்சொல் எருவாகவும், அது கேட்டு அன்னை கூறும் கடுஞ்சொற்கள் நீராகவும் பயன்பட்டுத் தலைவியின் காமநோயாகிய பயிர் செழித்து வளர்கிறது.

கருத்து

ஊரார் பழிச்சொல்லும் அன்னையின் கடுஞ்சொல்லும் தலைவியின் காதலைக் குறைப்பதற்கு மாறாக வளர்க்கவே செய்கின்றன.

விளக்கம்

காதலன் வரைந்து கொள்வதே இந்நோயை நீக்குதற்குள்ள ஒரே வழி. அதைக் காதலன் உடனே மேற்கொள்ள வேண்டும் என்பதைத் தோழி தலைவனுக்கு உணர்த்துகிறாள்.

குறிப்பு

அலரை எருவாயும் அன்னை சொல்லை நீராயும் உருவகப்படுத்திய ஆசிரியர், 'காமநோயைப்' பயிராய் உருவகம் செய்யாது விடுத்தனர். எனவே, இஃது 'ஏகதேச உருவகம்' என்னும் அணியின்பாற்படும்.

சொற்பொருள்

2. இந்நோய் - இக்காமநோயாகிய (பயிர்).
1. ஊரவர் கௌவை - ஊராரின் பழிச்சொல்; எருஆக - எருவாயும்; அன்னை சொல் - அன்னையின் கடுஞ்சொற்கள்.
2. நீர் ஆக - நீராயும்; நீளும் - (கொண்டு நன்கு) வளர்கிறது.

தோழி கூற்று

திருக்குறள் 1148 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

வரைவுநீட ஆற்றாளாய தலைமகளைத் தலைமகன் சிறைப்புறத்தானாதல் அறிந்த தோழி ஊரவர் அலரும் அன்னை கடுஞ்சொல்லும் நோக்கி ஆற்றல் வேண்டும் எனச் சொல்லெடுப்பியவழி அவள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் களவொழுக்கத்தையே விரும்பி, வரைவு மேற்கொள்ள முயலாதவனாய் ஒழுகினான். அவன் சிறைப்புறத்தானாய் இருப்பதை அறிந்த தோழி, "தலைவனொடு நீ கொண்டுள்ள காதலால் ஊரார் பழிச்சொல் பேசுகின்றனர்; அன்னை கடுஞ்சொல் கூறுகிறாள்; ஆதலால், நீ உன் காதல் வெளிப்படாதவாறு காத்திருத்தல் வேண்டும்" என்று, தலைவியிடம் தலைவன் கேட்டறியும் வகையில் கூறினாள்.

நெய்யால் எரிநுதுப்பேம் என்(று)அற்றால் கௌவையால்
காமம் நுதுப்பேம் எனல்.

தெளிவுரை

பழிதூற்றிப் பேசுதல் என்னும் அலரால், காதலுணர்வை அவித்துவிடுவோம் என்று ஊரார் எண்ணுவதானது, எரிகின்ற நெருப்பை நெய்யால் அவித்துவிடுவோம் என்பதற்கு ஒப்பாகும்.

கருத்து

அலரால் காமத்தை அடக்கிவிட இயலாது.

விளக்கம்

எரிகின்ற தீயில் நெய்யை ஊற்றினால் நெய் கொழுந்துவிட்டு எரியுமே தவிர, அணையாது. அதுபோல், அலர் கூறுவதால் காமம் மிகுமே தவிரக் குறையாது.

குறிப்பு

அலரால் காமம் மிகுதியாகும்.

சொற்பொருள்

1. கெளவையால் - பழிச்சொல் பேசுதலால்.
2. காமம் நுதுப்பேம் - காமத்தீயை அணைப்போம்; எனல் - என்று கூறுதல்.
1. நெய்யால் எரிநுதுப்பேம் - நெய்யால் எரியும் நெருப்பை அணைப்போம்; என்று அற்று - என்பதற்கு ஒப்பாம்.

தலைவி கூற்று

கலித்தொகை 42 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

முன்பு பெற்றவழி மலிந்ததனைப் பின்பு பிரிந்தவழிக் கலங்கிக் கூறியது. என்னை? தலைமகன் அருமை செய்து அயர்த்தவழி தோழி தலைமகளை ஆற்றுவித்தற் பொருட்டுத் தலைமகனை இயற்பழிப்ப, தலைமகள் இயற்பட மொழிந்ததனைச் சிறைப்புறமாகக் கேட்டுத் தலைமகன், முன் ஒருகால் வந்து சிறைப்புறம் சாரத் தான் ஆற்றினமை குறித்துப் பின் ஒருகால் அவ்வாறு பாட, அவன் சிறைப்புறம் சாராமையின், கலங்கி நெஞ்சொடு கூறியது ஆகலின்.

கூற்று விளக்கம்

களவில் முன்பு ஒருமுறை தலைவன் தலைவியைப் பிரிந்து, சில நாள் வாராதிருந்தான். அவ்வமயம், தோழி தலைவியை வருந்தாமலிருக்கச் செய்வதற்காகத் தலைவனது செயலைப் பழித்து வள்ளைப் பாடல் பாடினாள். தலைவி அதை மறுத்து அவன் குற்றமற்றவன் என்று பாடினாள். மறைவாக நின்று இதைக் கேட்ட தலைவன், தலைவியின் முதுகுப்புறமாக நின்று, அவளை அணைத்தான். அவள் அதனால் துயரம் தீர்த்தாள். பின்னரும் அவன் அவ்வாறு பிரிந்தான். தலைவியும் தோழியும் முன்புபோலப் பாடியும், அவன் வரவோ தலைவியை அணைக்கவோ இல்லை. தலைவி அதனால் மனங்கலங்கிக் கூறுகின்றாள்.

வள்ளைப்பாட்டுப் பாடத் தோழி
அழைக்கத் தலைவி இசைதல்

மறங்கொள் இரும்புலித் தொல்முரண் தொலைத்த
முறஞ்செவி வாரணம் முன்குளகு அருந்திக்

கறங்குவெள் அருவி ஒலின் துஞ்சும்
பிறங்குஇருஞ் சோலை நன்மலை நாடன்
மறந்தான்; மறக்க,இனி; எல்லா! நமக்குச்
சிறந்தன நாம்நற்கு அறிந்தனம், ஆயின்;அவன்திறம்,
கொல்யானைக் கோட்டால் வெதிர்நெல் குறுவாம்நாம்
வள்ளை அகவுவம், வா' இகுளை!நாம்
வள்ளை அகவுவம் வா.

தோழி இயற்பழித்தல்

காணிய வா—வாழி! தோழி— வரைத்தாழ்பு
வாள்நிறம் கொண்ட அருவித்தே, நம்அருளா
நாண்இலி நாட்டு மலை.

தலைவி இயற்பட மொழிதல்

ஆர்வுற்றார் நெஞ்சம் அழிய விடுவானோ
ஓர்வுற்று ஒருதிறம் ஒல்காத நேர்கோல்
அறம்புரி நெஞ்சத் தவன்.

தோழி

தண்ணறும் கோங்கம் மலர்ந்த வரையெல்லாம்
பொன்அணி யானைபோல் தோன்றுமே—நம்அருளாக்
கொன்னாளன் நாட்டு மலை.

தலைவி

கூருநோய் ஏய்ப்ப விடுவானோ? தன்மலை
நீரினும் சாயல் உடையன்; நயந்தோர்க்குத்
தேர்ஈயும் வண்கை யவன்.

தோழி

வரைமிசை மேல்தொடுத்த நெய்க்கண் இறாஅல்
மழைநுழை திங்கள்போல் தோன்றும்— இழைநெகிழ
எவ்வம் உறீஇயினான் குன்று.

தலைவி

எஞ்சாது, எல்லா! கொடுமை நுவலாதி—
அஞ்சுவது அஞ்சா அறனிலி அல்லன்;என்
நெஞ்சம் பிணிக்கொண் டவன்.

என்றுயாம் பாட, மறைநின்று கேட்டனன்
தாழ்இருங் கூந்தல்என் தோழியைக் கைகவியாச்

சாயல்இன் மார்பன் சிறுபுறம் சார்தர,
ஞாயிற்று முன்னர் இருள்போல மாய்ந்தது,என்
ஆயிழை மேனிப் பசப்பு.

தெளிவுரை

வள்ளைப்பாட்டுப் பாடத் தொடங்கியதும் தோழி முதலில் பாடுகிறாள்.

"தலைவி! வீரம் மிக்க பெரிய புலியுடன் பல நாள்களாகக் கொண்டிருந்த பகையைத் தீர்த்துக் கொண்ட, முறம் போன்ற காதினைக் கொண்ட யானை, தன்முன் இருந்த இலையுணவைத் தின்று, அருவியில் நீர் பருகி அதன் ஓசையைக் கேட்ட வண்ணம் தூங்கும். இப்படிப்பட்ட சோலைகளைக் கொண்ட நல்ல மலைநாடன், தலைவன்; அவன் இப்பொழுது நம்மை மறந்துவிட்டான்; அவன் மறந்தால் மறக்கட்டும். ஆனால் தலைவி! அவனே நமக்கு இன்றியமையாதவன் என்பதை நாம் நன்றாக அறிந்திருக்கிறோம். நாம் அறிந்ததைப் புலப்படுத்திக் கொள்ளும் வகையில் யானைத் தந்தத்தால் மூங்கில் நெல்லைக் குத்திக் கொண்டே நாம் அவனுடைய கொடுமைத் தன்மையை வள்ளைப் பாட்டாகப் பாடுவோம் வா" என்றாள் தோழி.

இதற்குத் தலைவி, "தோழி! நீ கூறியதுபோல அல்லாமல் அவனது நல்லியல்பை நாம் வள்ளைப்பாட்டாகப் பாடுவோம் வா!" என்றாள்.

தோழி இயற்பழித்தல்

தலைவி! வாழ்க! நமக்கு அருள் செய்யாதவனும், கொடுமைக்கு நாணாதவனும் ஆகிய தலைவனுடைய நாட்டின் மலையாக இருந்தும், அதன் சாரலிலே அருவி ஒளிபொருந்திய நிறத்தோடு வீழ்கிறதே! அஃது எவ்வாறு? காரணத்தை ஆராய்வோம் வா!

தலைவி இயற்பட மொழிதல்

ஒரு பக்கம் சாயாது நடுநிற்கும் துலாக்கோல் போல், ஆராய்தல் பொருந்தி, அறத்தையே செய்யும் நெஞ்சத்தைக்

கொண்டவன், தலைவன்; அவன் தன்னிடத்து ஆர்வம் கொண்டவர்களின் மனம் அழியும்படி விடுவானோ? மாட்டான்.

தோழி

நமக்குக் கருணை காட்டாமல், இல்லறத்தின் பயனைத் துய்க்காமல் வீணே காலம் கழிப்பவனாகத் தலைவன் இருக்கிறான்; இருந்தும், அவன் நாட்டு மலையில் குளிர்ச்சி பொருந்திய, நன்மணங்கொண்ட கோங்கமலர்கள் பூத்து, பக்க மலையெல்லாம் பொன்னால் செய்த மாலைகளை அணிந்த யானைகள் போலத் தோன்றுகின்றனவே! இதன் காரணம் யாதோ? எனக் கூறித் தோழி இயற்பழிக்கிறாள்.

தலைவி

தன்னிடம் பொருள் பெறத் தன்னை விரும்பி வருபவர்கட்குத் தேரைக் கொடுக்கும் வள்ளன்மை மிக்கவன், தலைவன்; சுனை நீரைக் காட்டிலும் மென்மை கொண்டவன்; ஆதலால், நம்மை மணந்து கொள்ளாமல் துன்பப்படுமாறு விடுவானா? விடமாட்டான், என மறுமொழி உரைத்துத் தலைவி இயற்பட மொழிகிறாள்.

தோழி

பிரிவைத் தாங்க முடியாமல், நாம் அணிந்துள்ள நகைகள் கழன்று விழும்படியாக நம்மை மெலிவித்தவனுடைய குன்றாக இருந்தும், அதன் பக்க மலையில் உள்ள தேன் அடை மேகத் தினுள் நுழைந்துவரும் சந்திரனைப் போலத் தோன்றுகிறதே! இதற்குக் காரணம் என்ன? (எனத் தோழி தொடர்ந்து இயற் பழித்துப் பாடியதைக் கேட்டுத் தலைவி மனம் பொறாதவளாய் இயற்பட மொழிகிறாள்.)

தலைவி

தோழி! இடைவிடாமல் அவனுடைய கொடுமைகளைக் கூறிக் கொண்டிராதே! தன் அன்பால் என் மனத்தை வயப்படுத்திக் கொண்ட தலைவன், பிறர் அஞ்சும் கொடுந் தொழிலுக்கு அஞ்சாத அறம் கெட்டவன் அல்லன்.

(முன்பு இவ்வாறு நாம் பாட, தனது மென்மைப் பண்பால் இனிய மார்பினைக் கொண்ட தலைவன் மறைவாக நின்று அதனைக் கேட்டான். கேட்டவன், தோழியிடம் தன் வருகையைக் கூற வேண்டாமெனக் கைகுவித்துக் குறிப்புக் காட்டி என் முதுகுப்புறமாக நின்று தழுவ, என் உடம்பில் இருந்த பசலை சூரியன் முன் நின்ற இருள்போல மறைந்தது. இப்பொழுதும் அன்று போலவே பாடியிருக்கின்றோம். ஆனால் அவன் முன்னைப்போல் வாராமையால் என் உடலில் பசலை மறையவில்லை என்று பழைய நிகழ்ச்சியை நினைத்தபடி தலைவி தனக்குள் கலக்கத்தோடு கூறிக் கொண்டாள்.)

குறிப்பு

புலிப் பகையைத் தொலைத்து, தனக்கினிய இலையுணவை உண்டு, அருவியின் இனிய ஓசை கேட்டு யானை தூங்கும் என்றது, தலைவன் தனக்குத் தடையாயிருந்த அவளுடைய சுற்றத்தினர் ஊராரைத் தவிர்த்து, தலைவியிடம் அளவளாவித் தான் பெற்ற இன்பக் களிப்பிலே தான் செய்தற்குரியதை மறந்திருக்கிறான் என்று தோழி இயற்பழிக்கிறாள்.

நமக்கு அருளாதவன் நாட்டு மலையிலே அருவி வளமாக இருக்கிறதே, அஃது எவ்வாறு? எனத் தோழி வினவுவதன் விளக்கம்:

அருளற்றவர் ஊரில் மழை பெய்தலோ, அருவி வளம் பெறுதலோ இல்லை. ஆயின் தலைவன் மலையில் இந்த முரண் தோன்றுகிறதே - இஃது என்ன வியப்பு; எனத் தோழி இயற்பழிக்கிறாள். சொல் தரும் பொருள் தலைவனைப் பழிப்பதுபோலத் தோன்றினாலும், 'அவன் மலையில் அருவி வளம் பெற்றிருப்பதால் அவன் அருளுடையவனே!' என்ற இறைச்சிப் பொருளும் தோன்றுகிறது.

இவ்வாறே தொடர்ந்து, தலைவி தோழி ஆகியோரின் கூற்றுகளில் வரும் இயற்கைக் காட்சிகளின் குறிப்புப் பொருள்களை உய்த்துணரலாம்.

சொற்பொருள்

1. மறம் - வீரம்; இரும்புலி - பெரிய புலி; முரண் - பகைமை.
2. வாரணம் - யானை; குளகு - தழை.
3. கறங்குதல் - ஒலித்தல்; துஞ்சும் - தூங்கும்.
4. பிறங்கு - வளரும்; இரும் - பெரிய.

5. எல்லா - தோழி; மறந்தான் - நம்மை மறந்து போனான்; இனி மறக்க - இனியும் மறக்கட்டும்.
6. சிறந்தன - பெருமை தரக்கூடியவற்றை; நற்கு - நன்கு; திறம் - தன்மை.
7. வெதிர் நெல் - மலை நெல்; குறுவாம் - குத்தியபடி.
8. வள்ளை - வள்ளைப் பாட்டினை; அகவுவம் - பாடுவோம்; இகுளை - தோழி.
10. வரைத்தாழ்பு - மலைச்சாரல்.
11. வாள் நிறம் - வெண்மை நிறம்; அருவித்தே - அருவி உடையதாய் இருக்கிறதே!
12. நாணிலி - நாணமில்லாதவன்.
13. ஆர்வுற்றார் - தன்னிடம் ஆர்வம் கொண்டவர்.
14. ஓர்வுற்று - ஆராய்ந்து; ஒருதிறம் - ஒரு பக்கம்; ஒல்காத - சாயாத; நேர்கோல் - நடு நிற்கும் கோல்.
16. கோங்கம் - கோங்க மரம்; வரை - மலை.
18. கொன்னாளன் - வீணன்.
19. கூருநோய் - மிகுகின்ற நோய்; ஏய்ப்ப - பொருந்த.
20. சாயல் - மென்மை; நயந்தோர்க்கு - தன்னை விரும்பி வந்தவர்க்கு.
21. ஈயும் - கொடுக்கும்; வண்கை - வள்ளல் தன்மை.
22. தொடுத்த - உண்டாக்கிய; நெய்க்கண் - தேனுடைய; இறாஅல் - தேனடை.
23. மழை நுழை - மேகத்தினுள் நுழைந்து வரும்; இழை நெகிழ - அணிகலன்கள் நெகிழும்படி; எவ்வம் - துன்பம்; உறீஇயினான் - உண்டாக்கியவன்.
25. எஞ்சாது - ஓயாமல்; நுவலாதி - கூறிக் கொண்டிராதே.
26. அறனிலி -: அறம் இல்லாதவன்.
27. பிணிக் கொண்டவன் - கொள்ளை கொண்டவன்.
28. மறை நின்று - மறைந்து.
29. தாழ் இருங்கூந்தல் - முதுகில் தாழ்ந்து கிடக்கும் கரிய கூந்தல்; கைகவியா - (தன் செயல் எதுவும் தெரியக் கூடாது என்று) சைகை மூலம் அறிவித்து.
30. சிறுபுறம் - முதுகு, பிடரி; சார்தர - சேர்ந்து நிற்க.
31. மாய்ந்தது - நீங்கியது.
32. பசப்பு - பசலை நோய்.

தோழி கூற்று

கலித்தொகை 43 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு நீட ஆற்றாளாயினவிடத்துத் தோழி தானும் தலைமகளும் வள்ளைப் பாடலுள் முருகனைப் பாடுவார்போல, இருவர்க்கும் ஏற்பத் தலைமகனைப் பாடத் தலைமகள் ஆற்றினமை, தோழி தன்னுள்ளே கூறுவாளாய்த் தலைமகன் சிறைப்புறமாகக் கூறியது.

கூற்று விளக்கம்

திருமணம் முடிவு செய்யப்படாமல் நீட்டித்தது. அதனால் தலைவி பொறுக்கலாற்றாதவள் ஆனாள். அந்நிலையில் அவளும் தோழியும் முருகனைப் புகழ்ந்து வள்ளைப் பாட்டுப் பாடுபவரைப் போல, முருகனுக்கும் தலைவனுக்கும் பொருந்துமாறு பாட, தலைவியின் துயரம் தணிந்தது. இதனைத் தோழி தனக்குத்தானே கூறிக் கொள்வதுபோல அங்கு மறைந்து நின்ற தலைவனும் கேட்குமாறு கூறியது.

தோழி வள்ளைப் பாட்டுப் பாடத் தலைவியை அழைத்தல்

வேங்கை தொலைத்த வெறிபொறி வாரணத்து
ஏந்து மருப்பின் இனவண்டு இமிர்புஊதும்
சாந்த மரத்தின் இயன்ற உலக்கையால்
ஐவன வெண்நெல் அறைஉரலுள் பெய்து,இருவாம்
ஐயனை ஏத்துவாம் போல, அணிபெற்ற
மைபடு சென்னிப் பயமலை நாடனைத்
தையலாய்! பாடுவாம், நாம்;

தோழி

தகையவர் கைச்செறித்த தாள்போலக் காந்தள்
முகையின்மேல் தும்பி இருக்கும் பகை,எனின்
கூற்றம் வரினும் தொலையான்,தன் நட்டார்க்குத்
தோற்றலை நாணாதோன் குன்று;

தலைவியைப் பாடுமாறு தோழி வேண்டுதல்

வெருள்புஉடன் நோக்கி, வியல்அறை ஊகம்
இருள்தூங்கு இறுவரை ஊர்புஇழிபு ஆடும்

வருடைமான் குழவிய வளமலை நாடனைத்
தெருளத் தெரியிழாய்! நீஒன்று பாடித்தை;

தலைவி

நுண்பொறி மான்செவி போல, வெதிர்முளைக்
கண்பொதி பாளை கழன்றுஉகும் பண்பிற்றே
மாறுகொண்டு ஆற்றார் எனினும், பிறர்குற்றம்
கூறுதல் தேற்றாதோன் குன்று;

தோழி

புணர்நிலை வளகின் குளகுஅமர்ந்து உண்ட
புணர்மருப்பு எழில்கொண்ட வரைபுரை செலவின்
வயங்குஎழில் யானைப் பயமலை நாடனை
மணம்நாறு கதுப்பினாய் மறுத்துஒன்று பாடித்தை;

தலைவி

கடுங்கண் உழுவை அடிபோல வாழைக்
கொடுங்காய் குலைதொறூஉம் தூங்கும் இடும்பையால்
இன்மை உரைத்தார்க்கு அதுநிறைக்கல் ஆற்றாக்கால்
தன்மெய் துறப்பான் மலை

என ஆங்கு;

தோழி

கூடி அவர் திறம்பாட, என் தோழிக்கு
வாடிய மென்தோளும் வீங்கின
ஆடுஅமை வெற்பன் அளித்தக்கால் போன்றே.

தெளிவுரை

தோழி : (தலைவியை நோக்கி) "தையலாய்! புலியை வென்ற மதங்கொண்ட புகர்நிறப் புள்ளிகளைக் கொண்ட யானையின் கொம்புகளான தந்தங்களாலும், வண்டினம் ஒலித்துக் கொண்டே தேன் உண்ணும் சந்தன மரங்களாலும் செய்யப்பட்ட உலக்கைகளைக் கையிலேந்துவோம்; ஐவனமென்னும் நெல்லை, மலைப்பாறையில் செதுக்கப்பட்ட உரலிலிட்டுக் குத்துவோம்; அப்பொழுது, முருகனைப் போற்றிப் பாடுவதுபோல, எழில்கொண்ட மேகம் தோன்றும் உச்சியைக் கொண்ட பயன்தரும் மலைக்கு உரியவனான நம் தலைவனைப் புகழ்ந்து

வள்ளைப் பாட்டுப் பாடுவோம் வா" என்று சொல்லி அழைத்தாள்.

தலைவி

தோழி பாடியதைக் கேட்ட தலைவி "அவனுடைய மலையில் காந்தள் மொட்டின் மேல் வண்டு அமர்ந்து விளங்கும் காட்சி, தகைசான்ற பெண்கள் கையில் கடகம் அணிந்திருப்பதைப் போன்று விளங்கும். அவனைப் பகைத்து வருபவன் எமனே எனினும் அஞ்சாதவன்; ஆனால் நட்புக் கொண்டு வருபவரிடம் தோற்றுப் போவதற்கும் வெட்கப்பட மாட்டான்" என்று பாடினாள்.

(வண்டு மொட்டின் மேல் இருப்பது, அம்மொட்டு மலர்ந்ததும் தேன் உண்பதற்காக என்று கொண்டு, தலைவியின் சுற்றத்தினர் உடன்பட்டதும் தலைவன் மணந்து கொள்வான் என்ற உள்ளுறை உவமத்தை உணரலாம்.)

தோழி

தலைவி பாடியதைக் கேட்ட தோழி தலைவியை நோக்கி, "ஆராய்ந்த அணிகளை அணிந்தவளே! அவனுடைய பெரிய மலையின் சரிவான பக்கங்களில் ஏறியும் இறங்கியும் விளையாடிக் கொண்டிருக்கும் வருடை மான் குட்டிகள், அகன்ற பாறையில் காணப்படும் கருங்குரங்குகளைக் கண்டு அஞ்சி ஓடுகின்றன. அத்தகைய வளமலை நாடனைப் புகழ்ந்து ஒரு பாடலைப் பாடு" என்று கேட்டுக் கொண்டாள்.

(வருடை மான் கருங்குரங்குக்கு அஞ்சத் தேவையில்லை; அதுபோலத் தலைவன் தன் சுற்றத்துக்கும் அஞ்சத் தேவையில்லை; விரைவில் மணம் பேச வரவேண்டும் என்பது உள்ளுறை.)

தலைவி

தோழி கேட்டுக் கொண்டதற்கிணங்க, "பகைமை கொண்டு துன்பங்களைக் கொடுப்பதைப் பொறுக்க மாட்டாத பண்புடையவன் எனினும், பிறரைக் குறைவாகப் பேசும் இயல்பு இல்லாதவன். அவனது மலையில் வாழும் புள்ளிமான்களின் செவியைப் போன்ற பாளை, மூங்கில் முளையின் கணுவை

மூடிநின்றது. அந்த மென்மை மிகுந்த தோல்போன்ற பாளை கழன்று விழும் நிலையில் உள்ளது" என்ற கருத்துள்ள பாடலைத் தலைவி பாடினாள்.

(தலைவி பாட்டில் அமைந்துள்ள உள்ளுறை நுட்பமானது. மூங்கிலில் முளைத்த கணுக்களைக் காத்திடவே அவற்றைப் பாளைகள் மூடி நிற்கின்றன. அப்பாளைகள் கணுக்களுக்குத் தேவையற்றபோது கழன்று விழுந்துவிடும். தலைவியுடன் தனக்கிருக்கும் களவுக் காதலைத் தேவையான காலம் வரை மறைத்துக் காத்துக் காலம் கனிந்த வேளையில் வெளியிட்டுத் தலைவியை மணம் புரிய எண்ணுபவன் தலைவன் என்ற கருத்தை உள்ளுறையாகத் தலைவி உரைத்தாள் என்க.)

தோழி

தலைவி தலைவனின் பண்பைப் புகழ்ந்து பாடியதைக் கேட்ட தோழி, "நறுமணம் கமழும் கூந்தலைக் கொண்டவளே! அவன் மலையில் களிறுகள் பிடியொடு கூடி மகிழும்; அவை குளகு என்னும் புதரில் வளரும் தழைகளை உள்ளம் மகிழ்ந்து உண்ணும்; களிறுகள் இணையாக விளங்கும் அழகான கொம்புகளைக் கொண்டவை; மலைகள் நடந்து செல்வன போன்று யானைகள் நடந்து செல்லும் காட்சியைக் காணலாம்; அத்தகைய பயன்மிக்க நாடனை நீ இயற்படவே மொழிந்து கொண்டுள்ளாய்; இனித் தலைவனை இயற்பழித்தும் பாடுமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்று தலைவியை வேண்டினாள்.

('மலைகள் நடந்து செல்வன போன்று' என்பது இல்பொருள் உவமையாகும். களிறும் பிடியும் மகிழ்ந்து வாழ்வது எனக் கூறியது, தலைவனும் தலைவியும் மணம் புரிந்து கொண்டு இல்வாழ்வு தொடங்க வேண்டும் என்னும் உள்ளுறையைக் கொண்டதாகும்.)

தலைவி

இயற்பழித்துப் பாடத் தோழி வேண்டியதும் தலைவி தோழியை நோக்கி, "வறுமைத் துன்பத்தைக் கூறியவர்க்கு அவர் துன்பம் நீங்குமாறு செய்ய இயலாவிடின் தன் உடம்பையே துறந்துவிட எண்ணும் பண்புடையவன், தலைவன். அவன் மலையில், கடுமையான நோக்கினைக் கொண்ட புலியின்

பாதங்களைப் போன்று, வாழை மரத்தின் தார்களிலே வளைந்த காய்கள் தொங்குகின்றன" என்றாள்.

(தோழி இயற்பழித்துப் பாடச் சொல்லினும், தலைவி தலைவனைப் பழிப்பதுபோலப் புகழ்ந்தாள் என்க. உணவாகக் கூடிய வாழைக்காய், புலியின் அடி போன்றுள்ளது என்றது பழிப்பது போன்றிருப்பினும், இன்மையைக் கூறியோர்க்கு உயிரையே தரும் பண்பாளன் என்று கூறிப் பாராட்டிப் புகழ்ந்தாள் என்க. இந்தப் புகழுரை, தலைவியின் துன்பங்கள் நீங்கத் தலைவன் வரைந்து கொள்வான் என்னும் உள்ளுறை கொண்டது.)

இவ்வாறு தோழியும் தலைவியும் முருகனைப் பாடுவது போல வள்ளைப்பாட்டுப் பாடித் தலைவனின் குணத்தைப் போற்றிப் புகழ்ந்து கூறிய போழ்து, மெலிந்திருந்த தலைவியின் தோள்கள் சிறந்து விளங்கின.

இந்தச் செய்தியைத் தலைவன் சிறைப்புறத்தானாக நின்ற போது, தோழி தன் நெஞ்சிற்குக் கூறுவாள்போலச் சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்ட தலைவன், விரைவில் தலைவியை மணந்துகொள்ள எண்ணினான்.

கருத்து

தோழியும் தலைவியும் வள்ளைப்பாட்டில் பாடிய தன் கருத்தை, தோழி, சிறைப்புறமாக இருந்த தலைவன் அறியுமாறு கூற, தலைவன் விரைவில் தலைவியை மணந்து கொள்ள எண்ணினான்.

விளக்கம்

களவுக் காலத்தை நீட்டிப்பதில் மகிழ்ந்து மணநாளைத் தள்ளி வைத்துக் கொண்டே இருந்தான், தலைவன்; இதனை விரும்பாத தலைவி, தன்னைப் பலருமறிய விரைவில் திருமணம் புரிந்து கொள்ளத் தலைவன் முன்வர வேண்டும் என்று எண்ணுகிறாள். இஃதுணர்ந்த தோழி, தலைவியின் ஆற்றாமையைத் தணிக்கத் தலைவனைப் போற்றி வள்ளைப்பாட்டுப் பாடத் தலைவியை அழைத்தாள். தலைவனைப் போற்றிப் பாடினால், தன் இல்லத்தில் உள்ள சுற்றத்தினருக்குத் தன் களவு வெளிப்பட்டு விடுமோ என்று அஞ்சினாள், தலைவி. அதற்குத் தோழி மாற்று

வழி ஒன்றைக் கூறினாள். நேரிடையாகத் தலைவனைப் போற்றாது, மலைக்குரிய தெய்வமான முருகனைப் புகழ்ந்து பாடுவதுபோலப் பாடலாம் என்று கூறினாள். தலைவியும் ஏற்றுக்கொண்டாள்.

அருஞ்சொற்பொருள்

1. வேங்கை - புலி; தொலைத்த - வென்ற; பொறி - புள்ளி; வெறி - மதம்; வாரணம் - யானை.
2. மருப்பு - யானைத் தந்தம்; இமிர்பு - ஒலித்து.
3. சாந்த மரம் - சந்தன மரம்.
4. ஐவனநெல் - ஐவனம் என்னும் மலை நெல்; அறை - பாறை; இருவாம் - குற்றுவாம்.
5. ஐயன் - முருகன், தலைவன்.
6. மை - மேகம்; சென்னி - உச்சி; பயமலை - பயன் மலை.
8. தகையவர் - மங்கையர்; செறித்த - அணிந்த; தாள் - விரல் அணி.
9. முகை - மலர் மொட்டு; தும்பி - வண்டு.
10. கூற்றம் - எமன்; நாட்டார் - நட்புக் கொண்டவர்.
11. தோற்றலை - தோற்றுப் போதலை.
12. வெருள்பு - மருண்டு; யூகம் - கருங்குரங்கு.
13. இறுவரை - பெரிய மலை; ஊர்பு இழிபு - ஏறி இறங்கி.
14. குழவிய - குட்டிகளையுடைய.
15. தெருள - தெளிவாக (புகழ்ந்து)
16. வெதிர் - மூங்கில்.
17. கண்பாதி பாளை - கணுவை மூடியிருக்கும் பாளை.
18. மாறு கொண்டு - மாறுபட்டு.
19. தேற்றாதோன் - தெளியாதவன்.
20. வளகு - இலை; குளகு - ஒரு வகை இலை; அமர்ந்து - விரும்பி.
21. வரைபுரை - மலையை ஒத்த; செலவு - நடை.
22. வயங்குதல் - விளங்குதல்.
23. கதுப்பு - கூந்தல்; மறுத்து - மறுத்து, இகழ்ந்து.
24. உழுவை - புலி.
25. கொடுங்காய் - வளைந்த காய்; தூங்கும் - தொங்கும்.
26. இன்மை - இல்லாமை; நிறைக்கல் - கொடுத்தல்; ஆற்றாக்கால் - முடியாது போனால்.
27. மெய் - உடல்.
29. திறம் - குணம், மேன்மை.
30. ஆடமை - ஆடு அமை - அசைகின்ற மூங்கில்; அளித்தல் - அருளுதல்.

தோழி கூற்று

நற்றிணை 211 **கோட்டியூர் நல்லந்தையார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவு நீட, ஒருதலை ஆற்றாளாம் என்ற தோழி சிறைப்புறமாகத் தன்னுள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் மணம் புரிந்துகொள்ளாது காலம் நீட்டித்தனன். அதனால் தலைவி ஆற்றாளாயினாள். அது கண்ட தோழி தலைவன் சிறைப்புறமாய் நிற்பதறிந்து, அவனை விரைந்து மணம் முடிக்கத் தூண்டுபவளாய், "தலைவன் பிரிந்த கொடுமையை யாரிடம் சென்று உரைப்பேன்" என்று தனக்குள்ளே சொல்லியது.

யார்க்குநொந்து உரைக்கோ யானே ஊர்கடல்
ஓதம் சென்ற உப்புடைச் செறுவில்,
கொடுங்கழி மருங்கின் இரைவேட்டு எழுந்த
கருங்கால் குருகின் கோள்உய்ந்து போகிய
முடங்குபுற இறவின் மோவாய் ஏற்றை,
எறிதிரை தொகுத்த எக்கர் நெடுங்கோட்டுத்
துறுமடல் தலைய தோடுபொதி தாழை
வண்டுபடு வான்போது வெரூஉம்
துறைகெழு கொண்கன் துறந்தனன் எனவே.

தெளிவுரை

ஊர்ந்து செல்லும் இயல்பு வாய்ந்த கடல்நீர் ஓடிப் பரத்தலால் உப்புப் படிந்த, கரிய சேறு கொண்ட வளைந்த உப்பங்கழி; அங்கே இரையைத் தேடிப் பாய்ந்த கரிய காலுள்ள கொக்கின் குத்துக்குத் தப்பி ஓடியது, வளைந்த முதுகும் வாயில் மீசையும் கொண்ட ஆண்இறால் மீன். அவ்வாறு ஓடிய இறால் கரையருகே வந்தபோது, அங்கே கழியை நோக்கிச் சாய்ந்திருந்த தாழையின் இலைகளுக்கிடையே பொதிந்திருந்த அதன் வெண்மையான பூவைக் கண்டு, அதுவும் 'வெண்குருகோ' என்று மேலும் அஞ்சியோடும். அத்தகைய துறை பொருந்திய

கடற்கரைக்குரிய தலைவன் நம்மைப் பிரிந்து போயினன் என்னும் கொடுமையை யாரிடம் சென்று சொல்லுவேன்?

கருத்து

தலைவியே! வெண்கொக்கினைக் கண்டு அஞ்சியோடிய இறால் மீன் தாழையின் வெண்பூவினைப் பார்த்து, அதுவும் கொக்கோ என்றெண்ணி அஞ்சி மறைகிறது. அத்தகைய கடற்கரைக்குரிய தலைவன் வரைவு நீட்டித்துப் பிரிந்திருப்பதை யாரிடம் சொல்லுவேன்?

உள்ளுறை

குருகு பற்றுவதிலிருந்து தப்பியோடிய இறால்மீன், தாழம் பூவைக் குருகு எனக் கருதி அஞ்சுகிறது. இத்தொடர் வாயிலாய், ஊரார் பழி தூற்றுதலுக்கு அஞ்சியிருந்த தலைவி, அன்னையைக் கண்ட போது அவளும் சினந்து உரைக்க வருகின்றனளோ என அஞ்சி நின்றாள் என்னும் கருத்துப் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. யார்க்கு நொந்து உரைக்கோ - மனம் நொந்து யாரிடம் சென்று உரைப்பேன்; ஊர்கடல் - ஊர்ந்து செல்லும் கடல்.
2. ஓதம் - கடல்நீர்; செறு - (உப்பு விளையும்) வயல்.
3. கொடுங்கழி - வளைந்த உப்பங்கழி; இரை வேட்டு - இரை தேடி.
4. கோள் உய்ந்து - கொள்ளுவதிலிருந்து தப்பி.
5. முடங்குபுறம் - வளைந்த மேற்புறம்; இறவு - இறால் மீன்; மோவாய் - (இறா மீனின்) மீசையுள்ள வாய்; ஏற்றை - ஆண்.
6. எறிதிரை - மோதுகின்ற அலை; எக்கர் - மணல்மேடு; நெடுங் கோடு - நெடுங்கரைப்பகுதி.
7. துறுமடல் - செறிந்த தாழையின் மடல்; தோடுபொதி - இதழ் நிறைந்த.
8. வண்டுபடு - வண்டு மொய்க்கும்; வான்போது - வெண்மையான மலர்; வெரூஉம் - அஞ்சும்.
9. கொண்கன் - தலைவன்; துறந்தனன் - பிரிந்து சென்றனன்.

தோழி கூற்று

நற்றிணை 233 **அஞ்சிலாந்தையார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரையாது நெடுங்காலம் வந்தொழுக 'இவள் ஆற்றாள்' என்பதுணர்ந்து சிறைப்புறமாகத் தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் களவொழுக்கமே மேற்கொண்டு மணம் புரியாது காலந் தாழ்த்தி வந்தான். அதுகண்டு தலைவி வருந்தினாள். தலைவன் சிறைப் புறத்தே நிற்பதறிந்த தோழி, அவன் கேட்கும் வகையில் தலைவியிடம், 'நீ அவன்மீது கொண்டுள்ள அன்பால் என் சொல்லைக் கேட்க மாட்டாய். ஆயினும் சொல்கிறேன்; அவன் சான்றோன் அல்லன் என்பதுணர்க' என்று கூறுவதன்வழி, தலைவனைத் திருமணம் செய்துகொள்ளத் தூண்டியது.

கல்லாக் கடுவன் நடுங்க,முள் எயிற்று
மடமா மந்தி மாணா வன்பறழ்,
கோடுஉயர் அடுக்கத்து, ஆடுமழை ஒளிக்கும்
பெருங்கல் நாடனை அருளினை ஆயின்,
இனியென கொள்ளலை மன்னே; கொன்ஒன்று
கூறுவன் வாழி தோழி! முன்னுற
நாருடை நெஞ்சத்து ஈரம் பொத்தி,
ஆன்றோர் செல்நெறி வழாஅச்
சான்றோன் ஆதல்நன்கு அறிந்தனை தெளிமே!

தெளிவுரை

தலைவியே! நெடிது வாழ்க! மரமேறுதலைத் தவிர வேறொன்றறியாத கடுவன் வருந்தி நடுங்குமாறு, முள் போன்ற கூர்மையான பற்களைக் கொண்ட இளமந்தி, வளர்ச்சி நிரம்பாத தன் வலிய குட்டியுடன் உயர்ந்த மலைச்சிகரத்தில் இயங்கும் மேகங்களுக்கு உள்ளே சென்று ஒளிந்துகொள்ளும். இத்தன்மை யினதான பெரிய மலைநாட்டுக்குரிய தலைவன்மேல் நீ அன்பு மிகுந்து அருள் செய்த காரணத்தால், இனிமேல் என் சொல்லை ஏற்க மாட்டாய்; எனினும், ஒன்று கூறுவேன்; கேள்! அவனை

நேரில் காணும் போது, உன் உள்ளத்தே மிக்கெழுகின்ற காதலன்பு வெளியே தோன்றாதவாறு மறைத்துக்கொண்டு, அவனோடு தக்கவாறு உரையாடி, அவன் ஆன்றோர் வகுத் துள்ள செவ்விய இல்லற நெறியைத் தவறாது மேற்கொண் டொழுகும் சான்றோனா என்பதை அறிந்துகொள். அதன்பின் அவனை ஏற்றுக்கொள்.

கருத்து

தலைவியே! வரையாது வந்தொழுகும் தலைவனை அறவழி நின்று, உடனே வரைந்துகொள்ளத் தூண்டல் வேண்டும்.

குறிப்பு

காதல் மிகுதியால் வரைவு கடாவியபொழுது, வரைந்துகொள்ளுதலே சான்றோர் செல்நெறியாகும்; அதனைத் தலைவன் மேற்கொள்ளாமையை வன்மொழியால் சுட்டிக்காட்டி, தலைவனை வரைதற்குத் தூண்ட வேண்டும் என்பதே தோழியின் கருத்து.

உள்ளுறை

கடுவன் மனம் நடுங்க மந்தியும் குட்டியும் மேகத்தூடே சென்று மறைந்தாற்போல நாமும், அவன் நம்மைக் காணாது வருந்துமாறு அயலே சென்று மறைந்துகொள்வோம்; அங்ஙனம் செய்வோ மாயின் களவுறவு தடைப்படும். அதன் பின்னாவது அவன் வரைந்து வருதலைப்பற்றி நினைப்பான் என்பது உள்ளுறை.

சொற்பொருள்

1. கல்லா - மரமேறுதலையன்றி வேறு தொழிலைக் கல்லாத; முள் - கூரிய; எயிறு - பல்.
2. மட மா மந்தி - இளமையான பெரிய பெண்குரங்கு; மாணா - வளர்ச்சி நிரம்பாத; வன்பறழ் - வலிய குட்டி.
3. கோடுஉயர் அடுக்கத்து - உயர்ந்த உச்சியினைக் கொண்ட மலைப்பக்கத்தே; ஆடுமழை - இயங்கும் மேகத்தில்; ஒளிக்கும் - மறைந்துகொள்ளும்.
4. அருளினை ஆயின் - நீ அன்பு மிகுந்து அருள் செய்த காரணத்தால்.
5. இனியென கொள்ளலை - இனிமேல் என் சொற்களை ஏற்க மாட்டாய்; கொன் ஒன்று கூறுவென் - வறிதே ஒன்று கூறுகின்றேன்.
6. முன்னுற - தலைவன் இதற்கு முன் பல நாள் வந்தபோது.

7. நாருடை நெஞ்சத்து - அன்பைக் கொண்டுள்ள உன் நெஞ்சத்தில்; ஈரம் - மிக்கெழுகின்ற காதலை; பொத்தி - மறைத்து (அவனோடு சொல்லாடி).
8. ஆன்றோர் செல்நெறி - ஆன்றோர் வகுத்துள்ள செவ்விய நெறியாகிய இல்லறம் மேற்கொண்டு ஒழுகுதலில்; வழாஅ - பிழையாத.
9. சான்றோன் ஆதல் - அவனது சான்றாண்மையை; நற்கு அறிந்தனை - நன்கு தெரிந்துகொண்டு; தெளிமே - தெளிவு பெறு.

தோழி கூற்று

நற்றிணை 399 **தொல்கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

நெடுங்காலம் வந்தொழுக ஆற்றாமை வேறுபட நின்ற தலைமகளைத் தோழி, 'எம்பெருமான் இதற்காய நல்லது புரியும்' என்று தலைமகன் சிறைப் புறத்தானாகச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் நெடுங்காலம் வரையாதிருக்கவே தலைவியின் அழகு நலங் கெட்டது. அதனைப் பொறாத தோழி, தலைவியிடம், 'வருந்தாதே! உன் அழகு, தலைவனைத் தானே வந்து மணக்கச்செய்யும்' என்று சிறைப்புறத்தே நிற்கும் தலைவன் கேட்குமாறு சொல்லியது.

அருவி ஆர்க்கும் பெருவரை அடுக்கத்து,
குருதி ஒப்பின் கமழ்பூங் காந்தள்
வரிஅணிச் சிறகின் வண்டுஉண மலரும்
வாழைஅம் சிலம்பில், கேழல் கெண்டிய
நிலவரை நிவந்த பலஉறு திருமணி
ஒளிதிகழ் விளக்கத்து, ஈன்ற மடப்பிடி,
களிறுபுறங் காப்ப, கன்றொடு வதியும்
மாமலை நாடன் நயந்தனன் வரூஉம்
பெருமை உடையள் என்பது
தருமோ தோழி!நின் திருநுதல் கவினே?

தெளிவுரை

தலைவியே! அருவிகள் ஒலிக்கின்ற மூங்கில்கள் செறிந்த மலைச்சாரலில் செங்குருதி நிறம் அமைந்த காந்தள் பூக்கள் மணங்கமழ மலர்ந்திருக்கும். வரிகள் அழகு செய்யும் சிறகினைக் கொண்ட வண்டினம் தேனுண்ணும். அவற்றில் வாழை மரங்கள் மிகுந்திருக்கும் அம்மலையில் காட்டுப்பன்றிகள் தோண்டுதலால் நிலத்தடியிலிருந்து மணிக்கற்கள் வெளிப்போந்து ஒளி வீசிக் கொண்டிருக்கும். அந்த ஒளியில் களிறு அயலில் காத்து நிற்க, அதன் பிடி, தான் ஈன்ற கன்றோடு தங்கியிருக்கும். இத்தன்மை யினதான பெரிய மலைநாட்டிற்குரியவன், நம் தலைவன். அவன் தானே விருப்பமுள்ளவனாய்த் தேடி வருகின்ற பெருமையினைக் கொண்டதன்றோ, உன் சிறப்பு வாய்ந்த நெற்றியழகு.

அவ்வழகே மலைநாடனை மணம்புரிந்து கூடச்செய்யும்; ஆதலின், நீ வருந்தாதே!

கருத்து

தலைவியே! உன் அழகு தலைவனைத் தானே வந்து மணக்கச்செய்யும்.

உள்ளுறை

மணி ஒளியில் களிறு பாதுகாத்திருப்பப் பிடியானை தன் கன்றோடு தங்கியிருக்கும் என்பதன் வாயிலாய், தலைவியை மலைநாடன் வரைந்து இல்லறம் நிகழ்த்த, அவனுடைய வளமனையில் புதல்வரை ஈன்ற தலைவி, தலைவன் தன்னைப் பாதுகாக்க மக்களொடு மகிழ்ந்திருப்பாள் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

இறைச்சி

வண்டு வந்து உண்ணுதற்குக் காந்தள் மலரும் என்றது, தலைவன் தலைவியின் நலனை நுகர வருங்கால் தலைவியும் மகிழ்ந்திருத்தல் வேண்டுமென்பதைக் குறித்தது.

சொற்பொருள்

1. ஆர்க்கும் - ஒலிக்கும்; வரை - மூங்கில்; அடுக்கம் - மலைச்சாரல்; குருதி ஒப்பின் - செங்குருதியைப் போலத் தோன்றும்.
2. கமழ் - மணம் கமழும்.

3. வரி அணி - வரிகள் அழகு செய்யும்; சிறகின் - சிறகினைக் கொண்ட.
4. வாழை - வாழை மரங்கள் (நிறைந்த); சிலம்பில் - மலையில்; கேழல் - பன்றி; கெண்டிய - தோண்டிய.
5. நிலவரை - நிலப்பரப்பில்; நிவந்த - மேலெழுந்த.
6. விளக்கத்து - மணிகள் சுடர்கின்ற ஒளியில்; ஈன்ற - கன்றினை ஈன்ற; மடப்பிடி - இளமையான பெண்யானை.
7. களிறு - ஆண்யானை; புறங்காப்ப - அருகே இருந்து காவல் செய்ய; வதியும் - தங்கும்.
8. நயத்தல் - விரும்புதல்; வருஉம் - வருவான்.
9. பெருமை உடையள் - பெருமை வாய்ந்த தலைவி.
10. தருமோ - தருவதாகும் அல்லவா?; கவின் - அழகு.

தோழி கூற்று

குறுந்தொகை 111 **தீன்மதி நாகன்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு நீட்டித்தவழித் தலைமகள் வேறுபாடு கண்டு வெறியெடுப்பக் கருதிய தாயது நிலைமை, தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தலைமகன் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் வேலிப்புறத்தானாக, அவனுக்குப் புலப்படுத்தத் தோழி தலைவியிடம், 'உன் மேனி வேறுபாடு கண்டு அன்னை வெறியாட்டு எடுக்க எண்ணியுள்ளாள். உன் வேறுபாடு நீங்குதற்குரிய வழி வெறியாடல் அன்று என்பதைத் தாய் அறியும்பொருட்டுத் 'தலைவன் இங்கே வந்து செல்லுதல் நலம்' என்று கூறியது.

மென்தோள் நெகிழ்த்த செல்லல், வேலன்,
'வென்றி நெடுவேள்' என்னும்; அன்னையும்,
அதுஎன உணரும் ஆயின், ஆயிடைக்
கூழை இரும்பிடிக் கைகரந் தன்ன
கேழ்இருந் துறுகல் கெழுமலை நாடன்
வல்லே வருக தோழி!நம்
இல்லோர் பெருநகை காணிய சிறிதே!

தெளிவுரை

தலைவியே! மெல்லிய உன் தோள்களை இளைக்கும்படி செய்த துன்பத்திற்குக் காரணம், நீண்ட வேலையுடைய முருகன்தான் என்று வெறியாடும் வேலன் சொல்லுவான். அன்னையும் அதுவே உண்மை எனக் கருதுவாள். (வெறி யெடுக்கவும் முற்படுவாள்.) சிறிய பெண்யானை தன் கையை மறைத்துப் படுத்திருப்பதைப் போன்று தோன்றும் கருநிறமுள்ள பெரிய குண்டுக்கற்கள் கிடக்கும் மலைநாட்டுக்குரிய தலைவனும், நம் இல்லத்தவரது மிகுந்த நகைப்பிற்கிடமான செயல்களைக் காணும்பொருட்டாகச் சற்று நேரமேனும் நம்மிடத்திற்கு விரைந்து வரட்டும்.

கருத்து

தலைவியின் வேறுபாட்டுக்குக் காரணம் முருகன் அணங்கியதே என்று தாய் வெறியாட்டெடுக்க முற்படுகிறாள். (இதனைக் கண்டாவது தலைவன் திருமண முயற்சியை உடனே மேற்கொள்ளட்டும்.)

குறிப்பு

களவைத் தாய் அறிந்தனள்; ஆதலின், உடனே வரைந்துகொள்ள வேண்டும் என்னும் கருத்தைத் தோழி தலைவனிடம் உணர்த்துகிறாள்.

இல்லத்தாரின் நகைப்பிற்கிடமான செயல் - மகளது களவுறவால் ஏற்பட்ட மாற்றத்தை வேலனால் ஏற்பட்டதெனும் வெறியாடுவானின் உரையை நம்பி, வெறியெடுக்கத் தொடங்குதல்.

உருண்டையான பெரிய கல், துதிக்கையை மறைத்துப் படுத்திருக்கும் சிறிய யானைபோலத் தோன்றுகிறது. ஆராயின், அது யானை அன்று என்பது புரியும். அதுபோல், தலைவிக்கு ஏற்பட்ட நோய் முருகனால் ஏற்பட்டதா என்பதை ஆராய்ந்தால், அஃது உண்மை அன்று என்பதை உணர்வர்.

சொற்பொருள்

1. மென்தோள் - மெல்லிய தோள்; செல்லல் - துன்பம்; வேலன் - வெறியாட்டு எடுப்பவன்.
2. வென்றி - வெற்றி; நெடுவேள் - முருகன்.
3. அது என - வேலன் சொல்வது உண்மையென; உணரும் ஆயின் - நினைப்பாளாயின்; ஆயிடை - அப்பொழுது.

4. கூழை - குறிய; இரு - கரிய; பிடி - பெண்யானை; கை கரந்தன்ன - கையை மறைத்துப் படுத்திருப்பது போல.
5. கேழ் - நிறம்; இரும் - கரிய; துறுகல் - குண்டுக்கல்; கெழு - பொருந்திய; நாடன் - நாட்டினையுடைய தலைவன்.
6. வல்லே - விரைய.
7. இல்லோர் - நம் வீட்டிலுள்ளோர்; பெருநகை - மிகுந்த நகைப்புக் கிடமான செய்கையைச் (செய்வதை); காணிய - காண்பதற்கு; சிறிது - சற்று நேரம்.

தலைவி கூற்று

குறுந்தொகை 125 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவு நீட்டித்த இடத்துத் தலைமகள், தோழிக்குக் கூறுவாளாய்த் தலைமகன் சிறைப்புறமாகச் சொல்லியது.

கூற்று விளக்கம்

வரைந்துகொள்ளும் கருத்தின்றிக் களவின்பத்தையே தலைவன் விரும்பியிருந்தான். அதனை உணர்ந்த தலைவி, ஒரு நாள், தன் வீட்டருகே தலைவன் வருதல் கண்டு, அவன் வரவை அறியாதவள்போல, அவன் கேட்குமளவில் தோழியிடம் கூறியது.

இலங்குவளை நெகிழச் சாஅய், யானே,
உளெனே வாழி தோழி! சாரல்
தழைஅணி அல்குல் மகளி ருள்ளும்
விழவுமேம் பட்டஎன் நலனே, பழவிறல்
பறைவலம் தப்பிய பைதல் நாரை
திரைதோய் வாங்குசினை இருக்கும்
தண்ணம் துறைவனொடு, கண்மா றின்றே.

தெளிவுரை

தோழியே! மலைச்சாரலில் தோன்றிய தழைகளாலும், மலர் களாலும் தொடுக்கப்பட்ட ஆடையை அணிந்த மகளிர் பலர்

உள்ளனர். அவர்களுள் நான் திருவிழாவைப் போல என் பெண்மை நலம் மேம்பட்டுச் சிறந்து விளங்கினேன்.

வலிமை வாய்ந்த சிறகின் பழைய வலிமை குறைந்ததனால் (பறக்க இயலாது) துன்பமுற்ற நாரை, கடலலைகள் வந்து பொருந்தும்படியாக வளைந்து சாய்ந்திருக்கும் மரக்கிளையில் தங்கியிருக்கும். இத்தன்மையதான குளிர்ச்சி பொருந்திய கடற்கரைக்குரியவன், நம் தலைவன். முன்பு சிறந்திருந்த என் பெண்மைநலம் இப்போது இடம் மாறி அத்தலைவனிடம் சென்றுவிட்டது. அதனால் ஒளி விளங்கும் என் கை வளையல்கள் கழன்று விழும்படி நான் சோர்ந்தும் இன்னும் உயிருடன் வாழ்ந்திருக்கின்றேன்.

கருத்து

தோழி! தலைவன் வரைவை நீட்டிப்பானாயின் நான் இறந்துபடுவேன்.

விளக்கம்

மகளிர் பலரது நலத்தினும் சிறந்த என் பெண்மைநலம் தலைவனோடு சென்று தங்கிவிட்டதால், நான் மட்டும் இங்கே நலனிழந்து, வளையல் நெகிழ மெலிந்திருக்கிறேன். இந்நிலை நீட்டித்தால் நான் இறந்துபடுவேன்.

குறிப்பு

தன் சிறகுக்குப் பழைய வலிமை இல்லாத நாரை, அலைகள் தரும் இரை யல்லாது வேறு பெற இயலாத நிலையில், நீர் தோயுமளவிற்குத் தாழ்ந்துள்ள மரக்கிளையில் இருக்கிறது. இத்தொடர் வாயிலாய், தலைவி தன் பண்டை நலன் இழந்து, தலைவன் உளமிரங்கிச் செய்யும் அருளை எதிர்நோக்கி யுள்ளாள் என்னும் இறைச்சிப் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. இலங்குதல் - விளங்குதல்; வளை - கை வளையல்; நெகிழ - கழன்று விழ; சாஅய் - மெலிந்து, சோர்ந்து.
2. உளெனே - உள்ளேன்; சாரல் - மலைச்சாரல்.
3. தழை அணி - தழை ஆடை.
4. விழவு - திருவிழா; நலன் - பெண்மை நலன்; பழவிறல் - பழைய வலிமை.

5. பறை வலம் - சிறகின் வலிமை; தப்பிய - குறைந்ததனால்; பைதல் - துன்பம்.
6. திரை தோய் - அலையோடு பொருந்தியிருக்கும்; வாங்குசினை - வளைந்த கிளை; இருக்கும் - தங்கியிருக்கும்.
7. தண்ணம்துறை - குளிர்ச்சி பொருந்திய நீர்த்துறை; கண் மாறுதல் - இடம் மாறுதல், இடம் பெயர்தல்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 117 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

திருமணம் செய்துகொள்ளாமல் களவொழுக்கமே மேற்கொண்டுள்ள தலைவன், தலைவியின் வீட்டிற்கு ஒருபுறத்தே வந்து நிற்க, அவன் காதில் படுமாறு தலைவி தோழியிடம் கூறியது.

அம்ம வாழி, தோழி! நலனே
இன்னது ஆகுதல் கொடிதே! புன்னை
அணிமலர் துறைதொறும் வரிக்கும்
மணிநீர்ச் சேர்ப்பனை மறவா தீமே.

தெளிவுரை

தோழி! வாழி! புன்னையின் அழகிய மலர்கள் துறைதோறும் படிந்து அழகு செய்யும் நீலமணிபோலும் தெளிந்த நீரினைக் கொண்டது, நெய்தல்நிலம். அத்தகைய நெய்தல் நிலத் தலைவனை நாம் மறவாதே எப்போதும் நினைந்திருக்கிறோம். அவ்வாறிருந்தும் நம் மேனியழகு வேறுபடுதல் மிகவும் கொடுமையன்றோ?

கருத்து

தோழி! தலைவனை நினைத்துக்கொண்டே இருந்தும் அவன் வரைவொடு வாராததால் என் மேனியழகு குறைந்து கெடுகிறது.

குறிப்பு

'சேர்ப்பன் தந்த இன்பத்தினையும், அவனைப் பற்றிய நினைப்பினையும் நாம் மறவாதே மனத்தகத்தே கொண்டிருக்கும்போதும் அவன் பிரிந்தான் என நம் மேனியழகு கெடுவது கொடிது அன்றோ?' என்று சொல்வதன்வழி, தலைவி தன் காதல் மிகுதியையும், ஆற்றினும் அடங்காத் துயரத்தினையும் புலப்படுத்தி, விரைய வரைவதற்குத் தலைவனைத் தூண்டினாள்.

புன்னையின் மலர் துறைதோறும் படிந்து பொலிவூட்டும் என்பது, தலைவன் கூடுந்தோறும் தலைவியின் மேனி, அழகு பெறும் என்பது குறிப்புப் பொருளாகும்.

சொற்பொருள்

1. நலனே - என் அழகு.
2. இன்னது ஆகுதல் - இவ்வாறு வேறுபடுதல்.
3. வரிக்கும் - அழகு செய்யும்.
4. மணிநீர் - நீலமணி போலும் நிறமுள்ள கடல்; சேர்ப்பன் - நெய்தல் நிலத் தலைவன்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 119 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைதற்கு வேண்டுவன முயல்வேம் எனச் சொல்லி, வரையாது ஒழுகுகின்ற தலைமகன், சிறைப்புறத்தான் ஆனமை அறிந்த தலைமகள் தோழியிடம் சொல்லியது.

கூற்று விளக்கம்

'திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வேன்' என்று கூறிச் சென்ற தலைவன் அவற்றைச் செய்யாமல் களவொழுக்கமே மேற்கொண் டொழுகினான்; வீட்டிற்கு அருகே அவன் வந்து மறைவாய் நிற்கிறான் என்பதை அறிந்த தலைவி, அவன் கேட்குமாறு தோழியிடம் கூறியது.

அம்ம வாழி, தோழி! நன்றும்
எய்யா மையின் ஏதில பற்றி,
அன்புஇலன் மன்ற பெரிதே
மென்புலக் கொண்கன் வாரா தோனே.

தெளிவுரை

தோழியே! வாழ்க! நான் கூறுவதைக் கேள். நெய்தல் நிலத் தலைவன் நம் திருமணத்திற்கு வேண்டிய செயல்களைச் செய்யாமல் அதற்குப் புறம்பானவற்றைச் செய்பவனாய் இருக் கின்றான். அவன் நம்மிடம் உறுதியாய் அன்பு இலாதவனே. அன்புள்ளவனாயின், திருமணத்திற்குரிய ஏற்பாடுகளோடு வாராதிருப்பானா?

கருத்து

தோழி! தலைவன் நம்மை வரைய முற்படாத அன்பிலனாய் உள்ளான்.

குறிப்பு

நமக்கு நன்மை பயப்பது மணவாழ்வு என அறியாதவனாய் அதற்குப் புறம்பாய்க் களவே நமக்கு இன்பம் என்று கருதி அதையே பற்றிச் செயல்படுகின்றான்.

'வரைதற்கு வேண்டுவன முயல்வேன்' என்று நம்மிடம் கூறிய உறுதியை மறந்து, அதற்குப் புறம்பாய் நடக்கும் அவன் உறுதியாய் நம்பால் அன்பில்லாதவனே ஆவான்.

தலைவியின் இக்கூற்றினைக் கேட்டபின் அவள்மேல் பேரன்பு கொண் டுள்ள தலைவன் மேலும் காலம் நீட்டிக்காது வரைதற்கு முயல்வன் என்பது பயன்.

சொற்பொருள்

1. நன்றும் - திருமணத்துக்கு வேண்டிய நல்லனவற்றைச் செய்ய.
2. எய்யாமையின் - அறியாமையின்; ஏதில - வரைவுக்குப் பொருந்தாத செயல்களை மேற்கொண்டு.
3. பெரிதே - மிகவும்.
4. மென்புலம் - மென்மையான நெய்தல் நிலம்; வாராதோன் - திருமண ஏற்பாட்டுடன் வாராத தலைவன்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 204 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் திருமணம் செய்துகொள்ளாமல் களவொழுக்கமே மேற்கொண்டிருக்கிறான். தன் மனைக்கு அருகில் அவன் மறைவாய் நிற்கும் போது தலைவி தோழியிடம் கூறியது.

அன்னாய், வாழி!வேண்டு அன்னை!அஃது எவன்கொல்?
வரையர மகளிரின் நிரையுடன் குழீஇ,
பெயர்வுழிப் பெயர்வுழித் தவிராது நோக்கி,
நல்லள் நல்லள் என்ப;
தீயேன் தில்ல, மலைகிழ வோற்கே!

தெளிவுரை

தோழியே! வாழ்க! இதனைக் கேள்.

மலைச்சாரலில் விளையாடும் தெய்வ மகளிரைப் போன்றவரெல்லாம் நான் எங்கெங்கே சென்றாலும் விடாமல் என்னைப் பார்த்து, 'இவள் நல்லவள், நல்லவள்' என்று பலகாலும் வியந்து பாராட்டுகின்றனர். ஆனால், மலைநாடனாகிய நம் தலைவனுக்கு மட்டும் நான் தீயவளாகிவிட்டேனே! அஃது எப்படி?

கருத்து

தோழி! எல்லோர்க்கும் நல்லவளாயிருக்கும் நான் தலைவற்குத் தீயவளாகிவிட்டேனா? அதனால்தான் இன்னும் வரைய வாராமல் இருக்கிறாரா?

குறிப்பு

தலைவரும் என்னை நல்லவள் என்று நினைத்தாரேயானால் இதுகாறும் மணம் செய்துகொள்ளாது இருக்க மாட்டாரே என்பது சொல்லாமல் சொன்ன குறிப்பு.

இதனைக் கேட்கும் தலைவன், விரைந்து வந்து மணந்துகொள்வதற்கு முற்படுவான் என்பது பயன்.

சொற்பொருள்

1. எவன் கொல்? - எப்படி?
2. வரைஅர மகளிர் - மலைச்சாரலில் விளையாடும் தெய்வ மகளிர்; நிரையுடன் - கூட்டமாய்; குழீஇ - கூடி.
3. பெயர்வுழிப் பெயர்வுழி - செல்லுகின்ற இடந்தோறும்; தவிராது - ஒழியாமல், விடாமல்.
4. நல்லள் - நல்லவள்; என்ப - என்று சொல்வர்.
5. தீயேன் - தீயவள்; மலைகிழவோன் - மலைநாட்டுக்குரிய தலைவன்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 216 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவுநீட ஆற்றாளாகிய தலைமகட்குத் தலைமகன் சிறைப்புறத் தானாகத் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் திருமணம் செய்துகொள்ளாமல் காலம் போக்கிக் கொண்டிருக்கத் தலைவி அதனைப் பொறுக்க இயலாதவள் ஆயினாள். ஒரு நாள் வீட்டிற்குப் புறத்தே மறைந்து நின்ற தலைவன் காதில் விழுமாறு தோழி தலைவியிடம் கூறியது.

குறுங்கை இரும்புலிக் கோள்வல் ஏற்றை,
நெடும்புதல் கானத்து மடப்பிடி ஈன்ற
நடுங்குநடைக் குழவி கொளீஇய, பலவின்
பழம்தூங்கு கொழுநிழல் ஒளிக்கும் நாடற்குக்
கொய்திடு தளிரின் வாடிநின்
மெய்பிறி தாதல் எவன்கொல்? அன்னாய்!

தெளிவுரை

தலைவியே! பெரிய புலி குறுகிய முன்னங்கால்களைக் கொண்டது. ஆண்புலியாகிய அஃது இரையைத் தாக்கிக்

கொன்று கொண்டு செல்வதில் வல்லது. அப்புலி பெரும் புதர்கள் நிறைந்த காட்டில், பெண்யானை ஈன்ற, தள்ளாடும் நடையைக் கொண்ட இளமையான கன்றினைப் பிடித்துத் தின்பதற்காக, பழுத்துத் தொங்குகின்ற பலா மரத்தின் கொழுவிய நிழலில் பதுங்கியிருக்கும். அத்தன்மைத்தான நாட்டிற்குரியவன், நம் தலைவன். அவன்பொருட்டு, கொய்யப்பட்ட தளிர்போல வாட்டமுற்று உன் மேனி வேறுபடுதல் ஏனோ?

கருத்து

தலைவியே! தலைவன் வரைவொடு வரக் காலத்தை நீட்டிப்பதால் உன் மேனி வாட்டமுற்று வேறுபட்டுள்ளது.

விளக்கம்

தன் கடமையை உணர்ந்து விரைவில் தலைவியை வரைந்து கொள்ளக் கருதாது, காலம் தாழ்த்தி வந்த தலைவன் சிறைப் புறத்தே நின்றான். அவன் கேட்டுத் திருந்துமாறு, ‘பிறர் துன்பம் கண்டு வருந்தும் உயர்பண்பு சிறிதுமற்றவனாய்த் தன்னலம் ஒன்றே நோக்கும் தலைவன்பொருட்டு ஊனும் உறக்கமுமின்றி மேனி வாட்டமுற வாழ்வது பயனற்றது!’ என்கிறாள், தோழி.

இதனைக் கேட்கும் தலைவன், தன் செயற்கு மிகவும் நாணி விரைவிலேயே வரைதலை மேற்கொள்வான் என்பது பயன்.

உள்ளுறை

ஆண்புலி மடப்பிடியின் கன்றினைக் கொல்வதற்குப் பலா மரத்தின் நிழலில் பதுங்கியிருக்கும் என்னும் தொடர் வாயிலாய், தலைவன் தலைவியின் பெண்மைநலத்தைக் கவரும்பொருட்டே, இனிய மொழிகளைக் கூறி ஏமாற்றி, களவே விரும்பி ஒழுகு கின்றான் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. குறுங்கை - குறுகிய முன்னங்கால்; இரும்புலி - பெரிய புலி; கோள்வல் - கொலைத்தொழிலில் வல்லமையுள்ள; ஏற்றை - ஆண்புலி.
2. நெடும் புதல் - பெரிய புதர்; கானம் - காடு; மடப்பிடி - இளமையான பெண்யானை; ஈன்ற - பெற்ற.

3. நடுங்கு நடை - தள்ளாடும் நடையைக் கொண்ட; குழவி - கன்று; கொளீஇய - கொள்ளும்பொருட்டு; பலவு - பலா மரம்.
4. தூங்கு - தொங்குகின்ற; கொழுநிழல் - கொழுவிய நிழலில்; ஒளிக்கும் - பதுங்கியிருக்கும்.
5. கொய்து இடு - பறித்துப் போடப்பட்ட; வாடி - வாட்டமுற்று.
6. மெய் - உடம்பு; பிறிதுஆதல் - மாறுபடுதல்; எவன் - ஏன்?

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 58 **மூவாதியார்**

திணை : நெய்தல்

கூற்று

வரையாது ஒழுகும் தலைமகன் ஒருஞான்று கதுமென எதிர்ப்படத் தலைமகள் தன் நிலையினைத் தலைமகற்குக் கூறெனத் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

திருமணம் செய்துகொள்ளாது காலம் நீட்டிக்கும் தலைவனிடம் 'காலந்தாழ்த்தாது வரைந்துகொள் என்று சொல்' எனத் தலைவி தோழியிடம் கூறியது.

என்னைகொல் தோழி அவர்கண்ணும் நன்கில்லை
அன்னை முகனும் அதுவாகும் – பொன்அலர்
புன்னைஅம் பூங்கானல் சேர்ப்பனைத் தக்கதோ
நின்னல்ல(து) இல்லென்(று) உரை.

தெளிவுரை

"தோழியே! அழகிய பூக்களைக் கொண்ட புன்னை மரங்கள் நிரம்பிய கடற்கரைச்சோலை கொண்ட தலைவன் நம்மை விரைவில் மணந்துகொள்வான் எனத் தோன்றவில்லை. நம் களவொழுக்கம் வெளிப்பட்டுவிட்டதால் செவிலியின் மனப்போக்கும் மாறியுள்ளது. இது கொடுமை மிக்கது. நம் நெய்தல்நிலத் தலைவன் வரைந்துகொள்வதில் காலத்தாழ்வு உண்டாக்குதல் தக்கதா? தகாது. 'உன்னைத் தவிர எமக்கு வேறு துணையில்லை' என்று தலைவனிடம் சொல்" என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

கருத்து

" 'உன்னையே துணை என்று எண்ணியிருக்கும் தலைவியை உடனே மணம் செய்துகொள்ளாதிருப்பது ஏன்?' என்று தோழியே, தலைவனைக் கேள்."

குறிப்பு

செவிலி தலைவியின் களவொழுக்கத்தை அறிந்துகொண்டாள்; அதனால் உடனே இற்செறிப்பு நிகழும்; அது நேராதிருக்க ஒரே வழி, தலைவன் தலைவியை மணம் செய்துகொள்வதுதான்.

சொற்பொருள்

1. என்னை கொல் - என்ன காரணம்? அவர் கண்ணும் - தலைவனிடத்தும்; நன்கு இல்லை - நம்மை வரைந்துகொள்ளும் எண்ணம் இல்லை.
2 அன்னை - செவிலி; அதுவாகும் - (அவ்வாறே) நன்றாய் இல்லை, நம் களவுறவை அறிந்து கடுமையாய் இருக்கிறாள்; பொன் அலர் - அழகிய மலர்கள்.
3. தக்கதோ - (வரைவு நீட்டித்தல்) பொருத்தமாகுமா?
4. நின் அல்லது - உன்னைத் தவிர; இல் - வேறு துணை இல்லை; உரை - சொல்.

தோழி கூற்று

கலித்தொகை 131 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவு நீட ஆற்றாளாய தலைமகளைத் தோழி அவன் முன் அருமை செய்து அயர்த்த காலத்து, அவன் வரவினை யானறிந்து, ஊசலாட நின்னைக் கொண்டுபோய் ஆடுகின்ற காலத்து, யான் இயற்பழிக்க, நீ இயற்பட மொழிவது கேட்டு, வந்து, ஊசலை ஊக்கியவன் இக்காலத்து வருந்தவிடாது, வருத்தமறிந்து, வரைந்துகொள்வனென ஆற்றுவித்தது.

(களவொழுக்கக் காலத்தில், தலைவன் சிறிது காலத்துக்குத் தலைவியைக் காணச் செல்லாமல் இருப்பதை அகப்பொருளார் 'அருமைசெய்தயர்த்தல்' என்னும் தொடரால் குறிப்பிடுவர்.)

கூற்று விளக்கம்

முன்னர்த் தலைவி வருந்தியிருந்தபோது, தலைவியும் தோழியும் தலைவன் வரவறிந்து ஊசல் ஆடினர். தோழி தலைவனின் இயல்பினைப் பழித்துரைக்கக் கேட்ட தலைவி மொழிந்ததனை மறைந்து நின்று கேட்ட தலைவன் வந்து ஊசலை ஊக்கினான். அதுபோல இக்காலத்தும் தாங்கள் ஊசலாடிப் பாடினால், அதுகேட்டுத் தலைவன் தலைவியின் வருத்தமறிந்து வரைந்துகொள்வன் என்று தோழி ஆற்றுவித்தது.

பெருங்கடல் தெய்வநீர் நோக்கித் தெளித்துஎன்
திருந்துஇழை மென்தோள் மணந்தவன் செய்த
அருந்துயர் நீக்குவேன் போன்ம்மன்! பொருந்துபு
பூக்கவின் கொண்ட புகழ்சால் எழில்உண்கண்
நோக்குங்கால், நோக்கின் அணங்குஆக்கும் சாயலாய்! தாக்கி
இனமீன் இகல்மாற வென்ற சினமீன்
எறிசுறா வான்மருப்புக் கோத்து, நெறிசெய்த
நெய்தல் நெடுநார்ப் பிணித்துயாத்துக் கைஉளர்வின்
யாழிசை கொண்ட இனவண்டு இமிர்ந்துஆர்ப்பத்
தாழாது உறைக்கும் தடமலர்த் தண்தாழை
வீழ்ஊசல் தூங்கப் பெறின்.

மாழை, மடமான் பிணையியல் வென்றாய்!நின் ஊசல்
கடைஇயான் இகுப்பநீடு ஊங்காய்! தடமென்தோள்
நீத்தான் திறங்கள் பகர்ந்து.

நாணினகொல் தோழி நாணினகொல் தோழி
இரவெலாம் நல்தோழி நாணின என்பவை,
வாள்நிலா ஏய்க்கும் வயங்குஒளி எக்கர்மேல்
ஆனாப் பரிய அலவன் அளைபுகூஉம்
கானல் கமழ்ஞாழல் வீஏய்ப்பத் தோழி!என்
மேனி சிதைத்தான் துறை.

மாரிவீழ் இரும்கூந்தல் மதைஇயநோக்கு எழில்உண்கண்
தாழ்நீர முத்தின் தகைஏய்க்கும் முறுவலாய்!

தேயாநோய் செய்தான் திறம்கிளந்து நாம்பாடும்
சேய்உயர் ஊசல்சீர் நீஒன்று பாடித்தை.

பார்த்துஉற் றனதோழி பார்த்துஉற் றனதோழி
இரவெலாம் நற்றோழி! பார்த்துற்றன என்பவை
'தன்துணை இல்லாள் வருந்தினாள் கொல்'என
இன்துணை அன்றில் இரவின் அகவாவே
அன்று,தான் ஈர்த்த கரும்புஅணி வாடஎன்
மென்தோள் ஞெகிழ்த்தான் துறை.

தலைவி கூற்று

கரைகவர் கொடுங்கழிக் கண்கவர் புள்ளினம்
திரைஉறப் பொன்றிய புலவுமீன் அல்லதை
இரைஉயிர் செகுத்துஉண்ணாத் துறைவனை யாம்பாடும்
அசைவரல் ஊசற்சீர் அழித்தொன்று பாடித்தை.

அருளினகொல் தோழி அருளினகொல் தோழி
இரவெலாம் தோழி அருளின என்பவை
கணங்கொள் இடுமணற் காவி வருந்தப்
பிணங்குஇரும் மோட்ட திரைவந்து அளிக்கும்
மணங்கமழ் ஐம்பாலார் ஊடலை ஆங்கே
வணங்கி உணர்ப்பான் துறை.

எனநாம் –
பாட மறைநின்று கேட்டனன் நீடிய
வால்நீர்க் கிடக்கை வயங்குநீர்ச் சேர்ப்பனை
யான்என உணர்ந்து நீநனி மருளத்
தேன்இமிர் புன்னை பொருந்தித்
தான்ஊக் கினன்அவ் ஊசலை வந்தே.

தெளிவுரை

தலைவன் சிறிது காலம் காணச் செல்லாதிருந்த காலத்தில் தலைவி வருந்திக் கொண்டிருந்தாள். அப்பொழுது தலைவன் வருகையை அறிந்துகொண்ட தோழி, கடற்கரைச்சோலைக்குத் தலைவியை அழைத்துச் சென்றாள். தலைவன் அங்கு

வந்திருப்பதை அறியாதவர்கள்போலத் தலைவி, தோழி ஆகிய இருவருமே நடந்து கொண்டனர்.

அச்சோலையில் தோழி ஊஞ்சல் ஒன்றை அமைத்தாள். அந்த ஊஞ்சலின் பலகை, தன் இனமான மீன்களுள் தன்னை எதிர்த்த அனைத்தையும் தாக்கி வெல்லும் சினம் கொண்ட சுறாமீனின் எலும்புகளால் ஆனது; ஊஞ்சல் கட்டும் கயிறு தாழை யின் விழுதால் ஆனது; நீண்ட நாரில் நெய்தற்பூக்களைக் கட்டித் தொடுக்கப்பட்ட மலர் மாலையால் ஊஞ்சல் அழகு படுத்தப் பெற்றது. கையால் மீட்டி எழுப்பும் யாழிசைபோல வண்டினங்கள் அங்கு ஆரவாரம் செய்கின்றன.

அந்த ஊஞ்சலில், தலைவியை உட்கார வைத்த தோழி, தலைவியை நோக்கி, "காண்பாரை வருத்தும் இயல்பு வாய்ந்த பூப் போன்ற மையுண்ட அழகிய கண்களையும், இனிய சாயலையும் கொண்டவளே! முதன்முதலாய் உன்னைச் சந்தித்தபோது பெருங்கடல் தெய்வத்தைச் சாட்சியாய்க் கூறி, 'உன்னைப் பிரிய மாட்டேன்' என்று உன் தலைவன் சொன்னான்; பின் உன் மெல்லிய தோளைத் தழுவிக் கூடினான்; பின்னர்ப் பிரிந்தான். அதனால் உனக்குண்டாகிய பெரிய வருத்தத்தை உணர்ந்த அந்தப் பெருங்கடல் தெய்வம், தன்னிடமுள்ள நீர்த்துளிகளை உன்மேல் தெளித்து உன் அருந்துயரை நீக்குவதாய்க் கூறுகிறது; அதனைக் காண்" என்று, கரையை நோக்கி வரும் கடல் அலைகளைக் காட்டிப் பின்னர் ஊஞ்சலாடுமாறு கூறினாள்.

ஊஞ்சலில் அமர்ந்த தலைவியை நோக்கி, "இளமை பொருந்திய பெண்மானின் நோக்கினைக் கொண்டவளே! அகன்ற மென்மையான உன் தோளைத் தழுவிப் பிரிந்தவனைப் பற்றிப் பாடிக்கொண்டே ஊஞ்சலாடு; நீ பாடும் பாட்டில் அவன் இழைத்த கொடுமைகளைக் கூறிப் பாடு; அதனைக் கேட்டு அவன் தன் குற்றம் உணர்ந்து உன்னைக் காண வருவான்; நான் ஊஞ்சலை உயர்த்தித் தாழ்த்தி ஆட்டுகிறேன்" என்று தோழி கூறினாள்.

தலைவி பாடுவதாய்த் தோழி பாடுதல்

தலைவனது இயல்பைப் பழித்துக் கூறத் தலைவி தயங்கினாள்; அது கண்ட தோழி, தானே தலைவனை இயற்பழித்துப் பாடத் தொடங்கி ஊஞ்சலையும் ஆட்டுவித்தாள். தோழி பாடினும், அது தலைவி தலைவனைப்பற்றிப் பாடுவதுபோலவே அமைந் துள்ளது.

"கடற்கானலில் பூக்கும் ஞாழற்பூவின் நிறத்தை ஒத்த என் மேனி பசலையுற்றுச் சிதைவுறச் செய்தவனது கடல் துறையில், நிலாவொளி போன்ற மணலின் மேலே ஓடும் நண்டுகள் தத்தம் வளைகளில் புகுந்துகொள்கின்றன; அவ்வாறு வளையுள் புகக் காரணந்தான் என்ன! அந்தக் கடல் துறைவன் எனக்குச் செய்த கொடுமையைக் கண்டு நாணமுற்று வளைகளுக்குள் போய் மறைந்துகொள்கின்றனவோ!" என்று தலைவி தலைவனை இயற்பழிப்பதுபோலத் தோழியே ஊசற்பாட்டைப் பாடி ஊஞ்சலையும் ஆட்டினாள்.

மீண்டும் தோழி தலைவியை நோக்கித் தலைவன் இயல்பைப் பழித்துப் பாடுமாறு கூற, தலைவி அவ்வாறு பழிக்க மன மில்லாதவளாய்ப் பாடாமலேயே இருக்கத் தோழியே தொடர்ந்து பாடினாள்.

"கருமேகத்தையும் வெல்லும் நிறம் கொண்ட கூந்தலையும், மதர்த்த பார்வை கொண்டு அழகுடன் விளங்கும் மை தீட்டிய கண்களையும், கடலில் தோன்றும் முத்துகளைப் போன்ற முறுவலையும் கொண்டவளே! குறையாமல் வளர்ந்துகொண்டே யிருக்கும் காமநோயைக் கொடுத்தவனின் கொடுமையைச் சொல்லிச்சொல்லிப் பாடுகின்ற ஊஞ்சல் பாட்டை நீயும் பாடு வாயாக" என்று தலைவி தோழியிடம் சொல்வது போன்ற ஊசற்பாடலைத் தோழியே பாடினாள்.

'ஊசற்பாட்டு ஒன்றை நீ பாடு' என்று மீண்டும் மீண்டும் தோழி தலைவியிடம் கேட்டுக்கொண்டும் அவள் பாடாமலே இருந்ததைக் கண்ட தோழி, "அன்றொரு நாள், அவன் வந்து முயங்கிய போழ்து, அவனே வரைந்த கரும்புத்தொய்யிலின் அழகு கெடுமாறு, என் தோளை மெலிவித்தான். அவனது கடற்கரையில் வாழும் அன்றிற்பறவைகள் இரவெல்லாம் என்

வருத்தத்தை நோக்கி, அவையும் வருந்தின போலும். அதனால் தான் அப்பறவைகள் ஒலி எதையும் எழுப்பாமல் இருந்தனவோ? துணையொடு அமர்ந்த அன்றிற்பறவைகள், 'தன் துணைவனை நீங்கி வருந்தினாளோ இவள்' என்று என் வருத்தத்தைக் கண்டு வருந்திக்கொண்டிருந்தன" என்னும் பொருள்படத் தலைவி பாடியதுபோலத் தோழி பாடினாள்.

தலைவி தோழியிடம்

இவ்வாறு, தலைவனை இயற்பழித்துக் கூறும் ஊசற் பாட்டைப் பாடுகின்ற தோழியை நோக்கித் தலைவி, "கரைகள் தகர்ந்து காணப்படும் கடற்கழியில் ஒதுங்கும் இறந்துபோன மீன்களையல்லாமல் வேறு உயிருள்ள மீன்களைக் கவர்ந்து உண்ணாத அழகிய பறவைகள் நம் தலைவனின் துறையில் காணப்படுகின்றன. பறவைகளே அருளுடையவையாய் இருக்கும்போழ்து, என் துறைவன் அருள் இன்றி இருப்பானா? அத்தகையவனை நீ இயற்பழித்துப் பாடாமல், இயற்பட ஒரு பாட்டைப் பாடி ஊஞ்சலை ஆட்டு" என்று கூறினாள்.

அப்படிப் பாட தோழி முற்படவில்லை. எனவே, தலைவியே இயற்படப் பாட முற்பட்டாள். "மணம் கமழும் ஐம்பாலினரான மகளிரின் ஊடலை, அவரைப் பணிந்து முறையாய்த் தீர்த் தருளும் பண்பு வாய்ந்தவன், துறைவன். அவனது கடல் துறையில், திரள்திரளாய் வந்து மூடுகின்ற இடுமணலுள் குவளைப்பூக்கள் சிக்கிக்கொண்ட பொழுது, கடலிலிருந்து எழுந்து வரும் அலைகள் அவற்றை அழியாமல் காக்கும் கடல் துறையைக் கொண்டவன், நம் துறைவன். அவன் நமக்கு அருளாதிருக்க இயலுமோ!" என்று தலைவி ஊசற்பாட்டு ஒன்றைப் பாடினாள்.

தலைவன் அருள் செய்வான்

தலைவியும் தோழியும் அறியாமலேயே அங்கு வந்திருந்த தலைவன் புன்னை மரத்திற்குப் பின் மறைந்து நின்று, தலைவி இயற்பட மொழிந்ததைக் கேட்டு, மகிழ்ந்து, தலைவி இருக்குமிடம் சென்று அவளைக் கண்ட போழ்து, ஊஞ்சலை ஆட்டுமாறு தலைவனிடம் தோழி வேண்டிக்கொண்டாள்; அவனும் அவ்வாறு அருளினான்.

முன்பொரு முறை நடந்த இந்த நிகழ்ச்சியைத் தோழி தலைவியிடம் விளக்கும்போழ்து, "தலைவனின் இயல்பை நான் பழித்தும், நீ இயற்பட மொழிந்தும் பாடினோம். மறைவாய் நின்று பாட்டைக் கேட்டுக்கொண்டிருந்த தலைவன் வந்தபோது, ஊஞ்சலை ஆட்டுமாறு அவனிடம் கூறினேன். அவனும் அவ்வாறே செய்தருளினான்; அது போலவே, அவன் மீண்டும் உன்னிடம் வந்து உனக்கு அருள் செய்வான். நீ வருந்தாமலிரு" என்று கூறினாள்.

கருத்து

அவன் எவ்வாறேனும் விரைவில் வந்து உன்னை மணந்துகொள்வான் என்று கூறித் தோழி, தலைவியின் துன்பத்தை நீக்கினாள்.

குறிப்பு

தலைவியைக் காதலித்த தலைவன் அவளை வரைந்துகொள்ளாமல் பிரிந்திருந்தான். அதனால் வருந்திக்கொண்டிருந்த அவளுக்கு அவள் உயிர்த்தோழி, முன்னம் நடந்த நிகழ்வு ஒன்றனை நினைவூட்டி, 'அவன் எப்படியும் விரைவில் வந்து உன்னை வரைந்துகொள்வான்' என்று ஆறுதல் கூறி அவள் துன்பத்தை நீக்கினாள். இச்செய்தியைக் கூறுவதே இப்பாடல்.

விளக்கம்

1. *நெய்தல்நில மக்கள், சுறாமீனின் எலும்புகளால் ஆன பலகையினைத் தாழையின் விழுதுகளில் கட்டி ஊஞ்சல் ஆடியிருக்கின்றனர். ஊசலில் ஆடுங்கால் இசையுடன் பாடும் மரபும் இருந்திருக்கிறது.*

2. **தலைவன் இயல்பைப் பழித்துப் பாடியது :** *தலைவன் செய்யும் கொடுமையை அறிந்ததனாலேயே கடல்மணலில் நிலவில் ஓடியாடும் நண்டுகள், அலைக்குள் ஓடித் தம்மை மறைத்துக் கொள்ளுகின்றன.*

   தலைவியைப் பிரிந்து தலைவன் அவளுக்குத் தந்துள்ள வருத்தத்தை அறிந்ததனாலேயே அவன் நாட்டு அன்றில்கள் வருந்தி இரவெல்லாம் ஒலியெழுப்பாது அமைதியாயுள்ளன.

தலைவனின் நல்லியல்பைப் பாடியது: *அவனது துறையில் உள்ள பறவைகள், அலைகள் கரையில் கொண்டுவந்து ஒதுக்கிய இறந்த மீன்களை உண்ணுமேயல்லாது ஒன்றன் உயிர் செகுத்து உண்ணா. (பறவைகளே இத்தகைய அருளுடையவையா யிருக்கும்போது அவன் அருளில்லாமல் இருப்பானா?)*

கழியிலுள்ள காவி மலர்களை மணல் திரண்டுவந்து மறைத்து அழுத்தித் துன்புறுத்த, அதனைக் கண்டு கடல், அலைகளை வீசி மூடியுள்ள மணலைக் கரைத்து மலர்களின் துன்பத்தைப் போக்கும். (அவன் நாட்டுக் கடலே இத்தகு இரக்க குணம் கொண்டிருக்கிறது என்றால் அவன் இரக்கம் காட்டாமல் இருப்பானா?)

சொற்பொருள்

1. பெருங்கடல் தெய்வம் - பெருங்கடலாகிய தெய்வம்; நீர் நோக்கி - கடல்நீரைச் சாட்சியாய்க் கொண்டு; தெளித்து - உன்னை என்றும் பிரியேன் என்று என்னைத் தெளிவித்து.
2. மணந்தவன் - கூடியவன்.
3. போன்ம்மன் - போல்மன் - போன்றது.
4. கவின் - அழகு; உண்கண் - மையுண்ட கண்.
5. அணங்குஆக்கும் - வருத்தம் உண்டாக்கும்.
6. இகல்மாற - மாறுபாடு கெட.
7. எறி - தாக்கிக் கொல்லும்; சுறா - சுறாமீன்; வான்மருப்பு - வெண்மையான கொம்பு; கோத்து - இணைத்து; நெறிசெய்த - ஒழுங்கு பண்ணிய.
8. கை உளர்வின் - கையால் மீட்டி இசைக்கப்படும்.
9. இமிர்ந்து - ஒலித்து; ஆர்ப்ப - ஆரவாரிக்க.
10. தாழாது உறைக்கும் - குறைவின்றித் தேன் துளிர்க்கும்.
11. வீழ்ஊசல் - விழுதினால் கட்டப்பெற்ற ஊசல்; தூங்குதல் - ஆடுதல், அசைதல்.
12. மாழை - அழகு; மடம் - இளமை; பிணை - பெண்மான்.
13. கடைஇ - உயரத் தூக்கி; இகுப்ப - தாழ்த்து ஆட்ட; நீடு ஊங்காய் - நீண்ட பொழுது ஆடினாய்.
14. நீத்தான் - நம்மை விட்டு நீங்கியவன்; திறம் - தன்மை (குற்றங்கள்).
15. நாணின - நாணமுற்றன.

17. வாள்நிலா - வெண்ணிலா; வயங்குஒளி - ஒளி விளங்கும்.
18. ஆனாப் பரிய அலவன் - சிறிதளவு நேரமும் ஓய்ந்திராது ஓடி ஆடும் நண்டு; அளை - வளை.
19. கமழ்ஞாழல் - மணம் வீசும் ஞாழல் மரம்; வீ - மலர்.
20. சிதைத்தான் - அழித்தவன்.
21. மாரிவீழ் - மழை மேகம் விரும்பும்; இரும் - கரிய; மதைஇய - மருண்ட.
22. தாழ்நீர - ஆழ்கடலில் உண்டாகும்; தகை - தன்மை, குணம்.
23. தேயா - குறையாத; கிளந்து - சொல்லி.
24. பாடித்தை - பாடுவாயாக.
25. உற்றன - வருத்தம் உற்றன.
28. இன்துணை அன்றில் - தன் இனிய துணையோடிருக்கும் அன்றில் பறவை; அகவா - கூவா
29. ஈர்த்த - எழுதிய; கரும்பு அணி - கரும்பு போல் தீட்டிய கோலம்.
30. ஞெகிழ்த்தான் - மெலிவித்தவன்.
31. கரைகவர் - கரைகள் தகர்ந்த; புள்ளினம் - பறவைக்கூட்டம்.
32. திரைஉற - அலையால் கரை சேர்க்கப்பட்ட; பொன்றிய - இறந்த.
33. உயிர் செகுத்து - உயிரைக் கொன்று.
34. அசைவரல் - அசைந்து வருகின்ற; அழித்து - முன்பு கூறியமைக்கு மாறுபட்டு. (அஃதாவது முன் இழித்துப் பாடியதைக் கைவிட்டுப் புகழ்ந்து).
37. காவி - குவளை மலர், நீலமலர்.
38. இரும் மோட்ட - மிக உயர்ந்த.
39. ஐம்பாலார் - ஐந்து வகையாய்ப் பகுத்து அழகு செய்யப்பட்ட கூந்தலைக் கொண்டவர் (காதலியர்); ஊட - பிணங்க.
40. உணர்ப்பான் - தீர்ப்பவன்.
42. மறைநின்று - மறைந்து நின்று.
43. வால்நீர்க் கிடக்கை - வெண்ணிறம் விளங்கும் நீர்ப்பரப்பு; சேர்ப்பன் - கடல்நிலத் தலைவன்.
44. மருள - மருட்சி கொள்ள.
45. தேன் - தேனீக்கள்; இமிர் - ஒலிக்கும்.
46. ஊக்கினன் - ஆட்டினன்.

தலைவி கூற்று

நற்றிணை 309 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவுநீட ஆற்றாள் எனக் கவன்று தான் ஆற்றாளாகிய தோழியைத் தலைமகள் ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

தலைவன் திருமணம் செய்துகொள்வதில் காலம் நீட்டித்தான். அதனால், தலைவி வருந்துவளே என்று தோழி கவலையுற்றாள். தோழியின் வருத்தத்தைக் கண்ட தலைவி, 'தலைவன் வரும்வரை ஆற்றியிருப்பேன்; வருந்தாதே' என அவளை ஆற்றுவித்தது.

நெகிழ்ந்த தோளும், வாடிய வரியும்,
தளிர்வனப்பு இழந்தஎன் நிறனும் நோக்கி,
'யாண்செய் தன்றுஇவள்' துயர்என, அன்பின்
ஆழல் வாழி தோழி! 'வாழைக்
கொழுமடல் அகல்இலைத் தளிதலைக் கலாவும்,
பெருமலை நாடன் கேண்மை நமக்கே
விழுமம் ஆக அறியுநர் இன்றுஎனக்
கூறுவை மன்னோ நீயே;
தேறுவன் மன்யான், அவருடை நட்பே.

தெளிவுரை

"(தலைவி தோழியை நோக்கி,) தோழியே! தளர்வடைந்துள்ள என் தோளையும், வாட்டமுற்றுள்ள தொய்யில் வரியையும், மாந்தளிர் போன்ற என் மேனி நிறம் மாறி அழகிழந்த நிலையையும் கண்டு, 'தலைவிக்கு இத்துன்பங்களெல்லாம் என்னால் தானே ஏற்பட்டன' என்று கருதி, என்னிடம் கொண்டுள்ள அன்பின் மிகுதியால் அழாதே! நெடுங்காலம் நீ வாழ்க! 'வாழையின் செழிப்பான அகன்ற இலைக்கு அடிப்பகுதியில் மழைத்துளிகள் பொருந்தியிருக்கும் (தேங்கி நிற்கும்). இத்தகைய வளம் பொருந்திய மலைநாட்டிற்கு உரியவனோடு கொண்டுள்ள நட்பு நமக்குத் துன்பம் தந்தது; அதை அவர் அறியவில்லையே'

என நீ கூறுகின்றாய். ஆயினும், அவர் நட்பின் உறுதியை நான் நன்றாய் அறிந்திருக்கிறேன். ஆதலின், அவர் வரும்வரை நான் பொறுத்திருப்பேன். நீ வருந்தாதே" என்று கூறினாள்.

கருத்து

தோழியே! தலைவன் வரும்வரை நான் ஆற்றியிருப்பேன்; நீ வருந்தாதே.

விளக்கம்

தலைவன், தலைவி ஆகியோர் காதல் வளரவும் உறுதி பெறவும் உதவியவள், தோழி; ஆதலால், தன்னால்தானே தலைவிக்கு இத்துயர் ஏற்பட்டது என்று தோழி வருந்துகிறாள். 'தலைவன் நட்பின் உறுதியை அறிவேன்; அவர் வரும்வரை ஆற்றியிருப்பேன்; நீ வருந்தாதே' எனத் தலைவி தோழியைத் தேற்றுகிறாள்.

சொற்பொருள்

1. வாடிய வரியும் - வாட்டமுற்றுள்ள தொய்யில் வரியையும்.
2. தளிர் வனப்பு - மாந்தளிர் போன்ற அழகு; இழந்த - நீங்கிய; என் நிறனும் - என் நிறத்தையும்; நோக்கி - பார்த்து.
3. யான் செய்தன்று இவள் துயர் - தலைவிக்கு இத்துன்பங்களெல்லாம் என்னால்தானே ஏற்பட்டன; என - என்று நினைத்து; அன்பின் - என்னிடம் கொண்டுள்ள அன்பின் மிகுதியால்.
4. ஆழல் - அழாதே.
5. தளிதலைக் கலாவும் - மழைத்துளிகள் தேங்கி நிற்கும்.
6. கேண்மை - உறவு.
7. விழுமம் ஆக - நமக்குத் துன்பம் தந்ததை; அறியுநர் இன்று - அவர் அறிந்தார் இலர்.
8. நீயே கூறுவை மன்னோ - நீயே கூறுவாயாயினும்.
9. அவருடை நட்பு - அவருடன் நான் கொண்ட நட்பின் உறுதியை; தேறுவன் மன் - நான் நன்றாய் அறிந்திருக்கிறேன்.

தலைவி கூற்று

நற்றிணை 357 **குறமகள் குறியெயினி**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் வரைவு நீடிய இடத்து, ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைவு மேற்கொள்ளாமல் களவிலேயே காலத்தை நீட்டித்துக் கொண்டிருந்தான். தலைவி ஆற்றாமை மிகுந்து வருந்துவளே எனத் தோழி வருந்தினாள். அதனையுணர்ந்த தலைவி தன்னால் ஆற்றியிருக்க இயலும் என்று கூறியது.

நின்குறிப்பு எவனோ? தோழி! என்குறிப்பு
என்னொடு நிலையாது ஆயினும், என்றும்
நெஞ்சு வடுப்படுத்துக் கெடஅறி யாதே
சேண்உறத் தோன்றும் குன்றத்துக் கவாஅன்,
பெயல்உழந்து உலறிய மணிப்பொறிக் குடுமிப்
பீலி மஞ்ஞை ஆலும் சோலை,
அம்கண் அறைய அகல்வாய்ப் பைஞ்சுனை
உண்கண் ஒப்பின் நீலம் அடைச்சி,
நீர்அலைக் கலைஇய கண்ணிச்
சாரல் நாடனொடு ஆடிய நாளே.

தெளிவுரை

"தோழி! என் கருத்து என்னோடு நிலைத்திராது என்றாலும் என் நெஞ்சைப் புண்படுத்திக் கெடுக்க அறியாதது. நெடுந் தொலைவில் தோன்றும் மலைப்பக்கத்திலே மழையில் நனைந்து சிலிர்த்த நீலமணி நிறம் போன்ற புள்ளிகளைக் கொண்ட குடுமியையும், தோகையையும் கொண்ட மயில்கள் சோலையில் ஆடிக்கொண்டிருந்தன. அச்சோலைக்குப் பக்கத்தே அழகிய பாறையில் அமைந்துள்ள அகன்ற வாயுள்ள குளிர்ச்சி பொருந்திய சுனையில், மையுண்ட கண்களை ஒத்த குவளை மலர்களைக் கொய்தபடி தலைவனுடன் நான் நீராடி மகிழ்ந் திருந்தேன். அச்சுனை நீர் அலைத்தலால் கலைந்துபோன தலைமாலையினையுடைய அச்சாரல் நாடனோடு ஆடிய அந்த

இன்பமான நாள்களை என்றுமே மறக்க இயலுமா? உன் கருத்து யாது எனக் கூறு."

கருத்து

தோழியே! தலைவனை மறத்தற்கு அரிது; அவன் வரும்வரை ஆற்றி யிருப்பேன்.

விளக்கம்

'காதல் நாடனொடு மகிழ்ந்து சுனையாடி இன்புற்ற அந்த நினைவை என் நெஞ்சம் என்றும் மறவாது. ஆதலின், அந்நினைவையே பற்றிக்கொண்டு அவன் வரும்வரை ஆற்றி யிருப்பேன்' என்கிறாள், தலைவி.

தலைவியின் மனவுறுதியறிந்த தோழியும் மிகவும் மன அமைதி பெறுகிறாள்.

இறைச்சி

மழையால் நனைந்த மயில், சோலையில் ஆடிக் களிக்கும் என்பதன் வாயிலாய், தலைவனால் தலையளி செய்யப்பெற்ற தலைவி, அந்த இன்ப நினைவிலேயே களித்திருப்பாள் என்னும் கருத்துப் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. நின் குறிப்பு எவன்? - உன் கருத்து யாது?
2. நிலையாது - நிலைத்திராது.
3. வடுப்படுத்து - புண்படுத்தி; கெட அறியாது - கெடுக்க அறியாதது.
4. சேண்உற - நெடுந்தொலைவில்; கவான் - சாரல்.
5. பெயல் உழந்து - மழையில் நனைந்து; உலறிய - உலர்ந்த; மணிப் பொறி - நீலமணி போன்ற புள்ளிகளைக் கொண்ட.
6. பீலி - தோகை; மஞ்ஞை - மயில்; ஆலும் - ஆடும்.
7. அம்கண் - அழகிய இடம்; அறை - பாறை; அகல்வாய் - அகன்ற வாயைக் கொண்ட.
8. உண்கண் - மையுண்ட கண்; ஒப்பின் - போன்ற; நீலம் - குவளை மலர்; அடைச்சி - கொய்தபடி.
9. நீர் அலை - நீர் அலைத்தலால்; கலைஇய - கலைந்துபோன; கண்ணி - தலைமாலை.
10. ஆடிய நாள் - சுனையாடிய நாள் (அந்நாள்களை என்றுமே மறக்க இயலுமா?)

தலைவி கூற்று

நற்றிணை 388 **மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவு நீட ஆற்றாளாகிய தோழிக்குத் தலைமகன் சிறைப்புறமாகத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

திருமணம் செய்துகொள்வதற்காகத் தலைவன் பொருளீட்டச் சென்றான். அவன் வருவதில் சற்றுக் காலத்தாழ்வு ஏற்பட்டது. அதனால் தலைவி கலங்கினாள். அச்சமயத்தில் தலைவன் வந்து ஒருசார் தங்கியிருந்தான். தலைவன் வரைவு மேற்கொள்ளாது காலம் கடத்துவதாய்த் தோழி ஐயுற்றாள். தலைவியோ தலைவன்மீது பெருநம்பிக்கை கொண்டவளாய்க் கூறியது.

அம்ம வாழி தோழி! – நன்னுதற்கு
யாங்கா கின்றுகொல் பசப்பே; நோன்புரிக்
கயிறுகடை யாத்த கடுநடை எறிஉளித்
திண்திமில் பரதவர் ஒண்சுடர்க் கொளீஇ
நடுநாள் வேட்டம் போகி, வைகறைக்
கடல்மீன் தந்து கானற் குவைஇ,
ஓங்கிரும் புன்னை வரிநிழல் இருந்து,
தேங்கமழ் தேறல் கிளையொடு மாந்திப்
பெரிய மகிழும் துறைவன்;எம்
சிறிய நெஞ்சத்து அகல்வறி யானே!

தெளிவுரை

உறுதிமிக்க படகுகளைக் கொண்ட பரதவர்கள், வலிமையான புரிகளைக் கொண்ட கயிற்றின் நுனியில் திமிங்கிலத்தின்மீது எறிகின்ற உளியினைக் கட்டிக் கைகளிலே வைத்துக் கொண்டும், ஒளி விளக்குகளை ஏற்றிக்கொண்டும் நள்ளிரவில் மீன் வேட்டைக்குச் செல்வர். வேட்டையில் கிடைத்த மீன்களை விடியற்காலையில் கொண்டுவந்து கடற்கரைச்சோலையில் குவிப்பர். பின்னர், உயர்ந்த கரிய புன்னை மரங்களின் நிழலில் அமர்ந்து, தேன் மணம் கமழும் கள்ளினைத் தம் சுற்றத்தா ரோடும் சேர்ந்து குடித்து மகிழ்ந்திருப்பர். அத்தகைய கடல்

துறையைக் கொண்டவன், தலைவன். அவன் என் நெஞ்சத்திலிருந்து ஒருபோதும் நீங்குவதில்லை. அப்படியிருக்க என் நெற்றியில் பசலை நோய் எங்ஙனம் உண்டாகும்?

கருத்து

தோழி! தலைவன் என் நெஞ்சில் நீங்காது குடிகொண்டிருப்பதால் நான் அவன் பிரிவை நினைந்து வருந்தவில்லை.

விளக்கம்

வைகறையில் கரை சேர்ந்த பரதவர், தாம் கொண்டுவந்த மீன்களைக் கடற்சோலை மணற்பரப்பில் குவித்துவிட்டு, வெயிலேறியதும் புன்னை மர நிழலில் உறவினர்களோடு சேர்ந்து தேறல் உண்டு மகிழ்வர். இத்தகைய கடல் துறையைக் கொண்டவன், நம் தலைவன். அவன் எப்போதும் என் நெஞ்சத்திலிருந்து நீங்குவது இல்லை. ஆதலால், என் நுதல் பசப்படையக் காரணம் இல்லை.

உள்ளுறை

இரவில் மீன் வேட்டைக்குச் சென்ற பரதவர் வைகறையில் மீன்களைக் கானற்சோலையில் குவித்து, புன்னை நிழலிலிருந்து, கிளைஞருடன் கூடிக் கள்ளுண்டு மகிழ்வர். இத்தொடர்மூலம், தலைவன் தேரோடு வேற்று நாட்டுக்குச் சென்று, பொருளீட்டி வந்து, தலைவி வீட்டு முன்றிலிலே குவித்து, சுற்றத்தாரோடு மகிழ்ந்து, தலைவியை மணந்து, அவள் நலனை நுகர்ந்து மகிழ்வான் என்னும் கருத்துப் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. நன்னுதற்கு - நல்ல நெற்றியிடத்தில்.
2. பசப்பு யாங்காகின்று - பசப்பு எங்ஙனம் உண்டாகும்?; நோன்புரி - வலிமையான புரி.
3. கடையாத்த - (கயிற்றின்) நுனியிலே கோத்துக் கட்டப்பட்ட; கடுநடை - மிக விரைவுடன் செல்லும்; எறி உளி - எறியும் உளி.
4. திண்திமில் - உறுதிமிக்க படகுகள்; ஒண்சுடர் - ஒளி விளக்குகள்; கொளீஇ - ஏற்றிக்கொண்டு.
5. நடுநாள் - நள்ளிரவு, யாமம்; வேட்டம் - மீன் வேட்டை; வைகறை - விடியற்காலை.

6. கானல் - கடற்கரைச்சோலை; குவைஇ - குவித்து.
7. வரி நிழல் - வரிகள் பொருந்திய நிழல்.
8. தேன் கமழ் தேறல் - தேன் மணம் கமழ்கின்ற கள்; கிளையொடு - உறவினரோடு; மாந்தி - குடித்து.
9. பெரிய மகிழும் - பெருமகிழ்ச்சி கொள்ளும்.
10. அகல்வறியான் - நீங்குவது இலன்.

தலைவி கூற்று

நற்றிணை 116 **கந்தரத்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு நீட்டிப்ப ஆற்றாளாய தலைமகள், தோழிக்கு வன்புறை எதிரழிந்து சொல்லியது. (வன்புறை எதிரழிதல் - தோழி வற்புறுத்தியதனை ஏற்காது தலைமகள் வருந்திக் கூறல்.)

கூற்று விளக்கம்

தலைவன் மணம் புரிந்துகொள்ளாது நீட்டிக்கிறான். அதனால் தலைவி ஆற்றாமை மிக்கு வருந்தினாள். 'தலைவன் விரைவில் வந்துவிடுவான்; பொறுத்திரு' என்றாள், தோழி. தலைவி அதற்கு மறுமொழியாய், 'நம் தலைவன் நம்மிடம் கொண்ட நட்பானது தொடர்பின்றி ஒழிந்த பின்னும் ஊரவர் அலர் தூற்றுகின்றனரே' என வருந்திக் கூறியது.

'தீமை கண்டோர் திறத்தும் பெரியோர்
தாம்அறிந்து உணர்க' என்ப மாதோ;
வழுவப் பிண்டம் நாப்பண் ஏமுற்று,
இருவெதிர் ஈன்ற வேல்தலைக் கொழுமுளை,
சூல்முதிர் மடப்பிடி, நாள்மேயல் ஆரும்
மலைகெழு நாடன் கேண்மை, பலவின்
மாச்சினை துறந்த கோள்முதிர் பெரும்பழம்
விடர்அளை வீழ்ந்துஉக்கா ஆங்கு, தொடர்புஅறச்
சேணும் சென்றுஉக் கன்றே; அறியாது
ஏகல் அடுக்கத்து இருள்முகை இருந்த
குறிஞ்சி நல்ஊர்ப் பெண்டிர்
இன்னும் ஓவார், என்திறந்து அலரே!

தெளிவுரை

"சூல் முதிர்ந்த இளைய பெண்யானை தனது அறியாமை யினாலே இறுமாப்புற்றதாய்த் தன் வயிற்றுக் கருப்பிண்டம் நழுவி விழுமாறு, பெருமூங்கில்களிலே துளிர்த்திருக்கும் வேல் போன்ற கொழுமையான முளைகளை விடியற்காலையிலே சென்று உண்ணும் மலைநாட்டுக்குரியவன், நம் தலைவன்.

பலா மரத்தின் கரிய கிளையிலிருந்து விழும் நன்கு காய்த்து முதிர்ந்த பெரிய பழம் பிறர் உண்ண இயலாதவாறு மலைப் பிளவிடத்தில் விழுந்ததுபோல, நாம் தலைவனிடத்துக் கொண்ட நட்பானது, பல நாள்களுக்கு முன்பே தொடர்பற்று முற்றும் நீங்கிவிட்டது. அதனையறியாது, பெரிய மலையகத்து இருள்செறிந்த குன்றுகள் நிறைந்த குறிஞ்சி நிலத்தின் நல்ல ஊரில் வாழும் பெண்டிர் அலர் தூற்றி என்னை வருத்துவதைக் கைவிடவில்லை. ஒருவர் கொடிய தீச்செயல் செய்வதை நேரில் கண்டபோதும், அதனை நன்கு ஆராய்ந்து அறிந்த பின்னரே, அவரைத் தீயவரென உணர்தல் வேண்டும். அவ்வாறன்றி, ஊரார் என்னைப்பற்றி இன்னும் பழிச்சொல் கூறி வருவதை நான் எவ்வாறு பொறுத்திருக்க இயலும்?" என்று தலைவி வருந்திக் கூறினாள்.

கருத்து

தோழி! தலைவன் நட்புப் பிழைத்தனன்; அதனை யான் மறக்க முயன்றாலும், அவனையும் என்னையும் சேர்த்து இவ்வூரவர் கூறும் பழியுரைகளால் என் நோய் மிகுதிப்படுகிறது; யான் எவ்விதம் ஆற்றி யிருக்க இயலும்?

உள்ளுறை

சூல் முற்றிய யானை, தன் வயிற்றுப்பிண்டம் கலைந்துவிடும் என்பதை அறியாமல், 'மூங்கில் முளைகளைச் சுவை கருதித் தின்னும். அவ்வாறே, என் உயிரானது அவன் உறவின் பயனாகவே உடலைவிட்டு வழுவிப் போம் என்பதனை அறியாராய் இவ் வூரவர் அலரெடுத்துத் தூற்றுகின்றனர்' என்கிறாள், தலைவி.

சொற்பொருள்

1. தீமை கண்டோர் - தீமை செய்பவரிடத்துத் தீமையை நேரிற் கண்டபொழுதும்.
2. தாம் அறிந்து உணர்க - அதனை நன்கு ஆராய்ந்து அறிந்த பின்னரே உண்மை எனக் கொள்ள வேண்டும்.
3. வழுவ - விழுமாறு; பிண்டம் - முதிராத சூல்; நாப்பண் - (மூங்கில்கள் நிறைந்த காட்டிற்கு) நடுவே; ஏமுற்று - மயங்கி.
4. இருவெதிர் ஈன்ற - பெரிய 'வெதிர்' என்னும் ஒருவகை மூங்கிலில் உண்டான; வேல்தலை - வேற்படை போன்ற; கொழுமுளை - கொழுவிய முளையை.
5. சூல் முதிர் - கருப்பம் நிரம்பிய; மடப்பிடி - இளமையான பெண்யானை; நாள்மேயல் ஆரும் - நாள் காலையில் சென்று மேய்ந்துண்ணும்.
6. கேண்மை - உறவு; பலவின் - பலா மரத்தின்.
7. மாச்சினை - பெரிய கிளையினின்றும்; துறந்த - வீழ்ந்த; கோள் முதிர் - நன்கு காய்த்து முதிர்ந்த; பெரும் பழம் - பெரிய பழம்.
8. விடர் அளை - மலைப்பிளவில்; வீழ்ந்து உக்காஅங்கு - விழுந்து எவர்க்கும் பயன்படாது அழிந்தது போல; தொடர்பற - தொடர்பு அற்றுப் போகும்படி.
9. சேணும் - பல நாள்களுக்கு முன்பே; சென்று உக்கன்று - சென்று அற்றது; அறியாது - அதனை அறியாது.
10. ஏகல் அடுக்கத்து - உயர்ந்த மலைப்பக்கத்திலுள்ள; இருள் முகை இருந்த - இருளடர்ந்த இடத்திலேயுள்ள.
12. என் திறந்து அலர் - என்பொருட்டு அலர் எடுத்துரைப்பதை; இன்னும் ஓவார் - இப்பொழுதும் கைவிடவில்லை.

தலைவி கூற்று

நற்றிணை 117 **குன்றியனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவுநீட ஆற்றாளாய தலைமகள் வன்புறை எதிரழிந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் மணம் செய்துகொள்ளாமல் காலம் நீட்டித்ததால் தலைவி வருந்தினாள். அதை அறிந்த தோழி, 'அவர் விரைவில் வருவார்; வருந் தாதே' எனத் தேற்றினாள். தலைவி அதனால் தேறாது, வருந்தியவளாய்த் தோழிக்கு எதிர்மொழி கூறியது.

பெருங்கடல் முழங்கக் கானல் மலர
இருங்கழி ஓதம் இல்இறந்து மலிர
வள்இதழ் நெய்தல் கூம்ப, புள்ளுடன்
கமழ்பூம் பொதும்பர்க் கட்சி சேர,
செல்சுடர் மழுங்கச் சிவந்துவாங்கு மண்டிலம்
கல்சேர்பு நண்ணிப் படர்அடைபு நடுங்கப்
புலம்பொடு வந்த புன்கண் மாலை
அன்னர் உன்னார் கழியின் பல்நாள்
வாழலேன் வாழி தோழி! என்கண்
பிணிபிறிது ஆகக் கூறுவர்;
பழிபிறிது ஆகல் பண்புமார் அன்றே.

தெளிவுரை

"தோழியே வாழ்க! பெரிய கடல் முழங்குகின்றது; கடற்கரைச் சோலைகள் மலர்ந்துள்ளன; உப்பங்கழியின் நீர் நம் மனை எல்லையைக் கடந்து மிகுந்து வருகின்றது. வளமையான இதழ் களைக் கொண்ட நெய்தல் கூம்புகின்றது; பறவைகள் தம் துணையுடன் மணம் கமழ்கின்ற அழகிய சோலைகளிலுள்ள தம் கூட்டில் அடைகின்றன; ஞாயிறு ஒளி மழுங்கி வானம் சிவக்க மேற்கு மலையில் மறைகிறது. இவ்வாறு துன்பங்கள் அனைத்தும் சேர்ந்து நான் நடுங்குமாறு, தனிமை துயரைத் தந்தது. தலைவன் என்னை நினைந்து பாராமல் பிரிந்து வாழ்வதால் உண்டான காமநோயால் ஏற்பட்ட வேறுபாட்டைத் தெய்வம் வருத்தியதால்

ஏற்பட்டது என ஊரார் கூறுகின்றனர். உண்மை வேறாய் இருக்கப் பிறிதொன்றைப் பழி கூறுதல் பண்புள்ளதாகாது. இது கேட்டு நான் நெடுங்காலம் வாழ இயலாது."

கருத்து

தோழி! தலைவன் பிரிவு நீடின் நான் உயிர் வாழ மாட்டேன்.

விளக்கம்

"கடல் முழங்க, கானல் மலர, கழிநீர் பெருக, நெய்தல் கூம்ப, பறவைகள் கூடடைய, செஞ்ஞாயிறு மலையிடையே மறைய, வருகின்ற இம்மாலைப்பொழுது செய்யும் வருத்தத்தால் என் மேனி மெலிவுற்றது. தெய்வம் வருத்தியதால் இவ்வேறுபாடு ஏற்பட்டதென்பர். காதலன்பொருட்டு உண்டாகிய வேறு பாட்டைத் தெய்வத்தின் மேலேற்றிக் கூறுவது பண்பாகாது. இதனைக் கேட்டு இனி நான் உயிர் வாழ மாட்டேன்" என்கிறாள், தலைவி.

தோழி ஆற்றியிரு என்கிறாள். தலைவியோ உயிர் வாழ மாட்டேன் என எதிர்மொழிகிறாள்.

சொற்பொருள்

2. ஓதம் - நீர்ப்பெருக்கு; இல் இறந்து - நம் மனை எல்லையைக் கடந்து; மலிர - நிறைந்து பெருக.
3. வள் இதழ் - வளமையான இதழ்; கூம்ப - குவிய; புள் உடன் - பறவைகள் தம் இனத்துடன்.
4. பொதும்பர் - சோலை; கட்சி - கூடு.
5. செல்சுடர் - மறைகின்ற மாலைக்கதிரவன்; மழுங்க - ஒளி குறைய; சிவந்து - சிவப்புற்று; வாங்கு மண்டிலம் - வளைந்த வான மண்டிலம்.
6. கல் சேர்பு நண்ணி - மேற்கு மலையை அடைந்து (மறைவதால்); படர் அடைபு நடுங்க - நாம் துன்பமுற்று உடல் நடுங்க.
7. புலம்பு - தனிமை; புன்கண் - துன்பத்தை.
8. அன்னார் - நம் தலைவர்; உன்னார் - நினையாது; கழியின் - நீங்கினால்.
9. வாழலேன் - உயிர் வாழ மாட்டேன்; என்கண் - என்னிடம் உண்டாகி யுள்ள.

10. பிணி - வேறுபாடு, நோய்; பிறிதாக - தெய்வத்தால் உண்டாகியதாக.
11. பழிபிறிதாகல் - பழி ஓரிடத்தில் இருக்க வேறொன்றைக் கூறுதல்; பண்புமார் அன்று - நம் பண்புக்குப் பொருந்துவது ஆகாது.

தலைவி கூற்று

நற்றிணை 275 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

சிறைப்புறமாகத் தலைமகனது வரவுணர்ந்து வற்புறுப்ப வன்புறை எதிர்மொழிந்தது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் கூடி மகிழும் தலைவன் சிறைப்புறத்தானாகி நிற்கத் தலைவி பிரிவுத்துயரால் வருந்துகிறாள். தோழி தலைவியின் செவ்வியைக் கூறி ஆற்றுவாளாயினள். அதனைக் கேட்ட தலைவி, தலைவன் செவி யுறுமாறு கூறியது.

செந்நெல் அரிநர் கூர்வாள் புண்ணுறக்
காணார் முதலொடு போந்தெனப் பூவே
படையொடும் கதிரொடும் மயங்கிய படுக்கைத்
தன்னுறு விழுமம் அறியா, மென்மெலத்
தெறுகதிர் இன்துயில் பகுவாய் திறக்கும்
பேதை நெய்தல் பெருநீர்ச் சேர்ப்பற்கு
யான்நினைந்து இரங்கேன் ஆக நோய்இகந்து
அறனி லாளன் புகழ,என்
பெறினும் வல்லேன்மன் தோழி யானே.

தெளிவுரை

"தோழி! செந்நெற்கதிரை அரிபவர்களின் கூரிய அரிவாளால் அறுப்புண்ட நெய்தல் கொடி, அரிபவர் கண்ணில் படாமல் நெற்கட்டுகளோடு சேர்த்துக் கட்டப்பட்டுக் களத்திற்குப் போய்ச் சேரும். அந்நெய்தல், தன்னை எல்லாப் பக்கங்களிலும் அழுத்தும் கதிர்களோடு அரிக்கிடையிலே கிடந்து, தனக்குற்ற துயரத்தையும்

அறியாது, வெம்மையால் தாக்கும் சூரியனைக் கண்டதும் மகிழ்வுற்றுத் தன் பசிய இதழ்களைத் திறந்து பூக்கவும் செய்யும். அத்தகைய பேதைமையைக் கொண்டது, நெய்தல். இத்தகைய நெய்தலைக் கொண்ட கடற்கரைக்கு உரியவன், நம் தலைவன். அவன் எனக்கு உண்டாக்கிய பிரிவுத்துயரையும் பழிச்சொற்களையும் கருதி நான் வருந்த மாட்டேன். அறனிலாளனாகிய அத்தலைவன் ஒருகால் என்னிடம் வந்து என்னைப் புகழ்ந்தானாயினும், அவன் செய்த துன்பத்தை மறந்து, பொறுமை இழக்காமல் அவனை ஏற்பேன். அதனால் நீ கவலையுறாதே.

கருத்து

தோழி! தலைவன் பிரிவை அவன் வரும்வரை பொறுத்திருப்பேன்.

குறிப்பு

"தோழி, தலைவன் அறப்பண்பின்றி என்னை மறந்து ஒழுகுவானாயினும் நான் அவனை நினைந்து வருந்துவேன் அல்லன்; ஒருகால், அவனே நேரில் வந்து என்னைப் புகழ்ந்தாலும், அவன் முன்பு செய்த துன்பத்தை நினைத்து வருந்தாது அவனை ஏற்பேன்" எனத் தலைவி, 'வருந்தாதிரு' எனத் தன்னை வற்புறுத்திய தோழியை மறுத்துத் தான் ஆற்றியிருப்பதாய்க் கூறினாள்.

உள்ளுறை

நெல்லறுப்போர் நெற்பயிரை அறுக்கும்போது தம்மையறியாமல் வயலிலிருந்த நெய்தல் கொடியை இலையுடனும் பூவுடனும் அறுத்து நெற்கட்டோடு சேர்த்துக் கட்டிவிடுவர். அவ்வாறு கட்டி அடுக்கப்பட்ட அக்கட்டுகளில் கூம்பிய நிலையில் உள்ள பூ, சூரிய ஒளி தோன்றியதும் மலரும். இதன்மூலம், தலைவி இற்செறிக்கப்பட்டு, காப்பு மிகுதியாலும் அலராலும் நெருக்குண்டு ஒடுங்கிக் கிடப்பினும், தலைவன் வரவு காணின் அவள் மேனி, நலம் பெற்றுத் திகழும் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. அரிநர் - அறுப்பவர்; கூர்வாள் - கூரிய அரிவாள்; புண் - வருத்தம்.
2. காணார் - அறுத்தவர் காணாதவாறு; முதலொடு போந்தென பூ - கொடியோடு பூவும் வந்தது.

3. படை - அரிவாள்; மயங்கிய - வருத்தமுற்றுக் கலங்கிய; படுக்கை - படுக்கை நிலையில் கிடக்கும் நெற்கட்டு.
4. விழுமம் - துயரம்.
5. தெறுகதிர் - வாட்டும் வெம்மை கொண்ட கதிர்; பசுவாய் திறக்கும் - பசிய இதழ்களைத் திறந்து பூக்கும்.
6. பெருநீர்ச் சேர்ப்பன் - கடற்கரைக்குத்தலைவன்.
7. நோய் - காமநோய்; இகத்தல் - எல்லை கடத்தல்.
8. அறனிலாளன் - அறப்பண்பு இல்லாத தலைவன்.
9. என் பெறினும் - எவ்வகைத் துயரம் அடையப்பெற்றாலும்; வல்லேன் - தாங்கும் வலிமை கொண்டவள்.

தலைவி கூற்று

நற்றிணை 304 **மாறோக்கத்து நப்பசலையார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரையாது நெடுங்காலம் வந்தொழுக ஆற்றாளாகிய தலைமகள் வன்புறை எதிர்மொழிந்தது.

கூற்று விளக்கம்

வரைந்துகொள்ளாது பல நாளும் களவில் வந்தொழுகும் தலைவன் வரும் வழியின் ஏதம் கருதித் தலைவி வருந்தியிருந்தாள். தோழி அவளிடம் வருந்தாதிருக்குமாறு பலமுறை கூறவே, அதனைத் தாங்காது எதிர்மொழிபவள்போலத் தலைவி சொல்லியது.

வாரல் மென்தினைப் புலவுக்குரல் மாந்திச்
சாரல் வரைய கிளையுடன் குழீஇ
வளியெறி வயிரின் கிளிவிளி பயிற்றும்
நளியிருஞ் சிலம்பின் நன்மலை நாடன்
புணரிற் புணருமார் எழிலே; பிரியின்
மணியிடை பொன்னின் மாமை சாயஎன்
அணிநலம் சிதைக்குமார் பசலை; அதனால்
அசுணங் கொல்பவர் கைபோல் நன்றும்,
இன்பமும் துன்பமும் உடைத்தே
தண்கமழ் நறுந்தார் விறலோன் மார்பே!

தெளிவுரை

"தோழி! தினைப்புனத்திலுள்ள நீண்ட மெல்லிய தினையின் மணமுள்ள கதிர்களைக் கிளிகள் தின்றுவிட்டு, மலைச்சாரலில் பாறைக்குப் பக்கத்தேயுள்ள தம் சுற்றத்தோடு சென்று சேரும்; வாய்க்காற்றாலே ஒலியெழுப்பப்படுகின்ற கொம்பு வாச்சிய ஒலியைப் போல, அவை ஒன்றையொன்று கூவி அழைத்து மகிழ்ந்திருக்கும். அத்தகைய நெருங்கிய பக்க மலைகளைக் கொண்ட சிறந்த மலைநாட்டுக்குரியவன், நம் தலைவன்."

"அவன் வந்து என்னைக் கூடியபோதெல்லாம் எனக்கு நல்ல அழகு ஏற்பட்டது. அவன் என்னைப் பிரிந்தாலோ, நீலமணிக்கு இடையே இருக்கும் பொன்னைப்போல என் மேனியின் மாந்தளிர் நிறமானது அழிந்துபோய், பசலை தோன்றி, என் அழகும் நலமும் கெடுகின்றன. ஆதலினால், வலிமை வாய்ந்த நம் தலைவன் மார்பானது, இசையறியும் அசுணத்தை இன்னிசை யால் மகிழ்வித்து, வல்லிசையால் வருத்திக் கொல்பவரது கையைப் போன்று, இன்பமும் துன்பமும் ஒருசேரச் செய்யும் தன்மையுடையதாய் இருக்கிறது" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

தோழியே! தலைவனே இன்பமும் துன்பமும் செய்பவனாய் இருக்கிறான். என் செய்வது?

விளக்கம்

தலைவன் பிரிவினைப் பொறுத்து ஆற்றியிருக்குமாறு தோழி, தலைவியிடம் கூறினாள். தலைவியோ, "தோழி! அசுணமா இசையறி விலங்கு. நல்லிசையைக் கேட்டால் மகிழும்; வல்லிசையைக் கேட்டாலோ உடனே உயிர் துறக்கும். அதனைக் கைப்பற்ற நினைப்பவர், யாழில் இன்னிசையை இசைத்து, அப் பறவை அதனைக் கேட்டு மயங்கி அவரருகே வந்தவுடன், கடும் இசையான பறையைக் கொட்டுவர்; பறையோசை காதில் பட்டதும் அஃது உயிர் துறந்ததும் அதனைக் கைப்பற்றிக் கொள்வர். அசுணத்திற்கு இன்னிசையால் இன்பம் நல்கிய கை,

தொடர்ந்து அதன் உயிரை வாங்கும் பறையை ஒலிப்பது போன்றது தலைவனின் மார்பு" என்று கூறித் தலைவனைப் பிரிந்திருப்பதால் தான் படும் வேதனையின் பெருக்கத்தை எடுத்துரைத்தனள். (தோழி ஆற்றியிருக்குமாறு கூறத் தலைவியோ அவ்வாறிருக்க இயலாமையைத் தெரிவிக்கிறாள்.)

உவமை விளக்கம்

நீலமணியின் இடையிலே இருக்கும் பொன்னானது நீலமணியின் ஒளியால் தன் இயல்பான நிறத்தோடு நீல வண்ணம் கலப்புற்று நிறம் மாறித் தோன்றுவதுபோல, தலைவியின் மேனியும் பசலையால் நிறங்கெட்டுத் தோன்றிற்று.

உள்ளுறை

தினைக்கதிரைத் தின்று சென்ற கிளி தன் இனத்தோடும் கூடி ஒலி எழுப்பும் மலைநாடன் என்றது, அவ்வாறே தலைவியைக் களவிற்கூடிய தலைவனும், தன் களவுறவைச் சுற்றத்தாரிடம் கூறி, சான்றோர் குழுவினருடன் விரைந்து வந்து மணந்துகொள்ள வேண்டும் என்பதாம்!

சொற்பொருள்

1. வாரல் - நீண்ட; புலவுக்குரல் - மென்மையான தினைக்கதிர்; மாந்தி - உண்டு.
2. வரைய - பாறையில் உள்ள; கிளையுடன் - இனத்துடன்; குழீஇ - கூடி.
3. வளியெறி - வாய்க்காற்றினால் ஊதப்படும்; வயிர் - கொம்பு வாச்சியம்; கிளி விளி பயிற்றும் - கிளிகள் ஒன்றையொன்று கூவி அழைக்கும்.
4. நளி - குளிர்ச்சி; இரும் - பெரிய; சிலம்பு - மலை.
5. புணரின் - கூடினால்.
6. மணியிடை பொன்னின் - நீலமணிக்கு இடையே இழைக்கப்பெற்ற பொன்போல்; மாமை - மாந்தளிர் நிறம்; சாய - மாறி.
7. அணிநலம் - அழகு, சிறப்பு; சிதைக்கும் - கெடுக்கும்.
8. அசுணம் - அசுணப்பறவை.
10. தண்கமழ் - குளிர்ச்சியாய் மணம் வீசும்; விறல் - வலிமை.

தலைவி கூற்று

நற்றிணை 327 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரையாது நெடுங்காலம் வந்தொழுக ஆற்றாளாய தலைமகள் வன்புறை எதிரழிந்தது.

கூற்று விளக்கம்

தலைவன் களவினை நீட்டிப்பதறிந்து தலைவி வருத்தமுற்றாள். அது கண்டு ‘ஆற்றியிரு’ என்றுரைத்த தோழியிடம் தலைவி கூறியது.

நாடல் சான்றோர் நம்புதல் பழிஎனின்,
பாடுஇல கலுழும் கண்ணொடு சாஅய்ச்
சாதலும் இனிதே காதல்அம் தோழி!
அந்நிலை அல்ல ஆயினும், ‘சான்றோர்
கடன்நிலை குன்றலும் இலர்’என்று, உடன்அமர்ந்து
உலகம் கூறுவது உண்டுஎன, நிலைஇய
தாயம் ஆகலும் உரித்தே போதுஅவிழ்
புன்னை ஓங்கிய கானல்
தண்ணம் துறைவன் சாயல் மார்பே.

தெளிவுரை

‘ஆற்றியிரு’ என்று கூறிய தோழியிடம் தலைவி, “அன்புள்ள தோழியே! ஆராய்ந்து மனத்தால் கொள்ளப்பட்டவரை விரும்புதல் குற்றம் என்றால், துயிலாது அழுகின்ற கண்களோடு வருந்திச் சாதலும் இனிது. அவ்வாறு இறத்தல் இயற்கைக்கு ஒத்தது அன்று என்றால், சான்றாண்மை மிக்கவர் தம் கடமைப் பாட்டிலிருந்து தவற மாட்டார் என்று உலகம் கூறுவதை உண்மையெனக் கொண்டு, அரும்புகள் மலர்கின்ற புன்னை மரங்கள் ஓங்கி வளர்ந்துள்ள கடற்கரைச்சோலையையுடைய குளிர்ச்சி பொருந்திய துறைக்குரிய தலைவனது மார்பினை உரிமையுடன் பெறுவோம் என்று நம்பியிருக்க வேண்டும். இவ்விரண்டனுள் ஒன்றைக் கொள்வது நல்லது” என்றாள்.

கருத்து

தோழியே! பிரிவுக்கொடுமையை எண்ணி இறத்தல் வேண்டும்; அல்லது உலகோர் மொழியை மதித்துத் தலைவனை உரிமையுடன் பெறுதல் வேண்டும்.

விளக்கம்

அவன் கடமை தவறாதவன் என்று உலகம் கூறுதலால் அதனை உண்மையெனக் கொள்ள வேண்டியிருக்கிறதேயன்றி இயல்பாகத் தலைவிக்கு அவனிடத்தில் நம்பிக்கை இல்லையாதலின், முதலில் இறப்பதே நலமென்றாள். இறந்து செய்யக் கூடியது யாதும் இல்லையாதலின், ஒருகால், உலகம் கூறுவது உண்மையாயிருப்பின் அவனை உரிமையாக்கிக்கொள்ளலாம் என்று பிறகு கூறுகிறாள்.

சான்றோர், கடமை தவற மாட்டார் என உலகம் கூறும். அதனை நம்பி 'ஆற்றியிரு' என்றாள், தோழி.

உலகம் கூறுகிறதே என நம்ப வேண்டியுள்ளதேயன்றி, உண்மையான நம்பிக்கை தனக்கில்லை எனத் தலைவி அவளை மறுத்துரைக்கிறாள்.

சொற்பொருள்

1. நாடல் - ஆராய்தல்; பழி - பழியுடையதொரு செயல்.
2. பாடு இல - கண்படுதல் இல்லாது, துயிலாது; கலுழும் - அழுகின்ற; சாஅய் - வருந்தி.
5. கடன் நிலை - கடமைப்பாடு; குன்றல் - தவறுதல்; உடன் அமர்ந்து - ஒன்றுசேர்ந்து.
6. உண்டு என - உண்மையெனக் கொண்டு; நிலைஇய - நிலைபெற்று.
7. தாயம் ஆகலும் - உரிமை உடையதாகலும்; உரித்து - உரியது; போது அவிழ் - அரும்புகள் மலர்கின்ற.
8. ஓங்கிய - ஓங்கி வளர்ந்துள்ள.
9. சாயல் - மென்மையான.

வரைவு கடாயது

தலைவியை விரைந்து மணந்து கொள்ளுமாறு தலைவனைத் தூண்டுதல்.

தலைவி கூற்று

ஐந்திணை ஐம்பது 45 **மாறன் பொறையனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகனைத் தோழி வரைவுகடாதற்பொருட்டுத் தலைமகள் வரைவு வேட்டுச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தன்னை மணந்துகொள்ளும்படி தலைவனிடம் சொல்ல வேண்டுமெனத் தலைவி தோழியிடம் கூறியது.

ஈர்ந்தண் பொழிலுள் இருங்கழித் தண்சேர்ப்பன்
சேர்ந்தென் செறிவளைத்தோள் பற்றித் தெளித்தமை
மாந்தளிர் மேனியாய்! மன்ற விடுவனவோ
பூந்தண் பொழிலுள் குருகு.

தெளிவுரை

"மாந்தளிர் போன்ற மேனியைக் கொண்ட தோழியே! உப்பங் கழிகளைக் கொண்ட குளிர்ந்த கடற்கரைக்குத் தலைவன், மிகக் குளிர்ச்சி பொருந்திய சோலையுள் என்னைக் கலந்து, வளையல்கள் அணிந்த என் தோள்களைப் பற்றி, என் மன வருத்தத்தைப் போக்குதற்காகச் சொன்ன உறுதிமொழிகளைக் குளிர்ச்சி பொருந்திய அச்சோலையுள் வாழும் நாரைகள் ஒருகாலும் மறக்கமாட்டா?" எனத் தலைவி, தோழியிடம் சொல்லித் தன் மணவேட்கையைக் குறிப்பாய்த் தெரிவித்தாள்.

கருத்து

தோழியே! குறியிடங்களில் தலைவன் என்னை மணந்துகொள்வதாய் உறுதி கூறியுள்ளான். (அவ்வுறுதிமொழியை நிறைவேற்றுமாறு தலைவனிடம் கூறு.)

சொற்பொருள்

1. ஈர்ந்தண் - ஈரமும் குளிர்ச்சியும்; இரு - கரிய.
2. சேர்ந்து - சோலையுள் என்னைக் கலந்து; செறிவளை - செறிவான வளையல்; தெளித்தமை - தெளிவித்தமையை.

3. மன்ற - உண்மையாய்; விடுவனவோ? - மறக்கமாட்டா.
4. பூந்தண் - பொலிவு மிக்க குளிர்ந்த; குருகு - நாரை.

தோழி கூற்று

குறுந்தொகை 332 **மதுரை மருதங்கிழார் மகன் இளம்போத்தன்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரையாது வந்தொழுகாநின்ற காலத்துக் கிழவன் கேட்பக் கிழத்திக்குத் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைந்துகொள்ள முயலாது களவுறவையே விரும்பி யிருந்தான். அவனை வரைவு மேற்கொள்ளத் தூண்டக் கருதிய தோழி, அவனும் கேட்டுணருமாறு தலைவியிடம் கூறியது.

வந்த வாடைச் சில்பெயல் கடைநாள்
நோய்நீந்து அரும்படர் தீரநீ நயந்து
கூறின் எவனோ தோழி! நாறுஉயிர்
மடப்பிடி தழீஇத் தடக்கை யானை
குன்றகச் சிறுகுடி இழிதரும்
மன்றம் நண்ணிய மலைகிழ வோற்கே.

தெளிவுரை

தலைவியே! மணம் வீசுமாறு பெருமூச்சு விடுகின்ற இளம் பெண்யானையைத் தழுவியவாறு, வளைந்த துதிக்கையைக் கொண்ட ஆண்யானை, குன்றிலிருக்கும் சிற்றூரை நோக்கி இறங்கி வரும் மலையைக் கொண்டவன், நம் தலைவன். வாடைக்காற்று வீசியபடி சிறிதளவே மழை தூறும் கடைசி யாமத்தில் காம நோயில் கிடந்து நீந்தும் உன் அரிய துன்பத்தைத் தீர்க்குமாறு, நீயே அவனிடம் நேரில் அவன் விரும்பும்வண்ணம் கூறினால் என்ன?

கருத்து

தலைவியே, உன் காமநோய்த் துயரைத் தலைவனுக்கு நீயே எடுத்துரைக்க வேண்டும். (அப்போதுதான் அவன் வரைவொடு வருவான்.)

குறிப்பு

'தடக்கை யானை மடப்பிடியைத் தழுவிச் செல்லும்' என்னும் குறிப்பு, தலைவியைத் தலைவன் வெளிப்படையாய் மணந்துகொண்டு, பலரும் காண இன்புற்று வாழ வேண்டும் என்னும் கருத்துடையது.

சொற்பொருள்

1. வந்த வாடை - வாடைக்காற்று வந்து வீசும்; சில்பெயல் - சில மழைத்துளி, சிறு தூறல்; கடைநாள் - கடைசி யாமத்தில்.
2. நோய் - காம நோய்; நீந்து (கிடந்து) - நீந்திக்கொண்டிருக்கின்ற; அரும்படர் - அரிய துன்பம்; தீர - நீங்க; நயந்து - விரும்பி.
3. எவன்? - என்ன?; நாறு உயிர் - மணம் வீசும்படி விடும் பெருமூச்சு.
4. மடப்பிடி - இளம் பெண்யானை; தழீஇ - தழுவிக்கொண்டு; தடக்கை - வளைந்த துதிக்கை; யானை - ஆண்யானை.
5. குன்றகம் - குன்றிலிருக்கும்; சிறுகுடி - சிற்றூர்; இழிதரும் - இறங்கி வரும்.
6. மன்றம் - பொதுவிடம்; நண்ணிய - பொருந்திய; கிழவோன் - உரிமையுள்ளவன்.

தோழி கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 5 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி வரைவு கடாதல்.

கூற்று விளக்கம்

களவு நெறி ஒழுகும் தலைவனிடம் தோழி, விரைவில் தலைவியை மணம் செய்துகொள்ள வேண்டும் என வற்புறுத்துதல்.

கரியமலர் நெடுங்கண் காரிகைமுன் கடல்தெய்வம்
காட்டிக் காட்டி
அரியசூள் பொய்த்தார் அறன்இலர்என்று ஏழையம்
யாங்கு அறிகோம் ஐய!
விரிகதிர்வெண் மதியும் மீன்கணமும்ஆம் என்றே
விளங்கும் வெள்ளைப்
புரிவளையும் முத்தும் கண்டுஆம்பல் பொதிஅவிழ்க்கும்
புகாரே எம்மூர்.

தெளிவுரை

கருங்குவளை மலர்போலும் நீண்ட கண்களைக் கொண்ட என் தலைவிக்கு முன்னர், கடல்தெய்வத்தைப் பல முறையும் சாட்சியாய்ச் சுட்டிக்காட்டி, "உன்னை மணந்து இல்லறம் நடத்து வேன்" என்று சொன்ன தலைவர் அவ்வுறுதிமொழியை நிறை வேற்றுவதில் பொய்த்துவிட்டார்! அவர் அத்தகைய அறன் இல்லாதவர் என்று ஏழையேமாகிய நாங்கள் அறியாதவ ரானோம். (ஏனெனில்) நெய்தல் நிலத்தில் கிடக்கும் வெண் சங்குகளையும் முத்துகளையும் கண்ட ஆம்பல் மலர்கள், அவற்றை முறையே கதிர்விரிக்கும் வெண்ணிலவும் உடுக்களும் என்று மயங்கி, இரவு வந்துவிட்டதென்று கருதிப் பகலிலேயே பூக்கும் இயல்பினைக் கொண்ட புகாரன்றோ, எம் ஊர்!

கருத்து

தலைவ! ஆம்பல் மயங்கிப் பகலிலே மலர்ந்ததுபோல, நாங்களும் உன் பொய்ச் சூளுரைகளை மெய்யென்று கருதி ஏமாந்தோம். (சூளுரை - உறுதிமொழி; உன்னை மணப்பேன் எனத் தலைவியிடம் கூறியது.)

விளக்கம்

கடற்கரையில் சங்குகளும் முத்துகளும் கிடந்தன. சங்குகளை நிலவென்றும், முத்துகளை மீன்களென்றும் கருதி இரவு வந்து விட்டதாய் ஆம்பல் மலர்கள் மலர்கின்றன.

குறிப்பு

தலைவ! உன் சூளுரையை மெய்ப்பிக்கும் வகையில் தலைவியை உடனே மணந்துகொள்.

சொற்பொருள்

1. காரிகை - பெண் (தலைவி).
2. சூள் - உறுதிமொழி; அறன்இலர் - அறநெறி இல்லாதவர்.
3. மதி - நிலவு; கணம் - கூட்டம்.
4. புரிவளை - வெண்சங்கு; ஆம்பல் - ஆம்பல் மலர்; பொதி அவிழ்க்கும் - போதினை அவிழ்க்கும், மலரும்.

தோழி கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 6 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி வரைவு கடாதல்.

கூற்று விளக்கம்

களவு நெறியில் ஒழுகும் தலைவனிடம் தோழி, விரைவில் தலைவியை மணம் செய்துகொள்ளவேண்டும் என வற்புறுத்துதல்.

காதலர் ஆகிக் கழிக்கானல் கையுறை கொண்டு
எம்பின் வந்தார்
ஏதிலர்தா மாகி யாம்இரப்ப நிற்பதையாங்கு
அறிகோம் ஐய!
மாதரார் கண்ணும் மதிநிழல்நீர் இணைகொண்டு
மலர்ந்த நீலப்
போதும் அறியாது வண்டுஊசல் ஆடும்
புகாரே எம்மூர்.

தெளிவுரை

அன்று தலைவிமீது காதல் கொண்டவனாய்க் கடற்கரைச் சோலையில், கையில் காணிக்கையோடு வந்து தலைவியைப் பெற உதவுமாறு தலைவன் என் பின்னே கெஞ்சி நின்றான். இன்று அயலார் போன்று, யாம் அவனைக் கெஞ்சிக் கேட்கும் நிலையில் இருக்கின்றான். இவ்வாறு அவன் மாறியுள்ளதை ஏழை யேமாகிய யாம் அறிய மாட்டோம். (ஏனெனில்) மகளிர் முகத்தி லுள்ள கண்களுக்கும், நிலவின் கதிர்களைக் கண்டு மலரும் நீல

மலர்களுக்கும் வேறுபாடு அறிய இயலாமல் வண்டுகள் அங்கு மிங்குமாய் ஊசலாடித் திரியும் புகாரன்றோ, எம் ஊர்.

கருத்து

தலைவன் அன்று எம்மைச் சேர்வதற்குக் கெஞ்சி எம் பின் நின்றான். இன்று எம்மை மணந்துகொள் என்று கெஞ்சி யாம் அவன் பின் நிற்கிறோம்.

விளக்கம்

கழிக்கரையில் பெண் நிற்கிறாள். கழியில் இணையாய் இரு நீல மலர்கள் தண்ணீர் மேல் எழுந்து மலர்ந்துள்ளன. (தண்டுகள் - மூக்கு, மலர்கள் - கண்கள்.) வண்டு ஒன்று, கரையில் நிற்கின்ற பெண்ணின் கண்களைப் பார்க்கிறது; பின், தண்ணீரில் மலர்ந்துள்ள நீல மலர்களைப் பார்க்கிறது. கண், மலர் ஆகியவற்றுள் எது கண், எது மலர் என்று அறியாது அங்கும் இங்குமாய் ஊசலாடுகிறது.

குறிப்பு

கண்ணா, மலரா என்று அறியாது வண்டு ஏமாறுவதுபோல, நாங்களும் உண்மையறியாது ஏமாறும் இயல்பினர் ஆனேம். எம்மை மயங்க வைக்காது உடனே மணம் செய்துகொள்.

சொற்பொருள்

1. கையுறை - பரிசு, காணிக்கை; எம் பின் வந்தார் - எனக்குப் பின்னே வந்தவர்.
2. ஏதிலர் - அயலவர்; யாம் இரப்ப - யாம் அவரைக் கெஞ்சிக் கேட்கும் படியாய்.
3. மதி நிழல் - நிலவின் நிழலில்; இணைகொண்டு - இணையாய் உள்ள இரு தண்டுகளில்; மலர்ந்த - பூத்த.

3-4. நீலப்போது - நீலமலர்.

4. வண்டு ஊசலாடும் - வானத்தில் உள்ளதா, தண்ணீரில் நிழலாய்த் தோன்றுவதா, இவற்றுள் கண் எது? நிலவு எது? என்று உறுதி செய்ய இயலாது அங்கும் இங்குமாய் வண்டு ஊசலாடுகிறது.

தோழி கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 7 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி வரைவு கடாதல்.

கூற்று விளக்கம்

களவு நெறி ஒழுகும் தலைவனிடம் தோழி விரைவில் தலைவியை மணம் செய்துகொள்ள வேண்டும் என வற்புறுத்துதல்.

மோதுமுது திரையால் மொத்துண்டு போந்துஅசைந்த
  முரல்வாய்ச் சங்கம்
மாதர்,வரி மணல்மேல் வண்டல் உழுதுஅழிப்ப
  மாழ்கி ஐய
கோதைபரிந்து அசைய மெல்விரலால் கொண்டுஓச்சும்
  குவளை மாலைப்
போதுசிறங் கணிப்பப் போவார்கண் போகாப்
  புகாரே எம்மூர்.

தெளிவுரை

மோதுகின்ற பெரிய அலையால் தாக்குண்டு, அசைந்து தளர்ந்து வந்து ஒலிக்கும் சங்குகள், மணலில் சிறுமியர் அமைத்த சிற்றில் முதலியவற்றை உழுது அழிக்கும். அதனால் ஐயனே! அச்சங்குகள் விலகிச் செல்லுமாறு, அவர்கள் தங்கள் மெல்லிய விரல்களால் தாங்கள் அணிந்திருக்கும் மாலையை அறுத்து, அவற்றின்மீது வீசி எறிவார்கள். அதனால் சிதறிய நீல மலர்கள் மாலைப்பொழுதிலே மகளிர் கடைக்கண்ணால் பார்ப்பது போலக் கிடக்கும். அவற்றைக் கண்டவர்கள் அவை உண்மையான கண்களே என மயங்கி, மேலே போகாமல் நிற்பர். அத்தகைய புகாரன்றோ, எம் ஊர்?

கருத்து

நீல மலர்களைப் பார்ப்போர், கண்கள் என மயங்கியதுபோல, தலைவ! நாங்களும் உன் உறுதிமொழிகளை மெய்யாய்க் கருதி மயங்கினோம். உறுதிமொழிப்படி உடனே மணம் கொள்க.

விளக்கம்

கடல் மணலில் சிதறிக்கிடக்கும் குவளை மலர்கள், பெண்கள் தம் கடைக்கண்ணால் பார்ப்பதுபோலத் தோன்றும்.

சொற்பொருள்

1. முதுதிரை - பெரிய அலை; முரல் - ஒலிக்கின்ற; சங்கம் - சங்கு.
2. வண்டல் - சிறுமியர் மணலில் அமைத்த சிற்றில்; மாழ்கி - மயங்கி.
3. கோதை - மாலை; பரிதல் - அறுத்தல்; ஓச்சும் - வீசும்.
4. சிறக்கணித்தல் - கடைக்கண்ணால் பார்த்தல்.

தோழி கூற்று

அகநானூறு 320 **மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறிக்கண் வந்த தலைமகனைத் தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தையே விரும்பியொழுகும் தலைவன் தலைவியைப் பகற்குறிக்கண் சந்தித்து வந்தனன். அவனைக் கண்ட தோழி, தலைவியை வரைந்துகொள்ளுமாறு அவனைத் தூண்டியது.

ஓங்குதிரைப் பரப்பின் வாங்குவிசைக் கொளீஇ,
திமிலோன் தந்த கடுங்கண் வயமீன்,
தழைஅணி அல்குல் செல்வத் தங்கையர்,
விழவுஅயர் மறுகின் விலைஎனப் பகரும்
கானல்அம் சிறுகுடி, பெருநீர்ச் சேர்ப்ப,
மலர்ஏர் உண்கண் எம்தோழி, எவ்வம்
அலர்வாய் நீங்க,நீ அருளாய் பொய்ப்பினும்,
நெடுங்கழி துழைஇய குறுங்கால் அன்னம்
அடும்புஅமர் எக்கர் அம்சிறை உளரும்,

தடவுநிலைப் புன்னைத் தாதுஅணி, பெருந்துறை
நடுங்குஅயிர் போழ்ந்த கொடிஞ்சி நெடுந்தேர்
வண்டல் பாவை சிதைய வந்துநீ
தோள்புதிது உண்ட ஞான்றை,
சூளும் பொய்யோ கடல்அறி கரியே!

தெளிவுரை

"கடற்கரைச்சோலைகள் சூழ்ந்த சிறிய ஊர்களைக் கொண்ட பெரிய கடற்கரைக்குத் தலைவனே!

"உயர்ந்த அலைகளைக் கொண்ட கடற்பரப்பிலே சென்று, வலையினை விசைத்திழுத்துத் தமையன்மார் தறுகண்மை வாய்ந்த வலிய மீன்களைப் பிடித்து வருகின்றனர். தழையுடையணிந்த அவர்தம் செல்வத் தங்கையர், விழா நிகழும் தெருக்களில் அவற்றை விலை கூறி விற்கின்றனர்.

"மலர் போன்ற அழகிய மையுண்ட கண்களைக் கொண்டவள், எம் தோழி. அவளது துன்பமும் ஊரார் சொல்லும் பழிச் சொற்களும் நீங்குமாறு நீ அருள் செய்யாது பொய்த்தனை என்றாலும், உண்மையை மறைக்க இயலாது.

"நெடிய உப்பங்கழியில் மீன்களைத் துழாவி உண்ணும் குறுகிய கால்களைக் கொண்ட அன்னம், அடும்பங்கொடிகள் பொருந்திய மணல்மேட்டிலிருந்து தன் அழகிய சிறகுகளைக் கோதி உலர்த்திக்கொண்டிருக்கும். வளைந்துள்ள புன்னை மரத்தின் பூந்தாதுகள் வீழ்ந்து கடற்றுறையை அழகு செய்திருக்கும். அப்பெரிய துறையில் நெகிழும் நுண்ணிய மணலைப் பிளந்துகொண்டு, கொடுஞ்சி கொண்ட உன்னுடைய நெடுந்தேரை நாங்கள் விளையாடக் கட்டிய வண்டல் பாவை அழியுமாறு செலுத்தி வந்தாய். அப்போது இவள் தோளின் நலத்தினைப் புதிதாய் நுகர்ந்த முதற்புணர்ச்சி நாளில், கடலையே கண்கண்ட சான்றாய்க் கொண்டு நீ கூறிய சூளுரையும் பொய்தானோ?"

கருத்து

தலைவ! உன் சூளுரையின்படி இவளை வரைந்துகொண்டு பிரியாதிரு.

விளக்கம்

சூளாவது, இயற்கைப் புணர்ச்சிக் காலத்து, 'நான் உன்னை மணந்துகொண்டு இல்லறம் நடத்துவேன்' என்று கடல்தெய்வம் சான்றாகக் கூறும் சொல்.

சேர்ப்ப! என் தோழியின் துன்பமும், ஊரார் கூறும் அலரும் நீங்கும்படி நீ அருள் செய்யாது பொய்த்தனை; என்றாலும், நெடுந்தேரில் இவள் விளையாட்டிடத்துப் பாவை சிதைய வந்து, நீ இவள் தோள்நலம் புதிதுண்டபோது, கடலைச் சான்றாய்க் கொண்டு சூளுரைத்தாயே! அதுவும் பொய்யா?

சூளுரையைக் காக்க வேண்டும். இல்லையெனில், தெய்வக் குற்றம் நேருமெனத் தோழி எச்சரித்தாள். அதனைக் கேட்கும் தலைவன் விரைய வந்து மணப்பான் என்பதை உணரலாம்.

குறிப்பு

கொடிஞ்சி - தாமரைமொட்டின் வடிவமாய்ச் செய்து, தேரின் முன்பகுதியில் ஊன்றப்படுவது. தேர் ஊர்ந்து செல்லும்போது தலைவன் இதனைக் கையால் பற்றிக்கொள்வது வழக்கம்.

சொற்பொருள்

1. வாங்குவிசை - வலையினை விசைத்து இழுத்தலால்; கொளீஇ - பற்றி.
2. திமிலோன் - மீன் பிடிக்கும் படகினன்.
3. தழைஅணி - தழை ஆடை.
4. விழவு அயர் - விழாக் கொண்டாடும்; மறுகு - தெரு.
5. பெருநீர் - கடல்; சேர்ப்ப - தலைவ!
6. ஏர் - அழகு; எவ்வம் - துன்பம்.
7. அலர்வாய் - ஊரார் சொல்லும் பழிச்சொற்கள்; பொய்ப்பினும் - பொய்த்தாலும்.
8. துழைஇய - துழாவிய.
9. அடும்பு - அடும்பங்கொடிகள்; அமர் - பொருந்திய; எக்கர் - மணல்மேடு; அம்சிறை - அழகிய சிறை; உளரும் - உலர்த்தும்.
10. தடவு நிலை - வளைந்த நிலை.
11. நடுங்குதல் - நெகிழ்தல்; அயிர் - நுண்மணல்; போழ்தல் - பிளத்தல்; கொடிஞ்சி - தேர் முன் உள்ள அலங்கார உறுப்பு.

12. வண்டல் பாவை - விளையாடுவதற்காக உண்டாக்கிய மணல் பொம்மை; சிதைய - அழிய.
13. தோள் புதிது உண்ட - தோள் நலத்தினைப் புதிதாய் நுகர்ந்த; ஞான்றை - பொழுது.
14. சூள் - உறுதிமொழி; கரி - சான்று.

தோழி கூற்று

கலித்தொகை 132 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவு நீட்டித்துழிப் பகற்குறிவந்து நீங்கும் தலைமகனை எதிர்ப்பட்டுத் தோழி அவனை நாணு நெஞ்சலைப்ப வரைவுகடாயது. (நாணு - நாணம்; அலைப்ப - வருத்த.)

கூற்று விளக்கம்

தலைவன் வரைந்துகொள்ளாது காலம் நீட்டித்து, பகற்குறியில் மட்டும் வந்து தலைவியைச் சந்திக்கத் தொடங்கினான். அதனால், தலைவி மிகவும் துன்புற்று மெலிந்தாள். அதனைக் கண்ட தோழி, தலைவனை அணுகி, தலைவியின் நிலைமையினையும் எண்ணத்தையும் விளக்கி, தலைவன் விரைவில் தலைவியை மணந்துகொண்டு இல்லறம் நடத்திட வேண்டும் என்று கூறியது.

தரவு

உரவுநீர்த் திரைபொர ஓங்கிய எக்கர்மேல்
விரவுப்பல் உருவின வீழ்பெடை துணையாக,
இரைதேர்ந்துஉண்டு அசாவிடூஉம் புள்ளினம் இறைகொள,
முரைசுமூன்று ஆள்பவர் முரணியோர் முரண்தப
நிரைகளிறு இடைபட நெறியாத்த இருக்கைபோல்
சிதைவுஇன்றிச் சென்றுழிச் சிறப்பெய்தி வினைவாய்த்துத்
துறையகலம் வாய்சூழும் துணிகடல் தண்சேர்ப்ப!

தாழிசை

புன்னைய நறும்பொழில் புணர்ந்தனை இருந்தக்கால்

'நன்னுதால்! அஞ்சல்ஓம்பு' என்றதன் பயனன்றோ?
பாயின பசலையால் பகல்கொண்ட சுடர்போன்றாள்
மாவின தளிர்போலும் மாண்நலம் இழந்ததை;

பன்மலர் நறும்பொழில் பழியின்றிப் புணர்ந்தக்கால்
'சின்மொழி தெளி'எனத் தேற்றிய சிறப்பன்றோ?
வாடுபு வனப்புஓடி வயக்குறா மணிபோன்றாள்
நீடுஇறை நெடுமென்தோள் நிரைவளை நெகிழ்ந்ததை;

அடும்புஇவர் அணிஎக்கர் ஆடிநீ மணந்தக்கால்
'கொடுங்குழாய்! தெளி'எனக் கொண்டதன் கொளையன்றோ?
பொறையாற்றா நுகப்பினால் பூவீந்த கொடிபோன்றாள்
மறைபிறர் அறியாமை மாணாநோய் உழந்ததை;

எனவாங்கு—

சுரிதகம்

வழிபட்ட தெய்வம்தான் வலியெனச் சார்ந்தார்கண்
கழியும்நோய் கைம்மிக அணங்காகி யதுபோலப்
பழிபரந்து அலர்தூற்ற, என்தோழி
அழிபடர் அலைப்ப அகறலோ கொடிதே.

தெளிவுரை

"பல வடிவினைக் கொண்ட பறவைகள் கடற்கரையில் ஒரு புறம் இரை தேடி உண்டு இளைப்பாறும். அவை தமது விருப்பத் திற்குரிய பெண்பறவைகள் உடனாய் இருக்க, கடல்அலைகள் வந்து மோதும் உயர்ந்த மணற்குன்றின் மேல் அமர்ந்திருக் கின்றன. மற்றொரு புறம், மும்முரசு கொண்டு ஆளும் பாண்டிய மன்னர், பகைவர் வலிமை அழியுமாறு போரிட்டு வென்று, தம் பாசறையில் யானைகளை வரிசையாய் ஒன்றுக்கொன்று இடம்விட்டுக் கட்டுத்தறிகளில் கட்டி வைத்திருப்பர். அக்காட்சி யினைப்போல, கடல் கடந்த இடங்களுக்கு எவ்வித இடையூறு மின்றிச் சென்று, அங்குக் காரியங்களை வெற்றியுற முடித்து, அதனால் சிறப்புற்றுத் திரும்பிய மரக்கலங்கள் ஒன்றுக்கொன்று இடம்விட்டுக் கயிற்றால் கரையில் உள்ள கம்பங்களில் கட்டப்

பட்டுச் சூழ்ந்து நிற்கின்றன. அத்தகைய கடல் நிலத்துத் தலைவனே!" என்று தலைவனை விளித்துத் தோழி பேசுகிறாள்.

"தலைவி, தனது மேனியில் பரவிய பசலையினால் மாந்தளிர் போன்ற தன் இயற்கை நிறத்தை இழந்து, பகல் நேரத்து விளக்கைப் போலப் பொலிவிழந்துவிட்டாள். இந்நிலை புன்னை மரங்கள் நிறைந்த சோலையில் நீ அவளைக் கூடியபோது, 'அழகிய நெற்றியைக் கொண்டவளே! யான் பிரிவேன் என்று அஞ்சாதே' எனப் பிரியாமைக்கு உறுதி கூறியதன் விளைவா லன்றோ?

"உடல் மெலிந்து, அழகு குன்றி, நீண்ட நாள் சாணை பிடித்து ஒளியேற்றப்பெறாத இரத்தினத்தைப் போலப் பொலிவிழந்து விட்ட தலைவியின் மெல்லிய நீண்ட கைகளினின்று வளையல்கள் வரிசையாய்க் கழன்று உதிர்கின்றன. இந்நிலை, பழி தோன்று வதற்கு இடமின்றி நாள்தோறும் நீ நறுமலர்ச்சோலையில் வந்து அவளைச் சந்தித்தபோது, 'மிகச் சிலவே பேசி உளங்கவரும் பெண்ணே! உன்னை எக்காலமும் யான் பிரியேன்' என்று கூறியதன் விளைவாலன்றோ?

"பூக்கள் உதிர்ந்துபோன கொடியைப் போல் ஆகிவிட்டாள், தலைவி. ஏற்கனவே அவளது மெலிந்த இடை, மேலே உள்ள பளுவைத் தாங்கமாட்டாது துவள்கின்றது. துன்பம் தன் மனத்தை வாட்டினும், பிறரறியாமல் அதை மறைத்துக்கொண்டு, மருந்தறியாத இக்காமநோயால் அவள் வருந்துகின்றாள். இந்நிலை, அடும்பங்கொடி படர்ந்த மணல்மேட்டில் நீ அவளோடு விளையாடிக் கூடியபோது, 'வளைவான காதணி யைக் கொண்டவளே! உன்னைப் பிரியேன்' என்று கூறியதை மெய்யென்று அவள் நம்பியதன் விளைவாலன்றோ?

"ஆகவே, (ஐயனே!) தனக்குத் துணை செய்யும் என்று நம்பி வழிபட்ட தெய்வம் தன்னை வழிபட்டோர்க்கு மிக்க துன்பம் உண்டாக்கும் அணங்காய் மாறுவதுபோல் நீயும் மாறி, உன்மீது அன்பு கொண்ட தலைவி கவலையால் அலைக்கழிக்கப்பட்டு வருந்துமாறும், அதுகண்டு ஊரார் பரவலாய்ப் பழி தூற்று மாறும் நீ பிரிந்திருத்தல் கொடியதாகும். எனவே, இக்கொடுமை நீங்க அவளை விரைந்து வரைந்துகொள்."

கருத்து

தலைவ! தலைவியைச் சேர்ந்தபோது செய்த உறுதிமொழி தவறாதிருக்க இப்போது அவளைத் திருமணம் செய்துகொள்.

விளக்கம்

"தலைவ! நீ புன்னைமர நிழலில் தலைவியோடு சேர்ந்த பொழுது, 'நான் பிரிவேன் என்று அஞ்சாதே; உன்னை ஒரு காலமும் பிரியேன்' என்று கூறிய உறுதிமொழிகளை நம்பிய தால், இன்று அவள் பசலை ஊரப்பெற்றுத் தன் இயற்கை நிறத்தை இழந்துவிட்டாள்; அவள் கைகளினின்றும் வளையல்கள் கழன்று விழுகின்றன. அவள் இடையும் மெலிவுற்றது. உன் பிரிவால் தலைவி கொடுந்துயருற்று வாடுகின்றாள். அவள் வாடுவதனின்றும் மீள அவளை வரைந்துகொள்."

குறிப்பு

1. துணையுடன் கூடி வாழும் பறவைகளைக் குறிப்பிட்டதன் வாயிலாய், தலைவி, தன் துணைவனுடன் கூடி வாழ விரும்புகிறாள் என்பது பெறப் பட்டது.
2. மரக்கலங்கள் பிற இடங்களுக்குச் சென்று செல்வச்செழிப்புடன் மீண்டு வந்தன என்பது, தலைவனும் தான் ஈட்டிய பொருளுடன் தலைவியொடு இல்லறம் நடத்தி இன்பம் கொள்ள வேண்டும் என்னும் கருத்தினை உணர்த்துகிறது.
3. வலிமை வாய்ந்த துணையாகும் என்று நம்பிச் சார்ந்த தெய்வம், தீயதாய் மாறித் துன்புறுத்தல் கொடிது. அதுபோல், பிரிவு என்பது இன்றித் தலைவன் உடனே தன்னை மணந்து கொள்வான் எனத் தலைவி நம்பியிருந்ததற்கு மாறாய்த் தலைவன், அவளைக் கவலை அலைக் கழிக்க, ஊரார் பழிதூற்றப் பிரிதல் கொடிது.

சொற்பொருள்

1. உரவுநீர் - கடல் நீர்; பொர - மோத; ஓங்கிய - உயர்ந்த; எக்கர் - மணல்மேடு.
2. விரவு - கலப்பு; வீழ்தல் - விரும்புதல்.
3. அசாவிடூஉம் - இளைப்பாறும்; இறைகொள - தங்க.
4. முரைசு - முரசு; முரசு மூன்று - வீர முரசு, தியாக முரசு, நியாய முரசு; முரணியோர் - மாறுபட்டோர்; தப - கெடுமாறு.
5. நிரை - வரிசை; நெறியாத்த - முறைப்படி கட்டிய.

6. சிதைவு இன்றி - இடையூறின்றி; சென்றுழி - சென்ற இடத்தில்; வினை வாய்த்து - சென்ற செயல் கைகூட.
7. துணிகடல் - தெளிவான கடல்; தண் - குளிர்ந்த; சேர்ப்பன் - கடல் நிலத் தலைவன்.
8. புன்னைய - புன்னை மரங்களைக் கொண்ட; புணர்ந்தனை - கூடினாய்.
9. அஞ்சல் ஓம்பு - அஞ்சாதே.
10. சுடர் - விளக்கு.
11. மா - மாமரம்; மாண்நலம் - சிறந்த அழகு.
13. சின் மொழி - சில சொற்களையே பேசுபவள்; தெளிதல் - தேறுதல்.
14. வாடுபு - உடல் மெலிந்து; ஓடி - குன்றி; வயக்குறா - ஒளியூட்டப் பெறாத, சாணை பிடிக்கப்பெறாத; வயக்கம் - ஒளி, விளக்கம்.
16. அடும்பு - அடும்பங்கொடி; இவர்தல் - படர்தல்.
17. கொடுங்குழாய் - வளைந்த காதணி அணிந்துள்ளவளே!; கொளை - கோட்பாடு.
18. பொறை - சுமை, பாரம்; ஆற்றா - தாங்காத; நுசுப்பு - இடை; பூ வீந்த - பூக்கள் உதிர்ந்த.
19. மறை - களவுப்புணர்ச்சி, இரகசியம்; மாணாநோய் - காமநோய்; உழத்தல் - வருந்துதல்.
21. வலியெனா - வலிமை தரும் என.
22. கழியும் நோய் - மிக்க துன்பம்; கைம்மிக - அதிகமாக; அணங்குதல் - வருத்துதல்.
24. அழிபடர் - நெஞ்சை வருத்தும் கவலை.

தோழி கூற்று

கலித்தொகை 149 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவு நீட்டித்துழித் தலைமகளது ஆற்றாமை கூறித் தலைமகனை வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைந்துகொள்ளக் காலம் நீட்டித்தபோது, தலைவியது ஆற்றாமையைக் கூறித் தோழி வரைவு கடாயது.

தரவு

நிரைதிமில் களிறாக, திரைஒலி பறையாக,
கரைசேர் புள்ளினத்து அம்சிறை படையாக,
அரைசுகால் கிளர்ந்தன்ன உரவுநீர்ச் சேர்ப்ப!கேள்;

தாழிசை

கற்பித்தான் நெஞ்சுஅழுங்கப் பகர்ந்துஉண்ணான், விச்சைக்கண்
தப்பித்தான், பொருளேபோல், தமியவே தேயுமால்,
ஒற்கத்துள் உதவியார்க்கு உதவாதான்; மற்றுஅவன்
எச்சத்துள் ஆயினும்,அஃது எறியாது விடாதேகாண்.

கேளிர்கள் நெஞ்சுஅழுங்கக் கெழுவுற்ற செல்வங்கள்
தாள்இலான் குடியேபோல், தமியவே தேயுமால்,
சூள்வாய்த்த மனத்தவன் வினைபொய்ப்பின்; மற்றுஅவன்
வாள்வாய்நன்று ஆயினும், அஃதுஎறியாது விடாதேகாண்.

ஆங்கு–

சுரிதகம்

அனைத்து,இனி– பெரும!– அதன்நிலை நினைத்துக்காண்
சினைஇய வேந்தன் எயிற்புறத்து இறுத்த
வினைவரு பருவரல் போல,
துனைவரு நெஞ்சமொடு வருந்தினள் பெரிதே.

தெளிவுரை

தலைவியின் துன்பத்தைக் கண்ட தோழி ஒருத்தி, தலைவனை நோக்கி, "உனக்குரிய கடலில் படகுகள் வரிசையாய் நிறுத்தப் பட்டுள்ளன; அவை பாண்டியனின் யானைப்படைபோலக் காட்சி தருகின்றன; கடலிலிருந்து எழும் அலைகளின் ஓசை முரசொலி போன்றுள்ளது; அங்கே பறக்கின்ற பறவைகள் காலாட்படை போன்று காட்சி தருகின்றன. இவ்வாறு அக் கடல், பகைவர்மேல் படையெடுத்துச் சென்ற பாண்டியனை நினைவுபடுத்துகிறது. அத்தகைய வலிமைமிக்க கடல் சார்ந் திருக்கும் நிலத்தைக் கொண்ட சேர்ப்பனே! நான் கூறுவதை நீ கேள்!

"உலகியல் உண்மைகள் சிலவற்றையாவது நீ உணர்ந்து கொள்; ஒருவன், தனக்குக் கல்வி கற்றுக்கொடுத்த ஆசான் உள்ளம் வருந்தாதிருக்குமாறு நடத்தல் வேண்டும். தன் உணவைத் தன் ஆசானொடு பகிர்ந்துகொள்ள வேண்டும்; அவ்வாறு பகிர்ந்து கொள்ளாதவன் செல்வம் விரைந்து அழியும்; தான் கற்ற கல்வியைத் தவறான வழியில் செலுத்து பவனின் கல்வியும், அது கொண்டு ஈட்டிய செல்வமும் அழிந்து படும்; தான் துன்புற்ற நேரத்தில் உதவி செய்தவர் துன்பமடைந்த காலத்தில், அவருக்கு உதவாதவனின் செல்வமும் அழியும்; அவையல்லாமல், ஒருவர் செய்த உதவியை மறந்துவிட்டுச் செய்ந்நன்றி காட்டாதவன், பெறவேண்டிய தண்டனையை அவன் இறந்துபட்டாலும், அவன் பெற்றே தீருவான்.

"மன்னன் ஒருவன் முயற்சியற்றவனாய் இருப்பானானால் அவன் குடிமக்கள் துன்புற்று மடிவர்; அதுபோலவே, ஒருவன் தன் சுற்றத்தினருக்கு உதவாமல், அவர் உள்ளம் வருந்துமாறு சேர்த்த செல்வமும் தானே அழிந்துவிடும். சூள் உரைத்துச் சென்ற ஒருவன், தான் உரைத்தவாறே நடந்துகொள்ளாமல் பொய்த்தானேயானால், அவன் ஈடுபடும் போர்க்களத்தில், சிறந்த வாள் வீரனாய்த் தோன்றினாலும், அவனால் வெற்றியுற இயலாது; வெற்றி பெற்றாலும், அவனால் அவ்வெற்றியை அனுபவிக்க இயலாது.

"பெருமை மிக்க தலைவனே! நான் கூறிய உண்மைகளை யெல்லாம் எண்ணிப்பார்! நீ காமநோய் கொண்டு வாடியபோது, உன் நோய் தீர உதவியவள், உன் தலைவி; அவள் செய்த நன்றியினை மறவாதே! அவளைப் பிரிய மாட்டேன் என்று நீ சூள் உரைத்தாய்; அந்தச் சூள் பொய்த்துவிடுமாறு நடந்து கொள்ளாதே!

"கோட்டையிலே வாழும் மன்னன் ஒருவன்மீது கோபம் கொண்ட வேற்று வேந்தன், அந்தக் கோட்டையை முற்றுகை யிட்டானேயானால், கோட்டைக்குள்ளே வாழுவோர் எத் துணைத் துன்பங்களை அடைவார்கள்! அவர்களைப் போன்று உன் தலைவி துன்புறுகின்றாள். இனியாவது, அவள் துன்பங்கள் நீங்குமாறு நீ விரைந்து சென்று மணந்துகொள்வாயாக!" என்று கூறினாள்.

கருத்து

தலைவியிடம் செய்த சூளுரை பொய்க்காது உடனே அவளை மணந்து கொள்.

விளக்கம்

தலைவன் தலைவியை மணந்துகொள்ளாமல் காலத்தை நீட்டித்துக்கொண்டிருந்தான். அதுகண்டு தலைவி ஆற்றாமை மிக்கவளானாள். தோழி, தலைவிக்காகத் தலைவனிடம் சென்று, தலைவியின் ஆற்றாமைத் துன்பத்தைக் கூறி, அவனுக்கு அறிவுரையும் கூறுகிறாள். "செய்ந்நன்றி மறத்தல், சூளுறவு பொய்த்தல் ஆகிய இரண்டும் பெருங்குற்றங்கள் என்பது உலக நியதி. இத்தவற்றினைச் செய்பவர் தேய்ந்தே போவர். தலைவ! சிந்தித்துப் பார். உன் காதலிக்கு என்ன உறுதிமொழி அளித்தாய்? அதனை நிறைவேற்ற வேண்டாவா? உன் உறுதிமொழியை மெய்யாக்க, விரைவில் தலைவியை மணந்துகொள்" என அவள் தலைவனிடம் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. நிரை - வரிசை; திமில் - படகு; களிறு - யானை; திரை - அலை; பறை - முரசு.
2. புள் இனம் - பறவைக்கூட்டம்; அம்சிறை - அழகிய சிறகு.
3. அரைசு - அரசன்; கால் கிளர்தல் - படையெழுவித்து நடத்தல்; உரவுநீர் - கடல்.
4. அழுங்க - வருந்த; பகர்ந்து - கைம்மாறாய்க் கொடுத்து; உண்ணான் - உண்ணாதவன்; விச்சை - கல்வி.
5. தப்பித்தான் - தவறான வழியில் செலுத்துபவன்; தமியவே தேயும் - தானே அழியும்.
6. ஒற்கம் - வறுமை, தளர்ச்சி.
7. அவன் எச்சத்துள்ளும் - அவனது மரபினரிடத்தேயும்; எறியாது - துன்புறுத்தாது.
8. கேளிர் - சுற்றத்தார்; கெழுவுற்ற - பொருந்தியுள்ள.
9. தாள்இலான் - முயற்சி இல்லாதவன்.
10. சூள் - சூளுரை, உறுதிமொழி.
11. வாள்வாய் - வாளின் முனை.

14. சினைஇய வேந்தன் - சினமுற்ற அரசன்; எயிற்புறம் - கோட்டையின் வெளிப்புறம்.
14-15. இறுத்தவினை - முற்றுகையிடுதலாகிய செயல்.
15. பருவரல் - (கோட்டைக்குள்ளிருப்பவர்க்கு) நேரிட்ட துன்பம்.
16. துனைவரு - விரைவில் மணம்பேசி வருவாய் (துனை - விரைவு).

தோழி கூற்று

ஐந்திணை ஐம்பது 48 **மாறன் பொறையனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகனைத் தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவியை மணந்துகொள்ளும்படி தலைவனைத் தோழி தூண்டியது.

எக்கர் இடுமணல்மேல் ஓதம் தரவந்த
நித்திலம் நின்றிமைக்கும் நீள்கழித் தண்சேர்ப்ப!
மிக்க மிகுபுகழ் தாங்குபவோ தற்சேர்ந்தார்
ஒற்கம் கடைப்பிடியா தார்.

தெளிவுரை

கடற்கரை மணலில் அலைகள் கொண்டுவந்து சேர்த்த முத்துகள் நிலையாய் ஒளி வீசும் நீண்ட கழிகளைக் கொண்ட கடற்கரைத் தலைவனே! தம்மைச் சேர்ந்தோரின் தளர்ச்சியினைப் போக்கத் தாமே முன்வாராதோர், உலகோர் போற்றும் உயர்ந்த புகழைப் பெறுவரா? (பெற மாட்டார்.)

கருத்து

தலைவியின் தளர்ச்சியினை, அவளை மணந்து போக்குவதே தலைவனுக்குப் புகழ்.

சொற்பொருள்

1. எக்கர் - அலை கரைமேல் ஏறும்படியாய்; இடுமணல் - இட்ட மணல்; ஓதம் - அலை; தரவந்த - கொண்டுவந்து சேர்த்த.
2. நித்திலம் - முத்து; நின்று இமைக்கும் - நிலையாய் ஒளி வீசும்.

3. புகழ் தாங்குபவோ - புகழைப் பெறுவரோ? (பெறமாட்டார்); தற்சேர்ந்தார் - தம்மை அடைந்தோர்.
4. ஒற்கம் - தளர்ச்சி; கடைப்பிடியாதார் - போக்க முன்வாராதோர், களையாதவர்.

தோழி கூற்று

கலித்தொகை 129 — **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

"தன்னுட் கையாறெய்திடு கிளவி"யால் தலைமகள் ஆற்றாளாயினவாறு, தோழி தலைமகற்குக் கூறியது.

கூற்று விளக்கம்

"தன்னுள் கையாறு எய்திடு கிளவி" என்பது இறையனார் களவியல் நூற்பா அடி. தலைவி தனது செயலற்ற நிலைமை குறித்துத் தன்னுள் வருந்துவது என்பது இதன் கருத்து. அதன்படி பிரிவாற்றாது அவள் வருந்திய வருத்தத்தைத் தோழி தலைவனிடம் கூறுகின்றாள்.

தொல்லூழி தடுமாறித் தொகல்வேண்டும் பருவத்தால்,
பல்வயின் உயிரெல்லாம் படைத்தான்கண் பெயர்ப்பான்போல்,
எல்உறு தெறுகதிர் மடங்கித்தன் கதிர்மாய
நல்அற நெறிநிறீஇ உலகாண்ட அரசன்பின்,
அல்லது மலைந்திருந்து அறநெறி நிறுக்கல்லா
மெல்லியான் பருவம்போல், மயங்கிருள் தலைவர
எல்லைக்கு வரம்பாய, இடும்பைகூர், மருள்மாலை—

பாய்திரைப் பாடுஓவாப் பரப்புநீர்ப் பனிக்கடல்!—
'தூஅறத் துறந்தனன் துறைவன்'என்று, அவன்திறம்
நோய்தெற உழப்பார்கண் இமிழ்தியோ, எம்போலக்
காதல்செய்து அகன்றாரை உடையை யோ?நீ.

மன்றுஇரும் பெண்ணை மடல்சேர் அன்றில்!—
நன்றுஅறை கொன்றனர் அவர்'எனக் கலங்கிய
என்துயர் அறிந்தனை நரறியோ? எம்போல
இன்துணைப் பிரிந்தாரை உடையை யோ?நீ.

பனிஇருள் சூழ்தரப் பைதலம் சிறுகுழல்–
'இனிவரின், உயரும்மன் பழி'எனக் கலங்கிய
தனியவர் இடும்பைகண்டு இனைதியோ?' எம்போல
இனியசெய்து அகன்றாரை உடையை யோ?நீ.

எனவாங்கு–

அழிந்து,அயல் அறிந்த எவ்வம் மேற்படப்
பெரும்பே துறுதல் களைமதி, பெரும!
வருந்திய செல்லல் தீர்த்த திறன்அறி ஒருவன்
மருந்துஅறை கோடலின் கொடிதே, யாழநின்
அருந்தியோர் நெஞ்சம் அழிந்துஉக விடினே.

தெளிவுரை

பல உலகங்களிலும் உள்ள உயிர்களையெல்லாம் (அயனாய்ப்) படைத்த முதல்வன், தொல் ஊழிக்காலத்தே அவ்வுயிர்களெல்லாம் (அரனாய) தன்னிடத்தே தொகையாய் வந்து ஒடுங்குதலைச் செய்வன்; அதுபோல, கதிரவன், பகல் தோன்றுதற்குக் காரணமாய்க் காய்கின்ற கதிர்களைப் பரப்பிப் பின்னர்த் தான் பிறப்பித்த கதிர்க்கற்றைகளை மீட்டுத் தன்னுள்ளேயே அடக்கிக்கொண்டு மறைந்தான்.

அறநெறியில் உலகை நிலை நிறுத்தி ஆண்ட மன்னன் போய பின்னர் - மறைந்த பிறகு - அறநெறியை நிலை நாட்ட இயலாத வலுவற்ற மன்னன் காலம்போல, மயங்கிய இருள் தோன்றியது. இருளுக்கும் பகலுக்கும் எல்லையாய் அமைந்து, வருத்தம் மிகுதற்குக் காரணமாயிருக்கிறது, மயக்கத்தைத் தரும் மாலைக் காலம். அத்தகைய மாலை நேரத்தில் தலைவி, அலைகள் ஒலித்தல் நீங்காத பரந்துபட்ட நீரைக் கொண்ட கடலை நோக்கி, "குளிர்ச்சி பொருந்திய நீரைக் கொண்ட ஏ! கடலே! துறைவன் என் வலிமை அழியும்படி என்னைக் கைவிட்டனன்; அவன் உண்டாக்கிய காமநோய் என்னைச் சுடுகின்றது. உன் அலைகள் பரவி எப்பொழுதும் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. தலைவன் என்னைக் கைவிட்டதால் நான் படும் வருத்தத்தை எண்ணி என்மீது இரக்கம் கொண்டு அலைகளும் ஒலிக்கின்றனவோ? அல்லது கடலே! நீயும் என்னைப் போல் ஒருவன்மீது காதல் கொண்டு அவனைப் பிரிந்துள்ளாயா?"

மன்றிடத்துள்ள கரிய பனையின் மடலிலே தங்கி ஒலித்துக் கொண்டிருக்கும் அன்றிலை நோக்கி, "மடல்சேர் அன்றிலே! என் தலைவன், நான் சொல்லும் நல்லனவற்றைக் கேட்காமல் என்னைத் துன்பத்தில் ஆழ்த்திய செய்தியை அறிந்து நீயும் எனக்காக வருந்தி அழுகின்றனையோ? அல்லது என்னைப் போல் நீயும் உன் துணைவனைப் பிரிந்து வாடிக்கொண்டிருக்கிறாயா?"

பின்னர், அங்கே காணப்பட்ட சிறிய இசைக்கருவியான குழலைக் கண்ட தலைவி, "அழகிய சிறு குழலே! இனிய இசையைத் தாராது வருந்தியிருக்கிறாயே! தலைவனைப் பிரிந்து துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் என்மீது இரக்கம் கொண்டு இவ்வாறு உள்ளனையோ? அல்லது என்னைப் போல் நீயும் உன் துணைவனைப் பிரிந்து வாடியிருக்கிறாயா?"

இவ்வாறெல்லாம் தலைவி சொல்லிச்சொல்லி வருந்திய செய்திகளையெல்லாம் தலைவனிடம் தோழி கூறுகிறாள்.

பின்னர்த் தலைவனை நோக்கி, "பெருமானே! 'நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை' என்பதை நீயும் அறிவாயன்றோ! அந்த நிறையினை இழந்ததால், அயலவரும் தலைவியின் துன்பத்தை அறிந்துகொண்டனர். தன் நிலையை ஊரில் உள்ள எல்லோருமே அறிந்துவிட்டனரே என்று உன் தலைவி நெஞ்சம் கலங்கிப் பித்தம் கொண்டவளாய்விட்டாள். அவளுக்கு உன்னால்தான் இந்நோய் ஏற்பட்டுள்ளது. இந்த நோய் நீக்கும் மருந்து நீயாய் உள்ளாய். எனவே, அவளைக் கைவிட்டுவிடாதே! அவள் நோயினைத் தீர்க்கும் திறம் உன்னிடந்தான் உள்ளது. நோய்வாய்ப்பட்ட ஒருவன், அந்நோய் தீர்க்கும் திறன் வாய்ந்த ஒருவனிடம் சென்று, தன் நோயைப் போக்குமாறு வேண்டியும், அவன், தன்னிடம் உள்ள மருந்தைத் தந்து நோயைப் போக்காமல் வஞ்சிப்பானேயானால், அவனைவிடக் கொடியவன் வேறு எவரும் இருக்க இயலாது. அத்தகையவனாய் நீ ஆகாமல், வருத்தமுற்றிருக்கும் தலைவியிடம் அருள் கொண்டு, அவள் நோய் நீக்கி, அவளை விரைவில் மணந்துகொள்" என்று தோழி கூறினாள்.

கருத்து

"நோயினை அறிந்து, அதனைப் போக்குதற்குரிய மருந்தையும் வைத்திருப்பவன், நோயுள்ளார் இறைஞ்சியும் தாராது, 'அவர் அழியட்டும்' என வாளாதிருத்தல் கொடிதன்றோ? அதுபோல, அவள் நோயையும் நீ அறிவாய்; அதனை நீக்கும் மருந்தாயும் நீ இருக்கிறாய். இனியும் நீ சென்று, அவளுக்கு உதவாதிருத்தல் கொடிது" எனத் தோழி தலைவனிடம் கூறித் தலைவியைத் திருமணம் செய்துகொள்ளத் தூண்டுகிறாள்.

தொன்மம்

சிவன் பிரம்மாவாய் இருந்து உலகைப் படைப்பான் என்பதும், உலகம் பலவற்றுள் வாழும் உயிர்களை மீண்டும் பிரளயக் காலமான ஊழிக்காலத்தில் அவனே தன்னிடம் ஒடுக்குவான் என்பதும் தொன்மச் செய்தியாகும். அச்சிவனைப் போலவே கதிரவன் தான் பிறப்பித்த கதிர்க்கற்றைகளை மாலைக் காலத்தில் தன்னுள்ளேயே அடக்கிக்கொண்டு பகலை மறைத்துவிட்டதாய்ப் புலவர் கூறுகிறார்.

உவமை

தலைவியை நோயாளியாகவும், தலைவனை நோய் தீர்க்கும் மருத்துவனாகவும் உவமை கூறியுள்ளது நயமிக்கது.

சொற்பொருள்

1. ஊழி - ஊழிக்காலம் - அப்போது உலகம் முழுவதும் அழியும்; தொகல் - ஒடுங்குதல்.
2. படைத்தான் - படைத்தற்கடவுள்; பெயர்ப்பான் - அழித்தற்கடவுள்.
3. எல் - சூரியன்; தெறுகதிர் - காயும் கதிர்.
4. நெறி நிறீஇ - நல்ல நெறியில் நடக்கச்செய்து.
5. அல்லது மலைந்திருந்து - நல்ல நெறியில் ஆளாதவன் காத்து; நிறுக்கல்லா - நிலை நாட்ட இயலாத.
6. மெல்லியான் - வலிமையில்லாதவன்; பருவம் போல் - ஆட்சிக்காலம் போல்.
7. இடும்பை கூர் - துன்பமிக்க.
8. பாய்திரை - பாயும் அலை; பாடு ஓவா - இடைவிடாது ஒலிக்கின்ற.
9. தூஅற - பற்றுக்கோடு முற்றிலுமாய் நீங்க.
10. நோய் தெற - துன்பம் வருத்த; இமிழ்தியோ - முழங்குகின்றாயா?

11. அகன்றாரை - நீங்கியவரை.
12. இரும் - கரிய; பெண்ணை - பனை மரம்.
13. நன்று அறை கொன்றவர் - (நான் சொல்லும்) நல்லனவற்றைக் கேட்காமல்.
14. நரறியோ - கூவினையோ.
16. பனிஇருள் சூழ்தர - பனியோடு கூடிய இருள் சூழ்ந்து கொண்டிருப்பதாலே; பைதல் - துன்பம் (தரும்); அம் - அழகிய.
17. இனிவரின் - இக் காலத்தே வருவாராயின்; உயரும் பழி - தாம் செய்த பழி மிகவும் போம் என்று.
18. இனைதியோ - வருந்துகின்றாயோ?
21. எவ்வம் - துன்பம்.
22. பெரும் பேதுறுதல் - மிகவும் பித்தேறல்; களைமதி - நீக்குக.
23. செல்லல் - வருத்தம்; திறன் - கூறுபாடு.
24. அறைகோடல் - தந்து உதவாமல் வஞ்சித்தல்.
25. அருந்தியோர் - நுகர்ந்தோர்.

தோழி கூற்று

ஐந்திணை எழுபது 6 **மூவாதியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

புணர்ந்து நீங்குந் தலைமகனைக் கண்டு தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவியை மணந்துகொள்ளுமாறு தலைவனிடம் தோழி கேட்டுக் கொள்வது.

பொன்இணர் வேங்கை கமழும் நளிசோலை
நன்மலை நாட! மறவல் வயங்கிழைக்கு
நின்னல(து) இல்லையால் ஈயாயோ கண்ணோட்டத்(து)
இன்னுயிர் தாங்கும் மருந்து.

தெளிவுரை

"பொன் நிறப் பூங்கொத்துகளைக் கொண்ட வேங்கை மரங்கள் நறுமணம் வீசும் குளிர்ச்சி பொருந்திய பூஞ்சோலைகள்

நிறைந்த மலைநாட்டுக்குத் தலைவனே! தலைவியை மறந்து விடாதே! அவளுக்கு உன்னைத் தவிர வேறு எவரும் துணை இலர். உன் அருள் பார்வையால் அவளது இனிய உயிரை நிலைபெறச் செய்யும் திருமணம் என்னும் மருந்தைக் கொடுத்துக் காப்பாற்று!" என்று தோழி, தலைவியை மணந்துகொள்ளுமாறு தலைவனிடம் வேண்டினாள்.

கருத்து

தலைவியின் உயிர் காக்கும் மருந்து, தலைவன் அவளை மணந்து கொள்வதுதான்.

சொற்பொருள்

1. பொன் இணர் - பொன்நிறப் பூங்கொத்து; வேங்கை - வேங்கை மரம்; கமழும் - மணம் வீசும்; நளி - குளிர்ச்சி பொருந்திய.
2. மறவல் - மறந்துவிடாதே; வயங்கிழை - விளங்குகின்ற அணிகலன் களை அணிந்துள்ள தலைவி.
3. நின்னலது - உன்னையல்லாமல்; ஈயாய் - கொடுத்துக் (காப்பாற்று); கண்ணோட்டம் - அருள்.
4. தாங்கும் - காக்கும்.

தோழி கூற்று

ஐந்திணை எழுபது 6 **மூவாதியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

புணர்ந்து நீங்கும் தலைமகனைக் கண்டு தோழி வரைவுகடாயது.

கூற்று விளக்கம்

தன் உதவியால் தலைவியைக் குறியில் கூடி நீங்கும் தலைவனை நேரில் பார்த்துத் தலைவியை மணந்துகொள்ளுமாறு தோழி கூறியது.

வெறிகமழ் தண்சுனைத் தெண்ணீர் துளும்பக்
கறிவளர் தேமா நறுங்கனி வீழும்
வெறிகமழ் தண்சோலை நாட,ஒன் றுண்டோ
அறிவின்கண் நின்ற மடம்.

தெளிவுரை

மிளகுக்கொடிகள் படர்ந்துள்ள இனிய மாமரத்திலுள்ள மணம் கமழும் நறுங்கனிகள், குளிர்ச்சி பொருந்திய சுனைநீர் ததும்பும்படி வீழ்கின்றன. இத்தகைய நறுமணங்கமழும் குளிர்ச்சி பொருந்திய சோலைகள் பலவற்றைக் கொண்ட மலை நாட்டுக்குத் தலைவனே! நல்லறிவுள்ள உன்னிடம் மற்றவர் எடுத்துக்காட்டக்கூடிய அறியாமை என்பது ஒன்று உண்டா? இல்லையே! அறிவு வாய்ந்த நீ தலைவியை மணந்து கொள்ள வேண்டும் என நான் கூற வேண்டுமா?

கருத்து

தலைவ! 'அறிவு வாய்ந்த உன்னிடம் தலைவியை மணந்துகொள்ள வேண்டும்' என நான் கூறவும் வேண்டுமா?

குறிப்பு

'பிறவற்றில் அறிவோடு செயல்படுபவனாய் இருக்கின்ற நீ, தலைவியை மணப்பதிலும் அந்த அறிவுடைமையை மேற்கொள்ள வேண்டுமன்றோ? ஆதலின், தலைவியை மணக்க உடனே வருக' என்கிறாள்.

'அறிவின்கண் நின்ற மடம் உண்டோ?' என்னும் தொடர், அறிவு இருக்கு மிடத்தில் அறியாமை இராது என்பதை அழகுற விளக்குகிறது.

சொற்பொருள்

1. வெறி - மணம்; கமழும் - வீசும்; தெண்ணீர் - தெள் நீர் - தெளிந்த நீர்; துளும்ப - ததும்ப.
2. கறி - மிளகுக்கொடி; தேமா - இனிய மாமரம்; நறுங்கனி - நல்ல பழம்.
3. வெறி - நறுமணம்; ஒன்று உண்டோ? - ஒரு பொருள் காணப்படுமா? (காணப்படாது).
4. அறிவின்கண் - நல்ல அறிவினிடத்திலே; நின்ற - தங்கியுள்ள; மடம் - அறியாமை.

3-4. அறிவின்கண் நின்ற மடம் ஒன்று உண்டோ? - அறிவு இருக்குமிடத்தில் அறியாமை இராது (மடம் - அறியாமை).

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 44 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகனைக் கண்ணுற்று நின்ற தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

அரிதாய் வருகின்ற தலைவன் சிறைப்புறத்தே நிற்பதைக் கண்ணுற்ற தோழி, அவனைத் தலைவியை மணந்துகொள்ளுமாறு தூண்டியது.

இனமீன் இருங்கழி ஓதம் உலாவ
மணிநீர் பரக்கும் துறைவ! தகுமோ
குணநீர்மை குன்றாக் கொடியன்னாள் பக்கம்
நினைநீர்மை இல்லா ஒழிவு?

தெளிவுரை

“மீன் கூட்டங்களைக் கொண்ட பெரிய கடற்கழியில் அலைகள் வந்து மோத, நீலமணி போன்ற கடல்நீர் பரவிச் செல்லும் துறைகளைக் கொண்ட தலைவனே! நற்குணங்களில் சிறிதும் குறைவு படாத, பூங்கொடி போன்ற தலைவியை மணந்துகொள்வதை எண்ணிப் பார்க்கும் நிலை உன்னிடம் இல்லாதிருப்பது தக்கதோ?” என்று கூறித் தலைவனைக் கண்ணுற்று நின்ற தோழி, தலைவியை விரைவில் வரைந்து கொள்ளுமாறு அவனைத் தூண்டினாள்.

கருத்து

தலைவ! நற்குணம் நிறைந்த நீ தலைவியை இன்னும் மணந்து கொள்ளாமல் இருப்பது நன்றோ?

சொற்பொருள்

1. இன மீன் - மீன் கூட்டம்; ஓதம் - அலை.
2. மணி நீர் - நீலமணி போன்ற நீர்; பரக்கும் - பரவிச் செல்லும்.
3. குண நீர்மை - நற்குணங்களின் தன்மை; குன்றா - குறைவுபடாத; பக்கம் - இடத்தே.
4. நினை - (மணவினையினை) நினைத்துப் பார்க்கும்படியான; நீர்மை - தன்மை; இல்லா ஒழிவு - ஏற்படாது நீங்கியிருப்பது.

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 45 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகனைக் கண்ணுற்று நின்ற தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவன் வேலி ஓரத்தே நிற்பதைக் கண்ணுற்ற தோழி, தலைவியை மணந்துகொள்ளுமாறு அவனைத் தூண்டியது.

கடல்கொழித்(து) இட்ட கதிர்மணி முத்தம்
படம்அணி அல்குல் பரதர் மகளிர்
தொடலைசேர்த்(து) ஆடும் துறைவ! என்தோழி!
உடலுள் உறுநோய் உரைத்து.

தெளிவுரை

"பாம்பின் படம் போன்ற அல்குலைக் கொண்ட பரதவப் பெண்கள் கடல்அலைகள் கரையில் கொண்டுவந்து சேர்க்கும் ஒளிவீசும் முத்துகளை மாலையாய்க் கோத்து விளையாடும் கடல் துறைக்குத் தலைவனே! என் தலைவி, நீ மணந்து கொள்ளாமையால் அடையும் துன்பங்களை என்னிடம் கூறி, உடல் வாட்டமுற்று மிகவும் வருந்துகிறாள். எனவே, விரைவாய் அவளை மணந்துகொள்" என்று தோழி, தலைவியின் வருத்தத் தைக் கூறி அவளை வரைந்துகொள்ளுமாறு தலைவனைத் தூண்டுகிறாள்.

கருத்து

தலைவ! நீ மணந்துகொள்ளாமையால் உடல் வாட்டமுற வருந்தி யிருக்கும் தலைவியை உடனே மணம் கொள்.

சொற்பொருள்

1. கடல் - கடல் அலை; கொழித்து - அலசி; இட்ட - கரையில் சேர்த்த; கதிர் - ஒளி வீசும்; மணி - மணி போன்ற; முத்தம் - முத்து.
2. படம் - பாம்பின் படத்தினையொத்த; அணி - அழகிய; பரதர் - பரதவர்.
3. தொடலை - மாலை.

4. உறுநோய் - (நீ வரைந்துகொள்ளாமையால்) உறுகின்ற துன்பங்களை; உரைத்து - என்னிடம் சொல்லி.

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 46 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகனைக் கண்ணுற்று நின்ற தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவன் சிறைப்புறத்தே நிற்பதைக் கண்ணுற்ற தோழி, தலைவியின் மனக்கவலை தீர உடனே அவளை மணந்துகொள்ளுமாறு அவனைத் தூண்டியது.

முருகியல் கானல் அகன்கரை ஆங்கண்
குருகினம் ஆர்க்கும் கொடுங்கழிச் சேர்ப்ப!
மருவி வரல்உற வேண்டும்என் தோழி
உருஅழி உள்நோய் கெட.

தெளிவுரை

"அழகு பொருந்திய கடற்கரைச்சோலையில் பறவைக்கூட்டம் ஆரவாரிக்கும் வளைந்த கழிகளைக் கொண்ட கடல்துறைவனே! என் தலைவியின் உடலழகு அழிவதற்குக் காரணமான மனநோய் நீங்க நீ அவளை மணந்துகொள்ள வரவேண்டும். இதைத்தான் தலைவி மிகவும் விரும்புகின்றாள்" எனத் தலைவனைக் கண்ணுற்ற தோழி கூறினாள்.

கருத்து

தலைவ! தலைவியின் மன நோய் நீங்க அவளை விரைந்து மணந்துகொள்.

சொற்பொருள்

1. முருகு - அழகு; இயல் - பொருந்தியுள்ள; அகன்கரை - அகன்ற கரை; ஆங்கண் - அவ்விடத்தே.
2. குருகு இனம் - பறவைக்கூட்டம்; ஆர்க்கும் - ஆரவாரிக்கும்; கொடுங் கழி - வளைந்த கழி.

3. மருவி - (மணம் செய்தலை) மேற்கொண்டு; வரல்உற - வந்து அடைதல்.
4. உரு அழி - உடல் அழகு அழிதற்குக் காரணமான; உள்நோய் - மன நோய்; கெட - நீங்க.

தோழி கூற்று

நற்றிணை 345 **நம்பி குட்டுவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தெளிவிடை விலக்கியது. (தெளிவாகக் கூறும் செய்தியை மறுத்துக் கூறுதல்.)

கூற்று விளக்கம்

நெடுநாள் பழகியும் வரைவு கொள்ளாது, 'நான் விரைந்து மணப்பேன்' என்று கூறிய தலைவனிடம் தோழி, 'இனியும் விளக்கம் கூறிக் காலம் கடத்திக் கொண்டிராதே!' என்று கூறியது.

கானல் கண்டல் கழன்றுஉகு பைங்காய்
நீல்நிற இருங்கழி உட்பட வீழ்ந்தென,
உறுகால் தூக்க, தூங்கி ஆம்பல்,
சிறுவெண் காக்கை ஆவித்து அன்ன,
வெளிய விரியும் துறைவ! என்றும்,
அளிய பெரிய கேண்மை நும்போல்,
சால்புஎதிர் கொண்ட செம்மை யோரும்
தேறா நெஞ்சம் கையறுபு வாட
நீடின்று விரும்பார் ஆயின்,
வாழ்தல்மற்று எவனோ? தேய்கமா தெளிவே!

தெளிவுரை

"கடற்கரைச்சோலையில் வளர்ந்துள்ள கண்டல் மரத்திலிருந்து பசிய காய்கள் நீல நிறமுள்ள பெரிய கழியினுள்ளே விழுகின்றன; காற்று வீசுவதால் அக்காய்கள் அசைந்து சென்று ஆம்பலின் அரும்புகளைச் சாய்க்க, அம்மலர்கள், வெண்ணிற நீர்க்காக்கை கொட்டாவி விட்டாற்போல வெண்ணிறமாய் மலர்ந்து நிற்கும் துறையினை உடைய தலைவனே! நீ,

எக்காலத்திலும் அருளும் பண்பும் மிக்க நட்பும் கொண்டவன். உன்னைப் போன்ற சான்றாண்மை கொண்டோர், தம் சொல்லை நம்பித் தம்மை அடைந்தவர் நெஞ்சம் நம்பிக்கையிழந்து, செயலற்று, வாடி வருந்துமாறு கைவிட்டனராயின், அவரை நம்பி அடைந்தவர் அதன்பின் உயிரோடு வாழ்வதால் என்ன பயன்? எனவே, நீ விரைந்து வாராததற்கு இனியும் விளக்கம் தந்துகொண்டிருக்க வேண்டா" என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

கடல்துறைத் தலைவ! வரையாமலிருப்பதற்கு இனியும் விளக்கம் கூறிக் கொண்டிருக்க வேண்டா.

விளக்கம்

தலைவன் விரைந்து வரைந்துகொள்ள விரும்பிய தோழி அவனிடம், 'உன் சொல்லை நம்பி உன்னோடு உறவு கொண்ட தலைவியை ஏற்று, உடனே வரைந்துகொள்ளாது, காலம் நீட்டித்துப் பாராமுகமாய் இருப்பாயாயின், அவள் வாழ்வதில் என்ன பயன்?' என்றாள். தோழியின் சொல் கேட்டுத் தலைவன் விளக்கம் கூற முற்பட்டபோது, அதனை மறுத்துத் தோழி, 'இனியும் நீ விளக்கம் கூறுதலைத் தவிர்த்து, வரைதற்கான செயலை மேற்கொள்க' என்று கூறுகிறாள்.

உள்ளுறை

'கண்டல் மரத்துக்காய் மோதுதலால் மலரும் பருவம் அல்லாத ஆம்பல் மொட்டு வருந்தி மலரும்' என்றது, அயலார் அலர் கூறுவதால், இதுவரை நாணம் முதலானவற்றின் காரணமாய் வாயினால் கூறி வருந்தாத தலைவியும், தன்னிலை திரிந்து மிகப் பலவாறாய்ப் புலம்புவள் என்பதாம்.

சொற்பொருள்

1. கானல் - கடற்கரைச்சோலை; கண்டல் - ஒரு வகை மரம்.
2. உட்பட - உள்ளே.
3. உறு கால் தூக்க - பெருங்காற்று வீச; தூங்கி - சாய்ந்து; ஆம்பல் - ஆம்பல் மலரின் அரும்பு.

4. ஆவித்தன்ன - கொட்டாவி விட்டாற்போல.
5. வெளிய - வெண்ணிறமாய்; விரியும் - மலரும்.
6. கேண்மை - நட்பு.
7. சால்பு எதிர் கொண்ட - சான்றாண்மையை மேற்கொண்ட.
8. தேறா - தேரா - தெளிவில்லாத; கையறுபு - செயல் கெட.
9. நீடின்று - நெடிது வளர்தல் இன்றாக.
10. தெளிவு - தெளிவுரை.

தோழி கூற்று

நற்றிணை 395 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

'நலம் தொலைந்தது' எனக் கூறித் தோழி தலைமகனை வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவியைக் களவொழுக்கத்தில் கூடி மகிழும் தலைவன் வரைவு கொள்வதில் கருத்தின்றி இருத்தலைக் கண்ட தோழி, தலைவனை நோக்கிக் கடிந்து கூறியது.

யாரை எலுவ? யாரேநீ எமக்கு
யாரையும் அல்லை; நொதும லாளனை;
அனைத்தால் கொண்கஎம் இடையே நினைப்பின்,
கடும்பகட்டு யானை நெடுந்தேர்க் குட்டுவன்
வேந்துஅடு களத்தின் முரசுஅதிர்ந் தன்ன
ஓங்கல் புணரி பாய்ந்துஆடு மகளிர்
அணிந்திடு பல்பூ மரீஇ, ஆர்ந்த
ஆபுலம் புகுதரு பேர்இசை மாலைக்
கடல்கெழு மாந்தை அன்ன,எம்
வேட்டனை அல்லையால், நலம்தந்து சென்மே.

தெளிவுரை

"நண்ப! நீ யார்? எமக்கு என்ன உறவுடையை? நீ எமக்கு எவ்வகையிலும் உறவினன் அல்லன். அயலான் போன்றவன். சிந்தித்துப் பார்ப்பின் உனக்கும் எமக்கும் உள்ள தொடர்பு அவ்வளவே! பெரிய யானைப்படையினையும் நெடிய தேர்ப்

படையினையும் கொண்ட குட்டுவன், பகைவேந்தரை வெற்றி கொண்ட களத்தில் அதிரும் முரசின் ஒலிபோல ஒலிக்கும் உயர்ந்த அலைகளைக் கொண்ட கடலில் பாய்ந்து மகளிர் நீராடுவர். அவர்கள் அணிந்து கழித்தெறிந்த (அலைகள் கொண்டுவந்து கரையில் சேர்த்த) பல்வேறு பூக்களை முதிர்ந்த பசு உண்டு தன் புலத்திற்குச் செல்லும். அத்தகைய மாலை நேரக் கடற்காட்சி கொண்ட மாந்தை என்னும் நகரையொத்த எம்மையும், நீ விரும்பவில்லை. ஆதலால், உன்னால் இழந்த எம் நலனை நல்கி உன் போக்கில் செல்க!"

கருத்து

'கொண்க! உன்னால் எம் நலனை இழந்தமையால் வாடும் எமக்கு அதனைத் தந்துவிட்டுச் செல்' என்று சொல்வதன்வழி தோழி தலைவனை வரைவு கடாயினாள்.

விளக்கம்

"நண்ப! நீ யார்? எம்மோடு நீ தொடர்புடையையல்லை. நீ எமக்கு நண்பனும் அல்லன், பகைவனும் அல்லன்; அயலான் ஆகுவை. கொண்கனே! எமக்கும் உனக்குமுள்ள தொடர்பு அவ்வளவே. நாங்கள் பன்முறை வரைவு கடாவியும் நீ அதனை விரும்பவில்லை. ஆதலின், உன் பொருட்டு இழந்த எம் நலத்தைத் தந்து செல்" என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

குறிப்பு

தோழியின் கடுஞ்சொற்களைக் கேட்ட தலைவன் தன் குறையுணர்ந்து விரைந்து மணம் பேசி வருவன்.

சொற்பொருள்

1. எலுவ - நண்ப!; யாரை - யார்; நீ யாரே - நீ என்ன உறவுடையாய்.
2. நொதுமலாளன் - அயலான்.
3. கொண்க - தலைவ!; நினைப்பின் - நினைத்துப் பார்க்குமிடத்து; எம்மிடை - எம்மோடுள்ள தொடர்பு; அனைத்து - அவ்வளவே.
4. கடும் பகட்டு - கடுமையான வலிமை வாய்ந்த; யானை - யானைப்படை; நெடுந்தேர் - நெடிய தேர்ப்படை; குட்டுவன் - சேரமன்னன்.

5. வேந்து - மாற்றரசரை; அடு - வெற்றி கொண்ட; களம் - போர்க்களம்.
6. ஓங்கல் - உயர்ந்த மலை; புணரி - அலை.
7. பல் பூ - பல்வேறு பூக்கள்; மரீஇ - கொணர்ந்து; ஆர்ந்த - உண்ட.
8. ஆ - பசு; புலம் - நிலம்; புகுதரு - செல்லும்.
9. மாந்தை - மாந்தை என்னும் நகரம்.
10. வேட்டனை - விரும்பினை; நலம் - (உன்னால் இழந்த எம்) நலம்; சென்மே - செல்.

தோழி கூற்று

நற்றிணை 396 — **முத்தூற்று மூதெயினனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி தலைமகனை வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

வரைந்துகொள்வதற்கு விரும்பாது தலைவியைக் களவொழுக்கத்தில் கூடி மகிழும் தலைவன், அவளை விரைவில் மணந்துகொள்ள வேண்டும் என்று தோழி கூறியது.

பெய்துபோகு எழிலி வைகுமலை சேர,
தேன்தூங்கு உயர்வரை அருவி ஆர்ப்ப,
வேங்கை தந்த வெற்புஅணி நல்நாள்,
பொன்னின் அன்ன பூஞ்சினை துழைஇ,
கமழ்தாது ஆடிய கவின்பெறு தோகை
பாசறை மீமிசைக் கணம்கொள்பு, ஞாயிற்று
உறுகதிர் இளவெயில் உண்ணும் நாடன்!
நின்மார்பு அணங்கிய செல்லல் அருநோய்
யார்க்குநொந்து உரைக்கோ யானே, பல்நாள்
காமர் நனிசொல் சொல்லி,
ஏமம்என்று அருளாய், நீமயங் கினையே.

தெளிவுரை

மழை பெய்து நீங்கும் மேகம், தான் தங்கும் மலையைச் சென் றடைந்தது. தேனடைகள் தொங்குகின்ற உயர்ந்த மலையிலிருந்து

அருவிகள் ஆரவாரித்து வீழ்கின்றன. வேங்கை மலர்கள் மலர்ந்து மலைக்கு அழகு சேர்த்த காலைப்பொழுதில், பொன் போன்ற பூக்களைக் கொண்ட கிளையில், நறுமணம் கமழும் பூந்தாதினைத் துழாவி அழகு பெற்றது, மயில். அது பசுமை போர்த்த பாறையின் உச்சிமீது தன் கூட்டத்தோடு கூடிக் கதிரவனின் கதிர்கள் தரும் இளவெயிலைத் துய்த்தபடி இருக்கும். இத்தகைய எழில் சிறக்கும் காட்சி கொண்டுள்ள மலைநாட்டிற்குரியவனே! உன் மார்பினைத் தழுவியதால் ஏற்பட்ட அரிய காமநோய் நீங்க யாரிடம் சென்று நொந்துரைப்போம். பல நாளும் விரும்பத்தக்க இனிய சொற்களைக் கூறியுள்ளாய்; ஆயினும், மணவாழ்வே இத்தலைவிக்குக் காப்புடையது என்று அருளாதவனாய் மயங்கி உள்ளனை. இனி என் செய்வோம்?

கருத்து

தலைவ! உன் உறவாலே துன்புற்றோம்; நீயோ அருளாதுள்ளாய். மணந்து துன்பம் துடை.

விளக்கம்

தலைவ! உன் மார்பைப் புல்லியதால் என் தோழிக்குண்டாகிய வேட்கைநோய் பொறுத்தற்கரியது. இதனை யாரிடம் உரைப்பேன்? இவளை முதன்முதலாய்க் கூடிய நாள்முதல் இனிய சொற்கள் பலவற்றைச் சொல்லித் தேற்றி வருகின்றாயே அன்றி, தலைவிக்குப் பாதுகாப்பளிப்பதாகிய செயலைச் செய்யவில்லை. திருமணம் செய்துகொள்ள முயலவில்லை. இனியாகிலும் தெளிந்து செயற்படு.

குறிப்பு

மழை பெய்வது, அருவி ஆர்ப்பது, மயில்கள் இளவெயில் நுகர்வது, வேங்கை பூப்பது ஆகியவற்றைக் கூறியது, அவை மணவினைக்குரிய காலம் என்பதை உணர்த்தவே!

உள்ளுறை

மயில், வேங்கைத்தாதினை அளைந்து தன் கூட்டத்தோடு சேர்ந்து இளவெயில் துய்க்கும் என்பதன் வாயிலாய்த் தலைவன் தலைவியை மணந்து, அவன் ஊர்க்குக் கொண்டுசென்று, தன்

தமரோடும் கூடியிருந்து, மனையறம் பேணி மாண்பினை அடைய வேண்டும் எனும் உள்ளுறைப் பொருள் வெளிப் படுகிறது.

சொற்பொருள்

1. எழிலி - மேகம்; வைகுதல் - தங்குதல்.
2. தேன் - தேனிறால்; தூங்கும் - தொங்குகின்ற.
3. வெற்பு அணி - மலை அழகு பெற.
4. சினை - கிளை; துழைஇ - துழாவி.
5. கமழ் - மணம் கமழும்; கவின் - அழகு; தோகை - மயில்.
6. பாசறை - பசுமை நிறம் கொண்ட கற்பாறை; மீமிசை - மேலே; கணம் கொள்பு - கூட்டமாய் இருந்து.
7. உறுகதிர் - நீண்டு வரும்; இளவெயில் - காலை வெயில்; உண்ணும் - துய்க்கும்.
8. அணங்கிய - வருத்திய; செல்லல் - துன்பம்; அருநோய் - தாங்குதற்கரிய காமநோய்.
9. யார்க்கு - யாரிடம்; நொந்து - வருந்தி; உரைக்கோ - உரைப்பேன்.
10. காமர் - விரும்பத்தக்க; நனி - மிகுதியான.
11. ஏமம் - பாதுகாப்பு; மயங்கினை - மயங்கி உள்ளாய்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 179 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

குறியிடத்து வந்து புணர்ந்து நீங்கும் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டு வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தான் தலைவியைச் சந்திக்குமிடத்தில் அவளைக் கண்டு நீங்கும் தலைவனைப் பார்த்துத் தோழி, தலைவியைத் திருமணம் செய்து கொள்ளுமாறு கூறியது.

நல்குமதி வாழியோ நளிநீர்ச் சேர்ப்ப!
அலவன் தாக்கத் துறைஇறாப் பிறழும்
இன்ஒலித் தொண்டி அற்றே
நின்அலது இல்லா இவள்சிறு நுதலே.

தெளிவுரை

பெரிய கடற்கரைக்குத் தலைவனே! நண்டு தாக்க, துறையில் வாழும் இறால் மீன் துன்பத்தால் புரளும் ஓசை கொண்டது, தொண்டி நகரம். இத்தொண்டி நகரம் போன்ற சிறப்பு வாய்ந்தது, தலைவியின் நெற்றி. இவள் உன்னைத் தவிர வேறு உயிர் இல்லாதவள். ஆதலால், இவள் நெற்றி ஒளி கெடாமல் இருக்க இவளை உடனே மணந்து அருள் செய்.

கருத்து

தலைவ! உன்னைத் தவிர வேறு உயிர் இல்லாத் தலைவியைத் திருமணம் செய்து காப்பாற்று.

விளக்கம்

"தலைவ! உன்னுடன் சேராதபோது தலைவியின் உடலில் வேறுபாடுகள் தோன்றும். அவற்றைக் காணும் அன்னை ஐயம் கொள்வாள். களவொழுக்கம் மற்றவர்க்கு வெளிப்பட்டால் தலைவி நாணமிகுதியால் உயிர் வாழாள். நீ தலைவியை மணந்து கொள்வதன் வாயிலாகவே இந்நிலைமைகளைத் தவிர்க்க இயலும்" என்று தோழி தலைவனிடம் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. நல்குமதி - வரைந்து அருள் செய்; நளி - மிகுதி, பெரிய; சேர்ப்ப - கடல்நிலத்தலைவ!
2. அலவன் - நண்டு; இறா - இறால் மீன்; பிறழும் - துன்பத்தால் புரளும்.
3. தொண்டி - சேரர் துறைமுக நகரம்; அற்று - போன்றது.
4. இவள் - தலைவி.

தோழி கூற்று

நற்றிணை 283 — **மதுரை மருதனிளநாகனார்**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறி வந்த தலைமகனைத் தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவியைக் காண்பதற்குப் பல காலம் பகலில் வந்து செல்லும் தலைவன் மணம் செய்துகொள்ளாது காலத்தை நீட்டிவர, தோழி, 'நீ இவ்வாறு செய்வது தகுமா?' எனச் சொல்லித் தலைவனை விரைவில் மணம்பேசி வருமாறு கூறியது.

ஒள்நுதல் மகளிர் ஓங்குகழிக் குற்ற
கண்நேர் ஒப்பின் கமழ்நறு நெய்தல்
அகல்வரிச் சிறுமனை அணியும் துறைவ!
வல்லோர் ஆய்ந்த தொல்கவின் தொலைய,
இன்னை ஆகுதல் தகுமோ ஓங்குதிரை
முந்நீர் மீமிசைப் பலர்தொழத் தோன்றி,
ஏமுற விளங்கிய சுடரினும்,
வாய்மை சான்றநின் சொல்நயந் தோர்க்கே?

தெளிவுரை

ஒளி பொருந்திய நெற்றியைக் கொண்ட மகளிர் அகன்ற உப்பங்கழியில், பெண்களின் கண்களையொத்த நெய்தல் மலர்களைப் பறித்து வந்து இல்லத்தினை அழகு செய்வர். இத்தகைய கடல் துறைக்குரிய தலைவனே! ஓங்கி வீசுகின்ற அலைகளைக் கொண்ட கடலின்மீது யாவரும் போற்றித் தொழுமாறு விளங்கும் சூரியனைக்காட்டிலும், உண்மை மிக்கதாய் உன் பேச்சினை நம்பினோம். ஆனால், தலைவியின் பழைய அழகு கெடும்படியாக இவ்வாறு செய்வது (அஃதாவது, அவளைப் பிரிந்து செல்வது) உனக்குத் தகுதியாகுமோ?)

கருத்து

'தலைவ! உனக்கு உரியோர் வருந்துமாறு நீ நடந்துகொள்ளுதல் உன் உண்மைத் தன்மைக்குத் தகுதியன்று' என்று கூறித் தோழி தலைவனை மணம் பேச வருமாறு கூறுகிறாள்.

விளக்கம்

ஞாயிறு போன்ற வாய்மை உன்னிடம் உள்ளது. இருப்பினும், உன் சொல்லை ஏற்று உனக்கு உரியவராய் நடந்து வருபவர் ஏங்கி வருந்துமாறு நீ வரையாது நீட்டித்தல் உனக்குத் தகுதியன்று.

குறிப்பு

தலைவன் ஊரைச் சார்ந்த மகளிர் நீலமலரைப் பறித்துக்கொண்டு வந்து சிறு வீட்டினை அழகு செய்வர் என்று கூறுவது, தலைவியை மணந்து உன் ஊருக்கு அழைத்துச் சென்றால் அவள் உன்னுடைய வீட்டுக்கு விளக்காக ஒளி தருவாள் என்பதை விளக்குவதாகும் என்று கொள்ளலாம்.

சொற்பொருள்

1. ஒள்நுதல் - ஒளி பொருந்திய நெற்றி; ஓங்குகழி - அகன்ற உப்பங்கழி; குற்ற - கொய்த, பறித்த.
2. நேர்ஒப்பின் - மிக்க ஒப்புடைய.
3. அகல் வரி - அகன்ற கோலங்கள்.
4. வல்லோர் - ஒப்பனை வல்லுநர்; ஆய்ந்த - ஆராய்ந்து கண்ட; தொலைய - கெடுமாறு.
5. இன்னை - இத்தகைய தன்மை.
6. முந்நீர் - கடல்; மீமிசை - மேலே.
7. ஏமுற - இன்புற; விளங்கிய - தோன்றிய; சுடரினும் - ஞாயிற்றினும்.
8. வாய்மை - உண்மை; சான்ற - வாய்ந்த; நயந்தோர்க்கு - விரும்பி யவர்க்கு.

தோழி கூற்று

நற்றிணை 188 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : குறிஞ்சி

கூற்று

பகற்குறி மறுத்து வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைப் பகற்பொழுதில் வந்து கூடிச் செல்வதையே வழக்கமாய் மேற்கொண்டிருக்கின்றான். தலைவியை மணந்து பிரியாதுறையும் இல்வாழ்வினைப் பற்றிய எண்ணம் அவனிடம் உண்டாகுமாறு தோழி கூறியது.

படுநீர்ச் சிலம்பில் கலித்த வாழைக்
கொடுமடல் ஈன்ற கூர்வாய்க் குவிமுகை,
ஒள்இழை மகளிர் இலங்குவளைத் தொடூஉம்
மெல்விரல் மோசை போலக் காந்தள்
வள்இதழ் தோயும் வான்தோய் வெற்ப!
'நன்றி விளைவும் தீதொடு வரும்'என,
அன்றுநன்கு அறிந்தனள் ஆயின், குன்றத்துத்
தேம்முதிர் சிலம்பில் தடைஇய
வேய்மருள் பணைத்தோள் அழியலள் மன்னே.

தெளிவுரை

"நீர் கொண்ட ஆழமான சுனையுள்ள மலையில் முளைத்த வாழையின் வளைந்த மடலிலிருந்து தோன்றியது, கூரிய நுனியைக் கொண்ட குவிந்த மொட்டு. அஃது ஒள்ளிய அணிகலன்களைக் கொண்ட பெண்களின் மெல்லிய விரலில் அணிந்த விரலணிபோலச் செங்காந்தளின் வளமையான இதழிலே தோய்ந்திருக்கும். மலை, வானளவு நீண்டு உயர்ந் திருக்கும். அத்தகைய மலையினைக் கொண்ட தலைவனே! 'ஒரு காலத்தில் நன்றாய் முடிவதொரு காரியம் மற்றொரு காலத்துத் தீதாய் நிற்கும்' என்பதை எங்கள் தலைவி உன்னோடு நிகழ்ந்த இயற்கைப் புணர்ச்சியாகிய முதற்கூட்டத்திலே நன்றாய் அறிந் திருப்பின், பருத்த அவள் தோள் இன்று எழில் இழந்து

மெலிவெய்தியிராது. இதை உன்னிடம் கூறுவதில் பயனில்லை" எனப் படைத்து மொழியால் அவளை வரையாமல் வாட விடுவது நல்லதன்று என்று தோழி கூறுகிறாள். (படைத்து மொழிதல் - தானாக ஒன்றனைக் கற்பனை செய்து கூறல்.)

கருத்து

தலைவ! நல்லவனாயிருந்த நீ இவ்வாறு மாறுவாய் என்பதை அக்காலத்தே தலைவி அறிந்திருப்பின், அப்போது உன்னோடு உடன்படாது இருந்திருப்பாள்; இப்போது வருந்தாதும் இருப்பாள். அவள் வருத்தம் நீங்க வழி அவளை மணந்துகொள்வதொன்றே ஆகும்.

குறிப்பு

மலையில் பூத்த வாழைப்பூவின் நுனி, விரல் போன்று பூத்துள்ள காந்தள் மலரில் மோதிரம் அணிவித்திருப்பதுபோலத் தோன்றினாலும், அது மோதிரம் ஆகாது. அதுபோல, நீ நல்லவன்போல நடித்துத் தலைவியிடம் இன்பம் துய்த்தனை; இப்போது உன் பிரிவினால் வாடுகின்ற தலைவியை எப்போதாவது காண வருகின்றாய். 'நீ நன்மகன் அல்லன்' என்று கூறுவதன் வழி, தலைவன் தன் தவற்றினை உணர்ந்து, விரைந்து திருமணம் செய்து கொள்வான் என்று தோழி எதிர்பார்க்கின்றாள்.

சொற்பொருள்

1. படு - மடு, சுனை; கலித்த - முளைத்த.
2. கொடு - வளைந்த; கூர்வாய் - கூரிய நுனி; குவிமுகை - குவிந்த மொட்டு.
3. வளை - வளையல்.
4. மோசை - விரலணி (மோதிரம்); காந்தள் - காந்தள் மலர்.
5. வள் இதழ் - வளமையான மடல்; வான்தோய் - வானைத் தொடும்.
6. நன்றி விளைவு - (ஒரு காலத்தே) நன்றாய் முடிந்தது; தீதொடு வரும் - (மற்றொரு காலத்து) தீதாய் நிற்கும்.
7. அன்று - முதலில் நீ புணர்ந்த அந்த நாளில்.
8. தேம்முதிர் - தேன் முற்றிய; சிலம்பு - பக்கமலை; தடைஇய - வளர்ந்து திரண்ட.
9. வேய்மருள் - மூங்கிலை ஒத்த; பணைத்தோள் - பருத்த தோள்; அழியலள் - மெலிந்திருக்க மாட்டாள்.

தோழி கூற்று

குறுந்தொகை 48 **பூங்கணுத்திரையார்**

திணை : பாலை

கூற்று

பகற்குறிக்கண் காணும் பொழுதினும் காணாப்பொழுது பெரிதாகலின் வேறுபட்ட கிழத்தியது வேறுபாடு கண்டு தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பகற்பொழுதில் வந்து தலைவியுடன் பழகுங்காலத்தில் அவனைக் காண நெடுநேரம் காத்திருக்க வேண்டியிருப்பதனால் துயருற்ற தலைவியின் மேனியில் பசலை முதலான வேறுபாடுகள் உண்டாயினமை கண்டு வருந்தி, 'தலைவன் இவளை வரைந்துகொள்வேன் என்று சொல்லானோ' என்று தோழி கூறியது.

'தாதில் செய்த தண்பனிப் பாவை
காலை வருந்தும் கையாறு ஓம்பு'என
ஓரை ஆயம் கூறக் கேட்டும்,
இன்ன பண்பின் இனைபெரிது உழக்கும்
நன்னுதல் பசலை நீங்க, அன்ன
நசைஆகு பண்பின் ஒருசொல்
இசையாது கொல்லோ, காதலர் தமக்கே?

தெளிவுரை

பூந்தாது முதலாய நறுமணப்பொடிகளால் செய்யப்பட்டுள்ளது, விளையாட்டுப்பாவை. மிக்க குளிர்ச்சியுள்ள அவ் விளையாட்டுப்பாவை காலை வெயிலில் கிடந்து வருந்துகிறது. 'இதன் துன்பத்தை நீக்கிக் காப்பாற்று' எனத் தலைவியிடம் அவளுடன் விளையாடும் தோழியர் கூட்டம் கூறியது. அதைக் கேட்ட பின்னும் அதே தன்மையுடன் வருந்திப் பிரிவாற்றாது மிகவும் துன்புற்றிருக்கிறாள், தலைவி. நல்ல நெற்றியைக் கொண்ட இவளது பசலை நீங்க இவளுக்கு விருப்பமான, 'வரைவேன்' என்னும் ஒரு சொல்லைக் கூறத் தலைவனால் இயலாதோ?

கருத்து

'வரைவேன்' என்னும் ஒரு சொல் கூறித் தலைவன் இவள் துயரைப் போக்க மாட்டானோ?

சொற்பொருள்

1. தாது - பூந்தாது; தண்பனி - மிகுந்த குளிர்ச்சியுள்ள; பாவை - விளையாட்டுப்பதுமை.
2. கையாறு - துன்பம்; ஓம்பு - (நீக்கிக்) காப்பாற்று.
3. ஓரை ஆயம் - விளையாட்டுத்தோழியர் கூட்டம்.
4. இன்ன பண்பின் - இத்தகைய தன்மையுடனேயே இருந்து; இனை - வருத்தம்; உழக்கும் - அனுபவிக்கும்.
5. நன்னுதல் - நல்ல நெற்றியைக் கொண்ட தலைவி; பசலை - பசலை நிறம்; நீங்க - நீங்கும்படியாக; அன்ன - அதற்கேற்ற.
6. நகை ஆகு பண்பின் - இவளுக்கு விருப்பமான தன்மையுள்ள; ஒரு சொல் - (வரைவேன் என்னும்) ஒற்றைச் சொல்லை (கூற).
7. இசையாது கொல் - முடியாதோ.

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 50 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறிக்கண் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லு வாளாய்த் தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

பகற்குறி வந்த தலைவன் வேலிக்கு ஒருபுறத்தே நிற்க, அதனைக் கண்ட தோழி அவன் கேட்குமாறு தலைவியிடம், 'தலைவன், உன்னை மணங் கொள்ள விரைவில் வரவேண்டும்' எனச் சொல்லியது.

பவளமும் முத்தும் பளிங்கும் விரைஇப்
புகழக் கொணர்ந்து புற(வு)அடுக்கும் முன்றில்
தவழ்திரைச் சேர்ப்பன் வருவான்கொல் தோழி
திகழும் திருஅமர் மார்பு

தெளிவுரை

என் தலைவியே! பவளத்தையும் முத்தையும் பளிங்கையும் கலந்து கொண்டுவந்து, கண்டார் வியக்கும்படி வீட்டின் முன் பக்கத்தில் சேர்க்கும் அலைகளைக் கொண்ட கடற்றுறையைக் கொண்டவன், நம் தலைவன். அவன், திருமகள் விரும்பும் உன் திருமார்பைத் தழுவி மணங்கொள்ள விரைவில் வருவானா? (என்று தோழி தலைவியை வினவுகிறாள்.)

கருத்து

தலைவியே! உன் மார்பைத் தழுவி மணங்கொள்ளத் தலைவன் விரைவில் வருவானா?

சொற்பொருள்

1. விரைஇ - கலந்து.
2. புகழ - கண்டார் வியக்கும்வண்ணம்; புறவு - மனையின் சுற்றுப்புறம்; அடுக்கும் - சேர்க்கும்; முன்றில் - இல்லின் முன்பாகம்.
3. தவழ் - படிந்து செல்லும்படியான; வருவான் கொல்? - வந்து சேர மாட்டானா?
4. திகழும் - விளங்கும்; திரு - திருமகள்; அமர் - விரும்பும்; மார்பு - மார்பினைத் தழுவ.

தோழி கூற்று

அகநானூறு 282 **தொல்கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறிக்கண் தலைமகன் சிறைப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியை மணந்துகொள்ளாது, தலைவன் களவின்பமே விரும்பி, இரவுக் குறியிடத்தில் சிறைப்புறமாய் வந்து நின்றான்; தலைவன் விரைந்து தலைவியை மணந்துகொள்ள வேண்டுமென்று விரும்பிய தோழி, தலைவன் கேட்குமாறு தலைவியிடம் சொல்லியது.

பெருமலைச் சிலம்பின் வேட்டம் போகிய,
செறிமடை அம்பின், வல்வில், கானவன்
பொருதுதொலை யானை வெண்கோடு கொண்டு,
நீர்திகழ் சிலம்பின் நன்பொன் அகழ்வோன்,
கண்பொருது இமைக்கும் திண்மணி கிளர்ப்ப,
வைந்நுதி வால்மருப்பு ஒடிய உக்க
தெள்நீர் ஆலி கடுக்கும் முத்தமொடு,
மூவேறு தாரமும் ஒருங்குடன் கொண்டு,
சாந்தம் பொறைமரம் ஆக, நறைநார்
வேங்கைக் கண்ணியன் இழிதரு நாடற்கு
இன்தீம் பலவின் ஏர்கெழு செல்வத்து
எந்தையும் எதிர்ந்தனன் கொடையே; அலர்வாய்
அம்பல் ஊரும் அவனொடு மொழியும்;
சாய்இறைத் திரண்ட தோள்பா ராட்டி,
யாயும், 'அவனே' என்னும்; யாமும்,
வல்லே வருக வரைந்த நாள்!என,
நல்இறை மெல்விரல் கூப்பி,
இல்உறை கடவுட்கு ஒக்குதும், பலியே!

தெளிவுரை

“தலைவியே! வேட்டுவன் ஒருவன் வலிய வில்லையும் கூரிய அம்பையும் ஏந்தி வேட்டைக்குச் சென்றான்; ஒரு யானையோடு போரிட்டு அதனைக் கொன்றான். அதன் வெண்மையான தந்தத்தைக் கொண்டு, நீர் நிறைந்த மலையில், பொற்படிவங் களைப் பெறத் தோண்டினான்; பொன்னோடு கண்கவரும் திண்ணிய மணிகளும் வெளிப்போந்தன. கூரிய முனையைக் கொண்ட வெண்மையான தந்தம் ஒடிய, அதிலிருந்து தெளிந்த நீர்மை வாய்ந்த ஆலங்கட்டியை ஒத்த பெரிய முத்துகள் உதிர்ந்தன. பொன், மணி, முத்து ஆகிய வெவ்வேறு பண்டங் களையும் ஒரு மூட்டையாய்ச் சேர்த்தான். பின் அம்மூட்டையை ஒரு சந்தன மரத்தின் கொம்பில் கட்டி எடுத்துக்கொண்டு மலை யிலிருந்து கீழிறங்கினான்; அவன் நறைக்கொடியில் வேங்கை மலர்களைத் தொடுத்த கண்ணியையும் அணிந்திருந்தான். இத்தகைய வளம் நிறைந்தது, நம் தலைவன் மலை.

"அவனுக்குப் பலா மரங்கள் பலவற்றையும், மிகுந்த செல்வத்தினையும் கொண்ட நம் தந்தை, உன்னைத் திருமணம் செய்து கொடுக்க இசைந்துள்ளார். இவ்வூரில் பழி கூறும் பெண்டிரும் உன்னை அவனோடு சேர்த்து வைத்துப் பேசுகிறார்கள். நம் அன்னையரும் உன் தோள்களை மிகவும் பாராட்டி, 'அவனே உனக்கு ஏற்ற கணவன்' என்று சொல்லியுள்ளனர்.

"இத்திருமண நாள் விரைவில் வருக என்று, நம் இல்லுறை தெய்வத்தைக் கைகூப்பித் தொழுது படையல் இடுவோம்" என்று தோழி தலைவன் கேட்குமாறு தலைவியிடம் கூறினாள்.

கருத்து

"தந்தை உன்னை அவனுக்குக் கொடுக்க இசைந்துள்ளார் என்பதாலும், தாய் 'உனக்கு உரியவன் அவனே' எனக் கூறுவதாலும், பழிச்சொல் பேசும் பெண்டிர் உன்னை அவனோடு சேர்த்துப் பேசுவதாலும் நீ தலைவனுக்கே உரியவள் என்பது உறுதி. 'திருமண நாள் விரைவில் வருக' என நாமும் இல்லுறை தெய்வத்திற்குப் படையலிட்டு வழிபடுவோம்" எனத் தோழி தலைவிக்குக் கூறினாள்.

சொற்பொருள்

1. பெருமலைச் சிலம்பு - பெரிய மலைப்பக்கம்; வேட்டம் - வேட்டை.
2. மடை - மூட்டுவாய்.
3. பொருது தொலை - தன்னுடன் போர் செய்து இறந்துபட்ட.
4. அகழ்தல் - தோண்டுதல்.
5. கண் பொருது - கண்ணொளியுடன் மாறுபட்டு; கிளர்தல் - எழுதல்.
6. வைந்நுதி - கூரிய முனை; வால் - வெண்மை; உக்க - உதிர்க்க.
7. ஆலி - பனிக்கட்டி; முத்தம் - முத்து.
8. மூவேறு தாரம் - வெவ்வேறாகிய முப்பண்டங்கள் (பொன், மணி, முத்து).
9. சாந்தம் - சந்தன மரம்; பொறை மரம் - காவு மரம், காவடி; நறை - ஒரு வகைக் கொடி.
10. இழிதரல் - இறங்கி வருதல்.
11. ஏர் - அழகு.
12. எதிர்ந்தனன் - ஏற்றுக்கொண்டனன்.
13. அம்பல் - பழிச்சொல்.
14. சாய் இறை - வளைந்த சந்து.

16. வல்லே - விரைந்து; வரைந்த நாள் - குறித்த நாள்.
18. ஒக்குதும் - செலுத்துவோம், இடுவோம்.

தோழி கூற்று

அகநானூறு 10 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

இரவுக்குறி வந்து தலைமகளைக் கண்ணுற்று நீங்கும் தலைமகனை எதிர்ப்பட்டு நின்று, தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் இரவுக்குறியில் வந்து நீங்கும்போது, அவனை எதிர்ப்பட்டு, 'உன்னைப் பிரிந்து தலைவி உயிர் வாழாள்; ஆதலின், அவளை வரைந்து உடன் அழைத்துச் செல்லுதலே நலம்' எனத் தோழி அறிவுறுத்தியது.

வான்கடல் பரப்பில் தூவற்கு எதிரிய,
மீன்கண் டன்ன மெல்அரும்பு ஊழ்த்த,
முடவுமுதிர் புன்னைத் தடவுநிலை மாச்சினை,
புள்இறை கூரும் மெல்லம் புலம்ப—
நெய்தல் உண்கண் பைதல கலுழ,
பிரிதல் எண்ணினை ஆயின், நன்றும்
அரிதுஉற் றனையால் பெரும! உரிதினின்
கொண்டுஆங்குப் பெயர்தல் வேண்டும்—கொண்டலொடு
குரூஉத்திரைப் புணரி உடைதரும் எக்கர்ப்
பழந்திமில் கொன்ற புதுவலைப் பரதவர்
மோட்டுமணல் அடைகரைக் கோட்டுமீன் கொண்டி,
மணம்கமழ் பாக்கத்துப் பகுக்கும்
வளம்கெழு தொண்டி அன்னஇவள் நலனே.

தெளிவுரை

கடற்கரையில் வளைந்து முதிர்ந்த புன்னை மரம் நிற்கிறது. பெரிய கடற்பரப்பில் எழும் நீர்த்திவலைகள் அதன்மீது

படிகின்றன; விண்மீன்களைக் காண்பனபோல மென்மையான அரும்புகள் பூத்துள்ளன; அப்புன்னை மரத்தின் பெரிய கிளைகளில் பறவைகள் மிகுதியாய்த் தங்கியிருக்கும். இத்தகைய காட்சி கொண்டுள்ள கடற்கரைக்குத் தலைவனே!

(தலைவியைக் களவொழுக்கத்தில் வந்துவந்து சந்தித்துச் செல்கிறாய்.) நெய்தல் மலர் போன்ற அவள் கண்கள் வருந்தி அழுமாறு நீ அவளைப் பிரிந்து செல்லக் கருதினால் அது, தன் திறமைக்கு மேம்பட்ட செயலைச் செய்யக் கருதியவன், அதைச் செய்ய இயலாமல் இடர்ப்படுவதுபோல ஆகும்.

தொண்டிப்பட்டினம் பல பாக்கங்களைக் கொண்டது. கீழ்க்காற்றினால் உந்தப்படும் கடலின் அலைகள் மோதி உடைபடும் மணல் மேட்டால் புதைந்து அழிந்தன, பழைய படகுகள். அதனால், புதிய வலைகளைப் பரதவர் கொண்டிருந்தும் கடல்மீது செல்லாமல், நீரலைக்கண் தாமே வந்து அகப்பட்ட சுறாமீனைப் பிடித்து வந்து மணம் கமழும் பாக்கத்தில் பலர்க்கும் பகிர்ந்தளிப்பர். அத்தகைய தொண்டிப் பட்டினம் போன்ற அழகு மிக்க தலைவியை மணந்துகொண்டு உன் ஊருக்கு அழைத்துச் செல்லுதலே தகுதியாம். (இல்லையேல் இவள் இறந்துபடுவள்.)

கருத்து

தலைவ! உன்னால் தலைவியைப் பிரிந்திருக்க இயலாது; அதனால் அவளை வரைந்துகொண்டு அழைத்துச் செல்.

விளக்கம்

“கடற்கரைத்தலைவ! தொண்டித்துறைமுகத்தை ஒத்த அழகு வாய்ந்தவள், தலைவி. நெய்தல் மலரொத்த அவள் கண்கள் கலங்கும்படி பிரிய நினைப்பாயானால் அது நீ செய்ய இயலாத செயலைச் செய்யத் தொடங்கியதுபோலாகும். நீ தலைவியை வரைந்து உடனழைத்துச் செல்வதே தக்கது” என்று, பிரிதல் அருமை கூறி, மணம் செய்துகொள்ள வேண்டும் என்றாள், தோழி.

குறிப்பு

'புன்னையின் கொம்பில் பறவைகள் தங்கும்' என்னும் தொடர், பறவைக்குப் புன்னை ஆதாரமாயிருப்பதுபோல, தலைவன் தலைவிக்கு ஆதாரமாய் இருக்க வேண்டும் என்னும் இறைச்சிப் பொருளைத் தருகிறது.

உள்ளுறை

'பரதவர் முறையாய்க் கடல்மேல் சென்று முயன்று கடல்வளத்தைத் தேடிக் கொண்டு வரவில்லை. நீரலைக்கண் தாமே வந்து அகப்பட்ட சுறாமீன்களைப் பிடித்துக் கொண்டு வந்து, பலருக்கும் பகுத்து வழங்கினர்.' இத்தொடர்மூலம், தலைவன் முறையாய் மணம் கேட்டு வந்து, மணந்து, தலைவி யுடன் இன்புறுதலை விடுத்து, எதிர்பாராது வாய்த்த களவு நெறியிலேயே மயங்கியிருக்கிறான். அதனைப் பலரும் அறியும் படி செய்து, அலர் எழுவதற்குக் காரணமும் ஆனான் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. வான் - பெரிய; தூவல் - துவலை, நீர்த்துளி.
2. மீன் - விண்மீன்; ஊழ்த்த - மலர்ந்த.
3. முடவு - வளைந்த; தடவுநிலை - பெரிய நிலையைக் கொண்ட; மாச்சினை - கரிய கிளை.
4. இறை கூரும் - மிகுதியாய்த் தூங்கும்; புலம்பன் - கடற்கரைக்குத் தலைவன்.
5. பைதல் - வருந்தினவாய்; கலுழ - அழ.
6. நன்றும் - பெரிதும்.
7. அரிது உற்றனை - அரிய செயலை மேற்கொண்டவன் ஆவாய்.
8. கொண்டல் - கீழ்காற்று; குரூஉ - விளக்கம் பொருந்திய.
9. புணரி - அலை; உடைதரும் - உடைக்கும்.
10. திமில் - படகு; கொன்ற புதுவலை - சிதைவு போக்கிப் புதுக்கிய.
11. மோடு - உயர்ந்த; கோட்டுமீன் - கொம்பினைக் கொண்ட சுறாமீன்; கொண்டி - குவியல்.
12. பகுக்கும் - பகிர்ந்து கொடுப்பர்.
13. தொண்டி - சேரர் கடற்கரைப்பட்டினம்.

தோழி கூற்று

நற்றிணை 365 **கிள்ளிமங்கலங்கிழார் மகனார் சோகோவனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்கு உரைப்பாளாய் இயற்பழித்து, 'இன்னது செய்தும்' என்பாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் சிறைப்புறமாய் நிற்பதைத் தோழி கண்டாள். அவன் தலைவியை விரைவில் மணந்துகொள்ளத் தூண்டுவதற்காகத் தலைவியிடம் தலைவனின் தன்மையை இகழ்வுக் குறிப்புடன் கூறியது.

அருங்கடி அன்னை காவல் நீவிப்
பெருங்கடை இறந்து, மன்றம் போகிப்
பகலே பலரும் காண வாய்விட்டு
அகல்வயல் படப்பை அவன்ஊர் வினவி,
சென்மோ வாழி தோழி! பல்நாள்
கருவி வானம் பெய்யாது ஆயினும்,
அருவி ஆர்க்கும் அயம்திகழ் சிலம்பின்
வான்தோய் மாமலைக் கிழவனைச்
'சான்றோய் அல்லை' என்றனம் வரற்கே.

தெளிவுரை

"தலைவியே! நீ வாழ்க! பலப் பல நாள்களாய் மின்னல் முதலான தொகுதிகளைக் கொண்ட மேகம் பொழியா விட்டாலும், அருவி ஆரவாரித்துக்கொண்டே இருக்கும் பக்க மலைகளைக் கொண்டதும், வானத்தைத் தோய்ந்தது போன்று உயர்ந்ததுமான பெரிய மலையினைக் கொண்ட நாட்டுக் குரியவன், நம் தலைவன். அவனிடம் சென்று, 'உன்னைச் சார்ந்த எம்மைக் கைவிடும் நீ சான்றோன் அல்லன்' என்று கூறி வரல் வேண்டும்.

அதற்காக, அன்னையின் அரிய காவலைக் கடந்து, இல்லத்தின் பெரிய தலைவாயிலை விட்டு நீங்கி, ஊர்ப்

பொதுமன்றத்திற்குச் செல்வோம். அங்குப் பகற்பொழுதிலேயே பலரும் காணுமாறு நம் நாணத்தைக் கைவிட்டு, 'அகன்ற வயல்களைக் கொண்ட, அவன் ஊர் எங்கிருக்கிறது?' என்று கேட்டுச் சென்றுவருவமோ?" என்று தோழி, தலைவியிடம், தலைவன் காதில் படுமாறு பேசுகிறாள்.

கருத்து

தலைவியே! தலைவன் நம்மிடம் அருளில்லாதவனாய் இருப்பதால், நம் நாண் விட்டு, நாமே அவனூர் சென்று 'இதுதான் உன் சால்போ?' என்று கேட்டு வருவோமா?

குறிப்பு

தோழியின் பேச்சினைக் கேட்கும் தலைவன், தன் பிழை உணர்ந்து விரைவில் மணவினைக்கு ஏற்பாடு செய்வான் என்பது பயன்.

இறைச்சி

'சால்பில்லாதவனது மலையாயிருந்தும் பல நாளும் மழை யற்றபோதும் அருவிநீர் வீழ்கின்றதாயிருப்பது எதனாலோ?' என்று கூறி, வியப்பதுபோலத் தலைவனைத் தோழி பழித் துரைக்கிறாள்.

சொற்பொருள்

1. கடி - காவல்; நீவி - நீங்கி.
2. பெருங்கடை - பெரிய தலைவாயில்; இறந்து - கடந்து; மன்றம் - ஊர்ப் பொது மன்றம்.
4. அகல்வயல் - அகன்ற வயல்கள்; படப்பை - தோட்டம்.
5. சென்மோ - செல்வோமா?
6. கருவி வானம் - மின்னல் முதலியவற்றைத் தொகுதியாய்க் கொண்ட மேகம்.
7. ஆர்க்கும் - ஒலிக்கும்; அயம் - நீர் வளம்; சிலம்பு - பக்கமலை.
8. வான்தோய் - வானத்தே தோய்ந்தாற்போன்றிருக்கும்; மலைக் கிழவன் - மலைக்குரியவன், தலைவன்.
9. என்றனம் வரற்கு - என்று சொல்லி வருவதற்காக.

தோழி கூற்று

நற்றிணை 355 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி அருகு அடுத்தது. (அருகு - அண்மை; அடுத்தல் - சேர்தல்.)

கூற்று விளக்கம்

களவொழுக்கக் காலத்தில் தலைவன் வரவு இடையிடையே தடைப்படுகின்றது. அதனால் வருந்தும் தலைவியது நிலைகண்டு தோழி, தலைவனை நெருங்கி, 'தலைவியை அணைந்து அருள் செய்' எனக் கூறுவது.

புதல்வன் ஈன்ற பூங்கண் மடந்தை
முலைவாய் உறுக்கும் கைபோல், காந்தள்
குலைவாய் தோயும் கொழுமடல் வாழை
அம்மடல் பட்ட அருவித் தீம்நீர்
செம்முக மந்தி ஆரும் நாட!
முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்,
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்,
அம்சில் ஓதிஎன் தோழி தோள்துயில்
நெஞ்சின் இன்புறாய் ஆயினும், அதுநீ
என்கண் ஓடி அளிமதி
நின்கண் அல்லது பிறிதுயாதும் இலளே!

தெளிவுரை

புதல்வனைப் பெற்ற பூப்போலும் கண்ணைக் கொண்ட மடந்தை தன் மகனைக் கையால் அணைத்தபடி பாலருந்தச் செய்வாள். அவள் தன் கொங்கையின் காம்பைக் குழந்தை வாயில் வைக்கும் கைவிரல்போல, காந்தளின் சிவந்த பூக் குலையின் இடையிலே பொருந்திய கொழுவிய வாழை மடல் தோன்றும். அம்மடலின் வழியாய் அருவிபோலச் சொரியும் இனிய நீரை, சிவந்த முகத்தைக் கொண்ட குரங்கு தன் வாய் வைத்து அருந்தும் மலை நாட்டிற்குத் தலைவனே! தன் கண் முன்னதாய் அமர்ந்து நண்பர் கொடுப்பது நஞ்சாகவே இருந்தாலும், கண்ணோட்டம் மிக்க சான்றோர் அதனை உண்பர். அழகிய நுண்மையான கூந்தலைக் கொண்ட என்

தலைவியின் தோளில் துயில்வதை உன் உள்ளம் இன்பமாய்க் கொள்ளவில்லை என்றாலும், என்னிடத்துக் கண்ணோட்டம் செலுத்தியாவது அந்த இன்பத்தை அவளுக்கு அளித்திடல் வேண்டும். உன் அருளன்றி அவளுக்குப் பற்றுக் கோடாய் இருப்பவர் வேறு எவரும் இலர்.

கருத்து

தலைவ! நண்பராய் இருப்பவர் தமது கண் முன்னே இருந்து நஞ்சினைக் கொடுப்பாராயின், நாகரிகரான சான்றோர் அதனையும் மறுத்திடாது உண்பர். என் தலைவியின் தோள் நல்கும் இன்பம் உனக்கு உவகை தாராதாயினும், என்னிடம் கண்ணோட்டம் செய்தாயினும் அவளுக்கு அருள் செய். உன் அருளன்றி அவளுக்குப் பற்றுக்கோடாய் இருப்பவர் வேறு எவரும் இலர்.

குறிப்பு

வரைந்துகொள்ளும் அன்பில்லாமை தலைவனிடம் உள்ளதைச் சுட்டிக் காட்டி, உலகியலுக்கு இன்றியமையாத கண்ணோட்டத்தினாலாவது, அவளை உடனே மணந்துகொள்ளுமாறு தோழி தலைவனைத் தூண்டு கிறாள்.

புதல்வனை ஈன்ற தாயின் அன்பை எடுத்துக் கூறியது, அவனும் அவ்வாறே தலைவியுடன் இல்லறம் பேணி, அவள் மகிழ்தல் கண்டு இன்புற வேண்டும் என்பதற்காம்!

காந்தள் பூங்கொத்தில் வாழைப்பூ தோய்வது, தாயின் மார்பகத்தைக் குழந்தை தன் வாயில் பொருத்துதலைப் போலத் தோன்றும் என்பது ஓர் அரிய உவமை.

சொற்பொருள்

1. பூங்கண் - பூப் போன்ற கண்.
2. உறுக்கும் - உறச்செய்யும்.
4. தீம்நீர் - இனிய நீர்.
5. ஆரும் - அருந்தும்.
6. முந்தை இருந்து - தம் கண் முன்னே இருந்து; நட்டோர் - நண்பர்.
7. நனி - மிகவும்; நாகரிகர் - நாகரிகப் பண்புள்ளவர்.
8. அம்சில் ஓதி - அழகிய நுண்மையான கூந்தல்.
10. என் கண் ஓடி - என்னிடம் கண்ணோட்டம் செலுத்தி; அளிமதி - அருள் செய்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 180 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தாழ்த்து வரையக் கருதிய தலைமகனைத் தோழி நெருங்கிக் கடிதின் வரைய வேண்டுமெனச் சொல்லியது.

கூற்று விளக்கம்

காலம் தாழ்த்தித் திருமணம் செய்யக் கருதிய தலைவனைத் தோழி, விரைவில் தலைவியை மணக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கூறியது.

சிறுநனி வரைந்தனை கொண்மோ பெருநீர்
வலைவர் தந்த கொழுமீன் வல்சிப்
பறைதபு முதுகுருகு இருக்கும்
துறைகெழு தொண்டி அன்னஇவள் நலனே.

தெளிவுரை

பரதவர், கடலிலிருந்து கொழுப்பு மிகுந்த மீன் உணவைக் கொண்டுவந்து குவிப்பர். அவற்றை உண்ணும் பொருட்டுப் பறந்து வரும் வலிமையிழந்த வயதான குருகு காத்திருக்கும் துறையினைப் பொருந்தியது, தொண்டிநகர். அந்நகர் போன்றது, தலைவியின் பெண்மை நலம். இவளை விரைவில் மணந்து இவள் நலத்தைத் துய்த்திரு.

கருத்து

தலைவ! காலத்தாழ்வின்றித் தலைவியை மணம் செய்துகொள்!

விளக்கம்

'கொக்கின் வலிமை வாய்ந்த சிறகுகள் காலம் செல்லச்செல்ல வலிமையிழந்தமையால் பறக்க இயலாத நிலை ஏற்பட்டதுபோல, இன்று கண்டோர்க்கெல்லாம் அணங்காகும் இவள் பேரழகும் நீ காலம் தாழ்த்தினால் அழியும்' என்பதைத் தோழி தலைவனிடம் கூறி எச்சரிக்கிறாள்.

உள்ளுறை

பரதவர் கொண்டுவந்த கொழுத்த மீனை உண்பதற்கு உடனே பறந்து செல்ல ஆற்றலில்லாத கிழக்கொக்கு, அதை உண்ணத் தக்க வேளை பார்த்திருக்கும். இதன் வாயிலாய், 'தலைவியை மகட்பேச ஏதிலர் பலர் வந்து தக்க சமயம் நோக்கியுள்ளனர். தலைவன் சிறிது காலம் தாழ்த்தினாலும் ஏதம் பெரிதாகிவிடும்' என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. சிறு நனி - விரைவிலேயே; வரைந்தனை கொள் - மணந்துகொள்; பெருநீர் - கடல்.
2. வலைவர் - வலைஞர்; தந்த - கொண்டுவந்த; கொழுமீன் - கொழுத்த மீன்; வல்சி - உணவு.
3. பறைதபு - பறக்க இயலாத; முதுகுருகு - கிழ நாரை.
4. துறைகெழு - துறை பொருந்திய; தொண்டி - தொண்டி நகர்; நலன் - பெண்மை நலம்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 276 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரையாது வந்தொழுகும் தலைமகனைத் தோழி நெருங்கிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

திருமண முயற்சியினை மேற்கொள்ளாமல் களவிலேயே வந்துகொண்டிருக்கும் தலைவனை உடனே திருமணம் செய்துகொள்ள வேண்டும் எனத் தோழி வற்புறுத்திக் கூறியது.

மந்திக் காதலன் முறிமேய் கடுவன்
தண்கமழ் நறைக்கொடி கொண்டு வியல்அறைப்
பொங்கல் இளமழை புடைக்கும் நாட!
நயவாய் ஆயினும், வரைந்தனை சென்மோ;
கல்முகை வேங்கை மலரும்
நல்மலை நாடன் பெண்டுஎனப் படுத்தே!

தெளிவுரை

இளந்தளிர்களை மேயும் மந்தியின் காதலனாகிய கடுவன், குளிர்ச்சியும் மணமும் கொண்ட நறைக்கொடியைக் கையில் கொண்டு, அகன்ற மலைப்பாறையில் பொங்கி வரும் இளமேகத் தினை அடித்துக் கலைக்கும் நாட்டையுடையவனே! எம் தலைவியை உடனே திருமணம் செய்துகொள்ள விரும்ப வில்லையென்றாலும் பாறை வெடிப்பில் வேங்கை மரம் பூக்கும் நல்ல மலைநாடனின் மனைவி என்று ஊரார் குறிப்பிடுவதற்காக வேனும், அவளை மணந்து அழைத்துச் செல்!

கருத்து

'நாடனே! நீ அன்பு காட்டாவிட்டாலும், உன்னால் நலனழிந்திட்ட இவளுக்கு, மனைவி என்னும் பெயரைத் தரும்பொருட்டாவது இவளை மணந்துகொள்.'

உள்ளுறை

'கருமையேறி மழை பொழிந்து பயன் விளைவிக்கவிருக்கும் இள முகிலைக் கடுவன் கலைக்கும் நாட' என்னும் தொடர், மணந்து மகப்பேறு அடைவதற்குரியவளாகிய தலைவியை மணந்து கொள்ளாமல் களவினை நீட்டித்து அவளை வருத்து கின்றான் என்னும் உள்ளுறைப் பொருளை வெளிப்படுத்துகிறது.

சொற்பொருள்

1. காதலன் - காதலன் ஆகிய; முறி - இளந்தளிர்; கடுவன் - ஆண்குரங்கு.
2. நறைக்கொடி - ஒரு வகைக் கொடி; வியல் அறை - அகன்ற பாறை.
3. பொங்கல் - பொங்குதலைக் கொண்ட; இளமழை - இளைய மேகத்தை; புடைக்கும் - அடிக்கும்.
4. நயவாய் ஆயினும் - விரும்பாவிடினும்; வரைந்தனை சென்மோ - மணந்து அழைத்துச் செல்.
5. கல்முகை - பாறை வெடிப்பு; வேங்கை - வேங்கை மரம்.
6. பெண்டு - மனைவி; எனப்படுத்து - என்று சொல்லும்பொருட்டாக வேனும்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 287 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

'இன்ன நாளில் வரைவல்' எனக் கூறி அந்நாளில் வரையாது, பின் அவ்வாறு கூறும் தலைமகற்குத் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

'இன்ன நாளிலே மணந்துகொள்வேன்' என நாள் குறிப்பிட்ட தலைவன் அந்நாளில் மணக்கவில்லை. மறுபடியும் அவ்வாறே மணப்பதற்கு நாள் குறிப்பிட்டான். அவனிடம் தோழி கூறியது.

நெடுவரை மிசையது குறுங்கால் வருடை
தினைபாய் கிள்ளை வெரூஉம் நாட!
வல்லை மன்ற பொய்த்தல்;
வல்லாய் மன்ற,நீ அல்லது செயலே.

தெளிவுரை

"பெரிய மலைமேல் வாழும் குறுகிய கால்களைக் கொண்ட வருடை மான்களைக் கண்டு, தினைக்கதிர்மேல் படியும் கிளிகள் அஞ்சிப் பறந்தோடும் மலை நாட்டை உடையவனே! பொய் கூறுவதில் வல்லவனான நீ நல்லதைச் செய்வதில் வல்லமை யில்லாதவனாய் உள்ளாய்" எனத் தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

'மலை நாட! நீ பொய் சொல்லக்கூடியவனே அன்றிச் செயல்படக் கூடியவன் அல்லன்.' தலைவியை மணந்து இக்கூற்றினைப் பொய்யாக்கு.

விளக்கம்

'பொய் கூறுவதில் வல்லவன்; நல்லது செய்வதில் ஆற்றல் இல்லாதவன்' எனத் தோழி கடுமையாய்க் கூறுவதன் நோக்கம், அதைக் கேட்டுத் தலைவன் நாணமுற்றுத் திருமணத்திற்கு ஆவன செய்வான் என்பதற்காகவே ஆகும்.

உள்ளுறை

தினை மேயும் கிளிகள் தமக்குத் துன்பம் செய்யாத மான்களுக்கு அஞ்சிப் பறந்தோடும். இதன் வாயிலாய், தலைவன் முன் வந்து கேட்டால், தலைவிக்குத் தமர் அவளை அவனுக்கு மணம் முடித்துத் தரக் காத்திருக்கின்றனர் என்பதறியாதே தலைவன் மிகவும் அஞ்சியிருக்கிறான் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. நெடுவரை - பெரிய மலை; மிசை - மேலே; வருடை - வருடைமான்.
2. தினைபாய் - தினைப்புனத்தில் படியும்; கிள்ளை - கிளி; வெரூஉம் - அஞ்சியோடும்.
3. பொய்த்தல் - பொய் பேசுவதில்; வல்லை - வல்லவன்.
4. (பொய்த்தல்) அல்லது செயலே - (பொய் சொல்லுதல்) அல்லாத நல்லது செய்வதில்; வல்லாய் - வல்லமை இல்லாதவன்.

தோழி கூற்று

கலித்தொகை 46 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

அல்லகுறிப்பட்டுத் தலைமகன் மீள, அதனை 'என் பிழையாகக் கருதுவன்' எனக் கவன்று ஆற்றாளாகித் 'தன்குறி தள்ளிய தெருளாக் காலை, வந்தனன் பெயர்ந்த வறுங்களம் நோக்கி, தன் பிழைப்பாகத் தழீஇத் தேறிய' தலைமகளது நிலைமை தோழி தலைமகற்குக் கூறி, 'இவ்விடையீடு நின் தோழியினான் ஆயிற்று' என எனது பிழைப்பாக்கி அவளை ஆற்றுவிப்பாய்; 'நீ உரைத்ததே உரையாம் அவட்கு' என அவளது ஆற்றாமை கூறி, வரைவு கடாவியது.

கூற்று விளக்கம்

இரவு வேளையில் தலைவியைச் சந்திப்பதற்காக முடிவு செய்யப்பட்ட இடத்துக்குச் சென்ற தலைவன் அவளைக் காணாமல் திரும்ப நேரிட்டது. தலைவி, 'இத்தவறு தன்னால் நேர்ந்தது என்று தலைவன் கருதுவான்' எனக்

கவலையுற்றாள். இதைத் தோழி தலைவனிடம் கூறி, 'இது தோழியால் நேர்ந்தது என்று சொல்லி, தவற்றை என்மீது சார்த்தித் தலைவியின் கவலையைப் போக்கு; உன் சொல்லை மெய்யென்று அவள் நம்புவாள்' என்று வேண்டினாள். இத்தகைய சூழ்நிலைகள் நேரிடுவதைப் பொறுக்க இயலாதவளாய்த் தலைவி உள்ளாள் என்னும் உண்மையைப் புலப்படுத்தி, திருமணத்திற்கு ஏற்பாடு செய்யுமாறும் தலைவனிடம் தோழி கேட்டுக்கொள்கிறாள்.

தரவு

வீயகம் புலம்ப, வேட்டம் போகிய
மாஅல் அம்சிறை மணிநிறத் தும்பி,
வாய்இழி கடாத்த, வால்மருப்பு ஒருத்தலோடு
ஆய்பொறி உழுவை தாக்கிய பொழுதின்,
'வேங்கைஅம் சினை'என விறற்புலி முற்றியும்,
பூம்பொறி யானைப் புகர்முகம் குறுகியும்,
வலிமிகு வெகுளியான் வாள்உற்ற மன்னரை
நயன்நாடி நட்புஆக்கும் வினைவர்போல், மறிதரும்
அயம்இழி அருவிய அணிமலை நன்னாட!

தாழிசை

ஏறுஇரங்கு இருளிடை இரவினில் பதம்பெறாஅன்,
'மாறினென்' எனக்கூறி மனங்கொள்ளும், தான்என்ப–
கூடுதல் வேட்கையால், குறிபார்த்துக் குரல்நொச்சிப்
பாடுஓர்க்கும் செவியோடு பைதலேன் யானாக;

அருஞ்செலவு ஆரிடை அருளிவந்து அளிபெறாஅன்
'வருந்தினென்' எனப்பல வாய்விடூஉம் தான்என்ப–
நிலைஉயர் கடவுட்குக் கடம்பூண்டு, தன்மாட்டுப்
பலசூழும் மனத்தோடு பைதலேன் யானாக;

கனைபெயல் நடுநாள்யான் கண்மாறக் குறிபெறாஅன்,
புனையிழாய்! என்பழி நினக்குஉரைக்கும், தான்என்ப–
துளிநசை வேட்கையால் மிசைபாடும் புள்ளின்,தன்
அளிநசைஇ ஆர்வுற்ற அன்பினேன், யானாக;

எனவாங்கு –

சுரிதகம்

கலந்தநோய் கைம்மிகக் கண்படா என்வயின்
புலந்தாயும் நீஆயின், பொய்யானே வெல்குவை–
இலங்குதாழ் அருவியோடு அணிகொண்ட நின்மலைச்
சிலம்புபோல், கூறுவ கூறும்,
இலங்குஏர் எல்வளை, இவளுடை நோயே.

தெளிவுரை

“தான் தேனுண்ணும் பூவை விட்டுத் தன் விருப்பத்திற்குரிய பூக்களைத் தேடிப் பறக்கும் வண்டு, அழகிய சிறகுகளையும் நீல நிறத்தையும் கொண்டிருக்கிறது. ஓரிடத்தில், வாயிலிருந்து வழியும் மதநீரையும் வெண்மையான தந்தத்தையும் கொண்ட வலிமை மிக்க யானையுடன் உடம்பெங்கும் வரிகள் கொண்ட புலி போர் செய்துகொண்டிருந்தது. வண்டு வேங்கை மரத்தின் கிளை என்று கருதி அப்புலியைச் சூழ்ந்து மொய்க்கிறது; பிறகு, யானையின் மத்தகத்தில் உள்ள புள்ளிகளை வேங்கைப்பூக்கள் என்று கருதி யானையையும் சூழ்கிறது. இப்படி மாறி மாறி வண்டு சென்று கொண்டிருந்த செயல், மன்னர் இருவர் வாள் எடுத்துப் போர் செய்யும்போது அவர்களை நண்பராக்கும் உபாயத்தை ஆராய்ந்து, மாறிமாறி அவர்களிடையே தூது செல்லும் நன்மக்களின் செயலை ஒத்திருந்தது. இவ்வாறான காட்சி கொண்டதும் பள்ளத்தில் பாயும் அருவிகளைக் கொண்டதுமான மலை நாட்டிற்குரிய தலைவனே!” (என்று தோழி தலைவனை விளித்து, மேலும் அவனை நோக்கிக் கூறினாள்.)

“தலைவ! உன்னோடு இணைய வேண்டும் என்னும் விருப்பத்தால் காலம், சூழல் ஆகிய வாய்ப்பை எதிர்பார்த்து, நொச்சிப்பூ உதிர்ந்து விழும் ஓசையைக்கூடத் தவறாமல் கேட்டு, ஏங்கிய வருத்தத்துடன் தலைவி காத்து நின்றாள். நீ இடிமுழங்கும் இருளில் நடந்து வந்தும் இரவுக்குறியின் இன்பத்தைப் பெறாமல் ஏமாற்றம் அடைந்து திரும்பினேன் என்கிறாய். நான் பகற்குறியை மறுத்ததுபோல இரவுக்குறியையும் மறுத்துவிட்டேன் என்று என்மீது தலைவி வருத்தம் கொண்டிருக்கிறாள்.

"வழிபடுவோரின் துயரத்தைத் தெய்வம் நீக்கும் என்று கருதி, தன் திருமணம் நிறைவேறும்பொருட்டுத் தெய்வத்திற்கு நேர்த்திக்கடன் பூண்டு, உன் வருகையை எதிர்பார்த்துத் தலைவி துயரத்துடன் காத்திருந்தாள். நடத்தற்கரிய வழியில் வந்தும் தலைவியைக் கண்டு இன்பம் பெற வாய்ப்பில்லாமல் திரும்பினேன் என்று கூறி வருந்துகிறாய், நீ!

"மழைத்துளி உணவாய் அமைந்து தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்றென்னும் வானம்பாடிபோல உன் அருளை விரும்பி, நிறைந்த அன்புடன் தலைவி காத்திருந்தாள். நீயோ மழை பெய்யும் நடுச்சாமத்தில் நான் வந்தும் இடம் மாறியதால் அவளைக் காண இயலாது திரும்பினேன் என்கிறாய். தலைவியோ, நான் குறி மாற்றிச் சொன்னதால்தான் நீ வர வில்லை எனப் பழியை என்மீது சுமத்துகிறாள்.

"தலைவியின் துன்பம் பெருகுவதைக் கண்டு தூக்கம் வாராது நான் தவிக்கிறேன். நீயோ என்மீது பிழை சுமத்தி என்னை வெறுத்தாற்போல் பேசுகிறாய். அதுவும் நன்று. ஏனெனில், அருவி விழுந்து அழகு செய்யும் உனது மலையின் சாரல் எவ்வாறு நாம் கூறுவதை எதிரொலிக்குமோ, அது போன்று அழகிய வளையல்கள் அணிந்த தலைவியும் நீ கூறுவதை அவ்வாறே ஏற்பாள். என்மீது நீ பொய்யாய் ஏதேனும் கூறி யேனும் தலைவியின் மனநோயைப் போக்கு" என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

"உன்னைக் காணாது தலைவி மிகவும் வருந்தியிருக்கிறாள். நீ என்மீது தவறு கூறியேனும் அவளை மணந்து, அவள் துன்பத்தைத் தீர்ப்பாயாக" எனத் தலைவனிடம் தோழி கூறினாள்.

விளக்கம்

இயற்கைப் புணர்ச்சிக்குப் பின் தலைவன், தலைவி ஆகிய இருவரும் தோழியின் துணை பெற்றுப் பகற்குறியில் கூடி மகிழ்ந் திருந்தனர். சில இடையூறுகளால் தோழி, பகல் வருவானை இரவு வா என்றாள். அவனும் இணங்கினான்.

இரவுக்குறியிடத்துத் தலைவன் வருவதை எதிர்நோக்கித் தலைவியும் தோழியும் காத்திருந்தனர். இரவுக்குறியிடத்துத் தலைவன் வந்து, தான் வந்திருப்பதைத் தெரிவிக்க ஓசை எழுப்பினான். அவ்வோசை மழை காரணமாய்த் தலைவிக்கோ தோழிக்கோ கேட்கவில்லை. எனவே, தலைவி வரவில்லை எனக் கருதித் தலைவன் திரும்பிவிட்டான். தலைவன் இரவுக்குறிக்கு வரவில்லை என்று கருதித் தலைவி வருந்தினாள். பகற்குறியைத் தடுத்த தோழிதான், வரைவின் விரைவு கருதி இரவுக்குறியினையும் தடுத்துவிட்டாள் போலும் எனக் கருதித் தோழிமீது தலைவி வெறுப்புக்கொண்டாள். அல்லகுறிப்பட்டுத் திரும்பிய தலைவன் தன்னைத் தவறாய்க் கருதுவனோ என்று எண்ணியும் தலைவி மிகவும் வேதனை கொண்டாள். தலைவியின் துயர் நீக்கக் கருதிய தோழி, தலைவனைக் கண்டு, "பொய்யாய் என்மீது பழி கூறியாயினும் தலைவியின் வாட்டத்தை நீ போக்க வேண்டும். உன் சொல்லை அவள் நம்புவாள்" என்று கூறி வேண்டினாள்.

குறிப்பு

நுகரும் பூவை விட்டு, வேறு இடத்திற்குச் செல்லும் வண்டு, தலைவியைப் பிரிந்து சென்ற தலைவனைக் குறிக்கும். அவ்வண்டு தனக்குத் தேனைத் தரும் பூவாய்க் கருதிப் புலியையும் யானையையும் சூழும் தன்மை, தலைவன் தான் இன்பம் பெறலாம் என்று கருதிப் பகல் நேரச் சந்திப்பையும் இரவு நேரச் சந்திப்பையும் பெறுவதற்கு மறுகுவதைக் குறிக்கும்.

சொற்பொருள்

1. வீ - பூ; அகம் - உட்புறத்து (அமர்ந்து தேன் பருக); புலம்ப - வெற்றிடமாய்; வேட்டம் - விருப்பம்.
2. மாஅல் - பெருமை; அம்சிறை - அழகிய சிறகு.
3. வாய்இழி - வாயிலிருந்து வழியும்; கடாம் - மதம்; வால் - வெண்மை; மருப்பு - கொம்பு; ஒருத்தல் - ஆண் விலங்கு.
4. பொறி - புள்ளி; உழுவை - புலி.
5. வேங்கை - வேங்கை மரம்; அம்சினை - அழகிய கிளை; விறல் - வலிமை, வீரம்; முற்றியும் - மொய்த்தும்.
6. புகர் - அழகு, பொறி.

7. வெகுளியான் - கோபத்தோடு; வாள்உற்ற - வாள் எடுத்துப் போர் செய்யும்.
8. நயன் - நயம், உபாயம்; வினைவர் - செயலாற்றும் நன்மக்கள்; மறிதரல் - மீளல்.
9. அயம் - பள்ளம்; இழி - இறங்குகின்ற.
10. ஏறு - இடி ஏறு; இரங்கும் - முழங்கும்; பதம் - வாய்ப்பு.
11. மாறினென் - (குறியை) மாற்றிவிட்டேன்; மனங்கொள்ளும் - தலைவன் தவறாய்க் கருதுவான்.
12. வேட்கை - விருப்பம்; குறி - இரவுக்குறி; குரல்நொச்சி - நொச்சிக் குரல் - நொச்சிப் பூங்கொத்து.
13. பாடு ஓர்தல் - கீழே விழும் ஓசையைக் கூர்ந்து கவனித்தல்; பைதல் - வருத்தம்; பைதலேன் - வருத்தத்தை உடையேன்.
14. அருஞ்செலவு - அரிய பயணம்; அளி - அருள், இன்பம்.
15. வாய்விடூஉம் - தன்னை அறியாமல் கூறுவான்.
16. கடம் பூண்டு - நேர்த்திக்கடன் பூண்டு.
17. பலசூழும் - பலவாறு எண்ணி.
18. கனைபெயல் - மிகுதியான மழை; கண்மாற - இடம் மாறியதால்.
19. புனையிழாய் - தேர்ந்தெடுத்த அணிகலன்களைப் புனைந்திருப் பவளே!
20. துளிநசை - மழைத்துளியை விரும்பி; மிசை - மேலே, வானத்தில்; புள் - வானம்பாடி.
21. அளி நசைஇ - அருளை விரும்பி.
23. கைம் மிக - மிகுதியாய்; கண்படா - கண் மூடாத, தூங்காத; என் வயின் - என் இடம்.
24. புலத்தல் - வெறுத்தல்.
26. சிலம்பல் - எதிரொலித்தல்; கூறுவ கூறும் - நீ கூறுவதையே கூறுவாள்.

தோழி கூற்று

கலித்தொகை 133 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

'வரைவுடம்பட்டோர்க் கடாவல் வேண்டினும்' என்பதனால் தலைமகன் தெருளாதவனைத் தெருட்டி வரைவு கடாயது.

(கடாவல் - கேட்டல்; தெருளல் - தெளிதல்; தெருட்டி - தெளிவுபடுத்தி.)

கூற்று விளக்கம்

தலைவிக்கு உற்றார் தலைவியைத் தர முற்பட்டு நிற்பினும் தலைவன் தலைவியை வரைந்துகொள்ளாது காலம் நீட்டித்ததால், தலைவி துன்புற்றாள். அவளது துன்பத்தைத் துடைக்க எண்ணிய தோழி, தலைவனைக் கண்டு, உலக உண்மைகளையும் பண்பாடுகளையும் எடுத்துரைத்து, அவனைத் தெளிவுறச்செய்து, அவன் அவளை விரைவில் வரைந்துகொண்டு இல்லற வாழ்வில் ஈடுபடுமாறு வேண்டிக்கொண்டது.

மாமலர் முண்டகம் தில்லையோடு ஒருங்குடன்
கானல் அணிந்த உயர்மணல் எக்கர்மேல்,
சீர்மிகு சிறப்பினோன் மரமுதல் கைசேர்த்த
நீர்மலி கரகம்போல் பழம்தூங்கும், முடத்தாழைப்
பூமலர்ந் தவைபோலப் புள்அல்கும் துறைவ!கேள்

'ஆற்றுதல்' என்பதுஒன்று அலந்தவர்க்கு உதவுதல்;
'போற்றுதல்' என்பது புணர்ந்தாரைப் பிரியாமை;
'பண்பு'எனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்;
'அன்பு'எனப் படுவது தன்கிளை செறாஅமை;

'அறிவு'எனப் படுவது பேதையார் சொல்நோன்றல்;
'செறிவு'எனப் படுவது, கூறியது மறாஅமை;
'நிறை'எனப் படுவது மறைபிறர் அறியாமை;
'முறை'எனப் படுவது கண்ணோடாது உயிர்வௌவல்;
'பொறை'எனப் படுவது, போற்றாரைப் பொறுத்தல்.

ஆங்கதை அறிந்தனி ராயின்,என் தோழி
நன்னுதல் நலன்உண்டு துறத்தல் கொண்க!

தீம்பால் உண்பவர் கொள்கலம் வரைதல்;
நின்தலை வருந்தியாள் துயரம்
சென்றனை களைமோ; பூண்க,நின் தேரே!

தெளிவுரை

"கடற்கரைச்சோலையில் கரிய மலர்கள் உள்ள முள்ளிச் செடிகளும் தில்லை மரங்களும் ஒன்றுசேர்ந்து கடற்கரையை அழகுபடுத்தும் மணல்மேடுகளில் காணப்படுகின்றன. சிறப்பு வாய்ந்த சிவபெருமான் தட்சிணாமூர்த்தியாக வந்து ஆலமரத் தினடியில் வைத்திருந்த புண்ணிய கலசங்கள்போல் பலா மரத்தில் பழங்கள் தொங்கிக்கொண்டிருக்கின்றன. தாழை மரத்தில் பூக்கள் பூத்திருப்பனபோலக் குருகுகள் அமர்ந்திருக்கின்றன. இத்தகைய துறையைக் கொண்ட தலைவனே! நான் கூறுவதைக் கேள்.

இல்லறம் நடத்துதல் எனப்படுவதில் சிறந்த செயல், வறுமை உள்ளவர்க்கு ஒன்று உதவுதல்.

அகவாழ்வில் போற்றிப் பாராட்டற்குரியது, துணையைப் பிரியாதிருத்தல்.

மக்கள் பண்பு எனப்படுவது, உலக ஒழுக்கம் அறிந்து நடந்து கொள்ளுதல்.

அன்பு என்று கூறப்படுவது, தன் சுற்றத்தாரைத் தழுவிக் கொள்ளுதல்.

அறிவு என்று கூறப்படுவது, தன்னைப்பற்றி அறியாதவர்கள் கூறும் குறைகளைப் பொறுத்துக்கொள்ளுதல்.

செறிவு என்று கூறப்படுவது, தாம் கூறியதைப் பின்பு மறுக்காதிருத்தல்.

நிறை என்று கூறப்படுவது, மறைக்க வேண்டியதை மறைத்துப் பிறர் அறியாமல் பாதுகாத்தல்.

முறை என்று சொல்லப்படுவது, கொலைக்குற்றம் செய் தார்க்குத் தயவுதாட்சணியமின்றி மரண தண்டனை வழங்குதல்.

பொறுமை என்று கூறப்படுவது, தம்மைப் பழிப்பவரையும் பொறுத்துக்கொள்ளுதல்.

தலைவ! இந்நல்லொழுக்கங்களைக் கடைப்பிடிக்கும் பண்பு உள்ளவனாய் நீ இருப்பாயேயானால், நான் கூறுவதைக் கேள். என் தோழியின் நெற்றியழகு நீங்க நீ பிரிதல், ஒருவர் பால் உண்ணும்போது அக்கலத்தைப் பறித்தல்போலக் கொடிய தாகும். அதனால் உன்னோடு கொண்டுள்ள நட்பின் காரணமாய் வருந்தியுள்ள அவள் துயரத்தை நீ இப்போதே சென்று அவளைத் திருமணம் செய்துகொள்வதன்மூலம் நீக்கு. அதற்காக உன் தேரில் குதிரைகளைப் பூட்டு" எனத் தலைவனின் மனம் தெளியுமாறு தோழி கூறினாள்.

கருத்து

திருமணத்திற்கு உடன்பட்டும், தெளிவில்லாதிருந்த தலைவனிடம் உயர்ந்த அறவுரைகள் கூறி, தெளியச்செய்து, அவன் தலைவியைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் எனத் தோழி வற்புறுத்தினாள்.

குறிப்பு

இப்பாடலில் கூறியுள்ள உண்மைகள் உலகமே போற்றத்தக்கன.

சொற்பொருள்

1. மாமலர் - கரிய நிறமுள்ள பூ; முண்டகம் - முள்ளிச்செடி; தில்லை - தில்லை மரம்; ஒருங்குடன் - ஒன்றாய்ச் சேர்ந்து.
2. அணிந்த - அழகுபடுத்தின; எக்கர் - மணல்மேடு.
3. சீர்மிகு சிறப்பினோன் - சிறப்பு வாய்ந்த கடவுள், சிவபெருமான், தட்சிணாமூர்த்தி; முதல் - அடிமரம்; கைசேர்த்த - கொண்டு வைத்திருந்த.
4. மலி - நிறைந்த; கரகம் - செம்பு, கமண்டலம்; பழம் - பலாப்பழம்; தூங்கும் - தொங்கும்; முடம் - வளைவு.
5. புள் அல்கும் - பறவைகள் (நாரைகள்) தங்கும்.
6. அலந்தவர் - துன்புற்றிருப்பவர்.
7. புணர்ந்தார் - கூடியவர்.
8. பாடு அறிதல் - உலக நடை அறிந்து ஒழுகுதல்.
9. கிளை - சுற்றம்; செறுதல் - சினத்தல்.

10. பேதையார் - அறிவில்லாதவர்; நோன்றல் - பொறுத்துக் கொள்ளுதல்.
11. மறாஅமை - மறுக்காதிருத்தல்.
12. மறை - மறைபொருளை.
13. கண்ணோட்டம் - தயவுதாட்சணியம்; உயிர் வெளவல் - உயிரைக் கொள்ளுதல், கொல்லுதல்.
14. போற்றாரை - போற்றாதவரை, பழிப்பவரை.
16. துறத்தல் - நீங்குதல்; கொண்க! - தலைவ!
17. தீம் - இனிய; கொள்கலம் - பாலைக் கொண்டிருக்கும் பாத்திரம்; வரைதல் - பறித்தல்.
18. நின்தலை - உன் உறவு காரணமாய்.
19. சென்றனை - சென்று; களைமோ - நீக்குக; பூண்க - பூட்டுக.

தோழி கூற்று

ஐந்திணை எழுபது 1 **மூவாதியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி தலைமகனை வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

களவுப்புணர்ச்சியில் ஒழுகிவரும் தலைவனிடம் தோழி, தலைவியை அவன் மணந்து மகிழ்விக்க வேண்டுமெனக் கூறியது.

அவரை பொருந்திய பைங்குரல் ஏனல்
கவரி மடமா கதூஉம் படர்சாரல்
கானக நாட! மறவல், வயங்கிழைக்(கு)
யான்இடை நின்ற புணை.

தெளிவுரை

“அவரைக்கொடிகள் படர்ந்திருக்கும் பசுமையான கதிர்களைக் கொண்ட தினைப்புனத்தில் இளைய கவரிமான்கள் மேயும் மலைநாட்டுத் தலைவனே! அணிகலன்களை அணிந்த தலைவிக்கும் உனக்கும் இடையேயிருந்து உன்னைத் தலைவியோடு சேர்த்துவைத்த அந்த என் உதவியை மறந்துவிடாதே.

அவளை விரைவில் மணந்து மகிழ்வு செய்" என்று தோழி தலைவனிடம் கூறுகிறாள்.

கருத்து

மலைநாடனே! களவொழுக்கத்தை விடுத்துக் கடிமணம் செய்துகொள்.

விளக்கம்

தலைவன் ஒரு கரை; தலைவி ஒரு கரை; இரண்டையும் இணைக்கும் தெப்பமாய்த் தோழி இருந்தாள் என்பதை, 'நான் இடைநின்ற புணை' என்னும் தொடர் தெரிவிக்கிறது.

சொற்பொருள்

1. அவரை - அவரைக்கொடிகள்; பொருந்திய - படர்ந்திருக்கும்; பைங்குரல் - பசுமையான கதிர்; ஏனல் - தினைப்பயிர்.
2. கவரி மடமான் - இளமை வாய்ந்த கவரிமான்; கதூஉம் - மேயும்.
3. மறவல் - மறவாதே; வயங்கிழை - அணிகலன்களை அணிந்த.
4. யான் - நான்; இடை நின்ற - இடையேயிருந்த; புணை - தெப்பம்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 36 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவியை மணந்துகொள்ளுமாறு தோழி, தலைவனை வற்புறுத்தியது.

முருகுவாய் முள்தாழை நீள்முகைபார்ப்(பு) என்றே
குருகுவாய்ப் பெய்திரை கொள்ளா(து) – உருகிமிக
இன்னா வெயில்சிற கால்மறைக்கும் சேர்ப்ப!நீ
மன்னா வரவு மற.

தெளிவுரை

முள்ளைக் கொண்டுள்ள நறுமணத் தாழை மரத்தில் தோன்றிய நீளமான மலர் மொட்டுகளை நாரைகள் தம் குஞ்சுகள் என்று கருதி, தாம் கொண்டுவந்த இரையினை அம் மொட்டுகளின் வாயிலே (முனையிலே) ஊட்டும். அந்த இரையை அவை உண்ணாதது கண்டு, மனம் உருகி, துன்பத்தைத் தரும் கதிரவனின் வெப்பம் அக்குஞ்சுகள் (தாழை அரும்புகள்) மீது படாதபடி தம் சிறகினால் மறைத்துப் பாதுகாக்கும். இத்தகைய அருளுள்ளம் கொண்ட நாரைகள் வாழும் கடல் துறைக்குத் தலைவனே! நீ அடிக்கடி இரவில் வந்து செல்லும் நிலையற்ற வருகையை மறந்துவிடு. (விரைவில் தலைவியை மணந்துகொள்.)

கருத்து

தலைவ! நிலையற்ற வருகையை நீக்கி, நிலைக்கும் வரைவினைச் செய்து கொள்.

குறிப்பு

உன் நாட்டு நாரைகளும் மகவு பெற்று ஓம்ப விழைகின்றபோது, நீ இங்ஙனம் நிலையற்ற வரவினை மேற்கொண்டிருத்தல் நன்றன்று.

சொற்பொருள்

1. முருகு - நறுநாற்றம்; வாய் - வாய்க்கப்பெற்றுள்ள; நீள் முகை - நீண்ட மொட்டு; பார்ப்பு - குஞ்சு; என்றே - என்று கருதி.
2. குருகு - அழகிய (தாழை மொட்டின்); வாய் - நுனியில்; பெய்து - புகட்டி; இரை கொள்ளாது - இரை உண்ணாதது கண்டு.
3. இன்னா - துன்பம் (தரும்); சிறகால் - இறகால்; மறைக்கும் - மறைத்துப் பாதுகாக்கும்.
4. மன்னா - நிலையாத; வரவு - இரவுக்குறி வரவினை; மற - மறந்துவிடு.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 37 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவியை மணந்துகொள்ளுமாறு தோழி தலைவனிடம் கூறியது.

ஓதநீர் வேலி உரைகடியாப் பாக்கத்தார்
காதல்நீர் வாராமை கண்ணோக்கி – ஓதநீர்
அன்றறியும் ஆதலால் வாரா(து) அலர்ஒழிய
மன்(று) அறியக் கொள்ளீர் வரைந்து.

தெளிவுரை

தலைவ! முன்னம் நீ செய்த உறுதிமொழிகளைக் கடல்நீர் அறியும். அதனையறிந்து, கடலைக் காவலாய்க் கொண்டுள்ள எம் பாக்கத்தில் உள்ளவர் அலர்மொழி பேசாமலும், உன் மேல் கொண்டுள்ள அன்பால் இவள் கண்ணீர் பெருக்காமலும் இருக்க வேண்டும். இவளடைந்துள்ள வேறுபாட்டினை உன் கண்களால் உற்றுப் பார்த்து, இனியும் மறைந்து வந்து கொண்டிராமல், இவள்மேல் கூறப்படும் பழிச்சொற்கள் நீங்கும்படி ஊரார் அறிய உடனே இவளை மணந்துகொள்" எனத் தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

தலைவ! மறைந்துவந்து கூடுவதை விடுத்து மன்று அறிய மணந்து கொள்.

சொற்பொருள்

1. ஓதம் நீர்- அலைகளைக் கொண்ட கடல்நீர்; வேலி - காவலாய்க் கொண்டுள்ள; பாக்கத்தார் - எம் ஊரார்; உரை - அலர்மொழி; கடியா - நீக்கவும்.
2. காதல் - (உன்மேல் உள்ள) அன்பினால் (துன்புற்று); நீர் வாராமை - (அவள் கண்கள்) நீரை வெளிப்படுத்தாமலும்; கண் நோக்கி - உன் கண்களால் இவளைப் பார்த்து; ஓத நீர் - கடல்நீர்.

3. அன்றறியும் - இவளுக்கு நீ அன்று சொல்லிய உறுதிமொழிகளை அறியும்; அலர் - பழிச்சொற்கள்; ஒழிய - நீங்க.
4. மன்று - உறவினர் கூட்டம், ஊரார்; அறிய - அறிந்துகொள்ளும் வகையில்; வரைந்து கொள்ளீர் - மணம் புரிந்துகொள்க.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 43 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகனைத் தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவியை மணந்துகொள்ளுமாறு தோழி தலைவனிடம் வற்புறுத்திச் சொல்லியது.

கடல்கோ(டு) இருமருப்பு; கால்,பாகன் ஆக
அடல்கோட்(டு) யானை திரையா – உடற்றிக்
கரைபாய்நீள் சேர்ப்ப! கனையிருள் வாரல்
வரைவாய்நீ யாகவே வா.

தெளிவுரை

காற்றாகிய பாகன் அலைகள் என்னும் யானையைச் செலுத்த, அது சங்குகள் என்னும் கொம்பினால் கடற்கரையைக் குத்தி வருத்தும்படியான தன்மையினைக் கொண்ட கடற்கரைக்குத் தலைவனே! மிகுந்த இருளைக் கொண்ட இரவில் நீ வர வேண்டா. வரவேண்டும் என்று விரும்பினால் மணத்துக்கு உரியவனாய் வருக!

கருத்து

'தலைவ! இனி நீ வருவதாயின் மணத்துக்கு உரியவனாய் வருக!'

விளக்கம்

அலை என்னும் யானையைக் காற்றாகிய பாகன் செலுத்த, அது சென்று சங்குகள் என்னும் தன் கொம்புகளினால்

கடற்கரையைக் குத்துகிறது. (காற்றால் அலைகள் எழுந்து செல்ல, அவ்வலைகளிலுள்ள சங்குகள் கரையை மோதுகின்றன.)

அலை - யானை; காற்று - பாகன்; சங்குகள் - கொம்புகள் எனக் கொள்க.

சொற்பொருள்

1. கடல் - கடலிலுள்ள; கோடு - சங்குகள்; இரு மருப்பு - இரு கொம்பு களாகவும்; கால் - காற்று; பாகன் ஆக - யானைப்பாகன் ஆகவும்.
2. அடல் - கொல்லுகின்ற; கோடு - கொம்புகளைக் கொண்ட; திரையா - அலையாகவும்; உடற்றி - குத்தி வருத்தும்படியாக.
3. கரைபாய் - கடற்கரையிலே பாய்ந்து; நீள் - பெரிய; கனை - மிகுந்த; வாரல் - வாராதே.
4. நீ வரைவாய் ஆகவே வா - நீ மணத்திற்கு உரியவனாகவே வருக.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 50 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவியை மணந்துகொள்ளுமாறு தோழி தலைவனை வற்புறுத்தியது.

திமில்களி றாக, திரைபறையா, பல்புள்
துயில்கெடத் தோன்றும் படையா, – துயில்போல்
குறியா வரவொழிந்து, கோலநீர்ச் சேர்ப்ப!
நெறியால்நீ கொள்வது நேர்.

தெளிவுரை

“தோணியை யானையாகவும், அலைகளைப் பறையாகவும், ஒலியெழுப்பும் கடற்பறவைகளை உறக்கம் கெடுக்கும் படை யாகவும் கொண்டுள்ள அழகிய நீரினைக் கொண்ட கடற்

கரைக்குத் தலைவனே! களவின் நிலையற்ற தன்மையைக் கொண்ட களவொழுக்கத்தில் தனியாய் வரும் வருகையைத் தவிர்த்துவிடு. முறைப்படி இவளை நீ மணந்துகொள்வதே உனக்குத் தகுதியானது" என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

கடல் நாடனே! களவொழுக்கத்தை நீக்கி, தலைவியை மணந்து கொள்வதே முறையும் தகுதியும் ஆம்.

சொற்பொருள்

1. திமில் - தோணி; களிறு ஆக - யானையாகவும்; திரை - அலை; பறையா - பறையாகவும்; பல்புள் - பல்வேறு பறவைகள்.
2. துயில் கெட - உறக்கத்தைக் கெடுக்கும்; படையா - படையாகவும்; துயில் போல - கனாக் கண்டாற்போன்று.
3. குறியா - இன்னதென்று தெளிய முடியாத; வரவு - களவொழுக் கத்தில் தனியாக வருவதை; ஒழிந்து - நீக்கி; கோலம் - அழகிய; நீர் - நீரினைக் கொண்ட; சேர்ப்ப - துறைமுகத்தலைவனே.
4. நெறியால் - முறைப்படி; நீ கொள்வது - நீ இவளை மணந்து கொள்வது; நேர் - தகுதியானது.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 57 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவியைத் தலைவன் மணந்துகொள்ள வேண்டுமெனத் தோழி கண்டித்துச் சொல்லியது.

வருதிரை தான்உலாம் வார்மணல் கானல்
ஒருதிரை ஓடா வளமை – இருதிரை
முன்வீழும் கானல் முழங்கு கடற்சேர்ப்ப!
என்வீழல் வேண்டா இனி.

தெளிவுரை

அலைகள் வந்து உலவுகின்ற மணலுடன் கூடிய நீண்ட கடற்கழிகளில் ஓர் அலை வந்து சேர்வதற்கு முன்னே, மேலும் இரு அலைகள் வந்து மோதும்படியான வளப்பம் கொண்ட கடல்துறைக்கு உரியவனே! இனியும் களவில் வந்து தலைவியைச் சந்தித்தலை நீ விரும்ப வேண்டா.

கருத்து

தலைவ! இனிக் களவொழுக்கம் வேண்டா; மணஞ்செய்துகொள்ளுதலை விரும்பு.

சொற்பொருள்

1. வரு - கரையை நோக்கி வந்துகொண்டிருக்கும்; திரை - அலை; உலாம் - உலாவுகின்ற; வார் - ஒழுகியமைந்த.
2. ஓடாமுன் - வந்து சேர்வதற்கு முன்னே.
3. வீழும் - வந்து மோதும்; முழங்கு - ஆரவாரிக்கின்ற; கடற்சேர்ப்ப - கடற்கரைக்குத் தலைவனே!
4. வீழல் - (இக்களவுப்புணர்ச்சியை) விரும்புதல்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 196 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

குறை மறுக்கப்பட்ட தலைமகன் பின்னும் குறை வேண்டியவழித் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைத் தன்னோடு கூட்டுவிக்க வேண்டுமென்று தலைவன் தோழியிடம் வேண்டினான்; அவள் மறுத்தாள். அவன் தன் குறையை நீக்குமாறு மீண்டும் வேண்டினான். அதற்குத் தோழி சொல்லியது.

கோடுஈர் எல்வளை, கொழும்பல் கூந்தல்,
ஆய்தொடி, மடவரல் வேண்டுதி ஆயின்
தெண்கழிச் சேயிறாப் படூஉம்
தண்கடல் சேர்ப்ப! வரைந்தனை கொண்மோ?

தெளிவுரை

தெளிந்த நீருள்ள கழியிடத்தே செந்நிற இறால் மீன்கள் அகப் படும் குளிர்ச்சி பொருந்திய கடல்நிலத்திற்குத் தலைவனே! சங்கினை அறுத்துச் செய்யப்பட்ட ஒளி பொருந்திய வளையல் களையும், அடர்த்தியான கூந்தலினையும், ஆராய்ந்தெடுத்த தொடியினையும் கொண்ட தலைவியை நீ அடைதற்கு விரும்பி னையாயின் அதற்கு ஒரே வழி அவளை உடனே மணஞ்செய்து கொள்வதே.

கருத்து

தலைவ! நீ தலைவியை அடைய விரும்பினையாயின், களவொழுக் கத்தைத் தவிர்த்து அவளை மணம் செய்துகொள்.

குறிப்பு

கழியிடத்தே வேண்டுவோர் இறால் மீன் கொள்வர். இதன் வாயிலாய், மகள் வேண்டித் தலைவன் வரின், தலைவிக்குத் தமர் மகட்கொடை நேர்வர் என்னும் குறிப்புப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. கோடு - சங்கு; ஈர் - அறுத்து; எல் - ஒளி; கொழும் - அடர்ந்த.
2. மடவரல் - இளமை பொருந்திய தலைவி; வேண்டுதி - விரும்பினை.
3. தெண்கழி - தெளிந்த நீரைக் கொண்ட உப்பங்கழி; சே - சிவந்த; இறா - இறால் மீன்; படூஉம் - அகப்படும்.
4. சேர்ப்ப - கடல்நிலத் தலைவனே; வரைதல் - மணந்துகொள்ளுதல்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 236 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

களவொழுக்கம் வெளிப்பட்டமையும் தம் மெலிவும் உணர்த்தித் தோழி உடன்போக்கு நயந்தாள்போல் வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

களவொழுக்கம் வெளிப்பட்டுவிட்டதையும், அதனால் ஏற்பட்ட வருத்தத்தால் தலைவி மெலிந்திருப்பதையும் உணர்த்தி, உடன்போக்குக்கு இசைந்தவள்போல, தலைவியைத் திருமணம் செய்துகொள்ளுமாறு தோழி தலைவனிடம் கூறியது.

அன்னையும் அறிந்தனள்; அலரும் ஆயின்று;
நல்மனை நெடுநகர் புலம்புகொள உறுதரும்,
இன்னா வாடையும் மலையும்;
நும்ஊர்ச் செல்கம்; எழுகமோ தெய்யோ!

தெளிவுரை

"களவொழுக்கத்தினை அன்னையும் அறிந்தாள்; அதுவுமன்றி ஊரும் அறிந்ததால் பழிச்சொல்லும் பரவிவிட்டது; காவல் மிகுந்த பெரிய வீட்டில் தனித்திருக்கும்போது பொல்லாத வாடைக்காற்றும் தாக்குகிறது. ஆதலால், தலைவ! உன் ஊர்க்குச் செல்ல நாங்களும் உன்னோடு இப்பொழுதே புறப்பட்டு விடலாமா?" என்று தோழி தலைவனிடம் கேட்கிறாள்.

கருத்து

தலைவ! களவு வெளிப்பட்டுவிட்டது; கடிதே திருமணம் கொள்.

விளக்கம்

அன்னை அறிதலும் ஊரார் அலரும் இனி எம்மை வீட்டை விட்டே வெளியேற இயலாமல் தடுத்துவிடும். (அன்னை இற்செறிப்புச் செய்வாள்.) ஆதலின், களவுறவு இனி வாய்க்காது.

'உன் ஊருக்குப் புறப்படலாமா?' என்று உடன்போக்குக்கு இசைவதுபோலக் காட்டிக்கொண்டாலும் தோழியின் உள்ளக்

குறிப்பு, தலைவன், தலைவியை விரைவில் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதே.

சொற்பொருள்

1. அலர் - ஊரார் கூறும் பழிச்சொல்.
2. நல்மனை - பெரிய வீடு; புலம்பு - தனிமை; உறுதரும் - உடலைத் தீண்டும்.
3. இன்னா - துன்பம் தரும்; மலையும் - தாக்கும்.
4. செல்கம் - செல்வோம்; எழுகமோ - புறப்பட்டுவிடலாமா?

தோழி கூற்று

நற்றிணை 23 **கணக்காயனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகள் துயர் ஆற்றாமை உணர்ந்த தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவன் களவொழுக்கத்திலேயே மகிழ்ந்து, மணம் செய்ய முற்படாததால் தலைவி நலனழிந்து ஆற்றாளாயிருப்பதைக் கண்ட தோழி, தலைவனிடம் தலைவியை மணந்துகொள்ளுமாறு சொல்லியது.

தொடிபழி மறைத்தலின், தோள்உய்ந் தனவே;
வடிக்கொள் கூழை, ஆயமோடு ஆடலின்,
இடிப்பும் மெய்யதுஒன்று உடைத்தே; கடிக்கொள
அன்னை காக்கும் தொல்நலஞ் சிதையக்
காண்தொறும் கலுழ்தல் அன்றியும், ஈண்டுநீர்
முத்துப்படு பரப்பின் கொற்கை முன்துறைச்
சிறுபா சடைய செப்புஎர் நெய்தல்
தெள்நீர் மலரின் தொலைந்த
கண்ணே காமம் கரப்புஅரி யவ்வே!

தெளிவுரை

பெருமானே! பழிக்கஞ்சி இவள் வளைகள் கழன்று விழாது செறிக்கப்பட்டிருத்தலால் இவள் தோள்கள் மெலிந்தன என்று

சொல்லும் பழியிலிருந்து தப்பின. வாரி முடிக்கப்பட்ட கூந்தலைக் கொண்ட இவள், தன் ஆயத்தாரோடு விளையாடிய தால், உடம்பினில் காணப்படும் வாட்டமும் அவ்விளையாட் டால் உண்டாகியது எனக் கருதக் காரணமாயிற்று. மிகுதிப்பட்ட காவலால் இற்செறித்து இவள் அன்னை இவளைப் பேணிக் காத்தலால் இவளது முன்னைய நலமெல்லாம் சிதைந்து போயின. அதனைக் காணுந்தொறும் இவள் கண்கள் நீர் சொரிகின்றன. செறிந்த நீரில் முத்துகள் விளைகின்ற கடற் பரப்பைக் கொண்ட கொற்கைத் துறையிலிருக்கும் சிறிய பசிய இலையைக் கொண்ட அழகான நெய்தல் மலர் போன்ற இவள் கண்களின் அழகும் தொலைந்தது. இனி இவள் தன் காமத்தைப் பிறர்க்கு ஒளிப்பது அரிது. (இதனைக் கருதி நீ உடனே மணத்தொடு வருக.)

கருத்து

தலைவ! இவள் காமம் மறைத்தற்கரியதாயிற்று; விரைவில் திருமணத்திற் குரிய கடன்களை நிறைவேற்று.

விளக்கம்

தொடி கழன்றுவிடாதபடி செறிக்கப்பட்டிருப்பதால் தோள் சுருக்கம் தோன்றாதாயிற்று. மேனியின் மெலிவு உண்மை யாயினும், அது தோழியரோடு விளையாடுதலால் உண்டாயிற் றெனப் பிறர் கருத இடம் தந்தது. காவல் மிகுதலால் உன்னைக் காண்பதற்கு இயலாமல் கண்கள் நீரைச் சொரிகின்றன. நீரில் நனைந்து தோன்றும் நெய்தற்பூப்போலக் கண்களே காமத்தைப் பிறர் அறியப் புலப்படுத்துகின்றன. இனி அலருரையும் பெருகும்; இற்செறிப்பு நிகழ்வது உறுதி. ஆதலால், நீ விரைந்து மணந்து கொள்ளுதலே செயத்தக்க செயல்.

குறிப்பு

முத்துச் சேர்ந்த கொற்கை என்பது, நீவிரிருவரும் திருமணத்தால் இணைந்தால் எம் உறவும் இவ்வூரும் பெரிதும் சிறப்புறும் என்பதாம்.

சொற்பொருள்

1. தொடி - வளையல்; மறைத்தலின் - கழன்றுவிடாதபடி செறிக்கப் பட்டிருப்பதால்; தோள் உய்ந்தன - வாட்டம் தோன்றாமல் தோள் தப்பியது.
2. வடிக்கொள் - வகிடு எடுத்து வாரி முடிக்கப்படும்; கூழை - கூந்தல்; ஆயம் - விளையாட்டுத் தோழியர்.
3. இடிப்பு - உடம்பின் வாட்டம்; மெய்யது ஒன்று உடைத்து - மெய்யாய்த் தோன்றுவதாயிற்று (புறத்தே தோன்றாவாறு.)
4. தொல் நலம் - பண்டைய அழகு; சிதைய - அழிய.
5. கலுழ்தல் - கண்ணீர் சொரிதல்; ஈண்டு நீர் - செறிந்த நீர்.
6. முத்துப் படுபரப்பு - முத்துகள் விளையும் கடற்பரப்பைக் கொண்ட; கொற்கை - பாண்டியர் துறைமுகம்.
7. சிறுபாசடைய - சிறிய பசிய இலையைக் கொண்ட; செப்பு - செம்மை; ஏர் - அழகு.
8. தெள்நீர் மலரின் - தெளிந்த நீரில் நனைந்த மலரைப் போல; தொலைந்த கண் - கண்கள் அழகிழந்தன.
9. கரப்பு அரிய - மறைத்தற்கு அரியதாயுள்ளது.

தோழி கூற்று

நற்றிணை 55 **பெருவழுதி**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடை மெலிவாற்றுவிக்கும் தோழி, தலைமகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

வரைவுக்காலத்தை நீட்டித்துக்கொண்டே களவுறவையே விரும்பிக் குறியிடத்தே வந்து நின்றான், தலைவன். அவனைக் கண்ட தோழி, தான் தலைவியை ஆற்றுவித்திருந்த தன்மையை அவனிடம் கூறியது.

ஓங்குமலை நாட! ஒழிகநின் வாய்மை!
காம்புதலை மணந்த கல்அதர்ச் சிறுநெறி,
உறுபகை பேணாது, இரவின் வந்து,இவள்
பொறிகிளர் ஆகம் புல்லத் தோள்சேர்பு

அறுகாற் பறவை அளவுஇல மொய்த்தலின்,
கண்கோள் ஆக நோக்கிப் பண்டும்
இனையை யோஎன வினவினள் யாயே;
அதன்எதிர் சொல்லாள் ஆகி அல்லாந்து,
என்முகம் நோக்கி யோளே; அன்னாய்!
யாங்குஉணர்ந்து உய்குவள் கொல்என, மடுத்த
சாந்த ஞெகிழி காட்டி
ஈங்கு ஆயினவால் என்றிசின் யானே.

தெளிவுரை

"ஓங்கிய மலைநாட்டுக்குத் தலைவனே! 'நான் சொல்வது உண்மை' என்று நீ சொல்வதை இனி விட்டுவிடு. (உன் சொற்களெல்லாம் பொய்யாயின.) மூங்கில்கள் பின்னி வளர்ந்திருக்கும் கற்கள் பொருந்திய சிறிய வழியில், இடையே நேரும் துன்பங்களைக் கருதாமல் துணிந்து இரவில் குறியிடம் வந்து, தலைவியின் தேமல் படர்ந்த மார்பினைத் தழுவி மகிழ்ந்து சென்றாய். அதனால் இவளுடலில் புதுமணம் பரவியது. எனவே, இவள் தோளைச் சுற்றி வண்டுகள் அளவின்றி மொய்த்தன. அதனைக் கண்ட அன்னை, உற்று நோக்கி, 'முன்பும் இவ்வாறு வண்டுகளால் மொய்க்கப்பெற்ற தோள் கொண்டவளோ?' என வினவினாள். அதற்கு மறுமொழி சொல்லாது தலைவி கலக்கத்துடன் என்னை நோக்கினாள். நானோ, 'இவள் என்ன கூறி இந்த இடுக்கணிலிருந்து தப்புவளோ' என அஞ்சி, உடனே அடுப்பில் எரிந்துகொண்டிருந்த சந்தன விறகினை எடுத்துக் காட்டி, 'இதனை எரித்ததால் இதிலிருந்த வண்டுகள் யாவும் இவள் தோளை மொய்க்கின்றன' என மறைத்துக் கூறினேன்" என்று தோழி தலைவனை நோக்கிக் கூறினாள்.

கருத்து

மலைநாட்டுக்குத் தலைவனே! களவினை எத்தனை நாள் மறைத்துப் பொய் கூற இயலும்? இனியாகிலும் மணந்துகொள்.

விளக்கம்

'தலைவன் தலைவியை மணப்பதாய் முன்பு கூறிய மொழிகள் பொய்த்தன. இனியும் காலம் தாழ்த்தல் கூடாது; விரைந்து மணம் புரிய வேண்டும்' என்பதனைத் தோழி உணர்த்தினாள்.

சொற்பொருள்

2. காம்பு - மூங்கில்; தலை மணந்த - உச்சி பிணைந்த; அதர் - வழி.
3. உறுபகை - வழியில் நேரிடும் துன்பங்கள்; பேணாது - பொருட்படுத்தாது.
4. பொறி கிளர் - தேமல் படர்ந்த; ஆகம் - மார்பு; புல்ல - தழுவ.
5. அறுகால் பறவை - வண்டு (ஆறு கால்களைக் கொண்டது); அளவுஇல - எண்ணிறந்த.
6. கண்கோள் - உற்று நோக்குதல்; பண்டும் - முன்பும்.
7. இனையையோ- இத்தகைய (தோள்களைப்) பெற்றவளோ?; யாய் - அன்னை, தாய்.
8. எதிர் சொல்லாள் - மறுமொழி கூறாள்; அல்லாந்து - வருந்தி.
9. நோக்கியோள் - நோக்கினாள் (தலைவி).
10. உய்குவள் - தப்பிப்பாள்; மடுத்த - தீயில் எரிந்த.
11. சாந்தம் - சந்தனம்; ஞெகிழி - கொள்ளி.
12. என்றிசின் - என்று சொன்னேன்.

தோழி கூற்று

நற்றிணை 172 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறி வந்த தலைமகனைத் தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

பகற்குறியில் வந்தொழுகும் தலைவனிடம், தலைவி அங்கு வருதற்கான சில தடைகளைச் சொல்லி, அவன் உடனடியாக அவளை வரைந்துகொள்ள முயலவேண்டும் என்பதைத் தோழி குறிப்பால் புலப்படுத்தியது.

விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி,
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய,
'நெய்பெய் தீம்பால் பெய்துஇனிது வளர்த்தது,
நும்மினும் சிறந்தது; நுவ்வை ஆகும்'என்று,
அன்னை கூறினள், புன்னையது சிறப்பே!
அம்ம நாணுதும், நும்மொடு நகையே;

விருந்தின் பாணர் விளர்இசை கடுப்ப,
வலம்புரி வான்கோடு நரலும் இலங்குநீர்த்
துறைகெழு கொண்க!நீ நல்கின்,
இறைபடு நீழல் பிறவுமார் உளவே!

தெளிவுரை

புதியராய் வந்த பாணர் பாடுகின்ற மெல்லிய இசைப்பாட்டுப் போல வெள்ளிய வலம்புரிச்சங்கொலிக்கும் நீர்த்துறைக்குத் தலைவனே! என் அன்னை சிறுமியாய் இருந்தபோது, தம் தோழியர் கூட்டத்தோடு வெண்மணலில் புன்னை விதையை அழுத்தி விளையாடிய பின், அதனை எடுத்துச் செல்ல மறந்து விட்டனள். சின்னாளில் அது முளைவிட்டுத் தோன்றியது கண்டு, மகிழ்வெய்தி, அதற்குப் பாலையே நீராய் ஊற்றி வளர்த்தாள். அப்புன்னை இதுதான். 'இஃது உம் தங்கை போன்றது; உம்மினும் சிறந்தது' என்று அன்னை கூறினாள். ஆதலின், இப்புன்னையாகிய தங்கையின்கீழ் உன்னோடு நகைத்து விளையாடுதற்கு நாங்கள் வெட்கப்படுகிறோம். தங்குதற்கு அமைந்த நிழல் பிற உண்டு.

கருத்து

தலைவ! குறியிடங்களில் கூடுவதைத் தவிர்த்துத் தலைவியை மணந்து கூடுதலே இனி நீ மேற்கொள்ள வேண்டிய செயல்.

குறிப்பு

தோழி பகற்குறிச் சந்திப்புக்குப் புன்னை மரத்தை ஒரு தடையாய்ச் சொன்னாள்; எனினும், பகற்குறிப் புணர்ச்சிக்குத் தலைவி அஞ்சியமையும், அலர் எழுதலை நினைந்து நாணுற்றதையும் குறிப்பால் புலப்படுத்தித் தலைவனை வரைய வருமாறு வேண்டினாள்.

சொற்பொருள்

1. ஆயம் - தோழியர்; அழுத்தி - நட்டு.
2. காழ் - விதை; அகைய - தோன்ற.
3. தீம்பால் - இனிய பால்; பெய்து - ஊற்றி.
4. நுவ்வை - உம் தங்கை.
6. நகையே - நகையாடி (விளையாடுதலை).

7. விளர் - மெல்லிய; கடுப்ப - ஒப்ப.
8. வலம்புரி - வலம்புரிச்சங்கு; வான்கோடு - வெள்ளிய கோடு; நரலும் - ஒலிக்கும்.
9. நல்கின் - அருள் செய்தால்.
10. இறை படுநீழல் - தங்குதற்கு அமைந்த நிழல்; பிறவுமார் உளவே - பிறவும் உள்ளன.

தோழி கூற்று

ஐந்திணை எழுபது 63 **மூவாதியார்**

திணை : நெய்தல்

கூற்று

சிறைப்புறமாக நின்ற தலைமகன் கேட்பத் தோழி தலைமகட்குக் கூறி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

இரவுக்குறி வேண்டி வந்த தலைவன் தலைவியின் வீட்டு வேலிப்புறமாய் நிற்பதைக் கண்ட தோழி, தலைவனுக்குக் கேட்கும்படியாய்த் தலைவியிடம் கூறியது.

கண்ணுறு நெய்தல் கமழும் கொடுங்கழித்
தண்ணந் துறைவனோ தன்இலன் ஆயிழாய்!
வண்ணகைப் பட்டதனை ஆண்மை எனக்கருதிப்
பண்ணமைத் தேர்மேல் வரும்.

தெளிவுரை

"*ஆராய்ந்து செய்யப்பட்ட அணிகலன்களைக் கொண்ட தலைவியே! கண் போன்ற நெய்தல் மலர்கள் மணம் கமழ, வளைந்தோடும் கால்வாய்களைக் கொண்டுள்ள குளிர்ச்சி பொருந்திய அழகிய துறைகளைக் கொண்டவன், நம் தலைவன். அவன் தன் நிலையை உணரும் தன்மையனாயில்லை. அழகிய அவன் கைகளிலே நாம் அகப்பட்டுக்கொண்டதைத் தன் ஆண்மைத் திறம் என்று கருதி இறுமாப்புற்று இசை எழுப்பும் தேரில் வந்துகொண்டிருக்கிறான். வரைந்துகொள்ள வேண்டு மென்ற எண்ணமே அவனுக்கு இல்லை.*"

கருத்து

தலைவியே! தலைவன் களவுச் சந்திப்பைத் தவிர்த்துக் கடிமணம் செய்து கொள்ள வேண்டும்.

விளக்கம்

"தலைவி உன்மீது காதல் கொண்டது உன் ஆண்மையால் என்று கருதி அகங்காரம் கொண்டுவிடாதே; அவ்வாறு கருதுவது அன்பைப் புறக்கணிப்பதாகும். அன்பின் பெருமையை அறிந்து, இறுமாப்பை நீக்கி, உடனே திருமணம் செய்துகொள்" என்று தலைவன் கேட்குமாறு தோழி தலைவியிடம் பேசுகிறாள்.

சொற்பொருள்

1. கண்ணுறு நெய்தல் - கண் போன்ற நெய்தல் மலர்.
2. தன் இலன் - தனது பழைய போக்கினை மேற்கொள்ளாதவனாய்.
3. வண்ணம் - அழகிய; கைப்பட்டதனை - அவன் கைகளில் நாம் அகப்பட்டுக்கொண்டதை; ஆண்மை எனக் கருதி - தனது ஆண்மை யினாலேயே என்று நினைத்து இறுமாப்புற்று.
4. பண்அமை - இசை எழுப்பும்.

தோழி கூற்று

நற்றிணை 247 **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

'நீட்டியாமை வரை' எனத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் வந்தொழுகும் தலைவனிடம், இவ்வொழுக்கத்தை நீட்டியாது விரைந்து கற்பொழுக்கம் மேற்கொள்ளக் கடிமணம் செய்துகொள் என்று தோழி கூறியது.

தொன்றுபடு துப்பொடு முரண்மிகச் சினைஇக்
கொன்ற யானைச் செங்கோடு கழாஅ,
அழிதுளி பொழிந்த இன்குரல் எழிலி,
எஃகுறு பஞ்சிற்று ஆகி, வைகறைக்

கோடுஉயர் நெடுவரை ஆடும் நாட!நீ
நல்காய் ஆயினும், நயன்இல செய்யினும்,
நின்வழிப் படூஉம்என் தோழி நல்நுதல்
விருந்து இறை கூடிய பசலைக்கு
மருந்துபிறிது இன்மைநன்கு அறிந்தனை சென்மே!

தெளிவுரை

வலிமை மிக்க யானை, தொன்றுதொட்டு வரும் பகை மிகுதியால் சினந்து புலியைக் கொன்றது. அதனால் குருதி படிந்து சிவந்த அதன் கொம்புகளை இரவிலே இடித்துப் பொழிந்த மழை கழுவியது. மழையினைப் பொழிந்த அம்மேகம், வில்லால் அடிக்கப்பட்ட பஞ்சுபோல் வெண்மையாகி, விடியற் காலத்தே சிகரத்தைக் கொண்ட உயர்ந்த நெடிய மலையில் தங்கியிருக்கும். அத்தகைய மலைநாட்டிற்குரிய தலைவனே! நீ எமக்கு நன்மையான அருளைச் செய்யாது நன்மையில்லாத வற்றையே செய்வாய் என்றாலும், என் தலைவி உன் உள்ளக் குறிப்பின் வழியே நடக்கும் இயல்பினள். அவள் நெற்றியில் தோன்றியுள்ள பசலை நோயை நீக்கும் மருந்து நீயே அன்றிப் பிறிது ஒன்று இல்லை. இதனை நன்கு உணர்ந்து, பின் அவளைப் பிரிந்து செல்.

கருத்து

மலைநாடனே! உன்னையன்றி இவளைக் காப்பவர் பிறர் இலராதலின், இவளை மணந்து இல்லற வாழ்வில் இன்புறுத்து.

விளக்கம்

நாடனே! நீ வரைந்துகொண்டு நல்குவாய் எனினும், நயனின்றி நீங்குவாய் எனினும் தலைவி என்றும் உன் வழியிலேயே நிற்பவள். அவள் நெற்றியில் தோன்றியுள்ள பசலை நோய்க்கு உன்னையன்றி வேறு மருந்தில்லை. இதனை நன்குணர்ந்து கொண்டு அதன்பின் செய்வன செய்திடு.

சொற்பொருள்

1. தொன்றுபடு - பழமையுற வந்த; துப்பு - வலிமை; முரண் மிக - மாறுபாடுமிகுதலால்; சினைஇ - சினந்து.

2. கொன்ற - (புலியைக்) கொன்ற; யானை - யானையின்; செங்கோடு - (குருதிக்கறை படிந்து) சிவந்த கொம்பினை; கழாஅ - கழுவி.
3. அழிதுளி - மிக்க துளி; இன்குரல் - இனிய முழக்கத்தைக் கொண்ட; எழிலி - மேகம்.
4. எஃகுறு - இரும்பு வில்லால் அடிக்கப்பட்ட; பஞ்சிற்று - பஞ்சைப் போல.
5. ஆடும் - தவழும்.
6. நல்குதல் - அருள் செய்தல்; நயன் இல - நன்மையில்லாதன.
7. நின் - உன்; வழிப்படூஉம் - (உள்ளக் குறிப்பின்) வழியே நடக்கும்; நல்நுதல் - நல்ல நெற்றியில்.
8. பசலைக்கு - பசலை நோய்க்கு; விருந்து - புதிதாய்; இறை கூடிய - இருந்து மிகுதலைக்கொண்ட.
9. பிறிது இன்மை - வேறு இல்லாமை.

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 42 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவியை மணந்துகொள்ளவேண்டுமெனத் தலைவனைத் தோழி தூண்டியது.

முத்தம் அரும்பும் முடத்தாள் முதுபுன்னை
தத்தும் திரைதயங்கும் தண்ணாங் கடற்சேர்ப்ப!
சித்திரப் பூங்கொடி அன்னாட்(கு) அருள்ஈயாய்
வித்தகப் பைம்பூண்நின் மார்பு.

தெளிவுரை

"முத்துகளைப் போன்ற அரும்புகளைத் தோற்றுவிக்கும் வளைந்த அடிப்பகுதியைக் கொண்ட முதிய புன்னை மரத்தின்

மீது கடலலைகள் தாவி அசைந்துகொண்டிருக்கும் குளிர்ச்சி பொருந்திய அழகிய கடற்கரைக்குத் தலைவனே! அழகிய கொடி போன்றுள்ள எம் தலைவிக்கு வேலைப்பாடமைந்த பொன் னாலான அணிகலன்களைப் பூண்டுள்ள உன் மார்பை இடை யீடின்றிப் பெறும் இன்பத்தை நீ அவளை மணஞ்செய்து வழங்கு" எனத் தோழி தலைவனிடம், தலைவியை வரைந்து கொள்ளுமாறு வேண்டுகிறாள்.

கருத்து

தலைவ! உன் மார்பை இடையீடின்றித் தழுவ இயலாது வருந்தியிருக்கும் தலைவியை மணந்து இன்பம் தா.

குறிப்பு

கடலலை புன்னை மரத்தின்மீது தாவிச் செல்வதுபோல, தலைவியும் உன் மார்பைத் தழுவி இன்புறட்டும்.

சொற்பொருள்

1. முத்தம் - முத்து; முடத்தாள் - வளைந்த அடிப்பகுதி; முதுபுன்னை - முதிய புன்னை மரம்.
2. தத்தும் - தாவிக் குதித்துச் செல்லும்; திரை - அலை; தயங்கும் அசைந்தாடிச் செல்லும்.
3. சித்திர - அழகிய; அன்னாட்கு - போன்றவளாகிய தலைவிக்கு; ஈயாய் - வழங்கு.
4. வித்தகம் - வேலைப்பாடமைந்த; பைம்பூண் - பொன்னாலான அணிகலன்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 260 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

பகற்குறிக்கண் வந்த தலைமகனைத் தோழி, 'இனிப் புனங்காவற்கு வாரோம்' எனக் கூறி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் தலைவன் தலைவியைப் பகற்குறியிடத்தில் காண வந்தபோது, தோழி அவனை நோக்கி, 'இனி நாங்கள் தினைப்புனங் காவலுக்கு வரமாட்டோம்; விரைவாய்த் தலைவியைத் திருமணம் செய்து கொள்' என்று கூறியது.

குன்றக் குறவன் காதல் மடமகள்,
மென்தோள் கொடிச்சியைப் பெறற்குஅரிது தில்ல
பைம்புறப் படுகிளி ஒப்பலள்;
புன்புல மயக்கத்து விளைந்தன தினையே!

தெளிவுரை

"புன்செய் நிலத்தில் உழுது விதைத்து, தினை விளைந்து, கதிர்கள் முற்றின. (தினை அறுவடையாகவிருக்கிறது.) இனிக் குன்றத்துக்குறவனின் அன்பு மகளாகிய தலைவி, தினைப் புனத்தில் படியும் பசிய முதுகினைக் கொண்ட கிளிகளை விரட்ட வரமாட்டாள். ஆதலின், மென்தோள் கொண்ட அத்தலைவியைக் காண இயலாது. (விரைவாய் அவளைத் திருமணம் செய்துகொள்)" எனத் தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

தலைவியை இனிப் பகற்குறியிடத்தில் காண இயலாது. அவளை இடையீடின்றிக் காண வேண்டுமெனின் அவளை மணந்துகொள்.

விளக்கம்

"தினை காப்பதைக் காரணமாய்ச் சொல்லி இனிமேல் தலைவி வெளிவர இயலாது. நீ அவளைக் காணவும் இயலாது.

ஆதலால், களவொழுக்கத்தைவிட்டுத் தலைவியை விரைவில் மணந்து, தடையின்றிக் கூடி மகிழ்ந்திரு" எனச் சொல்லி, தோழி, தலைவனைத் திருமண ஏற்பாடுகளைச் செய்ய வற்புறுத்துகிறாள்.

சொற்பொருள்

1. காதல் - அன்பு; மடமகள் - இளைய மகள்.
2. கொடிச்சி - குறிஞ்சிநிலத்தலைவி.
3. பைம்புறம் - பசிய முதுகு; படுகிளி - தினைப்புனத்தில் படியும் கிளி; ஓப்பலள் - விரட்ட வரமாட்டாள்.
4. புன்புல மயக்கம் - புன்செய் நிலத்தை உழுது.

தோழி கூற்று

நற்றிணை 98 **உக்கிரப் பெருவழுதி**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி வந்து ஒழுகும் தலைமகனைத் தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியில் தலைவியைக் கூடிப் பெறுகின்ற இன்ப நாட்டத்தினனாய் வந்து செல்லும் தலைவனை, தலைவியை மணந்து வாழும் முயற்சியிலே செலுத்த விரும்பிய தோழி அவனிடம் கூறியது.

எய்ம்முள் அன்ன பரூஉமயிர் எருத்தின்
செய்ம்ம் மேவல் சிறுகண் பன்றி
ஓங்குமலை வியன்புனம் படீஇயர், வீங்குபொறி
நூழை நுழையும் பொழுதில் தாழாது
பாங்கர்ப் பக்கத்துப் பல்லி பட்டென
மெல்ல மெல்லப் பிறக்கே பெயர்ந்துதன்
கல்அளைப் பள்ளி வதியும் நாடன்!
எந்தை ஓம்பும் கடியுடை வியல்நகர்த்
துஞ்சாக் காவலர் இகழ்பதம் நோக்கி,
இரவின் வரூஉம் அதனினும் கொடிதே

வைகலும் பொருந்தல் ஒல்லாக்
கண்ணொடு, வாராளன் நார்இல் நெஞ்சே!

தெளிவுரை

“முள் போன்று தடித்த மயிர் கொண்ட பிடரியும் சிறிய கண்ணும் கொண்ட பன்றி ஒன்று, உயர்ந்த மலைப்பக்கத்தே யுள்ள அகன்ற தினைக்கொல்லையில் மேயும்பொருட்டுப் பெரிய இயந்திரமமைந்த புழைவழியே சென்று புகுந்தது. அப்போது தீமையைக் காட்டும் வகையில் பக்கத்திலிருந்து பல்லி ஒன்று ஒலித்தது. அதனைக் கேட்ட பன்றி, தனக்கு ஊறு நேரு மென்பதை உணர்ந்து, மெல்ல மெல்லப் பின்னே நகர்ந்து வந்து, கல் குகையிலுள்ள தன் படுக்கையில் தங்கியது. இத்தகைய காட்சிக்கிடனான மலைநாட்டையுடையவனே!

“எம் தந்தையால் பாதுகாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் காவலுள்ள எம் அகன்ற மாளிகையில் காவலர் தூங்காமல் காவல் புரிந்து கொண்டிருப்பர். அக்காவலர் அயர்ந்திருக்கும் குறுகிய வேளையில் இரவில் வந்து தலைவியைக் கண்டு செல்ல முயல்கிறாய். நாள்தோறும் நீ வரும் வழியின் இடையூற்றைக் கருதியும், வீட்டுக் காவலை நினைந்தும் எம் கண்கள் தூங்காமல் இருப்பது கொடியது. அதைவிட உன்னைச் சேர்ந்த எம் நெஞ்சம் அன்பின்றி மீண்டும் எம்மிடம் வாராமலிருப்பது இன்னும் கொடியது.”

கருத்து

தலைவ! இரவில் காவல் மிகுதி காரணமாய்த் தலைவியைக் காணாது திரும்பும் நீ, இடையீடின்றி இன்பம் துய்க்க வேண்டுமெனின் அவளை மணம் செய்துகொள்வதே வழி.

உள்ளுறை

பன்றி தினையைத் தின்பதற்காக, இயந்திரம் அமைக்கப் பட்டுள்ள வழியில் செல்ல முற்படும்போது பல்லியின் தீய குறிச்சொல் கேட்டு, மேலும் சென்றால் துன்பம் நேரும் என்று கருதி மீண்டு தன் குகையை அடையும். இத்தொடர் வாயிலாய்த்

தலைவியோடு இன்பம் துய்க்க வரும் தலைவன், மாளிகையின் காவல் கண்டு, தலைவியைக் காணாது திரும்ப நேரிடும் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுகிறது.

இதனால், இடையீடின்றி இன்பம் துய்க்க வேண்டுமென்றால் களவொழுக்கத்தை விட்டுத் தலைவியைத் திருமணம் செய்து கொண்டு அழைத்துச் செல்ல வேண்டும் எனத் தோழி உணர்த்துகிறாள்.

குறிப்பு

தனக்கு ஊறு நேருமென்பதால், தான் மேய விரும்பியதையும் கைவிட்டுப் பாதுகாப்பாகத் தன் குகையிலே சென்று பதுங்கும் பன்றி வாழும் நாட்டைச் சாந்தவனாயிருந்தும், காவலைக் கொண்ட பெரிய வீட்டிலுள்ள குறியிடத்திற்குத் தலைவன் துணிந்து வருகிறானே எனத் தோழி கலங்குகிறாள்.

சொற்பொருள்

1. எய் - முள்ளம்பன்றி; பரூஉ மயிர் - பருத்த மயிர்; எருத்து - பிடர்.
2. செய்ய்ம்ம் மேவல் - செல்ல விரும்புதல் (செய்ய்ம்ம் என்பது இசை நோக்கி யகரமும் மகரமும் அளபெடுத்தன).
3. வியன் - அகன்ற; படீஇயர் - செல்வதற்கு; வீங்குபொறி - பெரிய இயந்திரம்.
4. நூழை - நுழைவாயில்; தாழாது - விரைவாய்.
5. பாங்கர்ப் பக்கத்து - தீமையைச் சுட்டும் பக்கத்தில்; பட்டென - ஒலிக்க.
6. பிறக்கே - பின்னே.
7. அளை - குகை; பள்ளி - படுக்கை; வதியும் - தங்கும்.
8. எந்தை - எம் தந்தை; ஓம்பும் - பாதுகாத்துவரும்; கடியுடை - காவலுள்ள; வியல்நகர் - அகன்ற மாளிகை.
9. துஞ்சா - தூங்காத; இகழ்பதம் - சோர்ந்திருக்கும் வேளை.
11. வைகலும் - நாள்தோறும்; பொருந்தல் ஒல்லா - துயில இயலாத.
12. வாரா - வந்து சேராத; நார் - அன்பு.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 234 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இடைவிடாது வந்து ஒழுகாநின்றே களவு நீடாமல் வரைதற்கு முயல்கின்ற தலைமகன், தலைமகள் வேறுபாடு கண்டு, 'இதற்குக் காரணம் என்?' என்று வினாவிய வழி, 'நின்னைக் கனவிற்கண்டு விழித்துக் காணாளாய் வந்தது' எனத் தோழி சொல்லி வரைவு முடுக்கியது.

கூற்று விளக்கம்

தலைவன் இடைவிடாது தலைவியைக் கண்டு அளவளாவிச் சென்றான்; விரைவில் வரையவும் முயன்றான். அப்போதும் தலைவி வாட்டமுற்றாள். 'இவள் மெலிவிற்குக் காரணம் என்ன?' என்று அவன், தோழியிடம் வினவுகிறான். அதற்குத் தோழி, 'உன்னைக் கனவில் கண்டு நினைவில் காண இயலாதவளாய்த் தலைவி இருப்பதே காரணம்' என்று கூறி, விரைவில் திருமணம் செய்துகொள்ளுமாறு தலைவனை முடுக்கியது.

'மின்அவிர் வயங்கிழை ஞெகிழச் சாஅய்,
நன்னுதல் பசத்தல் ஆவது?' 'துன்னிக்
கனவிற் காணும் இவளே
நனவிற் காணாள்,நின் மார்பே தெய்யோ!'

தெளிவுரை

தலைவ! என் தலைவியாகிய உன் காதலி மின்னல்போல் ஒளி விடும் தன் அணிகலன்கள் நெகிழ்வுற, தன் உடல் மெலிவுற, அழகிய நெற்றி பசப்புற இருப்பதைக் கண்டு இவையெல்லாம் எதனாலாயின என்று கேட்கிறாய். கனவில் உன் மார்பினை நெருங்கித் தழுவக் காணும் அவள், கண் விழித்ததும் நனவில் உன்னைத் தன்னருகே காண்பதில்லை; அதனால் மிகவும் வேதனையுற்றாள். அதன் விளைவே இம்மாற்றம்.

கருத்து

"தலைவ! இரவும் பகலும் இடையீடின்றி உன்னுடன் கூடியிருத்தலையே தலைவி விரும்புகின்றாள். அது நிறைவேற அவளைத் திருமணம் செய்து கொள்" என்கிறாள், தோழி.

கனவில் மட்டுமன்றித் தலைவி நனவிலும் தலைவன் மார்பைத் தழுவு வதற்கு அவளைத் தலைவன் மணந்துகொள்ள வேண்டும்.

சொற்பொருள்

1. மின் அவிர் - மின்னல் போல ஒளி வீசி; வயங்கிழை - விளங்குகின்ற அணிகலன்கள்; ஞெகிழ - கழல; சாஅய் - மெலிந்து.
2. ஆவது - காரணமாவது; துன்னி - நெருக்கமாய்த் தழுவி.
4. நனவு - விழிப்பு நிலை.

தோழி கூற்று

கலித்தொகை 126 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி தலைமகளது ஆற்றாமை கூறித் தலைமகனை வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவியின் ஆற்றாமையைத் தலைவனிடம் தோழி எடுத்துரைத்துத் திருமணம் செய்துகொள்ளுமாறு கூறியது.

பொன்மலை சுடர்சேர, புலம்பிய இடம்நோக்கி,
தன்மலைந்து உலகுஏத்தத் தகைமதி ஏர்தர,
செக்கர்கொள் பொழுதினான் ஒலிநீவி, இனநாரை
முக்கோல்கொள் அந்தணர் முதுமொழி நினைவார்போல்,
எக்கர்மேல் இறைகொள்ளும், இலங்குநீர்த் தண்சேர்ப்ப!

அணிச்சிறை இனக்குருகு ஒலிக்குங்கால், நின்திண்தேர்
மணிக்குரல் எனஇவள் மதிக்கும்மன்; மதித்தாங்கே,
உள்ஆன்ற ஒலியவாய் இருப்பக்கண்டு, அவைகானல்
புள்என உணர்ந்து,பின் புலம்புகொண்டு, இனையுமே.

நீர்நீவிக் கஞன்றபூக் கமழும்கால், நின்மார்பில்
தார்நாற்றம் எனஇவள் மதிக்கும்மன்; மதித்தாங்கே,
அலர்பதத்து அசைவளி வந்துஒல்க, கழிப்பூத்த
மலர்என உணர்ந்து,பின் மம்மர்கொண்டு இனையுமே.

நீள்நகர் நிறையாற்றாள், நினையுநள் வதிந்தக்கால்,
தோள்மேலாய் எனநின்னை மதிக்கும்மன்; மதித்தாங்கே

நனவுஎனப் புல்லுங்கால், காணாளாய், கண்டது
கனவுஎன உணர்ந்து,பின் கையற்றுக் கலங்குமே.

எனவாங்கு,
பலநினைந்து, இனையும் பைதல் நெஞ்சின்,
அலமரல் நோயுள் உழக்கும்என் தோழி
மதிமருள் வாள்முகம் விளங்க,
புதுநலம் ஏர்தர, பூண்க, நின்தேரே!

தெளிவுரை

"ஞாயிறு மேற்கு மலையைச் சென்றடைந்தது; இருள் சூழ்ந்த நிலையில் உலகம் போற்றுமாறு தகுதி பெற்ற நிலா அழகுடன் எழுந்தது. செக்கர் வானம் தோன்றிய அந்தி நேரத்தில், முது மொழிகளை நினைத்து முக்கோல் அந்தணர்கள் வீற்றிருப்பது போல, குருகுக் கூட்டம் ஒலியடங்கி மணல்மேட்டின்மீது தங்கி யிருக்கும். அத்தகைய கடல்நிலத்துத் தலைவனே!

"அழகிய சிறகுகளைக் கொண்ட குருகுக் கூட்டம் இரவு நேரத்தில் ஒலிக்கும்போது அவ்வொலி உன் தேர்மணியின் ஓசை என்று கருதி இவள் உன் வரவை எதிர்பார்த்திருப்பாள்; சிறிது நேரத்தில் ஒலியடங்கியதும் அது கடற்கரைச்சோலைப் பறவை களின் ஒலி என உணர்ந்து, நீ வாராதது கண்டு தனிமை கொண்டு வருந்துவாள்.

"நீர்நிலைகளின் மேற்பரப்பில் பூத்துள்ள மலர்கள் மணம் வீசும்போது, அது உன் மார்பில் அணிந்த மாலையின் மணம் என்று கருதியிருப்பாள். ஆனால், அஃது அசைந்து வரும் தென்றல் காற்று கழிப்பூக்களின் மேல் படிந்து வந்து வீசியதால் ஏற்பட்டது என்பதை அறிந்து, நீ வரவில்லை என்பதைத் தெளிந்து அறிவு மயங்கி வருந்துவாள்.

"தலைவி, தன் பெரிய இல்லத்தில் தன் மனத்தைக் கட்டுப் படுத்த இயலாதவளாய், உன்னையே நினைத்துத் தன்னை மறந்து சிறிதே கண்ணயர்வாள். அப்போது நீ தழுவுவதைப் போல ஒரு தோற்றத்தினைக் கண்டு, அஃது உண்மையென்று கருதி,

உன்னைத் தழுவ முற்படுவாள். பின்னர், அது கனவு என அறிந்து செய்வதறியாது கலங்குவாள்.

“இவ்வாறு பலவும் நினைந்து காமநோய் காரணமாய் என் தலைவி துன்பச்சுமையுள் அழுந்தியிருக்கிறாள். மதி போன்ற அவள் ஒளி முகம் புதுநலம் பெறுமாறு அவளுக்கு அருள் செய்ய உன் தேரினைப் பூட்டிப் பயணம் புறப்படு.”

கருத்து

தலைவி, தன் காதலனையே நினைந்திருந்தாள். அவள், தன் முன் தோன்றிய பல நிகழ்வுகள் அவன் வந்ததால் நிகழ்ந்தனவெனக் கருதி ஏமாற்றமுற்றாள். பின்னர், உண்மையறிந்து துடிக்கிறாள். இவ்வாறு, அவள் மயங்கித் துடிக்கும் இயல்பைக் காதலனிடம் கூறி, தலைவியை மணம் செய்துகொள்ளப் புறப்பட்டுவருமாறு தோழி கூறினாள்.

விளக்கம்

தலைவி எப்பொழுதும் தலைவன் நினைவாகவே உள்ளாள். அதனால், குருகு ஒலியைத் தலைவனின் தேர் ஒலி எனவும், பூக்களின் மணம் தலைவனின் மாலையிலிருந்து எழும் மணம் எனவும், உறங்கும்போது தலைவன் தன் தோள்மேல் இருக்கிறான் எனவும் கருதினாள். இவை பொய் என்று அறிந்த நிலையில் தனிமை மிக்கு, துயரம் கொண்டு, கையற்றுக் கலங்கினாள்.

உவமை நயம்

நாரைகள் ஆரவாரமின்றி இருந்தமைக்குத் தோழி ஓர் உவமை கூறுகிறாள். முக்கோலைக் கையிலே கொண்ட முனிவர்களாய அந்தணர், வேதமோதி, மாலைநேரக் கடமையைச் செய்யும் போது எப்படி அமைதியாய் இருப்பரோ அப்படி அந்நாரைகள் இருந்தனவாம்.

உள்ளுறை

நாரைகள் தம் உணவுக்காகப் பகற்காலத்தில் மீன் போன்ற உயிர்களை வருத்தி இரை தேடும் இயல்புடையவை; மாலையில் அவை அமைதியாய் எந்தவிதத் தீங்கும் செய்யாதவைபோல விளங்கும். இத்தொடர்கள் வாயிலாய், அவ்வூரில் வாழும்

மகளிர், தலைவியைப் பற்றிய பழிச்சொற்களைப் பகலெல்லாம் பரப்பி, மாலையில் ஒன்றுமறியாதவர்போல அமைதியாய் இருப்பர் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. பொன்மலை - மேற்கு மலை; சுடர் - ஞாயிறு; புலம்பிய - தனிமையுற்ற.
2. மலைந்து - சூடி; தகைமதி - அழகு நிலா; ஏர் தர - அழகுடன் தோன்ற.
3. நீவி - அடங்கி.
4. முதுமொழி - பழமையான உரைகள்.
5. எக்கர் - மணல்மேடு; இறை கொள்ளும் - தங்கும்; சேர்ப்பன் - நெய்தல் நிலத் தலைவன்.
6. அணி - அழகு; சிறை - சிறகு; திண் - வலிய.
7. மணி - தேரின் மணி; மதிக்கும் - நினைக்கும், கருதும்.
8. உள்ஆன்ற - உள்ளுக்குள்ளேயே அடங்கிய; கானல் - கடற்கரைச் சோலை.
9. புலம்பு - தனிமை; இனையும் - வருந்தும்.
10. நீவி - மேலே உயர்ந்து; கஞூன்ற - நெருங்கிய.
11. தார் - மாலை; மதிக்கும் - கருதுவாள்.
12. அலர் பதத்து - மலரும் பக்குவம்; அசைவளி - தென்றல் காற்று; ஒல்க - தங்க, அசைய.
13. மம்மர் - மயக்கம்.
14. நீள்நகர் - பெரிய வீடு; வதிதல் - தங்குதல்.
16. புல்லுதல் - தழுவுதல்.
17. கையற்று - செயலற்று.
19. பைதல் - துன்பம்.
20. அலமரல் - மனம் சுழலுதல்; உழத்தல் - வருந்துதல்.
21. மதி - நிலவு; வாள்முகம் - ஒளி பொருந்திய முகம்.
22. ஏர் - அழகு; தர - மிகுதியாய்; பூண்க - பூட்டுக.

தோழி கூற்று

கலித்தொகை 127 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி தலைமகளது ஆற்றாமை கூறித் தலைமகனை வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவன் குறித்த இடத்திற்கெல்லாம் தலைவி சென்று களவிற்கூடிய தனால் அவளை எளியவள் என்று அவன் கருதி மறந்தனனோ என ஐயுற்ற தோழி, தலைவனிடம் சென்று, 'விரைந்து தலைவியை மணந்துகொள்' என்று கூறியது.

தரவு

தெரிஇணர் ஞாழலும், தேம்கமழ் புன்னையும்
புரிஅவிழ் பூவின கைதையும், செருந்தியும்,
வரிஞிமிறு இமிர்ந்துஆர்ப்ப, இருந்தும்பி இயைபுஊத,
செருமிகு நேமியான் தார்போலப் பெருங்கடல்
வரிமணல் வாய்சூழும் வயங்குநீர்த் தண்சேர்ப்ப!

தாழிசை

கொடுங்கழி வளைஇய குன்றுபோல், வால்எக்கர்,
நடுங்குநோய் தீர,நின் குறிவாய்த்தாள் என்பதோ–
கடும்பனி அறல்இகு கயலேர்கண் பனிமல்க,
இடும்பையோடு இனைபுஏங்க, இவளைநீ துறந்ததை?

குறிஇன்றிப் பன்னாள்நின் கடுந்திண்தேர் வருபதம்கண்டு,
எறிதிரை இமிழ்கானல், எதிர்கொண்டாள் என்பதோ–
அறிவுஅஞர் உழந்துஏங்கி, ஆய்நலம் வறிதாகச்
செறிவளை தோள்ஊர, இவளைநீ துறந்ததை?

காண்வர இயன்றஇக் கவின்பெறு பனித்துறை,
யாமத்து வந்து,நின் குறிவாய்த்தாள் என்பதோ–
வேய்நலம் இழந்ததோள் விளங்கிழை பொறையாற்றாள்,
வாள்நுதல் பசப்பூர, இவளைநீ துறந்ததை?

அதனால்,

சுரிதகம்

இறைவளை நெகிழ்ந்த எவ்வநோய் இவள்தீர,
'உரவுக்கதிர் தெறும்'என ஓங்குதிரை விரைபு,தன்
கரைஅமல் அடும்புஅளித் தாஅங்கு–
உரவுநீர்ச் சேர்ப்ப!– அருளினை அளியே.

தெளிவுரை

"போரில் எதிரியைக் கொல்லும் சக்கராயுதத்தைக் கொண்ட திருமால் அணிந்திருக்கும் மாலையைப் போல, கடல்நீர் எழுந்து மணல்மேட்டைச் சூழ்ந்திருக்கும். அங்குள்ள சோலையில் சிறந்த கொத்துகளைக் கொண்ட ஞாழலும், தேன்மணம் கமழும் புன்னையும், தளை அவிழ்ந்த மலர்களைக் கொண்ட தாழையும், செருந்தியும் பூத்து மலர்ந்திருக்கும். அவற்றை வரிகள் கொண்ட வண்டுகளும், கருநிறத் தும்பிகளும் கூட்டமாய் ஒலித்துச் சூழ்ந் திருக்கும். அத்தகைய நெய்தல்நிலத் தலைவனே!" என்றழைத்துத் தோழி, தலைவனை நோக்கித் தன் எண்ணத்தைக் கூறினாள்.

"ஒருநாள், ஓர் இடத்தைக் குறியிடமாய்க் குறிப்பிட்டுக் கூறி, எம் தலைவியை அங்கு வரச் சொன்னாய்; கொடுமையான கடல் கழிநீர் சூழ்ந்திருந்த வெண்மணற்குன்றமே நீ குறிப்பிட்ட குறியிடம்; மிகவும் இன்னலுற்று, உன் காமநோயைத் தீர்க்க வேண்டுமே என்னும் எண்ணத்தில், அவள் நீ கூறியவாறு, நீ குறிப்பிட்ட இடத்துக்கு வந்து உன்னை மகிழ்வித்து மகிழ்ந்தாள். இப்பொழுது அதை மறந்து நீ பிரிந்து வாழ்கிறாய்; உன் பிரிவால், அழுதழுது கண்ணீர் வற்றிய நிலைக்கு ஆளான தலைவியின் கயல் போன்ற கண்கள் கண்ணீரும் இன்றி வருந்துமாறு செய் துள்ளாயே. அது, நீ சொன்ன குறியிடத்திற்குத் தப்பாமல் அவள் வந்தாளே, அந்தச் செயலுக்காகவா?

"தலைவனே! நீ அவளைக் காண வாராததை எண்ணி, அவள் தன்னுணர்வு நீங்கித் துன்பத்தில் உழந்து ஏங்கித் தவிக்கின்றாள்; அவள் அழகுநலம் கெட்டது; அதனால் மெலிந்த அவள் தோள் களில் அணிந்திருந்த வளையல்கள் கழன்றன; இவ்வாறு அவளை மெலிவிப்பது, களவுக்காலத்தில், நீ குறித்த இடத்தில், உன் தேர் வரும் ஒலி எப்பொழுது கேட்கும் என்று எதிர்பார்த்துக் கூர்ந்து

கவனித்து, நீ தேரில் வந்ததும் உன்னைத் தழுவி வரவேற்றாளே, அந்தச் செயலுக்காகவா?

"மூங்கிலின் அழகை வெல்லும் இயல்பு கொண்ட அவளின் தோள்கள், அழகிய அணிகளைப் பூண இயலாமல் மெலிந்தன; ஒளி பொருந்திய அவள் நெற்றியில் பசலை பரவத் தொடங்கி விட்டது. இத்தகைய துன்பம், காண்போரின் உள்ளத்தைக் களிப்படையச் செய்யும் கவின்மிகு கடல்துறையிடத்திற்கு, நள்ளிரவு என்றும் அஞ்சாமல் நீ சொன்ன குறியிடத்திற்குத் தப்பாமல் வந்தாளே, அந்தச் செயலுக்காகவா?

"வலிமைமிக்க நீர்நிலை கொண்ட சேர்ப்பனே! உன் கடற் கரையில் அடும்பைச் செடிகொடிகள் நிறைந்துள்ளன; அவை கதிரவனின் வெப்பம் தாங்காமல் வருந்துகின்றன எனக் கருதி கடலலைகள், அவற்றைக் கடல்நீருள் சேர்ப்பதுண்டு. அவ்வலை களைப் போல, நீயும் செயல்படு; முன்கை வளையல்கள் கழல வருந்தும் எம் தலைவியின் துன்பம் தீர, அவளை வரைந்து கொள்" என்று கூறினாள்.

கருத்து

சேர்ப்பனே! நீ அழைத்த இடத்திற்கெல்லாம் உன்னை வந்து கண்டதால், தலைவியை எளியள் என்று கருதிவிட்டாய்போலும்! களவொழுக்கத்தை நிறுத்தி அவளைத் திருமணம் செய்துகொள்.

விளக்கம்

தலைவியைக் களவுக்காலத்தில் துய்த்து மகிழ்ந்த தலைவன், வரைந்துகொள்ளாததோடு மட்டுமன்றிப் பிரிந்திருக்கவும் தலைப்பட்டான். தலைவனை எண்ணித் துன்புற்ற தலைவியின் நிலையறிந்த அவள் உயிர்த்தோழி, தலைவனை அணுகி, "நீ களவுக்காலத்தில் எங்கெங்கு, எவ்வெப்பொழுது வருமாறு கேட்டுக்கொண்டாயோ, அங்கங்கு அவ்வப்பொழுது தவறாது வந்து, உன் காமநோயை நீக்கிய தலைவியை எளியள் என்று கருதி, மணம் செய்துகொள்ளாது காலத்தை நீட்டிக்கின் றாயோ?" என்று வினவி, விரைவில் தலைவியை மணந்து வாழுமாறு அவனை வேண்டிக்கொள்கிறாள்.

சொற்பொருள்

1. தெரி - விளங்குகின்ற; இணர் - பூங்கொத்து.
2. புரிஅவிழ் - இதழ் விரியும்; கைதை - தாழை.
3. ஞிமிறு - வண்டு; இருந்தும்பி - கரிய வண்டு; இயைபு - இயைந்து; ஊத - தேன் உண்ண.
4. செருமிகு - போர்வல்ல; நேமியான் - சக்கரப்படையைக் கொண்டவன், திருமால்.
5. வாய் சூழும் - சூழ்ந்திருக்கும்.
6. கொடுங்கழி - வளைவான உப்பங்கழி; வால்எக்கர் - வெண்மையான மணல்மேடு.
7. என்பதோ - என்பதனாலா.
8. கடும் பனி - விரைந்து சுரக்கும் கண்ணீர்.
9. இடும்பை - துன்பம்; இனைபு - வருந்தி; துறந்ததை - துறந்தது?
10. வருபதம் - வரும் நேரம்.
12. அஞர் உழந்து - துன்பம் உற்று; வறிதாக - குறைய.
13. ஊர - கழன்று விழ.
14. பனித்துறை - குளிர்ச்சி பொருந்திய துறை.
15. யாமம் - நள்ளிரவு.
17. வாள் - ஒளி வீசும்.
19. இறை - முன் கை.
20. உரவுக் கதிர் - கொடிய ஞாயிறு; தெறும் - சுடும்.
21. அமல் - நெருங்கி வளர்ந்திருக்கும்; அடும்பு - ஒரு வகைக் கொடி; அளித்தாஅங்கு - (தண்ணீரினுள் இழுத்துச் சென்று) அருள் செய்தது போல.
22. உரவு நீர் - கடல்; அளியே - அருள் செய்.

தோழி கூற்று

நற்றிணை 108 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : குறிஞ்சி

கூற்று

வரையாது நெடுங்காலம் வந்தொழுகலாற்றாளாய தோழி, தலைமகளது ஆற்றாமை கூறி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

களவின்பத்தை மட்டுமே விரும்பியவனாய்க் காதலன் நெடுங்காலம் வந்து செல்ல, அது பொறாது, காதலியின் ஆற்றாமை கூறி, அவளை மணந்துகொள்ளுமாறு தோழி தலைவனிடம் கூறியது.

மலைஅயல் கலித்த மைஆர் ஏனல்
துணையின் தீர்ந்த கடுங்கண் யானை
அணையக் கண்ட அம்குடிக் குறவர்,
கணையர், கிணையர், கைபுனை கவணர்,
விளியர், புறக்குடி ஆர்க்கும் நாட!
பழகிய பகையும் பிரிவுஇன் னாதே;
முகைஏர் இலங்குஎயிற்று இன்நகை மடந்தை
சுடர்புரை திருநுதல் பசப்ப,
தொடர்புயாங்கு விட்டனை? நோகோ யானே!

தெளிவுரை

மலைப்பக்கத்தில் செழித்துள்ள தினைக்கொல்லையில் உள்ள தினையைத் தின்னக் கருதி, தன் பெண்யானையைப் பிரிந்து வந்த ஆண்யானையை அழகிய குடியிலுள்ள குறவர்கள் கண்டனர். உடனே, அவர்கள் அம்பினைக் கொண்டவராயும், கிணைப் பறையை உடையவராயும், கைவிரலில் கோத்த கவண்களைக் கொண்டவராயும் கூடிக் கூவிப் பேரிரைச்சலிட்டுக் குடியிருப்புகளின் வெளியிடமெங்கும் ஆரவாரித்தனர். இத்தகைய சூழலைக் கொண்ட மலைநாட்டவனே! தொடர்ந்து பகை கொண்டவராய் இருந்தாலும், அவரைப் பிரிவதென்பது துன்பம் தருவதாய் இருக்கும். அங்ஙனமாக, முல்லை அரும்பினை யொத்த பற்களையும், இனிய புன்முறுவலையும் கொண்ட

தலைவியின் ஒளி பொருந்திய அழகிய நெற்றியிலே பசலை ஏற்படுவதற்குக் காரணமான நீ, அவள் தொடர்பை எவ்வாறு கைவிட்டனை? இதனைக் கருதியே நான் வருந்தினேன்.

கருத்து

தலைவ! களவுக்காலத்தில் இடையீடுபட்டு வருகின்ற சிறு பிரிவுக்கே தலைவி கலங்கிப் பசப்படைகிறாள். இவளைப் பிரியாதிருக்கும் மணவுறவினைப் பூண்டு இவளைக் காப்பாற்று.

குறிப்பு

பழகிவிட்டால் பகையும் பிரிவின்கண் பெருந்துன்பம் தரும். தலைவியோடு நன்கு பழகிய நீ இதனை மறந்துவிட்டாயோ?

உள்ளுறை

தினைப்புனத்துள் புகுந்து கதிரைத் தின்ன வந்த யானையைக் கண்ட குறவர், அதனை விரட்டுதற்குப் படையினராய்க் கூடி ஆர்த்தனர். இத்தொடர் வாயிலாய், தலைவன் களவொழுக்கத்தில் தலைவியைக் கூடவருவதைக் குறவர் அறிந்தால், தலைவனுக்குப் பெருந்தீங்கு விளைப்பர் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. அயல் - அருகே; கலித்த - செழித்த; மைஆர் - கரிய நிறமுள்ள; ஏனல் - தினைப்புனம்.
2. துணையின் தீர்ந்த - பெண்யானையைப் பிரிந்த; கடுங்கண் யானை - மிக்க சினம் பொருந்திய ஆண்யானை.
3. அணைய - சேர.
4. கணை - வில்; கிணை - கிணைப்பறை; புனை - கோத்த; கவண் - கல்லெறி கருவி.
5. விளியர் - கூவிப் பேரிரைச்சலிடுபவராய்; புறக்குடி - குடியிருப்புக்கு வெளியே; ஆர்க்கும் - ஆரவாரிக்கும்.
6. இன்னாது - துன்பமுடையது.
7. முகை - முல்லை அரும்பு; ஏர் - அழகு; இலங்கு - விளங்குகின்ற; எயிறு - பல்; இன்நகை - இனிய புன்முறுவல்; மடந்தை - பெண், தலைவி.

8. சுடர்புரை - சுடர் போன்ற; திரு - அழகிய; நுதல் - நெற்றி; பசப்ப - பசலை எய்த.
9. தொடர்பு - (இவளோடு கொண்ட) நட்பினை; யாங்கு விட்டனை - எவ்வாறு கைவிட்டனை?; நோகு - வருந்துகிறேன்.

தோழி கூற்று

நற்றிணை 195 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : நெய்தல்

கூற்று

களவின்கண் நெடுங்காலம் வந்தொழுக ஆற்றாளாயின தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவன் களவொழுக்கத்தில் தலைவியைக் கூடிப் பிரிந்தானேயன்றி, வரைவு மேற்கொள்ளவில்லை. அதைக் கண்டு வருந்திய தோழி அவனிடம் கூறியது.

அருளாய் ஆகலோ, கொடிதே! இருங்கழிக்
குருளை நீர்நாய் கொழுமீன் மாந்தி,
தில்லைஅம் பொதும்பில் பள்ளி கொள்ளும்
மெல்லம் புலம்ப! யான்கண் டிசினே;
கல்லென் புள்ளின் கானல்அம் தொண்டி,
நெல்அரி தொழுவர் கூர்வாள் உற்றென,
பல்இதழ் தயங்கிய கூம்பா நெய்தல்
நீர்அலைத் தோற்றம் போல,
ஈரிய கலுழும்நீ நயந்தோள் கண்ணே.

தெளிவுரை

கரிய உப்பங்கழியில் நீர்நாயின் இளங்குட்டி கொழுத்த மீன்களைத் தின்று, தில்லைமரப் பொந்தில் படுத்துறங்கும். இத்தகைய காட்சி கொண்டுள்ள கடற்கரை நாட்டுக்குத் தலைவனே! ‘கல்’ என ஆரவாரிக்கும் புள்ளினங்களைக் கொண்ட கடற்கரைச்சோலைகளைக் கொண்டது, தொண்டி நகரம். அங்குள்ள வயலில் நெற்கதிரறுக்கும் உழவருடைய கூரிய

வாள் அறுத்தலால், பல இதழ்களைக் கொண்டு விரிந்திருக்கும் நெய்தல் மலர்கள் நீரிலே கிடந்து அலைகின்ற தோற்றத்தினைப் போல, நீ விரும்பும் தலைவியின் கண்களும் ஈரம் கசியக் கலங்கி அழும். அதனை நான் கண்டிருக்கிறேன். நீ அவள் அழாதிருக்க அருள் செய்யாதிருக்கிறாய். இது மிகவும் கொடியது.

கருத்து

தலைவ! தலைவியை மணம் கொண்டு உன்னுடன் உன் ஊர்க்கு அழைத்துச் செல்லாவிடின் அவள் அழுகை நிற்காது.

விளக்கம்

"நெய்தல்நிலத் தலைவனே! பேரருளாளனாகிய நீ இப்போது அருளில்லாது இருத்தல் கொடுமையானது. நெல்வயலில் மலர்ந் திருக்கும் நெய்தல், நெல்லை அரிவோருடைய அரிவாள் படுதலால் நனைந்து நீர் துளிப்பதுபோல, உன்னை விரும்பி வாழும் தலைவியின் கண்கள் அழுகையால் நனைந்து, நீர் துளிர்த்தவண்ணம் இருக்கின்றன. அதனைக் கண்டும் நீ அவளுக்கு அருளாதிருப்பது நன்றன்று" என்று தோழி கூறினாள்.

இறைச்சி

தொண்டிக் கடற்கரைச்சோலையில் புள்ளினம் ஒலிக்கு மென்றது, ஊராரெடுத்த பழிச்சொல் ஒலிக்கும் என்பதாம்.

உள்ளுறை

நீர்நாய்க்குட்டி தன் விருப்பத்தின்படி மீனைத் தின்று கவலை யின்றிப் பொந்துகளில் தூங்கும். இத்தொடர் வாயிலாய், தலைவன் இரவெல்லாம் தலைவியின் நலன் நுகர்ந்து, மணம் புரிந்து கொள்ள வேண்டும் என்னும் கவலை இன்றி, தன் ஊர் சென்று, தன் இல்லத்தில் உறங்கிக் கொண்டிருக்கிறான் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. அருளாய் ஆகல் - அருளாதிருப்பது.
2. குருளை - குட்டி; மாந்தி - தின்று.

3. தில்லை - தில்லை மரம்; பொதும்பு - பொந்து; பள்ளி கொள்ளும் - தூங்கும்.
4. கண்டிசின் - கண்டிருக்கிறேன்.
5. 'கல்' என் - கல்லென ஆரவாரிக்கும்; புள் - பறவைகள்; தொண்டி - சேரர்களின் துறைமுக நகரம்.
6. தொழுவர் - உழவர்; உற்றென - அறுத்தலால்.
7. தயங்கல் - அசையும்; கூம்பா - குவியாத, விரிந்திருக்கும்.
8. நீர் அலை - நீரிலே அலைகின்ற; தோற்றம் - காட்சி.
9. ஈரிய - ஈரம் கசிய; கலுழும் - நீர் சொரியும்; நயந்தோள் - காதலிப்பவள்.

தோழி கூற்று

கலித்தொகை 125 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரைவு நீட, ஆற்றாத தலைமகள் நிலைமை தலைமகற்குத் தோழி கூறி, அவனை நெருங்கி, வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவிக்காகத் தலைவனிடம் சென்று, அவளை மணந்துகொள்ளுமாறு தோழி வற்புறுத்திக் கூறியது.

'கண்டவர் இல்என, உலகத்துள் உணராதார்,
தங்காது தகைவுஇன்றித் தாம்செய்யும் வினைகளுள்,
நெஞ்சுஅறிந்த கொடியவை மறைப்பினும், அறிபவர்
நெஞ்சத்துக் குறுகிய கரிஇல்லை ஆகலின்',
வண்பரி நவின்ற வயமான் செல்வ,
நன்குஅதை அறியினும், நயன்இல்லா நாட்டத்தால்,
'அன்பிலை' எனவந்து கழறுவல்; ஐய!கேள்:

மகிழ்செய் தேமொழித் தொய்யில்சூழ் இளமுலை
முகிழ்செய முள்கிய தொடர்பு,அவள் உண்கண்
அவிழ்பனி உறைப்பவும், நல்காது விடுவாய்!
இமிழ்திரைக் கொண்க! கொடியை, காண்நீ.

இலங்குஎர் எல்வளை ஏர்தழை தைஇ,
நலம்செல நல்கிய தொடர்பு,அவள் சாஅய்ப்
புலந்துஅழப் புல்லாது விடுவாய்!
இலங்குநீர்ச் சேர்ப்ப! கொடியை காண்நீ.

இன்மணிச் சிலம்பின் சில்மொழி ஐம்பால்
பின்னொடு கெழீஇய தடவுஅரவு அல்குல்
நுண்வரி வாட, வாராது விடுவாய்!
தண்ணந் துறைவ! தகாஅய் காண்நீ.

எனவாங்கு-
அனையள்என்று, அளிமதி, பெரும! நின்இன்று
இறைவரை நில்லா வளையள் இவட்கு,இனிப்
பிறையேர் சுடர்நுதல் பசலை
மறையச் செல்லும்,நீ மணந்தனை விடினே.

தெளிவுரை

“*வளமான பயிற்சி நிரம்பிய திறமை வாய்ந்த குதிரைகளைக் கொண்ட தலைவனே! இவ்வுலகில் அறியாதவர்கள், தாம் செய்யும் செய்கையைக் காண்பவர் இலர் என்று கருதித் தீவினைகளைச் செய்கின்றனர். நெஞ்சறிந்து செய்த அக்கொடிய செயல்களைப் பிறர் அறியாமல் அவர்கள் மறைக்கலாம். ஆயினும், அவர்கள் நெஞ்சத்தைவிட நெருங்கிய சான்று வேறு இல்லை. இதனை நீ நன்கு அறிவாய்; என்றாலும், சிறப்பில்லாத சிந்தனை காரணமாய், உன்னை அன்பில்லாதவன் என்று கூற இங்கு வந்துள்ளேன்.*

“*ஒலிக்கின்ற அலையினைக் கொண்ட கடல்துறைக்குத் தலைவனே! மகிழ்ச்சி விளைவிக்கும் இனிய பேச்சினைக் கொண்ட இவளுக்குத் (தலைவிக்குத்) தொய்யில் எழுதப்பட்ட மார்பகங்கள் அரும்பத் தொடங்கிய அந்த இளம் பருவத்திலேயே இவளோடு நீ இணைந்தாய்! அந்த உறவைத் தொடர்ந்து கொள்ளாமல், இவள் கண்ணீர் சிந்த இப்போது அருள் செய்யாது கைவிடுதலால், நீ அன்பில்லாத கொடியவன் ஆகின்றாய்!*

"நெய்தல்நிலத் தலைவனே! ஒளி பொருந்திய வளையலணிந்த இவளுக்குத் தழையுடை அணிவித்து, இவள் அழகு மென்மேலும் வளருமாறு இவளோடு நீ இணைந்தாய்! அந்த உறவைத் தொடராமையால் இவள் உன் பிரிவினால் வாடி, உடல் மெலிவுற அழுமாறு இப்போது நீ சேராது விடுதலால், நீ அன்பில்லாத கொடியவன் ஆகின்றாய்!

"குளிர்ச்சி பொருந்திய கடல்துறைத் தலைவனே! இனிய ஒலி செய்யும் சிலம்பணிந்து, சில சொற்களே பேசும் இவள் கூந்தல் வாரி முடிக்குமளவிலான இளமைப்பருவத்திலேயே இவளோடு இணைந்தாய்! அந்த உறவு தொடராதவாறு, பாம்பின் படம் போன்றுள்ள அழகிய இவளது அல்குலின் நுண்ணிய வரிகள் வாடுமாறு நீ பல நாள் வாராமல் இருந்துவிட்டாய். ஆதலால், நீ தகுதிப்பாடு கொண்டவன் அல்லன்!

"பெரும! தலைவி இன்ன தன்மையள் ஆயினள் என்று அறிந்து அருள் செய். நீ இவளை வரைந்துகொண்டு தழுவினால் இவள் முன் கையில் உள்ள வளையல் கழன்று விழாமல் இருக்கும். பிறை போன்ற இவள் நெற்றியில் படர்ந்திருக்கும் பசலை மறைந்துவிடும்" என்று தோழி, தலைவனிடம் கூறினாள்.

கருத்து

தலைவ! முன்கை வளையல் கழலாதிருக்கவும், பிறைநுதல் பசலை கொள்ளாதிருக்கவும் நீ தலைவியை மணந்து அருள் செய்.

விளக்கம்

இளமைக்காலத்திலேயே தலைவியுடன் தொடர்பு கொண்ட தலைவன், அவளை மணந்துகொள்ளாது களவொழுக்கத்தையே மேற்கொண்டிருந்தான். அவனை எண்ணி எண்ணித் தலைவி மெலிந்துகொண்டிருந்தாள். அவள் நெற்றியில் பசலை படரத் தொடங்கியது. முன் கை இளைத்ததால் கை வளைகள் கழன்று விழத் தொடங்கின. தலைவியின் துன்பத்தை உணர்ந்த தோழி, தலைவனிடம் சென்று, அவனுக்கு அறிவுரை கூறி, விரைவில் தலைவியை அவன் மணந்துகொண்டால்தான் அவள் உயிர் வாழ்வாள் என்று வற்புறுத்திக் கூறுகிறாள்.

குறிப்பு

யாரும் காணாத நிலையில் தவறு செய்தாலும் மனச்சாட்சி உறுத்தும் என்பது சிறந்த குறிப்பு.

சொற்பொருள்

2. தங்காது - தாமே உணர்ந்து கைவிடாது; தகைவு - தடுப்பார்.
4. குறுகிய - அணுக்கமான; கரி - சான்று, சாட்சி.
5. வண்பரி - வளமான நடை வேகம்; நவின்ற - பழகிய; வயமான் - வலிமை கொண்ட குதிரை.
6. நயன் இல்லா - சிறப்பில்லாத; நாட்டம் - ஆராய்ச்சி.
7. கழறுதல் - இடித்துரைத்தல்.
8. தேமொழி - இனிய பேச்சு; தொய்யில் - சாந்தினால் உடலில் இடும் கோலம்.
9. முகிழ் செய - தோன்ற; முள்கிய - கூடிய; தொடர்பு - காதல் உறவு.
10. அவிழ் பனி - சொரியும் கண்ணீர்; உறைப்ப - துளித்துளியாய் விழ; நல்குதல் - அருளுதல்.
11. இமிழ் - ஒலிக்கும்; கொண்க - தலைவ!
12. இலங்கு ஏர் - விளங்குகின்ற அழகு; தழை - தழையாடை; தைஇ - அணிவித்து.
13. நலம் செல - அழகு கெட; சாஅய் - மெலிந்து.
14. புலந்து - தனிமையுற்று; புல்லுதல் - தழுவுதல்.
15. சேர்ப்பன் - நெய்தல்நிலத் தலைவன்.
16. மணி - பரல்; சில்மொழி - சில சொற்கள்; ஐம்பால் - கூந்தல்.
17. பின்னொடு - வாரி விடுதல்; தட - பெருமை.
21. அளிமதி - அருள் செய்.
22. இறை - முன் கை; வரை - எல்லை; வளையள் - வளையலைக் கொண்டவள்.
24. மறைய - நீங்க; மணந்தனை விடின் திருமணம் செய்துகொண்டால்.

தோழி கூற்று

ஐந்திணை எழுபது 10 **மூவாதியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி தலைமகனைக் கண்டு வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவியை மணந்துகொள்ளுமாறு தலைவனிடம் தோழி கேட்டுக் கொள்வது.

பிரைசம் கொளவீழ்ந்த தீந்தேன் இறாஅல்
மரையான் குழவி குளம்பில் துகைக்கும்
வரையக நாட! வரையாய் வரின்,எம்
நிரைதொடி வாழ்தல் இலள்.

தெளிவுரை

"வேடர்கள் கவர்ந்து சென்றபோது கீழே நழுவி விழுந்த தேனடைகளை மான் கன்றுகள் தம் கால் குளம்புகளால் சிதைக்கும் மலைநாட்டுத் தலைவனே! தலைவியை நீ விரைவில் மணந்துகொள். அவ்வாறன்றிக் களவுப்புணர்ச்சியை நீட்டித்தா யாயின், எம் தலைவி துன்பத்தினால் இறந்துபடவும் நேரும்" என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

தலைவ! களவுப்புணர்ச்சியை நீட்டித்தாயாயின், அது தலைவியின் இறப்புக்குக் காரணமாய் அமைந்துவிடக்கூடுமாதலால் கால இடைவெளி யின்றி மணந்துகொள்.

சொற்பொருள்

1. பிரைசம் - பிரசம் - தேன்; கொள - (வேடுவர்) கைக்கொள்ள; வீழ்ந்த - நழுவி வீழ்ந்து கிடக்கும்; தீந்தேன் - இனிக்கும் தேன்; இறால் - தேனடை.
2. மரையான் - மான்கள்; குழவி - கன்று; குளம்பு - காற்குளம்பு; துகைக்கும் - மிதிக்கும்.
3. வரை - மலை; வரையாய் - மணந்துகொள்; வரின் - வரையாது களவுப்புணர்ச்சியையே மேற்கொண்டிருப்பாயாயின்.

4. நிரை தொடி - வரிசையாய் வளையலணிந்துள்ள தலைவி; வாழ்தல் இலள் - உயிரோடிராள்.

தோழி கூற்று

நற்றிணை 19 **நக்கண்ணையார்**

திணை : நெய்தல்

கூற்று

புணர்ந்து நீங்கிய தலைமகனைத் தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவியைக் கூடி இன்புற்ற பின்னர் அவ்விடம் விட்டு நீங்குகின்ற தலைவனைத் தோழி கண்டு, தலைவியை விரைவிலே மணந்துகொள்ளுமாறு கூறியது.

இறவுப்புறத்து அன்ன பிணர்படு தடவுமுதல்
சுறவுக்கோட் டன்ன முள்இலைத் தாழை,
பெருங்களிற்று மருப்பின் அன்ன அரும்புமுதிர்பு,
நல்மான் உழையின் வேறுபடத் தோன்றி,
விழவுக்களம் கமழும் உரவுநீர்ச் சேர்ப்ப!
இனமணி நெடுந்தேர் பாகன் இயக்கச்
செலீஇய, சேறி ஆயின், இவளே
வருவை ஆகிய சின்னாள்
வாழாள் ஆதல்நற்கு அறிந்தனை சென்மே!

தெளிவுரை

இறாமீனின் முதுகு போன்று சொர சொரப்பினைக் கொண்ட அடியினைப் பெற்றது, சுறாமீன். அச்சுறாமீனின் கொம்பு போன்ற முள்களைக் கொண்ட மடல் உடையது, தாழை. அத்தாழையின் மடலிடையே யானையின் கொம்பு போன்று வெளிதாய் நீண்ட அரும்பு தோன்றும். அவ்வரும்பு முதிர்ந்து, நல்ல பெண்மான் தலை சாய்த்து நிற்றல்போல நிற்கும். பின்னர்த் தரையில் விழுந்து உழைமானின் ஆணாகிய இரலையின் கொம்பு போலத் தோன்றி விழா எடுக்கும் இடமெங்கும் மணம் வீசி நிற்கும். இத்தகைய காட்சி பொருந்திய பரந்த கடல் நிலத்தைக் கொண்ட தலைவனே! மணிகள் மிகுதியாய்க் கட்டப் பெற்ற

உன்னுடைய நெடிய தேரினைப் பாகன் செலுத்த, நீயும் செல்லத் தொடங்கி விட்டாய்! ஆனால், நீ சில நாள் கழித்து வருவதாய்க் குறிப்பிட்டுச் சொல்லும் அக்காலம் வரை இவள் உயிர் வாழ மாட்டாள் என்பதைத் தெளிவாய்த் தெரிந்துகொண்டு செல்!

கருத்து

கடல்நிலத் தலைவனே! தலைவி உன்னைப் பிரிந்து சில நாள் அளவும் உயிர் வாழாள்; ஆதலின், அவளை மணந்து அருள்க!

உள்ளுறை

தாழை அரும்பு முதிர்ந்து, உதிர்ந்து எங்ஙனும் மணம் பரப்பும். இத்தொடர்மூலம், தலைவன், தலைவி ஆகியோரின் களவொழுக்கமும் எவ்விடத்தும் பரவி, அலர் கூறும் பெண்டிர் வாய்ப்பட்டுப் பழிச்சொல் எங்கும் பரவி நிற்பதாயிற்று என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

புலால் நாற்றம் வீசும் கடற்கரைப் பரப்பினை விழாவெடுக்கும் இடம்போல மாற்றியமைக்கிறது, தாழை மலரின் மணம். இத் தொடர் வாயிலாய், பழிச்சொல் மிகுந்த அவ்வூரில் தலைவன் மணம் பேசி வரும் செய்தி பரவுமாயின், அது தலைவிக்கு மிகவும் இனிமை வாய்ந்ததாகும் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப் படுகிறது.

சொற்பொருள்

1. இறவு - இறா மீன்; புறம் - முதுகு; பிணர் - சொரசொரப்பு; தடவு முதல் - பெரிய அடிப்பகுதி.
2. சுறவு - சுறா மீன்; கோடு - கொம்பு.
3. மருப்பு - தந்தம்; முதிர்பு - முதிர்ந்து.
4. உழை - ஆண்மான்.
5. விழவுக்களம் - விழா எடுக்கும் இடம்; உரவுநீர் - கடல்; சேர்ப்ப - தலைவ!
6. இனமணி - மிகுந்த மணிகள்; இயக்க - ஓட்ட.
7. செலீஇய - உன் ஊர்க்குச் செல்வதற்காக; சேறிஆயின் - பிரிந்து போகின்றாயாதலால்; இவளே - தலைவி.
8. வருவை ஆகிய சின்னாள் - நீ வருவதாய்க் குறிப்பிட்டுச் சொல்லும் சில நாள்.
9. வாழாள் ஆதல் - வாழ மாட்டாள் என்பதனை; நற்கு - நன்கு; சென்ம் - செல்.

தோழி கூற்று

நற்றிணை 93 **மலையனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவியை மணக்கக் கருதாதவனாய்ப் பலகாலும் பகற்குறியே வந்து தலைவியைக் கூடி மகிழும் தலைவனை நோக்கித் தலைவியை விரைந்து மணந்துகொள்ளுமாறு தோழி கூறியது.

'பிரசம் தூங்க, பெரும்பழம் துணர,
வரைவெள் அருவி மாலையின் இழிதர,
கூலம் எல்லாம் புலம்புக, நாளும்
மல்லற்று அம்மஇம் மலைகெழு வெற்பு!'எனப்
பிரிந்தோர் இரங்கும் பெருங்கல் நாட!
செல்கம் எழுமோ; சிறக்கநின் ஊழி!
மருங்கு மறைத்த திருந்துஇழைப் பணைத்தோள்,
நல்கூர் நுசுப்பின் மெல்இயல், குறுமகள்
பூண்தாழ் ஆகம் நாண்அட வருந்திய
பழங்கண் மாமையும் உடைய; தழங்குகுரல்
மயிர்க்கண் முரசின் ஓரும்முன்
உயிர்க்குறி எதிர்ப்பை, பெறல்அருங் குரைத்தே.

தெளிவுரை

கிளைதோறும் தேனிறால்கள் தொங்கும்; பழ வகைகள் குலைகுலையாய்ப் பழுத்திருக்கும்; வெண்ணிற அருவி மலையிலிருந்து மாலைபோல இறங்கிவரும்; பல்வேறு மலைத் தானியங்கள் மலைச்சாரல் கொல்லைகளில் விதைக்கப்பெற்று விளைந்து பொலியும்; குன்றங்கள் நிறைந்த இம்மலை எந்நாளும் இத்தகைய வளப்பத்தைக் கொண்டதால், இம்மலையை விட்டுப் பிரிந்து செல்பவர் (பிரிந்து செல்ல வேண்டியிருக்கிறதே என) வருந்திக் கூறுவர். இத்தகைய மிகுந்த வளமுள்ள மலை நாட்டுக்குத் தலைவனே! நாங்கள் எம் ஊருக்குச் செல்லப் புறப்படுகின்றோம்; எமக்கு அருள் செய்த நீ வாழ்க!

பக்கங்கள் மறையத் திருத்தமான அணிகலன்களை அணிந்திருக்கும் இத்தலைவி, பருத்த தோள்களையும், நுண்ணிய இடையினையும், மெல்லிய சாயலையும் கொண்டவள். பூண்கள் அணிந்த இவள் இப்பொழுது நாணத்தால் விளைந்த உள்ளச் சுருக்கமும், மேனியில் மாந்தளிர் போலும் மாமையும் பெற்றுப் பொலிகின்றாள். நீ சென்றதும் தன் மாமையை இழந்து பசப்பூரப் பெறுவாள். அது, பின்னர் நின் மணமுரசு கேட்கு மிடத்துத்தான் மீளப் பெறப்படும். நீ இவளை வரையாது நீட்டிப்பாயேல் நீங்கும் இவள் உயிரைக் குறியெதிர்ப்பைப்போல உன் மணமுரசால் பெற முடியாது.

கருத்து

'மலைநாட! நீ மணமுரசோடு வந்து தலைவியை அடையாயாயின் அவள் வாழ்வது அரிது.'

விளக்கம்

"தலைவ! நீ கூடியிருக்கும் தலைவி இப்போது தன் மேனி எங்கும் மாமை நிறம் பெற்றுப் பொலிகின்றாள். நீ பிரிந்ததும் இம்மாமை நிறத்தை இழந்து பசப்புறுவாள். உன் மணமுரசம் கேட்கும்பொழுது, இழந்த மாமை நிறத்தைத் திரும்பப் பெறுவாள். இவளை வரையாது நீட்டிப்பாயாகில், நீங்கும் இவள் உயிரை உன் மணமுரசால் திரும்பப் பெற இயலாது என்பதை நீ உணர்" எனத் தோழி தலைவனிடம் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. பிரசம் - தேனிறால்; தூங்க - தொங்க; துணர - பழுக்க.
2. மாலையின் - மாலையைப் போல; இழிதர - கீழிறங்க.
3. கூலம் - கூல வகைகள்; புலம் புக - நிலத்தில் விதைக்கப்பட.
4. மல்லல் - வளப்பம்.
5. பிரிந்தோர் - (வளமிக்க நாட்டை விட்டுப்) பிரிந்து செல்வோர்.
6. செல்கம் - (எம் சிறுகுடிக்குச்) செல்வதற்காக எழுகின்றோம்.
7. மருங்கு - பக்கம்; திருந்து இழை - திருத்தமான அணிகலன்; பணை - பருத்த.
8. நல்கூர் - சுருங்கிய; நுசுப்பு - இடை; மெல் இயல் - மெல்லிய சாயல்; குறுமகள் - இளைய மகள்.
9. பூண்தாழ் - பூணாரம் அணிந்த; ஆகம் - மார்பு.

10. மாமை - மாந்தளிர் போன்ற நிறம்; தழங்கு குரல் - முழங்கும் ஓசை.
11. மயிர்க்கண் முரசம் - மயிர் சீவாது போர்த்த கண்ணினைக் கொண்ட மணமுரசம்.
12. உயிர் - இவள் உயிர்; குறி எதிர்ப்பை - வாங்கியதை வாங்கியவாறே திருப்பிக் கொடுத்தல்; பெறல் அருங்குரைத்து - பெறுதல் அரிது.

தோழி கூற்று

குறுந்தொகை 18 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி வந்து நீங்கும் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டு, வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் இரவுக்குறி பெற்றுக் கூடிவரும் தலைவன், விரைந்து வந்து தலைவியை முறைப்படி மணந்து, கற்பொழுக்கத்தில் ஈடுபடல் வேண்டும் எனக் கருதிய தோழி, தலைவனிடம் கூறியது.

வேரல் வேலி வேர்கோட் பலவின்
சாரல் நாட! செவ்வியை ஆகுமதி!
யார்அஃது அறிந்திசி னோரே? சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கு,இவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே!

தெளிவுரை

சிறு மூங்கில்களையே உயிர்வேலியாய்க் கொண்ட மலைச் சாரலிலே, வேர்களில் குலைகளைக் கொண்ட பலா மரங்கள் மிகுந்துள்ள நாட்டுக்குத் தலைவனே! பக்க மலையிலுள்ள பலாவின் வலிமையில்லாத சிறிய கிளைகளில் பெரிய பழங்கள் தொங்குகின்றன. அதுபோல, இவளது உயிர் மிகவும் சிறியது. அது தாங்கும் காம உணர்வோ மிகப்பெரியது. பெருங் காமமாகிய கனியின் பாரம் தாங்காது அவள் உயிர்க்கொம்பு முரிந்து விழுகின்ற நேரத்தை அறிந்தவர் யார்? அதனால், நீ அவளை மணந்து ஏந்திக்கொள்ளும் செவ்வி உடையவன் ஆகுக.

கருத்து

'தலைவ! தலைவியைக் காலந்தாழ்த்தாமல் மணந்துகொள். இன்றேல், பெரிய ஏமாற்றம் நேர்ந்தாலும் நேரலாம்.'

விளக்கம்

என் தலைவியின் உயிர், பலா மரத்தின் கிளையைப் போல மிகவும் சிறியது; அவள் கொண்டிருக்கும் காதலோ, அக்கிளையில் தொங்கிக்கொண்டிருக்கும் பெரிய பழத்தினும் மிகப் பெரியது. பழத்தின் பாரம் தாங்காமல் கிளை முரிய நேரலாம். அதேபோல, தலைவியின் காமச்சுமை தாங்க இயலாது அவள் உயிர் அழியலாம். என்ன நிகழும் என்பதை எவரும் அறிய இயலாது. ஆதலின், விரைவில் மணம் செய்துகொள்.

சொற்பொருள்

1. வேரல் - சிறு மூங்கில்; வேலி - வேலியாய்க் கொண்ட; வேர்கோள் பலா - வேரில் குலைகளைக் கொண்ட பலா மரங்கள்.
2. செவ்வியை ஆகுமதி - மணம் புரிந்துகொள்ளும் செம்மையான செயலை மேற்கொள்.
3. யார் அஃது அறிந்திசினோர் - யார்தான் பின்னால் நிகழவிருப்பதை அறிந்தவர்கள்.
4. சிறுகோடு - சிறிய கிளை; தூங்கியாங்கு - தொங்குவதுபோல.
5. தவ - மிகவும்.

தோழி கூற்று

நற்றிணை 203 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய் வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவன் சிறைப்புறத்தானாக அவன் கேட்டுணருமாறு தோழி, தலைவியை நோக்கி வரைவு குறித்துக் கூறியது.

முழங்குதிரை கொழீஇய மூரி எக்கர்,
தடந்தாள் தாழை முள்ளுடை நெடுந்தோட்டு
அகமடல் பொதுளிய முகைமுதிர் வான்பூங்
கோடுவார்ந் தன்ன வெண்பூத் தாழை
எறிதிரை உதைத்தலின், பொங்கித் தாதுசோர்பு,
சிறுகுடிப் பாக்கத்து மறுகுபுலால் மறுக்கும்
மணம்கமழ் கானல் இயைந்தநம் கேண்மை
ஒருநாள் பிரியினும் உய்வுஅரிது என்னாது,
கதழ்பரி நெடுந்தேர் வரவுஆண்டு அழுங்கச்
செய்ததன் தப்பல் அன்றியும்,
உயவுப்புணர்ந் தன்றுஇவ் அழுங்கல் ஊரே.

தெளிவுரை

"ஒலிக்கின்ற அலைகளால் கொழிக்கப்பெற்றுச் சேர்க்கப் பட்ட மணல்மேட்டில் வளைந்த அடியைக் கொண்ட தாழை மரம் நிற்கின்றது. அத்தாழையில் அமைந்த நீண்ட அகமடல் தொகுதியில் தோன்றிய அரும்புகள் முதிர்ந்து, சங்கினை நீட்டி வைத்தது போன்ற வெண்மையான பூக்களாய் விளங்குகின்றன. கடல் அலை மோதுதலாலே தாழைப்பூக்கள் அதிர்ந்து மகரந்தப் பொடியினை உதிர்த்து நறுமணம் எழுப்புகின்றன. அந்த மணம், சிறிய குடியிருப்புகளைக் கொண்ட பாக்கத்துத் தெருக்களிலுள்ள புலால் நாற்றத்தை நீக்கும். அத்தகைய தாழை மணம் கமழ்கின்ற கானற்சோலையிலே ஏற்பட்டது, தலைவனோடு கொண்ட காதல் உறவு. இவ்வுறவானது ஒரு நாள் தலைவனைக் காணவில்லையெனின் உயிர் தாங்கி வாழ்தல் அரிது என்னும் தன்மையதாய் உள்ளது. இந்த உண்மையை உணராமல் ஊரார் பேசிய பழிச் சொற்கள், தலைவனைக் குதிரை பூட்டிய தேரில் இங்கு வாராமல் இருக்குமாறு செய்துவிட்டன. அது மட்டுமன்றிப் பழி தூற்றும் இவ்வூரவர், அவனது பிரிவால் நாம் மெலிவுற்றதைக் கண்டு வருத்தம் மேலிட்டு இரக்கம் கொள்கின்றனர். இஃது எதனால் தலைவி?" என்று தோழி தலைவியைக் கேட்கிறாள்.

கருத்து

தலைவ! ஒரு நாள் பிரியினும் தலைவி பொறாள்; நீ வரைந்து அருள் செய்யாவிடின், இவள் இறந்துபடுவாள்.

விளக்கம்

"ஒலிக்கின்ற அலை; அதனால் குவிக்கப்பட்ட மணல்மேடு; அம்மேட்டில் வளர்ந்துள்ள தாழை; அதில் சங்கு போன்ற வெண்மையான பூ; அப்பூவின் பொடிகள் காற்றில் கலந்து சிறுகுடியிருப்பின் புலால் நாற்றத்தைப் போக்கும். அத்தகைய சோலையில் நம் காதலனுடன் உறவு கொண்டோம்! ஒரு நாள் பிரியினும் நம் உயிர் பிரியும் என்னும் தன்மை கொண்டது, அவ்வுறவு. இவ்வூரார் பழி கூறி, நம் தலைவன் தேரில் இங்கு வாராமல் இருக்குமாறு செய்துவிட்டனர். ஆனால், நம் மெலிவு கண்டு அவர்கள் இரக்கமும் கொள்கின்றனர். ஏன் இவ்வாறு செயல்படுகின்றனர்?" எனத் தலைவியிடம் கூறுவதுபோல, தலைவனுக்குச் செய்தியை உணர்த்துகிறாள், தோழி.

உள்ளுறை உவமம்

தாழையின் வெண் பூ, அலை பொங்கி மோதுதலால் தாதினைச் சொரிந்து சிறுகுடிப்பாக்கத்தில் நிலவும் புலால் நாற்றத்தைப் போக்கும் என்பதன் உள்ளுறைப் பொருள், தலைவன் உரிய வரைபொருளைத் தலைவியின் பெற்றோர்க்குத் தந்து அவளை மணந்து கொள்வதன்மூலம், தலைவன் களவொழுக்கத்தை நீட்டித்ததால் உண்டான ஊரலரைப் போக்குதல் வேண்டும் என்பதாம்!

சொற்பொருள்

1. கொழீஇய - கொழித்திடப்பட்ட; மூரி - பெரிய.
2. தடந்தாள் - வளைந்த அடி; நெடுந்தோடு - நீண்ட ஓலை.
3. பொதுளிய - தோன்றிய; முகைமுதிர் - அரும்பு முற்றிய; வான்பூ - வெண்மையான பூ.
4. கோடு - சங்கு; வார்ந்தன்ன - நீட்டி வைத்தது போன்ற.
5. எறிதிரை - காற்றால் உந்தப்பட்ட அலை; உதைத்தலின் - மோதுதலால்; பொங்கி - அதிர்ந்து: தாது சோர்பு - மகரந்தத்தூள் உதிர்ந்து.
6. மறுகு - தெரு; புலால் - புலால் நாற்றம்; மறுக்கும் - நீக்கும்.
7. இயைந்த - உண்டாகிய, ஏற்பட்ட; கேண்மை - உறவு, நட்பு.
8. உய்வு அரிது - பிழைத்தல் இயலாது, உயிர் வாழ்தல் அரிது.

9. கதழ் - விரைவு; பரி - குதிரை; வரவு - வருவதை; அழுங்கச் செய்த - தவறச்செய்த, வாராமல் இருக்கச்செய்த.
10. தப்பல் - தவறு.
11. உயவு - வருத்தம்; புணர்ந்தன்று - இரக்கம் கொள்கின்றனர்; அழுங்கல் ஊர் - ஆரவாரம் மிக்க ஊர்.

தோழி கூற்று

நற்றிணை 227 **பூதன்தேவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரையாது நெடுங்காலம் வந்தொழுகத் தோழி தலைமகனை வரைவுமுடுகச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியை மணம் செய்துகொள்ளாது களவுப்புணர்ச்சியிலேயே கருத்தைச் செலுத்தி வரும் தலைவனிடம், தோழி தலைவியின் நிலையை எடுத்துக் கூறி அவளை விரைவில் வந்து மணந்துகொள்ளுமாறு கூறியது.

அறிந்தோர் 'அறன்இலர்' என்றலின் சிறந்த,
இன்உயிர் கழியினும் நனிஇன் னாதே;
புன்னைஅம் கானல் புணர்குறி வாய்த்த
பின்ஈர் ஓதிஎன் தோழிக்கு, அன்னோ!
படுமணி யானைப் பசும்பூண் சோழர்
கொடிநுடங்கு மறுகின் ஆர்க்காட்டு ஆங்கண்,
கள்ளுடைத் தடவில் புள்ஒலித்து ஓவாத்
தேர்வழங்கு தெருவின் அன்ன,
கௌவை ஆகின்றது ஐயநின் அருளே.

தெளிவுரை

ஐயனே! புன்னை மரங்கள் செறிந்த அழகிய கானற்சோலையில் நீ குறித்தபடியே குறியிடத்து வந்து நின்று, பின்னலிடப்பட்ட அழகிய கூந்தலைக் கொண்ட தலைவி உன்னை இன்புறுத்தினள். ஐயோ! நீ அவளுக்குச் செய்த அருள்

அவளுக்குப் பழிச்சொல்லாய் அமைந்துவிட்டது. ஒலிக்கின்ற மணியணிந்த யானையையும், பசும்பொன்னாலான அணிகலன் களையும் கொண்டவர், சோழர். கொடிகள் அசைந்தாடும் தெருக்களுள்ள ஆர்க்காடு என்னும் பேரூர் அவர்கட்குரியது. அவ்வூரில் கள்குடங்களில் வண்டுகள் மொய்த்து ஓசை எழுப்பும். தெருக்களில் இடையறாது தேர்கள் ஓடிக்கொண்டிருக்கும் ஆரவாரம் எழும். உன் நட்பால் தலைவிபற்றி எழுந்த பழிச் சொற்கள் இத்தகைய ஓசையையும் ஆரவாரத்தையும் கொண் டனவாயிருக்கின்றன. 'அறிவுடையவர் எல்லாம் அறநெறியில் நிற்பவர் அல்லர்' என்று பலரும் கூறுவர். அதுதான் உன் நிலையும் என்பதால், என் தலைவியின் உயிர் நீங்கியதாகும். அவள் இறந்தால் அப்பழி உனக்கும் துன்பம் தரும் என்பதை யாயினும் அறிக!

கருத்து

தலைவ! தலைவி இறந்துபடாதவாறும், அலர் நிற்குமாறும் வரைந்து அவளை வாழச்செய்.

விளக்கம்

"ஆர்க்காட்டுத் தெருக்களிலே கள்பானையில் மொய்க்கும் வண்டுகளும், ஓடும் தேர்களும் உண்டாக்கும் ஆரவாரத்தைப் போல உங்கள் களவொழுக்கம் பற்றிய பழிச்சொற்களாலான பூசலும் நீங்காது மிகுவதாயிற்று. மேலும், தலைவி தன் காதலர் அறனிலர் எனப் பிறர் கூறக் கேட்டலின், அது பொறாது இறந்துபடுவள். அலரேயன்றி அப்பழியும் உன்னை வந்து சூழும்" எனக் கூறித் தோழி தலைவனை வரைவு கொள்ளுமாறு விரைவுபடுத்தினள்.

சொற்பொருள்

1. அறிந்தோர் - அறிவுடையவர் (என்போர் எல்லாம்); அறன் இலர் - அறநெறியில் வாழ்பவர் அல்லர்; என்றலின் - என்று கூறுவதால்.
2. நனி இன்னாது - பெரும் தீமையாகும்.
3. புணர்குறி - சேர்தற்கு என்று குறித்த குறியிடம்.
4. பின் ஈர் ஓதி - பின்னலிடப்பட்ட குளிர்ச்சி பொருந்திய கூந்தல்; அன்னோ - ஐயோ.
5. படுமணி - ஒலிக்கும் மணி; பசும்பூண் - பசும் பொன்னாலான அணிகலன்கள்.

6. நுடங்கும் - அசைந்தாடும்; மறுகு - தெரு; ஆர்க்காடு - ஓர் ஊர்; ஆங்கண் - அங்கே.
7. தடவில் - குடங்களில்; புள் - வண்டு; ஓவா - இடையறாது, ஓயாது.
8. வழங்கும் - இயங்கும்.
9. கௌவை - பழிச்சொல்.

தோழி கூற்று

குறுந்தொகை 55 **நெய்தற் கார்க்கியர்**

திணை : நெய்தல்

கூற்று

'வரைவொடு புகுதானேல் இவள் இறந்துபடும்' எனத் தோழி, தலைமகன் சிறைப்புறத்தானாகச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைந்துகொள்ளாது களவொழுக்கத்தையே நீட்டித்திருந்த காலத்து, ஒருநாள் சிறைப்புறத்தானாக அவன் நின்றபோது, தோழி அவனுக்குக் கேட்கும் வகையில் 'தலைவன் மணந்துகொள்ளாவிட்டால் தலைவி உயிர் வாழாள்' எனக் கூறியது.

மாக்கழி மணிப்பூக் கூம்பத் தூத்திரைப்
பொங்குபிதிர் துவலையொடு மங்குல் தைஇ,
கையற வந்த தைவரல் ஊதையொடு
இன்னா உறையுட்டு ஆகும்
சில்நாட்டு அம்மஇச் சிறுநல் ஊரே.

தெளிவுரை

இந்தச் சிறிய நல்ல ஊரிலே, பெரிய கழியிடத்தில் உள்ள நீலமணி போன்ற மலர்கள் குவியும்படி தூய அலைகள் மிகுதியாய் நீர்த்துளிகளை அள்ளி வீசிக்கொண்டிருக்கின்றன. மேகத்தில் படிந்து வந்த ஊதைக்காற்று, பிரிந்த காதலர் வருந்திச் செயலற்றுக்கிடக்கும்படி அவர்கள் மேனியைத் தொட்டுத் தடவிச் செல்கிறது. இத்தகைய இவ்வூர் இங்கு வாழ்பவர்க்குத் துன்பம் தந்து, அவர்களைச் சில நாள்களே உயிர் வாழ வைக்கும்.

கருத்து

தலைவன் விரைவில் வந்து மணக்காவிட்டால் தலைவி இன்னும் சில நாள்களே உயிர் வாழ்வாள்.

விளக்கம்

"தலைவன் பிரிவால் வருந்தும் தலைவி இன்னும் சில நாள்களே உயிர் வாழ்வாள். அவள் நிலையாய் உயிர் வாழ வேண்டுமானால், தலைவன் அவளை இவ்வூதைக்காலம் கழிவதற்கு முன்பே மணந்துகொள்ள வேண்டும்" என்று தோழி கூறுகிறாள்.

சொற்பொருள்

1. மாக் கழி - பெரிய நீர்க்கழி; மணிப் பூ - நீலமணி போன்ற மலர்கள்; கூம்ப - குவிய; தூத்திரை - வெண்மையான (தூய) அலைகளிலிருந்து.
2. பொங்கு - மிகுதியாய்; பிதிர் - சிந்துகின்ற; துவலை - நீர்த்துளி; மங்குல் - மேகம்; தைஇ - தடவிக்கொண்டு.
3. கையற - செயலற்றுப்போகும்படியாக; தைவரல் - தடவுதல்; ஊதை - கூதற்காற்று.
4. இன்னா - துன்பம் தரும்; உறையுட்டு - உறைவிடம்.
5. சில்நாட்டு - சில நாள்களைக் கொண்ட.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 55 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகனைத் தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவியைத் திருமணம் செய்துகொள்ளுமாறு தலைவனிடம், தோழி வற்புறுத்திக் கூறுதல்.

கண்பரப்பக் காணாய் கடும்பனி கால்வல்தேர்
மண்பரக்கும் மாஇருள் மேற்கொண்டு – மண்பரக்கும்
ஆறுநீர் வேலைநீ வாரல் வரின்ஆற்றாள்
ஏறுநீர் வேலை எதிர்.

தெளிவுரை

கடல்துறைத் தலைவனே! இவள் கண்கள் மிக்க துன்பத்தால் கண்ணீர் விடுதலைப் பார்! மிக்க இருளோடு கூடிய இரவுக் காலத்தில் வலிமையான சக்கரங்களைக் கொண்ட தேரில் நீ வருவதால், ஊரில் பழிச்சொற்கள் மிகுதியாகும். மீறி நீ வருவாய் என்றால், அலைகள் ஏறிவரும் கடலை ஒட்டியுள்ள இந்தப் பாக்கத்தில் வாழும் இவள் அதனைப் பொறாள்.

கருத்து

தலைவ! நீ இரவில் வருதலால் ஊரில் நேரும் பழிச்சொற்களை எண்ணித் தலைவி ஆற்றாது வருந்துகிறாள். ஆதலால், இரவில் வருதலைத் தவிர்க்கத் தலைவியை மணம் செய்துகொள்.

சொற்பொருள்

1. கண் - (இவள்) கண்கள்; கடும் பனி - மிகுதியான நீரினை; பரப்ப - வெளிவிடுவதை; காண் - பார்; கால்வல் - கால் வலிமையுள்ள, வலிமையான சக்கரங்களைக் கொண்ட.
2. மண் - உலகெங்கும்; பரக்கும் - பரவியிருக்கும்; மாஇருள் - மிக்க இருள்; மண்பரக்கும் ஆறு - உலகமெல்லாம் பழிச்சொற்கள் பரவும்படி.
3. வாரல் - வாராதே; வரின் - அவ்வாறு வந்தால்; ஆற்றாள் - இவள் பொறுத்துக்கொள்ள மாட்டாள்.
4. ஏறுநீர் - ஏறிவரும் அலைகளைக் கொண்ட; வேலை - கடல்.

தோழி கூற்று

நற்றிணை 4 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி, அலர் அச்சம் தோன்றச் சொல்லி வரைவு கடாயது. (அலர் - பழிச்சொல்.)

கூற்று விளக்கம்

களவொழுக்கக் காலத்தில் தலைவன் சிறைப்புறத்தே வந்திருப்பதை யறிந்த தோழி, அவன் கேட்டு விரைந்து வரைந்துகொள்ளும் வகையில் தலைவியை நோக்கி, 'நமக்குண்டாகிய பழிச்சொல்லை அன்னையறிந்தால் இற்செறிப்பாள் என்று தலைவனிடம் கூறினால் அவர் நம்மைத் தம்மூர்க்குக் கொண்டுபோவரோ' எனக் கூறியது.

கானல்அம் சிறுகுடிக் கடல்மேம் பரதவர்
நீல்நிறப் புன்னைக் கொழுநிழல் அசைஇத்
தண்பெரும் பரப்பின் ஒண்பதம் நோக்கி,
அம்கண் அரில்வலை உணக்கும் துறைவனொடு,
அலரே, அன்னை அறியின் இவண்உறை வாழ்க்கை
அரிய ஆகும் நமக்குஎனக் கூறின்,
கொண்டும் செல்வர்கொல் தோழி! உமணர்
வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி,
கணநிரை கிளர்க்கும் நெடுநெறிச் சகடம்
மணல்மடுத்து உராறும் ஓசை கழனிக்
கருங்கால் வெண்குருகு வெரூஉம்
இருங்கழிச் சேர்ப்பின்தம் உறைவின் ஊர்க்கே?

தெளிவுரை

தலைவியே! கடற்கரைச்சோலையில் பரதவர்கள் அழகிய சிறு குடியிருப்புகளில் வாழ்வர். அவர்கள் நீலநிறப் புன்னையின் கொழுவிய நிழலில் தங்கி, கடலில் மீன் பிடிக்கச் செல்லுதற் குரிய நேரத்தை எதிர்பார்த்தவண்ணம், முறுக்குண்டுள்ள வலையைப் பிரித்து அங்கே உலர்த்தியிருப்பர். அத்தகைய துறை யினைப் பெற்றிருப்பவன், நம் தலைவன். அவனிடம் சென்று,

'களவொழுக்கத்தால் நமக்குண்டாகியுள்ள பழிச்சொல்லை அன்னை அறிந்தால் நாம் இங்கு வருவது இயலாததாகும்' என்று கூறுவோமோ? அவ்வாறு கூறினால், வெண்மையான உப்பினை விற்க உப்பு வாணிகர்கள் நீண்ட வழியில் செலுத்துகின்ற வண்டிகள் மணலில் அழுந்தி எழுப்புகின்ற ஓசையைக் கேட்டு, வயலில் உள்ள கரிய கால்களைக் கொண்ட நாரைகள் அஞ்சி நிற்கும் நெய்தல் நிலத்திற்குரிய தலைவன் நம்மை, தான் வாழும் ஊர்க்கு அழைத்துச் சென்று திருமணம் செய்து கொள்வானா?

கருத்து

தலைவியே! ஊரெல்லாம் அலர் பரவியது; அதனை நீக்கத் தலைவன் உன்னை மணந்துகொண்டு தன்னோடு தன் ஊர்க்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

இறைச்சி

1) பரதவர் புன்னையின்கீழிருந்து கடலில் செல்லுதற்கு நேரம் நோக்கி, அதுவரை வலையை உலர்த்துவர். இத்தொடர்மூலம், தலைவன் சிறைப்புறத்தில் இருந்துகொண்டு, தலைவியைக் கூடுதற்கு, யாருமில்லாத காலத்தை எதிர்பார்த்திருக்கிறான் என்னும் பொருள் வெளிப்படுகிறது.

2) வண்டி செல்லும் ஓசைக்குக் கழனி நாரை அஞ்சும் என்றது, மணமுரசு ஒலிப்ப வந்து, தலைவன் வரைவு மேற்கொள்கையில் அலர் கூறுவார், வாய் ஒடுங்கி நிற்பர் என்பதைக் குறிக்கிறது.

சொற்பொருள்

1. கடல்மேம் பரதவர் - கடல்மேற்சென்று வேட்டையாடி வரும் மீனவர்.
2. நீல் நிற - நீல நிற; புன்னை - புன்னை மரத்தின்; கொழுநிழல் - கொழுவிய நிழலில்; அசைஇ - தங்கி.
3. தண் பெரும் பரப்பு - குளிர்ச்சி பொருந்திய பெரிய பரப்புள்ள கடல்; ஒண்பதம் - (கடலில் செல்வதற்கு) ஏற்றதான பருவ நிலை.
4. அம்கண் - அழகிய கண்; அரில்வலை - முறுக்குண்ட வலை; உணக்கும் - உலர வைக்கும்.
5. அலர் - (ஊரில் எழுந்த) பழிச்சொல்; இவண் உறை - இங்கு வந்து தங்கும் வாழ்க்கை.

6. அரிய ஆகும் - இயலாததாகும்.
7. கொண்டும் செல்வர் - தம்மூருக்குக் கொண்டுசெல்வாரா?; உமணர் - உப்பு வாணிகர்.
8. கொள்ளை - விலை; சாற்றி - கூறி.
9. கணநிரை - கூட்டமான ஆ நிரையை; கிளர்க்கும் - ஒலி எழுப்பி ஓட்டும்; நெடுநெறி - நீண்ட வழிச் செல்லும்; சகடம் - வண்டி.
10. மடுத்து - அழுந்தி; உரறும் - எழுப்புகின்ற.
11. வெரூஉம் - அஞ்சும்.
12. சேர்ப்பின் - நெய்தல் நிலத்திலுள்ள; உறைவின் ஊர் - தங்குதற்கு இனியதாகிய ஊர்.

தோழி கூற்று

குறுந்தொகை 393 **பரணர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகன் சிறைப்புறமாக, தோழி அலர் மலிவு உரைத்து வரைவு கடாயது. (அலர் மலிவு - ஊரார் தூற்றும் பழிச்சொல் மிகுதிப்படல்.)

கூற்று விளக்கம்

தலைவன் சிறைப்புறமாய் நிற்க, தலைவனொடு தலைவி கொண்ட உறவால் ஊரில் அலர் மிகுதியாயிருப்பதையும், அதனால் அப்பழிச்சொல் நீங்க, அவன் உடனே தலைவியை மணந்து கொள்ள வேண்டுமென் பதையும் அவன் கேட்டறியுமாறு தோழி தலைவியிடம் கூறியது.

மயங்குமலர்க் கோதை குழைய மகிழ்நன்
முயங்கிய நாள்தவச் சிலவே; அலரே,
கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
பசும்பூண் பாண்டியன் வினைவல் அதிகன்
களிறொடு பட்ட ஞான்றை,
ஒளிறுவாள் கொங்கர் ஆர்ப்பினும் பெரிதே.

தெளிவுரை

தலைவியே! மலர்கள் பல கலந்த உன் மாலை குழையும்படி யாய்த் தலைவன் உன்னைத் தழுவிய நாள்கள் சிலவே. ஆனால்,

அயலார் கூறும் பழிப்புரைகளோ, கோட்டான்கள் கூவிக் கொண்டிருக்கும் வாகை என்னுமிடத்தில் நடந்த போர்க் களத்தில் பசும்பூண் பாண்டியனுக்குத் துணையாய்ச் சென்ற வலிமை மிக்க அதிகன் என்பவன் தன் யானையொடு இறந்து பட்டபோது, ஒளி வீசும் வாட்படையினைக் கொண்ட எதிரி களான கொங்கர்களின் வெற்றி ஆரவாரத்தினும் மிகுதியாய் இருக்கின்றன.

கருத்து

'ஊரலர் மிகுதியாயிற்று; அஃது அடங்குமாறு தலைவன் தலைவியை மணந்துகொள்ள வேண்டும்' எனத் தோழி, தலைவன் காதில் படுமாறு தலைவியிடம் கூறுகிறாள்.

விளக்கம்

தலைவன், தலைவியைத் தழுவிய நாள்கள் சில. ஆனால், ஊரில் எழுந்த பழிச்சொல் ஆரவாரமோ, போர்க்கள ஆரவாரத் தினும் மிகுதியாய் இருக்கிறது.

குறிப்பு

அதிகன் என்பவன் பசும்பூண் பாண்டியன் படைத்தலைவர்களுள் ஒருவன். அவன் பாண்டியனுக்காகப் பரிந்து, கொங்கர்களுடன் போர் செய்த போது அவர்களால் கொல்லப்பட்டான்.

சொற்பொருள்

1. மயங்குமலர்க் கோதை - மலர்கள் பல கலந்த மாலை; குழைய - குழையும்படி; மகிழ்நன் - தலைவன்.
2. முயங்கிய - தழுவிய; தவ - மிகவும்; அலர் - பழிச்சொல்.
3. கூகைக்கோழி - கோட்டான்; வாகைப் பறந்தலை - வாகை என்னு மிடத்தில் நடந்த போர்க்களத்தில்.
4. பசும் பூண் பாண்டியன் - பாண்டிய மன்னனருள் ஒருவன்; வல் அதிகன் - (பாண்டியன் ஏவியதாலே) வலிமையுடன் போரிட்ட அதிகன்.
5. களிறொடு - யானையோடு; பட்ட - இறந்த; ஞான்றை - பொழுதில்.
6. கொங்கர் - கொங்கர்கள்; ஆர்ப்பினும் - ஆரவார ஒலியினும்; பெரிதே - மிக்கது.

தோழி கூற்று

அகநானூறு 100 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

களவு ஒழுக்கத்தின்போது இரவுக்குறியில் வந்து பழகிய தலைவனிடம், 'உம் களவொழுக்கம் எம் ஊரில் அலராகிவிட்டதால் இனி மணம் பேசி வருதலே நன்று' எனத் தோழி கூறியது.

அரையுற்று அமைந்த ஆரம் நீவிப்
புரையப் பூண்ட கோதை மார்பினை,
நல்அகம் வடுக்கொள முயங்கி, நீவந்து,
எல்லினில் பெயர்தல் எனக்குமார் இனிதே.
பெருந்திரை முழக்கமொடு இயக்குஅவிந் திருந்த
கொண்டல் இரவின் இருங்கடல் மடுத்த
கொழுமீன் கொள்பவர் இருள்நீங்கு ஒண்சுடர்
ஓடாப் பூட்கை வேந்தன் பாசறை,
ஆடுஇயல் யானை அணிமுகத்து அசைத்த
ஓடை ஒண்சுடர் ஒப்பத் தோன்றும்,
பாடுநர்த் தொடுத்த கைவண் கோமான்,
பரியுடை நல்தேர்ப் பெரியன், விரிஇணர்ப்
புன்னைஅம் கானல் புறந்தை முன்துறை
வம்ப நாரை இனன்ஒலித் தன்ன,
அம்பல் வாய்த்த தெய்ய – தண்புலர்
வைகுறு விடியல் போகிய எருமை
நெய்தல்அம் புதுமலர் மாந்தும்
கைதைஅம் படப்பைஎம் அழுங்கல் ஊரே!

தெளிவுரை

அரைக்கப்பெற்ற சந்தனத்தைப் பூசி, அதுபோலும் மணமுள்ள மலர்மாலையினையும் அணிந்துள்ள மார்பனே! நீ இரவிலே வந்து என் தலைவியின் மார்பு வடுக்கொள்ளும்

படியாய்த் தழுவிச் செல்லுதல் எமக்கு இனியதாகவே இருக்கிறது.

மேகம் சூழ்ந்த இரவில், கடல் அலை அடங்கி ஒலியும் ஒய்ந்தது. கரிய கடலில் கொழுத்த மீன்களைப் பிடிக்கும் பரதவர்கள், தம் மீன்பிடி படகுகளில் வெளிச்சத்திற்காக ஒளி பொருந்திய விளக்குகளை ஏற்றி வைத்திருக்கின்றனர். அவ்விளக்குகளின் ஒளி, போர்க்களத்தில் புறமுதுகிட்டு அறியாத வெற்றிவேந்தனின் பாசறையில் அசைந்து நிற்கும் யானையின் பொன்முகபடாத்தின் ஒளியைப் போலத் தோன்றுகிறது.

தாழைமர வேலிகள் சூழ்ந்த அழகிய தோட்டங்களைக் கொண்டது, எம் ஊர். அங்குப் பொழுது புலர்ந்திடும் இருள் தங்கிய, குளிர்ச்சி பொருந்திய விடியலில் மேயச் செல்லும் எருமை, நெய்தல் பூவின் அழகிய புதுமலர்களை நிறையத் தின்னும்.

குதிரைகள் பூட்டப்பட்ட சிறந்த தேர்களைக் கொண்ட பெரியன் என்பான், பரிசில் வேண்டிப் பாடி வருபவர்களைத் தன்னிடத்திலேயே தங்க வைத்துக்கொள்ளும் கொடைத்தன்மை மிக்கவன். விரிந்த மலர்க் கொத்துகளைக் கொண்ட புன்னை மரங்கள் அடர்ந்த சோலைகள் சூழ்ந்த 'புறையாறு' என்னும் துறை, அப்பெரியனுக்குரியது. அத்துறையிலே புதிய நாரைக் கூட்டம் ஒலி எழுப்புவது போன்று உம் களவுப்புணர்ச்சியின் அலரொலி எம் ஊரிலும் எழுந்துவிட்டது.

கருத்து

ஊரில் பழிச்சொல் மிகுந்துவிட்டது; அது நீங்க, நீ தலைவியை உடனே வரைதல் வேண்டும்.

விளக்கம்

நீ இரவில் வந்து செல்லுதல் எமக்கு இனிதேயாயினும், எம் ஊரினுள் பழிச்சொற்கள் எழுந்துவிட்டன.

கடல் ஒலி அவிந்திருக்கும் வேளையில் நாரை அலறுவது போல, ஊர்மக்களின் அலர்மொழி பெரிதாகிவிட்டது. நீ மணம் செய்துகொண்டு அப்பழிச்சொற்களை நீக்கு.

மீன் பிடிப்பவர் தம் தோணியில் விளக்கேற்றி வைத்திருப்பர். இத்தொடர் வாயிலாய், தலைவன் தன் வீட்டிலும் விளக்கேற்றி வைக்கத் தலைவியைத் திருமணம் செய்துகொண்டு அழைத்துச் செல்ல வேண்டும் என்னும் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. அரையுற்று அமைந்த ஆரம் - அரைத்தலால் உண்டாகிய சந்தனம்; நீவி - பூசி.
2. புரைய - அதுபோலும்; பூண்ட - அணிந்த; கோதை - மாலை.
3. நல்அகம் - (தலைவியின்) நல்ல மார்பு; வடுக்கொள - வடுவுண்டாகும்படி; முயங்கி - தழுவி.
4. எல்லினில் - இரவில்; பெயர்தல் - (வந்து) செல்லுதல்.
5. இயக்கு - அலையும்; அவிந்திருந்த - ஓய்ந்திருந்த.
6. கொண்டல் - மேகம்; மடுத்த - சேர்ந்த.
7. இருள் நீங்கு - இருளை நீக்கும்; ஒண்சுடர் - ஒளி பொருந்திய விளக்குகள்.
8. ஓடாப் பூட்கை - புறமுதுகிட்டு ஓடாத வலிமை.
9. ஆடு இயல் - அசையும் இயல்புள்ள; அசைத்த - பிணித்த.
10. ஓடை - பொன் முகபடாம்; ஒண்சுடர் - ஒள்ளிய சுடர்; ஒப்ப - போல.
11. பாடுநர் - பாடி வருவாரை; தொடுத்த - தன்னிடத்திலேயே வைத்துக் கொள்ளும்; கைவண் - கை வண்மை, கொடைத்தன்மை; கோமான் - அரசன்.
12. பரி - குதிரை; பெரியன் - பெரியன் என்பவனது; விரி இணர் - மலர் விரிந்த கொத்துகளைக் கொண்ட.
13. புறந்தை முன்துறை - புறையாறு என்னும் கடல்துறை.
14. வம்ப நாரை - புதிய நாரைகள்; இனன் - இனம் - கூட்டம்.
15. அம்பல் - பழிச்சொல்; வாய்த்த - உண்டாகிவிட்டன, எழுந்த; தண்புலர் - குளிர்ச்சியாய்ப் புலர்ந்திடும்.
16. வைகுறு விடியல் - இருள் தங்கிய விடியற்காலம்.
17. மாந்தும் - தின்னும்.
18. கைதை - தாழை மரம்; படப்பை - தோட்டம்; அழுங்கல் ஊர் - ஆரவாரம் மிக்க ஊர்.

தோழி கூற்று

நற்றிணை 15 **பாண்டியன் அறிவுடைநம்பி**

திணை : நெய்தல்

கூற்று

வரைவு நீட்டித்தவழித் தோழி தலைமகற்குச் சொல்லி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்திலேயே தலைவியைக் கூடியின்புற்ற தலைவன் அவளை மணந்து கொள்ளாது காலத்தை நீட்டிக்கொண்டே இருக்க, தலைவி மிகவும் நலிவுற்றாள்; ஊரலரும் மிகுதியாயிற்று. இந்நிலையில், தலைவன் தலைவியை விரைந்து மணந்துகொள்ளுமாறு தோழி சொல்லியது.

முழங்குதிரை கொழீஇய மூரி எக்கர்,
நுணங்குதுகில் நுடக்கம் போல, கணம்கொள
ஊதை தூற்றும் உரவுநீர்ச் சேர்ப்ப!
பூவின் அன்ன நலம்புதிது உண்டு,
நீபுணர்ந் தனையே அன்மையின், யாமே
நேர்புடை நெஞ்சம் தாங்கத் தாங்கி,
மாசுஇல் கற்பின் மடவோள் குழவி
பேஎய் வாங்கக் கைவிட் டாங்குச்
சேணும் எம்மொடு வந்த
நாணும் விட்டேம்; அலர்கஇவ் வூரே!

தெளிவுரை

முழங்குகின்ற கடல் அலைகள் கொண்டுவந்து சேர்த்த மணற் பரப்பினை, மெல்லிய ஆடை காற்றால் சுருண்டு ஓடுவதுபோல, வாடைக்காற்றுச் சுருட்டிச் செல்லும். இத்தகைய வளப்பத் தினைக் கொண்ட கடற்கரைக்குத் தலைவனே! நீ போந்து எம் தலைவியின் பூப்போன்ற புது நலத்தை நுகர்ந்தபோதிருந்த புதுமையையும் அருமையையும் இப்போது நாங்கள் உடையவர் களாயிலம். உனக்கு உடம்பட்ட உள்ளத்தில் நாங்கள் இப்போது வருத்தத்தைத் தாங்கியிருக்கிறோம். குற்றமற்ற கற்பினைக் கொண்ட இளநங்கை ஒருத்தி, தன் குழந்தையைப் பேய் பற்றிக் கொள்ளக் கைவிட்டதுபோல, நாங்களும் எம்முடன் என்றும்

தங்கியிருந்த நாணத்தைக் கைவிட்டுவிட்டோம்! இனி இவ்வூரில் எத்தகைய பழிச்சொல் உண்டாவதாயினும் உண்டாகட்டும்.

கருத்து

தலைவனுடன் கொண்ட களவொழுக்கத்தால் ஊரில் பழிச்சொல் உண்டாகிவிட்டது; அது நீங்க, தலைவன் தலைவியை உடனே மணந்து கொள்ள வேண்டும்.

விளக்கம்

தலைவியின் நலத்தைக் களவில் நுகர்ந்தாய் ஆயினும், இன்னும் நாங்கள் உனக்கே உரியவர் ஆகவில்லை. கை நீட்டிய பேயிடம் குழந்தையைக் கொடுத்துவிட்ட தாய்போல் நாங்களும் எம் நாணத்தை இழந்து நெஞ்சில் மிகுந்த வருத்தம் கொண்டுள் ளோம்! இனி ஊர் எப்படி வேண்டுமானாலும் தூற்றட்டும்.

பழிச்சொல் எழுந்துவிட்டது; அது நீங்க வேண்டுமாயின், உடனே வரைவு மேற்கொள்ள வேண்டும்.

உள்ளுறை

கடல் கொழித்து ஒதுக்கிய மணல்மேட்டினைக் காற்று அலைக்கழிக்கும். இத்தொடர் வாயிலாய், தலைவியைப் பெற்றோர் வளர்த்துப் பேணிய மேன்மையை, அவள் தலைவ னோடு கொண்ட உறவு, பழிச்சொல்லை அள்ளித் தூற்றி அலைக்கழிக்கிறது என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படு கிறது.

சொற்பொருள்

1. கொழீஇய - கொழிக்கப்பெற்ற; மூரி - நெரிவு.
2. நுணங்குதுகில் - நுண்ணிய நூலாலாகிய ஆடை; நுடக்கம் - சுருண்டு ஒடுவது; கணங்கொள - திரட்சியுண்டாக.
3. ஊதை - வாடைக்காற்று; உரவு நீர் - கடல்.
4. நலம் - பெண்மை நலம்.
5. அன்மையின் - (நுகர்ந்தும்) அறிந்தனை அல்லை.
6. நேர்புடை நெஞ்சம் - செம்மைப்பண்பு கொண்ட எம் நெஞ்சம்.
7. கற்பின் மடவோள் - கற்புள்ள இளமகள் ஒருத்தி; குழவி - குழந்தை.

8. பேஎய் - பேய்; வாங்க - பற்றி எடுக்க.
9. சேணும் - பிறந்தநாள்தொட்டு இதுவரை.
10. நாணும் - நாணத்தையும்; அலர்க - அலர் தூற்றட்டும்.

தோழி கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 29 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி அலர் அறிவுறுத்தி வரைவு கடாதல்.

கூற்று விளக்கம்

ஊர் கூறும் பழிச்சொற்களை எடுத்துச் சொல்லி, தலைவியை விரைவில் வரைந்துகொள்ளுமாறு தலைவனைத் தோழி வேண்டுதல்.

மறையின் மணந்தாரை வன்பரதர் பாக்கத்து
மடவார் செங்கை
இறைவளைகள் தூற்றுவதை ஏழையம் எங்ஙனம்யாங்கு
அறிகோம் ஐய!
நிறைமதியும் மீனும் எனஅன்னம் நீள்புன்னை
அரும்பிப் பூத்த
பொறைமலிபூங் கொம்புஏற வண்டுஆம்பல் ஊதும்
புகாரே எம்மூர்!

தெளிவுரை

வலிமை மிக்க பரதவர்களின் பாக்கத்தில் உள்ளோர், களவொழுக்கத்தில் ஒழுகுகின்ற மகளிரை, அம்மகளிரின் சிவந்த முன்கையினின்றும் வளைகள் தாமே கழன்று வீழ்வதால் தூற்றுவதை ஐய! ஏழைகளாகிய நாங்கள் எங்ஙனம் அறிவோம்? அரும்பிப் பூத்த பூக்களால் சுமை மிகுந்துள்ள நீண்ட புன்னை மரத்தின் கொம்பிலே அன்னம் ஏறியிருக்க, அந்த அன்னத்தை முழுமதி என்றும், புன்னைப் பூக்களை விண்மீன்கள் என்றும் கருதி ஆம்பல் மலர, அம்மலரினை வண்டினம் தேனுண்ண ஊதுகின்ற புகார் நகரம் அன்றோ, எங்கள் ஊர்?

கருத்து

தலைவ! எம் வளைகள் கழன்று வீழ்ந்து பிரிவாற்றாமையைப் பிறர் அறியும்படி செய்கின்றன. அதனால் ஊரில் பழிச்சொற்கள் ஏற்படுகின்றன. எம் ஊர் வண்டுகள் உண்மையறியாது மயங்கின போன்று இவ்வூரினராகிய நாங்களும் உன் உண்மையல்லாச் சொற்களை நம்பி ஏமாந்தோம்! இனியும் ஏமாற்றத்திற்கு இடமின்றி வரைவு கொள்.

விளக்கம்

குளக்கரை ஓரத்தில் பூத்திருக்கும் புன்னை மரத்தில் அன்னம் அமர்ந்திருந்தது. ஆம்பல் இரவில் மலரும். ஆனால், அஃது அன்னத்தை நிலவென்றும், புன்னைப் பூக்களை நிலவைச் சூழ்ந்துள்ள உடுக்களென்றும் கருதி மயங்கிப் பகலிலேயே பூத்தது.

குறிப்பு

தலைவ! களவொழுக்கத்தை நீக்கித் தலைவியை மணந்துகொண்டு இல்லறம் நடத்து.

சொற்பொருள்

1. மறையின் - களவொழுக்கத்தில்; பாக்கம் - கடற்கரைச்சிற்றூர்; மடவார் - மகளிர்.
2. இறை - முன்கை; தூற்றுவதை - கழன்று விழுவதால் தூற்றுவதை.
3. நிறைமதி - முழு மதி.
4. பொறைமலி - சுமை மிகுந்துள்ள; ஊதும் - நுகரும்.

தோழி கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 30 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி அலர் அறிவுறுத்தி வரைவு கடாதல்.

கூற்று விளக்கம்

ஊர் கூறும் பழிச்சொற்களை எடுத்துச் சொல்லி, தலைவியை விரைவில் வரைந்துகொள்ளுமாறு தலைவனைத் தோழி வேண்டுதல்.

உண்டாரை வெல்நறா ஊண்ஒளியாப் பாக்கத்துள்
உறைஒன்று இன்றித்
தண்டாநோய் மாதர் தலைத்தருதி என்பதுயாங்கு
அறிகோம் ஐய!
வண்டால் திரைஅழிப்பக் கையால் மணல்முகந்து
மதிமேல் நீண்ட
புண்தோய்வேல் நீர்மல்க மாதர் கடல்தூர்க்கும்
புகாரே எம்ஊர்.

தெளிவுரை

தன்னை உண்டவரைத் தன் போதையினாலே அறிவிழக்கச் செய்து அடிமை கொள்ளும் கள் உணவு எம் பாக்கத்தில் எப்போதும் நிறைந்திருக்கும். இங்கே உள்ள எமக்கு வேறு எம்மருந்தாலும் தீர்க்க இயலாத காமநோயினை நீ தருகின்றாய் என்பதனை, ஐயனே நாங்கள் எவ்வாறு அறிவோம்? சிறுமியர் இழைத்திருந்த வண்டல் முதலியவற்றைக் கடல் அலைகள் வந்து அழிக்க (அதனால் வருந்திய) அச்சிறுமியரின் மதிபோன்ற முகத்தில் பகைவர்களின் புண்ணிலே தோய்ந்த வேல் போன்ற நீண்ட கண்கள் நீர் உகுக்கின்றன. (அலைமீது சினம் கொண்ட அவர்கள்) கையிலே மணலை வாரி இறைத்துக் கடலைத் தூர்க்க முயலுகின்றனர். இத்தகைய புகார் அன்றோ, எம் ஊர்!

கருத்து

தலைவ! ஊராரின் பழிச்சொல்லை உன் மணமே நீக்கும்.

விளக்கம்

கள்ளுண்டவர் அதனை மறைப்பினும் மறையாது வெளிப்படுவதுபோலக் காமநோயை மறைத்தாலும் அது வெளிப்பட்டு விடுகிறது.

மணலை வாரி இறைப்பதால் கடல் தூர்ந்துவிடாது. துயரை எவ்வளவுதான் அடக்கி வைத்திருந்தாலும், ஊராரின் பழிச் சொற்களை எங்களால் நீக்க இயலாது. தலைவ! நீ தலைவியை உடனே மணம் செய்துகொண்டால்தான் ஊரார் பழிச்சொல் நீங்கும்.

குறிப்பு

தலைவ! ஊரில் அலர் பரவிவிட்டது. உடனே தலைவியை மணஞ் செய்துகொள்.

சொற்பொருள்

1. வெல் நறா - போதையினாலே மயக்கி அறிவிழக்கச்செய்து அடிமை கொள்ளும் கள்; ஊண் - உணவு; உறை - மருந்து.
2. தண்டா நோய் - தீர்க்க இயலாத (காம) நோய்; தலைத் தருதி - மிகுதியும் தருகின்றாய்.
3. வண்டால் - வண்டல் - சிறுமியர் கட்டிய சிறு வீடு; மதி மேல் - மதி போன்ற முகத்தில் உள்ள.
4. புண்தோய் வேல் - பகைவர் புண்ணிலே தோய்ந்த (வேல் போன்ற நீண்ட கண்கள்); மல்க - உகுக்க.

தோழி கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 37 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

அலர் அறிவுறுத்தி வரைவு கடாதல்.

கூற்று விளக்கம்

தலைவனோடு தலைவி கொண்டுள்ள காதலையறிந்த ஊரார் பழி தூற்றுவதைத் தோழி தலைவனிடம் கூறி, விரைவில் தலைவியை மணந்துகொள்ள வேண்டுவது.

நல்நித் திலத்தின் பூண்அணிந்து
நலம்சார் பவளக் கலைஉடுத்துச்
செந்நெல் பழனக் கழனிதொறும்
திரைஉ லாவு கடல்சேர்ப்ப!
புன்னைப் பொதும்பர் மகரத்தின்
கொடியோன் எய்த புதுப்புண்கள்
என்னைக் காணா வகைமறைத்தால்
அன்னை காணின் என்செய்கோ?

தெளிவுரை

அலைகள், நல்ல முத்துகளாகிய அணிகளை அணிந்து, அழகிய பவளமாகிய மேகலையை உடுத்து, செந்நெற்பயிர் களைக் கொண்ட வயல்தோறும் உலா வருகின்ற கடற்கரைக்குத் தலைவ! புன்னை மரச்சோலையில், மீன் கொடியைக் கொண்ட மன்மதன் அம்பு எய்தலால் ஏற்படும் புதிய புண்கள், என் உருவினைக் காண இயலாதவாறு மறைத்துள்ளன. அதனைத் தாய் அறிந்தால் நான் என்ன செய்வேன்?

கருத்து

முத்தும் பவளமும் விளையும் நெய்தல்நிலத் தலைவனே! உன் பிரிவால் தலைவியின் உடலில் ஏற்பட்டுள்ள மாறுதல்களைக் கண்டு ஊரார் பழி தூற்றுகின்றனர். தலைவியின் இந்நிலையை அன்னை அறியின், நான் என்ன செய்ய இயலும்? அன்னை அறியுமுன் தலைவியை மணந்துகொள்.

சொற்பொருள்

1. நித்திலம் - முத்து; பூண் - அணிகலன்; கலை - ஆடை.
2. பழனம் - மருத நிலம்; கழனி - வயல்; திரை - அலை; சேர்ப்ப! - நெய்தல் நிலத் தலைவ!
3. பொதும்பர் - சோலை; மகரம் - மீன்: மகரக் கொடியோன் - மீன் கொடியைக் கொண்ட மன்மதன்.
4. காணா - காண முடியாதபடி; என் செய்கோ - என்ன செய்வேன்?

தோழி கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 38 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

அலர் அறிவுறுத்தி வரைவு கடாதல்.

கூற்று விளக்கம்

தலைவனோடு தலைவி கொண்டுள்ள காதலையறிந்த ஊரார் பழி தூற்றுவதைத் தோழி தலைவனிடம் கூறி, விரைவில் தலைவியை மணந்துகொள்ள வேண்டுவது.

வாரித் தரள நகைசெய்து
வண்செம் பவள வாய்மலர்ந்து
சேரிப் பரதர் வலைமுன்றில்
திரைஉ லாவு கடல்சேர்ப்ப!
மாரிப் பீரத்து அலர்வண்ணம்
மடவாள் கொள்ளக் கடவுள்வரைந்து
ஆர்இக் கொடுமை செய்தார் என்று
அன்னை அறியின் என்செய்கோ?

தெளிவுரை

கடலலைகள், முத்துகளால் புன்முறுவல் காட்டி, அழகிய சிறந்த பவளமாகிய வாயினைத் திறந்து, பரதவர் சேரியில் வலைகள் உலரும் முற்றத்தே உலவுகின்ற கடற்கரைக்குத் தலைவனே! மழைக்காலத்துப் பீர்க்கு மலர்போலப் பசலையால் தலைவியின் உடல் பொன்னிறமுற்றுள்ளது; தெய்வத்தை வழி பட்டு, இந்நோயைச் செய்தவர் யார் என்று அன்னை அறிந்தால், நான் என்ன செய்வது? (முத்துகள் அலையின் புன்முறுவல் போலவும், பவளம் அதன் வாய்போலவும் தோன்றுகின்றன.)

கருத்து

தலைவியின் உடல்வேறுபாடு கண்டு ஊரார் அலர் தூற்றுகின்றனர். அவளுக்கு இந்நோய் செய்தவர் யார் என்பதறிய அன்னை வேலனை அழைத்து வெறியாட்டுச் செய்தால் நான் என் செய்வது? வெறியாட்டு நிகழுமுன் தலைவியை வரைந்துகொள்.

சொற்பொருள்

1. வாரி - கடல்; தரளம் - முத்து; நகை - புன்முறுவல்; வண் - சிறந்த, தெளிவு; மலர்ந்து - திறந்து.
2. பரதர் - மீன் பிடிப்போர்; முன்றில் - முற்றம்.
3. மாரி - மழை; பீரம் - பீர்க்கு; அலர் - பூ; மடவாள் - இளமையானவள்; வரைந்து - வழிபட்டு.
4. அறியின் - அறிந்தால்.

தோழி கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 39 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

அலர் அறிவுறுத்தி வரைவு கடாதல்.

கூற்று விளக்கம்

தலைவனோடு தலைவி கொண்டுள்ள காதலையறிந்த ஊரார் பழி தூற்றுவதைத் தோழி தலைவனிடம் கூறி, விரைவில் தலைவியை மணந்து கொள்ள வேண்டுவது.

புலவுற்று இரங்கி அதுநீங்கப்
 பொழில்தண் டலையில் புகுந்துஉதிர்ந்த
கலவைச் செம்மல் மணம்கமழத்
 திரைஉ லாவு கடல்சேர்ப்ப!
பலஉற்று ஒருநோய் துணியாத
 படர்நோய் மடவாள் தனிஉழப்ப
அலவுற்று இரங்கி அறியாநோய்
 அன்னை அறியின் என்செய்கோ?

தெளிவுரை

புலால் நாற்றம் பொருந்தியிருப்பதற்கு வருந்தி, அந் நாற்றத்தைப் போக்கிக்கொள்ள, பூம்பொழிலின் குளிர்ச்சியான இடங்களில் புகுந்து, அங்கே உதிர்ந்து கிடக்கும் பல்வேறு வகையான பூக்களுடன் கலந்து, அவற்றின் மணத்தைத் தம்மேல் ஏற்றிக்கொள்ளுகின்ற அலைகள் உலாவும் கடற்கரைக்குத்

தலைவனே! பல துன்பங்களும் நேர்ந்ததால் இன்ன நோய் என்று அறிய இயலாமல் தலைவி தானே தனித்துத் துன்புறுகிறாளே! இவள் மெலிதலும் இரங்குதலும் பிறர்க்குப் புலப்படாததால், யாராலும் இதுவரை அறியப்படாதிருந்த இந்நோயை, அன்னை அறிந்துவிட்டால் என்ன செய்வேன்?

கருத்து

தலைவ! தலைவியின் உடல்வேறுபாட்டால் ஊரில் எழுந்துள்ள பழிச் சொற்களை அன்னை அறியுமுன் திருமணத்திற்கு ஏற்பாடு செய்.

குறிப்பு

மீன் போன்றவற்றால் புலால் நாற்றம் அடைந்துள்ள கடல் அலை, கரையில் உதிர்ந்து கிடக்கும் பூக்களின்மேல் படிந்து, அவற்றின் மணத்தைத் தன் மேலேற்றிப் புலால் நாற்றத்தைப் போக்கிக்கொள்கிறது என்பது அருமையான கற்பனை.

சொற்பொருள்

1. புலவு - புலால் நாற்றம்; இரங்கி - வருந்தி; பொழில் - சோலை; தண்தலை - குளிர்ச்சியான இடம்.
2. செம்மல் - பூ.
3. பல உற்று ஒரு நோய் துணியாத - பல துன்பங்களும் நேர்ந்தமையால் இன்ன நோய் என்று அறிய இயலாத; படர் - துன்பம்.
4. அலவுற்று - மனத்துயர் அடைந்து.

தோழி கூற்று

கலித்தொகை 44 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரையாது வந்து ஒழுகுந் தலைமகனைத் தோழி, தலைமகளது கற்பு மிகுதியும், இவ்வொழுக்கம் அலர் ஆகின்றமையும், அவளது ஆற்றாமை யும் கூறி, வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைத் திருமணம் செய்துகொள்ள ஆவன செய்யாமல் களவொழுக்கத்திலேயே ஒழுகி வருகின்றான். அவனைக் கண்ட தோழி, தலைவியின் கற்பின் பெருமையையும், ஊரிலே பழிச்சொற்கள் எழுந்துள்ளன என்பதையும் கூறி, விரைவிலே மணம் பேச வருமாறு தலைவனிடம் வற்புறுத்தியது.

தரவு

கதிர்விரி கனைசுடர்க் கவின்கொண்ட நனஞ்சாரல்
எதிர்எதிர் ஓங்கிய மால்வரை அடுக்கத்து,
அதிர்இசை அருவிதன் அம்சினை மிசைவீழ,
முதிர்இணர் ஊழ்கொண்ட முழவுத்தாள் எரிவேங்கை
வரிநுதல் எழில்வேழம் பூநீர்மேல் சொரிதர,
புரிநெகிழ் தாமரை மலர்அம்கண் வீறுஎய்தி,
திருநயந்து இருந்தஅன்ன தேம்கமழ் விறல்வெற்ப!

தாழிசை

தன்எவ்வம் கூறினும், நீசெய்த அருளின்மை
என்னையும் மறைத்தாள்,என் தோழி; அதுகேட்டு,
நின்னையான் பிறர்முன்னர்ப் பழிகூறல் தான்நாணி;

கூரும்நோய் சிறப்பவும், நீசெய்த அருளின்மை
சேரியும் மறைத்தாள்என் தோழி; அதுகேட்டாங்கு,
'ஒரும்நீ நிலையலை' எனக்கூறல் தான்நாணி;

நோய்அட வருந்தியும், நீசெய்த அருளின்மை
ஆயமும் மறைத்தாள்,என் தோழி; அதுகேட்டு,
மாய!நின் பண்பின்மை பிறர்கூறல் தான்நாணி;

எனவாங்கு—

சுரிதகம்

இனையன தீமை நினைவனள் காத்துஆங்கு,
அனைஅரும் பண்பினால் நின்தீமை காத்தவள்
அருந்துயர் ஆர்அஞர் தீர்க்கும்
மருந்தாகிச் செல்கம், பெரும!நாம் விரைந்தே.

தெளிவுரை

"காலைக்கதிரவனின் செறிந்த கதிர்கள், அகன்ற மலைச் சாரலை அழகு செய்கின்றன. அச்சாரலில் பெரிய இரு மலைகள் எதிரெதிராய் ஓங்கியுள்ளன. அந்த இருமலைகளிலிருந்து அருவிகள் இசை முழக்கத்துடன் விழுகின்றன. அவ்வருவிகள் முழவு போன்ற அடிமரத்தைக் கொண்ட வேங்கை மரத்தின் நெருப்புப் போன்ற முற்றிய பூங்கொத்துகள்மீது விழுகின்றன. இக்காட்சி, தாமரை மலர்மீது வீற்றிருக்கும் திருமகள்மீது யானைகள் பூச்சொரிதல் போன்றிருந்தது. இத்தகைய சிறப்புப் பெற்றுள்ள, தேன் மணக்கும் மலை நாட்டிற்குரியவனே!" என்று தோழி தலைவனை விளித்து மேலும் பேசுகிறாள்.

"தலைவி தன் துன்பம் மிகுதியாயினும், அதற்குக் காரணமான உன் கருணையின்மையை என்னிடங்கூடக் கூறவில்லை. ஏன் என அறிவாயா? அதைக் கேட்டு நான் மற்றவரிடம் உன்னைப்பற்றிப் பழித்துக் கூறிடுவேனோ என்று அஞ்சுகிறாள்.

"உன் பிரிவால் ஏற்பட்ட துன்பம் மிகுதியாய் இருந்தாலும், அவள் அதை இச்சேரி மக்கள் அறியாதபடி மறைத்து வாழ்கிறாள். ஏன் என அறிவாயா? ஊர் மக்கள் அதைக் கேட்டு, நீ நிலையான மனம் கொண்டவன் அல்லன் என்று உன்னைப் பழி தூற்றுவார்களோ என்று அஞ்சுகிறாள்.

"மாயமுள்ளவனே! பிரிவுத் துயர் தாக்குவதால் அவள் வருந்து கிறாள். இருந்தாலும், தோழியர் அதனை அறியாதவாறு மறைத்து வாழ்கிறாள். ஏன் என அறிவாயா? அவர்கள் அதைக் கேட்டு, நீ பண்பற்றவன் என்று உன்னைப் பழிப்பார்களோ என்று அஞ்சுகிறாள்.

"பெருமகனே! இவ்வாறு உனக்குப் பழி ஏற்படும் என்று கருதித் தன் துன்பத்தை மறைத்து, தனது பண்பின் காரணமாய், உனது பண்பின்மையைப் பிறர் அறியாதவாறு மறைத்து வாழும் தலைவியின் பெரும் துயர் நீக்கும் மருந்தாய் நாம் அவளிடம் விரைந்து செல்வோம்."

கருத்து

தோழி தலைவனைக் கண்டு, ஊரில் எழுந்துள்ள பழிச்சொற்களால் தலைவி படும் துயரை எடுத்துச் சொல்லி, விரைவாய்த் தலைவியை அவன் மணந்துகொள்ள வேண்டுமென்கிறாள்.

விளக்கம்

இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர்த் தலைவனும் தலைவியும் களவொழுக்கத்தை மேற்கொண்டனர். பகற்குறி, இரவுக்குறி என இரு குறியிடத்தும் தலைவன் தலைவியோடு கூடி மகிழ்ந்து கொண்டிருந்தான். களவொழுக்கத்தை அறிந்த அயலார், தலைவியை அலர் தூற்றத் தொடங்கினர். பண்பிற் சிறந்த தலைவி, தலைவனைப் பிறர் பழி கூறுவரே என்று அஞ்சித் தன் துன்பத்தை உயிர்த்தோழியிடங்கூடக் கூறாது மறைத்தாள். எனினும், தலைவியின் வாட்டத்தைக் கண்ட உயிர்த்தோழி, உண்மை உணர்ந்து, தலைவனைக் கண்டு, தலைவியின் துன்பத் தினையும் உயர் பண்பையும் எடுத்துக் கூறி, விரைவில் தலைவியை ஊரறிய மணம் புரிந்துகொள்ளுமாறு வேண்டுகின்றாள்.

குறிப்பு

'தலைவ! உன் நாட்டு மலையில் உள்ள வேங்கை மரம் அருவிகளால் சிறப்படைவதைப் போலத் தலைவியும் வாழ்க்கைப்பட்டு உன் மனையில் சிறப்படைய வேண்டுமென்பது என் விருப்பம்' எனத் தோழி தலைவனிடம் கூறினாள்.

உள்ளுறை

அருவிகள் விழும் இரு மலைகள் - தலைவன் தலைவியரின் சுற்றத்தார்;

அருவிகள் கீழிறங்கி விழும் பாறை - தலைவனின் வீடு;

அருவிகள் இரண்டும் வீழ்வது - இருபக்கத்துச் சுற்றத்தாரும் செய்யும் சிறப்புகள்;

வேங்கை மரம் - தலைவி;

பூங்கொத்து மலர்ந்தது - தலைவியின் மக்கட்பேறு எனக் குறிப்பாய்க் காட்டுகின்றது.

சொற்பொருள்

1. கதிர் - சூரியன்; கனைசுடர் - கதிர்களின் செறிந்த வெயில்; நனஞ்சாரல் - அகன்ற மலைச்சாரல்.
2. மால் வரை - பெருமைமிக்க மலை; அடுக்கம் - பாறை.
3. அதிர் இசை - அதிரும் ஒலி; சினை - கிளை.
4. முதிர் இணர் - முதிர்ந்த பூங்கொத்துகள்; ஊழ் கொண்ட - மலர்ந்த; முழவுத்தாள் - மத்தளம் போன்ற அடிமரம்; எரி வேங்கை - நெருப்பைப் போலப் பூத்துள்ள வேங்கை மரம்.
5. வரி - புள்ளிகள்; நுதல் - நெற்றி; வேழம் - யானை.
6. புரிநெகிழ் - இதழ்கள் முறுக்கவிழ்ந்த; அம்கண் - இடத்தில்; வீறு - பெருமை.
7. திரு - திருமகள்; நயந்து - விரும்பி; தேம்கமழ் - தேன் மணம் வீசுகின்ற; விறல் - வெற்றி.
8. எவ்வம் - துன்பம்.
11. கூரும் நோய் - ஆழ்ந்த துயரம்; சிறப்பவும் - மிகுதியாகவும்.
13. ஓர்தல் - தெளிதல்; நிலையலை - நிலையில்லாதவன்.
14. நோய் - காமநோய்; அட - துன்புறுத்த.
15. ஆயம் - தோழியர்.
16. மாய - மாயமுள்ளவனே!
18. இனையன - இவ்வாறான; நினைவனள் - விளைவை நினைத்து.
19. அனை - அத்தகைய.
20. ஆர் அஞர் - மிகுதியான துன்பம்.
21. செல்கம் - செல்வோம்.

தோழி கூற்று

நற்றிணை 326 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி தலைமகனை வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்திலேயே வந்தொழுகும் தலைவனிடம், தலைவியை விரைவில் மணந்துகொள்ளுமாறு தோழி கூறியது.

கொழுஞ்சுளைப் பலவின் பயன்கெழு கவாஅன்,
செழுங்கோள் வாங்கிய மாச்சினைக் கொக்கின்
மீன்குடை நாற்றம் தாங்கல்செல் லாது,
துய்த்தலை மந்தி தும்மும் நாட!
நினக்கும் உரைத்தல் நாணுவல், இவட்கே
நுண்கொடிப் பீரத்தின் ஊழ்உறு பூஎனப்
பசலை ஊரும் மன்னோ; பல்நாள்
அரிஅமர் வனப்பின்எம் கானம் நண்ண,
வண்டுஎனும் உணரா ஆகி,
மலர்என மரீஇ வரூஉம்,இவள் கண்ணே.

தெளிவுரை

கொழுவிய சுளைகளைக் கொண்ட பலா மரங்களின் பயன் நிறைந்த மலைப்பக்கம்; அங்குச் செழித்துக் காய்த்த குலைகளைத் தாங்கிக்கொண்டுள்ள கிளைகளில் கொக்குகள் வந்து தங்கு கின்றன. அவை, தாம் கொண்டுவந்த மீனைக் கொத்தி உண்ணு தலால் உண்டாகும் புலவு நாற்றத்தைப் பொறுக்க இயலாது அங்குள்ள பஞ்சு போன்ற தலையைக் கொண்ட மந்தி தும்மும். இத்தகைய காட்சி கொண்ட மலைக்குரிய தலைவனே! நுண்ணிய கொடியைக் கொண்ட பீர்க்கில் மலர்ந்த பூ என்னும் படியாக, தலைவிக்குப் பசலை படர்ந்து பரவியுள்ளது. நீயும் பல நாளும் வனப்பு வாய்ந்த எம் கொல்லைக்கு வந்துகொண்டுள்ளாய். செவ்வரி படர்ந்த அழகிய இவள் கண்களை வண்டினம், கண்கள் எனச் சிறிதும் உணராவாய்ப் பூக்கள் எனக் கருதி வந்து சூழ்கின்றன. தலைவ! இதனை உன்னிடம் சொல்வதற்கே நாணமாயிருக்கிறது.

கருத்து

மலை நாட! உன் பிரிவால் தலைவி மேனியில் பசலை படர்ந்து பரவி யுள்ளது. அவளை மணந்து அப்பசலையைப் போக்கு.

விளக்கம்

நீ பல நாளும் வந்து செல்கின்றாய்; எனினும், உன் சிறு பிரிவும் தாங்காது இவள் உடலில் பசலை ஊர்ந்துவிட்டது. இவளை

மணந்து இடையறவு சிறிதுமில்லா உன் முயக்கத்தால், இவள் மீது பசலை படராதிருக்குமாறு செய்க!

உள்ளுறை

பலா மரத்தின் கிளையில் இருந்து கொக்கு மீனைக் கொத்தி உண்ணும்; அப்புலவு நாற்றத்தைப் பொறுக்க இயலாது மந்தி தும்மும் என்பதன் உட்பொருள், தினைப்புனத்தில் குறியிடத்தே தலைவன் தலைவியைக் கண்டு மகிழ, அதனால் பரவிய அலரைத் தாங்க மாட்டாது அன்னை தலைவியைச் சினந்து பார்த்துக் கடுமொழி கூறுகிறாள் என்பதாம்.

சொற்பொருள்

1. பலவு - பலா மரம்; கெழு - பொருந்திய; கவாஅன் - மலைப்பக்கம்.
2. செழுங்கோள் - செழித்துக் காய்த்த; வாங்கிய - குலைகளைத் தாங்கியுள்ள; மாச்சினை - பெரிய கிளை.
3. தாங்கல் செல்லாது - தாங்க இயலாது.
4. துய்த்தலை - பஞ்சு போன்ற தலை; மந்தி - பெண்குரங்கு.
5. நாணுவல் - நாணுகின்றேன்; இவட்கு - இத்தலைவிக்கு.
6. பீரம் - பீர்க்கு; ஊழ்உறு பூ - மலர்ந்த பூ.
7. ஊரும் - பரவும்.
8. அரி - செவ்வரி; அமர் - பரந்த; வனப்பு - அழகு; எம் கானம் நண்ண - நீ எம் புனத்துக்கு வந்துகொண்டுள்ளாய்.
9. வண்டு - வண்டினம்; உணரா ஆகி - கண்கள் என்று உணராவாய்.
10. மலர் என - மலர்கள் என்று கருதி; வரூஉம் - வந்து; மரீஇ - பொருந்துகின்றன; இவள் கண் - இவள் கண்களை.

தோழி கூற்று

அகநானூறு 172 **மதுரைப் பாலாசிரியர் நப்பாலனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி தலைமகளை இடத்துய்த்து வந்து தலைமகனை எதிர்ப்பட்டு வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவியும் தலைவனும் பகல், இரவுக் குறிகளில் கூடி இன்பம் துய்த்து வந்தனர். தலைவியை ஒரு நாள் குறித்த இடத்தில் விட்டுவந்த தோழி, தன்முன் எதிர்ப்பட்ட தலைவனிடம், தலைவியை விரைவில் மணந்து கொள்ளுமாறு குறிப்பாய்க் கூறியது.

வாரணம் உரறும் நீர்திகழ் சிலம்பில்
பிரசமொடு விரைஇய வயங்குவெள் அருவி
இன்இசை இமிழ்இயம் கடுப்ப, இம்மெனக்
கல்முகை விடர்அகம் சிலம்ப, வீழும்
காம்புதலை மணந்த ஓங்குமலைச் சாரல்;
இரும்புவடித்து அன்ன கருங்கைக் கானவன்
விரிமலர் மராஅம் பொருந்தி, கோல்தெரிந்து,
வரிநுதல் யானை அருநிறத்து அழுத்தி,
இகல்அடு முன்பின் வெண்கோடு கொண்டு,தன்
புல்வேய் குரம்பை புலர ஊன்றி,
முன்றில் நீடிய முழவுஉறழ் பலவின்,
பிழிமகிழ் உவகையன், கிளையொடு கலிசிறந்து,
சாந்த ஞெகிழியின் ஊன்புழுக்கு அயரும்
குன்ற நாட!நீ அன்பிலை ஆகுதல்
அறியேன் யான்;அஃது அறிந்தனென் ஆயின்—
அணிஇழை உண்கண் ஆய்இதழ்க் குறுமகள்
மணிஏர் மாண்நலம் சிதைய,
பொன்நேர் பசலை பாவின்று மன்னே!

தெளிவுரை

தலைவனே! உயரமான உனது மலையில் யானைகள் முழங்கும்; சுனைகள் திகழும்; தேனோடு கலந்து வரும் வெண்ணிற அருவி மத்தள முழக்கத்தை ஒப்ப 'இம்' எனும் இன்னொலியுடன் வீழும்; அவ்வோசை மலைப்பிளவுகளிலும் குகைகளிலும் எதிரொலிக்கும்; மலைச்சாரலில் மூங்கில்கள் அடர்ந்திருக்கும்.

இரும்பினை வார்த்துச் செய்தாற்போன்ற வலிமையான கைகளைக் கொண்ட வேட்டுவன், விரிந்த மலரைக் கொண்ட

வெண்கடம்ப மரத்தினைச் சார்ந்து நின்று, அம்பினைத் தேர்ந்தெடுத்து, வரிபொருந்திய நெற்றியினைக் கொண்ட ஆண்யானையின் அரிய மார்பில் செலுத்திக் கொன்றான். பகையினைக் குத்திக் கொல்லும் வலிமை கொண்ட அதன் வெண்மையான கொம்பினைப் பிடுங்கிக்கொண்டு வந்து, ஊகம் புல்லால் வேயப் பெற்ற தன் குடிசையின் முன் ஊன்றி வைத்தான். அதனால் அங்குப் புலால் நாற்றம் வீசியது. அக்குடிசை முற்றத்தில் முழவுபோலும் இனிய பலாக்கனியிலிருந்து பிழிந்தெடுத்த மதுவினை உண்டு களித்தான். பின்பு, தன் சுற்றத்தாருடன் ஆர்ப்பரித்து, சந்தனக்கட்டையை விறகாக வைத்துச் சமைத்து, ஊனுடன் கூடிய சோற்றினை உண்டு மகிழ்ந்தான். அத்தகைய மலைநாடு உன்னுடையது.

நீ தலைவியிடம் அன்பில்லாதவன் என்பதை நான் முன்னர் அறிந்திலேன். அறிந்திருப்பேனாயின் அழகிய அணிகலன்களையும், மையெழுதப்பெற்ற கண்களையும் கொண்ட இளையளாகிய தலைவியின் நீலமணிபோலும் சிறந்த அழகு கெட அவள் மேனியில் பசலை படர்ந்திருக்காது.

கருத்து

குன்ற நாட! நீ அன்பில்லாதவன் என்று அறிந்திருந்தால், நீ தலைவியை அடைய இடந்தந்திருக்க மாட்டேன். அதனால், அவள் மேனியில் பசலையும் படர்ந்திராது. ஊரில் அலர் தோன்றிவிட்டது; அவளை உடனே மணம் செய்துகொள்.

உள்ளுறை

தேனோடு கலந்த அருவி, மலைப்பிளவுகள் எதிரொலிக்க விழும் என்றது, தலைவி தலைவன் களவொழுக்கம் ஊரெங்கும் அலர் பரவ நிற்கிறது என்பதாம்.

யானைக்கோட்டினைக் குடிசை முன் ஊன்றி, சந்தன விறகு கொண்டு கானவன் சமைத்து உண்டு ஆர்ப்பரிக்கிறான் என்பது, தலைவன் தலைவியை எளியவளாய்க் கருதி, களவொழுக்கமாகிய இன்பம் பெற்றுத் தருக்கியிருக்கிறான் என்னும் பொருள் தந்தது.

குறிப்பு

தலைவி ஆற்றாத் தன்மையால் மேனி நலம் அழியவும், நீ சிறிதும் அருளின்றி அவளை வரைந்துகொள்ளாது குறியிடத்துக்கு வருவதையே குறியாய்க் கொண்டிருக்கிறாய் எனத் தலைவனின் அன்பின்மையைத் தோழி குறிப்பிடுகிறாள்.

சொற்பொருள்

1. வாரணம் - யானை; உரறும் - முழங்கும்; சிலம்பு - மலை.
2. பிரசம் - தேன்; விரைஇய - கலந்து.
3. இமிழ் - முழங்கும்; இயம் - மத்தளம், இசைக்கருவி; கடுப்ப - ஒப்ப.
4. கல்முகை - மலைக்குகை; விடர்அகம் - பிளப்பிடம்; சிலம்ப - ஒலிக்க.
5. காம்பு - மூங்கில்; தலைமணந்த - நெருங்கிய.
6. வடித்தன்ன - வார்த்துச் செய்தது போன்ற.
7. மராஅம் - மரா மரம்; பொருந்தி - சார்ந்து; கோல் - அம்பு; தெரிந்து - தேர்ந்தெடுத்து.
8. அரு நிறம் - அரிய மார்பு; அழுத்தி - செலுத்தி.
9. இகல் - பகை; அடுதல் - கொல்லுதல்; முன்பு - வலிமை; வெண் கோடு - தந்தம்.
10. குரம்பை - குடிசை; புலர - புலால் நாற்றம் வீச.
11. முழவுஉறழ் - முழவு போன்ற; பலவின் - பலாப்பழத்தின்.
12. பிழிமகிழ் - பிழிந்தெடுத்த மது; உவகையன் - உண்டு களித்தான்; கிளை - சுற்றம்; கலி சிறந்து - ஆர்ப்பரித்து.
13. சாந்தம் - சந்தனம்; ஞெகிழி - விறகு; ஊன்புழுக்கு - ஊனுடன் கூடிய சோறு; அயரும் - உண்ணும்.
14. அன்பிலை - அன்பில்லாதவன்.
15. அறிந்தனென் ஆயின் - அறிந்திருப்பேன் ஆயின்.
16. குறுமகள் - இளையள், தலைவி.
17. மணி ஏர் - மணி போலும் அழகு; சிதைய - கெட.
18. பொன் நேர் - பொன்னை ஒத்த; பாவின்று - படர்ந்திராது.

தோழி கூற்று

நற்றிணை 96 **கோக்குளமுற்றனார்**

திணை : நெய்தல்

கூற்று

சிறைப்புறமாகத் தோழி தலைமகளுக்கு உரைப்பாளாய் வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

சிறைப்புறத்தேயுள்ள தலைவன் கேட்கும் வகையில் தோழி தலைவியிடம், 'தலைவன் புணர்ந்ததால் உடலெல்லாம் பசப்பு உற்றனையே; இனி என்ன செய்வது?' என்று தலைவன் கேட்குமாறு கூறி, விரைந்து வரைந்துகொள்ளுமாறு அவனைத் தூண்டியது.

இதுவே, நறுவீ ஞாழல் மாமலர் தாஅய்,
புன்னை ததைந்த வெண்மணல் ஒருசிறை,
புதுவது புணர்ந்த பொழிலே; உதுவே
பொம்மல் படுதிரை நம்மோடு ஆடி,
புறம்தாழ்பு இருளிய பிறங்குகுரல் ஐம்பால்
துவரினர் அருளிய துறையே; அதுவே,
கொடுங்கழி நிவந்த நெடுங்கால் நெய்தல்
அம்பகை நெறித்தழை அணிபெறத் தைஇ,
தமியர் சென்ற கானல் என்றுஆங்கு
உள்ளுதோறு உள்ளுதோறு உருகிப்
பைஇப் பையப் பசந்தனை பசப்பே.

தெளிவுரை

"தலைவியே! நறுமணம் கமழும் ஞாழல் மலர்களும் புன்னையின் சிறந்த மலர்களும் உதிர்ந்து பரவிக் கிடக்கும் வெண்மணல் பரப்பில் ஓரிடத்தைக் காட்டி, என்னுடன் தலைவன் முதன் முதலில் கூடிய சோலை இதுவே என்றாய்.

"அலைவீசும் கடலில் தலைவன் என்னோடு நீராடி, என் முதுகில் இருண்டு தாழ்ந்து கிடக்கும் ஐவகையாய்ப் பகுத்து முடிப்பதற்குரிய கூந்தலைப் பிழிந்து ஈரம் போக உலர்த்திய கடற்றுறை இதுவே என்றாய்.

"தண்டுயர்ந்து நீண்ட காம்பினைக் கொண்ட நெய்தலின் நெறித்த தழையைப் பறித்துத் தொடுத்துச் செய்த தழை யாடையை எனக்கு அணிவித்து, அழகு செய்துவிட்டு, அவன் தனியாய் நீங்கிச் சென்ற கடற்கானலும் இதுவேயாகும் என்கின்றாய்.

"இவ்வண்ணம் நினைக்குந்தொறும், நினைக்குந்தொறும் உள்ளமுருகிச் சிறிது சிறிதாய்ப் படர்ந்த பசலை இப்போதோ உன் மேனியை முற்றிலுமாய் மூடிவிட்டது."

கருத்து

தலைவியே! பசலை உன் உடல் முழுதும் பரவிவிட்டது; இனி நீ உய்யும் வழிதான் யாதோ?

குறிப்பு

'தலைவனைப் புணர்ந்த பொழில் இது; அவன் அருளிய துறை அது; நாங்கள் சென்ற கானல் இது எனத் தலைவி சுட்டுவதைக் காட்டி, அவள் நலம் அழிதலைத் தலைவனுக்குக் குறிப்பாய் உணர்த்தி, விரைந்து திருமணம் செய்துகொள்ளுமாறு தோழி, தலைவனிடம் வலியுறுத்திக் கூறினாள்.

சொற்பொருள்

1. இதுவே - இந்த இடமே; நறுவீ - நறுமணம் கொண்ட; மாமலர் - சிறந்த மலர்; தாஅய் - பரந்து.
2. புன்னை - புன்னை மரம்; ததைந்த - நெருங்கிய; ஒரு சிறை - ஒரு பக்கம்.
3. புதுவது புணர்ந்த - முதன்முதலில் கூடிய; பொழில் - சோலை; உதுவே - இதுவே.
4. பொம்மல் - பொலிவு; படுதிரை - கடல் அலையில்; ஆடி - நீராடி.
5. புறம் தாழ்பு - முதுகில் தொங்கிய; இருளிய - கரிய; பிறங்கு குரல் - விளங்கிய தலைமயிர்ச்சுருள்; ஐம்பால் - ஐவகையாய்ப் பகுத்து.
6. துவரினர் - உலர்த்தி; அருளிய - அருள் செய்த.
7. கொடுங்கழி - வளைந்த உப்பங்கழி; நிவந்த - மேலெழுந்த; நெடுங் கால் - நீண்ட தண்டினைக் கொண்ட; நெய்தல் - நெய்தலின்.
8. அம் பகை - அழகாய் மாறுபட்ட; நெறித்தழை - நெறிப்பைக் கொண்ட தழையினை (தழையாடையாய்); அணிபெற - அழகு பெற; தைஇ - அணிவித்து.

9. தமியர் - அவர் தனியே; என்று ஆங்கு - என்று இவ்வாறு.
10. உள்ளுதோறு - நினைக்குந்தொறும்; உருகி - உள்ளம் உருகி.
11. பைஇப்பைய - மெதுவாய் மெதுவாய்; பசந்தனை பசப்பே - பசலையால் மூடப்பெற்றனை.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 277 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரையாது வந்தொழுகும் தலைமகன் புணர்ந்து நீங்குழி எதிர்ப்பட்ட தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

மணந்துகொள்ளாமல் தலைவன் களவில் வந்து செல்கிறான். அவன் தலைவியுடன் கூடி நீங்கிய பொழுது எதிர்ப்பட்ட தோழி, தலைவியை மணந்துகொள்ளுமாறு அவனை வற்புறுத்தியது.

குறவர் முன்றில் மாதீண்டு துறுகல்
கல்லா மந்தி கடுவனோடு உகளும்
குன்ற நாட!நின் மொழிவல்; என்றும்,
பயப்ப நீத்தல் என்?இவள்
கயத்துவளர் குவளையின் அமர்த்த கண்ணே?

தெளிவுரை

விலங்கினங்கள் உரசி உடல் அரிப்பைப் போக்கிக்கொள்ளக் குறவர், தம் முற்றத்தில் நட்டுவைத்துள்ள துறுகல்லில் (குண்டுக் கல்லில்), மந்தி கடுவனோடு சேர்ந்து துள்ளிக் குதித்து விளையாடும் மலைநாட்டுக்கு உரியவனே! உன்னை ஒன்று கேட்கிறேன்; குளத்தில் வளர்கின்ற குவளை மலரைப் போல விரும்பத்தக்க இவள் கண்கள் பசலை எய்துமாறு இவளை விட்டுப் பிரிதல் ஏனோ?

கருத்து

'மலை நாட! நீ பிரிந்தால் இவள் அழகிய கண்கள் பசலையுற்று அழகிழக்கின்றன; பசலை எய்தாதிருக்கப் பலரறிய மணந்துகொள்.'

விளக்கம்

குளத்துவளர் குவளை, குளத்தினின்று நீங்கியதும் வாடி அழகழியும். அதுபோல, உன்னைக் கண்டு களிக்கும் இவள் கண்கள், நீ பிரிந்து செல்லின் பசலையுற்று அழகினை இழக்கும்.

உள்ளுறை

குறவர் முன்றிலில் நடப்பட்டுள்ள 'விலங்குரசும் துறுகல்லில்' மந்தி கடுவனோடு விளையாடும் என்றது, அவ்வாறே தலைவன் தலைவியின் வீட்டிலே பலரும் வாழ்த்திட ஒன்றாய் இருந்து மகிழவேண்டும் என்பதாம்.

சொற்பொருள்

1. முன்றில் - முற்றம்; மா - விலங்கு; தீண்டு - உரசும்; துறுகல் - நட்டு வைத்துள்ள குண்டுக்கல்.
2. கடுவன் - ஆண்குரங்கு; உகளும் - துள்ளிக் குதித்து விளையாடும்.
3. மொழிவல் - கூறுவேன்.
4. பயப்ப - பசப்ப; நீத்தல் - பிரிந்து செல்லுதல்; என்? - என்ன காரணம்?
5. கயம் - குளம்; குவளை - குவளை மலரைப் போல; அமர்த்த - விரும்பத்தக்க.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 264 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரையாது வந்தொழுகுந் தலைமகனைப் பகற்குறிக்கண்ணே எதிர்ப்பட்டுத் தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவன், தலைவியை மணந்துகொள்ளாமல் களவொழுக்கத்திலேயே ஈடுபட்டு வந்தான். அவனைப் பகற்குறியிடத்தில் கண்ட தோழி, தலைவியை உடனே திருமணம் செய்துகொள்ளுமாறு வற்புறுத்திக் கூறியது.

இளம்பிறை அன்ன கோட்ட கேழல்
களங்கனி அன்ன பெண்பாற் புணரும்
அயம்திகழ் சிலம்ப! கண்டிகும்
பயந்தன மாதோ,நீ நயந்தோள் கண்ணே!

தெளிவுரை

"*பிறைச்சந்திரன் போன்ற கொம்பினைக் கொண்ட ஆண் பன்றி, களாப்பழம் போலக் கருநிறமுள்ள பெண்பன்றியுடன் சேர்ந்து நீர் அருந்தும் மலையினைக் கொண்ட தலைவனே! நீ விரும்பும் தலைவியின் கண்களில் பசலை பூத்துள்ளது. அக்கண்களைப் பார்" என்று தோழி, தலைவனிடம் கூறினாள்.*

கருத்து

'மலைநாட! உன்னோடு சேர இயலாமல் தலைவியின் கண்கள் பசலை பெற்றுள்ளன. அவற்றைப் பார். அப்பசலை மறைய அவளை மணம் செய்துகொள்.'

விளக்கம்

"*தலைவ! ஆண்பன்றி தன் பெண்பன்றியுடன் சேர்ந்து நீரருந்துவதைக் காண். நீயும் உன் காதலியாகிய தலைவியுடன் கூடி இன்பத்தை நுகர உடனே திருமணம் செய்துகொள்" எனத் தோழி வற்புறுத்திக் கூறுகிறாள்.*

சொற்பொருள்

1. இளம் பிறை - (இளைய) மூன்றாம் பிறை; கோடு - கொம்பு; கேழல் - ஆண்பன்றி.
2. களங்கனி - களாப்பழம்; புணரும் - சேர்ந்து (நீர் அருந்தும்).
3. அயம் - நீர்; சிலம்பன் - மலைநாட்டுத்தலைவன்; கண்டிகும் - காண்க.
4. பயந்தன - பசந்தன - பசலை பெற்றுள்ளன; நயந்தோள் - விரும்பப் பட்டவள் (தலைவி).

தோழி கூற்று

ஐந்திணை ஐம்பது 46 **மாறன் பொறையனார்**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறிவந்து புணர்ந்து நீங்கும் தலைமகனைக் கண்ணுற்று நின்று தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவன் பகற்குறியிடத்தே வந்து தலைவியைக் கூடி நீங்கும்போது, தோழி அவனைப் பார்த்து, தலைவியை மணந்துகொள்ள வேண்டும் என்று கூறியது.

ஓதம் தொகுத்த ஒலிகடல் தண்முத்தம்
பேதை மடவார்தம் வண்டல் விளக்கயரும்
கானலஞ் சேர்ப்ப! தகுவதோ என்தோழி
தோள்நலம் தோற்பித்தல் நீ.

தெளிவுரை

கடல்முத்துகளை அலைகள் கரையில் கொண்டுவந்து சேர்க்க, பேதைப்பருவமுள்ள சிறுபெண்கள், அம்முத்துகளை எடுத்துத் தாம் கட்டிய மணல்வீட்டுக்கு விளக்காக வைத்து விளையாடும் சோலைகள் நிறைந்த அழகிய கடற்கரைக்குத் தலைவனே! நீ என் தோழியின் தோள்களின் நலத்தை மெலிவித்தல் உனக்குத் தக்க ஒன்றோ?

கருத்து

தலைவியின் தோள் மெலிவைத் தவிர்க்க விரைந்து வரைந்துகொள்.

சொற்பொருள்

1. ஓதம் - அலை; தொகுத்த - (கொண்டுவந்து) சேர்த்து வைத்த; தண் - குளிர்ச்சி பொருந்திய; முத்தம் - முத்து.
2. பேதை - பேதைப்பருவமுள்ள; மடவார் - பெண்கள்; வண்டல் - மணலில் கட்டிய சிறுவீடு; விளக்கு அயரும் - விளக்குகளாய்க் கொண்டு விளையாடும்.
3. சேர்ப்ப - தலைவ; தகுவதோ - தக்கதோ?
4. நலம் - அழகு; தோற்பித்தல் - மெலிவித்தல்.

தோழி கூற்று

குறுந்தொகை 90 **மதுரை எழுத்தாளன் சேந்தன்பூதனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாகிய தலைமகட்கு, தலைமகன் சிறைப் புறமாகத் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

வரைந்துகொள்ள வருவதாய்த் தலைவன் குறிப்பிட்ட காலம் நீட்டித்ததால் தலைவி ஆற்றாளாயினாள். அந்நிலையில் ஒரு நாள் தலைவன் சிறைப்புறமாய் வந்து நின்றபோது, தோழி அவன் கேட்குமாறு, தலைவியிடம் கூறியது.

எற்றோ வாழி? தோழி! முற்றுபு
கறிவளர் அடுக்கத்து இரவில் முழங்கிய
மங்குல் மாமழை வீழ்ந்தென, பொங்குமயிர்க்
கலைதொட இழுக்கிய பூநாறு பலவுக்கனி,
வரைஇழி அருவி உண்துறைத் தரூஉம்
குன்ற நாடன் கேண்மை
மென்தோள் சாய்த்தும் சால்பீன் றன்றே.

தெளிவுரை

தலைவியே! வாழ்க! மிளகுக்கொடி வளரும் மலை அடுக்கத்தில் கரு முதிர்ந்து, இரவிலே இடியிடித்த மேகங்கள் மிகுந்த அளவு மழையைப் பொழிந்தன. நிறைந்த மயிரைக் கொண்ட ஆண்குரங்கு தொட்டதனால் நழுவி விழுந்த பலாக்கனி, பூப்போல மணந்தது. மலையிலிருந்து விழும் அருவி அதனை ஏந்திக் கொண்டுவந்து, ஊரார் நீருண்ணும் துறையில் சேர்த்தது. இத்தகைய மலைநாட்டுக்குரிய தலைவனுடன் நீ கொண்ட நட்பு, உன் மெல்லிய தோளை மெலிவித்தாலும், உறுதி மாறாத அமைதியை உன் மனத்தில் விளைவித்துள்ளதே. இஃது எவ்வாறோ?

கருத்து

தலைவியே! மலைநாட்டுத் தலைவனுடன் கொண்ட நட்பால் நீ மெலிந்தாய்! ஆயினும், உன் இயல்பு கெடவில்லை. உன் மெலிவு நீங்கத் தலைவன் உன்னை மணப்பானாக!

விளக்கம்

"தலைவனுடன் கொண்ட நட்புக் காரணமாய் உன் உடம்பு இளைத்தது. ஆயினும், நீ அவனிடம் கொண்ட அன்பிலே குறை வில்லை" என்று தோழி, தலைவியைப் பார்த்துக் கூறினாள்.

குறிப்பு

பலாக்கனி குரங்கின் கைக்கு அகப்படாமல், அருவி, அதனைக் கொண்டுவந்து ஊரார்க்குப் பயன்படச்செய்தது. இத்தொடர், தலைவி மற்றவர் மனத்தில் இடம் பெறாமல் உன் மனத்திலேயே இடம் பெற்றாள்; இவளை விரைவில் மணந்து இல்லறத்தை மேற்கொள்ள வேண்டும் என்னும் குறிப்புப் பொருளைக் கொண்டுள்ளது.

சொற்பொருள்

1. எற்றோ? - இஃது எவ்வாறோ?; முற்றுபு - கரு முதிர்ந்து.
2. கறி - மிளகுக்கொடி; அடுக்கம் - மலைப்பக்கம்; முழங்கிய - இடித்த.
3. மங்குல் - மேகங்கள்; மாமழை - பெரிய மழை; பொங்கு - நிறைந்த, மிகுதியான.
4. கலை - ஆண்குரங்கு; தொட - தொட்டதனால்; இழுக்கிய - நழுவி விழுந்த; பலவுக்கனி - பலாப்பழம்.
5. வரை - மலை; இழி - கீழிறங்கும்; உண்துறை - ஊரார் நீர் உண்ணும் துறை; தரூஉம் - கொண்டுவந்து சேர்க்கும்.
6. கேண்மை - நட்பு.
7. சாய்த்தும் - இளைக்கும்படி செய்தும், மெலிவித்தும்; சால்பு - அமைதி; ஈன்று அன்று - விளைவித்துள்ளது.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 193 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரையாது வந்தொழுகும் தலைமகன், தலைமகட்கு வளை கொண்டு வந்து கொடுத்துழி, 'பண்டை வளை போலாவாய் மெலிந்துழி நீங்கா நலனுடையவோ இவை' எனத் தலைமகள் மெலிவு சொல்லித் தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

நின் பிரிவால் தலைவி, வளையல் கழன்று விழுமாறு உடல் மெலிந்திருக் கிறாள். மேலும் அவள் மெலியாதிருக்க உடனே வதுவை மேற்கொள் என்று தோழி தலைவனை விரைவுபடுத்தியது.

வலம்புரி உழுத வார்மணல் அடைகரை
இலங்குகதிர் முத்தம் இருள்கெட இமைக்கும்
துறைகெழு கொண்க!நீ தந்த
அறைபுனல் வால்வளை நல்லவோ தாமே.

தெளிவுரை

வலம்புரிச்சங்குகள் அங்குமிங்குமாய் ஊர்ந்து செல்லுத லாலே உழுதது போன்று தடம் பதிக்கும் நெடிய மணல் பரந்த கடற்கரையில் சிதறிக் கிடக்கும் ஒளி மிகுந்துள்ள முத்துகள், இருள் நீங்குமாறு ஒளி வீசும். அத்தகைய துறையைக் கொண்ட நெய்தல்நிலத் தலைவனே! கடற்சங்கை அறுத்துச் செய்யப்பட்ட வெண்மையான வளையல்களைக் கையுறையாய் நீ தந்துள்ளாய். இவள் முன்பு அணிந்திருந்த வளையல்கள் உன் பிரிவால் இவள் வருந்தி மெலிந்தபோது கழன்று விழுந்துவிட்டன. நீ இப்போது தரும் இவ்வளையல்கள் அவள் மெலிந்தாலும் கழலாது நிலைத் திருக்கும் நன்மையைக் கொண்டனவோ!

கருத்து

'வளையல்கள் என்றும் ஒரே நன்மையைக் கொண்டனவாய் இருத்தல் பொருட்டு, நீ இவளை மணந்துகொண்டு என்றும் பிரியாத இல்லற வாழ்வில் திளைக்க வேண்டும்' எனத் தோழி தலைவனிடம் கூறினாள்.

விளக்கம்

திருமணம் செய்துகொள்ளாமல், தலைவன் களவொழுக்கத்திலேயே நாட்டம் கொண்டிருந்தான். ஒரு நாள் அவன் தலைவிக்குக் கடற்சங்கு வளையல்களைக் கையுறையாய்க் கொண்டுவந்து தந்தான். அப்போது தோழி தலைவனை நோக்கி, 'நீ பிரிவதால் இவள் உடல் மெலிந்து இவ்வளையல்கள் கழன்று விழுந்துவிடுகின்றன. அவ்வாறு நேராதிருக்க இவளை உடனே மணந்துகொள்' என்றாள்.

சொற்பொருள்

1. வலம்புரி - வலம்புரிச்சங்கு; வார்மணல் - மணல் படிவதால்; அடைகரை - அமையும் கரை.
2. இலங்கு கதிர் - ஒளிக்கதிர்; முத்தம் - முத்து; இருள்கெட - இருள் நீங்க; இமைக்கும் - ஒளி வீசுகின்ற.
3. கெழு - பொருந்திய; கொண்க - நெய்தல்நிலத் தலைவன்.
4. அறைபுனல் - ஒலிக்கும் நீரைக் கொண்ட கடல்; வால் - வெண்மையான; வளை - சங்கு.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 238 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரையாது வந்தொழுகும் தலைமகற்கு, 'இவள் கவின் நீ வந்த காலத்து வருதலால், நீ போன காலத்து அதன் தொலைவு உனக்கு அறியப்படாது' எனத் தோழி சொல்லி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவன் திருமணத்தில் நாட்டமின்றிக் களவொழுக்கத்திலேயே ஈடுபடுகிறான். அவன் வரும் காலத்தில் இருக்கும் தலைவியின் அழகு, அவன் பிரியும்பொழுது அகன்றுவிடுகிறது. இதை அவன் அறியவில்லையே எனத் தோழி கூறி விரைவில் திருமணம் செய்துகொள்ளத் தூண்டியது.

வார்கோட்டு வயத்தகர் வாராது மாறினும்
குருமயிர்ப் புருவை ஆசையின் அல்கும்
மாஅல் அருவித் தண்பெருஞ் சிலம்ப
நீஇவண் வரூஉங் காலை
மேவரும் மாதோ இவள்நலனே தெய்யோ!

தெளிவுரை

நீண்ட கொம்பும் வலிமையும் கொண்ட செம்மறியாட்டுக் கிடாய் குறித்த நேரத்தில் தன்னிடம் வாராது இருந்தாலும், நல்ல நிறம் பொருந்திய மயிரைக் கொண்ட அதற்குரிய பெண்ஆடு, காலம் தாழ்த்தியேனும் கிடாய் தன்பால் வரும் என்னும் ஆசையோடு அதனை எதிர்பார்த்துக் காத்திருக்கும். இத்தகைய காட்சி கொண்ட பெரிய அருவி வீழும் குளிர்ந்த பெரிய மலைநாட்டுக்குரியவனே! நீ இங்கு வரும்போது இவளிடம் அழகு ஏற்பட்டுவிடுகிறது. (வாராத காலத்து அது நீங்கிவிடுகிறது என்பதை நீ அறிவதில்லை.)

கருத்து

தலைவ! தலைவியின் அழகு அகன்றுவிடாமல் இருக்க வேண்டு மென்றால் உடனே திருமணத்திற்கு ஆவன செய்.

விளக்கம்

'நீ வரும் பொழுதிலே இவளிடம் அழகு வந்து பொருந்தும்; நீ பிரியும்பொழுது அழகு அகலும். இவள் எப்போதும் அழகோடு இருத்தலை விரும்பினையாயின், நீ இவளை உடனே மணந்து கொள்' என்கிறாள் தோழி, தலைவனிடம்.

உள்ளுறை

ஆண்ஆடு உரிய காலத்தில் வாராது போய்விடினும் அது வந்து சேரும் என்னும் ஆசையினாலே பெண்ஆடு எதிர்பார்த்துக் காத்திருக்கும் என்னும் உள்ளுறையின் பொருள், தலைவன் தான் குறித்தவண்ணம் வாராது காலத்தை நீட்டித்தாலும் அவனைக் காணலாம் என்னும் ஆசையாலே தலைவி வாழ்ந்திருக்கிறாள் என்பதாம்.

சொற்பொருள்

1. வார்கோடு - நீண்ட கொம்பினைக் கொண்ட; வயத்தகர் - வலிமை மிக்க ஆட்டுக்கிடாய்; மாறினும் - நீங்கிப் போயினும்.
2. குரு - நிறம்; புருவை - பெண்ஆடு; அல்கும் - தங்கிக் காத்திருக்கும்.
3. மாஅல் - பெரிய; சிலம்ப - மலைநாட்டவனே!
4. இவண் - இங்கே; வரூஉங்காலை - வரும்பொழுது.
5. மேவரும் - பொருந்தும்; நலன் - அழகு.

4-5.இவள் நலன் நீ வருங்காலை மேவரும்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 275 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரையாது வந்தொழுகும் தலைமகன் இடையிட்டு வருதலால் எதிர்ப்பாடு பெறாத தோழி, குறியிடத்து எதிர்ப்பட்டு, அவன் கொடுமை கூறி நெருங்கிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் திருமணத்திற்கு முயற்சியினை மேற்கொள்ளாமல் தொடர்ந்து களவொழுக்கத்திலேயே ஈடுபட்டிருந்தான். அவன் விட்டுவிட்டு வருவதால் தோழியால் அவனைச் சந்திக்க இயலவில்லை. ஒருநாள் தோழி அவனைக் குறியிடத்தில் சந்தித்து, அவன் மணம் செய்துகொள்ளாத கொடுமையைக் கூறித் தலைவியை மணந்துகொள்ளுமாறு கூறியது.

குரங்கின் தலைவன் குரூஉமயிர்க் கடுவன்
சூரல்அம் சிறுகோல் கொண்டு, வியல்அறை
மாரி மொக்குள் புடைக்கும் நாட!
யாம்நின் நயந்தனம் எனினும், எம்
ஆய்நலம் வாடுமோ அருளுதி எனினே?

தெளிவுரை

பெண்குரங்கிற்குத் தலைவனாகிய நல்ல நிறம் கொண்ட (பளபளப்பான) மயிர் பொருந்திய ஆண்குரங்கு, பிரப்பங் கொடியின் சிறிய கோலைக்கொண்டு, அகன்ற பாறையிடத்தில்

மழையினாலுண்டாகிய நீர்க்குமிழிகளை அழித்து விளையாடும் காட்சி கொண்ட நாட்டிற்குத் தலைவனே! நாங்கள் உன்னை மிகுதியும் விரும்புகிறோம். (உன் பிரிவு எங்களை மெலிவிக்கிறது.) நீ எமக்கு அருள் செய்வாயாயின், நுட்பமான எங்கள் அழகு வாடாது.

கருத்து

தலைவ! நீ அருள் செய்யாவிடின் தலைவியின் அழகு கெடும்; அழகு கெடாதிருக்க அவளை மணந்து அருள் செய்.

விளக்கம்

பாறையில் மழையினால் ஏற்பட்ட குமிழைப் பிரம்பு கொண்டு உடைப்பது குரங்கிற்கு விளையாட்டு; குமிழுக்கோ அழிவு. தலைவன் அருள் செய்யாதிருப்பது அவனுக்கு விளையாட்டு; தலைவிக்கோ அழகிழப்பு.

சொற்பொருள்

1. குரூஉ - நிறம்; கடுவன் - ஆண்குரங்கு.
2. சூரல் - பிரம்பு; வியல் அறை - அகன்ற பாறை.
3. மாரி - மழை: மொக்குள் - குமிழி; புடைக்கும் - அடிக்கும்.
4. நயந்தனம் - விரும்பினோம்.
5. அருளுதி எனின் - அருள்வாய் என்றால்; எம் ஆய் நலம் - எம் நுட்பமான அழகு; வாடுமோ - வாடாது.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 278 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

மணந்துகொள்ளுதல்பற்றிய சிந்தனையில்லாமல் களவில் வந்து போய்க் கொண்டிருக்கும் தலைவன், வேலி ஓரமாய் நிற்கிறான். அவன் கேட்குமாறு தலைவி தோழியிடம் கூறியது.

சிலம்பின் வெதிரத்துக் கண்விடு கழைக்கோல்
குரங்கின் வன்பறழ் பாய்ந்தென, இலஞ்சி
மீன்எறி தூண்டிலின் நிவக்கும் நாடன்
உற்றோர் மறவா நோய்தந்து,
கண்டோர் தண்டா நலம்கொண் டனனே!

தெளிவுரை

மலையிலுள்ள கணுக்கள் பொருந்திய மூங்கிலில் அமர்ந் திருந்த வலிய குரங்குக்குட்டி, அதை விடுத்து அடுத்த மூங்கிலுக்குத் தாவும். அப்போது, அந்த மூங்கில் நீர்நிலையில் மீன் பிடிப்பதற்குப் போடப்பட்ட தூண்டிற்கோல் விசுக்கென மேலே செல்வதுபோல நிமிரும். இவ்வாறாய மூங்கில்கள் நிறைந்துள்ள மலைநாட்டுக்குரிய நம் தலைவன், தன்னைச் சார்ந்தோராகிய நமக்கு என்றும் மறக்க இயலாத துன்பத்தைத் தந்தான்; அதற்கு ஈடாய், ஒருமுறை கண்டோர் மீண்டும் மீண்டும் காண விழையும் நம் பேரழகினைக் கொண்டு சென்றுவிட்டான்.

கருத்து

தோழி! தலைவன் நமக்குத் துன்பத்தைத் தந்து அதற்கு ஈடாய் நம் அழகைக் கொண்டுசென்றுவிட்டான். அவன் நம்மை மணந்துகொண்டால் முன்பு அவன் கொண்டு சென்ற நம் அழகு திரும்பும். எனவே, அவன் நம்மைத் திருமணம் செய்து அதைத் திரும்பத் தரட்டும்.

விளக்கம்

குரங்குக்குட்டி மூங்கிலின் நுனியில் இருக்கும்போது அம்மூங்கில் வளையும்; அது வேறு மூங்கிலுக்குத் தாவியதும் வளைந்திருந்த அந்த மூங்கில் வேகமாய் மேல்நோக்கி நிமிரும். அதுபோல, தலைவன் தலைவியை நெருங்கும்போது வளைந்து அவளிடம் அன்பு காட்டுகிறான்; தலைவியை விட்டு அகன்ற வுடன் நிமிர்ந்து தலைவிக்குத் துன்பம் செய்கிறான்.

சொற்பொருள்

1. சிலம்பு - மலை; வெதிரம் - மூங்கில்; கண்விடு - கணுக்கள் பொருந்திய; கழைக்கோல் - மூங்கில் குச்சி.

2. வன்பறழ் - வலிய குட்டி; பாய்ந்தென - பாய்ந்தபோது; இலஞ்சி - குளம்.
3. மீன்எறி தூண்டிலின் - மீன் பிடிப்பதற்கு வீசிய தூண்டிற்கோலைப் போல; நிவக்கும் - விசுக்கென மேலே செல்லும்.
4. உற்றோர் - தன்னைச் சார்ந்தோராகிய நமக்கு; மறவா - மறக்க இயலாத; நோய் தந்து - துன்பத்தைத் தந்து.
5. கண்டோர் - ஒரு முறை கண்டோர்; தண்டா - மீண்டும் மீண்டும் பார்த்துத் தீராத; நலம் - பெண்மை நலத்தை; கொண்டனன் - கவர்ந்து சென்றுவிட்டான்.

தோழி கூற்று

கலித்தொகை 135 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரையாது வந்தொழுகுந் தலைமகனைத் தோழி நெருங்கி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

திருமணம் செய்துகொள்ளாமல் வந்து செல்லும் தலைவனிடம் தோழி, தலைவியை உடனே திருமணம் செய்துகொள்ளுமாறு வற்புறுத்திக் கூறியது.

தரவு

துணைபுணர்ந்து எழுதரும் தூநிற வலம்புரி
இணைதிரள் மருப்பாக, எறிவளி பாகனா –
அயில்திணி நெடுங்கதவு அமைத்து,அடைத்து, அணிகொண்ட
எயில்இடு களிறேபோல் – இடுமணல் நெடுங்கோட்டைப்
பயில்திரை நடுநன்னாள், பாய்ந்துறூஉம் துறைவ!கேள்;

தாழிசை

கடிமலர்ப் புன்னைக்கீழ்க் காரிகை தோற்றாளைத்
தொடிநெகிழ்ந்த தோளளாத் துறப்பாயால், மற்றுநின்
குடிமைக்கண் பெரியதோர் குற்றமாய்க் கிடவாதோ;

ஆய்மலர்ப் புன்னைக்கீழ் அணிநலம் தோற்றாளை
நோய்மலி நிலையளாத் துறப்பாயால், மற்றுநின்
வாய்மைக்கண் பெரியதோர் வஞ்சமாய்க் கிடவாதோ;

திகழ்மலர்ப் புன்னைக்கீழ்த் திருநலம் தோற்றாளை
இகழ்மலர்க் கண்ணளாத் துறப்பாயால், மற்றுநின்
புகழ்மைக்கண் பெரியதோர் புகராகிக் கிடவாதோ;

எனவாங்கு–
சொல்லக் கேட்டனை ஆயின், வல்லே,
அணிகிளர் நெடுவரை அலைக்கும்நின் அகலத்து,
மணிகிளர் ஆரம் தாரொடு துயல்வர
உயங்கினள் உயிர்க்கும்என் தோழிக்கு
இயங்கொலி நெடுந்திண்தேர் கடவுமதி, விரைந்தே.

தெளிவுரை

"அலையில் பெண்ணும் ஆணுமாய் இணைந்து வரும் வலம்புரிச்சங்குகளைத் தந்தமாகவும், கடுமையாய் வீசும் காற்றைப் பாகனாகவும் கொண்டு கடல்அலைகள் மணல்மேடு களை, வேல் முனைகள் பொருத்தப்பட்ட அழகிய கோட்டைக் கதவை மோதும் யானைபோல, நடுநிசி நேரத்திலும் மோதிக் கொண்டிருக்கும். இத்தகைய கடல் துறையினைக் கொண்ட தலைவனே! நான் கூறுவதைக் கேட்பாயாக!

(அலை என்னும் யானை, வலம்புரிச்சங்குகளைக் கொம்பாக வும், காற்றைப் பாகனாகவும் கொண்டு, கடற்கரை என்னும் கோட்டையை மோதுகிறது.)

"மணம் பொருந்திய மலர்களைக் கொண்ட புன்னைமர நிழலில் உன்னைச் சேர்ந்தமையால் தன் பெண்மை அழகை உன்னிடம் தோற்ற தலைவியை, இப்பொழுது தோள்வளை நெகிழுமாறு பிரிந்திருக்கிறாய்! இஃது உனது குடிப்புகழுக்குக் குற்றமாகாதா?

"அழகிய மலர்களைக் கொண்ட புன்னைமர நிழலில் தன் அழகை உனக்கெனவே தந்துவிட்ட தலைவியை இப்பொழுது

துன்புற்று வருந்துமாறு பிரிந்திருக்கின்றாய்! இஃது, உண்மையே கூறும் உன்னிடத்து நேர்ந்த ஒரு பொய்யாகாதா?

"அழகுற மலர்ந்து விளங்கும் புன்னையின் நிழலின்கீழ் திருமகள் போன்ற தனது அழகையெல்லாம் உனக்கெனவே தந்து உன்னை நம்பிய தலைவியின் கண்களுக்கு முன்பு தோற்ற மலர்கள் இன்று இகழுமாறு பொலிவிழந்து நிற்கும், அவளை நீ பிரிந்திருக்கிறாய். இஃது உன் புகழுக்கு நேர்ந்த குற்றமாகாதா?

"இக்குற்றங்களை நீக்கிட இயலுமா? இயலாதே. ஆதலின், என் சொல்லைக் கேட்டு, காமநோயால் வருந்திப் பெருமூச்சு விடும் என் தலைவியின் துன்பம் தீருமாறு, மலையை வெல்லும் உன் மார்பில் இரத்தின மாலையும் மணிமாலையும் அசைய, தேரை விரைந்து செலுத்திவந்து வரைந்துகொள்!"

கருத்து

'தலைவ! காமநோயால் வருந்தும் தலைவியின் துன்பம் தீர உன் தேரினை விரைந்து செலுத்தி வந்து வரைந்துகொள்.'

விளக்கம்

"புன்னைமர நிழலில், தன் பெண்மை நலனை உன்னிடம் இழந்துவிட்ட தலைவி துன்புற்று வருந்துமாறு இப்போது அவளை நீ பிரிந்திருக்கிறாய். அதனால் அவள் வளையல்கள் கழன்று விழுமளவுக்கு மெலிந்திருக்கிறாள்; அழகழிந்து காம நோயால் வருந்துகிறாள்; மலரினும் சிறந்த அவள் கண்கள் கண்ணீரைச் சொரிகின்றன.

"இஃது உன் நற்குடிப்பிறப்புக்குக் களங்கத்தை ஏற்படுத்தும்; நீ சொன்ன சொல் பொய்யாகும்; உன் புகழுக்குக் களங்கம் ஏற்படும்.

"உன்னையே நினைந்து பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கும் தலைவியை மணந்து அவள் ஆறுதல் கொள்ளும்படி செய்" எனத் தலைவனிடம் தோழி வற்புறுத்திக் கூறுகிறாள்.

உள்ளுறை உவமம்

கடல், தன்னால் பாதுகாக்கப்பட வேண்டிய மணல் மேடு களைச் சிதைக்கும். இவ்வுள்ளுறை உவமம் மூலம், தலைவன் தான்

பாதுகாக்க வேண்டிய தலைவியைச் சிதைக்கிறான் என்னும் உட்பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. துணை புணர்ந்து - ஆணும் பெண்ணுமாய் இணைந்து; தூநிறம் - வெள்ளை நிறம்; வலம்புரி - வலம்புரிச்சங்கு.
2. இணைதிரள் - திரண்ட இரு; மருப்பு - தந்தம்; எறி - வீசுகின்ற; வளி - காற்று.
3. அயில் - வேலின் நுனி; திணி - பதிக்கப்பெற்ற.
4. எயில் - கோட்டை; இடு - மோதுகின்ற.
5. பயில் திரை - ஒலியோடு வரும் அலை.
6. கடி - மணம்; காரிகை - பெண் (தலைவி); தோற்றாளை - (பெண்மை நலம்) இழந்தவளை.
7. தொடி - வளையல்; தோளளாத் - தோளைக் கொண்டவளாய்; துறத்தல் - நீங்குதல்.
8. கிடவாதோ? - அமையாதா?
10. நோய்மலி - காமநோய் மிகுந்து.
14. புகர் - குற்றம்.
16. வல்லே - விரைவாக.
17. அணிகிளர் - அழகு ஒளிரும்; நெடுவரை - அகன்ற மலை; அலைக்கும் - வெல்லும்; அகலம் - மார்பு.
18. ஆரம் - மணிமாலை; தார் - பூமாலை; துயல்வர - அசைய.
19. உயங்குதல் - வாடுதல்; உயிர்த்தல் - பெருமூச்சு விடுதல்.
20. திண்தேர் - வலிமையான தேர்; கடவுமதி - செலுத்துக.

தோழி கூற்று

நற்றிணை 231 **இளநாகனார்**

திணை : நெய்தல்

கூற்று

சிறைப்புறமாகத் தோழி சொல்லி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவன் களவொழுக்கத்தை நாடிச் சிறைப்புறத்தானாக, அவன் செவியிற்படுமாறு தோழி தலைவியை நோக்கி விரைவில் மணம் கொள்ளுமாறு கூறியது.

மைஅற விளங்கிய மணிநிற விசும்பில்
கைதொழும் மரபின் எழுமீன் போல,
பெருங்கடல் பரப்பின் இரும்புறம் தோய,
சிறுவெண் காக்கை பலவுடன் ஆடும்
துறைபுலம்பு உடைத்தே தோழி! பண்டும்,
உள்ஊர்க் குரீஇக் கருஉடைத் தன்ன,
பெரும்போது அவிழ்ந்த கருந்தாள் புன்னைக்
கானல்அம் கொண்கன் தந்த
காதல் நம்மொடு நீங்கா மாறே.

தெளிவுரை

தலைவியே! வீட்டில் வாழும் ஊர்க்குருவியின் முட்டை உடைந்தது போன்ற, பெரிய அரும்புகள் மலர்ந்ததும் கரிய அடிமரத்தைக் கொண்டதுமான புன்னை மரங்களைக் கொண்டுள்ளது, கடற்கரைச்சோலை. இச்சோலைக்குரிய நம் தலைவன் நமக்கு முன்பு தந்த காதல் இன்னும் நம்மை விட்டுச் சிறிதும் நீங்காதிருக்கிறது.

மாசின்றி விளங்கும் நீலமணி போன்ற வானத்தில், பலரும் கைதொழுது போற்றும் தகைமை பெற்ற எழுமீன் கூட்டம் விளங்கும். அம்மீன் கூட்டம்போல, பெரிய கடற்பரப்பில் தமது கருமையான முதுகு நனையுமாறு, வெண்மையான கழுத்தினைக் கொண்ட நீர்க்காக்கைகள், சேவலும் பெடையுமாகப் பலவும் ஒன்றுசேர்ந்து நீரைக் குடைந்து மகிழும். இத்தகைய கடற்கரையில் முன்பு அருள் செய்த தலைவன் இப்போது இல்லாமையால், தனிமை நம்மை மிகவும் வருத்துகின்றது.

கருத்து

தலைவியே! முன்பு தலைவனோடு நாம் கூடி மகிழ்ந்திருந்த கடல்துறை, இப்போது நாம் தனிமையுற்றிருப்பதால் வருத்துகிறது.

விளக்கம்

“நீல வானில் எழுமீன் கூட்டம் தோன்றுவதுபோலப் பரந்த கடலில் வெண்ணிறக் கழுத்தினைக் கொண்ட காக்கைகள்

நீராடிக் கொண்டுள்ளன. சோலையில் ஊர்க்குருவி முட்டைகள் உடைந்தன போன்ற தோற்றமுள்ள மலர்களைக் கொண்ட புன்னை மரங்கள் நிற்கின்றன. இக்கடற்கரைச்சோலையில் முன்பு தலைவன் தந்த காதல் நம்மிடம் இன்னும் சற்றும் நீங்காதிருக்க, அத்தலைவன் நீங்கியிருப்பது நமக்குத் துன்பத்தைத் தருகிறது" என்று தோழி, தலைவன் கேட்கும் வகையில் தலைவியிடம் கூறினாள். அதனைக் கேட்கும் தலைவன், தலைவியின் தனிமை நீங்க, வரைவொடு வருவான் என்பது தோழியின் நம்பிக்கை.

குறிப்பு

சிறுவெண்காக்கைகள் தம்தம் துணையை விட்டுப் பிரியாது நீராடி மகிழ்ந்திருக்கின்றன எனக் கூறுவதன்மூலம், தலைவனும் அவ்வாறு இருக்க வேண்டுமானால் அவன் தலைவியை மணந்து, தன்னுடன் பிரியாது இருத்திக்கொள்ள வேண்டும் என்பது குறிப்பாய் உணர்த்தப்படுகிறது.

சொற்பொருள்

1. மைஅற - மாசற்று; விசும்பில் - ஆகாயத்தில்.
2. எழுமீன் - எழுமீன் கூட்டம்.
3. இரும்புறம் - கருமையான முதுகு; தோய - நனையுமாறு.
4. ஆடும் - நீரைக் குடைந்து ஆடும்.
5. பண்டு - முன்பு.
6. குரீஇ - குருவி; கரு - முட்டை.
7. பெரும்போது - பெரிய அரும்புகள்; அவிழ்ந்த - மலர்ந்த; கருந்தாள் - கரிய அடிமரம்.
8. கொண்கன் - தலைவன்.
9. நம்மொடு - நம்மை விட்டு; நீங்காமாறே - நீங்காதிருக்கும்.

தோழி கூற்று

நற்றிணை 263 **இளவெயினனார்**

திணை : நெய்தல்

கூற்று

சிறைப்புறமாகத் தோழி தலைமகளை வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவன் சிறைப்புறமாய் நிற்பதறிந்த தோழி, தலைவியை நோக்கி, "தலைவன் நம்பால் வந்து செல்லும் களவொழுக்கத்தால் தோன்றியுள்ள அலர் முதலியவற்றை நாணத்தினால் நாம் நேராய்க் கூறாவிடினும் நம் கண்ணீரே அவன் அறியும்படி உணர்த்திவிட்டது" என்று சொல்லி, தலைவன் விரைவில் வரைவொடு வருமாறு வற்புறுத்திக் கூறியது.

பிறைவனப்பு இழந்த நுதலும், யாழநின்
இறைவரை நில்லா வளையும், மறையாது
ஊர்அலர் தூற்றும் கௌவையும், நாணிட்டு
உரைஅவற்கு உரையாம் ஆயினும், இரைவேட்டு,
கடுஞ்சூல் வயவொடு கானல் எய்தாது,
கழனி ஒழிந்த கொடுவாய்ப் பேடைக்கு,
முடமுதிர் நாரை கடல்மீன் ஒய்யும்
மெல்லம் புலம்பன் கண்டு,நிலை செல்லாக்
கரப்பவும் கரப்பவும் கைம்மிக்கு,
உரைத்த தோழி! உண்கண் நீரே.

தெளிவுரை

தலைவி! அழகினை இழந்து விளங்கும் பிறை போன்ற உன் நெற்றியைப்பற்றியும், முன் கையில் தங்காது கழன்றோடும் உன் வளையல்களைப்பற்றியும், ஊரார் நேரில் கூறாது புறம்பாய்த் தூற்றும் பழியுரைகளைப்பற்றியும் நமக்குள்ள நாணமிகுதியால் தலைவனிடம் நாம் ஒரு சொல்லேனும் சொல்லாதொழிந்தோம்! எனினும், தலைச்சூலினால் தோன்றிய இயலாத் துன்பத்தினால் நெய்தல் நிலத்தை அடையாது மருத நிலத்திலேயே தங்கிவிட்ட பெண்நாரைக்கு, உடல் வளைந்த நாரைச்சேவல் கடல்மீனை அன்புடன் கொண்டுபோய்க் கொடுக்கும். இத்தகைய காட்சி

கொண்ட கடற்கரைக்குரிய தலைவனைக் கண்டதும் பலமுறை அடக்க முயன்றும் இயலாது கரை கடந்து வெளிப்படுகின்ற கண்ணீரே, நாம் கூறாச் செய்திகள் அனைத்தையும் கூறி விட்டதுவே!

கருத்து

தலைவி! நம் துன்பங்களை நாம் கூறாது மறைத்தாலும், நம் கண்ணீர் தலைவனிடம் கூறிவிட்டது. தலைவன் மணப்பதன்வழி நம் கண்ணீரைத் துடைக்க வேண்டும்.

உள்ளுறை

வயலிலேயே தங்கிய பேடைக்கு ஆண்நாரை கடல்மீனைக் கொண்டுவந்து கொடுக்கும் என்பதன் வாயிலாய்த் தலைவியை இல்லத்திலே கொண்டுவந்து வைத்துத் தானும் பொருளைத் தேடி வந்து அவளுடனே கூடி இன்பமான இல்வாழ்க்கையினை நடத்த வேண்டும் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப் படுகிறது.

சொற்பொருள்

1. பிறை வனப்பு - பிறையைப் போன்ற அழகு.
2. இறைவரை நில்லா - தங்குதற்குரிய இடத்தே நில்லாது; இறை - முன் கை; மறையாது - நேரில் கூறாது புறம்பாய்.
3. கௌவை - பழிச்சொல்; நாணிட்டு - நாண மிகுதியால்.
4. உரை அவற்கு உரையாம் - ஒரு சொல்லும் நாம் அவர்க்கு உரையேம்; இரைவேட்டு - இரையை விரும்பி.
5. கடுஞ்சூல் வயவு - தலைச்சூலால் தோன்றிய இயங்க இயலாத் துன்பத்தினால்; கானல் எய்தாது - கானற்கழிக்குச் செல்லாது.
6. கழனி ஒழிந்த - கழனியிலேயே தங்கிவிட்ட; கொடுவாய் - வளைந்த வாய் .
7. முடமுதிர் நாரை - உடல் வளைந்த நாரைச்சேவல்; ஒய்யும் - (அன்புடன் கொண்டுபோய்க்) கொடுக்கும்.
8. மெல்லம் புலம்பன் - மென்னிலமான கடற்கரைக்குத் தலைவன்.
9. கரப்பவும் கரப்பவும் - பலமுறை அடக்க முயன்றும்; கைம்மிக்கு - கரை கடந்து வெளிப்படுகின்ற.
10. கண் நீரே - கண்ணீரே; உரைத்த - அனைத்தையும் கூறிவிட்டது.

தோழி கூற்று

கைந்நிலை 52 **புல்லங்காடனார்**

திணை : நெய்தல்

கூற்று

சிறைப்புறமாக நின்ற தலைமகன் கேட்க அவனைத் தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைவொடு வாராததால் அவனைக் காணாது தான் இறந்துபட நேருமோ எனக் கூறித் தலைவி புலம்பியிருப்பதாய்ச் சொல்லித் தோழி தலைவனிடம் வரைவு கடாயினாள்.

அன்னையும் இல்கடிந்தாள்; யாங்(கு)இனியாம் என்செய்கம்?
புன்னையங் கானலுள் புக்(கு)அருந்தும் – நின்னை
நினையான் துறந்த நெடுங்கழிச் சேர்ப்பற்(கு)
உரையேனோ, பட்ட பழி?

தெளிவுரை

" 'அன்புமிக்க என் தாயும் மாறுபட்ட என் தன்மையைக் கண்டு கடுஞ்சொல் கூறுகின்றாள். நாம் இனி என்ன செய்வது எனத் தோன்றவில்லை. புன்னை மரங்களைக் கொண்ட அழகிய கடற்கரையில் புகுந்து மீனை உண்ணும் நாரையே! உன்னையும் நினையாது பிரிந்து போன நெடிய உப்பங்கழிகளைக் கொண்ட கடல்நிலத் தலைவனிடம், என்னைப்பற்றிக் கூறப்படும் பழிச் சொற்களோடு கூடிய அலரினைப்பற்றிச் சொல்லுவேனோ, சொல்லாமல் இறந்துபடுவேனோ?' என்று தலைவி அழுது புலம்புகிறாள்." இவ்வாறு சிறைப்புறமாய் நிற்கும் தலைவன் கேட்கும் வகையில் தோழி கூறுகிறாள்.

கருத்து

தலைவன் வரைவொடு வாரானாயின், தலைவி இறந்துபடுவாள்.

விளக்கம்

தலைவன் வரைவுக்கான பொருளீட்டிவரத் தலைவியைப் பிரிந்து சென்றுள்ளான். தலைவனோடு தலைவி கொண்டுள்ள

களவுறவைப்பற்றி ஊரார் பழிச்சொல் பேசுகின்றனர். தலைவன் விரைவில் மணம் பேசி வாராவிடில் தலைவி, 'நான் தலைவனைக் காணாது இறந்துவிடுவேனோ' என்று நாரையிடம் கூறிப் புலம்பிக்கொண்டிருப்பதாய்த் தலைவன் செவியில் விழுமாறு தோழி கூறுகிறாள்.

குறிப்பு

'தான் அடைந்த பிரிவுத் துன்பத்தைத் தலைவனுக்குச் சொல்லிவிட்டு இறந்தால் பயன் உண்டு' என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. கடிந்தாள் - சுடுசொல் கூறுகின்றாள்; என் செய்கம்? - என்ன செய்வது?
2. புன்னை அம் கானல் - புன்னை மரங்களைக் கொண்ட அழகிய கடற்கரைச்சோலை; நின்னை - (நாரையே) உன்னை.
3. நினையான் - நினையாது; துறந்த - பிரிந்த.
4. பழி - (ஊரில் எழுந்துள்ள) பழிச்சொற்கள்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 251 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரையாது வந்தொழுகும் தலைமகற்கு வரைவுவேட்ட தோழி கூறியது.

கூற்று விளக்கம்

திருமண முயற்சி மேற்கொள்ளாமல் களவொழுக்கத்திலேயே காலம் போக்கும் தலைவனிடம், தலைவியைத் திருமணம் செய்துகொள்ள வேண்டுமெனத் தோழி கூறியது.

குன்றக் குறவன் ஆர்ப்பின், எழிலி
நுண்பல் அழிதுளி பொழியும் நாட!
நெடுவரைப் படப்பை நும்ஊர்க்
கடுவரல் அருவி காணினும் அழுமே.

தெளிவுரை

குன்றில் வாழும் குறவன், (தான் வளர்க்கும் தினைப்பயிர்க்கு நீர் வேண்டி, தெய்வத்தைப் பராவி) ஆரவாரம் செய்தால் மேகங்களும் திரண்டு உடனே சிறுசிறு துளிகளாய்த் தொடங்கிப் பெருமழையினைப் பொழியும். அத்தகைய மலை நாட்டினைக் கொண்ட தலைவனே! நீண்ட மலைச்சாரல் களையும் தோட்டங்களையும் கொண்ட உன் ஊரில் உள்ள அருவியைக் கண்டாலே, தலைவி உன் பிரிவாற்றாமையைச் சொல்லி அழுகின்றாள்.

கருத்து

தலைவ! தலைவி உன் பிரிவைச் சிறுபொழுதும் தாங்காது புலம்பு கின்றாள். அவளை மணந்து அவள் புலம்பலை நீக்கு.

விளக்கம்

தண்ணீர் இன்றித் தினை வாடுதல் கண்டு, குறவர்கள் வேண்டும்போது மேகம் மழை பெய்யும் என்னும் தொடர், அலர் முதலியவற்றால் தலைவி வருந்துதல் கண்டு, தோழி தலைவனை வேண்டும்போது அவன் விரைந்துவந்து தலைவியை மணந்து கொள்ள வேண்டும் என்னும் கருத்தினைத் தருகிறது.

குறிப்பு

குறவர் வேண்டியவுடனே மழை வழங்கும் மேகத்திற்கு உள்ள கருணை உன்னிடம் இல்லையே என்பது ஒரு குறிப்பு.

குறமாந்தர் ஆரவாரம் செய்தால் மழை பொழியும் என்பது பண்டைய நம்பிக்கை.

சொற்பொருள்

1. ஆர்ப்பின் - ஆரவாரம் செய்தால்; எழிலி - மேகம்.
2. நுண்பல் அழி துளி பொழியும் - நுண்ணிய பலவாகிய மழைத்துளிகள் பெருமழையாய்ப் பொழியும்.
3. நெடுவரை - நீண்ட மலை; படப்பை - சோலை, தோட்டம்.
4. கடுவரல் - விரைந்து ஓடிவரும்; அழும் - அழுவாள்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 142 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரையாது வந்தொழுகும் தலைமகன் இரவுக்குறிக்கண் சிறைப்புறத் தானாக, 'நின் கண் துயிலுதல்பொருட்டு நீ அவனை மறந்திடல் வேண்டும்' என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

திருமணம் செய்துகொள்ளாது களவொழுக்கமே மேற்கொண்டொழுகும் தலைவன் ஒரு நாள் இரவுக்குறியில் தலைவி வீட்டருகே நின்றான். அவன் வந்திருப்பதறிந்த தோழி, தலைவியை நோக்கி, 'உன் கண் உறங்க வேண்டு மென்றால் நீ அவனை மறத்தல் வேண்டும்' என்றபோது, தலைவி தோழி யிடம் சொல்லியது.

எக்கர் ஞாழல் இறங்குஇணர்ப் படுசினைப்
புள்இறை கூரும் துறைவனை
உள்ளேன் தோழி! படீஇயர்என் கண்ணே!

தெளிவுரை

தோழி! மணல்மேட்டிலுள்ள ஞாழலின் தாழ்ந்து தொங்கு கின்ற பூங்கொத்துகள் பொருந்திய கிளையில் நீர்வாழ் பறவைகள் வந்து தங்கும் துறையினைக் கொண்ட நம் தலைவனை, நீ அறிவுறுத்தியவாறே இனி நினையாதிருப்பேன்; அதனால் என் கண்களும் இனிதே உறங்கட்டும்!

கருத்து

'தலைவ! தலைவி உறங்கிப் பல நாள்கள் ஆயின. துயிலாத அவள் கண்கள் துயில, அவளை மணந்து துணையாக்கிக்கொள்.'

குறிப்பு

துறைவன் நினைவு தோன்றும்போதெல்லாம் அவன் வரையாது வந்தொழுகுவதும், அதனால் ஊரலர் தோன்றுவதும் போன்ற பல நினைவுகள் எழுந்து அலைத்தலால், தலைவியின் கண்கள் துயிலவில்லை. அதனைக் காணும் தோழி அவளிடம் தலைவனை நினையாதே என்றாள்.

ஞாழலின் தாழ்ந்து தொங்குகின்ற பூங்கொத்துகள் பூச்சினைகள் புட்கள் வந்து அமர்வதால் கெடுதலுறுவதுபோல, பிரிவென்னும் துயரம் வந்து தங்குதலாலே தலைவியும் படர்மிகுந்து வருந்தி நலிகின்றாள்.

உள்ளுறை

தாழ்ந்து தொங்கும் ஞாழலின் பூச்சினை வருத்தமுறப் புள் வதியும் என்பதன் உட்பொருள், தலைவியை மணம் புரியாமை யால் அவளுக்கு நேரும் நோயறியாது, தான் வேண்டும் இன்பத்தைப் பெறவே தலைவன் முயல்கிறான் என்பதாம்.

உரிய நேரத்தில் புள்ளினங்களும் வந்து தங்குதலைத் தலைவன் அறிந்திருக்கிறான் என்பதன் உள்ளுறைப் பொருள், தலைவியை மணந்து அவளோடு இல்லிருந்து வாழ்தலை அறியாதிருக் கின்றனனே என்பதாம்.

சொற்பொருள்

1. ஞாழல் - ஞாழல் மரம்; இறங்குஇணர் - தாழ்ந்து தொங்குகின்ற பூங்கொத்து; படு - பொருந்திய; சினை - கிளை.
2. புள் - பறவை; இறை கூரும் - தங்கி இருக்கும்.
3. உள்ளேன் - நினைக்க மாட்டேன்; படீஇயர் - இமை பொருந்தி உறங்கட்டும்.

தோழி கூற்று

ஐந்திணை ஐம்பது 16 **மாறன் பொறையனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி வந்து பெயரும் தலைமகனைக் கண்ணுற்று நின்ற தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

இரவுக்குறி வந்து தலைவியிடம் அளவளாவிச் செல்லும் தலைவனைப் பார்த்து, தலைவியை மணந்துகொள்ளும்படி தோழி சொல்லியது.

கொடுவரி வேங்கை பிழைத்து, கோட்பட்டு,
மடிசெவி வேழம் இரீஇ – அடிஓசை
அஞ்சி ஒதுங்கும் அதர்உள்ளி ஆர்இருள்
துஞ்சா சுடர்த்தொடி கண்.

தெளிவுரை

மடிந்த காதுகளைக் கொண்ட யானை, வளைந்த வரிகள் பொருந்திய பெரும்புலியினால் தாக்கப்பட்டுப் பிழைத்துத் தப்பியோடியது. பின்வாங்கி ஓடிய யானை, தன் நடையால் உண்டாகும் ஓசை புலிக்குக் கேட்டுவிடுமோ என்றஞ்சி மெதுவாய் நடந்து செல்லும். தலைவ! நீ திரும்பிச் செல்லும் வழி, அந்தக் காட்டுவழியேயாகும். இதனை எண்ணியதால், ஒளிமிக்க வளையல் அணிந்த தலைவியின் கண்கள் நேற்றிரவு முழுவதும் தூக்கம் கொள்ளவில்லை. எனவே, 'நீ விரைவில் தலைவியை மணஞ்செய்து அவள் துன்பம் தவிர்' என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

நீ வந்து செல்லும் வழியின் ஏதம் கருதித் தலைவி மிகவும் வருந்துகிறாள். அவ்வருத்தம் நீங்கத் தலைவியை வரைவு கொள்.

சொற்பொருள்

1. கொடு - வளைந்த; வரி - கோடு; வேங்கை - புலி; பிழைத்து - தப்பி; கோட்பட்டு - தாக்கப்பட்டு.
2. மடிசெவி - மடிந்த காது; வேழம் - ஆண் யானை; இரீஇ - பின்வாங்கி; அடி ஓசை - தன் நடையினால் உண்டாகும் ஓசை.
3. அஞ்சி - (புலிக்குக் கேட்டுவிடுமோ என்று) பயந்து; ஒதுங்கும் - மெதுவாய் நடக்கும்; அதர் - காட்டுவழி; உள்ளி - நினைத்து; ஆர்இருள் - மிகுந்த இருள்.
4. துஞ்சா - உறங்காவாயின; சுடர்த்தொடி - ஒளிமிக்க வளையல் அணிந்த தலைவி.

தோழி கூற்று

ஐந்திணை ஐம்பது 17 **மாறன் பொறையனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி வந்து பெயரும் தலைமகனைக் கண்ணுற்று நின்ற தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

இரவுக்குறி வந்து தலைவியிடம் அளவளாவிச் செல்லும் தலைவனைப் பார்த்துத் தலைவியை மணந்துகொள்ளுமாறு தோழி சொல்லியது.

மஞ்(சு)இவர் சோலை வளமலை நன்னாட
எஞ்சாது நீவருதி என்றெண்ணி – அஞ்சித்
திருஒடுங்கும் மென்சாயல் தேம்கோதை மாதர்
உருஒடுங்கும் உள்உருகி நின்று.

தெளிவுரை

மேகங்கள் படர்ந்து செல்லுகின்ற பூஞ்சோலைகளைக் கொண்ட வளமிக்க மலைகள் நிறைந்த நல்ல நாட்டிற்குரிய தலைவனே! திருமகளும் பின்வாங்கும்படியான மெல்லிய சாயலைக் கொண்டவள், தலைவி. தேன் பொருந்திய மலர் மாலையை அணிந்த அவள், நீ நாள்தோறும் இரவில் தவறாமல் கொடுமைமிக்க வழியினைக் கடந்து வருகிறாய் என்பதை நினைந்து, உனக்கு என்ன தீங்கு நேருமோ என அஞ்சி வருத்தம் கொள்கிறாள்; அதனால், அழகிய மேனி வாட்டமடைய மெலிந்து நிற்கின்றாள்; (ஆதலின், நீ இரவில் வரவேண்டா. மணம் புரிவதற்கான வழிவகைகளை ஆய்க) என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

தலைவ! நீ வரும் வழியின் தன்மையை நினைந்து தலைவி வருந்துகிறாள். ஆதலின், இரவில் வாராதே; விரைவில் மணந்துகொள்.

சொற்பொருள்

1. மஞ்சு - மேகம்; இவர் - மேலேறிப் படர்ந்து செல்லும்.
2. எஞ்சாது - தவறாமல்; வருதி - வருகின்றாய்; அஞ்சி - பயந்து.

3. திரு - திருமகள்; ஒடுங்கும் - பின்வாங்கும்; மென்சாயல் - நல்ல அழகு; தேம்கோதை - தேன் பொருந்திய மலர்மாலை; மாதர் - அழகிய.
4. உரு ஒடுங்கும் - மேனி வாட்டமுற்று; உள் உருகி - மனம் வருந்தி.

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 7 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி விலக்கி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியில் வந்து கூடிச் செல்லும் தலைவனிடம் அது வேண்டா என விலக்கி மணந்துகொள்ளுமாறு தோழி கூறியது.

யாழும் குழலும் முழவும் இயைந்தென
வீழும் அருவி விறல்மலை நல்நாட!
மாழைமான் நோக்கியும் ஆற்றாள் இரவரின்
ஊர்அறி கௌவை தரும்.

தெளிவுரை

"*யாழிசையும், குழலோசையும், முழவொலியும் ஒருங்கு சேர்ந்தாற்போன்ற ஒலிகளை எழுப்பும் அருவிகள் பாய்கின்ற மலைநாட்டுக்குத் தலைவனே! நீ இனி இரவில் வந்தால், அழகிய மான் போன்ற மருண்ட பார்வையினைக் கொண்ட தலைவி உனக்கு நேரும் இடையூற்றினை எண்ணி வருந்துவாள். மேலும், ஊரார் அறியின் பழிச்சொற்களும் பரவி நிற்கும்*" *என இரவுக்குறியை விலக்கி மணந்துகொள்ளுமாறு தோழி தலைவனிடம் கூறுகிறாள்.*

கருத்து

தலைவ! நீ வரும் வழியின் ஏதம் கருதித் தலைவி வருந்துகிறாள். மேலும், ஊர் மக்கள் பழிச்சொல்லும் நீங்க நீ தலைவியை மணங்கொள்.

குறிப்பு

பல்வேறு கருவிகள் ஒருங்கிசைந்து ஒலி எழுப்புவது போல அருவிகள் வீழ்ந்து ஒலிக்கும். அதுபோல ஊரிலும் பல்வேறு வகையான பழிச்சொற்கள் எங்கும் பரவி நிற்கும்.

சொற்பொருள்

1. இயைந்தென - ஒருங்கு கூடியது என.
2. விறல் - பெருமை.
3. மாழை - அழகிய; நோக்கி - பார்வையைக் கொண்ட தலைவி; இரவரின் - நீ இரவிலே வந்தால்.
4. ஊர்அறி - ஊரார் அறிந்தால்; கௌவை - பழிச்சொற்கள்; தரும் - உண்டாகும்.

தோழி கூற்று

அகநானூறு 168 **கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி வந்த தலைமகனை இரவுக்குறி விலக்கி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியில் வந்து, தலைவியுடன் கூடி மகிழும் தலைவன் அவளை மணந்துகொண்டான் அல்லன். காட்டைக் கடந்து இரவில் அவன் வருதலில் உள்ள இடர்ப்பாட்டைத் தோழி தெரிவித்து, அத்துன்பங்களுக்கு அஞ்சித் தலைவி நடுங்குகிறாள் என்று சொல்வதன்வாயிலாய் மணத்திற் குரிய ஏற்பாட்டோடு அவன் வரவேண்டுமென விரும்புகிறாள்.

யாமம் நும்மொடு கழிப்பி, நோய்மிக,
பனிவார் கண்ணேம் வைகுதும்; இனியே;
ஆன்றல் வேண்டும்— வான்தோய் வெற்ப;
பல்ஆன் குன்றில் படுநிழல் சேர்ந்த
நல்ஆன் பரப்பின் குழூஉமூர் ஆங்கண் —
கொடைக்கடன் ஏன்ற கோடா நெஞ்சின்
உதியன் அட்டில் போல ஒலிஎழுந்து,
அருவி ஆர்க்கும் பெருவரைச் சிலம்பின்,
ஈன்றணி இரும்பிடி தழீஇ, களிறுதன்

தூங்குநடைக் குழவி துயில்புறம் காப்ப,
ஒடுங்குஅளை புலம்பப் போகி, கடுங்கண்
வாள்வரி வயப்புலி கல்முழை உரற,
கானவர் மடிந்த கங்குல்,
மான்அதர்ச் சிறுநெறி வருதல் நீயே.

தெளிவுரை

"வானத்தைத் தொட்டுக்கொண்டிருப்பதுபோல உயர்ந்த மலைகளைக் கொண்ட தலைவனே!

"இரவுப்பொழுதையெல்லாம் உன்னோடு சேர்ந்து இன்பமாய்க் கழிக்கின்றோம். நீ சென்ற பின்னர், துன்பம் மிகுதியாகின்றது. அதனால், பகல் முழுதும் கண்ணீர் சிந்தும் கண்களோடு வருந்துகின்றோம். ஆதலால், இரவில் வருவதை நீ நிறுத்திக்கொள்ள வேண்டும்.

"'பல்லான் குன்றம்' என்னும் மலையின் நிழல் மிக்க இடங்களில் பசுக்கூட்டங்கள், தங்குவதற்குரிய பரப்பைக் கொண்டுள்ளது, 'குழுமூர்' எனும் ஊர். அவ்வூரில், அறம் வழுவாத எண்ணம் கொண்ட உதியன், கொடை வழங்குதலைக் கடமையாய்க்கொண்டு வாழ்ந்துகொண்டிருக்கிறான். அவனது சமையற்கூடத்தில் எழும் பேரொலியைப் போல, பெரிய மலையின் பக்கங்களிலெல்லாம் அருவிகள் பேரொலியுடன் வீழ்ந்துகொண்டிருக்கின்றன.

"அவ்வருவிக்கு அருகில் ஆண்யானை, அண்மையில் கன்றை ஈன்ற பெண்யானையைத் தழுவி நின்று, தன் கன்று உறங்கும் இடத்தைக் காவல் செய்கின்றது. கடுமையான கண்ணினையும் வாள் போன்ற வரிகளையும் கொண்ட வலிய புலி, தான் தங்கிய குகை தனிமையாகும்படி வெளியே வந்து, மலைக்குகை எதிரொலிக்க முழங்குகின்றது.

"வேட்டையாடும் கானவர்களும் அயர்ந்து உறங்கும் நள்ளிரவில், விலங்குகள் இரை தேடி அலைகின்ற இடுகிய பாதையில் வருவதை, இனியேனும் நீ நிறுத்திக்கொள்ள வேண்டும்."

கருத்து

'இரை தேடிக் கொடிய விலங்குகள் திரியும் இரவில் இடுகிய பாதையில் வரவேண்டா. தலைவியை உடனே மணந்துகொள்'

விளக்கம்

வெற்ப! நாங்கள் இரவின் யாமத்தை உன்னோடு கழித்து, நீ பிரிதலால் துன்பமிக்குப் பகலெல்லாம் கண்ணீர் விட்டு அழுது கொண்டிருக்கின்றோம். இரவில் இன்பம் எய்துதலாலே அதை நினைந்து பகலில் அழ வேண்டியிருக்கிறது; இரவில் வாரா திருந்தால் பகலில் அழ வேண்டியது இல்லையன்றோ? ஆதலால், நீ இரவில் வருதலைத் தவிர்.

குறிப்பு

களிறு பிடியினைத் தழுவி, தன் கன்றினைக் காத்து நிற்பதுபோல, நீயும் தலைவியை மணந்து இல்லற வாழ்வை மேற்கொண்டு காத்துப் பேணுதல் வேண்டும்.

சொற்பொருள்

1. கழிப்பி - கழித்து; நோய் - வருத்தம்.
2. பனிவார் - நீர் ஒழுகும்; வைகுதும் - தங்கியிருக்கிறோம்.
3. ஆன்றல் வேண்டும் - ஒழிதல் வேண்டும்.
4. பல்ஆன் குன்று - 'பல்லான் குன்று' என்னும் மலை.
5. குழுமூர் ஆங்கண் - குழுமூர் என்னும் அவ்விடத்தில்.
6. ஏன்ற - ஏற்றுக்கொண்ட; கோடா நெஞ்சின் - கோட்டமில்லாத நெஞ்சினைக் கொண்ட.
7. உதியன் - உதியன் என்பானது; அட்டில் - சமையற்கூடம்.
8. ஆர்க்கும் - ஒலிக்கும்.
9. ஈன்றணி - அண்மையில் ஈன்ற.
10. தூங்குநடை - அசைந்த நடை; குழவி - கன்று; துயில் புறம் - உறங்குகின்ற இடத்தை.
11. ஒடுங்குஅளை - ஒடுங்கிய குகை; புலம்ப - தனித்திட.
12. கல் முழை - மலைக்குகை; உரற - முழங்க.
13. கானவர் - வேட்டுவர்; மடிந்த - துயிலும்; கங்குல் - இரவு.
14. மான்அதர் - விலங்குகள் செல்லும் வழி.

தோழி கூற்று

அகநானூறு 202 **ஆவூர்கிழார் மகனார் கண்ணனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறிக்கண் வந்து நீங்கும் தலைமகற்குத் தோழி சொல்லி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்திலேயே விருப்பமுள்ள தலைவன் ஒரு நாள் இரவுக் குறியில் வந்து தலைவியைக் கூடிப் பிரியும்போது அவனைக் கண்ட தோழி, அவன் தலைவியை மணந்துகொள்ளவேண்டும் என்று சொல்லியது.

வயங்குவெள் அருவிய குன்றத்துக் கவாஅன்,
கயந்தலை மடப்பிடி இனன்,ஏ மார்ப்ப,
புலிப்பகை வென்ற புண்கூர் யானை
கல்லகச் சிலம்பில் கைஎடுத்து உயிர்ப்பின்,
நல்இணர் வேங்கை நறுவீ கொல்லன்
குருகுஊது மிதிஉலைப் பிதிர்வின் பொங்கி,
சிறுபல் மின்மினி போல, பலஉடன்
மணிநிற இரும்புதல் தாவும் நாட!
யாமே அன்றியும் உளர்கொல் – பானாள்,
உத்தி அரவின் பைத்தலை துமிய,
உரஉரும் உரறும் உட்குவரு நனந்தலை,
தவிர்வுஇல் உள்ளமொடு எஃகுதுணை யாக
கனைஇருள் பரந்த கல்அதர்ச் சிறுநெறி
தோராது வரூஉம் நின்வயின்
ஆர்அஞர் அரும்படர் நீந்து வோரே?

தெளிவுரை

வெண்மையான அருவிகள் விளங்கும் மலைச்சாரல்; அதில் ஆண்யானை ஒன்று மென்மையான தலையைக் கொண்ட தன் இளைய பெண்யானையுடனும் தன் இனத்துடனும் இன்புற் றிருந்தது. அது தன் இனத்திற்குப் பகையான புலியைப் போரிட்டு

வென்றதால் உடலெங்கும் புண்பட்டிருந்தது; போரிட்ட களைப்பினால் கற்கள் கொண்ட மலைப்பகுதியில் தன் துதிக்கையை உயர்த்திப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தது. அம்மூச்சுக்காற்றினால் அருகிலிருந்த வேங்கை மரத்தின் பூங்கொத்துகளில் இருந்த நறுமணப் பூக்கள், கொல்லன் உலைக்களத்தில் துருத்தியை மிதித்து ஊதுதலால் வெளிவரும் காற்றால் உலைத் தீயிலிருந்து வெளிப்படும் தீப்பொறிகள்போல, உதிர்ந்து கீழேயிருந்த நீலமணி போன்ற புதரில் பரவிக் கிடந்தன. புதரில் பூக்கள் கிடந்த அக்காட்சி அப்புதரில் சிறிய பல மின்மினிப் பூச்சிகள் பரவிக் கிடப்பனபோல் தோன்றியது. இத்தகைய மலை நாட்டுக்கு உரியவனே!

நடு இரவில் நீ நடந்து வரும் வழியோ, புள்ளிகளைக் கொண்ட படத்தினைப் பெற்ற பாம்பின் தலை துண்டாகுமாறு செய்யக் கூடிய வலிய இடி முழங்கி அச்சம் தருகிறது. நீயோ குன்றாத ஊக்கத்துடன், வேலே துணையாய், கற்கள் பரவிக் கிடக்கின்ற, இருள் கௌவியிருக்கும் அச்சிறிய வழியில் எதிர்வரும் துன்பங் களை ஆராயாது வருகின்றாய்.

அதனால் உனக்கு நேரும் பொறுத்தற்கரிய துன்பத்தை எண்ணிப் பார்ப்போர் எம்மையன்றிப் பிறரும் உளரோ? (எம்மையன்றி எவரும் இரார்.)

கருத்து

"நாடனே! கற்கள் நிரம்பிய வழியில் நேரிடும் துன்பங்களைப் பொருட் படுத்தாது நீ வருகின்றாய், உனக்கு ஏற்படவிருக்கும் ஏதங்களை எண்ணிப் பார்ப்பார் எம்மைத் தவிர பிறர் இருக்கின்றனரா?" என்று தோழி ஆறு பார்த்துற்ற அச்சம் கூறி வரைவு கடாவுகின்றாள்.

உள்ளுறை

புலிப்பகையை வென்று யானை பெருமூச்சுவிட, வேங்கையின் மலர்கள் மின்மினிபோலப் புதரில் உதிரும். இத்தொடர், எதிர்ப்படும் துன்பங்கள் அனைத்தையும் கடந்து வந்து, களவிற் கூடித் தலைவன் இன்புறுதலால், எங்கும் ஊரலர் பெருமளவில் எழுந்து பரவுகின்றது, என்பதை உணர்த்துகிறது.

சொற்பொருள்

1. வயங்குதல் - விளங்குதல்; கவாஅன் - மலைச்சாரல்.
2. கயம் - மென்மை; மடப்பிடி - இளைய பெண்யானை; இனன் - கூட்டம்; ஏமார்ப்ப - இன்பமடைய.
3. புண்கூர் - புண்மிக்க.
4. கல்லக - கற்களைக் கொண்டுள்ள; கையெடுத்து - துதிக்கையைத் தூக்கி; உயிர்ப்பின் - பெருமூச்சு விடுதலால்.
5. நறுவீ - நறிய பூக்கள்.
6. குருகு - துருத்தி; ஊதுமிதி - மிதித்து ஊதும்; உலை - உலையிலிருந்து வெளிவரும்; பிதிர்வின் - தீப்பொறிகள் போல.
8. மணிநிற - நீலமணி போன்ற நிறமுள்ள; இரும்புதல் - பெரிய புதரில்; தாவும் - பரவி விழும்.
9. யாமே அன்றியும் உளர்கொல்? - எம்மையன்றிப் பிறரும் உளரோ?; பானாள் - நடு இரவில்.
10. அரவின் உத்தி - புள்ளிகளைக் கொண்ட பாம்பினது; பை தலை துமிய - படம் பொருந்திய தலை துணிபட.
11. உர - வலிமையான (உரம் - வலிமை); உரும் - இடி; உரறும் - முழங்கும்; உட்கு - அச்சம்; நனந்தலை - அகன்ற இடம்.
12. எஃகு - வேல்.
13. கனை இருள் - செறிந்த இருள்; அதர் - வழி.
14. தேராது - ஆராயாது; நின்வயின் - உன் இடத்து.
15. ஆர் - பொறுத்தற்கரிய; அஞர் - துன்பம்; படர் - நினைவு.

தோழி கூற்று

அகநானூறு 318 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி வந்த தலைமகனை வரவு விலக்கி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியில் தலைவியோடு அளவளாவத் தலைவன் வருகிறான். அவனிடம், 'இன்றுமுதல் இப்படி இரவில் வாராதே' என்று கூறித் தடுத்துத் திருமண முயற்சியில் அவன் ஈடுபட வேண்டும் எனத் தோழி வற்புறுத்தியது.

கான மான்அதர் யானையும் வழங்கும்;
வான மீமிசை உருமும்நனி உரறும்;
அரவும் புலியும் அஞ்சுதகவு உடைய;
இரவுச் சிறுநெறி தமியை வருதி–
வரைஇழி அருவிப் பாட்டொடு பிரசம்
முழவுசேர் நரம்பின் இம்மென இமிரும்,
பழவிறல் நனந்தலைப் பயமலை நாட –
மன்றல் வேண்டினும் பெறுகுவை; ஒன்றோ
இன்றுதலை யாக வாரல்; வரினே,
எம்உறு துயரமொடு யாம்இவண் ஒழிய
எற்கண்டு பெயருங் காலை, யாழநின்
கல்கெழு சிறுகுடி எய்திய பின்றை,
ஊதல் வேண்டுமால் சிறிதே– வேட்டொடு
வேய்பயில் அழுவத்துப் பிரிந்தநின்
நாய்பயிர் குறிநிலை கொண்ட கோடே!

தெளிவுரை

தண்ணுமை ஒலியுடன் யாழ் நரம்பின் ஒலியும் சேர்ந்திசைப்பதுபோல மலையிலிருந்து விழும் அருவி ஒலியுடன் வண்டின் ஒலியும் சேர்ந்து, 'இம்' என ஒலிக்கும். இத்தகைய இயற்கை வளத்துடன் தொன்றுதொட்டு வரும் வெற்றியையும் அகன்ற பரப்பையும் கொண்ட பயன் மிகுந்த மலைநாட்டுத் தலைவனே!

காட்டில் விலங்குகள் நடமாடும். வழியில் யானைகள் திரியும். வானில் மிக உயரத்தே இடி, பெருமுழக்கம் செய்யும். மேலும், அச்சந் தரும் பாம்பும். புலியும் அவ்வழியில் உண்டு. இத் தன்மையதான ஒடுங்கிய வழியில் இரவிலே நீ துணையின்றித் தனியனாய் வருகிறாய். (இப்படி வருவதால் உனக்கு இடர்; எங்கட்குக் கவலை.) நீ தலைவியை மணந்துகொள்ள விரும்பினாலும் முறைப்படி பெறுவாய்.

ஆதலால், இன்றுமுதல் இரவில் இவ்வாறு வாராதே! மீறி நீ வருவாயேயானால், உனக்கு வழியிடை என்ன ஆயிற்றோ என்று நாங்கள் இங்கே மயங்கி வருந்தும் துயரம் ஏற்படாமலிருக்க, மலைகள் பொருந்திய உன் சிற்றூருக்குச் சென்றதும் ஒன்று செய்.

மூங்கில் செறிந்த காட்டில் வேட்டையாடும்போது வழி தப்பிப் பிரிந்த உன் வேட்டுவரோடு நாய்களையும் நீ அழைப்ப தற்கு உன் ஊதுகொம்பின்மூலம் எழுப்பும் குறிப்பு ஒலியை (சங்கேத ஒலியை) நீ சற்றே எழுப்பி, நீ பாதுகாப்பாய்ச் சென்று சேர்ந்த செய்தியை நாங்கள் அறியும்படி செய்ய வேண்டும். (அதைக் கேட்டால்தான் எம் கலக்கம் தீரும்.)

கருத்து

'நீ இரவில் வரும் வழி ஏதம் மிக்கது; நீ மன்றலை விரும்பின் எம் உறவினர் வரைவெதிர் கொள்வர். ஆதலால், இன்றுமுதலாய் இரவுக் குறியிடத்துக்கு வாராதே; மணம் பேசி வருக' எனத் தோழி தலைவனிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. கானம் - காடு; மான் - விலங்கு; அதர் - வழி.
2. மீமிசை - மிக உயரத்தே; உருமும் - இடியும்; உரறும் - முழங்கும்.
3. அஞ்சு தகவு உடைய - (யாவரும்) அஞ்சுமாறு உள்ளன.
4. தமியை - தனியாய்.
5. பாட்டு - ஒலி; பிரசம் - வண்டு.
6. முழவு - தண்ணுமை; நரம்பின் - யாழ் நரம்பின் ஒலி; இமிரும் - ஒலிக்கும்.
7. பழ விறல் - பழைய வெற்றி; நனந்தலை - அகன்ற இடம்; பயமலை - பயன் பொருந்திய மலை.
8. மன்றல் - நீ வரைந்து கோடலை (மன்றல் - வரைவு).
9. தலையாக - முதலாக.
10. ஒழிய - நீங்கும்படியாக.
11. எற்கண்டு - எம்மைக் கண்டு; பெயருங்காலை - நீங்கிச் செல்லும்போது.
12. எய்திய பின்றை - சேர்ந்த பிறகு.
13. ஊதல் வேண்டும் சிறிது - சிறிது ஊதுதல் வேண்டும்; வேட்டோடு - வேட்டுவரோடு.
14. அழுவம் - காடு.
15. நாய் பயிர் - நாய்களை அழைக்கும்; குறிநிலை - குறிப்பு ஒலி; கோடு - ஊதுகொம்பு.

தோழி கூற்று

நற்றிணை 154 **நல்லாவூர் கிழார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறித் தலைமகன் சிறைப்புறமாக வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

இரவு நேரத்தில் தலைவன் சிறைப்புறத்தில் நிற்பதைக் கண்ட தோழி, தலைவியிடம் தலைவன் வரும் வழியில் நேரிடும் இன்னல்களைக் கூறி, இனி அவன் அவ்வழியில் வரவேண்டா என்று கூறியதோடு, அவன் விரைவில் வரைந்துகொள்ள வேண்டும் என்றும் தலைவன் கேட்கும்படியாய் வலியுறுத்தியது.

கானமும் கம்மென் றன்றே, வானமும்
வரைகிழிப்பு அன்ன மைஇருள் பரப்பி,
பல்குரல் எழிலி பாடு ஓவாதே;
மஞ்சுதவழ் இறும்பில் களிறுவலம் படுத்த
வெஞ்சின உழுவைப் பேழ்வாய் ஏற்றை
அஞ்சுதக உரறும் ஓசை கேளாது
துஞ்சுதி யோஇல, தூஇல் ஆட்டி!
பேர்அஞர் பொருத புகர்படு நெஞ்சம்
நீர்அடு நெருப்பின் தணிய, இன்றுஅவர்
வாரார் ஆயினோ நன்றே; சாரல்
விலங்குமலை ஆர்ஆறு உள்ளுதொறும்,
நிலம்பரந்து ஒழுகும்என் நிறைஇல் நெஞ்சே.

தெளிவுரை

"*மன வலிமை இல்லாத் தலைவியே! காடும் 'கம்'மென்று ஒலி அடங்கிவிட்டது. வானமெங்கும் காரிருள் பரவியுள்ளது. மலையைக் கிழிப்பதுபோலப் பலவாய முழக்கம் செய்து இடியிடிப்பதும் நிற்கவில்லை. மேகம் தவழ்கின்ற குறுங்காட்டிடத்தில், ஆண்யானையை வலமாய் விழுமாறு அடித்துக் கொன்ற, வெஞ்சினத்தையும் பிளந்த வாயையுங்கொண்ட ஆண்புலி, யாவரும் அஞ்சுமாறு முழங்குகின்றது. இவ்*

வோசைகள் அனைத்தையும் கேளாது நீயும் தூங்குகிறாயோ? வழியில் பெருந்துன்பம் வந்து மோதியதால் ஏற்பட்ட நெஞ்சக் கொதிப்பு, நீர் பெய்த நெருப்புப் போலத் தணியுமாறு, இன்று மட்டும் அவன் வாராதிருந்தால் நன்றாயிருக்கும். சாரலிடத்தே குறுக்கிட்டுக் கிடக்கும் மலை வழியை நினைக்குந்தோறும் என் நெஞ்சம் அவ்வழியிடத்தே பரவிச் செல்கின்றது. இனி, யான் யாது செய்வேனோ?"

கருத்து

தலைவ! நீ இரவில் வரும் வழிகளை நினைக்குந்தோறும் நெஞ்சம் கலங்குகிறது. இக்கலக்கத்தை நீக்க நீ தலைவியைத் திருமணம் செய்து கொள்ளவதொன்றே வழி.

விளக்கம்

"தலைவன் வருகின்ற வழி மழையும் இன்னலும் பொருந்தியது; அங்கே யானையை அடித்து வீழ்த்தும் புலி உலாவிக் கொண்டிருக்கும். எனவே, அவன் அவ்வழியில் வாராதிருத்தல் நன்று. இனி, தலைவன் களவொழுக்கத்தைக் கைவிட்டு, உடனே திருமணம் செய்துகொள்ள வேண்டும்" என, தலைவன் கேட்குமாறு தோழி தலைவியிடம் பேசுகிறாள்.

சொற்பொருள்

1. கானம் - காடு; கம்மென்றல் - ஒலி அவிந்துவிடுதல்.
2. கிழிப்பு - பிளப்பு; மைஇருள் - அடர்ந்த இருட்டு.
3. எழிலி - மேகம்; பாடு - இடி இடிப்பதை; ஓவாது - நிறுத்தாது.
4. மஞ்சு - மேகம்; இறும்பு - குறுங்காடு; வலம்படுத்த - வலப்புறத்தே விழும்படி கொன்று சாய்த்த.
5. உழுவை - புலி; பேழ்வாய் - அகன்ற வாய்; ஏற்றை - ஆண் (புலி).
6. உரறும் - முழங்கும்.
7. இல - ஏடீ!; தூஇல் - மன வலிமை இல்லாத; ஆட்டி - தலைவி.
8. அஞர் - துன்பம்; புகர் - குற்றம்.
9. நீர்அடு - நீர் பெய்த; தணிய - குறைய.
11. விலங்கு - குறுக்கானது; ஆர் ஆறு - அரிய வழி; உள்ளுதொறும் - நினைக்குந்தோறும்.
12. ஒழுகும் - செல்லும்; நிறைஇல் - நிலையில்லாத.

தோழி கூற்று

நற்றிணை 261 **சேந்தன் பூதனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

சிறைப்புறமாகத் தோழி இரவுக்குறி விலக்கி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைந்துகொள்ளுதலில் நாட்டம் செலுத்தாது களவொழுக்கத்தையே விரும்பியிருந்தான். ஒரு நாள் தலைவன் சிறைப்புறமாய் இருப்பது கண்ட தோழி, தலைவியிடம், 'நம் தலைவர் கொடிய இருளில் சிறுநெறியில் வருவதால் நாம் எவ்வளவு துன்புறுவோம் என்பதை அறியவில்லை' என்று கூறுவாளாய், இரவுக்குறி மறுத்து, மணம் புரிய வேண்டும் என்னும் குறிப்புடன் கூறியது.

அருளிலர் வாழி, தோழி! மின்னுவசிபு
இருள்தூங்கு விசும்பின் அதிரும் ஏறொடு
கனைகடல் முகந்த கமஞ்சூல் வானம்,
நெடும்பல் குன்றத்துக் குறும்பல மறுகித்
தாஇல் பெரும்பெயல் தலைஇய யாமத்துக்
களிறுஅகப் படுத்த பெருஞ்சின மாசுணம்
வெளிறுஇல் காழ்மரம் பிணித்துநனி மிளிர்க்கும்
சாந்தம் போகிய தேம்கமழ் விடர்முகை,
எருவை நறும்பூ நீடிய
பெருவரைச் சிறுநெறி வருத லானே.

தெளிவுரை

"தலைவியே! வாழ்க! இருள் நிறைந்த வானில் மின்னல்கள் பிளந்து எழுந்து வீசுகின்றன; இடிகளும் முழக்கமிட்டபடி அதிர்கின்றன. ஒலிக்கின்ற கடல்நீரை முகந்து சூல் கொண்ட கார்மேகங்கள் நெடியவும் பெரியவுமான குன்றுகளிடத்தே குறுகிய பல படலங்களாய் இயங்குகின்றன. இடையீடில்லாத பெருமழையும் பெய்யத் தொடங்கியது. இத்தகைய இரவின் நடு யாமத்தே களிற்றுயானையைப் பற்றிச் சுற்றிக்கொண்ட பெருஞ் சினம் கொண்ட மலைப்பாம்பு, வெளிறு இல்லாது முற்றிலும்

வயிரமேறிய மரத்தில் தன்னுடலைச் சுற்றி இறுக்கிப் புரண்டு கிடக்கும். சந்தன மரங்கள் ஓங்கி வளர்ந்துள்ள, மணம் கமழ்கின்ற மலைப்பிளவுகளில் கொறுக்கச்சியின் நறுமலர்கள் நீண்டு மலரும். அத்தகைய பெரிய மலையிடத்தே சிறு வழியைக் கடந்து அவர் வருகின்றார். ஆதலால், அவர் நம்மிடம் அருளில்லா தவரே ஆவர்.''

கருத்து

தலைவியே! தலைவர் கடுமையான காட்டுவழியே நள்ளிரவில் வருகிறார். வழியில் அவருக்கு ஏதம் உண்டாதலை நினைந்து நாம் மிகவும் வருந்தியிருக்கிறோம். இவ்வாறு நம்மை வருத்தும் அவர் நம்மீது அன்பில்லாதவரே!

குறிப்பு

அவர் இரவில் வருவதை நினைக்கும்போது நாம் மிகவும் அச்சமுறு கிறோம். அவர் உண்மையாகவே அன்புடையராயின் நம்மை மணந்து பிரியாத இன்பம் தருவதே அருளுடைமையாகும்.

தலைவர் அருளிலர் என்று எதிர்மறையாய்க் கூறினாலும், அவர் தலைவியிடம் கொண்டுள்ள அன்பும் அருளும் அவர் வரும் வழியால் தெளிவாய்ப் புலப்படுகிறது. தலைவர் வரும் வழியின் ஏதம் கருதித் தன் நெஞ்சம் அஞ்சுவதால், அவரைத் தோழி அருளில்லாதவர் என்கிறாள்.

சொற்பொருள்

1. அருளிலர் - அருள் இல்லாதவர்; மின்னு – மின்னல்; வசிபு - பிளந்து எழுந்து.
2. இருள் தூங்கும் - இருள் அடர்ந்திருக்கும்; அதிரும் - முழங்கும்; ஏறு - இடி.
3. வெஞ்சுடர் – வெம்மையைச் செய்யும் சுடர்; கனைகடல் - ஒலிக்கின்ற கடல் நீரை; கமஞ்சூல் - நிறை சூல்.
4. குறும்பல மறுகி - குறுகிய பலவாகப் படர்ந்து.
5. தாஇல் - குற்றமற்ற; பெரும் பெயல் - இடைவிடாத பெருமழை; தலைஇய - பொழிகின்ற.
6. களிறு - ஆண்யானை; அகப்படுத்த - பற்றிக்கொண்ட; மாசுணம் - மலைப்பாம்பு.

7. வெளிறு இல் - வெளிறு இல்லாத; காழ்மரம் - வயிரமேறிய மரம்; நனி - மிகவும்; பிணித்து - பிணித்துக்கொண்டு; மிளிர்க்கும் - இறுகித் திமிரும்.
8. சாந்தம் - சந்தன மரம்; போகிய - உயர்ந்த; தேம் கமழ் - தேன் மணக்கும்; விடர்முகை - மலைப்பிளப்பு.
9. எருவை - கொறுக்கச்சி; நீடிய - நீண்டுள்ள.
10. வரை - மலை; நெறி - வழி.

தலைவி கூற்று

அகநானூறு 72 **எருமை வெளியனார் மகனார் கடலனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் இரவுக்குறிக்கண் சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் இரவுக்குறியிடத்தில் வந்து ஒரு புறம் நிற்க, அவன் வந்திருப்பதை அறிந்து, அவன் கேட்குமாறு, 'அவன் விரைவில் மணந்துகொள்ள வேண்டும்' என்பதைத் தலைவி, தோழியிடம் சொல்லியது.

இருள்கிழிப் பதுபோல் மின்னி, வானம்
துளிதலைக் கொண்ட நளிபெயல் நடுநாள்,
மின்மினி மொய்த்த முரவுவாய்ப் புற்றம்
பொன்எறி பிதிரின் சுடர வாங்கி,
குரும்பி கெண்டும் பெருங்கை ஏற்றை
இரும்புசெய் கொல்எனத் தோன்றும் ஆங்கண்,
ஆறே அருமர பினவே; யாறே
சுட்டுநர்ப் பனிக்கும் சூருடை முதலைய;
கழைமாய் நீத்தம் கல்பொருது இரங்க,
'அஞ்சுவம் தமியம்' என்னாது, மஞ்சுசுமந்து,
ஆடுகழை நரலும் அணங்குடைக் கவாஅன்,
ஈர்உயிர்ப் பிணவின் வயவுப்பசி களைஇய,

இருங்களிறு அட்ட பெருஞ்சின உழுவை
நாம நல்அராக் கதிர்பட உமிழ்ந்த
மேய்மணி விளக்கின் புலர ஈர்க்கும்
வாள்நடந் தன்ன வழக்குஅருங் கவலை,
உள்ளுநர் உட்கும் கல்அடர்ச் சிறுநெறி,
அருள்புரி நெஞ்மொடு எஃகுதுணை யாக
வந்தோன் கொடியனும் அல்லன்; தந்த
நீதவறு உடையையும் அல்லை; நின்வயின்
ஆனா அரும்படர் செய்த
யானே, தோழி! தவறுஉடை யேனே.

தெளிவுரை

"தோழியே! நள்ளிரவில் மேகம், இருளைக் கிழிப்பதுபோல மின்னித் தன்னிடமுள்ள நீர்த்துளிகளை மிகுமழையாய்ப் பொழிகிறது. சிதைந்த வாயைக் கொண்ட புற்றின்மேல் மின்மினிப்பூச்சிகள், இரும்பினைக் காய்ச்சி அடிக்கும்போது சிதறும் நெருப்புத்துளிகள் போல் பறக்கின்றன. புற்றாஞ் சோற்றுக்காகப் புற்றினைத் தோண்டும் கரடி, இரும்பை அடிக்கும் பெருங்கையைக் கொண்ட கொல்லன் போன்றிருக் கிறது.

"அவ்விடத்தேயுள்ள வழிகளோ செல்லுதற்கு அரியன; ஆறுகளோ கடக்க நினைப்போரை நடுங்கச்செய்யும் முதலை களைக் கொண்டன. ஓடக்கோல் நிலைபெறாத வெள்ளம் கற்களில் மோதி ஒலியெழுப்புகிறது.

" 'நாம் தனியே உள்ளோம்; வழியோ அஞ்சத்தக்கது' என்று எண்ணாது தலைவன் வருகின்றான்.

"மேகத்தைச் சுமந்து மூங்கில்கள் ஒலி செய்யும் மலைப்பக்கம், அஞ்சத்தக்க வருத்தும் தெய்வங்களைக் கொண்டது. கருவுற்ற பெண்புலியின் வேட்கைமிக்க பசியைப் போக்க, ஆண்புலி கரிய பெரிய யானையைக் கொன்று, அதனின்றும் ஒழுகும் குருதி படிந்து வருமாறு, இரை தேடும் பாம்பு உமிழ்ந்த மணியின் வெளிச்சத்தில் இழுத்துச் செல்லும்.

"மக்கள் வழக்கற்ற அரிய வழியோ, வாளின்மேல் நடப்பதைப் போன்ற துன்பத்தினை இழைக்கும் கூர்ங்கற்கள் நிறைந்தது; மிகவும் குறுகலானது; தன் வழிச் செல்ல நினைப்போரை நடுங்க வைப்பது.

"அவ்வழியில், நம்மிடம் அருள் கொண்ட நெஞ்சுடனே, தன் வேலினைத் துணையாய்க் கொண்டு இங்கு வரும் தலைவனும் கொடியோனல்லன்; அவனை இக்குறியிடத்திற்கு வரச்செய்த நீயும் தவறு செய்தவள் அல்லள். உனக்கு நீங்காத அரிய துன்பத்தைச் செய்த நானே தவறு செய்தவள்" என்று தலைவி தலைவன் கேட்கும்வண்ணம் தோழியிடம் கூறினாள்.

கருத்து

தோழியே! கொடிய காட்டுவழியில் வருவதைத் தவிர்த்துத் தலைவனை மணம் பேசி வரச் சொல்.

விளக்கம்

"மிகுமழை பொழியும் நள்ளிரவு; புற்றினைக் கரடி தோண்டும் காடு; முதலைகள் திரியும் விரைந்தோடும் ஆறு; பெண்புலியின் உணவுக்காக ஆண்புலி களிற்றினைக் கொன்று இழுத்துச் செல்லும் மலைப்பகுதி; மக்கள் வழங்குதற்கரிய கொடிய வழி; இவற்றிடையே, நாம் அஞ்சுவம் என்று கருதாமல், நம்மிடம் கொண்டுள்ள அன்பால், தன் வேலையே துணையாய்க் கொண்டு வந்துசெல்லும் தலைவன் கொடியன் அல்லன்; அவனை வருமாறு செய்த நீயும் தவறு செய்தவள் அல்லள்; ஆற்றியிராது உனக்குத் துன்பத்தைச் செய்த நானே தவறு செய்தவள்" என்று தலைவி தோழிக்குக் கூறினாள்.

உள்ளுறை

புலி தன் துணையைக் காப்பதற்குப் பிறவற்றிற்குத் தீங்கு செய்யும்; பாம்பும் அதற்குத் துணையாயுள்ளது என்னும் உள்ளுறையின் பொருள், தலைவன் வரைவொடு வரின், கடுஞ் சொல் சொல்வோரும் இன்சொல் சொல்லி வரைவுடம்படுவர் என்பதாம்.

சொற்பொருள்

1. இருள் கிழிப்பது போல் - இருளைக் கிழிப்பதுபோல.
2. துளி - மழைத்துளி; நளி - மிக்க, செறிவு.
3. முரவு - சிதைந்த; புற்றம் - புற்று.
4. பொன் எறி பிதிர் - இரும்பைக் காய்ச்சி அடிக்கும்போது சிதறும் தீப்பொறி; சுடர - மின்னி ஒளிவிட; வாங்கி - பெயர்த்தெடுத்து.
5. குரும்பி - புற்றாஞ்சோறு; கெண்டும் - தோண்டும்; ஏற்றை - ஆண் கரடி.
6. கொல் என - கொல்லன் போல.
7. ஆறு - வழி; அருமரபின - செல்லுதற்கு அரியன; யாறே - நீர் ஆறு.
8. சுட்டுநர் - கருதுவோர், நினைப்போர்; பனிக்கும் - நடுங்கச்செய்யும்; சூர் - அச்சம்; முதலைய - முதலையைக் கொண்டது.
9. கழை - ஓடக்கோல்; மாய் - மறையும்; நீத்தம் - வெள்ளம்; இரங்க - ஒலிக்க.
10. தமியம் - தனியாய் உள்ளோம்; மஞ்சு - மேகம்.
11. ஆடுகழை - அசையும் மூங்கில்; நரலும் - ஒலிக்கும்; அணங்கு - வருத்தும் தெய்வம்; கவாஅன் - பக்கமலை.
12. ஈர் உயிர் - இரு உயிர் (கருவுற்றிருக்கும்); பிணவு - பெண்புலி; வயவுப் பசி - வேட்கை மிக்க பசி, கருவுற்றிருக்கும்போது ஏற்படும் பசி.
13. அட்ட - கொன்ற; உழுவை - ஆண்புலி.
14. நாமம் - அச்சம்; அரா - அரவு - நல்ல பாம்பு; கதிர்பட - ஒளியுண்டாக.
15. மேய்மணி விளக்கு - மேய்தல் காரணமாய் உமிழ்ந்த ஒளிவீசும் மணி; புலர - (குருதி தோய்ந்து) காய.
16. வாள் நடந்தன்ன - வாள் முனையில் நடப்பதுபோல.
17. உட்கும் - அஞ்சும்; கல்அடர் - கற்செறிவு.
18. எஃகு - வேல்.
19. தந்த - (அவனைக் குறிவழி) வரச் செய்த.
20. நின்வயின் - உனக்கு.
21. அரும்படர் - அரிய துன்பம்.
22. தோழி! தவறு செய்தவள் நானே.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 34 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

புணர்ந்து நீங்கும் தலைமகனைக் கண்ணுற்று நின்ற தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

இரவுக்குறி வந்து புணர்ந்து செல்லும் தலைவனைக் கண்ட தோழி, தலைவன் இரவில் வரும் வழியில் ஏற்படும் துன்பத்தைக் கூறி, தலைவியைத் திருமணம் செய்துகொண்டு வாழ்வதே அதற்கு மாற்று என்று சொல்லியது.

தாமரை தான்முகமாத் தண்அடையீர் மாநீலம்
காமர்கண் ஆகக் கழிதுயிற்றும் – காமருசீர்த்
தண்பரப்ப! பாயிருள் நீவரின்தாழ் கோதையாள்
கண்பரப்பக் காணீர் கசிந்து.

தெளிவுரை

அழகிய சிறப்பான குளிர்ச்சி பொருந்திய கடல்பரப்பினைக் கொண்ட தலைவனே! தாமரையைத் தன் முகமாகவும், குளிர்ச்சி பொருந்திய இலைகள் பொருந்திய பெரிய நீலமலர்களைக் கண்டோரால் விரும்பப்படும் கண்களாகவும் கொண்டுள்ள கடற்கழிகளை உறங்குவிக்கும் இருள்பரந்த இரவு இது. இத்தகைய இராப்பொழுதில் நீ நாளையும் தொடர்ந்து வருவாயானால், தாழ்ந்து தொங்கும் நீண்ட கூந்தலைக் கொண்ட தலைவியின் கண்கள் வருந்திக் கண்ணீர் விட்டுக்கொண்டிருப் பதைக் காண்பாய். (இன்று அவன் வந்துவிட்டான். இனி நாளை முதல் வரவேண்டா என்கிறாள்.)

கருத்து

‘தலைவ! நீ இரவில் வரும் வழியில் ஏற்படும் துன்பத்தை நினைந்து தலைவி அழுகிறாள். இக்குறை தீரத் தலைவியைத் திருமணம் செய்து கொள்வதே முறை ஆகும்’ என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. தண் - குளிர்ந்த; அடை - இலை; ஈர் - குளிர்ந்த; மாநீலம் - பெரிய நீல மலர்கள்.
2. காமர் - விரும்பப்படும்; கழி - கடற்கழிகளை; துயிற்றும் - உறங்கு விக்கும்; கா - சோலை; மரு - பொருந்திய; சீர் - சிறப்பு.
3. பாய் - பரவி நிற்கும்; தாழ் - தொங்கும்படியான; கோதை - மாலை.
4. பரப்ப - நீரினை வெளிவிட; காணீர் - காண்பாய்; கசிந்து - வருந்தி.

தோழி கூற்று

நற்றிணை 257 — **வண்ணக்கன் சொருமருங்குமரனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி தலைமகனது ஏதஞ் சொல்லி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவன் இரவுக்குறியை விரும்பி வரக் கண்ட தோழி, அதற்கு மறுத்து, வழியில் இடர்ப்பாடு மிகுதலால் வரைவு உடன்படுமாறு கூறியது.

விளிவுஇல் அரவமொடு தளிசிறந்து உறைஇ,
மழைஎழுந்து இறுத்த நளிர்தூங்கு சிலம்பின்,
கழைஅமல்பு நீடிய வான்உயர் நெடுங்கோட்டு
இலங்குவெள் அருவி வியன்மலைக் கவாஅன்,
அரும்புவாய் அவிழ்ந்த கருங்கால் வேங்கைப்
பொன்மருள் நறுவீ கல்மிசைத் தாஅம்
நல்மலை நாட! நயந்தனை அருளாய்,
இயங்குநர் மடிந்த வயம்திகழ் சிறுநெறிக்
கடுமா வழங்குதல் அறிந்தும்,
நடுநாள் வருதி; நோகோ யானே.

தெளிவுரை

கரிய அடிமரத்தைக் கொண்ட வேங்கை மரத்தின் அரும்புகள் மலர்ந்து, பொன் போன்ற மலர்கள் பாறைமீது பரவிக் கிடக்கும் நல்ல மலைநாட்டுக்குரிய தலைவனே! நீ எம்மை விரும்பி அருள்

செய்யவில்லை. இடிகள் ஓயாது முழங்கிட மிகுதியான மழை பெய்யத் தொடங்கியுள்ளது; மேகங்கள் மேலெழுந்து குளிர்ச்சியான பக்க மலையில் படிந்திருக்கின்றன; மலையில் மூங்கில்கள் நெருங்கி உயரமாய் வளர்ந்துள்ளன; உயர்ந்த சிகரத்திலிருந்து வெண்மையான அருவி விழுகிறது.

இத்தகைய அகன்ற மலைப்பக்கத்தில் வழிச்செல்வோர் எவரும் இலர். நீர் பெருகிய சிறிய வழியிலே சிங்கம் முதலிய கொடிய விலங்குகள் திரிவதை நீ நன்கு அறிவாய்; அறிந்திருந்தும் நள்ளிரவில் வருகின்றாய்; அதனால் நான் மிகவும் வருந்து கின்றேன்.

கருத்து

தலைவ! நீ வரும் வழியின் ஏதம் கருதி, இரவில் வருவதை விடுத்துத் தலைவியை உடனே மணந்து செல்.

உள்ளுறை

சூடுவார் இன்றி வேங்கையின் நறிய மலர் கற்பாறையில் உதிரும் என்னும் உள்ளுறையின் பொருள், தலைவன் தலைவியை வரைந்துகொள்ளாமையால் அவள் நலனிழந்திருக்கிறாள் என்பதாம்.

சொற்பொருள்

1. விளிவு இல் - இடையீடு இல்லாது, ஓயாது; அரவமொடு - இடி முழக்கத்துடன்; தளி - மழை; உறைஇ - பெய்து.
2. மழை எழுந்து - மேகங்கள் வானத்தே எழுந்து; இறுத்த - தங்கிய; நளிர் - குளிர்; சிலம்பு - பக்கமலை.
3. கழை - மூங்கில்; அமல்பு - செறிந்து; நெடுங்கோடு - உயர்ந்த சிகரம்.
4. வியன்மலை - அகன்ற மலை; கவாஅன் - மலைச்சாரல்.
5. வாய் அவிழ்ந்த - மலர்ந்த; கருங்கால் - கரிய அடிமரம்.
6. மருள் - போன்ற; வீ - பூக்கள்; தாஅம் - பரவிக் கிடக்கும்.
7. நயந்து - விரும்பி; அருளாய் - அருள் செய்யவில்லை.
8. இயங்குநர் - வழிச்செல்வோர்; மடிந்த - யாருமில்லாத; வயம் - நீர் (பெருகிய); சிறுநெறி - குறுகிய வழி.
9. கடு மா - கொடிய விலங்குகள்; வழங்குதல் - இயங்குதல், திரிதல்.
10. நடுநாள் - நள்ளிரவு; நோகு - வருந்துகின்றேன்.

தோழி கூற்று

ஐந்திணை ஐம்பது 19 **மாறன் பொறையனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி இரவுக்குறியின்கண் நெறி விலக்கி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியில் வருவதற்குரிய வழியில் உண்டாகும் துன்பங்களை எடுத்துச் சொல்லி, இரவில் வருவதை விலக்கி, தலைவியை மணந்துகொள்ளுமாறு தோழி தலைவனைத் தூண்டியது.

நெடுமலை நன்னாட! நீள்வேல் துணையாக்
கடுவிசை வாலருவி நீந்தி – நடுஇருள்
இன்னா அதர்வர ஈர்ங்கோதை மாதராள்
என்னாவாள் என்னும்என் நெஞ்சு.

தெளிவுரை

"நெடிதுயர்ந்த மலைகள் மிகுந்த நல்ல நாட்டிற்குரிய தலைவனே! நீண்ட வேலினைத் துணையாய்க்கொண்டு, விரைவாய் ஓடும் வெள்ளிய நீர்அருவிகளைக் கடந்து, நள்ளிரவில் இடையூறுகள் பொருந்திய வழியில் நீ வருவதைக் குளிர்ச்சி பொருந்திய பூமாலையை அணிந்த உன் காதலியால் எவ்விதம் பொறுத்துக் கொள்ள இயலும் என்று என் உள்ளம் துணுக்குறு கிறது" என, வழியின் அருமை கூறி, அவ்வழியில் வாரா திருக்குமாறு தோழி தலைவனை வேண்டுகிறாள்.

கருத்து

இடையூறுகள் பொருந்திய வழியில் இரவில் நீ வருதலை நினைத்தால் நெஞ்சம் கலங்குகிறது. அக்கலக்கம் நீங்கத் தலைவியை மணந்துகொள்.

சொற்பொருள்

1. நெடுமலை - நீண்டுயர்ந்த மலை; நீள்வேல் - நீண்ட வேல்.
2. கடுவிசை - மிக விரைவாய்; வால் அருவி - வெள்ளிய நீரருவி.
3. அதர் - வழி; ஈர்ங்கோதை - குளிர்ந்த பூமாலை; மாதராள் - பெண்ணாகிய தலைவி.
4. என்னும் - என்று வருந்தும்; என் நெஞ்சு - என் மனம்.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 14 **மூவாதியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் வரும் வழியின் ஏதத்திற்குக் கவன்ற தலைமகள் வரைவு வேட்டுத் தோழிக்குக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் வந்து செல்லும் வழியில் ஏற்படும் துன்பத்திற்கு அஞ்சிய தலைவி, தோழியிடம், 'தலைவன் விரைவில் மணந்துகொள்ள வேண்டும்' எனக் கூறியது.

குறைஒன்(று) உடையேன்மன் தோழி நிறையில்லா
மன்னுயிர்க்(கு) ஏமம் செயல்வேண்டும்; இன்னே
அராவழங்கு நீள்சோலை நாடனை நம்மில்
இராவாரல் என்ப(து) உரை.

தெளிவுரை

"*தோழியே! உன்னால் முடிக்கப்பட வேண்டிய செயல் ஒன்று உள்ளது. (அது யாதெனில்) மனக்கவலையால் ஒரு நிலையில் இல்லாத என் உயிர்க்கு நீ பாதுகாவல் அளிக்க வேண்டும். பெரிய சோலைகள் சூழ்ந்த மலைநாட்டுத் தலைவன் நம் வீட்டுக்குப் பக்கத்தேயுள்ள இரவுக்குறியில் சந்தித்துச் செல்லுகின்றான். அந்த இடம் பாம்புகள் நடமாடும் சுற்றுப்புறத்தினைக் கொண்டது. ஆதலின், தலைவனை இரவில் வரவேண்டா என்று நீ இப்போதே சொல்.*"

கருத்து

தலைவன் வரும் வழியில் ஏற்படும் இடையூறு கருதி நாம் அஞ்சியிருப்பதைத் தவிர்க்கத் தலைவனிடம் திருமணம் முடித்துக்கொள்ளுமாறு கூறு.

குறிப்பு

'வழியில் என்ன துன்பம் நேருமோ என்று நாம் அஞ்சியிருப்பதைத் தவிர்க்கத் தலைவனிடம் உடனே திருமணம் முடித்துக்கொள்ளுமாறு கூறு' எனத் தலைவி தோழியிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. குறை ஒன்று - (உன்னால் முடிக்கப்பட வேண்டிய) செயல் ஒன்று; நிறையில்லா - (மனக்கவலையால்) ஒரு நிலையில் இல்லாத.
2. மன்உயிர்க்கு - என் உயிர்க்கு; ஏமம் - பாதுகாப்பு; இன்னே - இப்பொழுதே.
3. அரா - பாம்பு; வழங்கும் - நடமாடும்; நம்இல் - இரவுக்குறியாகிய நம் வீட்டுப்புறம்.
4. இரா வாரல் - இரவுப்பொழுதில் வரவேண்டா.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 25 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி தலைமகனை நெறி விலக்கி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தோழி, வழியின் கொடுமை கூறித் தலைவனை வர வேண்டா என வேண்டுவதோடு தலைவியை வரைந்துகொள்ளுமாறும் வலியுறுத்திக் கூறியது.

கொல்இயல் வேழம் குயவரி கோள்பிழைத்து
நல்இயல் தம்இனம் நாடுவபோல் – நல்இயல்
நாமவேல் கண்ணாள் நடுநடுப்ப வாரலோ
ஏமவேல் ஏந்தி இரா.

தெளிவுரை

கொல்லும் இயல்பினைக் கொண்ட யானைகள், புலியினால் தாக்கப்படுவதிலிருந்து தப்பி, தம் கூட்டத்தினைத் தேடித் திரியும் அச்சமிக்க அவ்வழியில், வேலினை மட்டும் பாதுகாவலாய்க் கொண்டு, வேல் போன்ற கண்களைக் கொண்ட தலைவி மிகவும் நடுங்கும்படி நீ வருவதைத் தவிர்.

கருத்து

தலைவ! அச்சமிக்க வழி; தலைவி அஞ்சும்படி வருவதை நீ தவிர். (மணவினை மேற்கொள்.)

குறிப்பு

தோழி இரவுக்குறியைத் தவிர்க்கும்படி தலைவனிடம் வேண்டினாள்; மேலும், தலைவியை மணம் புரிந்துகொள்ளும்படியும் குறிப்பாய் எடுத்துக் கூறினாள்.

விளக்கம்

யானைகள், கூட்டம் கூட்டமாய்த் திரியும் இயல்பின. அக் கூட்டத்திலிருந்த ஒரு யானையைப் புலி தாக்கியது; தாக்குதலி லிருந்து தப்பிய யானை தன் கூட்டத்தைத் தேடிச் சென்றடை கிறது. இதனை 'நல்லினம் நாடும் நல் இயல்பு' என்கிறது பாடல்.

சொற்பொருள்

1. கொல் இயல் - கொல்லும் இயல்புள்ள; வேழம் - யானை; குயவரி - புலி; கோள் - கொல்லப்படுவதனின்றும்; பிழைத்து - தப்பி.
2. நல்இயல்- நல்ல தன்மை.
3. நாமம் - அச்சம் (தருகின்ற); வேல் கண்ணாள் - வேல் போன்ற கண்களைக் கொண்ட தலைவி; நடுநடுப்ப - நடுநடுங்க.
4. ஏமவேல் - பாதுகாவலாகிய வேல்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 26 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி தலைமகனை நெறி விலக்கி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தோழி, வழியின் கொடுமை கூறித் தலைவனை இரவில் வர வேண்டா என வேண்டுவதோடு தலைவியை வரைந்துகொள்ளுமாறும் வலியுறுத்திக் கூறியது.

கருங்கால் இனவேங்கை கான்றபூக் கல்மேல்
இருங்கால் வயவேங்கை ஏய்க்கும் – மருங்கால்
மழைவளரும் சாரல் இரவரின் வாழாள்
இழைவளரும் சாயல் இனி.

தெளிவுரை

கரிய அடிப்பகுதியைக் கொண்ட கூட்டமாகிய வேங்கை மரங்கள் சொரிந்த மலர்கள் பாறைகளின்மீது படிந்து பெரிய கால்களைக் கொண்ட வலிமையான புலியைப் போலத் தோன்றும். அத்தகைய இடங்கள் பொருந்திய, இடைவிடாது மழை பெய்வதான மலைச்சாரலில் இராக்காலத்தே 'நீ வாராதே!' நீ வருவாயெனின் அணிகலன்கள் அணிந்த அழகுத் தலைவி உயிர் தரிக்க மாட்டாள்.

கருத்து

தலைவ! இடையூறான வழியில் நீ இரவில் வராதே. (இடையீடின்றி இணைந்திருக்க நீ இவளை மணந்துகொள்.)

சொற்பொருள்

1. இன வேங்கை - கூட்டமாகிய வேங்கை மரம்; கான்ற - சொரிந்த.
2. இருங்கால் - பெரிய கால்; வயவேங்கை - வலிமையான புலி; ஏய்க்கும் - தோன்றும்; மருங்கு - இடங்கள்.
3. மழை வளரும் - மழை இடைவிடாது தொடர்ந்து பெய்யும்; இரவரின் - இரவில் வந்தால்.
4. இழை வளர் - அணிகலன்கள் மிகுந்து காணப்படும்; சாயல் - அழகு.

தோழி கூற்று

அகநானூறு 270 **சாகலாசனார்**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறிக்கண் வந்து நீங்கும் தலைமகனைத் தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

மணந்துகொள்வதில் கருத்தின்றிக் களவு இன்பத்தையே விரும்பிய தலைவன் பகற்குறியில் வந்து மீளும்போது, தோழி தலைவனுக்குப் பகற்குறி மறுத்துத் தலைவியை மணந்துகொள்ளுமாறு கூறியது.

இருங்கழி மலர்ந்த வள்இதழ் நீலம்,
புலாஅல் மறுகின் சிறுகுடிப் பாக்கத்து
இனமீன் வேட்டுவர், ஞாழலொடு மிலையும்

மெல்அம் புலம்ப! நெகிழ்ந்தன, தோளே!
சேய்இறாத் துழந்த நுரைபிதிர்ப் படுதிரை
பராஅரைப் புன்னை வாங்குசினைத் தோயும்
கானல்அம் பெருந்துறை நோக்கி, இவளே,
கொய்சுவல் புரவிக் கைவண் கோமான்
நல்தேர்க் குட்டுவன் கழுமலத்து அன்ன,
அம்மா மேனி தொல்நலம் தொலைய,
துஞ்சாக் கண்ணள் அலமரும்; நீயே,
கடவுள் மரத்த முள்மிடை குடம்பைச்
சேவலொடு புணராச் சிறுகரும் பேடை
இன்னாது உயங்கும் கங்குலும்
நும்ஊர் உள்ளுதிர்; நோகோ, யானே.

தெளிவுரை

“கடற்கரையில் உள்ள சிறு குடியைச் சேர்ந்தவன் நீ. உன் ஊர்த்தெருக்களில் புலால் நாறும்; மீன் வேட்டையாடச் செல்லும் பரதவர், பெரிய உப்பங்கழிகளில் மலர்ந்திருக்கும் கொழுவிய இதழ்களைக் கொண்ட நீலப் பூக்களைப் புலிநகக் கொன்றைப் பூக்களுடன் சேர்த்துச் சூடிக்கொள்வர். அத்தகைய மென்னிலமாகிய நெய்தல் நிலத் தலைவனே!

“இவள் தோள்கள் மெலிந்தன; சிவந்த இறாமீன்கள் கலக்கிய அலைகளின் நுரைப்பிதிர்கள், சோலையிலுள்ள பருத்த அடிமரத்தைக் கொண்ட புன்னையின் வளைந்த கிளைகளில் சென்று மோதுகின்றன; அச்சோலைக்கு அடுத்த துறையினை நோக்கியே தலைவி (உன் வரவினை எதிர்பார்த்து) நிற்கிறாள்.

“கத்தரியால் கொய்து மட்டம் செய்யப்பட்ட பிடரி மயிர் கொண்ட குதிரைகளைப் பெற்றுள்ளவன், குட்டுவன்; நல்ல தேரினையும், கொடுத்து மகிழும் வள்ளல் தன்மையினையும் கொண்டவன்; இவனது கழுமலம் என்னும் நகரினைப் போன்ற அழகிய மாமை நிறம் வாய்ந்த தன் மேனியின் பழைய அழகு கெடுமாறு இவள், கண் துயிலாது மனங்கலங்கியுள்ளாள்.

“நீயோ, கடவுள் தங்கும் மரத்தில், முள்ளால் முடையப்பெற்ற கூட்டில் தன் சேவலுடன் கூடி மகிழப்பெறாத சிறிய கரிய

அன்றிற்பேடை துன்பமுற்று வருந்துகின்ற இரவில் உன் ஊருக்குச் சென்றுவிடவே எண்ணுகின்றாய்.

"நான் இங்கு வருந்தி நிற்கிறேன்."

கருத்து

மென்னிலம் ஆகிய நெய்தல்நிலத் தலைவனே! இவள் தோள் மெலிந்தது; இவள், கானலம் பெருந்துறை நோக்கித் தன் பழைய அழகுகெடத் தூங்காதவளாய் அலமருகின்றாள். நீயோ இரவிலும் உன் ஊருக்குச் செல்ல நினைக்கின்றாய். நான் வருந்தியிருக்கிறேன்.

உள்ளுறை

1. *பாக்கத்துப் பரதவர் புலால் நாற்றம் போக நீலத்தையும் ஞாழலையும் சேர்த்துக் கட்டிச் சூடுவர் என்பதன் உள்ளுறைப் பொருள், தலைவனும் ஊர் அலர் ஒழியத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதாம்.*
2. *கடற்றுரையிலே மோதுகின்ற அலைகளின் நுரைப்பிதிர்கள் புன்னைக்கிளைகளில் பொருந்தித் தோன்றும் என்பதன்மூலம், தலைவன் தலைவியோடு கொண்டுள்ள களவு உறவும், தலைவி மேனியின் புதுப்பொலிவால் ஊரறிந்ததாயிற்று என்னும் பொருள் பெறப்படுகிறது.*
3. *சேவலோடு கூடப்பெறாத அன்றில் பேடை இரவெல்லாம் கூட்டிலே கிடந்து வருந்தும் என்பதன் வாயிலாய், தலைவியும் தலைவனுடன் கூடப்பெறாது, இரவெல்லாம் இல்லிற்கிடந்து உறக்கமின்றிப் புலம்பிக்கிடக்கின்றாள் என்னும் உட்பொருள் பெறப்படுகிறது.*

குறிப்பு

பகல், இரவு ஆகிய இரு குறிகளிலும் சந்திப்பதற்கு வாய்ப்பில்லாத நிலை அமைவதால் விரைவாய்த் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யுமாறு தலைவனைத் தோழி தூண்டுகின்றாள்.

சொற்பொருள்

1. வள்இதழ் - கொழுவிய இதழ்; நீலம் - நீலப்பூக்கள்.
2. மறுகு - வீதி.

3. ஞாழலொடு - புலிநகக் கொன்றை மலர்களுடன்; மிலையும் - சூடிக் கொள்வர்.
4. மெல்அம் புலம்ப - மென்னிலமான நெய்தல்நிலத்திற்குத் தலைவனே!
5. சேய்இறா - சிவந்த இறாமீன்; துழந்த - கலக்கிய.
6. பராஅரை - பருத்த அடிமரம்; வாங்குசினை - வளைந்த கிளை; தோயும் - பொருந்தும்.
8. கொய்சுவல் - கத்தரியால் கொய்து மட்டம் செய்யப் பெற்ற பிடரி மயிர்; புரவி - குதிரை; கைவண் - வள்ளல் தன்மை மிக்க.
9. குட்டுவன் - சேர மன்னருள் ஒருவன்; கழுமலம் - ஓர் ஊர்.
10. அம் மா மேனி - அழகிய மாமை நிறம் பொருந்திய உடல்; தொல் நலம் - பழைய அழகு; தொலைய - கெட.
11. துஞ்சா - துயிலாது; அலமரும் - கலங்குவள்.
12. முள் மிடை - முள்ளால் மிடையப்பெற்ற; குடம்பை - கூடு.
13. புணரா - கூடப்பெறாத; கரும் பேடை - கரிய பெண் பறவை.
14. உயங்கும் - வருந்துகின்ற; கங்குலும் - இரவிலும்.
15. உள்ளுதிர் - நினைக்கின்றாய்; நோகு - வருந்துகின்றேன்.

தோழி கூற்று

நற்றிணை 223 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறி வந்து மீள்வானைத் தோழி இரவுக்குறி நேர்வாள் போன்று, அதுவும் மறுத்து வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

பகற்குறி வந்து மீளும் தலைவனிடம், 'இனி இரவுப்பொழுதில் வருக' என்று கூறுவாள் போன்று கூறி, பின்னர் அதுவும் வாய்ப்பது அரிது என்று கூறுவதன்மூலம் அவன் உடனே மணந்துகொள்ள ஆவன செய்ய வேண்டும் என்பதைத் தோழி வலியுறுத்திக் கூறியது.

இவள்தன், காமம் பெருமையின் காலைஎன் னாள்,நின்
அன்புபெரிது உடைமையின், அளித்தல் வேண்டி,
பகலும் வருதி, பல்பூங் கானல்
இந்நீர் ஆகலோ இனிதால் எனின்,இவள்

அலரின் அருங்கடிப் படுகுவள்; அதனால்
எல்லி வம்மோ – மெல்லம் புலம்ப!
சுறவினம் கலித்த நிறைஇரும் பரப்பின்
துறையினும் துஞ்சாக் கண்ணர்
பெண்டிரும் உடைத்து,இவ் அம்பல் ஊரே.

தெளிவுரை

“மென்னிலமாகிய நெய்தல் நிலத்திற்குத் தலைவனே! தலைவி, உன்னிடத்தில் கொண்டுள்ள அன்புமிகுதியால் இது பகற்காலப் பொழுது என்பதையும் நினைக்க மாட்டாள். நீ அவளிடம் காட்டும் அன்பை மிகவும் போற்றுவாள். இவளுக்கு அருள் செய்யும் வகையில் மிகுதியான மலர்களைக் கொண்ட கடற்கரைச் சோலைக்கு நீ பகலிலும் வருவாய். இக்களவொழுக்கம் நிகழ் வதால் தலைவிக்கு இன்பமே; எனினும், ஊரில் எழும் அலரால் அவள் பழிச்சொல்லுக்கு ஆளாகி வீட்டுக்காவலில் வைக்கப் பெறுவாள். ஆதலால், நீ இனி இரவில் வரலாம். ஆனால், இந்த ஊர், மிகுந்த சுறாமீன்களையும், நீர் நிறைந்த கடற்பரப்பையும் கொண்டது. அவற்றோடு தூங்காத கண்களைக் கொண்ட பழிச்சொல் கூறும் கொடிய மாதரையும் கொண்டது” (என, இரவில் வரச்சொல்பவள் போல் சொல்லி, இரவில் வந்தால் அப்போதும் பழிச்சொல் ஏற்படும் என்பதைக் கூறி, அதனையும் மறுத்து, விரைவில் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்பதைத் தோழி வற்புறுத்துகிறாள்.)

கருத்து

‘தலைவ! நீ பகற்குறி வருவதால் பழிச்சொல் ஏற்பட்டுத் தலைவி காவலில் வைக்கப்படுவாள். இனி நீ இரவில் வரலாம்’ என்று தோழி கூறினாள். இரவிலும் தடைகள் இருப்பதால் நீ இரவில் வருவதையும் தவிர்த்துத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் எனக் குறிப்பால் சொல்கிறாள்.

இறைச்சி

சுறா மீனிருக்கும் கடல் துறையில், துஞ்சாத கண்ணை யுடையரான பெண்களை இவ்வூர் கொண்டது என்பது, தலைவியிருக்கும் வீட்டிலே தூங்காத கண்களைக்கொண்ட அன்னையும் உளள் என்னும் இறைச்சிப் பொருளை உணர்த்து கிறது.

சொற்பொருள்

1. பெருமை - மிகுதி; காலை என்னாள் - பகற்பொழுது என்பதையும் கருத மாட்டாள்.
2. அளித்தல் - அருள் செய்தல்.
3. பல்பூங்கானல் - பலவகைப் பூக்களைக் கொண்ட கடற்கரைச்சோலை.
4. இந்நீர் ஆகலோ இனிது - இவ்வாறு வருவது அவளுக்கு நன்மையைச் செயினும்.
5. அலரின் அருங்கடிப் படுகுவள் - இவள் ஊரில் எழும் அலரால் அரிய காவலுக்குட்பட்டு இற்செறிக்கப்படுவாள்; அலர் - பழிச்சொல்; அருங்கடி - அரிய காவல்.
6. எல்லி - இரவு; வம் - வரலாம்.
7. சுறவினம் - சுறாமீன் கூட்டம்; கலித்த - நிறைந்த.
8. துஞ்சாக் கண்ணர் - தூங்காத கண்களைக் கொண்டவர்களாய்.
9. அம்பல் ஊர் - ஆரவாரம் மிக்க ஊர்.

தோழி கூற்று

அகநானூறு 218 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி, தலைமகளை இடத்துய்த்து வந்து பகற்குறி நேர்ந்த வாய்பாட்டால் வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவியை இரவுக்குறியிடத்தில் கொண்டுவந்து நிறுத்திவிட்டு, தலைவனைக் கண்டு, பகற்குறியில் வரலாம் எனத் தோழி கூறினும், குறிப்பால் மணந்துகொள்ளுமாறும் கூறினாள் என்பதாம்.

கிளைபா ராட்டும் கடுநடை வயக்களிறு
முளைதருபு ஊட்டி, வேண்டுகுளகு அருத்த,
வாள்நிற உருவின் ஒளிறுபு மின்னி,
பரூஉஉறைப் பல்துளி சிதறி,வான் நவின்று,
பெருவரை நளிர்சிமை அதிர வட்டித்துப்
புயல்ஏறு உரைஇய வியல்இருள் நடுநாள்,
விறல்இழைப் பொலிந்த காண்புஇன் சாயல்
தடைஇத் திரண்டநின் தோள்சேர்பு அல்லதை,
படாஅ, வாகும்எம் கண்என, நீயும்

'இருள்மயங்கு யாமத்து இயவுக்கெட விலங்கி,
வரிவயங்கு இரும்புலி வழங்குநர்ப் பார்க்கும்
பெருமலை விடரகம் வரவுஅரிது' என்னாய்,
வரஎளி தாக எண்ணுதி, அதனால்,
நுண்ணிதின் கூட்டிய படுமாண், ஆரம்
தண்ணிது கமழும் நின்மார்பு, ஒருநாள்
அடைய முயங்கேம் ஆயின், யாமும்,
விறல்இழை நெகிழச் சாஅய்தும்; அதுவே
அன்னை அறியினும் அறிக! அலர்வாய்
அம்பல் மூதூர் கேட்பினும் கேட்க!
வண்டுஇறை கொண்ட எரிமருள் தோன்றியொடு,
ஒண்பூ வேங்கை கமழும்
தண்பெருஞ் சாரல் பகல்வந் தீமே!

தெளிவுரை

"தலைவ! தன் இனத்தைச் சார்ந்த யானைகள் பாராட்டுமாறு விரைந்து செல்லும் வலிய ஆண்யானை, தன் இனத்துக்கு முதலில் மூங்கில் முளைகளையும் பின்னர், அவை விரும்பும் தழைகளையும் கொண்டுவந்து கொடுத்து உண்பிக்கும். மேகம் வாள் நிறம்போல ஒளியுடன் மின்னி, பெரும் மழைத்துளிகளை உதிர்த்து, பெரிய மலையின் குளிர்ச்சி பொருந்திய சிகரங்கள் அதிரும்படியாய்ச் சூழ்ந்து, இடியுடன் பெருமழையாய்ப் பொழியும். இத்தகைய நள்ளிரவிலே நீ வருகிறாய்.

"சிறந்த அணிகலன்களை அணிந்து, காண்பதற்கு இனிமையாயுள்ள வளைந்து திரண்ட உன் தோளினைச் சேர்ந்தால் அல்லது எம் கண்கள் துயிலா என்பதால் அன்புடன் நீ வருகின்றாய்.

"இருள் செறிந்த நள்ளிரவிலே வரிகள் பொருந்திய பெரிய புலி, தன் இரைக்காக வழி தடுமாறி வருவாரைப் பார்த்திருக்கும். அந்த வழியில் வருதல் கடினம் என்று நீ கருதுவதில்லை; மாறாய், எம்மைப் பார்க்கவரும் பொருட்டு அவ்வழியே வருதல் எளிதென்று கருதுகின்றாய்.

"மணப்பொருள்களைக் கூட்டுகின்ற முறையை நுட்பமாய் அறிந்து கூட்டப்பட்ட மாட்சிமை பொருந்திய சந்தனம் குளிர்ச்சி

பொருந்தியதாய்க் கமழும் உன் மார்பினை ஒரு பொழுதேனும் ஆரத் தழுவாவிடின், எம் அணிகலன்கள் நெகிழ்ந்துவிடுகின்றன.

"ஆதலால், நீ வருவதனை எம் அன்னை அறிந்தாலும் அறியட்டும்; அலர் பரப்புகின்ற வாயினைக் கொண்ட பெண்டிரின் பழிச்சொற்களை எங்கள் மூதூர் கேட்டாலும் கேட்கட்டும்; வண்டுகள் மொய்க்கப்பட்டிருப்பதும், எரிகின்ற தீப் போன்றதுமான தோன்றி மலர் ஒளிவீசுவதும், ஒள்ளிய வேங்கை மலர் மணக்கின்றதும், குளிர்ச்சி கொண்டதுமான மலைச் சாரலுக்கு இனிப் பகல் நேரத்திலேயே வருக!

கருத்து

இரவில் நீ வரும் வழி இடர்ப்பாடு மிக்கது; ஆதலின், தாய் அறியினும், அலர் பரவி ஊரெல்லாம் அறியினும், தோன்றிப்பூவும் வேங்கைப்பூவும் கமழ்கின்ற பெரிய மலைச்சாரலுக்கு நீ பகல் நேரத்திலேயே வருக.

குறிப்பு

தலைவன் இரவுக்குறியிலே வந்து மீளும்போது அவனிடம், 'இரவுக் குறியில் வரவேண்டா; பகற்குறியில் வருக' என்று கூறி, அதற்கும் தடை உள்ளது என்பதைக் குறிப்பால் புலப்படுத்தி, மறைமுகமாய்த் தோழி வரைவு கடாவுகிறாள். (தடை - அன்னை அறிதல்; ஊரில் பழிச்சொல் எழுதல்.)

சொற்பொருள்

1. கிளை - இனம்; வயக்களிறு - வலிமை மிக்க ஆண்யானை.
2. முளை - மூங்கில் முளை; தருபு - தந்து; ஊட்டி - உண்பித்து; குளகு - தழைகள்.
3. உருவின் - (வாளின் நிறம்போலும்) உருவுடன்; ஒளிறுபு - ஒளிவிட்டு.
4. பரூஉ - பருத்த; உறை - மழைத்துளி.
5. நளிர் - குளிர்ச்சி பொருந்திய; சிமை - உச்சி; வட்டித்து - சூழ்ந்து.
6. புயல் - மேகம்; ஏறு - இடி ஏறு; உரைஇய - பரந்த; வியல் - மிக்க.
7. விறல் இழை - பெருமை மிக்க அணிகலன்கள்; காண்புஇன் - காண்பதற்கினிய.
8. தடைஇ - வளைந்த; சேர்பு அல்லதை - சேர்ந்தால் அல்லாது.
9. படாஅ - உறங்கா.
10. இயவு - வழி; கெட - தடுமாறலான்; விலங்கி - விலகி.
11. வழங்குநர் - வழிச்செல்வாரை.

12. விடரகம் - மலைப்பிளப்பு; என்னாய் - என்று கருதாய்.
13. எண்ணுதி - எண்ணுகின்றாய்.
14. ஆரம் - சந்தனம்.
15. கமழும் - மணம் வீசும்.
16. முயங்கேம் ஆயின் - தழுவாமல் இருந்தால்.
17. சாஅய்தும் - மெலிவோம்.
18. அலர்வாய் - பழிச்சொல் கூறும்.
19. அம்பல் மூதூர் - ஆரவாரம் மிக்க பழைய ஊர்.
20. இறை - தங்குதல்; எரிமருள் - தீப் போன்ற; தோன்றி - தோன்றி மலர்.
21. வேங்கை - வேங்கை மலர்; கமழும் - மணம் வீசும்.
22. பகல் வந்தீமே - பகலில் வருக.

தோழி கூற்று

அகநானூறு 92 **மதுரைப் பாலாசிரியர் நற்றாமனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறிச் சென்று தலைமகளைக் கண்ணுற்று நீங்கும் தலைமகனைப் பகற்குறி நேர்ந்த வாய்பாட்டால் தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

நாளும் இரவில் தலைவியைச் சந்தித்துச் செல்லும் தலைவனைக் கண்டு தோழி, 'இனிப் பகலில் வருக' என்று கூறி, அப்பகற்குறியிலும் தலைவியைக் காண இயலாது எனக் குறிப்பால் உணர்த்தி, அவளை மணந்து செல்லுமாறு கூறியது.

நெடுமலை அடுக்கம் கண்கெட மின்னிப்
படுமழை பொழிந்த பானாள் கங்குல்,
குஞ்சரம் நடுங்கத் தாக்கி, கொடுவரிச்
செங்கண் இரும்புலி குழுமும் சாரல்
வாரல், வாழியர், ஐய – நேர்இறை
நெடுமென் பணைத்தோள் இவளும் யானும்
காவல் கண்ணினம் தினையே; நாளை
மந்தியும் அறியா மரம்பயில் இறும்பின்
ஒண்செங் காந்தள் அவிழ்ந்த ஆங்கண்,

தண்பல் அருவித் தாழ்நீர் ஒருசிறை,
உருமுச்சிவந்து எறிந்து உரன்அழி பாம்பின்
திருமணி விளக்கின் பெறுகுவை –
இருள்மென் கூந்தல் ஏமுறு துயிலே.

தெளிவுரை

“ஐய! நீ வாழ்க! நெடிய மலையடுக்குகளிலெல்லாம் காண்பவர் கண்கள் கெடுமாறு மின்னல் மின்னிப் பெருமழை பொழியும் நள்ளிரவில், வளைந்த கோடுகளையும் சிவந்த கண்களையும் கொண்ட பெரிய புலி, யானை நடுங்குமாறு தாக்கி முழங்குகின்ற மலைச்சாரலுக்கு நீ வரவேண்டா!

“(ஏனெனில்) அழகிய முன் கையினையும் நீண்ட மெல்லிய மூங்கில் போன்ற தோளினையும் கொண்ட தலைவியாகிய இவளும் நானும் நாளை முதல் தினைப்புனம் காக்க உள்ளோம்.

“மரமேறுதலில் சிறப்பு வாய்ந்த மந்திகளும் ஏறி அறியாத மரங்கள் நெருங்கிய காடு. அங்கே ஓர் இடத்தில் செங்காந்தள் மலர்ந்திருக்கும்; ஒரு பக்கம் குளிர்ந்த அருவிகள் பல வீழும்; அங்குப் பகல் வேளையில் நீ வந்தால் இடி சினந்து தாக்கியதால் இறந்த பாம்பு கக்கிய தலைமணி ஒளிர்கின்ற வெளிச்சத்தில் தலைவியின் இருண்ட மெல்லிய கூந்தலில் இனிய துயிலைப் பெறலாம்.”

கருத்து

தலைவ! நாங்கள் பகலில் தினைப்புனம் காக்க உள்ளோம். நீ பகற்குறி வரின் தலைவியின் கூந்தலில் இனிய துயிலைப் பெறலாம்.

குறிப்பு

பகற்குறியில் வரலாம் என்று கூறினாளேனும், மலர் பறிக்கவும் அருவியாடவும் பலர் வருவராதலின், பகற்குறியும் அரிது என்பதைக் குறிப்பால் புலப்படுத்தி வரைவு கடாவினாள் என்க.

பகற்குறி இடம்

தினைப்புனத்திற்கு அருகில் மந்தியும் ஏற இயலாத உயர்ந்த மரங்கள் நெருங்கிய காடு; அதனுள் காந்தள் மலர்ந்திருக்கும்; அருவிநீர் விழுந்துகொண்டிருக்கும். அங்கே இடியால் துன்புற்ற

பாம்பு கக்கிய தலைமணி ஒளியூட்டிக்கொண்டிருக்கும். அவ்விடமே பகற்குறி இடம்.

சொற்பொருள்

1. அடுக்கம் - அடுக்கு.
2. படுமழை - மிக்க மழை; பானாள் - நடுயாமம்; கங்குல் - இருள்.
3. குஞ்சரம் - யானை; கொடுவரி - வளைந்த கோடுகள்.
4. இரும்புலி - பெரிய புலி; குழுமும் - முழங்கும்.
5. வாரல் - வரவேண்டா; நேர் இறை - நேரிய முன்கை.
6. பணை - மூங்கில்.
7. காவல் கண்ணினம் - (தினைப்புறம்) காத்தலைக் கருதியுள்ளோம்.
8. அறியா - ஏறி அறியாத; பயில் - நெருங்கிய; இறும்பு - காடு.
9. அவிழ்ந்த - மலர்ந்துள்ள; ஆங்கண் - அவ்விடத்தே.
10. தாழ் நீர் - அருவி; ஒரு சிறை - ஒரு பக்கம்.
11. உருமு - இடி; சிவந்து - சினந்து; எறிந்து - தாக்க; உரன் - வலிமை.
12. திருமணி - அழகிய தலைமணி; விளக்கின் - ஒளியில்; பெறுகுவை - பெறுவாய்.
13. ஏமுறு - இன்பம் தரும்; துயில் - உறக்கம்.

தோழி கூற்று

குறுந்தொகை 353 **உறையூர் முதுகூத்தன்**

திணை : குறிஞ்சி

கூற்று

பகற்குறி வந்தொழுகும் தலைமகன் வெளிப்பாடஞ்சி இரவுக்குறி நயந்தானது குறிப்பறிந்த தோழி, இரவின்கண் அன்னையது காவல் அறிந்து பின்னும் 'பகற்குறியே நன்று அவ்விரவுக்குறியின்' என்று பகற்குறியும் இரவுக்குறியும் மறுத்துத் தலைமகன் சிறைப்புறத்தானாக வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

களவில் பகற்குறி வந்தொழுகும் தலைவன், பகலில் வருவதால் ஊரினர் அறிவாரென இரவுக்குறி விரும்பிச் சிறைப்புறத்தே நின்றான். அப்போது தோழி தலைவியை நோக்கிக் கூறுவாளாய், 'நம் அன்னையின் காவல் இரவில் மிக்கது' என்று சொல்லி, இரவுக்குறி மறுக்கும் வாயிலாய் வரைவு கடாயது.

ஆர்கலி வெற்பன் மார்புபுணை யாக,
கோடுஉயர் நெடுவரைக் கவாஅன், பகலே,
பாடுஇன் அருவி ஆடுதல் இனிதே;
நிரைஇதழ் பொருந்தாக் கண்ணோடு, இரவில்
பஞ்சி வெண்திரிச் செஞ்சுடர் நல்இல்
பின்னுவீழ் சிறுபுறம் தழீஇ,
அன்னை முயங்கத் துயில்இன் னாதே.

தெளிவுரை

அவன் ஆரவாரம் கொண்ட மலைநாட்டுக்குத் தலைவன். அவன் மார்பினைத் தெப்பமாய்க் கொண்டு, சிகரங்கள் உயர்ந்த நீண்ட மலையின் தாழ்ந்த பகுதியில் விழும் இனிய ஓசை கொண்ட அருவியில் பகற்பொழுதில் நீராடுதல் இனியதாயுள்ளது. இரவில் வெள்ளிய பஞ்சுத்திரியைக் கொண்ட செம்மையான விளக்கின் ஒளியில், நல்ல எம் வீட்டில், பின்னிய கூந்தல் தாழ்ந்து கிடக்கும் சிறிய முதுகைத் தழுவித் தாய் அணைத்துக்கொள்ள இமைகள் பொருந்தாத கண்களுடன் உறக்கமின்றி இருப்பது இன்னாததாயுள்ளது.

கருத்து

தலைவ! நீ முயங்குங்கால் மகிழும் தலைவி, அன்னை முயங்கும்போது துயிலின்றி வருந்துகிறாள். இந்நிலையை மாற்ற, வரைவொடு வருக.

விளக்கம்

பகலில் அருவி ஆடத் தலைவன் வருதல் பலராலும் அறியப்பட்டு அலர் மிகுதியாகும். இரவிலோ, தாயின் காவல் மிகுதி. ஆதலின், தோழி இரு குறிகளையும் மறுத்து வரைவொடு வருமாறு கூறினாள்.

சொற்பொருள்

1. ஆர்கலி - ஆரவாரம்; புணை - தெப்பம்.
2. கோடுஉயர் - சிகரங்கள் உயர்ந்த; கவாஅன் - மலைப்பக்கம்; பகலே - பகல் நேரத்தில்.
3. பாடுஇன் - ஓசை இனிதாகிய.
4. நிரைஇதழ் - இமைகள்; பொருந்தா - பொருந்தாத.

5. பஞ்சி – பஞ்சு; செஞ்சுடர் - செம்மையான விளக்கொளி.
6. பின்னுவீழ் - பின்னலிடப்பட்டுத் தாழ்ந்து கிடக்கும்; சிறுபுறம் - கழுத்து, முதுகு.
7. முயங்க - அணைத்துக்கொள்வதால்; துயில் - தூக்கம் (இன்றி இருப்பது); இன்னாது - துன்பம் தருவது.

தோழி கூற்று

குறுந்தொகை 375 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறிக்கண் சிறைப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய் இருபொழுதும் மறுத்து வரைவு கடாயது. (இருபொழுது - பகல், இரவுக் குறிகள்.)

கூற்று விளக்கம்

தலைவன் இரவுக்குறியிடத்தே வந்து, தலைவியின் வருகை நோக்கி ஒரு பக்கம் நின்றிருந்தான். களவையே நீட்டிக்கும் அவன் உள்ளத்தை வரைந்து கொள்ளுதலில் செலுத்த எண்ணிய தோழி, இரு குறியிடங்களிலும் கூடும் களவுக்கூட்டத்தை மறுத்து அவன் கேட்குமாறு தலைவியிடம் பேசியது.

அம்ம வாழி, தோழி! இன்றுஅவர்
வாரார் ஆயினோ நன்றே; சாரல்
சிறுதினை விளைந்த வியன்கண் இரும்புனத்து
இரவுஅரி வாரின், தொண்டகச் சிறுபறை
பானாள் யாமத்தும் கறங்கும்,
யாமம் காவலர் அவியா மாறே.

தெளிவுரை

"தலைவியே! நீ வாழ்க! நான் சொல்வதைக் கேள்! மலைச் சாரலில் சிறுதினை மிகுதியாய் விளைந்துள்ள கொல்லையில் இரவு நேரத்திலும் தினைக்கதிர் அரிவர். அப்போது அவர்கள், (காட்டுவிலங்குகளால் தொல்லை நேராதிருக்கும்பொருட்டு) முழக்குகின்ற தொண்டகப்பறையின் ஓசை இரவின் நடு

யாமத்தில் ஊர்க்காவல் செய்பவர்களையும் உறங்காமல் இருக்கச் செய்யும்! ஆதலின், நம் தலைவர் இன்று இரவுக்குறியிடத்து வாராது இருப்பது நல்லது.”

கருத்து

தலைவியே! இரவில் தலைவர் நம்மைச் சந்திக்க வருவது நன்று அன்று.

விளக்கம்

தினை விளைந்து கதிர் அரியப்படுகிறது. விளைவு மிகுதியாய் இருத்தலால் இரவு, பகல் ஆகிய இரு நேரங்களிலும் அரிகின்றனர். கதிரறுப்போர் காண நேரும் என்பதால் பகற் குறியையும், அவர்கள் தொண்டகப்பறையை இரவில் முழக்கு தலால் எழும் ஓசையால் ஊர்க்காவலர் உறங்காதிருப்பதால் இரவுக்குறியையும் மறுத்து, வரைந்துகொள்ளுதலே செய்தற்கு உரியது எனத் தோழி தலைவனுக்கு உணர்த்துகிறாள்.

சொற்பொருள்

2. வாரார் ஆயின் - வாராமல் இருப்பாராயின்.
3. வியன்கண் - அகன்ற இடம்; இரும்புனம் - பெரிய தினைப்புனம்.
4. அரிவாரின் - அறுப்பவர்களின்.
5. பானாள் - பாதி இரவு; கறங்கும் - ஒலிக்கும்.
6. அவிதல் - உறங்குதல், (அவியாமாறு - உறங்காதிருக்கும் பொருட்டு).

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 59 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

இருபொழுதும் வாரலென்று வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

பகல், இரவு என இருபொழுதும் நீ இங்கே வருவதைத் தவிர் எனத் தடுத்து, வரைந்துகொள் எனத் தோழி, தலைவனை வற்புறுத்தியது.

பகல்வரின் கவ்வை பலவாம் பரியா(து)
இரவரின் ஏதமும் அன்ன – புகஅரிய
தாழை துவளும் தரங்கநீர்ச் சேர்ப்பிற்றே
ஏழை நுளையர் இடம்.

தெளிவுரை

தலைவ! நீ பகலில் வந்தால் பலரும் பார்த்து, பழிச்சொற்கள் பலவாய்ப் பெருகும். பகல் வரவைத் தவிர்த்து இரவில் வருவா யானால், அதிலும் இடையூறுகள் பல உள. மேலும், எளியவரான பரதவர் வாழும் எம் இடமோ, பிறர் புகுவதற்கரிய தாழை மரங்கள் நெருங்கிப் படர்ந்திருக்கும் அலை பொருந்திய கடற் கரையில் உள்ளது. (எனவே, இருபொழுதுகளிலும் வரவேண்டா.)

கருத்து

தலைவ! பகல், இரவு என இரு குறிகளிலும் வருவதைத் தவிர்த்துத் திருமணம் செய்துகொள்ளுதலை மேற்கொள்.

சொற்பொருள்

1. கவ்வை - பழிச்சொற்கள்; பரியாது - தவிர்த்து.
2. ஏதம் - துன்பம்; அன்ன - அது போன்றதே; புக அரிய - புகுதற்கு முடியாதபடி.
3. தாழை - தாழை மரம்; துவளும் - நெருங்கியிருக்கும்; தரங்கம் - கடல் அலை; சேர்ப்பிற்று - கரையில் வந்து சேரும்.
4. நுளையர் - பரதவர்கள்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 35 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

இரவும் பகலும் வாரல் என்று தலைமகனைத் தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவியைச் சந்திக்க இரவிலும் பகலிலும் வருவதைத் தவிர்த்து அவளை மணந்துகொள்ளுமாறு தோழி தலைவனை வற்புறுத்தியது.

புலால்அகற்றும் பூம்புன்னைப் பொங்குநீர்ச் சேர்ப்ப!
நிலாஅகற்றும் வெண்மணல்தண் கானல் – சுலாஅகற்றிக்
கங்குல்நீ வாரல் பகல்வரின்மாக் கவ்வையாம்
மங்குல்நீர் வெண்திரையின் மாட்டு.

தெளிவுரை

கடலோரப் புலால் நாற்றத்தைப் போக்கி, நல்ல நறுமணம் வீசும் பூக்களால் மணம் பரப்பும் புன்னை மரங்கள் நிறைந்த கடல்நிலத் தலைவனே! நிலவைப்போல் ஒளிவீசும் வெண்மணல் பரவிய கடற்கரைச்சோலையில், நீ நாள்தோறும் இரவில் வந்து செல்வதைத் தவிர்! இரவுக்குறியைத் தவிர்த்துப் பகலில் வந்தால், நீ வந்து செல்வதைப் பார்ப்போர் உன்னையும் தலைவியையும் சேர்த்து வைத்து அலர் பரப்புவர். எனவே, இருபோதும் வருவதைத் தவிர்த்து அவளை வரைந்துகொள்.

கருத்து

தலைவ! பகற்குறியிலும் இரவுக்குறியிலும் வருவதைத் தவிர்த்துத் தலைவியை வரைந்துகொள்.

சொற்பொருள்

1. புலால் - புலவு நாற்றம்; பொங்கு நீர் - மிகுந்து காணப்படும் நீர்.
2. நிலாஅகற்றும் - நிலவொளியையும் வென்று விலக்கும்; தண் - குளிர்ந்த; சுலா - (தலைவியின் மனச்) சுழற்சியினை.
3. கங்குல் - இரவு; வாரல் - வாராதே; மா - பெரிய; கவ்வை ஆம் - பழி உண்டாகும்.
4. மங்குல் நீர் - மேகம் போன்ற நீர்; வெண்திரையின் மாட்டு - வெள்ளிய அலைகளைக் கொண்ட கடற்கரையின் பக்கங்களி லெல்லாம்.

தோழி கூற்று

நற்றிணை 182 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவு நீட்டிப்பத் தலைமகள் ஆற்றாமை அறிந்த தோழி, சிறைப் புறமாகச் சொல்லி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் தலைவியைக் கூடி மகிழ்ந்த தலைவன் வரைவு மேற்கொள்ளாது காலத்தை நீட்டினான். அதனால் தலைவி வருந்திய நிலையில் தலைவன் சிறைப்புறத்தானாக அவன் செவியில் படுமாறு தலைவியிடம் தோழி கூறியது.

நிலவும் மறைந்தன்று; இருளும் பட்டன்று;
ஓவத்து அன்ன இடனுடை வரைப்பில்,
பாவை அன்ன நப்புறங் காக்கும்
சிறந்த செல்வத்து அன்னையும் துஞ்சினள்;
கெடுத்துப்படு நன்கலம் எடுத்துக்கொண் டாங்கு,
நன்மார்பு அடைய முயங்கி, மென்மெலக்
கண்டனம் வருகம் சென்மோ? தோழி
கீழும் மேலும் காப்போர் நீத்த
வறுந்தலைப் பெருங்களிறு போல,
தமியன் வந்தோன் பனியலை நிலையே.

தெளிவுரை

தலைவியே! நிலவு மறைந்து இருளும் பரவியது; ஓவியத்தில் அமைந்தது போன்ற அழகிய இடமகன்ற நம் வீட்டின் எல்லையைத் தாண்டி, சித்திரப்பாவை போன்ற நீ வெளியே போகாதபடி காவல் காத்திருக்கும் அன்னையும் உறங்கி விட்டாள். யானையை நிலத்தில் பக்கத்திலிருந்து நடத்திச் செல்லும் பரிக்கோற்காரர், அதன்மீது அமர்ந்து நடத்தும் பாகர் ஆகிய இருவரும் விட்டகன்ற சிறிய தலையைக் கொண்ட பெரிய களிற்றைப் போன்றவனான தலைவன் வந்துள்ளான். பெய்கின்ற பனி வருத்துதலினாலே துன்புற்றிருக்கும் அவன் நிலை இரங்கத்

தக்கது. காணாமற்போன நல்ல அணிகலனை மீண்டும் கண்டெடுத்தாற்போல, நம்மை வீட்டில் வைத்துப் பாதுகாத்ததால் நம்மை அடைய இயலாமல் இருக்கும் தலைவனின் மார்பைத் தழுவி மகிழ்ந்துவரும் சூழ்நிலை அமையுமோ? மெல்ல மெல்லச் சென்று அவனைக் கண்டு வருவோமா?

கருத்து

தலைவி தாயின் இற்செறிப்புக்கு ஆளாவாள் என்பதால் தலைவன் விரைவில் மணந்துகொள்ள வேண்டும்.

விளக்கம்

தலைவன் தலைவியை மணமுடிப்பதற்குக் காலத்தாழ்வு ஏற்பட்டது. தலைவி பிரிவுத் துயரால் வருந்தினாள். இத்துணைக் காலம் தலைவனைக் காண இயலாததற்குக் காரணம் தலைவியை அவள் தாய், வீட்டுக்காவலில் வைத்திருந்ததுதான். இன்றுதான் தலைவனைக் காண்பதற்கும், அவனோடு இன்பம் அனுபவித்தற்கும் ஏற்ற சூழல் வாய்த்திருக்கிறது. இனி அத்தகைய சூழல் அமைவது அரிது என்ற காரணத்தினாலே தலைவன் விரைந்து மணம் முடிப்பதற்கான செயலைச் செய்ய வேண்டும் என்னும் குறிப்பினைத் தோழி புலப்படுத்துகிறாள்.

"இதோ பார்! நிலவும் மறைந்துவிட்டது; இருளும் படர்ந்து விட்டது; அன்னையும் உறங்கிவிட்டாள். நம்மிடம் நிறைந்து நம்மை வருத்தும் காதலுணர்வு நம் காதலனையும் வருத்தும் என்பதில் ஐயமில்லை. எனவே, நாம் இப்போது அவன்பாற் சென்று அவனது தனிநிலை கண்டு முயங்கி வருவோமா?" என்று தோழி தலைவியிடம் கேட்டாள்.

குறிப்பு

இழந்துபோன நல்ல கலனைக் கண்டெடுத்தால் பெறும் மகிழ்ச்சியைப் போல, இடையீடுபட்டதனால் இழந்த களவின்பத்தை மீண்டும் பெற்றுக் கொள்வோம்.

காப்போர் நீத்த களிறுபோல என்றது, மூத்தோர்க்கு அடங்கி நடப்பவனாயின் வரைந்துகொள்ளும்படி வற்புறுத்தப்பட்டிருப்பான். அஃதில்லாமையாலேயே களவினை நீட்டிக்கொண்டிருக்கிறான்.

இரவுக்குறி இடையீடுபடுவதற்கான பலவகைக் காரணங்களையும் கூறி, அவன்மீது தாம் கொண்டுள்ள மாறாத காதலையும் உரைத்து, அவனை மணவினைக்கு முற்படுமாறு தூண்டுகிறாள், தோழி!

சொற்பொருள்

1. மறைந்தன்று - மறைந்துவிட்டது.
2. ஓவம் - ஓவியம்; இடனுடை - அகன்ற இடங்கொண்ட (வீட்டின்); வரைப்பின் - எல்லையில்.
3. புறங்காக்கும் - இற்செறித்துக் காவல் புரியும்.
4. சிறந்த செல்வத்து - மிக்க செல்வ வாழ்வைக் கொண்ட; அன்னையும் - தாயும்; துஞ்சினள் - உறங்குகின்றாள்.
5. கெடுத்துப்படு - காணாமற்போன; எடுத்துக்கொண்டாங்கு - கண்டெடுத்துக்கொண்டது போல.

6-7 கண்டனம் வருகம் மென்மெலச் சென்மோ? - கண்ணாரக் கண்டு வருவதற்கு நாமே மெல்ல மெல்லச் சென்று கண்டு வருவோமா?

8. கீழும் மேலும் காப்போர் - நிலத்தில் பக்கத்தில் வரும் பரிக்கோற்காரரும் மேலிருந்து நடத்தும் பாகரும்; நீத்த - நீங்கிய.
9. வறுந்தலை - வெற்றுத் தலையைக் கொண்ட.
10. தமியன் - தனியனாய்; பனிஅலை - பனி வருத்த வந்து.

தோழி கூற்று

நற்றிணை 317 — **மதுரைப் பூவண்டனாகன் வேட்டனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி தலைமகனை வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவியொடு களவொழுக்கத்தில் கூடி, திருமணம் செய்துகொள்ளாது காலம் நீட்டிய தலைவனை உடனே வரைவு மேற்கொள்ளுமாறு தோழி கூறியது.

நீடுஇருஞ் சிலம்பில் பிடியொடு புணர்ந்த
பூம்பொறி ஒருத்தல் ஏந்துகை கடுப்ப,
தோடுதலை வாங்கிய நீடுகுரல் பைந்தினை,

பவளச் செவ்வாய்ப் பைங்கிளி கவரும்
உயர்வரை நாட!நீ நயந்தோள் கேண்மை
அன்னை அறிகுவள் ஆயின், பனிகலந்து
என்ஆ குவகொல் தானே – எந்தை
ஓங்குவரைச் சாரல் தீம்சுனை ஆடி,
ஆயமொடு குற்ற குவளை
மாஇதழ் மாமலர் புரைஇய கண்ணே?

தெளிவுரை

"உயரமான பெரிய மலைப்பகுதியில் பெண்யானையுடன், முகத்திலே புள்ளிகள் கொண்ட ஆண்யானை சேர்ந்தது. அதன் துதிக்கையைப் போல, இலைகளிடையே தோன்றி எழுந்த நீண்ட பசிய தினைக்கதிர்களைப் பவளம் போன்று சிவந்த வாய் கொண்ட பச்சைக்கிளிகள் கொய்து பறந்தன. இத்தகைய உயர்ந்த மலைநாட்டிற்குரிய தலைவனே! நீ விரும்புகின்ற தலைவி யோடு நீ கொண்டுள்ள நட்பினை எம் அன்னை அறிவாளாயின் என்ன ஆகும்? எம் தந்தையின் உயர்ந்த மலைச்சாரலில் உள்ள இனிய சுனையிலே நீராடி, தோழியரோடு பறித்த பெரிய கரிய இதழ்கள் கொண்ட நீர் ததும்பிய குவளை மலரைப் போன்று எம் தலைவியின் கண்கள் கண்ணீர் மல்கிக் கலங்கும். இனி எம் நிலை என்ன ஆகுமோ?"

கருத்து

மலைநாடனே! உன்னோடு கொண்டுள்ள நட்பினை எம் அன்னை அறிந்தால் தலைவியை இல்லக்காவலில் வைப்பாள்; அந்நிலை நிகழாமல் உடனே மணங்கொண்டு மகிழ்வூட்டு!

விளக்கம்

உன்னிடம் தலைவி கொண்டுள்ள நட்பை எம் தாய் அறியின், உடனே அவளை வீட்டுக்காவலில் வைத்துத் துன்புறுத்துவாள். குவளை மலர் போன்ற இவள் கண்கள் கண்ணீரைச் சிந்தினவாய் இருக்கும். இந்நிலை ஏற்படாதவாறு தலைவியைத் திருமணம் செய்துகொள்.

உள்ளுறை

கிளி கொய்து சென்ற கதிர் அதற்குப் பயன்படுவதன்றி அது விளைந்த கொல்லைக்குப் பயன்படுவதில்லை. அதுபோன்று, தலைவியும் அவள் நலத்தை நுகர்கின்ற உனக்குப் பயன் படுவதன்றித் தான் பிறந்த இல்லத்திற்குப் பயனாவதில்லை. அதனால், விரைவில் இவளை மணந்து அழைத்துச் செல்.

சொற்பொருள்

1. நீடு இரும் - நெடிய பெரிய; சிலம்பு - மலை.
2. பூம்பொறி - அழகிய புள்ளிகளைக் கொண்ட; ஒருத்தல் - ஆண்யானை; ஏந்துகை - துதிக்கை.
3. தோடு - தோகை; வாங்கிய - (இடையே) தோன்றி எழுந்த; நீடு - நீண்ட; குரல் - கதிர்.
5. நயந்தோள் - விரும்பப்பட்டவள்; கேண்மை - நட்பு.
6. பனி கலந்து - நீர் சொரிந்து.
7. எந்தை - எம் தந்தை.
8. ஓங்குவரை - உயர்ந்த மலை; தீம்சுனை - இனிய சுனை.
9. ஆயம் - தோழியர் கூட்டம்; குற்ற - கொய்த; குவளை - குவளை மலர்.
10. மாஇதழ் - கரிய இதழ்; மாமலர் - அழகிய மலர்; புரைஇய - ஒத்த.

தோழி கூற்று

அகநானூறு 156 **ஆவூர் மூலங்கிழார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகளை இடத்துய்த்துவந்த தோழி தலைமகனை வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

களவிலே காதலனுடன் உறவாட வந்த தலைவியைக் குறியிடத்தில் நிற்கச் செய்த பின்னர், தலைவனைச் சந்தித்த தோழி, அவனிடம் தலைவியின் வருத் தத்தைக் கூறி அவளை விரைவில் மணந்துகொள்ளுமாறு வற்புறுத்தியது.

முரசுடைச் செல்வர் புரவிச் சூட்டும்
மூட்டுறு கவரி தூக்கி அன்ன,
செழுஞ்செய் நெல்லின் சேய்அரிப் புனிற்றுக்கதிர்
மூதா தின்றல் அஞ்சி, காவலர்
பாகல் ஆய்கொடிப் பகன்றையொடு பரீஇ,
காஞ்சியின் அகத்து, கரும்புஅருத்தி, யாக்கும்
தீம்புனல் ஊர்! திறவிது ஆகக்
குவளை உண்கண் இவளும் யானும்
கழனி ஆம்பல் முழுநெறிப் பைந்தழை,
காயா ஞாயிற்று ஆகத்துத் தலைப்பெய,
பொய்தல் ஆடிப் பொலிகஎன வந்து,
நின்நகாப் பிழைத்த தவறோ – பெரும!
கள்ளும் கண்ணியும் கையுறை யாக,
நிலைக்கோட்டு வெள்ளை நால்செவிக் கிடாஅய்
நிலைத்துறைக் கடவுட்கு உளப்பட ஓச்சி,
தணிமருங்கு அறியாள், யாய்அழ,
மணிமருள் மேனி பொன்நிறம் கொளலே.

தெளிவுரை

"முரசங்களையுடைய செல்வரது குதிரையின் தலையுச்சியில் இணைத்துத் தைத்த மயிர்க்கொத்தினைத் தூக்கி நிறுத்தினாற் போன்ற, வளஞ்சான்ற வயலில் விளைந்த சிவந்த நெல் மணிகளைக் கொண்ட இளங்கதிரை முதிய பசு தின்னும். அதனைக் காணும் வயற்காவலர் அப்பசுவிற்குக் கரும்பினைத் தின்னக் கொடுத்துப் பின்னர்ப் பாகற்கொடியையும் பகன்றைக் கொடியையும் அறுத்து, அவற்றைக் கயிறாய்க் கொண்டு அப்பசுவைக் காஞ்சி மரத்தில் கட்டி வைப்பர். அத்தகைய நீர் வளமிக்க ஊருக்குத் தலைவ!

"தலைவியின் மேனி பசலை படர்ந்து பொன்னிறம் கொண்டது. எம் அன்னை, இந்நோய் தெய்வக்குற்றத்தால் ஏற்பட்டது என்று கருதி, நீர்த்துறையில் நிலைபெற்று நிற்கும் கடவுளுக்குக் கள்ளினையும் மாலையினையும் காணிக்கையாய்த் தந்தும், நிமிர்ந்த கொம்பினையும் தொங்கும் காதினையும் கொண்ட வெள்ளாட்டுக்குட்டியைப் பலியாய்த் தந்தும்

வேண்டினாள். அதனாலும் நோய் நீங்கப்பெறாதது கண்டு அழுது நிற்கிறாள்.

"இஃது எதனால் நேர்ந்தது? நீலப்பூப்போன்ற மையெழுதிய கண்ணினைக் கொண்ட தலைவியும் நானும், இதழ் ஒடியாத ஆம்பல் மலரோடு பசிய தழையையும் சேர்த்துத் தொடுத்த தழையாடை மேனியில் இயல்பாய் அசையுமாறு அணிந்தோம். ஞாயிறு காய்தலில்லாத காலைப்பொழுதில் விளையாடப் போவதாய்க் கூறிப் புறப்பட்டு, உன்னைக் கண்டு அளவளாவிச் சிரித்து, உன்னை வாழ்த்தி மகிழ்ந்தோமே! அந்தப் பிழையால் ஏற்பட்ட தீங்கன்றோ இது!"

கருத்து

தலைவ! தலைவியின் உடல் வேறுபாடு கண்டு தாய் ஐயுறுகிறாள்; அவளை இல்லக்காவலில் வைப்பாள்; ஆதலின், அவளை நீ உடனே மணந்துகொள்ள வேண்டும்.

விளக்கம்

ஊர! எம் தாய், நீர்த்துறையிலுள்ள கடவுளுக்குக் கள்ளினையும் மாலையினையும் காணிக்கையாய்த் தந்து, வெள்ளாட்டுக் குட்டியைப் பலியாய்த் தந்து, தலைவியின் மேனி நோய் தீருமாறு வேண்டினாள். அதனால் தலைவி நலம் பெறாதது கண்டு அழுகிறாள்.

தலைவியும் யானும் வைகறைப்போதில் வந்து, உன்னைக் கண்டு அளவளாவிச் சிரித்துச் சென்றோமே! இவள் மேனியில் பசப்பூரக் காரணம், இந்தத் தவறால்தானோ?

குறிப்பு

தலைவியின் பசலையும் தாயின் கண்ணீரும் நீங்க வேண்டுமானால் இவளை நீ மணந்துகொள்ள வேண்டுமெனத் தோழி கூறுகிறாள்.

சொற்பொருள்

1. புரவிச் சூட்டும் - குதிரையின் உச்சி.
2. மூட்டுறு - இணைத்துத் தைத்த; கவரி - சாமரை; தூக்கி அன்ன - நிமிர்த்து வைத்தாற்போல.

3. சேய்அரி - சிவந்த நெல்மணிகள்; புனிற்றுக்கதிர் - இளங்கதிர்.
4. மூதா - முதிய பசு.
5. பாகல், பகன்றை - கொடி வகைகள்; பரீஇ - அறுத்து.
6. அருத்தி - உண்பித்து; யாக்கும் - கட்டி வைத்தல்.
7. திறவிது - செம்மை வாய்ந்தது.
9. முழுநெறி - இதழ் ஒடியாத; பைந்தழை - பசிய தழையாடை.
10. காயா ஞாயிற்று - ஞாயிறு காய்தலில்லாத காலைப்பொழுதில்; ஆகத்து - மேனியில்.
11. பொய்தல் - விளையாட்டு; பொலிக - சிறக்க.
12. நின் நகா - உன்னோடு சிரித்து.
13. கையுறை - காணிக்கை.
14. நிலைக்கோடு - நிமிர்ந்த கொம்பு; நால்செவி - தொங்கும் காது.
15. ஓச்சி - செலுத்தி, போற்றி.
16. தணிமருங்கு - தணியும் வழி.
17. பொன்நிறம் கொளல் - பசலையால் பொன் நிறத்தினை அடைதல்.

தோழி கூற்று

நற்றிணை 145 **நம்பிகுட்டுவன்**

திணை : நெய்தல்

கூற்று

இரவுக்குறி வந்த தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

இரவில் தலைவன் சிறைப்புறமாய் நின்றான். அதுகண்ட தோழி அவன் அஞ்சுமாறு சிலவற்றைத் தலைவியிடம் கூறினாள். "அன்னை நமது களவொழுக்கத்தை அறிந்தனள்போல என்னை நோக்கி, 'அவன் எங்குள்ளான்?' என்று கேட்கிறாள்; மேலும், இரவில் தலைவன் தேர் மணி ஓசை அன்றாடம் கேட்கிறது. இதை அன்னை கேட்டாளாயின் என்னாகுமோ?" என்றும் கூறுகிறாள். இவை எல்லாம் நேரிடாது தலைவன் விரைவில் வரைந்துகொள்ளுதலே நலம் எனத் தோழி தலைவனுக்கு உணர்த்தியது.

இருங்கழி பொருத ஈர வெண்மணல்
மாக்கொடி அடும்பின் மாஇதழ் அலரி
கூந்தல் மகளிர் கோதைக் கூட்டுங்
காமர் கொண்கன், நாமவெங் கேண்மை
ஐதுஏய்ந் தில்லா ஊங்கும், நம்மொடு
புணர்ந்தனன் போல உணரக் கூறித்
தான்யாங்கு என்னும் அறன்இல் அன்னை;
யான்எழில் அறிதலும் உரியள், நீயும்,நம்
பராரைப் புன்னைச் சேரி, மெல்ல
நள்ளென் கங்குலும், வருமரோ
அம்ம வாழி!அவர் தேர்மணிக் குரலே!

தெளிவுரை

"கரிய கழியிடத்தில் அலைமோதி ஈரமான வெண்மணற் பரப்பில் வலிய அடும்பங்கொடி படர்ந்திருக்கும். அதன் பெரிய இதழ் பொருந்திய மலர்களை நெடிய கூந்தலைக் கொண்ட மகளிர் தாம் சூடும் மாலையில் தொடுத்துக்கொள்வர். அத்தகைய விரும்பத்தக்க நாட்டிற்குரிய தலைவனிடம் நாம் கொண்ட நட்பு இன்னும் நன்கு அமையவில்லை. இவ்வேளை அவனுக்கும் நமக்கும் இடையே யாதொரு தொடர்பும் சிறிதேனும் இல்லை. இருந்தபோதிலும், அறனுணர்வற்று நம் அன்னை, நம்மோடு அவன் கூடியிருந்தான்போலக் கருதி வெளிப்படையாய்க் கூறுகிறாள். 'அவன் இப்போது எங்குள்ளான்?' என்று கேட்பதோடு, உன் மேனியின் எழில் மாற்றமும், தான் அறியத்தக்கதாய்த்தான் தோன்றுகிறது என்றும் கூறுகிறாள்.

"பருத்த அடியினைக் கொண்ட புன்னை மரங்கள் விளங்கும் நம் சேரிக்குத் தலைவனுடைய தேர் வருவதனால் உண்டாகும் மணியின் குரல் நள்ளிரவிலும் மெல்ல மெல்ல ஒலிக்கிறதே. அதனை அன்னையும் கேட்டாளாயின் நான் என்ன செய்வேன்?" என்று தோழி தலைவனுக்குக் கேட்கும்வண்ணம் தலைவியிடம் கூறுகிறாள்.

கருத்து

தலைவ! தலைவியின் களவொழுக்கம் அன்னைக்குத் தெரிந்துவிட்டது. எனவே, இல்லக்காவலில் வைப்பாள். ஆதலால், அவளை விரைந்து வரைந்துகொள்.

விளக்கம்

தோழி தலைவியிடம், தலைவனின் செவியில் படுமாறு, "நமக்கும் தலைவனுக்கும் இடையில் தோன்றிய காதல் உணர்வு இன்னும் நன்கு அமையவில்லை. அதற்குள்ளே நம்மோடு அவன் கூடியிருந்தவன் போலக் கருதி, அன்னை என்னிடம், 'அவன் எவ்வூரினன்? இப்போது எங்குள்ளான்?' என்றெல்லாம் கேட்கிறாள். அந்நிலையில் தலைவன் ஏறி வரும் தேரில் கட்டப் பட்டுள்ள மணியின் ஓசையும் இங்கே கேட்கிறது. இனி என்ன ஆகுமோ? அறியேன்" என்று கூறினாள்.

இதனைக் கேட்கும் தலைவன் உள்ளத்தில் வரைதற்கு வேண்டிய உறுதிப்பாடு தோன்றும்.

உள்ளுறை

அணியும் மாலையில் அடும்ப மலரைச் சேர்ப்பர் என்பதன் உள்ளுறைக் குறிப்பு, தலைவன் தலைவிக்குப் பூச்சூட்டி அவளை மணந்து செல்ல வேண்டும் என்பதாம்.

சொற்பொருள்

1. இருங்கழி - கரிய உப்பங்கழி; பொருத - மோதிய.
2. அடும்பு - அடும்பங்கொடி; மாஇதழ் - பெரிய இதழ்; அலரி - பூ.
3. கோதை - கூந்தல்; கூட்டும் - சேர்க்கும்.
4. காமர் - விருப்பம்; கொண்கன் - தலைவன்; கேண்மை - நட்பு.
5. ஐது - நன்கு; ஏய்ந்தில்லா - அமையாத; ஊங்கும் - பொழுதும்.
6. புணர்ந்தனன் - கூடியவன்.
7. தான் யாங்கு - அவன் எங்குள்ளான்?; என்னும் - என்று கேட்கும்.
9. பராரை - பருத்த அடியினைக் கொண்ட.
10. நள் - நடு; கங்குல் - இரவு.
11. குரல் - ஓசை.

தலைவி கூற்று

குறுந்தொகை 246 **கபிலர்**

திணை : நெய்தல்

கூற்று

சிறைப்புறம்.

கூற்று விளக்கம்

இரவுக்குறி வந்த தலைவன் சிறைப்புறமாய் நிற்க, தலைவி தோழியை நோக்கிக் கூறுவாளாய், "நேற்று இரவில் 'ஒரு தேர் இங்கு வந்து சென்றது' என்று சிலர் சொல்ல, அதுமுதல் தாய் என்னை வருத்துகின்றாள்" எனக் காவல் மிகுதியை உணர்த்தி வரைவு கடாயச் செய்தது.

'பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
களிற்றுச்செவி அன்ன பாசடை மயக்கிப்
பனிக்கழி துழவும் பானாள், தனித்துஓர்
தேர்வந்து பெயர்ந்தது' என்ப, அதற்கொண்டு,
ஓரும் அலைக்கும் அன்னை; பிறரும்
பின்னுவிடு கதுப்பின் மின்இழை மகளிர்
இளையரும் மடவரும் உளரே;
அலையாத் தாயரொடு நற்பா லோரே.

தெளிவுரை

பெரிய கடற்கரையில் கழுத்தில் வெண்மை நிறம் கொண்ட காக்கை பசுமையான இலையைக் கலக்கியபடியே குளிர்ச்சி பொருந்திய உப்பங்கழியில் இரையைத் தேடிக்கொண்டிருக்கும். அந்நள்ளிரவு வேளையில் தனியே ஒரு தேர் இங்கு வந்து சென்றது என அயலவர் கூறினர். அது முதலாக ஆராய்ந்து என்னைத் துன்புறுத்தி வருகின்றாள், தாய். பின்னித் தொங்க விடப்பட்ட கூந்தலினையும், ஒளிவிடும் அணிகலன்களையும் கொண்ட மகளிர் கூட்டத்தில் என்னைப் போல் இளமையும் மடப்பமும் கொண்டோராய்ப் பிறரும் உள்ளனரே! அவர்களெல்லாம் தம்மை வருத்தாத தாயருடன் வாழுகின்ற நல்வினையைப் பெற்றுள்ளனர்.

கருத்து

நேற்று இரவில் ஒரு தேர் இங்கு வந்தது என்று சிலர் சொல்ல, அதுமுதல் தாய் என்னை வருத்துகின்றாள் எனக் காவல் மிகுதியைத் தலைவி உணர்த்துகிறாள்.

குறிப்பு

இரவுக்குறியினால் உண்டாகும் அச்சத்தை உணர்த்தித் தலைவன் தன்னை வரைதல் நலம் என்னும் கருத்து உண்டாகச் செய்கிறாள், தலைவி.

சொற்பொருள்

1. வெண் காக்கை - கழுத்தில் வெண்மை நிறம் கொண்ட காக்கை.
2. களிற்றுச்செவி - யானையின் காது; பாசடை - பசிய இலை; மயக்கி - கலக்கி.
3. பனிக்கழி - குளிர்ச்சி பொருந்திய உப்பங்கழி; துழவும் - துழாவி இரையைத் தேடும்; பானாள் - நள்ளிரவு.
4. பெயர்ந்தது - திரும்பியது.
5. ஒரும் - ஆராய்ந்து; அலைக்கும் - துன்புறுத்தும்.
6. பின்னுவிடு - பின்னி விடப்பட்ட; கதுப்பு - கூந்தல்; மின்இழை - ஒளிவிடும் அணிகலன்.
7. மடவர் - மடப்பம் கொண்டவர்.
8. அலையா - வருத்தாத; நற்பாலோர் - நல்வினையைப் பெற்றவர்.

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 10 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாகப் படைத்துமொழி கிளவியால் தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவியைக் காண வந்த தலைவன் வேலி ஓரம் நிற்க அவன் கேட்குமாறு தோழி தானே கற்பனையாய்ப் படைத்துக்கொண்ட மொழிகளைத் தலைவியிடம் கூறி அவன் தலைவியை மணந்து கொள்ளத் தூண்டியது.

பலவின் பழம்பெற்ற பைங்கண் கடுவன்
எலஎன்(று) இணைபயிரும் ஏகல்சூழ் வெற்பன்
புலவுங்கொல் தோழி! புணர்வறிந்(து) அன்னை
செலவுங் கடிந்தாள் புனத்து.

தெளிவுரை

நம் காதலரோடு நாம் கொண்ட களவொழுக்கத்தினை நம் செவிலித்தாய் அறிந்து நாம் புனத்திற்குச் செல்வதைத் தடுத்து விட்டாள். (ஆதலால், நாம் பகற்குறி சென்று தலைவனைக் காண இயலாதவர்களாயிருக்கிறோம்.) அதனால், பலாப்பழத்தினைப் பெற்ற ஆண்குரங்கு, தன்னுடன் இணைந்து வாழும் பெண் குரங்கினை 'ஏடி' என்று அன்புடன் அழைத்துப் பழகும் உயரமான மலைகள் சூழ்ந்த நாட்டிற்குத் தலைவன் 'பிணங்கி நம்மை வெறுப்பானோ?' எனத் தலைவன் கேட்குமாறு தலைவியிடம் தோழி உரைக்கிறாள்.

கருத்து

மலைநாட! களவு உறவை அன்னை அறிந்தாள்; இனி இல்லக்காவலில் வைப்பாள். எனவே, திருமணம் மேற்கொள்.

குறிப்பு

தலைவியை இனிமேல் குறியிடத்தில் காண இயலாது. ஆண்குரங்கு பெண்குரங்கோடு அன்புடன் வாழ்வதுபோல வாழ்வதற்கு ஏற்ற வழி, தலைவன் தலைவியை மணந்துகொள்வதே ஆகும் என்று தோழி குறிப்பிடுகின்றாள்.

சொற்பொருள்

1. பலவு - பலா மரம்; பைங்கண் - பசிய கண்; கடுவன் - ஆண்குரங்கு.
2. 'எல' - ஏடி; இணை - தன் இணையாகிய பெண்குரங்கை; பயிரும் - அழைக்கும்; ஏகல் - உயர்ச்சி; சூழ் - நாற்புறமும் சூழ்ந்துள்ள.
3. புலவு - வெறுப்பு; புணர்வு - நம் களவொழுக்கப் புணர்ச்சி.
4. செலவு - செல்லுதலையும்; கடிந்தாள் - தவிர்த்தாள் (புனத்துச் செலவு கடிந்தாள்).

தோழி கூற்று

கலித்தொகை 48 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரையாது வந்து ஒழுகுந் தலைமகற்குத் தோழி, தலைமகள் ஆற்றாமையும் இவ்வொழுக்கம் புறத்தார் அறியப்படுகின்றமையும் கூறி, வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவியை மணம் செய்துகொள்ளாமல், களவு நிலையிலேயே அவளை வந்து சந்தித்துச் செல்கின்ற தலைவனைக் கண்டு, தோழி, தலைவியின் பிரிவாற்றாமைத் துன்பத்தையும், களவொழுக்கத்தை அயலார் அறிந்து கொண்டனர் என்பதையும் கூறி, திருமணத்திற்கு ஏற்பாடு செய்யுமாறு அவனைத் தூண்டுவது.

தரவு

ஆம்இழி அணிமலை அலர்வேங்கைத் தகைபோலத்
தேம்முசு, நனைகவுள், திசைகாவல் கொளற்குஒத்த,
வாய்நில்லா வலிமுன்பின், வண்டுஊது புகர்முகப்
படுமழை அடுக்கத்த, மாவிசும்பு ஓங்கிய
கடிமரத் துருத்திய, கமழ்கடாஅம் திகழ்தரும்
பொருங்களிற்று இனத்தொடு, வீங்குஎருத்து எறுழ்முன்பின்
இரும்புலி மயக்குற்ற இகன்மலை நன்னாட!

தாழிசை

வீழ்பெயல் கங்குலின் விளிஓர்த்த ஒடுக்கத்தால்,
வாழும்நாள் சிறந்தவள் வருந்துதோள் தவறுண்டோ?
தாழ்செறி கடுங்காப்பின் தாய்முன்னர் நின்சாரல்
ஊழுறு கோடல்போல், எல்வளை உகுபவால்.

'இனைஇருள் இது'என ஏங்கி,நின் வரல்நசைஇ,
நினைதுயர் உழப்பவள் பாடுஇல்கண் பழிஉண்டோ?
'இனையள்'என்று எடுத்துஅரற்றும் அயல்முன்னர் நின்சுனைக்
கனைபெயல் நீலம்போல், கண்பனி கலுழ்பவால்.

பன்னாளும் படர்அடப் பசலையால் உணப்பட்டாள்,
பொன்உரை மணியன்ன, மாமைக்கண் பழிஉண்டோ?
இன்நுரைச் செதும்புஅரற்றும் செவ்வியுள் நின்சோலை
மின்உகு தளிர்அன்ன, மெலிவுவந்து உரைப்பதால்.
எனவாங்கு–

சுரிதகம்

பின்ஈதல் வேண்டும்,நீ பிரிந்தோள்நட்பு– எனநீவிப்
பூண்கண் படுதலும் அஞ்சுவல்; தாங்கிய
அருந்துயர் அவலம் தூக்கின்,
மருங்குஅறி வாரா மலையினும் பெரிதே.

தெளிவுரை

(தலைவனைக் கண்ட தோழி அவன் நாட்டின் பெருமையைப் போற்றிப் புகழ்கிறாள்.)

“மலையின் உச்சியிலிருந்து நீர், அருவியாய் இறங்கி வரும் அழகிய மலைகளில் வேங்கை மலர்கள் பூத்துள்ளன. அவற்றைச் சுற்றிலும் தேனுண்ண வண்டுகள் மொய்த்துக்கொண்டிருக்கின்ற காட்சி, அம்மலையிலுள்ள யானைகளின் மதநீர் நனைந்த கன்னங்களை வண்டுகள் மொய்த்துக்கொண்டுள்ளதைப் போலத் தோன்றுகிறது. அந்த யானைகள் உலகின் எட்டுத் திசைகளையும் காக்கும் வல்லமை வாய்ந்தவை. அவற்றின் வலிமை கண்டு மற்ற விலங்குகள் எதிர்நில்லாது அஞ்சி ஓடும். அந்த யானைகளின் முகங்களில் உள்ள புள்ளிகளையும் மலர்கள் என்றெண்ணி, வண்டுகள் அவற்றையும் மொய்த்துக்கொண் டுள்ளன. மலைச்சாரலில் கடுமையான மழை பொழிவதால் அருவிகளாய் வீழ்ந்து செல்லும் நீர், வழியில் ஆற்றிடைக்குறை போல் விளங்கும் திட்டுகள் பலவற்றை உருவாக்கும். வெள்ளம் பெருகி ஓடும் அத்திட்டுகளில் மரங்கள் வானளாவ வளர்ந்து உயர்ந்து நிற்கும். அங்கே மணம் கமழும் மதநீர் ஒழுகுகின்ற பெரிய ஆண்யானைகள் தம் பெண்யானைகளோடு வாழும். இந்த யானைகளுடன் அங்குப் பெருங்கழுத்தையும் மிக்க வலிமை யினையும் கொண்டு வாழும் புலி போரிட்டுக்கொண்டிருக்கும். இத்தகைய மலைகளுக்குரியவன், நம் தலைவன்” என்று தோழி அவனைப் பாராட்டி மேலே பேசத் தொடங்குகிறாள்.

"வீட்டைத் தாழிட்டுக் காப்பதுபோல் மிக்க விழிப்புடன் கண்காணிக்கும் தாயின் முன்னர், உன் மலையில் காந்தள் பூ உதிர்வதுபோலத் தலைவியின் கை வளைகள் கழன்று விழு கின்றன. இடைவிடாது மழை பொழியும் இரவு நேரத்தில் நீ செய்யும் ஒலிக்குறிகளைக் கேட்பதற்காக, மன ஒருமையுடன் இருப்பதால் அவள் உயிர் நீங்காமல் உள்ளது. வளை கழன்று விழுமளவுக்கு மெலிய, அவள் தோள்கள் செய்த தவறுகள் என்னவோ?"

"அயலார் அலர் தூற்றுதலைக் கேட்ட உன் தலைவியின் கண்கள் உன் நாட்டுச் சுனையில் மழைநீரை ஏற்கும் நீலமலர் போலக் கலங்குகின்றன. இருளின் தன்மையை எண்ணி வருந்தி னாலும் உன் வரவை விரும்புபவள், உன் தலைவி; உன்னைக் காணும் நிலை ஏற்படாததால் உன்னை நினைந்து நினைந்து தூங்காது வருந்திக்கொண்டிருக்கும் தலைவியின் கண்கள்மீது ஏதேனும் பழி உண்டா?

"காண்பதற்கினிய நுரைகளுடன் சிறிதாகி ஓடுகின்ற அருவிநீர் ஒலி எழுப்பும் இளவேனிற்காலத்தில் உன் நாட்டுச் சோலையில் ஒளியிழந்து இருக்கும் தளிர்களைப் போல இவளது மேனி நிறம் குன்றி இவள் துயரத்தைப் பறைசாற்றுகின்றது. உன் நினைவால் பல நாளும் வருந்தியிருக்கும் தலைவியின் மா நிற மேனியில், நீலமணியின்மேல் பொன்னை உரைத்துப் பார்த்தாற்போல், பசலை படர்ந்துள்ளது. இவ்வாறு அவள் பசலையுற்றதற்கு அவளது மாமை நிறம் உனக்குச் செய்த தவறு என்ன?

"தலைவியின் மலர் போன்ற கண்கள் உறக்கமில்லாமல் ஒளி யிழந்து நிற்குமோ என்று நான் அஞ்சுகின்றேன். அவள் தாங்கி நிற்கும் துன்பங்களை ஆராய்ந்து பார்த்தால் அளவிடற்கரிய மலையினும் பெரியனவாய்த் தோன்றும். எனவே, நீ தலைவியின் உறவு உன்னோடு நிலைத்து நிற்குமாறு செய்ய வேண்டுமானால், அவளை விரைந்து மணந்துகொண்டு, அவளது நட்பைப் பின்னிப் பிணைத்துக்கொள்" என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

தலைவியின் களவொழுக்கம் தாயாலும் ஊராலும் அறியப்பட்டது என்று தோழி தலைவனிடம் கூறித் திருமணத்தை விரைவுபடுத்துமாறு கூறுகிறாள்.

குறிப்பு

வளையல் கழல்வதற்கும், கண்ணில் நீர் வழிவதற்கும், பசலை படர்வதற்கும் தலைவனின் அருளின்மையே காரணம் என்கிறாள், தோழி. தலைவியின் துயரைத் தலைவன் வாழும் மலையிலே நிகழும் காட்சிகளைப் பற்றிச் சொல்வதன் வாயிலாகத் தோழி குறிப்பாய்ச் சுட்டுகிறாள்.

சொற்பொருள்

1. ஆம் - தண்ணீர்; இழி - இறங்குகின்ற; அலர் - மலர்கின்ற; தகை - அழகு.
2. தேம்மூசு - தேன் மூசு - வண்டுகள் மொய்க்கும்; நனை - மதநீரால் நனைந்துள்ள; கவுள் - கன்னம்.
3. வாய் நில்லா - முன்பு நில்லாத; முன்பு - வலிமை; புகர் - புள்ளி.
5. கடி - மிகுதி; துருத்தி - ஆற்றிடைக்குறை, ஆற்றுக்கு நடுவே நீர் இல்லாமல் தோன்றும் பகுதி; கடாஅம் - மதநீர்.
6. களிறு - யானை; வீங்கு எருத்து - பெரிய கழுத்து; எறுழ், முன்பு - இவை இரண்டும் வலிமை என்னும் பொருள் தரும். இங்கு மிகு வலிமை எனக் கொள்ளலாம்.
7. இரும்புலி - கரிய புலி; மயக்குற்ற - ஒப்பாய் நின்று சண்டை யிடுகின்ற, புலி வெல்லுமா, யானை வெல்லுமா என்று மயங்க வைத்தலின் 'மயங்குற்ற' என்றார்; இகன் - இகல் - பகை.
8. விளி - ஒலிக்குறி; ஓர்த்தல் - கூர்ந்து கேட்டல்; ஒடுக்கத்து - மனம் ஒருமைப்பட.
9. வாழும் நாள் சிறந்தவள் - உயிர் நீங்காமல் உள்ளவள்.
10. கடுங்காப்பு - கடுமையான காவல், விழிப்புடன் கண்காணித்தல்.
11. ஊழ் உறு - முதிர்ந்து விழுந்த; கோடல் - காந்தள் பூ; எல்வளை - ஒளி பொருந்திய வளையல்; உகுப - கழன்று விழுகின்ற.
12. இனை இருள் - வருத்தும் இருள்; நசைஇ - விரும்பி.
13. பாடு - படுதல்; பாடு இல் கண் - இமை பொருந்தாத கண்.
14. எடுத்து அரற்றும் - ஓங்கிப் பழி தூற்றும்; அயல் - அயலவர்.
15. கனை பெயல் - பெருமழை; நீலம் - நீலமலர்; கலுழ்தல் - உகுத்தல்.
16. படர் - துன்பம்; அட - வருத்த.
17. மாமை - மாந்தளிர் நிறம்.

18. செதும்பு - சிறிதளவு நீர்; செவ்வி - பருவம்.
19. மின் - தளதளப்பு; உகு - நீங்கிய.
22. படுதல் - மூடுதல்; அஞ்சுவல் - அஞ்சுகின்றேன்.
23. அவலம் - துன்பம்; தூக்கின் - ஆராய்ந்து பார்த்தால்.
24. மருங்கு - எல்லை; அறிவாரா - அறிய இயலாத.

தோழி கூற்று

ஐந்திணை ஐம்பது 15 **மாறன் பொறையனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பகற்குறிக்கண் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி, தாய் கேட்டதற்கு மறுமாற்றம் சொல்வாள்போல் படைத்துமொழி கிளவியால் வரைவு கடாயது. (படைத்து மொழிதல் - தானே ஒரு நிகழ்ச்சியைக் கற்பித்துக் கொண்டு கூறுதல்).

கூற்று விளக்கம்

தினைப்புனம் காவல் முடிந்ததால், தலைவியை இல்லத்திற்கு அழைத்துச் செல்லச் செவிலி புனத்திற்கு வந்திருந்தாள். பகற்குறிக்கண் தலைவனோடிருந்த தலைவி திரும்ப வந்தனள். செவிலி தலைவியைத் தழுவிக்கொண்டே ‘இவ்வளவு நேரம் எங்கே சென்றிருந்தாய்? கண்கள் ஏன் இவ்வாறு சிவந்திருக்கின்றன?’ என்று கேட்டாள். தலைவன் தினைப்புனத் திற்கருகேயுள்ள வேலிக்கு ஒருபுறமாய் நின்றுகொண்டிருந்தான். தோழி, செவிலித்தாயின் வினாவுக்கு மறுமொழியாகவும், தலைவனுக்குக் கேட்கும் படியாகவும் கூறியது.

வேங்கை நறுமலர் வெற்பிடை யாம்கொய்து
மாந்தளிர் மேனி வியர்ப்பமற்(று) – ஆங்கெனைத்தும்
பாய்ந்தருவி ஆடினேம் ஆகப் பணிமொழிக்குச்
சேந்தனவாம் சேயரிக்கண் தாம்.

தெளிவுரை

‘தாயே! மலையிலுள்ள வேங்கை மலர்களைக் கொய்ததால், மாந்தளிர் போன்ற எம் மேனி முழுதும் வியர்த்தது. அதனால்

அங்கிருந்த எல்லா அருவிகளிலும் நீராடினோம். அதனால் தலைவியின் கண்கள் சிவந்துள்ளன' எனத் தோழி செவிலித் தாயிடம் கூறினாள்.

கருத்து

'அன்னை ஐயுற்றாள்; தலைவியை இல்லக்காவலில் வைப்பாள். இனி அவளைக் களவில் காண இயலாது. எனவே, மணங்கொள்ள ஏற்பாடுகள் செய்க' எனத் தலைவனுக்குத் தோழி உணர்த்துகிறாள்.

விளக்கம்

பகற்குறியில் தலைவனைச் சந்தித்துத் தினைப்புனம் திரும்பிய தலைவியின் விழிகள் சிவந்திருந்தன. அவ்வேளை அங்கு வந்த செவிலி, மகளின் விழிகள் ஏன் சிவந்துள்ளன என்று கேட்டதாகவும், நெடுநேரம் அருவிநீரில் குளித்தமையால் கண்கள் சிவந்தன என்று தோழி அவளுக்குக் கூறியதாயும் ஒரு நிகழ்ச்சியைக் கற்பித்துத் தோழி பேசுகிறாள்.

குறிப்பு

தோழியின் சொற்களைத் தொலைவில் நின்றிருந்த தலைவன் கேட்டான். இனித் தலைவியைக் களவில் சந்திப்பதைத் தவிர்த்து விரைவில் திருமணம் முடிக்கத் தோழி மறைமுகமாய் வற்புறுத்துகிறாள் என்னும் குறிப்பினை உணர்ந்தான்.

சொற்பொருள்

1. வெற்பு - மலை.
2. வியர்ப்ப - வியர்வையைப் பொழிய; ஆங்கு - அம்மலையிலேயுள்ள; எனைத்தும் - எல்லா (அருவிகளிலும்).
3. பணிமொழி - மெல்லிய சொற்களைக் கொண்ட தலைவி.
4. சேந்தன - சிவந்தன; சேயரி - சிவந்த வரிகள் படர்ந்த.

தோழி கூற்று

குறுந்தொகை 303 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவனும் தலைவியும் சந்தித்துக் கூடுதற்கு இயலாமையினால், தோழி தலைவனிடம் சென்று, தலைவியைத் தாய் இற்செறிக்கக் கருதியிருப்பதைக் கூறி அதனால் விரைவில் அவளை மணந்துகொள்ளுமாறு கூறியது.

கழிதேர்ந்து அசைஇய கருங்கால் வெண்குருகு
அடைகரைத் தாழைக் குழீஇ, பெருங்கடல்
உடைதிரை ஒலியில் துஞ்சும் துறைவ!
தொல்நிலை நெகிழ்ந்த வளையள், ஈங்குப்
பசந்தனள் மன்என் தோழி என்னொடும்
இன்இணர்ப் புன்னைஅம் புகர்நிழல்
பொன்வரி அலவன் ஆட்டிய ஞான்றே!

தெளிவுரை

கடற்கரைக்கழிகளில் இரையைத் தேடி உண்டு தங்கிய கரிய கால்களைக் கொண்ட வெள்ளை நாரை, கடலோரக் கரையிலுள்ள தாழை மரங்களில் தன் இனத்தோடு கூடி, கடற்கரையில் மோதி உடையும் அலைகளின் ஓசையினாலே தூங்கும். அத்தகு துறைக்குரிய தலைவனே! ஒளிமிக்க பூங்கொத்துகள் நிறைந்த புன்னையின் புள்ளிகளைக் கொண்ட நிழலில், பொன் போன்ற கோடுகள் பொருந்திய நண்டுகளை அலைத்து விளையாடிய அக்காலத்திலேயே, என் தலைவி, (உன்னைக் கண்டு கூடியதால்) பழைய நிலை மாறி நெகிழ்ந்த வளையல்களை உடையவளானாள். அவள் இப்போது நிறமும் மாறுபட்டுப் பசலை நிறம் பெற்றாள். (இனி அன்னையால் இற்செறிக்கப் படுவாள்.)

கருத்து

தலைவ! தலைவி இற்செறிக்கப்படுவாள். எனவே, நீ அவளை விரைவில் மணத்தலே இனிச் செய்யத்தக்கது.

விளக்கம்

தலைவியும் தோழியும் நண்டினை அலைத்து விளையாடிய போது, தலைவன் தலைவியைக் கூடிப் பிரிந்தான். அன்றே அவள் மேனியில் பசலை பாய்ந்தது. அவள் மேனி மேலும் மேலும் மெலிந்து இப்போது வெளியிலுள்ளார் அறியும்வண்ணம் வேறுபட்டாள். இனி அன்னையால் இற்செறிக்கப்படுவாள். எனவே, தலைவியை மணந்துகொள்ளுதலே இனிச் செய்யத் தக்கது.

குறிப்பு

குருகு இரை தேர்ந்து உண்டு, தாழையின் மடலில் இனத்தோடு அலை யோசை கேட்டு இனிதே உறங்கும். இத்தொடர், களவில் தலைவியின் நலனைப் பெற்று மகிழ்ந்த தலைவன், தலைவியை வரைந்துகொண்டு, சுற்றத்தார் போற்ற இல்லறம் நிகழ்த்த வேண்டும் எனும் குறிப்புப் பொருளைத் தருகிறது.

சொற்பொருள்

1. கழி தேர்ந்து - கழியில் இரை தேடி; அசைஇய - தங்கிய.
2. அடைகரை - கடலோரக்கரை; குழீஇ - கூடி.
3. உடைதிரை - உடையும் அலை; துஞ்சும் - தூங்கும்.
4. தொல் நிலை - பழைய நிலையிலிருந்து; வளையல் - வளையலை உடையவளானாள்.
5. பசந்தனள் - பசலை நிறம் பெற்றனள்.
6. இன்இணர் - அழகிய பூங்கொத்து; புகர் நிழல் - புள்ளி புள்ளியாய் உள்ள நிழல்.
7. பொன் வரி - பொன் போன்ற வரிகளைக் கொண்ட; அலவன் - நண்டு; ஆட்டிய - அலைத்து விளையாடிய; ஞான்றே -அக் காலத்திலேயே.

தோழி கூற்று

அகநானூறு 60 **குடவாயிற் கீரத்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகற்குத் தோழி செறிப்பறிவுறீஇ, வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

களவின்பம் ஒன்றையே விரும்பி வந்துகொண்டிருந்த தலைவனிடம் தோழி, தலைவி இல்லப்பாதுகாப்பில் வைக்கப்பட்டிருப்பதைத் தெரிவித்து உடனே மண ஏற்பாடு செய்யுமாறு கூறியது.

பெருங்கடற் பரப்பில் சேயிறா நடுங்க,
கொடுந்தொழில் முகந்த செங்கோல் அவ்வலை
நெடுந்திமில் தொழிலொடு வைகிய தந்தைக்கு,
உப்புநொடை நெல்லின் மூரல் வெண்சோறு
அயிலை துழந்த அம்புளிச் சொரிந்து,
கொழுமீன் தடியொடு குறுமகள் கொடுக்கும்
திண்தேர்ப் பொறையன் தொண்டி அன்னஎம்
ஒண்தொடி ஞெமுக்கா தீமோ தெய்ய;
ஊதை ஊட்டிய உயர்மணல் அடைகரை,
கோதை ஆயமொடு வண்டல் தைஇ
ஓரை ஆடினும் உயங்கும்நின் ஒளிஎனக்
கொன்னும் சிவப்போள் காணின், வென்வேல்
கொற்றச் சோழர் குடந்தை வைத்த
நாடுதரு நிதியினும் செறிய
அருங்கடிப் படுக்குவள், அறன்இல் யாயே.

தெளிவுரை

பெரிய கடற்பரப்பில் சிவந்த இறால்மீன் நடுங்குமாறு மீன்களை முகக்கும் அழகிய வலையினைக் கையிலே கொண்டு, நீண்ட படகில் தந்தை மீன் பிடிக்கும் தொழிலிலே தங்கி யிருந்தான். உப்பு விற்று வாங்கி வந்த நெல்லை அரிசியாக்கிச் சமைத்த வெண்சோற்றிலே, அயிரை மீனை இட்டு ஆக்கிய சுவை மிகுந்த புளிக்கறியை ஊற்றி, கருவாடாகிய கொழுத்த மீனைத்

தன் தந்தைக்கு உணவாக அவன் இளைய மகள் கொண்டுவந்து கொடுப்பாள். இத்தகு காட்சி கொண்ட, வலிமை மிக்க தேரினையுடைய சேரனின் தொண்டி என்னும் நகரைப் போன்று பெருமதிப்புள்ள எம் தலைவியின் ஒளிரும் வளையல்களை நெருக்கி அழுத்தி அவளுக்குத் தழும்பு ஏற்படும்வண்ணம் செய்துவிடாதே!

வாடைக்காற்று கொண்டுவந்து குவித்த உயரமான மணல் மேடுகளைக் கொண்ட கடற்பரப்பில், மாலைகள் சூடிய ஆயத்தாரோடு, வண்டல் இழைத்து விளையாடிக்கொண்டிருந்தாலும், 'உன் மேனி வாடிவிடுமே' என்று காரணமின்றியே அறங்கருதாத எம் தாய் எம்மைச் சினந்துகொள்வாள். அவள், தலைவியின் கையிலுள்ள வளையல்களால் அழுந்தப் பெற்ற தழும்புகளைக் கண்டால், வெற்றி பொருந்திய சோழர்கள், குடவாயில் நகரில் பகைவர்கள் திறையாய்க் கொடுத்த பெருநிதியைச் சேமித்து வைத்துள்ள இடம் காவல் செய்யப்படுவதைக்காட்டிலும் மிகுதியான காவலில் எம்மை வைத்துவிடுவாள்.

கருத்து

தலைவ! களவுறவைத் தாய் அறியின் தலைவியை இற்செறித்துவிடுவாள். 'நீ தலைவியை மணந்துகொண்டால் நீ விரும்பியவாறெல்லாம் அவளைத் தழுவி இன்புறலாம்' எனத் தலைவனிடம் தோழி கூறுகிறாள்.

விளக்கம்

தலைவ! திண்தேர்ப்பொறையன் தொண்டிநகர் போலும் பெருமதிப்புள்ள எம் தலைவியை நீ தழுவும்போது, வளையல் அழுந்தி அவள் கையில் தழும்பு ஏற்பட்டுவிடாமல் பார்த்துக் கொள். கடற்கரையில் தோழியரோடு வண்டலயர்ந்து விளையாடினும் உன் மேனி வாடிவிடும் என்று காரணமின்றியே அவளைக் கோபிப்பவள், எம் அறனில்லாத தாய். அப்படிப் பட்டவள் தலைவியின் உடம்பில் வளையல் தழும்பைக் கண்டால், சோழர், குடவாயில் என்னுமிடத்தில் நிதியைக் காக்க ஏற்படுத்தியுள்ள காவலைவிட மிகவும் கடுமையான காவலோடு தலைவியை இற்செறித்துவிடுவாள். ஆதலால், தலைவி நீ பெறுதற்கு அரியளாவாள்.

உள்ளுறை

மீன் பிடிக்கும் தந்தை மீன் கொண்டுவருவதற்கு முன்னரே அவருக்கு வெண்சோற்றுடன் புளியங்கறி, கருவாடு ஆகியவற்றை உணவாய்க் கொடுத்ததுபோல, 'எம் வரைவுக்குத் தமரும் அயலே முயல, நாங்களும் அறத்தொடு நிற்றல் வகையால் இங்கே முயல் வோம்' எனத் தோழி கூறினாள் என உள்ளுறை கொள்க.

சொற்பொருள்

1. சேயிறா - சிவந்த இறால் மீன்.
2. கொடுந்தொழில் முகந்த - முகக்கும் கொடிய தொழிலைக் கொண்ட.
3. திமில் - படகு; வைகிய - தங்கிய.
4. உப்புநொடை - உப்பு விற்றுக் கிடைத்த (நொடை - விற்றல்); மூரல் - முறுவல் (போன்ற வெண்சோறு).
5. அயிலை - அயிரை மீன்; துழந்த - (இட்டு) ஆக்கிய.
6. மீன் தடி - கருவாட்டுத்துண்டு.
7. பொறையன் - சேரன்; தொண்டி - சேரன் துறைமுகம்.
8. ஞெமுக்குதல் - அழுத்துதல்.
9. ஊதை - வாடைக்காற்று; ஈட்டிய - குவித்த.
10. கோதை - மாலை; ஆயம் - விளையாட்டுத் தோழியர்; வண்டல் - விளையாட்டின் போது மணலில் கட்டும் சிறு வீடு; தைஇ - இயற்றி.
11. ஓரை - மகளிர் விளையாட்டு; உயங்கும் - வாடும்; ஒளி - நிறம்.
12. கொன்னும் - காரணமின்றி; சிவப்பு - சினம்; வென்வேல் - வெல்லும் வேல்.
13. கொற்றம் - வெற்றி; குடந்தை - குடவாயில் என்னும் இடம்.
14. நாடுதரு - பகைவர்நாடு கப்பமாய்த் தந்த; செறிய - மிகவும்.
15. கடி - காவல்; படுக்குவள் - வைக்கப்படுவாள்.

தோழி கூற்று

ஐந்திணை ஐம்பது 18 **மாறன் பொறையனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி செறிப்பறிவுறீஇத் தலைமகனை வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவி செவிலித்தாயுடன் வீட்டுக்குச் செல்லுகின்ற காலத்தில் தோழி, சிறைப்புறத்தே நின்ற தலைவனிடம் இனித் தலைவி வீட்டிலேயே இருக்க நேரிடும் என்பதைக் கூறி, விரைவில் மணந்துகொள்ளும்படி குறிப்பாய் எடுத்துக் கூறியது.

எறிந்தெமர் தாம்உழுத ஈர்ங்குரல் ஏனல்
மறந்தும் கிளியினமும் வாரா – கறங்(கு)அருவி
மாமலை நாட மடமொழி தன்கேண்மை
நீமறவல் நெஞ்சத்துக் கொண்டு.

தெளிவுரை

“ஒலிக்கின்ற அருவிகளைக் கொண்ட பெரிய மலை நாட்டுக்குத் தலைவனே! எம்மவர்களாகிய குறவர்கள் மரஞ்செடி கொடிகளை வெட்டி ஒழுங்குபடுத்தி, உழுது பயிரிட்ட, குளிர்ந்த கதிர்களைக் கொண்ட தினைப்புனத்திற்கு இனிமேல் கிளிக் கூட்டங்களும் நாங்களும் மறந்தும் வரமாட்டோம். ஆதலின், மடப்பக்குணம் பொருந்திய சொற்களைப் பேசும் தலைவியின் நட்பை மறந்துவிடாதே; மனத்தில் வைத்திரு.”

கருத்து

மலைநாட்டுத் தலைவ! இனி எங்கட்குத் தினைப்புனங் காவல் இல்லை. தலைவி இற்செறிக்கப்படுவாள். தலைவியை மறவாது உடனே மணஞ் செய்துகொள்!

சொற்பொருள்

1. **எறிந்து - மரம் செடி கொடிகளை வெட்டி; எமர் - எம் உறவினர்; ஈர்ங்குரல் - குளிர்ச்சி பொருந்திய கதிர்கள்; ஏனல் - தினைப்புனம்.**
2. **மறந்தும் - நினைவின்றியும்; கறங்கு அருவி - ஒலிக்கின்ற அருவி.**

3. மடமொழி - மடப்பக்குணம் பொருந்திய மொழி; கேண்மை - உறவு, நட்பு.
4. மறவல் - மறந்துவிடாதே; நெஞ்சத்துக்கொண்டு - மனத்திடையே வைத்து.

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 2 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவி இற்செறிக்கப்படுவாள் என்பதை அறிவித்து, அவளை மணந்து கொள்ள வருமாறு தலைவனிடம் தோழி சொல்லியது.

கணமுகை கையெனக் காந்தள் கவின
மணமுகை என்றெண்ணி மந்திகொண் டாடும்
விறல்மலை நாட! வரஅரிதாம் கொல்லோ
புனமும் அடங்கின காப்பு.

தெளிவுரை

'கைகள் என்று கண்டார் கூறும்படி காந்தள் பூக்களின் மிகுதியான அரும்புகள் அழகுடன் விளங்குகின்றன; அப் பூக்களைத் திருமணக்காலத்தில் ஏந்திவரும் முளைப்பாலிகைகள் என்று எண்ணிப் பெண்குரங்குகள் பறித்து விளையாடுகின்றன. இத்தகைய பெருமையினைக் கொண்ட மலைநாட்டுக்குத் தலைவனே! தினைக் கதிர்கள் கொய்யப்பெற்றுத் தினைப்புனக் காவலும் நீங்கியது. அதனால் நீ இங்கே வருதல் அரிதாகும்' எனச் சொல்லித் தலைவியை உடனே வரைந்துகொள்ளும்படி தலைவனிடம் தோழி கூறினாள்.

கருத்து

தலைவ! தலைவி இற்செறிக்கப்படுவாள்; அதற்கு முன்னர், திருமணம் நிகழ ஆவன செய்.

குறிப்பு

காந்தள் பூவைக் கை என்று மக்களும், பாலிகை என்று குரங்குகளும் கருதியதுபோல, ஊரார் அவரவர் மனநிலைக்கேற்பப் பழிச்சொல் பேசுவர்.

சொற்பொருள்

1. கணமுகை - மிகுதியான மொட்டுகள்; காந்தள் - காந்தள் செடிகள்; கவின - அழகுடன் விளங்க.
2. மணமுகை - மணவிழாவில் ஏந்தி வரும் முளைப்பாலிகை.
3. விறல் - பெருமை; வர அரிது - இனி நீ இங்கே வருதல் அரிது.
4. புனம் - தினைப்புனம்; அடங்கின - ஒழிந்தன; காப்பு - காவல்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 289 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இற்செறித்த பின்னர்த் தோழி வரைவு கடாவுழி, 'முதிர்ந்த தினைப்புனம் இவள் காத்தொழிந்தால் வரைவல்' என்றாற்கு அவள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி வெளியே செல்ல இயலாதவாறு இல்லக்காவலில் வைக்கப் பட்டாள். அதனால் தோழி, தலைவனிடம் தலைவியை மணந்து கொள்ளுமாறு வேண்டினாள். அவன், தலைவியின் தினைப்புனங் காவல் நீங்கிய பிறகு வரைவதாய்க் கூறினான். அதற்கு மறுமொழியாய்த் தோழி கூறியது.

'கொடிச்சி இன்குரல் கிளிசெத்து, அடுக்கத்துப்
பைங்குரல் ஏனல் படர்தரும் கிளி'எனக்
காவலுங் கடியுநர் போல்வர்
மால்வரை நாட! வரைந்தனை கொண்மோ!

தெளிவுரை

பெரிய மலைநாடனே! குறிஞ்சிநில மகளான உன் காதலியின் இனிய குரலைத் தம்மையொத்த கிளியின் ஓசையே என்று கருதி,

மலையடுக்கத்தேயுள்ள கிளிகள் எல்லாம் பசிய கதிர்களைக் கொண்ட தினைப்புனத்திற்கு வந்து சேருகின்றன. அதனால் இனிமேல் தலைவியைப் புனங்காவலிலிருந்து நீக்கிவிடுவார்கள் எனக் கருதுகிறேன். எனவே, நீ இவளை விரைவில் மணஞ் செய்து அழைத்துச் செல்!

கருத்து

தலைவ! தலைவி இல்லக்காவலில் வைக்கப்படுவாள்; தினைப்புனங் காவலுக்கு இனி வரமாட்டாள்; அவளை மணந்து உன்னுடன் அழைத்துச் செல்.

விளக்கம்

'தினை முற்றி அறுவடையாகி முடியும்வரையில் தலைவி புனங்காவலுக்கு வருவாள்; அதன் பின்னர் மணந்து கொள்ளலாம் என்று எண்ணியிருக்க வேண்டா. அவளை இப்போதே காவலிலிருந்து நீக்குவர் எனக் கருதுகிறேன்' என்று, உண்மை நிலையை எடுத்துச் சொல்லி, உடனே தலைவியைத் திருமணம் செய்து அழைத்துக்கொண்டு போக வேண்டு மென்கிறாள், தோழி.

தலைவி கிளிகளை ஓட்ட எழுப்பும் குரல் கிளிக்குரல் போலவே ஒலிப்பதால், புனத்தில் முன்னரே கிளி இருப்பதாய்க் கருதி, கிளிகள் மேலும் மேலும் புனத்தினுள் வந்துகொண்டே யிருக்கின்றன. ஆதலால், தலைவியைக் கிளி ஓட்டுவதினின்று நீக்கி இல்லத்திற்கு அழைத்துச் சென்றுவிடுவாள், தாய்.

சொற்பொருள்

1. கொடிச்சி - குறிஞ்சிநில மகள்; கிளி செத்து - கிளியின் குரல் என்று கருதி; அடுக்கம் - மலை அடுக்கம்.
2. பைங்குரல் - பசிய கதிர்களைக் கொண்ட; ஏனல் - தினைப் புனத்தில்; படர்தரும் - வந்து படியும்.
3. காவலும் - தினைப்புனம் காத்தலையும்; கடியுநர் - நீக்குவர்.
4. மால்வரை - பெரிய மலை; வரைந்தனை கொள் - திருமணம் செய்து கொள்.

தோழி கூற்று

நற்றிணை 57 **பொதும்பில் கிழார்**

திணை : குறிஞ்சி

கூற்று

செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தோழி, பகற்குறியில் வரும் தலைவனை நோக்கி, 'தலைவி இற்செறிக்கப் படுவாள். அவள் நலம் கெடாதிருக்க விரைவில் அவளை மணந்துகொள்' என்று கூறியது.

தடங்கோட்டு ஆமான் மடங்கல் மாநிரைக்
குன்ற வேங்கைக் கன்றொடு வதிந்தெனத்
துஞ்சுபதம் பெற்ற துய்த்தலை மந்தி
கல்லென் சுற்றம் கைகவியாக் குறுகி
வீங்குசுரை ஞெமுங்க வாங்கித் தீம்பால்
கல்லா வன்பறழ்க் கைந்நிறை பிழியும்
மாமலை நாட! மருட்கை உடைத்தே
செங்கோல், கொடுங்குரல் சிறுதினை வியன்புனம்.
கொள்பதம் குறுகும் காலை,எம்
மைஈர் ஓதி மாண்நலம் தொலைவே!

தெளிவுரை

சிங்கம் முதலாய விலங்கின் கூட்டம் நெருங்கிய மலையில் ஒரு வேங்கை மரத்தினடியில் வளைந்த கொம்பினைக் கொண்ட காட்டுப்பசு ஒன்று தன் கன்றோடு தங்கியிருந்தது. அப்பசு தூங்கும் சமயமறிந்து, பஞ்சு போன்ற தலையைக் கொண்ட ஒரு மந்தி, 'கல்' லென்று ஒலித்தபடியிருந்த தன் சுற்றத்தைச் சைகை காட்டி, ஒலியெழுப்பாதிருக்குமாறு அடக்கியது. பின்னர், அப்பசுவிடம் சென்று, பால் நிரம்பிப் பருத்திருந்த அதன் மடிக்காம்பினை அழுந்தப் பற்றி இழுத்து, இனிய பாலைக் கறந்து, அதனை மரமேறுதலை இன்னும் கற்றறியாத தன் குட்டியின் கை நிறையப் பொழியும்படி செய்தது. அத்தகைய காட்சி கொண்ட பெரிய மலைநாட்டைச் சார்ந்தவனே!

சிவந்த தண்டினையும் வளைந்த கதிரினையும் கொண்ட தினைப்புனம் முழுவதும் கதிர் கொய்யும் பருவம் வந்துவிட்டது. தலைவி இனி இங்கு வரமாட்டாள்; வீட்டிலேயே தங்கியிருப்பாள்; களவுக்கூட்டம் தடைப்படும். அதனால் கரிய, நெய்ப்புள்ள கூந்தலைக் கொண்ட தலைவியின் சீரிய நலம் கெட்டழியும். அதனை எண்ணும்போது என் நெஞ்சம் மருட்சியடைகிறது! நீ ஏற்றது செய்க.

கருத்து

தலைவ! தலைவி இற்செறிக்கப்படுவாள்; அவள் நலம் தொலைந்துவிடும்; அதற்கிடமில்லாமல் அவளை மணந்துகொள்.

உள்ளுறை

மந்தி, கொடிய விலங்கிற்கு அஞ்சாது, பசு தூங்கும் சமயம் பார்த்து அதன் பாலைப் பிழிந்து, தன் குட்டிக்குத் தந்து காக்கிறது என்னும் தொடர் வாயிலாய், தலைவன் கொடிய பாலை வழியே சென்று, பொருளீட்டிக் கொணர்ந்து கொடுத்துத் தலைவியை மணந்து, அவளைக் காக்க வேண்டும் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

மந்தி, காட்டுப்பசுவின் பாலைக் கறந்து தன் குட்டிக்கு ஊட்டும் நாடு என்றது, தலைவியும் புதல்வனைப் பெற்று வாழும் இல்லற வாழ்வினை விரும்புகிறாள் என்பதாம்.

சொற்பொருள்

1. தடங்கோடு - வளைந்த கொம்பு; ஆமான் - காட்டுப்பசு; மடங்கல் - சிங்கம்; மாநிரை - (முதலாய) விலங்குகளின் கூட்டம்.
2. வேங்கை - வேங்கை மரம்; வதிந்தது - தங்கியிருந்தது.
3. துஞ்சுபதம் - தூங்கும் சமயம்; பெற்ற - அறிந்த; துய்த்தலை - பஞ்சு போன்ற தலை; மந்தி - பெண்குரங்கு.
4. கல் என் - கல் என்று ஒலிக்கும்; கை கவியா - கையால் சைகை காட்டி; குறுகி - (பசுவினை) நெருங்கி.
5. வீங்குசுரை - பால் நிரம்பிப் பருத்திருந்த காம்பு; ஞெமுங்க - அழுந்தப் பற்றி; வாங்கி - கறந்து.
6. பறழ் - குட்டி; கைந்நிறை - கை நிறையும்படி.
7. மருட்கை - மருட்சி.
8. செங்கோல் - சிவந்த தண்டு; கொடுங்குரல் - வளைந்த கதிர்; வியன்புனம் - அகன்ற வயல்.

9. கொய்பதம் - கதிர் கொய் பருவம்; குறுகும் - நெருங்கும்; காலை - வேளை, பொழுது.
10. மை ஈர் ஓதி - கரிய நெய்ப்புள்ள கூந்தல்; மாண்நலம் - மாட்சிமைப்பட்ட நலம்; தொலைவு - கெட்டழிய.

தோழி கூற்று

நற்றிணை 259 **கொற்றங்கொற்றனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி, தலைமகளைச் செறிப்பு அறிவுறீஇ வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவியைக் களவொழுக்கத்தில் கூடி மகிழத் தலைவன் பகற்குறி யிடத்துச் சிறைப்புறத்தானாக நிற்க, தலைவி இற்செறிப்புக்கு ஆளாவாள் என்றும், தலைவன் விரைவில் மணந்துகொண்டாலன்றி அவளைக் காண இயலாது என்றும் கூறியது.

யாங்குச்செய் வாம்கொல் தோழி! பொன்வீ
வேங்கை ஓங்கிய தேம்கமழ் சாரல்,
பெருங்கல் நாடனொடு இரும்புனத்து அல்கிச்
செவ்வாய்ப் பைங்கிளி ஓப்பி, அவ்வாய்ப்
பெருவரை அடுக்கத்து அருவி ஆடி,
சாரல் ஆரம் வண்டுபட நீவி,
பெரிதுஅமர்ந்து இயைந்த கேண்மை சிறுநனி
அரியபோலக் காண்பேன்– விரிதிரைக்
கடல்பெயர்ந் தனைய ஆகி,
புலர்பதம் கொண்டன ஏனல் குரலே.

தெளிவுரை

"தலைவியே! கடலே இங்குப் பெயர்ந்து வந்தது போன்ற பெரிய தினைப்புனத்தில் கதிர்கள் முற்றிக் கொய்யும் நிலையை அடைந்தன. அவற்றை நம் தமர் வந்து கொய்து போவதன்றி நம்மையும் வீட்டுக்காவலில் வைப்பர். பொன் போன்ற பூக்களைக் கொண்ட வேங்கை மரங்கள் உயரமாய் வளர்ந்

திருக்கின்ற தேன் மணம் கமழும் சாரல் இது. பெரிய மலைக்குரிய நாடனோடு இங்கே பெரிய தினைப்புனத்தில் தங்கியிருந்து, சிவந்த வாயையும் பசிய நிறத்தையும் கொண்ட கிளிகளை ஓட்டினோம்; பெரிய மலைப்பக்கத்திலிருந்து விழுகின்ற அருவியில் நீராடினோம்; மலைச்சாரலிடத்தே பெற்ற சந்தனத் தேய்வையை வண்டு மொய்க்கும்படியாகப் பூசிக்கொண்டோம். இவ்வாறு விருப்பமுடன் செய்துகொண்ட நட்பு இன்னும் சில நாளில் இல்லாமல் போய்விடும்போலத் தோன்றுகிறது. நாம் இனி என்ன செய்வோம்!" என்று தோழி, தலைவன் கேட்கும் வண்ணம் தலைவியிடம் கூறினாள்.

கருத்து

தலைவ! தலைவி இனித் தினைப்புனத்திலிருந்து இல்லத்திற்குச் செல்வது உறுதி; நீ அவளைத் திருமணம் செய்து கொண்டால்தான் அவளை இனிக் காண இயலும்.

விளக்கம்

தினை வளர்ந்து, கதிராகி முற்றியதுபோலத் தலைவன் தலைவியின் காதல் வளர்ந்து நிறைந்துள்ளது. தினையைக் கொய்யும் பருவம் வந்துற்றதுபோலத் தலைவனும் தலைவியை மணந்துகொள்ளும் காலம் வந்துவிட்டது என்பதைத் தோழி தலைவனிடம் நயமாய் உணர்த்துகிறாள்.

சொற்பொருள்

1. யாங்குச் செய்வாம் - என்ன செய்வோம்?; பொன்வீ - பொன் போன்ற மலர்.
2. தேம்கமழ் - தேன் மணம் வீசும்.
3. இரும்புனம் - பெரிய தினைப்புனம்; அல்கி - தங்கி.
4. ஓப்பி - ஓட்டி; அவ்வாய் - அங்கிருந்த.
5. பெருவரை - பெரிய மலை; அடுக்கத்து - சரிவில்.
6. சாரல் - மலைச்சாரல்; ஆரம் - சந்தனம்; வண்டுபட - வண்டுகள் மொய்க்கும்படி; நீவி - பூசி, தடவி.
7. பெரிது அமர்ந்து - மிகவும் விரும்பி; இயைதல் - இணங்கல்; கேண்மை - நட்பு, உறவு; சிறுநனி - மிகவும் குறுகி.
8. அரிய போல - இல்லாமல் போய்விடுவது போல; விரிதிரை - விரிந்த அலை.

9. பெயர்ந்தனைய ஆகி - பெயர்ந்து இங்கே வந்தது போல.
10. புலர் பதம் - முற்றிக் கொய்தற்கேற்ற பக்குவம்; ஏனல் குரல் - தினைக் கதிர்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 18 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பகற்குறிக்கண் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

களவுப்புணர்ச்சியில் தலைவன் பகற்குறியில் சிறைப்புறமாய் நிற்க, தோழி, தலைவி இல்லக்காவலில் வைக்கப்பட்டிருப்பதை உணர்த்தி, திருமணத்தை வற்புறுத்தியது.

என்ஆம்கொல் ஈடில் இளவேங்கை நாள்உரைப்பப்
பொன்ஆம்போர் வேலவர் தாம்புரிந்த(து) – என்னே!
மருவிஆம் மாலை மலைநாடன் கேண்மை
இருவிஆம் ஏனல் இனி.

தெளிவுரை

பகற்குறியில் சிறைப்புறத்திலிருந்த தலைவன் கேட்கும் வண்ணம் "தலைவியே! தினைக்கதிரினைக் கொய்ய வேண்டிய நாளினை வேங்கை மரங்கள் பூப்பூத்துத் தெரிவித்துவிட்டன. இனி, இத்தினைப்புனம் கதிர்கள் கொய்யப்பட்டு வெற்றுத் தட்டைகளை உடையனவாய் நிற்கும். தாய் நம்மையும் இல்லக் காவலில் வைத்துவிடுவாள். போர் விருப்பமிக்க வேலினைக் கொண்ட எம் தந்தையும் தமையன்மாரும் தலைவிக்குப் பரிசமாய் விரும்பியது பொன்னால் ஆன அணிகலன்களே. ஆதலால், தலைவியுடன் பழகிவரும் மலைநாட்டுத் தலைவனின் நட்பு இனி என்ன ஆகுமோ?" என்றாள், தோழி.

கருத்து

'தலைவ! தலைவி இற்செறிக்கப்பட்டுவிட்டாள். உரிய பரிசத்தோடு வந்து தலைவியை மணந்துகொள்.'

குறிப்பு

தினை கொய்யப்பட்ட பின்பு புனங் காவலுக்குத் தலைவி வர மாட்டாள்; இற்செறிப்பும் செய்யப்படுவாள்.

சொற்பொருள்

1. என் ஆம்? - என்ன ஆகும்?: ஈடு இல் - ஒப்பு இல்லாத; இள - இளைய; வேங்கை - வேங்கை மரம்; நாள் - திருமண நாளை; உரைப்ப - சொல்ல.
2. பொன்ஆம் - பொன்னாலாகிய; போர் - போர் விருப்பம் மிக்க; வேலவர் - வேலினையுடைய என் தந்தையும் தமையன்மாரும்; தாம் புரிந்தது - தாம் தலைவிக்குப் பரிசமாய் விரும்பியது.
3. மருவி - பழகுவதால்; ஆம் - பயின்று வருகின்ற; மாலை - தன்மை யினைக் கொண்ட; கேண்மை - உறவு.
4. இனி - இனிமேல்; ஏனல் - தினைப்புனம்; இருவி - வெறுந்தினைத் தாள்; ஆம் - கொண்டதாகும்.

தோழி கூற்று

ஐந்திணை எழுபது 7 **மூவாதியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பகற்குறிக்கண் தலைமகன் சிறைப்புறத்தானாகப் படைத்துமொழி கிளவி யால் தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

பகற்குறியிடத்திற்கு வந்தபோது, தலைவன் தலைவியை வரைந்து கொள்ள வேண்டும் என்று தூண்டுதற்குக் கற்பனையாய் ஒரு காரணத்தைப் படைத்துக்கொண்டு தோழி கூறியது.

காய்ந்தீயல் அன்னை! இவளோ தவறிலள்
ஓங்கிய செந்நீர் இழிதரும் கான்யாற்றுள்
தேன்கலந்து வந்த அருவி குடைந்தாடத்
தாம்சிவப் புற்றன கண்.

தெளிவுரை

"அன்னாய்! மலையினூடே பொங்கிப் பெருகிச் செந் நிறத்துடன் இறங்கி ஓடும் காட்டாற்று நீருடன் தேனும் கலந்து வந்து கொட்டிய அருவிநீரில் இவள் மூழ்கி விளையாடியதால் இவள் கண்கள் சிவப்புற்றன. இவள் குற்றம் எதுவும் செய்ய வில்லை. என்மீது சினங்கொள்ள வேண்டா" என்று தோழி செவிலித்தாயிடம் கூறினாள்.

கருத்து

'தலைவ! தாய் சினந்ததால் தலைவி இற்செறிக்கப்படுவாள்; இனி நீ தலைவியை மணம் கொள்ளுதலே நன்று.

விளக்கம்

தலைவனைக் காண இயலாது வருந்தி அழுதுகொண்டே யிருந்ததால் தலைவியின் கண்கள் சிவந்திருந்தன. அவற்றைப் பார்த்து ஐயுற்ற செவிலி, 'கண்கள் ஏன் சிவந்துள்ளன?' என்று கேட்டாள். அதற்கு நான், 'பொங்கிப் பெருகிக் கீழிறங்கும் அருவி, தேனையும் கலந்து கொட்டியது. அதிலே தலைவி மூழ்கித் திளைத்து விளையாடினாள். அக்காரணத்தால் இவள் விழிகள் சிவப்புற்றன. எனவே, தாயே, நீ இவள்மீது சினங் கொள்ள வேண்டா' என்று அவள் சினத்தைத் தணித்ததாய்த் தலைவனிடம் தோழி கூறினாள்.

குறிப்பு

தலைவன் வாராமையால் வருந்தி அழுத தலவையின் கண்கள் சிவந் திருந்தன. செவிலித்தாய் ஏன் எனக் கேட்டபோது, அருவிநீரில் நீண்ட நேரம் விளையாடியதாலேயே கண்கள் சிவந்தன எனத் தோழி தானாய் ஒரு காரணத்தைப் படைத்துக்கொண்டு கூறுகிறாள்.

சொற்பொருள்

1. காய்ந்தீயல் - (எங்களைச்) சினந்து மொழியல் வேண்டா; தவறிலள் - குற்றமற்றவள்.
2. ஓங்கிய - சிறப்புமிக்க; செந்நீர் - செந்நிறம் கொண்ட; இழிதரும் - கீழிறங்கும்; கான் யாறு - காட்டாறு.
3. குடைந்தாட - மூழ்கி விளையாடியதால்.
4. சிவப்புற்றன - சிவந்தன; கண் - கண்கள்.

தோழி கூற்று

ஐந்திணை ஐம்பது 44 **மாறன் பொறையனார்**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறிக்கண் தலைமகன் சிறைப்புறத்தானாகப் படைத்துமொழி கிளவியான் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

பகற்குறியில் தலைவன் வேலிக்குப் புறத்தே நின்றபோது, இல்லில் தம்மை இருத்தியிருப்பதற்குத் தானே ஒரு நிகழ்ச்சியைக் கற்பித்துக் கொண்டு தோழி, தலைவியைத் தலைவன் உடனே மணம் செய்துகொள்ள வேண்டுமென, அவன் கேட்கும்படி கூறியது.

கொண்கன் பிரிந்த குளிர்பூம் பொழில்நோக்கி
உண்கண் சிவப்ப அழுதேன் ஒளிமுகம்
கண்(டு)அன்னை எவ்வம்யா தென்னக் கடல்வந்தென்
வண்டல் சிதைத்த(து)என் றேன்.

தெளிவுரை

“ ‘*நம் இற்செறிப்புக் காரணமாய்த் தலைவன் உன்னோடு சேராது பிரிந்துசென்ற குளிர்ச்சி பொருந்திய பூம்பொழிலை நோக்கி, என் மையுண்ட கண்கள் சிவக்குமாறு நான் கண்ணீர் விட்டு ஒரு சமயம் அழுதேன். செவிலித்தாய் என் முகத்தை நோக்கியபடி, ‘உனக்கு நேர்ந்த துன்பம் யாது?’ என்று கேட்டாள். அதற்கு நான், ‘ கடல் அலை வந்து கரைமீது மோதி*

நான் கட்டியிருந்த விளையாட்டுச் சிற்றிலைச் சிதைத்துவிட்டது. அதனால் நான் வருந்தி அழுததால் கண்கள் சிவந்துவிட்டன' என்று சொன்னேன்" எனச் சிறைப்புறம் நிற்கும் தலைவன் கேட்கும்படியாகத் தோழி தலைவியிடம் சொன்னாள்.

கருத்து

தலைவி இற்செறிக்கப்பட்டுள்ளாள்; அதனால் தலைவன் தலைவியை மணந்துகொள்வதே அவளை அடைதற்கு வழி.

விளக்கம்

"தலைவியே! தலைவனைப் பிரிந்த நீ மிகவும் கலங்கினாய். உன் கலக்கத்தைக் கண்டு, பகற்குறியில் நீ தலைவனோடு சேர்ந் திருக்கும் பூம்பொழிலை நோக்கி அழுதேன். அதனால் என் கண் சிவந்தது. அதனைக் கண்டு காரணம் வினவிய செவிலியிடம் 'நான் கட்டிய மணல் சிற்றிலைக் கடலலை சிதைத்தலால் அழுதேன்' என்று நானே ஒரு காரணத்தைக் கற்பித்துக்கொண்டு மறுமொழி கூறினேன்" எனத் தோழி தலைவியிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. கொண்கன் - தலைவன்.
2. உண்கண் - மையுண்ட கண்கள்.
3. எவ்வம் - துன்பம்; யாது என்ன - என்ன என்று கேட்க; கடல் - கடல் அலை.
4. வண்டல் - மகளிர் விளையாடும்போது கட்டும் மணல்வீடு.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 27 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி படைத்துமொழி கிளவியான் வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தோழி தானாய் ஒன்றைக் கற்பித்துக் கூறி, தலைவியை உடனே மணம் புரிந்துகொள்ளுமாறு தலைவனைத் தூண்டியது.

பனிவரைநீள் வேங்கைப் பயமலைநல் நாட!
இனிவரையாய் என்றெண்ணிச் சொல்வேன் – முனிவரையுள்
நின்தாள் வலியாக நீவர யாய்கண்டாள்
ஒன்றாள்காப்(பு) ஈயும் உடன்று.

தெளிவுரை

"குளிர்ச்சி பொருந்திய மலைகளையும் நெடிய வேங்கை மரங்களையும் கொண்ட பயன்மிகு மலைநாட்டுக்குத் தலைவனே! இதுகாறும் எம் தலைவியை மணந்துகொள்ளாது காலம் கழித்து வருகிறாய். உனக்கு ஒன்று கூறுவேன். அஞ்சத்தக்க இம்மலையில் உன் கால் வலிமையையே துணையாய்க்கொண்டு நீ வருதலை எம் அன்னை பார்த்துவிட்டாள். அதனால், எம்மோடு சினந்து மாறுபட்டவளாகி எமக்குக் காவலை ஏற்படுத்திவிட்டாள். எனவே, எம் தலைவியை விரைந்து மணம் புரிந்துகொள்!" என்று தோழி தலைவனை வேண்டினாள்.

கருத்து

மலைநாடனே! உன் வருகையை அன்னை அறிந்து எம்மைக் காவலில் வைத்துவிட்டாள்; தலைவியை மணந்து இல்லச்சிறையை நீக்கு.

சொற்பொருள்

1. பனிவரை - குளிர்ச்சி பொருந்திய மலை; பயமலை - பல்வகைப் பயன்கள் நிறைந்த மலை.
2. வரையாய் - தலைவியை வரையாது காலம் கழித்து வருகிறாய்; சொல்வேன் - உனக்கு ஒன்று சொல்வேன்; முனி - வெறுக்கத்தக்க; வரையுள் - மலையில்.
3. நின் தாள் - உன் கால்; வலியாக - துணையாய்; யாய் - தாய்.
4. உடன்று - சினந்து; ஒன்றாள் - எம்மோடு மாறுபட்டு; காப்பு - காவல்; ஈயும் - ஏற்படுத்திவிட்டாள்.

தோழி கூற்று

குறுந்தொகை 244 **கண்ணன்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி வந்து ஒழுகாநின்ற தலைமகனைத் தாம் காவல் மிகுதியால் புறப்பட்டு எதிர்கொள்ளப் பெறாதவழி, பிற்றை ஞான்று, 'வரைந்து கொளின் அல்லது இவ்வொழுகலாற்றின் இனிக் கூடல் அரிது' எனத் தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

இரவு வேளையிலே தலைவியைக் குறித்த இடத்திற்கு வந்து கூடிச் செல்லும் வழக்கத்தைக் கொண்டவனாய்த் தலைவன் இருந்தான். தலைவி, காப்பு மிகுதியால் குறித்தபடி வந்து அவனைத் தழுவ இயலாத நிலை ஏற்பட்டதால் அவன் பன்முறை ஏமாற்றத்துடன் திரும்ப நேரிட்டது. ஒரு நாள் அவனைத் தோழி சந்தித்துத் தலைவி வாராததற்கான காரணத்தைக் கூறி, அவளை மணந்துகொள்ளுதற்கு விரையுமாறு அவனிடம் வற்புறுத்திக் கூறியது.

பல்லோர் துஞ்சும் நள்ளென் யாமத்து,
உரவுக்களிறு போல்வந்து, இரவுக்கதவு முயறல்
கேளேம் அல்லேம்; கேட்டனம் பெரும!
ஓரி முருங்கப் பீலி சாய
நல்மயில் வலைப்பட் டாங்கு,யாம்
உயங்குதொறும் முயங்கும், அறன்இல் யாயே.

தெளிவுரை

"தலைவ! பல்லோரும் தூங்கிக்கொண்டிருக்கும் இருள் செறிந்த நடுஇரவுப்போதில் நீ வலிமையான ஆண்யானைபோல வந்து, இரவுக்காலத்தே அடைக்கப்பட்ட எம் மனையின் கதவைத் திறக்க முயன்றதை, நாங்கள் நேற்று இரவு கேட்காமல் இல்லை; கேட்டோம். தலைக்கொண்டை நெரியவும், தோகை மெலியவும் நல்ல மயில் வலையில் அகப்பட்டதைப் போல, அறனில்லாத எம் தாய், நாங்கள் அசையும்தோறும் எம்மை இறுகத் தழுவிக் கொள்கிறாள்." (அதனால் உன் குறிப்பறிந்து வர இயலவில்லை என்று தோழி தலைவனிடம் கூறினாள்.)

கருத்து

தலைவ! தாயது காப்புமிகுதியால் தலைவி உனைக் காணல் அரிதாயிற்று. இக்குறை தீர நீ தலைவியை வரைந்துகொள்ள வேண்டும்.

குறிப்பு

தலைவி வெளியிலே செல்லுவதற்கியலாது, இல்லக் காவலில் வைக்கப் பட்டுள்ளாள். அவள் துன்பம் நீங்குதற்கு வழி வரைந்துகொள்வது ஒன்றே.

சொற்பொருள்

1. துஞ்சும் - உறங்கும்; நள்ளென் - இருள் செறிந்த; யாமத்து - நடு இரவில்.
2. உரவு - வலிய; களிறு - ஆண்யானை; கதவம் - கதவு; முயறல் - திறக்க முயலுதல்.
3. கேளேம் அல்லேம் - கேளாதவராய் இல்லை (கேட்டேம்).
4. ஓரி - உச்சிக்கொண்டை; முருங்க - நெரிய, சிதைய; பீலி - தோகை; சாய - மெலிய.
5. உயங்குதொறும் - அசையுந்தொறும்; முயங்கும் - தழுவிக்கொள் கிறாள்.

தோழி கூற்று

நற்றிணை 253 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் தலைவனொடு கூடி மகிழ்ந்திருந்த தலைவி இற்செறிப்புக்கு ஆளாகியதால், இனித் தலைவன் தலைவியை மணம் செய்துகொள்ளுதலே ஏற்றது என்று தோழி அவனிடம் கூறியது.

புள்ளுப்பதி சேரினும், புணர்ந்தோர்க் காணினும்,
பள்ளி யானையின் வெய்ய உயிரினை,
கழிபட வருந்திய எவ்வமொடு பெரிதுஅழிந்து,
எனவ கேளாய், நினையினை, நீநனி;

உள்ளினும் பனிக்கும் ஒள்இழைக் குறுமகள்,
பேர்இசை உருமொடு மாரி முற்றிய,
பல்குடைக் கள்ளின் வண்மகிழ்ப் பாரி,
பலவுஉறு குன்றம் போலப்
பெருங்கவின் எய்திய அருங்காப் பினளே.

தெளிவுரை

"பாரியின் பறம்பு மலையில் பலா மரங்கள் நிறைந்திருக்கும். பெரிய முழக்கத்தைச் செய்யும் இடியுடன் மழையும் தக்க பருவத்தில் பெய்து சிறந்து விளங்கும். பனையோலையால் செய்யப்பட்ட குடையிலே இட்டுக் கள்ளினை நிரம்பக் குடிக் கின்ற மக்கள் வாழ்வர். பாரியினது இத்தகைய பறம்பு மலையைப் போலக் காண்பவர் வியக்கும் பேரழகினைப் பெற்றவள், ஒளி திகழும் அணிகலன்களை அணிந்த இளமகளாகிய தலைவி. அவள் இற்செறிக்கப்பட்டு அரிய காவலில் வைக்கப்பட்டு உள்ளாள். அதனால், களவொழுக்கம் வாய்க்கப்பெறாது உள்ளம் நடுங்குகிறாள்.

நீயோ, பறவைகள் தத்தம் கூடுகளிற்சென்று துணையோடு சேர்ந்து கூடியிருந்தாலும், கணவன் மனைவியாய்க் கூடியிருப் போரைக் கண்டாலும், படுக்கையில் கிடக்கும் யானைபோல வெப்பப் பெருமூச்சு விடுகின்றாய். மிகுதியான வருத்தத்தால் நேரும் துன்பத்துடன் மிகவும் மனங்கலங்கி நான் கூறுவதையும் கேளாது வேறு ஏதோ கருதி நிற்கிறாய்" என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

'தலைவ! இப்பொழுதே திருமண முயற்சியினை மேற்கொண்டு திருமணம் முடித்துத் தலைவியின் இற்செறிப்பையும் உன் துன்பத்தையும் போக்கிக் கொள்.'

குறிப்பு

தலைவன் களவொழுக்கம் வாய்க்கப்பெறாதபோது, கூடியிருந்து இன்பம் துய்க்கும் பறவைகளையும் மக்களையும் கண்டு சோர்ந்து பெருமூச்சு விட்டானே அல்லாமல், தலைவியை மணந்துகொள்வதைப் பற்றி நினைக்கவில்லை என்பதைத் தோழி சுட்டிக் காட்டுகிறாள்.

அருஞ்சொற்பொருள்

1. புள்ளு - பறவை; பதி - கூடு; புணர்ந்தார் - காதலராய் ஒன்றுகூடி யிருப்பவர்.
2. பள்ளி யானை - படுக்கையில் கிடக்கும் யானை; வெய்ய - வெப்ப; உயிரினை - பெருமூச்சு விடுகின்றாய்.
3. கழிபட - மிகுதியாய்; எவ்வம் - துன்பம்; பெரிது அழிந்து - மிகவும் மனங் கலங்கி.
4. எனவ - நான் கூறுவதை; நினையினை - எதனையோ நினைத்துக் கொண்டிருக்கிறாய்.
5. உள்ளினும் பனிக்கும் - (உனக்கு நேரிடும் இடையூறுகளை) நினைத்தாலேயே நடுங்குவாள்.
6. பேர் இசை - பெரிய முழக்கம்; உரும் - இடி; மாரி - மழை, மேகம்; முற்றிய - இருண்டு சூழ்ந்த.
7. குடை - கள் குடிப்பதற்காகப் பனை ஓலையாலே செய்யப்பட்ட குடை; வண்மகிழ் - பெரிய கள்ளுணவு; பாரி- வள்ளல்களுள் ஒருவன், ஒளவைக்கு நெல்லிக்கனி தந்தவன், பறம்பு மலைக்குத் தலைவன்.
8. பலவு உறு - பலா மரங்கள் நிறைந்த; பாரி குன்றம் - பாரியின் பறம்பு மலை.
9. கவின் - அழகு; அருங்காப்பினள் - அரிய காவலைக் கொண்டவள்.

தோழி கூற்று

நற்றிணை 295 **ஒளவையார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவியின் களவொழுக்கத்தை அறிந்த அன்னை அவளை இற்செறிப்புக்கு உட்படுத்தினாள். ஆதலின், அவளை விரைந்து மணம் செய்துகொள்ளுமாறு தோழி தலைவனிடம் கூறியது.

முரிந்த சிலம்பின் எரிந்த வள்ளியின்,
புறன்அழிந்து ஒலிவரும் தாழ்இருங் கூந்தல்
ஆயமும் அழுங்கின்று; யாயும்அஃது அறிந்தனள்,

அருங்கடி அயர்ந்தனள், காப்பே; எந்தை,
வேறுபல் நாட்டுக் கால்தர வந்த,
பலவினை நாவாய் தோன்றும் பெருந்துறை,
கலிமடைக் கள்ளின் சாடி அன்னஎம்
இளநலம் இல்கடை ஒழியச்
சேறும்; வாழியோ! முதிர்கம் யாமே.

தெளிவுரை

பசுமையற்ற மலைப்பக்கத்தில் காய்ந்து கிடக்கும் வள்ளிக் கொடியினைப் போல, தலைவியின் புற அழகு யாவும் அழிந்து போயின. அதுகண்டு தாழ்ந்த கருங்கூந்தலைக் கொண்டவரான விளையாட்டுத் தோழியரும் மனம் வருந்தி நின்றனர். அன்னை யும் தலைவியின் களவொழுக்கத்தை அறிந்துகொண்டாள்; அதனால் அவளை வீட்டுக் காவலில் வைத்தாள்; புறக் காவலை யும் ஏற்படுத்தினாள்.

காற்றுச் செலுத்துதலாலே பல்வேறு நாடுகளிலிருந்தும் வந்து சேர்ந்த வேலைப்பாடு மிக்க பல கலங்கள் விளங்கித் தோன்றுவது, எம் தந்தையின் கடல்துறை. அங்கே வைக்கப்பட்டுள்ள, உண்டால் செருக்கை மிகுவிக்கும் கள்ளின் சாடியைப் போன்ற தான எம் இளமை நலமெல்லாம் கெட்டொழியும்படியாக எம் இல்லத்திலேயே இருப்போம். அங்கிருந்தபடியே தலைவனைப் பெற இயலாது முதுமையடைந்து உயிர் துறப்போம். இத் தீங்கினை நாங்கள் அடையுமாறு செய்த நீ நீடூழி வாழ்க!

கருத்து

தலைவ! தலைவியைத் தாய் இல்லக்காவலில் வைத்துள்ளாள்; நீ எம்பால் அருளுடையையாயின், மணத்தோடு விரைந்து வந்து தலைவியின் நலிவைப் போக்கு.

விளக்கம்

"கற்பிற் சிறந்தவளாய தலைவி வேற்று வரைவுக்கும் இசைய மாட்டாள்; களவிலும் உன்னை அடைய இயலாதவளாய் இருக்கிறாள்; நீயும் அவளை மணந்துகொள்ள முயலவில்லை. ஆகவே, அவள் வருந்தியவளாய் இளமையும் அழகும் வீணே

கழிய, வயது முதிர்ந்து சாவையே அடைவாள். அவளுக்கு அணுக்கராகிய நாங்களும் அவள் துயரைப் பொற இயலாமல் அவள் நிலையை அடைவோம். இத்துணைக்கும் காரணமாகிய நீ நெடிது வாழ்ந்திரு" என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. முரிந்த - பசுமை கெட்டுப்போன; சிலம்பு - மலை; எரிந்த - காய்ந்திருக்கும்; வள்ளி - வள்ளிக்கொடி.
2. புறன் - மேல் (அழகு); அழிந்து - கெட்டு; ஒலிவரும் - தழைத்த; தாழ் இருங்கூந்தல் - தாழ்ந்த (நீண்டு தொங்கும்) கருங்கூந்தல்.
3. ஆயம் - விளையாட்டுத்தோழியர்; அழுங்குதல் - மிகவும் வருந்திச் சோர்தல்.
4. அருங்கடி - அரிய காவல்; அயர்ந்தனள் - வைத்தனள்.
5. பல் நாட்டு - பல நாடுகளினுடைய; கால் - காற்று.
6. பலவினை - பலவகை வேலைப்பாடுகளைக் கொண்ட; நாவாய் - கலம், கப்பல்.
7. கலி - செருக்கு; மடை - மடுத்தல், உண்டல்; சாடி - கலம்.
8. இளநலம் - இளமை நலம்; இல்கடை - வீட்டிடத்திலேயே.
9. சேறும் - இருப்போம்; வாழியோ - வாழ்க; முதிர்கம் - முதுமை அடைவோம்.

தோழி கூற்று

நற்றிணை 354 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழியால் செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

மணம் செய்துகொள்ளாது களவொழுக்கத்திலேயே தலைவன் காலம் நீட்டித்தபோது, வீட்டுக்காவலில் தலைவி வைக்கப்பட்டிருப்பதையும், அவளை உடனே மணம் செய்துகொள்ளுமாறும் தோழி அவனிடம் கூறியது.

தான்அது பொறுத்தல் யாவது கானல்
ஆடுஅரை ஒழித்த நீடுஇரும் பெண்ணை
வீழ்கா ஒலைச் சூழ்சிறை யாத்த

கானல் நண்ணிய வார்மணல் முன்றில்,
எல்லி அன்ன, இருள்நிறப் புன்னை
நல்அரை முழுமுதல் அவ்வயின் தொடுத்த
தூங்கல் அம்பித் தூவல்அம் சேர்ப்பின்,
கடுவெயில் கொதித்த கல்விளை உப்பு
நெடுநெறி ஒழுகை நிரைசெலப் பார்ப்போர்
அளம்போகு ஆகுலம் கடுப்ப,
கௌவை ஆகின்றது, ஐய!நின் நட்பே?

தெளிவுரை

தலைவ! கடற்கரைச்சோலையிலே நெடிய கரிய பனைமரத்திலிருந்து வெட்டிக்கொண்டு வரப்பட்ட ஓலையைச் சுற்றி வேலியாய்ச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள வீடு; வெண்மணற் பரப்பில் உள்ள அக்கடற்கரைச்சோலையை அடுத்த வீட்டு முன்றிலில் இரவுபோலக் கரிய நிறம் கொண்ட புன்னை மரத்தின் பருத்த அடிமரத்தில் கட்டப்பட்டுள்ள தோணி கடலலைகளால் மோதுண்டு அசைந்து கொண்டிருக்க, நீர்த்துளிகள் தெறித்து விழுகின்றன. அத்தகைய கடற்கரையிடத்தே கடல்நீர் கடுமையான வெயிலால் கொதிப்புற்று உப்புக்கல்லாய் விளைகிறது. அவ்வுப்பு ஏற்றப்பட்டுள்ள வண்டிகளை உப்பு வாணிகர் ஒன்றன்பின் ஒன்றாய் வரிசையாய் ஓட்டிச் செல்வர். அப்போது அவ்வுப்பு வாணிகர் எழுப்புகிற ஆரவார ஒலியைப் போல, நீ எம்பால் கொண்டுள்ள நட்பு இவ்வூரில் பெரிய அலரை எழுப்பி விட்டது. அதனால் தலைவி இற்செறிக்கப்பட்டிருக்கிறாள்; இதனை நாங்கள் எவ்வாறு பொறுத்துக்கொள்வது?

கருத்து

தலைவ! தலைவி இற்செறிக்கப்பட்டிருக்கிறாள்; அவளை மணந்து உன்னுடன் அழைத்துச் செல்.

இறைச்சி

ஓலையால் வேலியமைக்கப்பட்ட கானல் என்னும் தொடர் மூலம், தலைவியினைப் பெற்ற அன்னை, இல்லத்தைப் பாதுகாத்து வருகிறாள் என்னும் கருத்து வெளிப்படுகிறது. அதனால் இனி இரவுக்குறி வாய்க்காது என்பதாம்.

புன்னையின் அடிமரத்தில் தோணி இயக்கமின்றிக் கட்டப் பட்டுக் கிடக்கிறது. இத்தொடர்மூலம், இனித் தலைவி வெளியே செல்லாதவாறு இற்செறிக்கப்பட்டுக் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்படுவாள் என்னும் கருத்துப் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. தான் அது பொறுத்தல் யாவது - நாங்கள் அதனை எவ்வாறு பொறுத்திருப்போம்?
2. ஆடு அரை - உலர்ந்த அடிமரம்; ஒழித்த - கழித்த; நீடு இரும்பெண்ணை - உயரமான கரிய பனை மரம்.
3. வீழ் - வீழ்ந்த; கா ஓலை - காய்ந்துபோன ஓலை; சூழ்சிறை - சுற்றிக் கட்டப்பட்டுள்ள வேலி (சூழ யாத்த சிறை).
4. நண்ணிய - உள்ள; வார்மணல் - வெண்மணல்.
5. எல்லி - இரவு.
6. நல் அரை - பருத்த அடிமரம்; அவ்வயின் - அவ்விடத்தில்; தொடுத்த - கட்டப்பட்டுள்ள.
7. தூங்கல் - அசைகின்ற; அம்பி - படகு; தூவல் - நீர்த்துளி; சேர்ப்பு - கடற்கரைப்பகுதி.
8. கல்விளை - கல்லாய் விளைந்த.
9. நெடு நெறி - நீண்ட வழி; ஒழுகை - வண்டி; நிரைசெல - வரிசையாய்ச் செல்ல.
10. அளம் - உப்பளப்பகுதி; ஆகுலம் - ஆரவாரம்; கடுப்ப - போல.
11. கௌவை - பழிச்சொல்.

தோழி கூற்று

குறுந்தொகை 342 **காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

செறிப்பு அறிவுறுக்கப்பட்டான் வரைவின்கண் செல்லாது பின்னும் வரவு வேண்டிய தலைமகனைத் தோழி நெருங்கிச் சொல்லி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவி இற்செறிக்கப்பட்டதை அறிவித்தபோதும் தலைவன் பின்னும் களவொழுக்கத்தையே நீடித்தான். அப்போது தோழி, 'நீ வரையாது ஒழுகின் இவள் வருந்துவாள். இனி நீ வரைதலே தக்கது' என்று கூறியது.

கலைகை தொட்ட கமழ்சுளைப் பெரும்பழம்
காவல் மறந்த கானவன், ஞாங்கர்,
கடியுடை மரந்தொறும் படுவலை மாட்டும்
குன்ற நாட, தகுமோ? பைஞ்சுனைக்
குவளைத் தண்தழை இவள்ஈண்டு வருந்த,
நயந்தோர் புன்கண் தீர்க்கும் ·
பயம்தலைப் படாஅப் பண்பினை எனினே?

தெளிவுரை

மணம் கமழ்கின்ற சுளைகளைக் கொண்ட பெரிய பலாப் பழத்தை ஆண்குரங்கு ஒன்று தன் கையால் தோண்டிச் சிதைத்தது. பழங்களை முதலில் பாதுகாக்க மறந்துவிட்ட கானவன், அதன்பின் மணமுள்ள பழமிகுந்த மரந்தோறும் பெரிய வலைகளை மாட்டிப் பழங்களைக் காக்கும் காட்சி பொருந்திய குன்ற நாடனே! பசிய சுனையில் மலர்ந்த குவளை மலர்கள் இடையிட்டுக் கட்டப்பட்ட குளிர்ச்சி பொருந்திய தழையுடையை உடுத்திய தலைவி, இங்கே இற்செறிக்கப்பட்டு வருந்துகிறாள். நீயோ, உன்னை விரும்பியோரது துன்பத்தைப் போக்கும் பயனுள்ள செயலில் (வரைந்து கொள்ளுதலில்) ஈடுபடாத பண்பினனாய் இருக்கின்றாய். இஃது உனக்குத் தகுமோ?

கருத்து

தலைவ! தலைவி இற்செறிக்கப்பட்டாள். அவளுக்கு அவ்வருத்தம் தீர அவளை விரைவில் மணந்துகொள்வதற்கு முற்படு.

விளக்கம்

கானவன் காக்க மறந்தபோது, குரங்கு பலாப்பழத்தைக் கையில் தோண்டி உண்டு மகிழ்ந்தது. அவன் மரந்தோறும் வலையை மாட்டிவிடவே, அதன்பிறகு குரங்கால் பழத்தைக் கவர இயலாத தாயிற்று. தலைவியின் இல்லத்தில் உள்ளோர் தலைவியைக் காப்பதில் சோர்ந்திருந்தபோது, தலைவன் தலைவியைக் கூடி இன்புற்றான். இப்போது இல்லத்தார் காவல் மிகுதியாயிற்று. இனி அவளைக் களவில் பெற இயலாது என்னும் கருத்துப்

பெறப்படுகிறது. எனவே, அவளை மணந்துகொள்ளுதலே தலைவன் செய்யத்தக்கது எனத் தோழி கூறுகிறாள்.

சொற்பொருள்

1. கலை - ஆண்குரங்கு; தொட்ட - தோண்டித் தின்ற; கமழ் சுளை - மணம் கமழ்கின்ற சுளை.
2. ஞாங்கர் - அதன்பின்.
3. கடியுடை - (பழத்தால்) மணம் கொண்ட; படுவலை - (குரங்குகள் கவர முடியாதபடி) மாட்டப்பட்ட வலை.
4. பைஞ்சுளை - பசிய சுளை.
5. குவளைத் தண்தழை - குவளை மலர்கள் இடையிட்டுக் கட்டப்பட்ட குளிர்ச்சி பொருந்திய தழையுடை.
6. நயந்தோர் - விரும்பியவர்; புன்கண் - வருத்தம்.
7. பயம் - பயன், பயனுள்ள; தலைப்படாஅ - செயலில் ஈடுபடாத.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 194 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறிக்கண் வந்து நீங்கும் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டு, மனைக்கண் நிகழ்ந்தது கூறிச் செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

திருமணம் செய்துகொள்ளாமல் களவொழுக்கத்திலேயே தலைவன் ஈடுபட்டு வந்தான். அவனைப் பகற்குறியில் கண்ட தோழி, வீட்டுக்காவலில் தலைவி வைக்கப்பட்டிருப்பதை அறிவித்து, விரைவில் திருமணம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்திக் கூறியது.

கடல்கோடு அறுத்த, அரம்போழ் அவ்வளை
ஒண்தொடி மடவரல் கண்டிகும்; கொண்க!
நன்னுதல் இன்றுமால் செய்தெனக்
கொன்ஒன்று கடுத்தனள், அன்னையது நிலையே.

தெளிவுரை

தலைவ! கடற்சங்கை அறுத்து அரத்தால் பிளந்து செய்யப்பட்டுள்ள அழகிய வளையல்களையும், ஒள்ளிய தோள் வளையையும் அணிந்துள்ள உன் தலைவியைப் பார். அவளது நல்ல நெற்றி இன்று புதுமணம் கொண்டு விளங்குவதை அன்னை அறிந்தாள். இதற்குக் காரணம் ஒன்று இருக்க வேண்டும் என்று ஐயுற்றாள். (அதனால் தலைவியை வீட்டுக்காவலில் வைத்துள்ளாள்.) இதுவே தலைவியின் இன்றைய நிலை.

கருத்து

தலைவ! அன்னைக்கு ஐயம். தலைவி இற்செறிக்கப்பட்டுள்ளாள். உடனே மணம் செய்துகொள்.

விளக்கம்

"மகள் நெற்றியில் ஒரு புது மணம் ஏற்பட்டிருப்பதைத் தாய் உணர்ந்தாள்; உடனே ஐயம் தோன்றிவிட்டது; இம்மணம் எதனால் நேர்ந்தது எனத் துருவி அறியத் தொடங்குவாள்; உடனே தலைவி இல்லத்திலிருந்து வெளியே செல்லாதவாறு காவல் அமைப்பாள். ஆதலால், தலைவ! எவ்விதத் துன்பமுமின்றி நீங்கள் இருவரும் இன்பம் துய்க்க உடனே திருமணத்திற்கு ஆவன செய்" என்று தலைவனிடம் தோழி கூறினாள்.

சொற்பொருள்

1. கடல் கோடு - கடற்சங்கு; போழ்தல் - பிளத்தல், அறுத்தல்; அவ் வளை - அழகிய வளையல்.
2. ஒண்தொடி - ஒள்ளிய தோள் வளை; மடவரல் - இளமையள்.
3. நுதல் - நெற்றி; மால் செய்து - (புதிய மணத்தால்) மயக்கத்தைச் செய்ய.
4. கொன் ஒன்று - இஃது ஏதோ ஒன்றுடையது; கடுத்தனள் - ஐயம் கொண்டனள்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 186 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறிக்கண் வந்து நீங்குந் தலைமகனைத் தோழி செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவன், பகலில் சந்திக்கும் குறியிடத்திற்கு வந்து தலைவியைக் காணாது திரும்புகையில் அவனைக் கண்ட தோழி, தலைவி வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருப்பதை அறிவித்து, அவளை விரைவில் திருமணம் செய்துகொள்ளுமாறு அவனிடம் கூறியது.

நாரை நல்லினம் கடுப்ப, மகளிர்
நீர்வார் கூந்தல் உளரும் துறைவ!
'பொங்குகழி நெய்தல் உறைப்ப, இத்துறைப்
பல்கால் வரூஉந் தேர்'எனச்
'செல்லா தீமோ' என்றனள், யாயே.

தெளிவுரை

"ஈரமான இறகுகளை உலர்த்தும் நாரைக்கூட்டம் போல, மகளிர் நனைந்த தம் கூந்தலை உலர்த்தும் துறையைக் கொண்ட தலைவனே! நீர் நிறைந்த உப்பங்கழிகளில், நெய்தல் மலர்கள் நீர்த் துளிகளைச் சொரியும் கடல் துறையில், 'தேர் ஒன்று அடிக்கடி வந்து செல்கின்றது; எனவே, இனிமேல் வெளியே செல்லாதீர்' எனத் தாய் கூறிவிட்டாள்" எனத் தோழி தலைவனிடம் கூறினள்.

கருத்து

தலைவியைத் தாய் இல்லக் காவலில் வைத்துவிட்டாள். இனி அவள் குறியிடங்கட்கு வரமாட்டாள். அவளை அடைய நீ அவளைத் திருமணம் செய்துகொள்வது ஒன்றே வழி.

விளக்கம்

"தலைவ! தலைவி இற்செறிக்கப்பட்டிருப்பதால், இனி அவளை நீ சந்திக்க இயலாது. நீ அவளை அடைய வேண்டின்

அவளைத் திருமணம் செய்துகொள்” எனத் தலைவனைத் தோழி வற்புறுத்துகிறாள்.

சொற்பொருள்

1. கடுப்ப - போல.
2. நீர்வார் - நீர் ஒழுகும்; உளரும் - உலர வைக்கும்.
3. பொங்கு கழி - நீர் நிறைந்த உப்பங்கழி; உறைப்ப - நீர் துளிப்ப.
4. பல்கால் - பல முறை.
5. செல்லாதீம் - போக வேண்டா.

தோழி கூற்று

அகநானூறு 2 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

பகற்குறிக்கட் செறிப்பறிவுறீஇத் தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தினைப்புனம் காத்திருந்த தலைவியைத் தனிமையில் சந்தித்துப் பழகிய தலைவனிடம், ‘தினை விளைந்துவிட்டதால் இனி அறுவடை செய்யப் படும்; அந்நிலையில் தினைக்காவலுக்குத் தலைவி இனி வரப்போவதில்லை’ என்று உணர்த்துவதன்மூலம் தோழி அவளைத் திருமணம் செய்துகொள்ளத் தலைவனைத் தூண்டுவது.

கோழிலை வாழைக் கோள்மிகு பெருங்குலை
ஊழுறு தீம்கனி, உண்ணுநர்த் தடுத்த
சாரற் பலவின் சுளையொடு, ஊழ்படு
பாறை நெடுஞ்சுனை, விளைந்த தேறல்
அறியாது உண்ட கடுவன் அயலது
கறிவளர் சாந்தம் ஏறல்செல் லாது,
நறுவீ அடுக்கத்து மகிழ்ந்துகண் படுக்கும்
குறியா இன்பம், எளிதின், நின்மலைப்
பல்வேறு விலங்கும், எய்தும் நாட!
குறித்த இன்பம் நினக்குஎவன் அரிய?

வெறுத்த ஏஎர், வேய்புரை பணைத்தோள்;
நிறுப்ப நில்லா நெஞ்சமொடு நின்மாட்டு,
இவளும், இனையள் ஆயின், தந்தை
அருங்கடிக் காவலர் சோர்பதன் ஒற்றிக்
கங்குல் வருதலும் உரியை, பைம்புதல்
வேங்கையும் ஒள்இணர் விரிந்தன;
நெடுவெண் திங்களும் ஊர்கொண் டன்றே.

தெளிவுரை

மலைநாடனே! கொழுவிய இலைகளைக் கொண்ட வாழை மரம் பெரிய குலையினை ஈன்று முதிர்ந்த கனிகளைக் கொண்டுள்ளது; அவ்வாழையின் பழங்களை உண்ணுபவர்களை மணத்தால் தடுத்து நிறுத்தும் வகையில் மலையின் இன்னொரு பக்கத்தில் இனிய சுவையோடு கூடிய பலாப்பழங்கள் உள்ளன. அந்தப் பலாச்சுளைகளிலிருந்து வழியும் சாறு, கீழே பாறையில் அமைந்திருக்கும் சுனைநீரில் சொட்டும். சுனைநீரும் பழச்சாறும் கலந்து, நாள்பட நாள்பட சுனைநீரே கள்ளாகியது. இதனை அறியாத ஓர் ஆண்குரங்கு அச்சுனைநீரை (தேறலை) உண்டு போதையுற்றது. அருகிலிருக்கும் மிளகுக்கொடி படர்ந்த சந்தன மரத்தில் ஏற முயன்றது. போதையால் இயலாமல் கீழே விழுந்து, தரையில் பல்வகை மலர்கள் உதிர்ந்து கிடக்கும் மலர்ப்படுக்கையில் படுத்துத் தன்னை மறந்து தூங்கியது. இப்படி எந்த வகையான திட்டமும் இல்லாமலே உன் மலையிலுள்ள விலங்குகள்கூட இன்பமடைகின்றன. இத்தகைய மலைநாட்டுக்குரிய தலைவனே!

நீ நினைத்துத் திட்டமிட்டால் இன்பம் உனக்கு அரியது அன்றே! மிகுதியான அழகும் மூங்கிலையொத்த தோளையும் கொண்ட இவள் தடுத்து நிறுத்தினாலும் நில்லாது, உன்னிடம் ஓடும் நெஞ்சினைக் கொண்டவளாய் (உன்னைப் போலவே) இருக்கிறாள். (ஆகையால், உங்களிடையே சந்திப்பு ஏற்படாமல் தடுத்தல் கடினம்.) பகற்காலத்தில் பல தடைகள் உள்ளன. ஆதலால், காத்தல் தொழிலில் வல்ல அவள் தந்தையின் காவலர்கள் சோர்ந்திருக்கும் நேரம் பார்த்து நீ இரவிலும் வரலாம். (ஆனாலும் மற்றொன்றையும் கவனி.)

பசுமையான புதர்களில் உள்ள வேங்கை மரங்களில் ஒளி பொருந்திய பூங்கொத்துகள் மலர்ந்துள்ளன. ஒளி வீசுகின்ற நிலவும் முழுமையாய் நிரம்பியிருக்கிறது. (ஆதலின், இரவிலும் வர இயலாது எனத் தோழி பகல், இரவு ஆகிய இரு குறிகளை யும் நீக்கி, மணம் செய்வதற்குரிய பருவம் இஃது என்பதைச் சுட்டிக் காட்டித் தலைவனை வரைவொடு வருமாறு அறிவுறுத் தினாள்.)

கருத்து

பகற்குறி, இரவுக்குறி ஆகிய இரு குறிகளையும் மறுத்துத் தோழி தலைவனை வரைவொடு வருமாறு கூறினாள்.

விளக்கம்

பகற்குறி பன்னாள் வந்து செல்லும் தலைவனிடம் தோழி, 'தலைவ! பல்வேறு விலங்குகளும் வருந்தாமலே இன்பம் பெறும் மலைநாட்டைக் கொண்டவனாகிய நீ வருத்தமின்றி இன்பம் பெறலாமே,' என்றாள்.

வேங்கை மரப்பூக்கள் பூத்துள்ளன; தினையரியும் காலமும் தொடங்கிவிட்டது. ஆதலின், பகற்பொழுதில் தலைவியைப் பெறுதல் இனி இயலாது.

நிறை நிலவு ஒளி வீசுகிறது; காவலும் மிகுந்திருக்கிறது; ஆதலின், இரவிலேயும் வர இயலாது.

இனி வரைந்துகோடலே தக்கது எனத் தோழி வரைவு கடாயினாள்.

குறிப்பு

வேங்கை மலர்ந்திருப்பதால் இனித் தினை அறுக்கப்பட்டுவிடும். தலைவி இற்செறிக்கப்படுவாள்; ஆதலால், தலைவியைப் பகலில் சந்திக்க இயலாது. இரவில் வரலாம் என்றால் காவலர்களின் கடுமையான காவலைக் கடந்து வர இயலாது. ஆதலால், உடனே மணம் செய்துகொள்ளுதலே ஏற்றது என்பதைத் தோழி வெளிப்படுத்துகிறாள்.

வேங்கை மலரும் காலமும் திங்கள் நிறைநாளும் திருமணம் செய்து கொள்ளுதற்கு ஏற்ற காலம். எனவே, இப்பொழுதே திருமணத்திற்கு ஏற்பாடு செய் என்கிறாள், தோழி.

உள்ளுறை

பழச்சாறு கலந்து கள்ளாகிய சுனைநீரைக் கடுவன் குடித்து மயங்குகிறது; அதனால் தனக்கு இயல்பாகிய மரமேறுதலில் தோல்வியடைகிறது; சந்தன மர நிழலில் மலர்ப்படுக்கையில் தன்னை மறந்து உறங்குகிறது. இந்தக் களிமயக்கத் தூக்க இன்பத்தைக் குரங்கு திட்டமிட்டுப் பெறவில்லை. இச்செய்தி வாயிலாய், தலைவன் தற்செயலாய்ப் பெற்ற களவொழுக்க இன்பத்திலே, தன்னையும் சூழலையும் மறந்து, களவினை நீக்கி வரைய மாட்டாது, களவொழுக்கமாகிய இன்பத்திலேயே மயங்கி இருக்கிறான் என்னும் கருத்துப் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. கோழ்இலை - வளவிய இலை; கோள் - காய்.
2. ஊழுறு - முதிர்ச்சியுற்ற.
3. பலவின் - பலாப்பழத்தின்; ஊழ்படு சுனை - முற்றிய சுனை.
4. விளைந்த - உண்டாக்கிய; தேறல் - கள்.
5. கடுவன் - ஆண்குரங்கு; அயலது - அருகேயுள்ள.
6. கறி - மிளகுக்கொடி; வளர் - படர்ந்துள்ள; சாந்தம் - சந்தன மரம்.
7. நறுவீ - நறிய மலர்; அடுக்கம் - படுக்கை; படுக்கும் - தூங்கும்.
8. குறியா இன்பம் - எதிர்பாரா இன்பம்.
9. எய்தும் - அடையும்.
10. குறித்த இன்பம் - நீ குறித்து முயலும் இன்பம்; எவன் அரிய - எங்ஙனம் அரியதாகும்?
11. வெறுத்த - மிக்க; ஏஎர் - அழகு; வேய் - மூங்கில்; புரை - ஒத்த; பணை - பருத்த.
12. நிறுப்ப நில்லா - நிறுத்தவும் நில்லாது; நின்மாட்டு - உன்னிடம்.
13. இனையள் - இத்தகையவளாயினள்.
14. அரு - அரிய; கடி - காவல்; சோர்பதன் - சோர்ந்திருக்கும் சமயம்; ஒற்றி - பார்த்து.
15. கங்குல் - இரவு; உரிமை - உரியவன்; பைம்புதல் - பசிய புதர்.
16. வேங்கை - வேங்கை மரம்; ஒள்இணர் - ஒள்ளிய பூங்கொத்து; விரிந்தன - மலர்ந்தன.
17. நெடுவெண் - மிக்க வெண்மை கொண்ட; திங்கள் - நிலவு; ஊர் கொண்டன்று - நிரம்புதலுற்றது.

தோழி கூற்று

அகநானூறு 150 **குறுவழுதியார்**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறி வந்து கண்ணுற்று நீங்கும் தலைமகனைத் தோழி, தலைமகளை இடத்துய்த்து வந்து செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

பகற்குறியிடத்தில் தலைவியைக் கொண்டுபோய் விட்டுவிட்டு வந்து தலைவியைக் கூடி நீங்கும் தலைவனைத் தோழி, சந்திக்கிறாள். தலைவியின் இற்செறிப்பை அறிவுறுத்தி, இனிப் பகற்குறி இயலாது என்பதைப் புலப்படுத்தி, 'அவளை வரைந்துகொள்' எனத் தலைவனிடம் தெரிவிக்கிறாள்.

பின்னுவிட நெறித்த கூந்தலும், பொன்னென
ஆகத்து அரும்பிய சுணங்கும், வம்புவிடக்
கண்உருத்து எழுதரு முலையும், நோக்கி
எல்லினை பெரிதுஎனப் பல்மாண் கூறி,
பெருந்தோள் அடைய முயங்கி, நீடுநினைந்து,
அருங்கடிப் படுத்தனள் யாயே; கடுஞ்செலல்
வாள்சுறா வழங்கும் வளைமேய் பெருந்துறை,
கனைத்த நெய்தற் கண்போல் மாமலர்
நனைத்த செருந்திப் போதுவாய் அவிழ,
மாலை மணிஇதழ் கூம்ப, காலைக்
கள்நாறு காவியொடு தண்ணென மலரும்
கழியும், கானலும், காண்தொறும் பலபுலந்து,
'வாரார் கொல்?'எனப் பருவரும் –
தார்ஆர் மார்ப!நீ தணந்த ஞான்றே!

தெளிவுரை

மாலை பொருந்திய மார்பைக் கொண்டவனே! விரைந்து செல்லும் வாள் போன்ற கொம்பினைக் கொண்ட சுறாமீன்கள் உப்பங்கழியில் திரியும்; சங்குகள் மேயும்; இதழ்கள் செறிந்த நெய்தலின் கண் போன்ற பெரிய மலர்கள் மாலைப்பொழுதில்

குவியும்; காலையிலோ மொட்டுகள் விரிந்த செருந்தியுடனும் தேன்மணம் கமழும் குவளையுடனும் நெய்தலும் குளிர்ச்சி பொருந்த மலரும்.

இத்தகைய கழியையும் கடற்கரைச்சோலையையும் பார்க்கும் போதெல்லாம் தலைவி பலவும் நினைந்து, தன் நிலை குறித்து வெறுப்புக்கொள்வாள்; 'நம் தலைவர் வரமாட்டாரோ?' என்று வருந்துவாள்.

தாயோ, தலைவியின் பின்னலிடும்படியாய் வளர்ந்து நெளிந் துள்ள கூந்தலையும், பொன்போல மார்பிலே தோன்றும் தேமலையும், கச்சு அறுந்து விழும்படியாய்க் கண்கள் உருப்பெற்று விம்மி எழுந்த முலையினையும் நோக்கி, 'நீ பெரிதும் அழகுற வளர்ந்துவிட்டாய்' எனப் பல முறையும் பாராட்டினாள்; தோள்கள் முழுதும் பொருந்தும்படியாய்த் தழுவினாள்; நெடுநேரம் எதையோ நினைந்து பார்த்தாள். பின்னர், எங்கும் வெளியே செல்லாதவாறு வீட்டுக்காவலில் வைத்தாள்.

கருத்து

'நீ தலைவியைக் குறியிடங்களில் இனிக் காண இயலாது; ஆதலால், தலைவியை மணந்துகொள்' எனத் தோழி தலைவனிடம் கூறினாள்.

விளக்கம்

"மாலை சூடிய மார்ப! இவள் தாய், வளர்ந்து சுருண்டுள்ள இவளது கூந்தலையும், பொன் போல மார்பில் தோன்றும் தேமலையும், கச்சு அறுந்துவிடும்படியாய்க் கதிர்த்துள்ள முலை யினையும் பார்த்து, மிகவும் அழகுடன் இருப்பதாய்ப் பல முறையும் பாராட்டிக் கட்டித் தழுவிக்கொண்டாள். பின்னர், எதையோ நினைத்தவளாய் அவளை வீட்டுக்காவலில் வைத்து விட்டாள்.

தலைவி உன்னைக் காண இயலாமல் வருந்துகிறாள். விரைவில் வரைந்து அவள் துயரை நீக்கு" எனத் தோழி தலைவனிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. பின்னுவிட - பின்னலிடும்படியாய் வளர்ந்துள்ள; நெறித்த - நெளிந் துள்ள.

2. ஆகம் - மார்பு; அரும்பிய - தோன்றிய; சுணங்கு - தேமல்; விட - அற; வம்பு - கச்சு.
3. கண் - முலைக்கண்; உருத்து - உருப்பெற்று.
4. எல் - பெருமை, அழகு; பல்மாண் - பலமுறையும்.
5. முயங்கி - தழுவி; நீடு - நெடிது.
6. அருங்கடி - அரிய காவல்; படுத்தனள் - வைத்தனள்; கடுஞ் செலல் - விரைந்து செல்லும்.
7. வாள் சுறா - வாள் போன்ற கொம்பினைக் கொண்ட சுறாமீன்; வளை - சங்கு.
8. கனைத்த - இதழ் செறிந்த; மாமலர் - பெரிய மலர்.
9. நனைத்த - அரும்பிய; செருந்திப்போது - செருந்தி மலர்; வாய் அவிழ - மலர.
10. மாலை - மாலை நேரம்; மணி இதழ் - அழகிய இதழ்கள்.
11. கள் நாறு - தேன் மணக்கும்; காவி - குவளை மலர்; தண்ணென - குளிர்ந்து.
12. பல புலந்து - பலவும் எண்ணி வெறுத்து.
13. பருவரும் - வருந்தும்.
14. தார்ஆர் - மாலை பொருந்திய; தணந்த - பிரிந்த; ஞான்று - பொழுது.

தோழி கூற்று

அகநானூறு 298 **விற்றூற்று மூதெயினனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பகற்குறிக்கண் வந்து நீங்கும் தலைமகனைத் தோழி செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவனும் தலைவியும் பகற்குறியில் கூடி இன்புற்றுக்கொண்டிருந்தனர். அதனால் ஊரில் அலர் எழ, தலைவி இற்செறிப்பில் வைத்துக் காக்கப்பட்டாள். அச்செய்தியைக் குறியிடத்தே வந்திருக்கும் தலைவனிடம் அறிவித்து, அவளை விரைவில் வரைந்துகொள்ளுமாறு தோழி கூறியது.

சென்மதி; சிறக்க,நின் உள்ளம்! – நின்மலை
ஆரம் நீவிய அம்பகட்டு மார்பினை,
சாரல் வேங்கைப் படுசினைப் புதுப்பூ
முருகுமுரண் கொள்ளும் உருவக் கண்ணியை,
எரிதின் கொல்லை இறைஞ்சிய ஏனல்,
எவ்வம் கூறிய வைகலும் வருவோய்!–
கனிமுதிர் அடுக்கத்துஎம் தனிமை காண்டலின்
எண்மை செய்தனை ஆகுவை – நண்ணிக்
கொடியோர் குறுகும் நெடிஇருங் குன்றத்து,
இட்டுஆறு இரங்கும் விட்டுஒளிர் அருவி
அருவரை இழிதரும் வெருவரு படாஅர்க்
கயந்தலை மந்தி உயங்குபசி களைஇயர்,
பார்ப்பின் தந்தை பழச்சுளை தொடினும்,
நனிநோய் ஏய்க்கும் பனிகூர் அடுக்கத்து,
மகளிர் மாங்காட்டு அற்றே– துகள்அறக்
கொந்தோடு உதிர்த்த கதுப்பின்,
அம்தீம் கிளவித் தந்தை காப்பே.

தெளிவுரை

தலைவ! உன் மலையில் உண்டான சந்தனத்தை அழகிய பெருமை வாய்ந்த உன் மார்பில் பூசிக்கொண்டு வேங்கை மலர்களையும் பிற பூக்களையும் நிறவேறுபாடு தெரியத் தலையில் சூடிக்கொண்டுள்ளாய். தீயினால் சுட்டெரித்துத் திருத்திய கொல்லையில் விளைந்து, கதிர் வளைந்துள்ள தினைப்புனத்திற்கு உன் பெரும் துன்பத்தைக் கூறுவதற்காக நாள்தோறும் வருகின்றாய்!

தேவ கன்னியர் வாழும் மாங்காடு என்னும் ஊர், மிகுதியும் காப்புள்ளது. அங்கு வழிப்பறி செய்யும் கொடியவர்கள் நெருங்கித் தங்கியிருக்கும் நீண்ட பெரிய குன்றின் குறுகிய வழியில் அருவியின் முழக்கம் இடைஇடையிட்டுக் கேட்கும். அவ்வருவி விழும் இடம் அச்சம் தரும் சிறு புதர்களைக் கொண்டது. அப்புதரில் இருக்கும் மென்மையான தலையைக் கொண்ட பெண்குரங்கின் பசியை நீக்க, அதன் ஆண்குரங்கு, பக்க மலையிலுள்ள பலாப்பழத்தின் சுளையைத் தோண்டி எடுக்க

முற்பட்டால், அதற்கு மிக்க துன்பம் தருவதற்காகவே அத்தேவ கன்னியர் அங்கு வாழ்கின்றனர் என்பர்.

கொத்தோடு பூக்களை உதிர்த்துக் குற்றமற அணிந்த கூந்தலையும், அழகிய இனிய பேச்சினையும் கொண்ட தலைவியைப் பெற்ற தந்தையின் வீடும், மாங்காடு போன்ற காப்பு மிகுதியும் கொண்டது.

அங்ஙனம் இருக்கவும், சென்ற சில நாள்களில் இங்குத் தனிமையில் இருந்ததால் எம்மைச் சந்தித்துச் சென்ற நீ, இப்போதுள்ள காவலின் அருமைப்பாட்டினை உணராமல் எளிதெனக் கருதுகின்றாய்! அது தவறு.

உன் முயற்சி சிறப்புறுக! இப்போது நீ சென்று வருக!

கருத்து

தலைவியின் இல்லம் மிகுந்த காப்புடையது எனக் கூறுவதன்வழி இரவுக் குறி மறுத்ததோடு, இற்செறிப்பினையும் அறிவுறுத்தித் தோழி தலைவனை வரைவு கடாயினாள்.

விளக்கம்

“நாள்தோறும் உன் துன்பத்தைக் கூறுதற்கு தினைப்புனத்திற்கு வருகின்றவனே! தலைவியைப் பெற்ற தந்தையின் இல்லம், கன்னியர் உறையும் மாங்காட்டில் உள்ள கடுங்காவலைக் கொண்டது. தற்போது நாங்கள் தனித்திருப்பதைக் கண்டு, எங்கள் அருமை உணராது எளிதாய்க் கருதி வருகிறாய். உன் உள்ளம் சிறப்புறுக; இப்போது சென்று வருக” என்று தன் குடிப் பெருமையினை உரைத்து, இரவுக்குறி வாய்த்தல் அரிதாதலின் மணம் வேட்டலே இனிச் செய்தற்குரியது எனத் தோழி கூறினாள்.

சொற்பொருள்

1. சென்மதி - செல்க.
2. நீவிய - பூசிய; பகடு - பெருமை.
3. படுசினை - கிளைகளில் உள்ள.
4. முருகு - அழகு; உருவம் - வடிவம்.
5. எரிதின் - தீயினால் சுட்டெரித்துத் திருத்திய; இறைஞ்சிய - (கதிர்) வளைந்த; ஏனல் - தினைப்புனம்.

6. எவ்வம் - துன்பம்; கூறிய - கூறுவதற்காக; வைகலும் - நாள்தோறும்.
8. எண்மை - எளிமை; நண்ணி - பொருந்தி.
9. கொடியோர் - (வழிப்பறி செய்யும்) கொடியவர்; குறுகும் - நெருங்கியிருக்கும்.
10. இட்டு ஆறு - குறுகிய வழி; இரங்கும் - ஒலிக்கும்; விட்டு ஒளிர் - இடையிட்டு விளங்கும்.
11. வரை - மலை; வெருவரு - அச்சம் தோன்றும்; படாஅர் - சிறு புதர்.
12. கயம் - மென்மை; உயங்கு பசி - வருத்துகின்ற பசி; களைஇயர் - நீக்க.
13. பார்ப்பு - குட்டி; தொடினும் - தோண்டினாலும்.
14. நனிநோய் - மிக்க துன்பம்; ஏய்க்கும் - வந்து பொருந்தும்; பனிகூர் - நடுக்கம் மிக்க (தெய்வமுள்ள).
15. மாங்காடு - ஓர் ஊர்; அற்றே - ஒத்தது; துகள் - குற்றம்.
16. கொந்து - பூங்கொத்து.
17. தீம் - இனிய; கிளவி - சொல்; காப்பு - காவல்.

தோழி கூற்று

அகநானூறு 12 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

பகற்குறி வாராநின்ற தலைமகன் தோழியாற் செறிப்பு அறிவுறுக்கப்பட்டு, 'இரவுக்குறி வாரா வரைவல்' என்றாற்கு அதுவும் மறுத்து வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவி இற்செறிக்கப்பட்டாள்; 'ஆதலால், பகலில் வாராதே' என்றாள், தோழி. அங்ஙனமாயின், 'இரவுக்குறி தருக' என வேண்டினான், தலைவன். தோழி, இரவுக்குறியும் மறுத்துத் தலைவியை மணந்து செல்லுமாறு வற்புறுத்தியது.

யாயே, கண்ணினும் கடுங்கா தலளே;
எந்தையும், நிலன்உறப் பொறாஅன், 'சீறடிசிவப்ப,
எவன்!இல குறுமகள்! இயங்குதி?' என்னும்;
யாமே; பிரிவுஇன்று இயைந்த துவரா நட்பின்,
இருதலைப் புள்ளின் ஓர்உயிர் அம்மே;

ஏனல்அம் காவலர் ஆனாது ஆர்த்தொறும்,
கிளிவிளி பயிற்றும் வெளில்ஆடு பெருஞ்சினை,
விழுக்கோள் பலவின் பழுப்பயன் கொண்மார்,
குறவர் ஊன்றிய குரம்பை புதைய,
வேங்கை தாஅய தேம்பாய் தோற்றம்
புலிசெத்து, வெரீஇய புகர்முக வேழம்,
மழைபடு சிலம்பில் கழைபடப் பெயரும்
நல்வரை நாட! நீவரின்,
மெல்லியல் ஒரும் தான்வா ழலளே.

தெளிவுரை

“தலைவ! என் தாய் தன் கண்ணைவிட இவளை மிகவும் விரும்புபவள்; எம் தந்தையோ, இவள் எங்காவது செல்லப் புறப்பட்டால், ‘இளையவளே! உன் சிறிய அடிகள் சிவக்குமாறு நிலத்திலே கால் பதித்து என்ன செய்யப் புறப்பட்டுவிட்டாய்?’ என்பார். நானும் தலைவியும் நட்பினால், ‘இரண்டு உடல் கொண்டு ஒருயிரைப் பெற்ற பறவைபோல் ஆயினோம்’. (அதனால் நாங்கள் இருவரும் வீட்டை விட்டு வெளியே வர இயலாமல் இருக்கிறோம்.)

“தினைப்புனத்தைக் காவல் புரிவோர் இடைவிடாமல் சத்த மிட்டு அழைக்கும்போதெல்லாம் (அம்மகளிர் குரல் தம் குரல் போல் இருப்பதால்) கிளிகள் தம் இனத்துப் பிற கிளிகளையும் அழைக்கும். அக்கிளிகள் வாழும் பலாமரத்தின் பெரிய கிளைகளில் அணில்களும் விளையாடும். அக்கிளைகளிலுள்ள பலாப்பழங்களைக் கிளி கொத்தியும் அணில் கடித்தும் அழித்து விடாதிருக்க, மரத்திற்கு அருகிலேயே குறவர்கள் குடிசை அமைத்துப் பாதுகாப்பர். ஓங்கி வளர்ந்துள்ள வேங்கை மரத்தின் தேன் ஒழுகும் மலர்கள் அக்குடிசையின் கூரை மறையும்படி வீழ்ந்து அக்குடிசை புலியோ எனக் கருதும்படி தோன்றும்; அதைக் கண்டு அஞ்சி, புள்ளிகள் பொருந்திய முகத்தினைக் கொண்ட யானை, மேகம் தவழ்கின்ற மலையில் மூங்கில்கள் முறிபடப் பாய்ந்து ஓடும். இத்தகைய மலைவழியில் இரவில் தலைவியைச் சந்திக்க வருகிறாய். இவ்வாறு நீ இரவுக்குறி

வருவாயாயின் மெல்லிய தன்மை வாய்ந்த இத்தலைவி உயிர் வாழ மாட்டாள்" எனக் கூறித் தோழி தலைவன் வரவைத் தடுக் கிறாள்.

கருத்து

தலைவி உயிர்விடும் நிலை நேராதிருக்க வேண்டுமாயின், தலைவன் தலைவியை மணந்துகொள்ள வேண்டும்.

விளக்கம்

"தலைவ! தாய் இவளிடம் கண்ணினும் மிக்க விருப்ப முள்ளவள்; அவள் இரவிலும் தூங்காது இவளைப் பேணி வருவதால் நீ இரவில் வர இயலாது என்பதையும்,

தலைவி வெளியே செல்லக் காலடி எடுத்து வைக்கும்போதே, தந்தை, 'எங்கே செல்கிறாய்?' என்று கேட்பதால் அவள் இற்செறிக்கப்பட்டிருக்கிறாள் என்பதையும்,

தலைவியும் நானும் ஈருடலும் ஓர் உயிரும் என்பதால் நீ வரைவொடு வரவேண்டும் என்று தலைவி கருதும் கருத்தே எனது கருத்துமாகும் என்பதையும் கூறி,

தலைவன் உடனே மணம் பேச வரவேண்டும் என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

உள்ளுறை

அஞ்சத் தகாத குடிசையைப் புலியெனக் கருதி அஞ்சிய யானை, தனக்கு உணவாகும் மூங்கில் முறியும்படி பாய்ந்து ஓடியது. இத்தொடரின் வாயிலாய், அச்சம் கொள்ள வேண்டாத தலைவியின் சுற்றத்திற்கு அஞ்சி, மணந்து கொள்ள முயலாது தலைவன் இயங்குவதால் தலைவியும், தோழியும் இறந்துபடும் நிலை உண்டாகியது என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. யாய் - தாய்; கடுங்காதல் - மிக்க விருப்பம்.
2. எந்தை - எம் தந்தை; நிலன்உற - நிலத்தில் பொருந்த; பொறான் - பொறுக்க மாட்டான்; *சீ*றடி - சிறிய அடி.
3. எவன் - எங்கே?; இயங்குதி - செல்கிறாய்.

4. யாமே - நானும் அவளும்; துவரா நட்பு - உவர்ப்பில்லாத (இனிக்கின்ற) நட்பு.
5. இருதலை - இரு தலைகள் கொண்ட (ஓர் உயிர்).
6. ஆனாது - ஓயாது; ஆர்த்தொறும் - ஆர்க்குந்தோறும்.
7. விளி பயிற்றும் - (தம் இனத்தை) விளித்து அழைக்கும்; வெளில் - அணில்.
8. விழுக்கோள் - பெரிய காய்கள்; பழுப்பயன் - பழத்தின் பயன்; கொண்மார் - கொள்ளுதற்கு.
9. ஊன்றிய - நாட்டிய, அமைத்த; குரம்பை - குடிசை; புதைய - மறைய.
10. வேங்கை - வேங்கைப் பூக்கள்; தாஅய - பரவிக் கிடக்கும்.
11. புலி செத்து - புலி என்று கருதி; வெரீஇய - அஞ்சிய; புகர் - புள்ளி.
12. மழை படு - மேகம் பொருந்திய; கழைபட - மூங்கில் முரிய; பெயரும் - ஓடும்.
13. நீ வரின் - நீ இரவில் வந்தால்.
14. மெல் இயல் - மெல்லிய இயல்பு வாய்ந்த தலைவி; வாழலளே - உயிர் வாழ மாட்டாள்.

தோழி கூற்று

அகநானூறு 118 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

செறிப்பறிவுறீஇ, 'இரவும் பகலும் வாரல்' என்று வரைவு கடாஅயது.

கூற்று விளக்கம்

பகற்குறி, இரவுக் குறி ஆகியவற்றை விரும்பி ஒழுகி வந்த தலைவனிடம் தோழி, தலைவி இற்செறிக்கப்பட இருப்பதையும், இனி இக்குறிகள் வாய்க்க வழி இல்லை என்பதையும் தெரிவித்து, உடனே மணம் செய்து கொள்ளத் தூண்டியது.

கறங்குவெள் அருவி பிறங்குமலைக் கவாஅன்,
தேம்கமழ் இணர வேங்கை சூடி,
தொண்டகப் பறைச்சீர் பெண்டிரொடு விரைஇ,
மறுகில் தூங்கும் சிறுகுடிப் பாக்கத்து,

இயல்முருகு ஒப்பினை, வயநாய் பிற்படப்
பகல்வரின் கவ்வை அஞ்சுதும், இகல்கொள,
இரும்பிடி கன்றொடு விரைஇய கயவாய்ப்
பெருங்கை யானைக் கோள்பிழைத்து, இரீஇய
அடுபுலி வழங்கும் ஆர்இருள் நடுநாள்
தனியை வருதல் அதனினும் அஞ்சுதும்;
என்ஆ குவள்கொல் தானே? பல்நாள்
புணர்குறி செய்த புலர்குரல் ஏனல்
கிளிகடி பாடலும் ஒழிந்தனள்,
அளியள் தான்நின் அளிஅலது இலளே!

தெளிவுரை

தலைவ! ஒலிக்கும் வெண்மையான அருவிகள் வீழ்ந்திடும் மலைச்சாரலில், தேன் மணக்கும் வேங்கை மலர்களைச் சூடித் தொண்டகம் என்னும் பறைமுழக்கிற்கேற்ப ஆண்களும் பெண் களும் சேர்ந்து ஆடும் எம் சிறுகுடிப்பாக்கத்தில் உள்ள தெய்வமான முருகனுக்கு ஒப்பானவன், நீ. வலிய வேட்டை நாய்கள் பின்தொடர நீ பகலில் வந்தால், ஊரார் காண நேர்ந்து, உனக்குப் பெரும்பழி ஏற்பட்டுவிடும் என அஞ்சுகிறோம்.

கரிய நிறப் பெண்யானையோடும், கன்றோடும், நீண்ட துதிக்கையினைக் கொண்ட ஆண்யானை, தான் கொல்லப்படு வதிலிருந்து தப்பிச் சென்றுவிட்டதால், கொலைவெறியோடு புலி திரிகின்ற காட்டுவழியில் நீ இரவில் தன்னந்தனியாய் வருவதால் பகலில் அஞ்சுவதைவிட அதிகம் அஞ்சுகிறோம்.

மேலும், பல நாள் பகற்குறியில் சந்திப்பதற்கிருந்த வாய்ப்பும் இனிக் கிட்டாது. தினை முற்றி அறுக்கப்பட்டுவிட்டதால் கிளிகளை விரட்டும்பொருட்டுப் புனங் காவலுக்கும் இனி வர வாய்ப்பில்லை. ஆகவே, தலைவனே! இத்தகைய துன்பங்களால் தலைவி உன்னைச் சந்திக்க இயலாதவாறு இரங்கத்தக்கவளாய் உள்ளாள். உன் அருள் தவிர இனி அவளுக்கு வேறு பற்றுக் கோடு இல்லை. (ஆதலின், நீ விரைவில் மணம் பேசி வருக!)

கருத்து

தலைவ! நீ பகலில் வந்தால் அலர் பெருகும். இரவில் நீ வரும் வழியை நினைத்தால் அச்சம் பெருகும்; தினைப்புனங்காவலும் இனி இல்லை. இனித் தலைவியும் நீயும் கூடுதற்குத் திருமணம் ஒன்றே வழி!

விளக்கம்

பகலில் வருவாயானால் பலரும் பார்த்து அலர் கூறும் நிலை உண்டாகும் என அஞ்சுகிறோம். தப்பியோடிவிட்ட யானை களைக் கொல்லப் புலி திரியும் காட்டுவழியில் இரவில் நீ தனியே வருவதை நினைத்தால் பகலைவிட மிகுதியாய் அஞ்சுகிறோம். முற்றிய தினை முழுவதும் அறுக்கப்பட்டு விட்டதால் இனிப் புனங்காவலும் இராது. எனவே, தலைவியின் நிலை இரங்கத் தக்கதாகிவிட்டது. அவளைத் திருமணம் செய்து அழைத்துச் செல்லுதலே, நீ அவளுக்குக் காட்டும் அருளாகும்.

குறிப்பு

பகலில் அலர் அஞ்சுதும் என்றதனால் பகற்குறி விலக்கினாள். இரவில் வழி நினைந்து அஞ்சுதும் என்றதால் இரவுக்குறி விலக்கினாள். தினைப் புனங்காவல் இல்லை என்றதால் இற்செறிப்பை அறிவுறுத்தினாள்; ஆதலின், மணம் செய்துகொள்வது ஒன்றே வழி என வலியுறுத்தினாள்.

சொற்பொருள்

1. கறங்கு - ஒலிக்கும்; பிறங்கும் - விளங்கும்; கவாஅன் - சாரல்.
2. இணர் - பூங்கொத்து; வேங்கை - வேங்கைப்பூ.
3. தொண்டகம் - தொண்டகம் என்னும் பறை; விரைஇ - கலந்து.
4. மறுகு - தெரு; தூங்கும் - ஆடும்.
5. இயல் முருகு - இயங்கும் முருகன்; வயநாய் - வலிமை வாய்ந்த நாய்.
6. கவ்வை - பழிச்சொல்; இகல்கொள - பகைமை பொருந்த.
7. இரும்பிடி - கரிய நிறப் பெண்யானை; விரைஇ - சேர்ந்து; கயவாய் - அகன்ற வாய்.
8. கோள் - கொல்லப்படுவதிலிருந்து; பிழைத்து - தப்பி; இரீஇய - சென்றுவிட.
9. அடுபுலி - கொல்லும் புலி; வழங்கும் - திரியும்; ஆர் இருள் - அரிய இருள்; நடு நாள் - நள்ளிரவு.
10. தனியை - தனியாய்.

11. பல்நாள் - பல நாள்.
12. புணர்குறி செய்த - புணரும் பகற்குறியாய்க் கொண்ட; புலர் குரல் - முற்றிய கதிர்; ஏனல் - தினைப்புனம்.
13. கடி - ஓட்டும்; பாடலும் - பாடும் பாடலும்; ஒழிந்தனள் - நீங்கினள்.
14. நின் அளிஅலது இலளே - நின் அருளையன்றிப் பிறிதொரு பற்றுக் கோடும் இல்லாதவள் (ஆகிய தலைவி); அளியள் - இரங்கத்தக்கவள்.

தோழி கூற்று

நற்றிணை 222 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி தலைமகன் வரவுணர்ந்து சிறைப்புறமாகச் செறிப்பு அறிவுறீஇ வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தின்போது ஒரு நாள் தலைவியைக் கண்டு அளவளாவுதற்காகத் தலைவன் ஒரு புறம் வந்து நின்றான். அப்போது தோழி, தலைவி இற்செறிக்கப்பட்டதை அவனுக்கு உணர்த்துவாளாய், தலைவியிடம் கூறியது.

கருங்கால் வேங்கைச் செவ்வீ வாங்குசினை
வடுக்கொளப் பிணித்த விடுபுரி முரற்சிக்
கைபுனை சிறுநெறி வாங்கிப் பையென,
விசும்புஆடு ஆய்மயில் கடுப்ப, யான்இன்று,
பசுங்காழ் அல்குல் பற்றுவனென் ஊக்கிச்
செலவுடன் விடுகோ தோழி! பலவுடன்
வாழை ஓங்கிய வழைஅமை சிலம்பில்,
துஞ்சுபிடி மருங்கின் மஞ்சுபடக் காணாது
பெருங்களிறு பிளிறும் சோலைஅவர்
சேண்நெடுங் குன்றம் காணிய நீயே.

தெளிவுரை

"*தலைவி! பலா மரங்களுடன் வளர்ந்துள்ள மலைவாழையும் உயரமான சுரபுன்னையும் பொருந்தியுள்ள மலைச்சாரலில்*

உறங்குகின்ற பெண்யானைக்கு அருகே வந்த ஒரு மேகக்கூட்டம் அதனை மறைத்துவிட்டது. அதனால், தன் பெண்யானையைக் காணாமல் பெரிய களிறு பிளிறி அதனை அழைத்தது.

இத்தகைய சோலைகளைக் கொண்டது, நம் தலைவனுடைய உயர்ந்த மலை. தொலைவிலுள்ள அம்மலையை நீ காண வேண்டும். நம் மனை முன்றிலில் கரிய அடிமரப்பகுதியைக் கொண்ட வேங்கை மரத்தின் சிவந்த மலர்களைக் கொண்ட கிளைகளில் தழும்பு ஏற்படும்படியாகப் புரி முறுக்குற்ற கயிற்றூசல் கட்டப்பட்டிருக்கிறது. இந்த ஊசலில் நீ அமரும் போது நான் மெல்ல இழுத்து ஆட்டுவேன். உன் அடிவயிற்றின் மேல் கிடக்கும் பசும்பொன் கோத்துள்ள மேகலையினைப் பற்றி ஆட்டும்போது நீ ஆகாயத்தில் மிதக்கும் அழகிய மயில்போல விளங்குவாய்.

"இவ்வாறு நீ ஊஞ்சலில் மேலே செல்லும்போது, உன் கவலை தணியுமாறு தலைவனின் உயர்ந்த மலையைக் காண்பாய்" என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

"மனையிடத்தே காவற்படுத்தியதனாலே தலைவனைக் காணவும் இயலாமையால் வருந்தும் நீ, அவன் குன்றத்தை நோக்கியேனும் சற்று ஆறுதல் கொள்ளுமாறு மனை முன்றிலில் உள்ள வேங்கையிலே தொடுத்த ஊசலில் உன்னை வைத்து ஆட்டட்டுமா?" என்று தோழி தலைவியிடம் கேட்கிறாள்.

குறிப்பு

தலைவனைக் காண இயலாதவாறு தலைவி இற்செறிக்கப்பட்டிருப்பதை யும், தலைவனின் மலையைக் காண்பதால் அவள் துயரம் குறைவதையும் கூறித் தலைவி துயரின்றி இருக்கத் தலைவன் திருமண முயற்சியில் ஈடுபட வேண்டும் என்பதைச் சுட்டினாள், தோழி.

மேகத்தால் மறைக்கப்பட்ட பிடியைக் காணாமல் களிறு பிளிறிய காட்சி, தலைவியைக் குறியிடத்திலே காணாமல் தலைவன் வருந்தும் நிலையைக் குறிப்பால் சுட்டியதாம்.

சொற்பொருள்

1. செவ்வீ - சிவந்த மலர்; வாங்குசினை - வளைந்த கிளை.

2. வடுக்கொள - தழும்புபட; பிணித்த - கட்டிய; விடுபுரி முரற்சி - புரிகள் முறுக்குற்று அமைந்த கயிறு.
3. 'கைபுனை சிறு நெறி' என்றது, அக்கயிற்றில் அமர்ந்து ஆடுதற்கு ஏற்றபடியாய் கையால் அழகாய்ப் புனையப்பெற்ற சிறிய வளைவான பகுதி; அவ்வூஞ்சலில் நீ ஏறி அமர, பையென - மெதுவாய்.
4. கடுப்ப - போன்று.
5. பசுங்காழ் அல்குல் பற்றுவனென் ஊக்கி - பசும்பொன் மணிகள் கோத்துள்ள மேகலையைப் பற்றியவளாய் இழுத்து எழுப்பி.
6. செலவுடன் விடுகோ - செல்லும்படியாய் விடட்டுமா?
7. வழை - சுரபுன்னை.
8. துஞ்சு பிடி - உறங்குகின்ற பெண்யானை; மஞ்சுபட - மேகம் மறைக்க; மருங்கின் காணாது - அருகே காணாது.
9. களிறு - ஆண்யானை.
10. சேண் நெடுங்குன்றம் - நெடுந்தொலைவில் உள்ள உயர்ந்த மலை.

தோழி கூற்று

நற்றிணை 282 **நல்லூர் சிறுமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

சிறைப்புறமாகத் தோழி செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

களவொழுக்கம் மேற்கொண்டிருந்த தலைவன் மறைவாய் ஓரிடத்தில் நிற்பதையறிந்த தோழி, தலைவி வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருப்பதைத் தெரிவித்து, உடனே வரைந்துகொள்ளுமாறு கூறியது.

தோடுஅமை செறிப்பின் இலங்குவளை ஞெகிழ,
கோடுஏந்து அல்குல் அவ்வரி வாட,
நல்நுதல் சாய, படர்மலி அருநோய்
காதலன் தந்தமை அறியாது, உணர்த்த,
அணங்குறு கழங்கின் முதுவாய் வேலன்
கிளவியில் தணியின், நன்றுமன் சாரல்
அகில்சுடு கானவன் உவல்சுடு கமழ்புகை,

ஆடுமழை மங்குலின், மறைக்கும்
நாடுகெழு வெற்பனொடு அமைந்தநம் தொடர்பே!

தெளிவுரை

தலைவியே! தொகுதியாய் அமைத்துச் செறிக்கப்பட்டிருக்கும் வளையல்கள் நெகிழ்ந்தன; பக்கம் உயர்ந்த அல்குலின் அழகிய வரிகள் சோர்ந்து போயின; நல்ல நெற்றியில் பசலையும் பாய்ந்தது. துன்பம் நிறைந்த, நீக்குதற்கரிய இந்நோய் நம் காதலன் தந்ததால் ஏற்பட்டது என்பதை அறியாத நம் அன்னை, 'தெய்வக் குற்றம்' என்று கருதிப் படிமத்தானுக்கு அறிவித்தாள். பேரறிவு கொண்ட வேலன், முருகனை வழிபட்டுக் கழற்சிக்காய்களைக் கொண்டு ஆராய்ந்து கூறும் சொற்களால் நோய் தணிவதாயின் நல்லது. அவ்வாறு வெறியும் எடுக்கப்படாமலும் வீட்டை விட்டு வெளியே செல்ல விடாமல் தடுக்கப்பட்டுமுள்ளோம்.

மலைச்சாரலில் அகிலைத் தீயிட்டுக் கொளுத்தும் கானவன், சருகுகளில் இடும் தீயினால் உண்டாகும் நறுமணம் கமழும் புகை, வானில் இயங்கும் மேகம்போல் மறைக்கும் காட்சி கொண்ட நாட்டிற்குரியவன், நம் தலைவன். நாம் இற்செறிக்கப்பட்டுள்ள தால் அத்தலைவனுடன் நாம் கொண்ட தொடர்பு கழிந்து விடுமோ?

கருத்து

தலைவ! தலைவி இற்செறிக்கப்பட்டுள்ளாள். உடனே வரைந்தெய்தா விடின் தொடர்பே கழிந்துவிடும்.

விளக்கம்

"தலைவிக்கு நோய் காதலனால் ஏற்பட்டது. அதை அறியாமல் வேலனை அழைத்து வெறியாட்டு நிகழ்த்த எண்ணிய அன்னை, அதைச் செய்யாது தலைவியை வீட்டுக் காவலில் வைத்துள்ளாள். இதனால் தலைவன் தலைவியின் தொடர்பு கழிந்து விடுமோ?" எனக் கூறி, தலைவியை உடனே வரைந் தெய்துமாறு தலைவன் கேட்குமாறு தோழி கூறினாள்.

இறைச்சி

கானவன் சுடுபுகை, மேகம்போலத் தோன்றி வானத்தை மறைக்கும் என்னும் தொடர்மூலம், தலைவனுக்கு அவன் அறிவு,

களவுப் புணர்ச்சியே சிறந்ததென்று காட்டி மயக்குகின்றது என்னும் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. தோடு - தொகுதி: செறிப்பின் - செறிந்திருக்குமாறு செய்தல்; இலங்குதல் - விளங்குதல்; வளை - வளையல்; ஞெகிழ - நெகிழ.
2. கோடு - பக்கம்; ஏந்து - உயர்ந்த; அ வரி - அழகிய வரிகள்; வாட - சோர்ந்துவிட.
3. சாய - பசலை படர; படர் மலி - துன்பம் நிறைந்த; அருநோய் - தீர்த்தற்கரிய காமநோய்.
4. உணர்த்த - படிமத்தானுக்குத் தெரிவிக்க.
5. கழங்கு - கழற்சிக்காய்; முதுவாய் - அறிவு வாய்ந்த; வேலன் - வெறியாடுவோன்.
6. கிளவியின் - (வேலனின்) சொற்களால்; தணியின் - தணிவதாயின்.
7. உவல் - சருகு.
8. ஆடு மழை மங்குல் - இயங்கும் மழைமேகம் (மங்குல் - மேகம்).
9. வெற்பன் - குறிஞ்சிநிலத்தலைவன்.

தோழி கூற்று

குறுந்தொகை 324 **கவைமகனார்**

திணை : நெய்தல்

கூற்று

செறிப்பு அறிவுறுக்கப்பட்டு, 'இரா வாரா வரைவல்' என்றாற்குத் தோழி அது மறுத்து வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவி இற்செறிக்கப்படுவாள் என்று சொன்ன தோழியிடம் தலைவன், 'இரவு நேரத்தில் அவள் வீட்டருகே வந்து சந்திப்பேன்' என்றான். அதனைக் கேட்ட தோழி, இரவில் வர வேண்டா என மறுத்து, தலைவியை மணக்குமாறு கூறியது.

கொடுந்தாள் முதலைக் கோள்வல் ஏற்றை
வழிவழக்கு அறுக்கும் கானல்அம் பெருந்துறை,
இனமீன் இருங்கழி நீந்தி, நீநின்

நயன்உடை மையின் வருதி; இவள்தன்
மடன்உடை மையின் உயங்கும்; யான்அது,
கவைமக நஞ்சுஉண் டாஅங்கு,
அஞ்சுவல் பெரும!என் நெஞ்சத் தானே.

தெளிவுரை

பெருமானே! வளைந்த கால்களைக் கொண்ட கொல்லுதலில் வல்ல ஆண்முதலை நீரில் செல்வாரை அவ்வழிச் செல்லாது தடுக்கும். அத்தகைய சோலைகளைக் கொண்ட பெரிய கடல் துறையில், திரளான மீன்கள் நிறைந்த கரிய கழியில் நீயோ தலைவி மீது கொண்டுள்ள அன்பால் இரவு நேரத்தில் நீந்திக் கடந்து வருகிறாய். இவளோ உன் வலிமையை உணராத தன்மையால் (நீ வரும் வழியின் துன்பத்தை நினைந்து) நீ வருவது குறித்து அஞ்சுகிறாள். நானோ உங்கள் இருவர்க்குமிடையே, தன் இரட்டைப்பிள்ளைகள் நஞ்சுண்டால் இருவர்க்காகவும் வருந்தும் தாய்போல என் மனத்தினுள்ளே அஞ்சுகின்றேன்.

கருத்து

தலைவ! இரவில் வாராதே; தலைவியை மணப்பதற்கு முயல்க.

விளக்கம்

வழித்துன்பம் கருதாது நீ இரவில் வருவதால் தலைவி வருத்தம் கொள்கிறாள். அளவற்ற அன்புடன் வரும் உன்னைத் தடுப்பதால் நீ வருத்தம் கொள்கிறாய். இதனால் இரட்டைப் பிள்ளைகள் நஞ்சுண்டால் இருவர்க்காகவும் ஒரே நேரத்தில் வருந்தும் தாயைப் போல நான் வருத்தம் கொள்கிறேன்.

குறிப்பு

தாய் தன் இரு மகவுக்கும் ஒரே வேளையில் நஞ்சு தீர்க்க மருந்து தருவாள். இத்தொடர்மூலம், தலைவன், தலைவி ஆகிய இருவர்க்கும் நன்மை தருவது திருமணமே ஆகும் என்னும் வரைவுகடாயதற் பொருளும் பெறப்படுகிறது.

சிறப்புக் குறிப்பு

இப்பாடலை இயற்றியவரின் இயற்பெயர் அறிய இயலவில்லை. 'கவைமக நஞ்சுண் டாஅங்கு' எனும் உவமையை இவர் பயன்படுத்திய சிறப்பால் இவர் 'கவைமகன்' என்று வழங்கப்பட்டுள்ளார்.

சொற்பொருள்

1. கொடும்தாள் - வளைந்த கால்; கோள் வல் - கொல்லுதலில் வல்ல; ஏற்றை - ஆண்முதலை.
2. வழி வழக்கு - வழியில் பிறர் செல்வதை; அறுக்கும் - தடுக்கும்.
3. இனமீன் - கூட்டமான மீன்கள் (நிறைந்த); இருங்கழி - பெரிய கழி.
4. நயன் உடைமையின் - அன்பு காரணமாய்; வருதி - வருகின்றாய்.
5. மடன் உடைமையின் - அறியாமை காரணமாய்; உயங்கும் - வருந்து வாள்.
6. கவை மகவு - இரட்டைப்பிள்ளைகள்.
7. அஞ்சுவல் - அஞ்சுவேன்.

தோழி கூற்று

நற்றிணை 288 **குளம்பனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி சிறைப்புறமாகத் தலைமகட்கு உரைப்பாளாய் வெறியறிவுறீஇ வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவியின் உடலில் ஏற்பட்ட பசலை நோயைக் கண்ட அன்னை, அது முருகக்கடவுளால் ஏற்பட்டது என்று கருதி வேலன் வெறியாடலுக்கு ஏற்பாடு செய்கிறாள். அதனையறிந்த தோழி, தலைவன் சிறைப்புறத்தானாக, அவன் செவியுறுமாறு தலைவியை நோக்கிக் கூறியது.

அருவி ஆர்க்கும் அணங்குடை நெடுங்கோட்டு
ஞாங்கர், இளவெயில் உணீஇய, ஓங்குசினைப்
பீலி மஞ்ஞை பெடையோடு ஆலும்
குன்ற நாடன் பிரிவின் சென்று,
நல்நுதல் பரந்த பசலைகண்டு, அன்னை
செம்முது பெண்டிரொடு நெல்முன் நிறீஇக்
கட்டின் கேட்கும் ஆயின், வெற்பில்
ஏனற் செந்தினைப் பால்ஆர் கொழுங்குரல்
சிறுகிளி கடிகம் சென்றும்,இந்
நெடுவேள் அணங்கின்று என்னும்கொல் அதுவே?

தெளிவுரை

அருவிகள் ஆரவாரித்து வீழ்கின்ற, அச்சம் தரும் ஓங்கிய உச்சிகளைக் கொண்ட மலைப்பக்கத்தே உயரமான மரக்கிளையில் தோகை கொண்ட ஆண்மயில் தன் பெடையோடும் கூடி இனிதிருந்து இளவெயிலில் காய்ந்தபடியே ஆடிக்கொண்டிருக்கும். இத்தகைய காட்சி கொண்ட மலைநாட்டிற்கு உரியவன், நம் தலைவன். அவன் உன்னைப் பிரிதலினாலே நம் நல்ல நெற்றியில் பசலை படர்ந்தது. அப்பசலையை நோக்கிய அன்னை, செம்மையான முதிய பெண்டிரோடு முற்றத்திலே நெல்லைப் பரப்பி, கட்டு வைத்து, குறி கேட்டாள். அவ்வாறு கேட்கும்போது அக்கட்டுக்குறி, மலையிலுள்ள தினைப்புனத்தில் கொழுவிய கதிர்களைக் கொய்து போகும் கிளிகளை விரட்டுவதற்காக நாம் சென்றிருந்த வேளையில் நெடிய முருகவேள் அணங்கியதால் உண்டாயிற்று என்று கூறுமோ? அவ்வாறு கூறினால் நாம் என்ன செய்ய இயலும்?

கருத்து

தலைவியின் மேனி வேறுபாடு கண்டு அன்னை வெறியாடலுக்கு ஏற்பாடு செய்வாள். அதன் முன்னர்த் தலைவன் விரைய வந்து மணத்தலே செய்யத் தக்கது.

விளக்கம்

தலைவியின் மேனி மெலிவது கண்டு அன்னை கட்டுக்குறி காணக் கருதும்போது முருகு அணங்கிற்று என்று கட்டுக் கூறுமாயின், அது தலைவியின் கற்புணர்வுக்கு ஏதம் பயக்குமென்பதால், அதற்கிடமின்றித் தலைவன் தலைவியை உடனே மணந்துகொள்ள வேண்டுமென்கிறாள், தோழி.

குறிப்பு

மயில் தன் பெடையொடும் சென்று விளையாடிக்கொண்டிருக்கும் என்றது, தலைவன் தலைவியை மணந்து இன்புறுதல் வேண்டும் என்பதைக் குறித்ததாம்!

சொற்பொருள்

1. ஆர்க்கும் - ஒலிக்கும்; அணங்கு - அச்சம்; நெடுங்கோடு - உயர்ந்த உச்சி.

2. ஞாங்கர் - பக்கத்தில்; இளவெயில் - காலை வெயில்; உணீஇய - காய்ந்தபடி; ஓங்குசினை - உயர்ந்த கிளை.
3. பீலி மஞ்ஞை - தோகையைக் கொண்ட ஆண்மயில்; பெடையோடு - பெண்மயிலோடு; ஆலும் - ஆடும்.
4. பிரிவின் சென்று - அவனைப் பிரிந்து சென்று; பசலை - பசலை படர்ந்திருப்பதைக் கண்டு; அன்னை - தாய்.
6. செம்முதுபெண்டிரொடு - செம்மையான முதிய பெண்களுடன்; நெல் முன் நிறீஇ - முற்றத்திலே நெல்லைப் பரப்பி (அதன்முன் நம்மை நிறுத்தி).
7. கட்டின் கேட்குமாயின் - கட்டு வைத்துக் குறி கேட்டால்; வெற்பில் - மலையில்.
8. ஏனல் - தினைப்புனத்தில்; செந்தினை - சிவந்த தினை; பால்ஆர் - பால் நிறைந்த; கொழுங்குரல் - கொழுவிய கதிரில்.
9. சிறுகிளி கடிகம் - (பாயும்) சிறுகிளிகளை ஓட்ட; சென்றும் - சென்றிருந்தோம்.
10. நெடுவேள் அணங்கின்று - நெடிய முருகவேள் வருத்திற்று; என்னும் கொல் - என்று சொல்வாளோ?

தோழி கூற்று

ஐங்குறுநூறு 245 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாக வெறியறிவுறீஇத் தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவியின் மனைக்குப் பக்கத்தே தலைவன் மறைவாய் நிற்கிறான். தோழி, தலைவிக்கு வெறியெடுக்கவிருப்பதை அறிவித்து, அவளை உடனே திருமணம் செய்துகொள்ளுமாறு தலைவனிடம் வற்புறுத்திக் கூறியது.

பொய்யா மரபின் ஊர்முது வேலன்
கழங்குமெய்ப் படுத்துக் கன்னம் தூக்கி,
முருகென மொழியும் ஆயின்,
கெழுதகை கொல்இவள் அணங்கி யோற்கே?

தெளிவுரை

நம் ஊரிலுள்ள முதியவனான வேலன், தான் வெறியாடிச் சொல்வது பொய்யன்று, மெய்யே என நம்பவைக்கும் வழக்கத் தினைக் கொண்டவன். அவன் கழங்கு போட்டுப் பார்த்து, அதன் மேல் தெய்வம் வரச்செய்து, பிறகு அக்கழற்காய்க்குக் 'கன்னம்' என்னும் தாயத்தை அணிவித்து வெறியாடி, இவளை வருத்தி யவன் முருகன் என்று சொல்லுவான். அவன் தலைவியை வருத்தி யவன் முருகன் என்று சொல்வான் என்றால், அது தலைவியை மெலியச் செய்துள்ள தலைவனுக்கன்றோ பொருந்தும்?

கருத்து

இவளை வருத்தியவன் முருகனன்று; தலைவனே! ஆனால், வேலன் முருகன் என்றே சொல்வான்.

விளக்கம்

தலைவியின் வேறுபாடு கண்டு செவிலி, இது தெய்வத் தானாயது என்று துணிந்து, வேலனை அழைத்து வெறியாடு விக்க முயல்வாள். வேலன் சொன்ன முருகன் தலைவனாய்த்தான் இருக்க வேண்டும் எனச் சொல்லித் தோழி வெறியை விலக்க வேண்டியிருக்கும்.

குறிப்பு

முருகன்தான் காரணம் என்று வேலன் சொல்லிவிட்டால் அது தலைவனுக்குப் பழியையும், தலைவிக்குத் துயரத்தையும் தருமாதலால் வெறியாட்டு நிகழுமுன் தலைவன் வரைந்துகொள்ள வேண்டும் என்று தோழி வற்புறுத்துகிறாள்.

சொற்பொருள்

1. பொய்யா மரபின் - பொய் கூறாத முறைமையினைக் கொண்ட; ஊர்முது - ஊரில் உள்ள முதியவன்.
2. கழங்கு மெய்ப்படுத்து - கழங்குகளாலே ஆராய்ந்து உண்மையினை வெளிப்படுத்த; கன்னம் - தாயத்து; தூக்கி - கையில் தூக்கிக்கொண்டு.
3. முருகு - தலைவியை வருத்தியவன் முருகக்கடவுள்.
4. இவள் கெழுதகை கொல்! - (வேலன் கூற்று) இவளுக்கு உரியது ஆகுமோ?

தோழி கூற்று

நற்றிணை 385 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : நெய்தல்

கூற்று

(இப்பாட்டின் ஆசிரியர் பெயர் முதலிய விவரங்களுள் எதுவும் இந்நாள் வரையிலும் கிட்டவில்லை. பாடலின் ஏழு அடிகள் மட்டுமே எல்லாப் பதிப்புகளிலும் காணப்பெறுகின்றன.)

கூற்று விளக்கம்

தலைவியை வரைந்துகொள்ளுதல் குறித்து எதிர்நோக்கி இருந்த தோழி, தலைவன் சான்றோருடனின்றித் தனி ஒருவனாய் வருதலைக் கண்டு கூறியதாய்க் கொள்ளப்படுகிறது.

எல்லை சென்றபின், மலரும் கூம்பின;
புலவுநீர் அடைகரை யாமைப் பார்ப்போடு
அலவனும் அளைவயிற் செறிந்தன,கொடுங்கழி;
இரைநசை வருத்தம் வீட, மரமிசைப்
புள்ளும் பிள்ளையொடு வதிந்தன, அதனால்
பொழுதன்று ஆதலின், தமியை வருதி;
எழுதுஎழில் மழைக்கண்.....

தெளிவுரை

தலைவ! சூரியன் மேற்கு நோக்கிச் சென்று மறைந்தனன். மலர்கள் கூம்பி மாலைப்பொழுது வந்துற்றது. புலவு நாற்றத்தைக் கொண்ட கரையில் யாமையின் பார்ப்புகளோடு நண்டுகளும் தத்தம் இருப்பிடங்களை நாடி ஒடுங்கின. கழியிடத்தே சென்று இரை தேடிய வருத்தம் நீங்கி, நாரைகளும் மரத்தின்மீதுள்ள கூடுகளைச் சேர்ந்து தம் குஞ்சுகளோடு தங்கின. ஆதலால், நீ வரக்கூடிய பொழுது இஃது அன்று. மேலும், தனி ஒருவனாகவே வந்துள்ளாய். ஆதலால், ஓவியத்தைப் போலும் எழில் மேவும் குளிர்ச்சி பொருந்திய கண்களைக் கொண்ட இவள்...

கருத்து

களவொழுக்கத்தையே விரும்பித் தனியனாய் வந்துகொண்டிருக்கும் தலைவ! தலைவியை மணம் பேசச் சான்றோருடன் வருக.

விளக்கம்

'பகற்போது சென்ற பின் மலர் கூம்பினதுபோல' என்றது, இவளும் நீ அருளிச்செய்து அகன்ற பின்னர் வாட்டமடைவாள் என்பதாம்.

'யாமைப் பார்ப்பும் நண்டும் தத்தம் இடங்களில் ஒடுங்கின', என்றது, பிறர் வரவஞ்சி அவை ஒடுங்கினது போல அலர் உரைப்பார் பேச்சுக்கு அஞ்சித் தலைவியும் வீட்டினுள் ஒடுங்கினள் என்பதாம்.

'புள்ளும் பிள்ளையொடு வதிந்தன' என்றது, தலைவனும் தலைவியை மணந்து, இல்லறமாற்றி, புதல்வனை அவள் பெற்றுத் தர, மாலை வேளையில் அவளுடன் இல்லிலிருந்து மகிழும் கடப்பாடுள்ளவன் என்பதாம்.

சொற்பொருள்

1. எல்லை - பகற்பொழுது; கூம்பின - சுருங்கின.
2. புலவு நீர் - புலால் நாற்றம் கொண்ட நீர்; அடைகரை - அடையாய் உள்ள கரைப்பகுதி; யாமை - ஆமை; பார்ப்பு - குஞ்சு.
3. அலவன் - நண்டு; அளை - வளை; கொடுங்கழி - வளைவான உப்பங்கழி.
4. நசை - விருப்பம்; வீட - ஒய; மரமிசை - மரத்தின்மீது.
5. புள் - பறவை; பிள்ளை - குஞ்சு; வதிந்தன - தங்கின.
6. பொழுதன்று - உரிய பொழுது அன்று; தமியை - தனி ஒருவனாய்.
7. எழுது எழில் - எழுதிய ஓவியத்தைப் போலும் அழகுள்ள.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 52 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகனைத் தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவியை மணந்துகொள்ளுமாறு தோழி தலைவனை வற்புறுத்தியது.

திரைபாகன் ஆகத் திமில்களி(று) ஆகக்
கரைசேர்ந்த கானல் படையா – விரையாது
வேந்து கிளர்ந்தன்ன வேலைநீர்ச் சேர்ப்ப!நாள்
ஆய்ந்து வரைதல் அறம்.

தெளிவுரை

"அலைகளை யானைப்பாகனாகவும், தோணிகளை ஆண் யானைகளாகவும், கடலோரச் சோலைகளைப் படைகளாகவும் கொண்டு, மன்னன் ஒருவன் போருக்குப் புறப்பட்டது போன்று காணப்படும் கடல்நீரைக் கொண்ட துறைமுகத்திற்குத் தலைவ! (களவுப் புணர்ச்சியில் மட்டுமே மிக்க விருப்பம் கொள்ளாது) நல்ல நாள் ஒன்றனை ஆராய்ந்து, இவளை மணந்துகொள்ளுதலே அறம்" எனத் தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

நல் நாட! நல்ல நாள் ஒன்றனைத் தேர்ந்து, தலைவியைத் திருமணம் செய்துகொள்வதே அறம். (நாள் ஆய்ந்து வரைதல் அறம்.)

சொற்பொருள்

1. திரை - அலை; பாகன் - யானைப்பாகன்; திமில் - தோணி; களிறு - ஆண்யானை.
2. கானல் - கடலோரச்சோலை; விரையாது - களவுப்புணர்ச்சியில் மிகுந்த விருப்பம் கொண்டு செல்லாது.
3. வேந்து - அரசன்; கிளர்ந்தன்ன - போருக்குப் புறப்பட்டது போன்ற; வேலை - கடல்.

3-4. நாள் ஆய்ந்து - நல்லநாள் ஒன்றனைத் தேர்ந்தெடுத்து; வரைதல் - திருமணம் செய்துகொள்ளுதல்; அறம் - அறச்செயலாகும்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 53 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகனைத் தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவியை விரைவில் மணந்துகொள்ளுமாறு தோழி தலைவனிடம் கூறியது.

பாறு புரவியாப் பல்களிறு நீள்திமிலாத்
தேறு திரைபறையாப் புள்படையாத் – தேறாத
மன்கிளர்ந்த போலும் கடற்சேர்ப்ப! மற்றெமர்
முன்கிளர்ந்(து) எய்தல் முடி.

தெளிவுரை

"மீனைக் கவரும் பருந்துகளைக் குதிரைகளாகவும், பெரிய தோணிகளைப் பல யானைகளாகவும், தெளிவான அலைகளைப் பறை முழக்கமாகவும், கடல்பறவைகள் படையாகவும் கொண்டு, அமைதியின் அருமை அறியாத மன்னர்கள் படையெடுத்துப் புறப்பட்டதைப் போன்று காணப்படும் கடல்துறைக்குரியவனே! எம் சுற்றத்தார் முன்பு சென்று, மணச்சடங்கின்படி இவளை மணம் முடித்துக்கொள்" என்று தோழி தலைவனிடம் சொன்னாள்.

கருத்து

தலைவ! எம் சுற்றத்தாரிடம் மகட்கேட்டு வந்து, மணச்சடங்கின்படி தலைவியை மணந்துகொள்.

விளக்கம்

மீனைக் கௌவும் பருந்துகள், குதிரைகள்; நீரில் மிதக்கும் தோணிகள், யானைகள்; கடல்அலைகள், போர்ப்பறைகள்; பறக்கும் கடல்பறவைகள், படைகள் எனக் கடலும் கடலைச் சார்ந்திருப்பனவும் படைகளாய்க் கூறப்பட்டுள்ளன.

சொற்பொருள்

1. பாறு - பருந்து; புரவியா - குதிரையாய்; களிறு - யானை; திமிலா - படகாய்.
2. தேறு - தெளிவான; திரை - அலை; பறையா - பறையாய்; புள் - பறவை; படையா - சேனையாய்; தேறாத - அமைதியின் அருமை அறியாத.
3. மன் - அரசர்கள்; கிளர்ந்த போலும் - படையெடுத்துப் புறப்பட்டது போலும்; எமர் - எம் உறவினர்.
4. கிளர்ந்து - சென்று; எய்தல் - மணச்சடங்கின்படி இவளைப் பெறுதல்; முடி - செய்து முடி.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 54 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகனைத் தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

களவில் தலைவியோடு உறவாடிவிட்டு வரும் தலைவனை நோக்கித் தலைவியை உடனே மணம் புரிந்துகொள்ளுமாறு தோழி வற்புறுத்துதல்.

வாராய் வரின்நீர்க் கழிக்கானல் நுண்மணல்மேல்
தேரின்மா கால்ஆழும் தீமைத்தே – ஓர்இலோர்
கோள்நாடல் வேண்டா குறியறிவார்க் கூஉய்க் கொண்(டு)ஓர்
நாள்நாடி நல்குதல் நன்று.

தெளிவுரை

"தலைவ! தலைவியைக் காண இனி நீ இரவில் வாராதே! நீ வந்தால், நீர் நிறைந்த உப்பங்கழியுடன் கூடிய சோலையில் உள்ள நுண்ணிய மணலில் உன் தேரில் பூட்டப்பட்டுள்ள குதிரைகளின் காற்குளம்புகள் புதைந்து, நீ வந்து சென்றதை வெளிப்படுத்தி விடும் தீமையுண்டு. நீயும் தலைவியும் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள். எனவே, மணப்பொருத்தம் முதலியன உண்டா

எனப் பார்க்க வேண்டியதில்லை. நிமித்தம் அறியும் வல்லவரை அழைத்து, ஒரு நல்ல நாளை முடிவு செய்து இவளை நீ திருமணம் செய்துகொள்வதே நல்லது" எனத் தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

தலைவ! நல்ல நாள் பார்க்கும் வல்லவரை அழைத்து, உரிய நாளை முடிவு செய்து, தலைவியை மணந்துகொள்வதே நல்லது.

குறிப்பு

ஒரே குலத்தவரிடையே திருமணம் நிகழும்பொழுது நாள், கோள் அறிய வேண்டியதில்லை. குறியறிவார், நல்ல நாளைக் குறித்துத் தர, அந்நாளில் திருமணம் நடைபெற்று வந்தது என்னும் குறிப்பு இப்பாடல்வழி கிட்டுகிறது.

சொற்பொருள்

1. வாராய் - (இரவில்) வாராதே.
2. மா - குதிரை; கால் ஆழும் - காற்குளம்புகள் புதைந்து; ஓர் இலோர் - ஒத்த குலத்தவர்.
3. கோள்நாடல் வேண்டா - பொருத்தம் பார்க்க வேண்டா; குறியறிவார் - நிமித்தம் அறியும் கணியரை; கூஉய் - அழைத்து; நாள் நாடி - நல்ல நாள் அறிந்து; நல்குதல் - (நீ இவளுக்கு) நன்மை புரிதல்.

தோழி கூற்று

அகநானூறு 132 **தாயங்கண்ணனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி தலைமகளை இடத்துய்த்து வந்து தலைமகனை எதிர்ப்பட்டு வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

சந்திக்கும் குறியிடத்திலே தலைவியைக் கொண்டுவந்து சேர்த்த தோழி, தலைவியை விரைந்து மணந்துகொள்ளுமாறு தலைவனிடம் வற்புறுத்தியது.

ஏனலும் இறங்குகுரல் இறுத்தன; நோய்மலிந்து,
ஆய்கவின் தொலைந்த, இவள்நுதலும் நோக்கி,
ஏதில மொழியும்இவ் ஊரும் ஆகலின்
களிற்றுமுகம் திறந்த கவுள்உடைப் பகழி
வால்நிணப் புகவின், கானவர் தங்கை
அம்பணை மென்தோள் ஆய்இதழ் மழைக்கண்
ஒல்குஇயற் கொடிச்சியை நல்கினை ஆயின்,
கொண்டனை சென்மோ நுண்பூண் மார்ப!
துளிதலைத் தலைஇய சாரல் நளிசுனைக்
கூம்புமுகை அவிழ்த்த குறுஞ்சிறைப் பறவை
வேங்கை விரிஇணர் ஊதி, காந்தள்
தேனுடைக் குவிகுலைத் துஞ்சி, யானை
இருங்கவுள் கடாஅம் கனவும்,
பெருங்கல் வேலி,நும் உறைவுஇன் ஊர்க்கே.

தெளிவுரை

நுட்பமான வேலைப்பாடமைந்த அணிகலன்களைப் பூண்ட மார்பனே!

தினை முதிர்ந்து, வளைந்த கதிர்களும் அறுக்கப்பட்டு விட்டன. காமநோய் பெருகியதால் இவள் நெற்றியும் அழகு கெட்டது; இதனை நோக்கி இவ்வூர் மக்களும் இவளுக்குத் தொடர்பில்லாத பழிச்சொற்களைக் கூறுகின்றனர். (இஃது இல்லையாக வேண்டும்.)

இங்குள்ள வேடர்கள், மதம் பொருந்திய கன்னத்தைக் கொண்ட ஆண்யானையின் முகத்தினைக் கிழிக்கும் அம்பினைக் கொண்டவர்கள்; வெள்ளிய நிணத்துடன் கூடிய உணவினை உண்பவர்கள். அவ்வேடர்களின் தங்கையாகிய தலைவி, அழகிய மூங்கிலையொத்த பருத்த மென்மையான தோளினையும், அழகிய இமை பொருந்திய கண்களையும், அசைந்தசைந்து நடந்து செல்லும் அழகு நடையினையும் கொண்டவள். இவளுக்கு நீ அருள் செய்வதாயின் ஒன்று செய்க.

மழைத்துளி வீசும் மலைச்சாரலில், குறுகிய சிறகுகளைக் கொண்ட வண்டுகள், நெருங்கிய சுனைகளிலுள்ள குவிந்த

மொட்டுகளின்மீது மொய்த்து மலரச்செய்கின்றன; பின்னர், வேங்கை மரங்களை நோக்கிப் பறந்து சென்று, அவற்றின் மலர்ந்த பூங்கொத்துகளில் உள்ள தாதினையுண்கின்றன; பின் அங்கிருந்தும் சென்று, தேன் பொருந்திய காந்தள் மலரின் குவிந்த குலையில் உறங்குகின்றன. உறங்கும்போது யானையின் பெரிய கன்னத்தில் ஒழுகும் மதநீரைப் பருகுவதாய்க் கனவு காண்கின்றன. அத்தகைய காட்சி கொண்ட மலையால் சூழப் பெற்றதும், வாழ்வதற்கு இனியதுமான உம் ஊர்க்கு இவளை மணஞ்செய்து அழைத்துச் செல்க.

கருத்து

தலைவ! தலைவியை மணந்து உன் ஊர்க்கு அழைத்துச் செல்.

விளக்கம்

"நுண்பூண் மார்ப! தினைப்புனங்களிலுள்ள கதிர்கள் கொய்யப்பெற்றன; இவள் நுதலும் பசலை பூத்து அழகிழந்தது; அதுகண்டு ஊரார் பழிச்சொல் கூறுகின்றனர். இவளுக்கு நீ அருள் செய்வதென்றால், இவளை மணந்து, மலையால் சூழப் பெற்றதும், உறைதற்கு இனியதுமான உன் ஊர்க்கு அழைத்துச் செல்" எனத் தோழி தலைவனிடம் கூறுகிறாள்.

உள்ளுறை

சுனையில் மலர் மொட்டுகளை மலரச்செய்த வண்டு, வேங்கை மலரை ஊதி, காந்தள் குலையிலே உறங்கி, யானையின் மதநீரைப் பருகுவதுபோல் கனவு காணும் என்றது, தலைவியின் நாணம் முதலிய தளைகளை நெகிழ்த்து, தலைவன் அவளை நுகர்ந்து, அக்களவொழுக்கத்திலேயே அழுந்தி, மேலும் பகற்குறி, இரவுக்குறிகளால் அடைதற்கரிய அவளைப் பெறுதற்கு விரும்பு கிறான் என்பதாம்.

சொற்பொருள்

1. ஏனலும் - தினையும்; இறங்குகுரல் - வளைந்த கதிர்; இறுத்தன - அறுக்கப்பெற்றன; நோய் மலிந்து - காமநோய் மிகுந்து.
2. ஆய்கவின் - ஒள்ளிய அழகு; தொலைந்த - கெட்டது; நோக்கி - அதனை நோக்கி.
3. ஏதில மொழியும் - தொடர்பில்லாத பழிச்சொற்களும்.

4. களிற்று கவுள் உடை முகம் - ஆண்யானையின் மதம் பொருந்திய முகம்; திறந்த பகழி - கிழித்த அம்பு.
5. வால் நிணம் - வெண்மையான நிணம்; புகவு - உணவு.
6. அம் பணை - அழகிய மூங்கில்.
7. ஒல்கு இயல் - அசையும் இயல்பு; நல்கினை ஆயின் - அருள் செய்தாய் ஆயின்.
8. கொண்டனை சென்மோ - வரைந்துகொண்டு செல்வாய்.
9. துளி - மழைத்துளி; தலைத் தலைஇய - முதலில் பெய்த; நளி - பெரிய.
10. கூம்பு முகை - குவிந்த அரும்பு; அவிழ்த்த - விரித்த; குறுஞ் சிறை - குறுகிய இறகு; பறவை - வண்டு.
11. வேங்கை - வேங்கை மரத்தின்; விரி இணர் - மலர்ந்த பூங்கொத்து; ஊதி - தாதினை உண்டு; காந்தள் - காந்தள் மலர்.
12. குவிகுலை - குவிந்த குலை; துஞ்சி - தூங்கி.
13. இருங்கவுள் - பெரிய கன்னம்; கடாஅம் - மதம்; கனவும் - கனாக் காணும்.
14. பெருங்கல் - மலை; வேலி - வேலியாய்ச் சூழ்ந்திருக்கும்; உறைவு இன் - தங்குதற்கு இனிய; நும் ஊர்க்கு - உன் ஊர்க்கு.

தோழி கூற்று

கலித்தொகை 52 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி வந்த தலைமகனை எதிர்ப்பட்டுத் தோழி இரவுக்குறியது ஏதமும், ஏதத்தால் வருந் துன்பமும், தன் உள்ளத்து விழைவும் கூறி வரைவுகடாயது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் தலைவன் தலைவியை இரவில் சந்தித்து வந்தான். தோழி, தலைவனைக் கண்டு, அவன் இரவுக்குறியில் வந்து செல்வதால் ஏற்படும் இடர்ப்பாடுகளையும், அவ்விடர்ப்பாடுகளால் ஏற்படும் துன்பங்களையும் எடுத்துரைத்து, அவையின்றி இன்பம் துய்க்கத் தலைவியைத் தலைவன் திருமணம் செய்துகொண்டு வாழ வேண்டும் என்னும் தன் உள்ள விழைவையும் கூறியது.

தரவு

முறஞ்செவி மறைப்பாய்பு முரண்செய்த புலிசெற்று,
மறந்தலைக் கொண்ட நூற்றுவர் தலைவனைக்
குறங்குஅறுத் திடுவான்போல், கூர்நுதி மடுத்து,அதன்,
நிறம்சாடி முரண்தீர்ந்த நீள்மருப்பு எழில்யானை,
மல்லரை மறம்சாய்த்த மால்போல்,தன் கிளைநாப்பண்,
கல்உயர் நனஞ்சாரல், கலந்துஇயலும் நாட!கேள்;

தாழிசை

தாமரைக் கண்ணியை, தண்நறும் சாந்தினை,
நேரிதழ்க் கோதையாள் செய்குறி நீவரின்,
'மணம்கமழ் நாற்றத்த மலைநின்று பலிபெறூஉம்
அணங்கு'என அஞ்சுவர், சிறுகுடி யோரே.

ஈர்ந்தண் ஆடையை, எல்லி மாலையை,
சோர்ந்துவீழ் கதுப்பினாள் செய்குறி நீவரின்,
ஒளிதிகழ் ஞெகிழியர், கவணையர், வில்லர்,
'களிறு'என ஆர்ப்பவர் ஏனல்கா வலரே!

ஆர மார்பினை, அண்ணலை, அளியை,
ஐதுஅகல் அல்குலாள் செய்குறி நீவரின்,
'கறிவளர் சிலம்பில் வழங்கல் ஆனாப்
புலி'என்று ஓர்க்கும்,இக் கலிகேழ் ஊரே.
எனவாங்கு–

சுரிதகம்

விலங்குஓரார், மெய்ஓர்ப்பின், இவள்வாழாள்; இவள்அன்றிப்
புலம்புகழ் ஒருவ! யானும் வாழேன்;
அதனால், பொதிஅவிழ் வைகறை வந்து,நீ குறைகூறி,
வதுவை அயர்தல் வேண்டுவல்; ஆங்குப்
புதுவை போலும்நின் வரவும்,இவள்
வதுவைநாண் ஒடுக்கமும், காண்குவல், யானே.

தெளிவுரை

"ஓர் ஆண்யானை தன் முறம் போன்ற காது மறைப்பதால் தனது பார்வையில் படாதவாறு வந்து பாய்ந்த புலியிடம் கோபம்

கொண்டது. வீரத்தில் சிறந்த நூற்றுவருக்குத் தலைவனாகிய துரியோதனனின் தொடையைப் பிளந்து உயிர் நீக்கிய வீமனைப் போல, அப்புலியின் மார்பினைத் தன் தந்தத்தால் குத்திப் பிளந்தது. தன் நீண்ட தந்தங்களால் எழில் பெற்ற அந்த யானை, கம்சன் அனுப்பிய மல்லர்களை வென்ற கண்ணபிரானைப் போலத் தலை நிமிர்ந்து, தனது இனத்தோடு அகன்ற மலைச் சாரலில் திரியும். இத்தகைய மலை வளம் நிறைந்த நாட்டிற்கு உரியவனே!" என்று தலைவனை விளித்துத் தோழி கூறத் தொடங்குகிறாள்.

"தலைவ! நான் கூறுவதைக் கேள்; நீ தாமரைக்கண்ணியைச் சூடிக் குளிர்ந்த சந்தனத்தைப் பூசிக்கொண்டு, ஒரே சீரான இதழ்களை மாலையாய்த் தொடுத்தணிந்த என் தலைவி குறித்த இடத்திற்கு வந்தாயானால், இச்சாரலில் உள்ள சிறுகுடிகளில் வாழ்வோர், மணங்கமழும் இந்த மலையில் நின்று, மக்கள் தரும் பலியைக் கொள்ளுகின்ற தெய்வங்களுள் ஒன்று என்று உன்னைக் கருதி அஞ்சுவர்.

"நீ மழையினால் ஈரமான ஆடையோடு இரவு நேரத்தில் மாலையை அணிந்துகொண்டு, குலைந்து விழும் கூந்தலைக் கொண்ட என் தலைவி குறித்த இடத்திற்கு வந்தாயானால், இங்குச் சிறு கொள்ளிகளை வெளிச்சத்திற்காக வைத்துக் கொண்டு கல் எய்யும் கவணையும் வில்லையும் ஏந்தித் தினைப் புனத்தைக் காவல் செய்வோர், நீ செய்யும் ஒலி அடையாளங் களைக் கொண்டு அங்கு யானை வந்தது என்று கருதி ஆரவாரம் செய்வர்.

"நீ மார்பில் பொன்னாரம் அணிந்து, தலைமைப்பண்பும் கருணையும் கொண்டு, மெல்லிய அகன்ற அல்குலைக் கொண்ட தலைவி சொல்லிய குறியிடத்திற்கு வந்தாயானால், மிளகுக் கொடிகள் நிறைந்த மலைச்சாரலில் அடிக்கடி வந்து உலவும் புலி என்று ஊர் மக்கள் கருதுவர்.

"அனைவரும் பாராட்டும் அறிவைக் கொண்டவனே! இப்படி இங்குள்ளோர் உன் வருகையைத் தெய்வத்தின் வருகை, விலங்கின் வருகை என்று கருதாமல், கூர்ந்து பார்ப்பார்களே யானால், நீ வருவதை அறிந்து பழி தூற்றுவர். அதைக் கேட்டுத்

தலைவி உயிர் வாழமாட்டாள். இவளைப் பிரிந்து நானும் வாழ மாட்டேன். அதனால் மலர்கள் கட்டவிழப் பெற்று மலரும் நாளைய வைகறைப்பொழுதில் நீ இங்கு வந்து, உன் விருப்பத்தை எங்கள் சுற்றத்தாரிடம் கூறித் தலைவியைத் திருமணம் செய்து கொள்.

"திருமணம் நடக்கும்போது நீ எங்களுக்குப் புதியவன்போல நடித்துக்கொண்டு இருப்பதையும், திருமணத்தால் ஏற்பட்ட வெட்கத்தால் தலைவி கூனிக் கூசி இருப்பதையும் நான் கண்டு மகிழ விரும்புகிறேன். (இந்த இனிய வாய்ப்பை எனக்குத் தா.)"

கருத்து

இரவுக்குறி வருவதை விடுத்து, எம் சுற்றத்தாரிடம் மணம் பேசித் தலைவியைத் திருமணம் செய்துகொள்.

விளக்கம்

"இரவுக்குறியிடத்து நீ வருவாயாயின், இச்சிறுகுடியில் உள்ளோர் உன்னை மணம் கமழ்கின்ற மலையிலிருந்து வந்து பலி கொள்ளவிருக்கும் 'அணங்கு' என்று கருதி அஞ்சுவர்;

"தினைப்புனத்தைக் காவல் செய்யும் வில்லேந்திய வீரரோ, 'யானை வந்துவிட்டது' என்று ஆரவாரம் செய்வர்;

"செருக்குமிகுந்த இந்த ஊரோ, மிளகு வளர்கின்ற மலையிலே அடிக்கடி வந்து உலாவும் 'புலி வந்துவிட்டது' என்று புகல்வர்.

"வருவது நீதான் என்னும் உண்மையை இவர்கள் அறிவராயின், தலைவி உயிர் வாழமாட்டாள்; அவள் இல்லாமல் நானும் வாழ மாட்டேன். ஆகையால், இரவு நேரத்தில் வாராமல், காலை நேரத்தில் வந்து, எம் சுற்றத்தாரோடு பேசித் தலைவியை நீ திருமணம் செய்துகொள்வதையே நான் விரும்புகிறேன்" எனத் தோழி தலைவனிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. முறஞ்செவி - முறம் போன்ற காது; பாய்பு - பாய்ந்து; முரண் செய்த - பகைத்த; செற்று - கோபங்கொண்டு.
2. மறம் - வீரம்; தலைக் கொண்ட - சிறந்த; நூற்றுவர் தலைவன் - கௌரவர் நூற்றுவருள் முதல்வனாகிய துரியோதனன்.

3. குறங்கு - தொடை; அறுத்திடுவான் - பிளந்த வீமன்; நுதி - முனை; மடுத்து - செருகி.
4. நிறம் - மார்பு; முரண் - பகை; நீள் மருப்பு - நீண்ட கொம்பு.
5. மல்லர் - (கம்சன் அனுப்பிய) போர்வீரர்; மறம் - வீரம்; சாய்த்த - கெடுத்த; மால் - திருமால், கண்ணன்; கிளை - சுற்றம்; நாப்பண் - நடுவே.
6. நளஞ்சாரல் - அகன்ற மலைச்சாரல்.
7. கண்ணி - தலைமாலை; சாந்து - சந்தனம்.
8. கோதையாள் - மாலையணிந்த தலைவி; செய்குறி - சொல்லிய குறியிடம்.
10. அணங்கு - வருத்தும் தெய்வம்.
11. ஈர்ந்தண் - ஈரமான குளிர்ச்சி பொருந்திய; எல்லி - இரவு; மாலையை - மாலையை அணிந்தவளாய்.
12. கதுப்பினாள் - கூந்தலைக் கொண்ட தலைவி.
13. ஞெகிழி - கொள்ளிக்கட்டை; கவண் - கல் எறியப் பயன்படும் கருவி; வில்லர் - வில்லினை உடையவர்.
14. ஏனல் - தினைப்புனம்.
15. ஆரம் - பொன் ஆரம்; அண்ணல் - பெருமை; அளி - கருணை.
16. ஐது - அழகான; அகல் - அகன்ற.
17. கறி - மிளகுக்கொடி; சிலம்பு - மலை; வழங்கல் ஆனா - அடிக்கடி வந்து உலாவும்.
18. ஓர்க்கும் - சிந்திக்கும், கருதும்; கலி - ஆரவாரம்; கேழ் - நிறைந்த.
20. ஓரார் - நினையாராய்; மெய் ஓர்ப்பின் - உண்மையை (நீ வருவதை) அறிந்தால்.
21. புலம்புகழ் ஒருவ! - நாடு போற்றும் தலைவனே!
22. பொதிஅவிழ் - மலர்களின் மொட்டவிழ்கின்ற; வைகறை - காலை; குறை - உன் குறையை (விருப்பத்தை); கூறி - எம் உறவினரிடம் சொல்லி.
23. வதுவை - திருமணம்; அயர்தல் - புரிதல்.
24. புதுவை போலும் நின் வரவும் - நீ புதியவன் போல வருவதையும்.
25. நாண் ஒடுக்கம் - நாணத்தால் ஒடுங்கியிருப்பதையும்; காண்குவல் - காண்பேன்.

தோழி கூற்று

நற்றிணை 206 **ஐயூர் முடவனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

பகற்குறியில் தலைவன் சிறைப்புறத்தானாகத் தோழி அவன் கேட்குமாறு, "தலைவிக்குத் திருமணம் செய்யப் பெற்றோர் கருதியுள்ளனர். தலைவி இனி இற்செறிக்கப்படுவாள்; களவுக்குரிய வாய்ப்பும் அரிது; மணம் முடித்தற்கு விரைந்து முயல்க" எனத் தலைவனுக்கு உணர்த்தியது.

துய்த்தலைப் புனிற்றுக்குரல் பால்வார்பு இறைஞ்சி,
தோடுஅலைக் கொண்டன ஏனல் என்று,
துறுகல் மீமிசைக் குறுவன குழீஇ,
செவ்வாய்ப் பாசினம் கவரும்என்று அவ்வாய்த்
தட்டையும் புடைத்தனை, கவணையும் தொடுக்கஎன
எந்தைவந்து உரைத்தன னாக, அன்னையும்,
'நல்நாள் வேங்கையும் அலர்கமா இனி'என
என்முகம் நோக்கினள்; எவன்கொல்? தோழி;
செல்வாள் என்றுகொல்? செறிப்பல் என்றுகொல்?
கல்கெழு நாடன் கேண்மை
அறிந்தனள் கொல்அஃது அறிகலேன் யானே!

தெளிவுரை

"தலைவியே! 'பஞ்சு போன்ற நுனியைக் கொண்ட தினை யாவும் கதிர் விட்டன. கதிர்கள் பால் நிறைந்து முற்றித் தலை சாய்த்தன; மேலே மூடப்பட்டிருந்த தோடுகள் பிரிந்து போயின. தினைக்கொல்லையிலுள்ள கதிர்களை உண்ணக் கருதிப் பாறைகளில் கிளிகள் கூடியிருக்கின்றன. ஆதலின், நம் மகள் புனத்திற்குச் சென்று, தட்டையைப் புடைத்தும், கவண்கல் வீசியும் கிளிகளை ஓட்ட வேண்டும்' என்று தந்தை நேற்றுத் தாயிடம் கூறினார். அது கேட்ட தாயும், 'திருமணத்துக்குரிய நன்னாளைக் காட்டும் வேங்கை மலரும் மலர்வதாகுக' என்று சொல்லி என் முகத்தை

உற்று நோக்கினாள். அதனால் அவள், 'நீங்கள் தினைப்புனம் செல்க' என்பாளா, அன்றி 'இனி வீட்டினுள்ளேயே இருப்பீராக' எனச் செறித்து வைப்பாளோ? மலைநாடனோடு கொண்ட நட்பை அன்னையும் அறிந்தனளோ? அவள் கருதியது யாதோ? நான் அறிந்திலேன்" என்று தோழி கூறினாள்.

கருத்து

தந்தை, புனங்காவலுக்குச் செல்க என்றார்; தாய், வேங்கை மரம் மலர்வதாகுக என்று கூறியவளாய்த் தலைவியை நோக்குகிறாள். மலை நாடனொடு தலைவிக்கு நேர்ந்துள்ள நட்பை அறிந்துதான் அன்னை அப்படிச் சொன்னாளோ எனத் தோழி கலங்குகிறாள்.

குறிப்பு

வேங்கை மலர்வது மணம் செய்வதற்குரிய காலமாகும். மகள் மணத்துக்குரிய தகுதி எய்திவிட்டாள்; ஆதலின், திருமணம் செய்தல் வேண்டும் என்பதைக் குறிப்பாய் அன்னை சொன்னாளோ எனத் தோழி எண்ணுகிறாள்.

கதிர் முற்றித் தலைசாய்ந்த தினையைக் கவர்ந்து செல்லக் கிளியினம் குழுமுவதுபோலப் பருவ மலர்ச்சியுற்ற தலைவியை மணந்துகொள்ளக் கருதிப் பலரும் வருதல் கூடும். அவரிடமிருந்து அவளைக் காக்கத் தலைவன் அவளை மணந்துகொள்ள வேண்டும் என உட்பொருள் அமைத்துத் தோழி கூறியதாய்க் கொள்ளலாம்.

சொற்பொருள்

1. துய் - பஞ்சு; தலை - நுனி; புனிறு - இளமை; குரல் - கதிர்; பால் வார்பு - பால் நிறைந்து; இறைஞ்சி - வளைந்து, தலை சாய்ந்து.
2. தோடு - மூடியிருந்த தோடு; அலைக் கொண்டன - நீங்கத் தலைப்பட்டன; ஏனல் - தினைக்கதிர்.
3. துறுகல் - உருண்டையான பாறைக்கல்; மீமிசை - மேலே; குறுவன - தினைக்கதிர்களைக் கொத்திச் செல்ல; குழீஇ - கூடியிருக்கும்.
4. பாசினம் - பசிய கிளிக் கூட்டம்; அவ்வாய் - அப் புனத்தில்.
5. தட்டை - கிளிகடி கருவி; புடைத்தல் - தட்டுதல்; கவணை - கவண், கல்லெறி கருவி.
6. எந்தை - எம் தந்தை.

7. நல்நாள் - திருமண நாள்; அலர்கமா - மலர்வதாகுக. (வேங்கை மலரும் காலம் திருமணம் செய்வதற்குரிய காலம் என்று கருதப்பட்டது).
8. எவன் கொல் - என்ன சொல்வாளோ?
9. செறிப்பல் - வீட்டினுள்ளேயே செறிப்பாளோ?
10. கேண்மை - உறவு.
11. அறிகலேன் யான் - நான் அறியேன்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 46 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி நெறி விலக்கி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தோழி, வழியின் கொடுமை கூறித் தலைவனை வர வேண்டா என வேண்டுவதோடு தலைவியை வரைந்துகொள்ளுமாறும் வலியுறுத்திக் கூறியது.

தந்தாயல் வேண்டாவோர் நாள்கேட்டுத் தாழாது
வந்தால்,நீ எய்துதல் வாயால்மற்(று) – எந்தாய்
மறிமகர வார்குழையாள் வாழாள்நீ வாரல்
எறிமகரம் கொட்கும் இரா.

தெளிவுரை

“எம் பெருமானே! திருமணம் செய்துகொள்வதுபற்றி மற்றவரோடு ஆராய்ந்து காலத்தை வீணே போக்க வேண்டா. நல்லதொரு நாளினை ஆராய்ந்து, காலம் தாழ்த்தாது நீயே மணம் பேசி வரின் நிச்சயமாய் இவளை நீ அடைதல் கூடும். ஆதலின், கரை வழியே செல்பவரைக்கூடத் தாக்கும் சுறாமீன்கள் திரியும் உப்பங்கழிகளில் இரவில் இனி நீ வரவேண்டா. அவ்வாறன்றி, இனியும் வருவாயாயின் சிறிய சுறாமீனைப் போன்ற காதணிகளைக் கொண்ட தலைவி உயிர் வைத்திருக்க

மாட்டாள்" என்று கூறித் தலைவன் இரவு வருதலைத் தோழி மறுத்தாள்.

கருத்து

'தலைவ! இரவில் கொடிய வழியில் வரவேண்டா. நல்ல நாள் தேர்ந்து உடனே மணம் பேசி வந்தால் நீ தலைவியை அடைதல் கூடும். காலம் தாழ்த்தின் தலைவி உயிர் வாழாள்.

விளக்கம்

மணம் குறித்து மற்றவரிடம் ஆராய வேண்டுவதில்லை; நல்ல தொரு நாளில் நீயே நேரில் வந்து மணம் பேசினால், இவளை நீ அடைதல் உறுதி. காலத்தை வீணே கழிக்காதே.

சொற்பொருள்

1. தந்து ஆயல் - சிலரை அழைத்து வந்து ஆராய்தல்; ஓர் நாள் - நல்ல தொரு நாள்; கேட்டு - ஆராய்ந்து; தாழாது - காலம் நீட்டியாது.
2. எய்துதல் - அடைதல்; வாய் ஆல் - கட்டாயம் வாய்க்கும்.
3. மறிமகரம் - சிறிய சுறாமீன்; வார் - வார்க்கப்பட்ட; குழையாள் - காதணியைக் கொண்ட தலைவி.
4. எறி மகரம் - எதிர்வருபவரைத் தாக்கும் சுறாமீன்; கொட்கும் - திரியும்; இரா - இரவு.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 266 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

நொதுமலர் வரைவு பிறந்துழித் தலைமகட்கு உளதாகிய வேறுபாடு தோழி கூறித் தலைமகனை வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

வேற்றவர் வந்து தலைவியை மணம் பேசுகின்றனர். அதனால் தலைவியின் உடலும் உள்ளமும் வேறுபட்டன. அதைத் தலைவனிடம் கூறி, அவனை உடனடியாய்த் தலைவியை வரைந்து கொள்ள வேண்டுமெனத் தோழி தூண்டிச் சொல்லியது.

சிறுகண் பன்றிப் பெருஞ்சின ஒருத்தலொடு
குறுக்கை இரும்புலி பொரூஉம் நாட!
நனிநாண் உடைமையம் மன்ற
பனிப்பயந் தனநீ நயந்தோள் கண்ணே!

தெளிவுரை

சிறு கண்களும் பெருஞ்சினமும் கொண்ட ஆண்பன்றியோடு குறுகிய முன்னங்கால்களைக் கொண்ட பெரிய புலி போரிடும் காட்சி கொண்ட நாட்டிற்குரியவனே! உன்னால் விரும்பப்பட்ட தலைவியின் கண்கள் கலங்கி நீர் சொரிவதைக் காண். (அதைக் கண்டும் செயலற்றவனாயுள்ளாயே! செய்ய வேண்டியதைச் செய்யாதுள்ளாயே என்று தோழி எள்ளுகிறாள்.)

கருத்து

தலைவ! அயலவர் மணம் பேசி வருவதற்குமுன், தலைவியை நீ மணந்து கொள்.

விளக்கம்

தனக்கு நிகரான ஆற்றல் வாய்ந்தது அன்று என்றாலும், தன் வழியில் குறுக்கிட்ட பன்றியைக் கொல்கிறது, புலி. அஃறிணை உயிர்கூட இந்த உணர்வைக் கொண்டிருக்கும் நாட்டினைக் கொண்ட தலைவன், தனக்கு நிகரில்லாதவர் தலைவியை மணம் பேச முயலும்போது, அவன் வாளாவிருப்பது நாணத்தைத் தருகிறது என்று எள்ளலாய்க் கூறி, அவனை வரைவொடு வருதற்குத் தோழி தூண்டுகிறாள்.

சொற்பொருள்

1. சிறுகண் - சிறிய கண்களையும்; பெருஞ்சின - மிகுந்த சினத்தையும் கொண்ட; (பன்றி) ஒருத்தல் - ஆண் பன்றியோடு.
2. குறுக்கை - குறுகிய முன்னங்கால்; இரும்புலி - பெரிய புலி; பொரூஉம் - போர் செய்யும்.
3. நனி நாண் உடைமையம் - பெரிதும் நாணத்தை உடையவராய் இருக்கின்றோம்.
4. நீ நயந்தோள் - உன்னால் விரும்பப்பட்டவள்.

தோழி கூற்று

நற்றிணை 375 **பொதும்பில்கிழார் மகன் வெண்கண்ணி**

திணை : நெய்தல்

கூற்று

வரையாது நெடுங்காலம் வந்தொழுக, தலைமகளது நிலையுணர்ந்த தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியை நெடுங்காலம் களவொழுக்கத்தில் கூடி மகிழ்ந்தனன்; ஆயினும், வரைவு மேற்கொள்ள முயலவில்லை. அதனால் மிகவும் வருந்திய தோழி, தலைவனிடம் வரைவுமேற்கொள்ளச் சொல்லியது.

நீடுசினைப் புன்னை நறுந்தாது உதிர,
கோடுபுனை குருகின் தோடுதலைப் பெயரும்
பல்பூங் கானல் மல்குநீர்ச் சேர்ப்ப!
அன்புஇலை ஆதலின் தன்புலன் நயந்த
என்னும் நாணும் நன்னுதல் உவப்ப,
வருவை ஆயினோ நன்றே பெருங்கடல்
இரவுத்தலை மண்டிலம் பெயர்ந்தென, உரவுத்திரை
எறிவன போல வரூஉம்
உயர்மணல் படப்பைஎம் உறைவுஇன் ஊரே.

தெளிவுரை

நீண்ட கிளையைக் கொண்ட புன்னை மரத்தில் அதன் அழகிய மகரந்தம் உதிரும்படி அக்கிளைகளின்மீது அமர்ந்திருந்த நாரைகள் தமக்குரிய இரையைத் தேடப் பெயர்ந்து சென்றன. அவ்வாறான பல்வகைப் பூக்கள் பூத்து விளங்கும் கடற்கரைச் சோலையையும் பெருகிய நீர்ப்பரப்பையும் கொண்ட நெய்தல் நிலத்திற்குரிய தலைவனே! (நீ பல காலம் வந்து முயங்கியும்) எம்பால் அன்பில்லாதவனாய் உள்ளாய்! தலைவி, தன் அறிவிற் பட்டதை என்னிடம் உரைப்பதற்கும் நாணப்படுபவள். அத்தலைவி உவக்கும்வண்ணம் நீ ஒன்று செய்தல் வேண்டும். பெரிய கடலில் இரவில் முழு நிலா எழுந்தால் அதுகண்டு

அலைகள் பொங்கி நிற்கும் உயர்ந்த மணல் நிரம்பிய கொல்லை களைக் கொண்டது, எம் ஊர். இவளை மணந்துகொள்வதற்கு நீ அவ்வூருக்கு வருகுவையாயின், அது மிக நன்றாம்.

கருத்து

நெய்தல்நிலத் தலைவனே! அன்பில்லையாயினும் கடமை கருதியாவது நீ தலைவியை வரைந்துகொள்ள வரவேண்டும்.

விளக்கம்

ஐயனே! நீ எம்மிடம் அன்பில்லாதிருப்பது மிகவும் கொடியது. தலைவி தன் அறிவில் பட்டதை என்னிடம் உரைப் பதற்கும் மிகவும் நாணம் கொள்பவள். அத்தலைவி மகிழுமாறு எம் இனிய ஊர்க்கு நீ மணம் பேசி வருகுவையாயின் மிகவும் நன்றாம்.

இறைச்சி

திங்களைக் கண்டு கடல் பொங்கி அலையெழுந்து ஆரவாரிக்கும் என்றது, தலைவன் வரைவொடு வருதல் கண்டு தலைவிக்கு உறவினர் எதிர்கொண்டு மகிழ்ந்து ஆரவாரிப்பர் என்பதாம்.

உள்ளுறை

புன்னைக்கிளையில் அதன் மகரந்தம் உதிருமாறு தங்கிய நாரைக் கூட்டம் இரை தேடிப் பறந்து செல்லும் என்னும் தொடர்மூலம், களவொழுக்கம் மேற்கொண்டு தலைவிபால் தங்கிய தலைவன் அவள் அழுது கண்ணீர் வடிக்குமாறு நீங்கிச் சென்றான் என்னும் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. நீடு - நீண்ட; சினை - கிளை.
2. கோடுபுனை - உச்சியில் தங்கியிருக்கும்; குருகு - நாரை; தோடு - கூட்டம்.
3. மல்குதல் - நிறைதல்.
4. தன்புலன் - தன் அறிவு; நயந்த - அவளை விரும்பும்.
5. என்னும் - என்னிடம் சொல்லவும்; நாணும் - நாணப்படும்.

6. வருவை - வருகுவையாயின்.
7. மண்டிலம் - நிலா மண்டிலம்; பெயர்ந்தென - எழுந்ததாக; உரவுத் திரை - பரந்த அலை.
8. எறிதல் - மோதுதல்.
9. படப்பை - தோட்டம், கொல்லை; உறைவு இன் - தங்குவதற்கு இனிய.

தோழி கூற்று

அகநானூறு 112 **நெய்தற் சாய்த்துய்த்த ஆவூர் கிழார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி வந்த தலைமகனை எதிர்ப்பட்டு நின்று, தோழி சொல்லி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியில் தலைவன் தலைவியை நாள்தோறும் கண்டு மகிழ்ந்து சென்றான். தோழி ஒருநாள் தலைவனைத் தனியாய் எதிர்ப்பட்டுத் தலைவியை மணந்துகொள்ள வேண்டுமென்று கூறியது.

கூனல் எண்கின் குறுநடைத் தொழுதி
சிதலை செய்த செந்நிலைப் புற்றின்
மண்புனை நெடுங்கோடு உடைய வாங்கி,
இரைநசைஇப் பரிக்கும் அரைநாட் கங்குல்
ஈன்றுஅணி வயவுப்பிணாப் பசித்தென, மறப்புலி
ஒளிறுஏந்து மருப்பின் களிறு,அட்டுக் குழுமும்
பனிஇருஞ் சோலை, ‘எமியம்’ என்னாய்,
தீங்குசெய் தனையே, ஈங்குவந் தோயே;
நாள்இடைப் படின்,என் தோழி வாழாள்;
தோளிடை முயக்கம் நீயும் வெய்யை;
கழியக் காதலர் ஆயினும், சான்றோர்
பழியொடு வரூஉம் இன்பம் வெஃகார்;
வரையின் எவனோ? – வான்தோய் வெற்ப!–
கணக்கலை இகுக்கும் கறிஇவர் சிலம்பின்
மணப்புஅருங் காமம் புணர்ந்தமை அறியார்,

தொன்றுஇயல் மரபின் மன்றல் அயர,
பெண்கோள் ஒழுக்கம் கண்கொள நோக்கி,
நொதுமல் விருந்தினம் போல,இவள்
புதுநாண் ஒடுக்கமும் காண்குவம், யாமே.

தெளிவுரை

"கூனல் முதுகினையும் குறுக அடியிட்டு நடக்கும் நடையினையும் கொண்ட கரடிக்கூட்டம், நடுநாள் இரவில் கறையான் புற்றினது செந்நிற நீண்ட உச்சியை உடைத்துப் புற்றாம் சோறாகிய உணவினை உண்டு, மேலும் தின்ன விரும்பித் திரிந்துகொண்டிருக்கும்.

"அண்மையில் குட்டியை ஈன்ற பெண்புலி ஒன்று பசித்திருந்தது. அதற்கு உணவு தேடி வரச் சென்ற வலிமை வாய்ந்த ஆண்புலி, ஒளி வீசும் கொம்பினை ஏந்திய ஆண்யானையைக் கொன்று முழங்கியது. குளிர்ச்சி பொருந்திய இருள் செறிந்த அத்தகைய சோலையில் யாம் தனிமையில் உள்ளோம் என்று கருதாது இங்கு வந்த நீ, எங்கட்கு அருள் செய்யவே வந்தாய்; எனினும், தீங்கினைச் செய்யவே வந்தவன் ஆனாய்.

"ஒருநாள் நீ வாராது இடைப்பட்டாலும் தலைவி உயிர் வாழாள்; நீயும் அவள் தோளினை நாள்தோறும் தழுவ விரும்புகின்றாய். சான்றாண்மை வாய்ந்தோர் மிக்க காதல் கொண்டவரேயாயினும் பழியுடன் கூடியதாய் அமைகின்ற இன்பத்தை, ஒரு நாளும் விரும்பமாட்டார். உனக்கு எம் தலைவியை முறையாய் மணம் செய்து கொள்வதில் உள்ள துன்பந்தான் யாதோ?

"கலைமான் கூட்டம் தாழ ஒலிக்கும் மிளகுக்கொடி படர்ந்த பக்க மலையில் எய்துதற்கரிய காமத்தால் நீ களவிலே கூடியதை அறியாத எம் சுற்றத்தார்முன் நீ மணம் பேசி வருக. எம் இருமுது குரவரும் சான்றோர் முதலாயினோரும், தொன்றுதொட்டு வரும் முறைப்படி உம் திருமணத்தை நடத்திடுவர்; நாங்களும் நீ எம் தலைவியை மணந்து பெண்கொள்ளுவதைக் கண் குளிரக் காண்போம். உனக்குப் புதியவள்போல் தலைவி நாணத்தால் ஒடுங்கியிருக்கும் ஒடுக்கத்தையும் அப்போது காண்போமன்றோ?" என்று சொல்லித் தலைவனை வரைந்துகொள்ளத் தூண்டுகிறாள், தோழி!

கருத்து

அச்சம் மிக்க காட்டுவழியில் நீ வருவது எங்கட்கு மிகுந்த துன்பத்தைத் தருகிறது. நீ மணம் பேசி வந்தால் எம் பெற்றோர், முறைப்படி திருமணத்தை நடத்தி வைப்பர். நீங்கள் மணம் கொள்ளும் காட்சியை நாங்கள் கண்குளிரக் காணவேண்டும்.

உள்ளுறை

கரடியின் கூட்டம் கறையான் புற்றை உணவிற்காக உடைத்து, அதிலுள்ள புற்றாஞ்சோற்றினையுண்டது; மேலும் அதனையே விரும்பித் திரிந்தது. இத்தொடர் வாயிலாய், தலைவனும் தலைவியைப் பெற்ற தாய் தந்தையர் காவலைச் சிதைத்துத் தலைவியோடு இன்பம் நுகர்ந்தான்; அஃதோடு அமையாது மீண்டும் அக்களவொழுக்கத்தையே விரும்பி, இரவுக்குறி, பகற்குறி ஆகியவற்றைப் பெறுவதற்குச் சுற்றிச் சூழ்ந்து வருகிறான் என்னும் கருத்துப் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. எண்கு - கரடி; தொழுதி - கூட்டம்.
2. சிதலை - கறையான்; செந்நிலை - சிவந்த நிலை, செந்நிறம்.
3. கோடு -உச்சி; வாங்கி - பெயர்த்து.
4. நசைஇ - விரும்பி; பரிக்கும் - திரிந்துகொண்டிருக்கும்; அரைநாள் - நடு யாமம்.
5. ஈன்று அணி - அண்மையில் ஈன்ற தன்மையைக் கொண்ட; வயவு - வருத்தம்; பிணவு - பெண்புலி.
6. ஏந்து மருப்பு - ஏந்திய கொம்பு, தந்தம்; அட்டு - கொன்று; குழுமும் - முழங்கும்.
7. எமியம் - தனியேம்; என்னாய் - என்று நினையாய்.
9. நாள் - ஒரு நாள்; இடைப்படின் - இடைப்பட்டால்.
10. முயக்கம் - தழுவுதல்; வெய்யை - விரும்புகின்றாய்.
11. கழிய - மிக்க.
12. வெஃகார் - விரும்ப மாட்டார்.
13. வரையின் எவன்? - நீ மணந்துகொள்வதில் என்ன குறை உள்ளது?
14. கணக்கலை - கலைமான் கூட்டம்; இகுக்கும் - தாழ ஒலிக்கும்; கறி - மிளகுக்கொடி; இவர் - படர்ந்த.
15. புணர்ந்தமை அறியார் - நீங்கள் கூடிய களவொழுக்கத்தினை (எம் பெற்றோர்) அறியார்.

16. தொன்றுஇயல் - தொன்றுதொட்டு வரும்; மன்றல் - திருமணம்; அயர - நிகழ்த்திட.
17. பெண்கோள் ஒழுக்கம் - நீ இவளை வரைந்துகொள்ளும் ஒழுக்கத் தினை.
18. நொதுமலர் - அயலார்; விருந்தினம் - புதியவர்.
19. புதுநாண் - புதிய நாணத்துடன்; ஒடுக்கம் - ஒடுங்கியிருத்தல்; காண் குவம் - காண்போம்.

தோழி கூற்று

நற்றிணை 159 **கண்ணம்புல்லனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகளின் ஆற்றாமையும் உலகியலும் கூறி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

தோழி தலைவனிடம், "யாம் பகற்பொழுதில் உன்னோடு இங்கிருந்து மாலையில் பாக்கம் செல்வோம் என்றால் தலைவி அங்கு வருவதற்கு வருத்தமுறுவாள். அவளை, 'ஊருக்குச் செல்லலாம், வருக' என்றழைக்கும் வலிமை எமக்கில்லை. எனவே, எம் பாக்கத்தினர் மகிழ்ந்து கொண் டாடுமாறு, இரவுப்போதில் அங்கு வந்து தங்கிச் செல்" என்று கூறுவதன்வழி வரைவு வேண்டியது.

மணிதுணிந்து அன்ன மாஇரும் பரப்பின்
உரவுத்திரை கெழீஇய பூமலி பெருந்துறை,
நிலவுக்குவித்து அன்ன மோட்டுமணல் இடிகரை;
கோடுதுணர்ந்து அன்ன குருகுஒழுக்கு எண்ணி,
எல்லை கழிப்பினம் ஆயின், மெல்ல
வளிசீத்து வரித்த புன்னை முன்றில்,
கொழுமீன் ஆர்கைச் செழுநகர்ச் செலீஇய,
'எழு'எனின் அவளும் ஒல்லாள்; யாமும்
'ஒழி'என அல்லம் ஆயினம்; யாமத்து,
உடைதிரை ஒலியில் துஞ்சும் மலிகடல்
சில்குடிப் பாக்கம் கல்லென
அல்குவ தாக,நீ அமர்ந்த தேரே!

தெளிவுரை

"தலைவ! நீலமணி மாசு நீங்கித் திகழ்ந்தாற்போலக் கரிய பெரிய நீர்ப்பரப்பினைக் கொண்டிருக்கிறது, கடல். வலிய அலைகள் கொண்டுவந்து குவித்த மணல்மேட்டில் பூக்கள் நிறைந்துள்ள பெரிய கடல்துறையாகும் அது. அங்கு நிலவொளி யைத் திரட்டிக் குவித்து வைத்தாற்போன்றிருந்த மணல்மேட்டின் கரை இடிந்து சரியும். கரையில் நின்றபடியே, சங்குகளைக் கொத்துக்கொத்தாய் நிரைத்தாற்போலக் கடற்குருகுகள் அமர்ந்திருக்கும் வரிசைகளை எண்ணிக் கணக்கிட்டபடி உன்னோடு பகற்பொழுதைக் கழித்தோம். மாலை வந்துற்றது; 'காற்றடித்துப் புன்னை மலர்கள் உதிர்ந்ததால் அழகு பொருந்திய முற்றத்தைக் கொண்ட வளமான வீட்டிற்குக் கொழுவிய மீனுணவை உண்ணுவதற்குச் செல்வோம்; எழுந்து வருக' என்று தலைவியிடம் மெல்லச் சொன்னோம். அதற்கு அவள், உன்னை விட்டு நீங்கி எம்மோடு புறப்பட உடம்படவில்லை. 'நீ கொண்ட கருத்தைக் கைவிடு' என்று அவளிடம் கூறுதற்குரிய வல்லமையும் எமக்கில்லை. அதனால் சேர்ப்பனே! உடையும் அலையின் ஒலியைக் கேட்டபடியே உறங்கும் எம் பாக்கத்திலுள்ளோர் ஆரவாரிக்கும்படியாக உன் தேர் இன்று இரவுப்பொழுதில் எம் பாக்கத்தில் வந்து தங்கட்டும்" என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

'கடல்நிலத் தலைவ! இன்று இரவில் எம் பாக்கத்து விருந்தினனாய்த் தங்கிச் சென்றால் என்ன?' என்று கூறுவதன்வழி தோழி, தலைவன் தலைவியை மணக்க வேண்டும் என்பதைக் குறிப்பாய்க் கூறினாள்.

விளக்கம்

"நீல நிற நீரைக் கொண்ட பெரிய கடற்பரப்பு; அங்கு அலைகள் கொண்டுவந்து சேர்த்த வெண்ணிற மணல்மேடு. அம்மேட்டின் சரிவில் நின்றபடியே, தொகுதிதொகுதியாய் இருக்கும் கடற்குருகுகளைக் கணக்கிட்டுக்கொண்டிருப்போம். மாலையானதும், புன்னை மரம் பொருந்தி அழகு செய்யும் முற்றத்தைக் கொண்ட எம் வீட்டிற்குக் 'கொழுவிய மீனுணவை

உண்பதற்காகச் செல்வோம்; புறப்படு' என்றால், அதற்கு அவள் இசைய மாட்டாள். நாங்களும் அவளை விட்டுவிட்டுச் செல்ல இயலாது. ஆதலால், எம் சிறுகுடிப்பாக்கத்திலிருப்போர் ஆரவாரித்து வரவேற்கும்படியாக உன் தேர் இன்று இரவு அங்கு வந்து தங்கட்டும்" என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

குறிப்பு

தலைவன் தலைவியை மணந்துகொண்டால் மட்டுமே ஊரார் வரவேற்க அவன் அங்குச் செல்ல இயலும். எனவே, 'பாக்கத்தார் வரவேற்குமாறு வரைவொடு வருக' என்று தோழி குறிப்பிடுகின்றாள்.

சொற்பொருள்

1. துணிந்து அன்ன - மாசு நீங்கினாற்போல; மா இரும் பரப்பு - பெரிய கரிய பரப்பு (கடல்).
2. உரவுத் திரை - பரந்த அலைகள்; கெழீஇய - பொருந்திய.
3. நிலவு - நிலவொளி; மோட்டு மணல் - பெரிய மணல் பரந்த; இடிகரை - சரிந்த கரை.
4. கோடு - சங்கு; துணர்தல் - குலையாய்ச் சேர்தல்; குருகு - கொக்கு; ஒழுக்கு - வரிசை.
5. எல்லை - பகற்பொழுது; கழிப்பினம் - கழித்தோம்.
6. வளி - காற்று; சீத்து - உதிர்த்தலால்; வரித்த - கோலமிட்டாற்போல (மலர்கள் உதிர்ந்து கிடக்கும்).
7. ஆர்கை - உண்ணுதல்; செலீஇய - செல்லுதற்கு.
8. எழு - புறப்படு; ஒல்லாள் - உடம்படாள்.
9. ஒழி - இங்கேயே இரு; அல்லம் ஆயினம் - என்று சொல்ல இயலாதவர் ஆயினோம்.
10. உடைதிரை - கரையில் மோதி உடையும் அலை; துஞ்சும் - உறங்கும்; மலிகடல் - பரந்த கடல்.
11. பாக்கம் - சிற்றூர்; கல்லென - ஆரவாரிக்குமாறு.
12. அல்கல் - தங்கல்.

தோழி கூற்று

அகநானூறு 394 **நன்பலூர்ச் சிறுமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

இரவுக்குறித் தலைமகளை இடத்துய்த்து வந்த தோழி தலைமகனை வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

ஒரு நாள் இரவுக்குறியில் தலைவியைக் கொண்டுவந்து நிறுத்திய தோழி, தலைவனிடம் தலைவியை விரைவில் மணந்துகொள்ளுமாறு கூறியது.

களவும் புளித்தன, விளவும் பழுநின,
சிறுதலைத் துருவின் பழுப்புஉறு விளைதயிர்,
இதைப்புன வரகின் அவைப்புமாண் அரிசியொடு,
கார்வாய்த்து ஒழிந்த ஈர்வாய்ப் புற்றத்து
ஈயல்பெய்து அட்ட இன்புளி வெஞ்சோறு
சேதான் வெண்ணெய் வெம்புறத்து உருக,
இளையர் அருந்த, பின்றை – நீயும்
இடுமுள் வேலி முடக்கால் பந்தர்,
புதுக்கலத்து அன்ன செவ்வாய்ச் சிற்றில்,
புனைஇருங் கதுப்பின்நின் மனையோள் அயர,
பாலுடை அடிசில் தொடீஇய, ஒருநாள்,
மாவண் தோன்றல்! வந்தனை சென்மோ –
காடுஉறை இடையன் யாடுதலைப் பெயர்க்கும்
மடிவிடு வீளை வெரீஇ, குறுமுயல்
மன்ற இரும்புதல் ஒளிக்கும்
புன்புல வைப்பின்எம் சிறுநல் ஊரே.

தெளிவுரை

வள்ளல் தன்மை வாய்ந்த தலைவனே! காட்டில் வாழும் இடையன் தன் ஆடுகளை ஒரே இடத்தில் கூட்டுவதற்காக, வாயை மடித்துச் சீழ்க்கை எழுப்புவான். அந்த ஒலியைக் கேட்டு அஞ்சிய குறுமுயல், மன்றத்திலுள்ள பெரிய புதரில் மறைந்து கொள்ளும். அத்தகைய எம் முல்லைநிலச் சிற்றூரிலே களாவின்

கனிகள் புளிப்புச்சுவை எய்தப் பழுத்தன; விளாவின் கனிகளும் முதிர்ந்து பழுக்கலாயின.

எம் வீட்டில், சிறிய தலையினைக் கொண்ட செம்மறி யாட்டின் பழுப்பு நிறமுடைய கட்டித் தயிர் கொண்ட உலையில், கொல்லையில் விளைந்த வரகு அரிசியை இடுவர்; கார் காலத்தில் மழை பெய்து அடங்கியபின், நனைந்த வாயினைக் கொண்ட புற்றிலிருந்து வெளிப்படும் ஈசலையும் இதில் போட்டு, இனிய புளிப்புடைய விருப்பம் தரும் புளியஞ் சோற்றினைச் சமைப்பர். வெப்பம் பொருந்திய அச்சோற்றில் உருகுமாறு வெண்ணெயினை பெய்து வைப்பர். அவ்வாறு சமைத்த சோற்றினை முன்னதாக உன் ஏவலர் உண்ணத் தருவர்.

அதன் பின்னர், முள்வேலியுள்ள இடத்தில், வளைந்த கால் கொண்ட பந்தரின் கீழே, புதுக் கலத்திற்குப் பூசப்படுவதுபோல் சிவந்த மண் பூசிய சிற்றிலில், ஒப்பனை செய்யப்பட்ட கருமையான கூந்தலைக் கொண்ட உன் மனைவி, உனக்கு விருந்து படைப்பாள். பால் பெய்த அந்தச் சோற்றினை உண்பதற்காக என்றேனும் ஒரு நாள் வந்து செல்!

கருத்து

இரவுக்குறியெல்லாம் விடுத்து நீ எம் வீட்டு மணமகனாய் வரவேண்டும். அந்த நன்னாள் விரைவில் வரவேண்டும் எனத் தோழி, களவுக்காதலரைக் கணவன் மனைவி நிலையில் வைத்துப் பேசுகிறாள்.

சொற்பொருள்

1. களவும் புளித்தன - களாவின் கனிகள் பழுத்துப் புளிப்புச் சுவை எய்தின; விளவும் - விளாவும்; பழுநின - முதிர்ந்து பழுத்தன.
2. துரு - செம்மறியாடு; விளை தயிர் - முதிர்ந்த தயிர்.
3. இதை - தினை; அவைப்புமாண் - குத்துதலால் மாட்சிமைப்பட்ட.
4. கார் வாய்த்து - கார் மழை பெய்து; ஈர்வாய் - நனைந்த வாயினைக் கொண்ட; புற்றத்து - புற்றிலிருந்து; ஒழிந்த - வெளிப்பட்ட.
5. அட்ட - சமைத்த; வெஞ்சோறு - விருப்பம் மிக்க சோறு.
6. சேதான் - சிவப்புப் பசு; வெம்புறத்து - வெப்பம் பொருந்திய சோற்றின்.
7. இளையர் - ஏவலாளர்; பின்றை - பிறகு.
8. முடக்கால் - வளைந்த கால்.

9. செவ்வாய் - சிவந்த மண் பூசிய.
10. புனை - ஒப்பனை செய்யப்பட்ட; அயர - விருந்தயர, படைப்ப.
11. அடிசில் - உணவு; தொடீஇய - உண்ணுதற்கு.
12. மாவண் தோன்றல்! - மிக்க வள்ளல் தன்மை வாய்ந்த தலைவனே!; வந்தனை சென்மோ - வந்து செல்க.
13. யாடு - ஆட்டினம்; தலைப்பெயர்க்கும் - ஓரிடத்தில் கூட்டும்.
14. மடி விடு - உதட்டை மடித்து விடுகின்ற; வீளை - சீழ்க்கை; வெரீஇ - அஞ்சி.
15. இரும்புதல் - பெரிய புதர்.
16. புன்புலம் - முல்லை நிலம்; வைப்பு - ஊர்.

தோழி கூற்று

நற்றிணை 67 **பேரி சாத்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறி வந்து நீங்கும் தலைமகனைத் தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

பகற்குறி வந்து நீங்கும் தலைவனை நோக்கி, 'மாலைப்பொழுதாயிற்று; வரும் வழி துன்பமுடையது; உறவினரும் வேட்டைமேற்சென்றுள்ளனர். எனவே, எம் ஊர் வந்து இரவில் தங்கிச் செல்க' எனப் பிரிவாற்றாமை கூறுவாள்போல, தோழி, தலைவன் தலைவியை விரைவில் மணந்துகொள்ள வேண்டும் என்னும் குறிப்பும் புலப்படக் கூறியது.

சேய்விசும்பு இவர்ந்த செழுங்கதிர் மண்டிலம்
மால்வரை மறையத் துறை,புலம் பின்றே;
இறவுஅருந்தி எழுந்த கருங்கால் வெண்குருகு
வெண்கோட்டு அருஞ்சிறைத் தாஅய், கரைய
கருங்கோட்டுப் புன்னை இறைகொண் டனவே;
கணைக்கால் மாமலர் கரப்ப, மல்குகழித்
துணைச்சுறா வழங்கலும் வழங்கும்; ஆயிடை,
எல்இமிழ் பனிக்கடல் மல்குசுடர்க் கொளீஇ,
எமரும் வேட்டம் புக்கனர்; அதனால்,
தங்கின் எவனோ தெய்ய பொங்குபிசிர்

முழவுஇசைப் புணரி எழுதரும்
உடைகடற் படப்பைஎம் உறைவின் ஊர்க்கே?

தெளிவுரை

உயர்ந்த வானில் எழுந்து தோன்றிய செழுமையான கதிர்களைக் கொண்ட கதிரவன், பெரிய மலையிடையே சென்று மறைதலால், நம் கடல்துறை, மக்கள் நடமாட்டமின்றித் தனிமை யுற்றது. இறா மீன்களைத் தின்று எழுந்த கரிய கால்களைக் கொண்ட வெண்ணிற நாரைகள், உப்புக்குவியல்களின் மேலாகப் பறந்து சென்று, கரையிலுள்ள கருமையான கிளைகளைக் கொண்ட புன்னை மரங்களில் தங்கின. திரண்ட தண்டினைக் கொண்ட நெய்தல் மலர்கள் மறையும்படியாக நீர் பெருகும் உப்பங்கழிகளில் சுறா மீன்கள் தத்தம் துணையோடு உலாவிக் கொண்டிருக்கும். ஒலிக்கின்ற குளிர்ச்சி பொருந்திய கடலில், இரவில் மீன் பிடிப்பதற்காய் விளக்குகள் பலவற்றை எடுத்துக் கொண்டு எம் சுற்றத்தாரும் மீன் பிடிக்கச் சென்றுவிட்டனர். ஆதலால், சிறுசிறு திவலைகளாய் உடைந்து முழவு போல அலை எழுந்து ஒலிக்கின்ற கடற்கரையிலுள்ள நெய்தல் நிலத்தில் உள்ள எமது ஊரில் நீங்கள் இன்றிரவு தங்கிச் செல்வதால் என்ன குறை நேர்ந்துவிடும்? (ஒரு குறையும் நேராது.)

கருத்து

‘இரவில் தலைவன் எம்மூரில் தங்கிச் செல்லலாம்; அதனால் குறை ஏதும் நேராது.’

விளக்கம்

சுறா மீன் திரியுமிடமாதலால் திரும்பச் செல்லும் வழி ஏத முடையது என்றும்,

தமர், மீன் வேட்டைக்குச் சென்றுள்ளனராதலால், அவரால் குற்றம் எதுவும் நேராதென்றும் கூறி,

குருகுகள் கிளைகளில் தங்குவது போன்று, தலைவனும் தங்கள் இல்லத்தில் தங்கிச் செல்லலாம் என்றும் தோழி குறிப்பிடுகின்றாள்.

குறிப்பு

தலைவியின் மனையில் தங்குதற்குரிய சூழல் காணப்பட்டாலும், திருமணம் நடைபெறாமல் அவன் அங்குத் தங்க இயலாதென்பதை உணர்த்தி, விரைவில் திருமணத்திற்கு ஏற்பாடுகள் செய்யுமாறு தூண்டு கிறாள், தோழி.

சொற்பொருள்

1. சேய் விசும்பு - சேய்மையிலுள்ள வானம்; இவர்தல் - உயர்தல்.
2. மால் வரை - பெரிய மலை; புலம்பின்று - தனிமைப்பட்டது.
3. இறவு - இறால் மீன்; கருங்கால் - கரிய கால்களைக் கொண்ட.
4. வெண் கோடு - வெள்ளை நிறமுள்ள உப்புக்குவியல்; அருஞ் சிறை - ஒரு பக்கம்; கரைய - கரையிலுள்ள.
5. கோடு - கிளை; இறை கொண்டன - தங்கின.
6. கணைக்கால் - திரண்ட தண்டு; மாமலர் - பெரிய நெய்தல் மலர்; கரப்ப - மறைய; மல்கு கழி - நீர் பெருகும் உப்பங்கழி.
7. சுறா - சுறாமீன்கள்; வழங்கும் - உலாவும்; ஆயிடை - அவ்விடத்தே.
8. எல் - இரவு; இமிழ் - ஒலிக்கின்ற; மல்கு சுடர் - பல விளக்குகள்.
9. எமர் - எம் சுற்றத்தார்; வேட்டம் - மீன் வேட்டை; புக்கனர் - சென்றுள்ளனர்.
10. எவன்? - என்ன?; பிசிர் - நுண் திவலை.
11. முழவு இசை - முழவு போலும் ஒலிக்கும்; புணரி - கடல்; எழுதரும் - எழுந்து.
12. உடை கடல் - (அலைகள்) உடைபடும் கடல்; படப்பை - ஊர்; உறைவின் - உறைவு இன் - தங்குவதற்கு இனிமையான.

தோழி கூற்று

குறுந்தொகை 179 **குட்டுவன் கண்ணன்**

திணை : குறிஞ்சி

கூற்று

பகல் வருவானை இரவுக்குறி நேர்ந்தாள் போன்று வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் தலைவன் தலைவியைப் பகற்குறியில் சந்தித்து வந்தான். தோழி அவனை இரவுக்குறியில் வருமாறு கூறி, பிறகு அதையும் மறுத்து, தலைவியை மணந்துகொள்ளுமாறு வற்புறுத்திக் கூறியது.

கல்லென் கானத்துக் கடமா ஆட்டி,
எல்லும் எல்இன்று; ஞமலியும் இளைத்தன;
செல்லல் ஐஇய! உதுஎம் ஊரே?
ஓங்குவரை அடுக்கத்துத் தீந்தேன் கிழித்த
குவையுடைப் பசுங்கழை தின்ற கயவாய்ப்
பேதை யானை சுவைத்த
கூழை மூங்கிற் குவட்டிடை யதுவே.

தெளிவுரை

"தலைவ! 'கல்' என்னும் ஆரவார ஓசையைக் கொண்ட காட்டில், நீ கடமாவை அலைத்துத் துன்புறுத்திப் பகற்பொழுதும் மங்கியது; உன்னுடைய வேட்டை நாய்களும் களைத்துள்ளன; அதனால், நீ உன் ஊர் செல்ல வேண்டா. உயர்ந்த மலை அடுக்கத்தில், கூட்டமாயுள்ள பசுமையான மூங்கில்கள் தேனிறாலைக் கிழிக்கின்றன; அம்மூங்கில்களைக் குழிந்த வாய் கொண்ட இளம் யானைகள் உண்ணுகின்றன. அவை உண்ட பின் எஞ்சிய குட்டை மூங்கில்கள் நின்றுகொண்டுள்ளன. மலையுச்சியில் இவ்வாறு உள்ள இடத்திலேதான் எம் ஊர் உள்ளது. அங்கு வந்து நீ தங்கிச் செல்க" என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

தலைவ! இரவில் எம் ஊரில் தங்கிச் செல்க.

விளக்கம்

"பகற்பொழுதும் மங்கியது; நாய்களும் களைப்புற்றுள்ளன. இந்நிலையில் உன் ஊருக்குச் செல்ல இயலாது; ஆதலின், மலையுச்சியிலுள்ள எம் ஊரில் தங்கி இளைப்பாறிப் பின்னர்ச் செல்க" என்று தோழி தலைவனிடம் கூறினாள். தலைவன் அங்குத் தங்கியிருத்தலும் கடினம்; புதியவனான அவனை ஊரார் ஐயுறுவர். இத்தொல்லைகளெல்லாம் நீங்க, தலைவன் தலைவியை மணந்துகொண்டு அவளுடன் ஒன்றாய் உறைதலே சிறந்தது என்று தோழி தலைவனைத் தூண்டும் வகையில் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. 'கல்' என் - 'கல்' என்னும் ஆரவாரத்தைக் கொண்ட; கானம் - காடு; கடமா - ஒரு வகை விலங்கு; ஆட்டி - அலைத்து.
2. எல்லும் - பகற்பொழுதும்; எல்இன்று - ஒளி மங்கியது; ஞமலி - நாய்கள்; இளைத்தன - களைப்புற்றன.
3. செல்லல் ஐஇய - ஐய! நீ செல்ல வேண்டா; உது எம் ஊர் - அஃது எம் ஊர்.
4. ஓங்கு வரை - உயர்ந்த மலை; தீந்தேன் - இனிய தேனடை.
5. குவையுடை - கூட்டமாயுள்ள; பசுங்கழை - பசிய மூங்கில்; கயவாய் - குழிந்த வாய்.
6. பேதை யானை - இளைய யானை; சுவைத்த - தின்ற, உண்ட.
7. கூழை - குட்டை; குவடு - மலையுச்சி; இடையது - (மலை உச்சியின்) இடையிலே உள்ளது.

தலைவன் கூற்று

திருக்குறள் 1107 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

'இவளை நீ வரைந்துகொண்டு, உலகோர் தம் இல்லிருந்து தமது பாத்து உண்ணும் இல்லறத்தில் ஈடுபட வேண்டும்' என்ற தோழிக்குத் தலைமகன் உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியுடன் களவொழுக்கம் நிகழ்த்தி வந்தான். அவனிடம், தோழி, 'களவொழுக்கத்தைத் தவிர்த்து, வரைந்து இல்லறம் நடத்துக' என்றாள். அதற்கு உடம்படானாய்த் தலைவன் கூறியது.

தம்இல் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு.

தெளிவுரை

அழகிய மாமை நிறமுள்ள இத்தலைவியின் தழுவுதல், தமக்குச் சொந்தமான வீட்டில் வாழ்ந்துகொண்டு, தம் முயற்சியால் கிடைத்த உணவை, அவ்வுணவு இல்லாதவர்க்கும் பங்கிட்டுக் கொடுத்துத் தாமும் உண்ணும்போது பெறுகின்ற இன்பத்தைத் தருகிறது.

கருத்து

மணந்து இல்லறம் செய்வார் பெறும் இன்பத்தை நான் இக்களவொழுக்கத்திலேயே பெறுகின்றேன்.

விளக்கம்

தலைவியை மணம் செய்து இன்பமடைவாய் என்ற தோழிக்குத் தலைவன் மணம் செய்துகொள்ள மறுத்து, 'எனக்கு அவ்வில்லற இன்பத்தைத் தலைவியோடு சேர்ந்திருக்கும் இக்களவுப்புணர்ச்சியே தருகிறது' என்றான்.

குறிப்பு

ஒவ்வொருவரும் தத்தம் சொந்த முயற்சியால் ஈட்டிய பொருளாலே உண்டு வாழ்வதே சிறந்த இன்பம்; பகுத்துண்டு வாழ்தலே சிறந்த பண்பாடு என்பன உயரிய குறிப்புகள்.

சொற்பொருள்

2. அம் மா - அழகிய மாமை நிறமுள்ள; அரிவை முயக்கு - பெண்ணின் தழுவுதல்.
1. தம் இல் இருந்து - தம்முடைய சொந்த வீட்டில் வாழ்ந்திருந்து; தமது - தம் முயற்சியால் கிடைத்த உணவை; பாத்து உண்பது அற்று - (பிறர்க்கும்) பகுத்துக் கொடுத்துத் தானும் உண்ணும்போது அடையும் இன்பம் போன்றது.

தலைவன் கூற்று

திருக்குறள் 1108 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இருவர்க்கும் இடையீடுபடாத முயக்கு இல்லறத்திலேயே இயலுமென்று வரைவு கடாவிய தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

ஒருபொழுதும் நீங்காத முயக்கம் பெற, நீங்கள் திருமணம் செய்து கொள்ளுங்கள் என்று கூறிய தோழியிடம் தலைவன் கூறியது.

வீழும் இருவர்க்(கு) இனிதே வளி,இடை
போழப் படாஅ முயக்கு.

தெளிவுரை

காற்றும் இடையே நுழைந்து செல்லாதபடி இறுகத் தழுவிக் கொள்ளுதல், ஒருவரை ஒருவர் விரும்பும் காதலர் இருவர்க்குமே இனிமை தரும்.

கருத்து

இறுகத் தழுவுதல் காதலர்க்கு இனிமை.

விளக்கம்

"ஒத்த அன்புள்ள உம் இருவர்க்கும் இடைவிடாத முயக்கம் இனியதாதலால், இனி, 'மணம் செய்து கூடுக' என்று சொல்லும் தோழியே! நீ கூறுவது சரியே! ஆனால், இப்போது காற்றும் இடையே புகுதற்கு இடமில்லாமல் நாங்கள் இறுகத் தழுவி யிருப்பது எம் இருவர்க்கும் இனியதாயுள்ளது" என்று தலைவன் திருமணத்திற்கு உடன்படாமல் களவுப்புணர்ச்சியைப் பற்றி மகிழ்ந்து கூறுகிறான்.

குறிப்பு

'காற்றும் இடை செல்ல இயலாது இறுகத் தழுவி இன்புற்றிருக்கிறோம்' என்று களவுப்புணர்ச்சியின் இனிமை கூறித் தலைவன் திருமணத்திற்கு உடன்படாது உள்ளான்.

சொற்பொருள்

1-2.வளி இடை போழப் படாஅ - காற்றுக்கூட இடையில் செல்ல முடியாத படி; முயக்கு - இறுகத் தழுவுதல்.

1. வீழும் இருவர்க்கு - ஒருவரை ஒருவர் விரும்பும் (காதலர்) இருவர்க்கும்; இனிது - இனியது ஆகும்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1109 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

'இடையறவு இல்லாத கூட்டம் இன்பப் பயனுடைத்து' என வரைவு கடாவிய தோழிக்குத் தலைமகன் கூறியது.

கூற்று விளக்கம்

'மணம் செய்துகொண்டு இடையீடு இல்லாத கூட்டம் பெறுவதே இல்லறப் பயன்' என்று கூறிய தோழியிடம் அதனை மறுத்துத் தலைவன் கூறியது.

ஊடல், உணர்தல், புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன்.

தெளிவுரை

ஊடல் கொள்ளுதல், பின்னர் அளவறிந்து அதனை நீக்கிக் கொள்ளுதல், அதற்கும் மேலான இன்பம் காணப் புணர்தல் ஆகிய இவை, காதல் வாழ்வில் வெற்றி பெற்ற காதலர் பெறக் கூடிய பயன்கள்.

கருத்து

ஊடல், அதனை அளவறிந்து நீக்கல், அதன்பின் நிகழ்வதாகிய புணர்ச்சி ஆகிய இவை, வரைந்துகொண்டு காமவின்பம் சிறந்தவர் பெறுகின்ற பயன்.

விளக்கம்

ஊடல் கொள்ளுதல், அளவறிந்து அதனை நீக்குதல், அதன் பின்னர்ப் பெறும் புணர்ச்சி ஆகிய இப்பயன்கள் மணம் செய்து கொண்டு இடைவிடாது அனுபவிப்பவர்க்கே எய்தும் என்று தோழி கூறினாள். அது கேட்ட தலைவன், 'தோழியே! நீ கூறுவனவெல்லாம் மணம் செய்து அனுபவிக்கின்ற மற்றவர்க்கே பொருந்தும் அல்லாமல், ஈருடலும் ஒருயிருமாய் எப்போதும் ஒத்த அன்பு கொண்ட எம்மிருவர்க்கும் பொருந்தாது' என்று கூறித் தலைவன் களவுப்புணர்ச்சியைப் பற்றி மகிழ்ந்து கூறினான்.

குறிப்பு

"ஊடல், உணர்தல், புணர்தல் ஆகிய இவை, மணந்து கற்பொழுக்கத்தில் பெறுகின்ற பயன்கள். வரையாமையால், காண்பதற்கு அருமையாதல், மறைவாய் இன்பம் சிறத்தல், பிரிவைத் தாங்க இயலாது தவித்தல், இரண்டறக் கலத்தல் ஆகிய இக்களவொழுக்கப் பேரின்பத்திற்கு, அக்கற்பொழுக்க ஊடிப் புணரும் இன்பம் எவ்வகையிலும் ஈடாகாது" என்று தோழியிடம் தலைவன் கூறித் திருமணத்தைத் தள்ளி வைத்தான்.

சொற்பொருள்

1. ஊடல் - ஊடுதல்; உணர்தல் - ஊடல் நீங்குதலும்; புணர்தல்- பின்னர்க் கூடுதல்; இவை - (ஆகிய) இவை.
2. காமம் கூடியார் - காதலால் இடைவிடாது பிணைக்கப்பட்டவர்; பெற்ற பயன் - பெற்ற பயன்களாம்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1141 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

அல்லகுறிப்பட்ட பிற்றைஞான்று வந்த தலைமகனைத் தோழி அலர்கூறி வரைவுகடாயவழி அவன் சொல்லியது.

கூற்று விளக்கம்

இரவில் அல்லகுறிப்பட்ட தலைவன் தலைவியைக் காண இயலாது திரும்பினான். மறுநாள் தலைவனைக் கண்ட தோழி, ஊரார் அலர் தூற்றுவதைச் சொல்லி, அவன் தலைவியை மணந்துகொள்ள வேண்டும் என்று கூறியபோது தலைவன் அவளிடம் கூறியது.

அலர்எழ ஆருயிர் நிற்கும் அதனைப்
பலர்அறியார் பாக்கியத் தால்.

தெளிவுரை

எம் இருவரின் காதலொழுக்கம்பற்றி ஊரார் பழிதூற்றிப் பேசுகின்ற காரணத்தால்தான், என் உயிர் நிலை பெற்றிருக்கிறது. இஃது என் நல்வினைப் பயன் என்னும் உண்மையைப் பழி தூற்றுகின்ற பலரும் அறியார்.

கருத்து

பலர் தூற்றுவதாலேயே என் உயிர் நிலை பெற்றிருக்கிறது; அஃது எனது நல்வினைப் பயன் என்பதை மற்றவர் அறியார்.

விளக்கம்

அலர் தோன்றியதால் எம் காதலை எல்லோரும் அறிந்து கொண்டனர். இனித் திருமணம் நிறைவேறுவது உறுதி; ஆதலால், என் உயிரும் நிலைபெற்றிருக்கும்.

சொற்பொருள்

1. அலர் எழ - (தலைவியோடு நான் கொண்டுள்ள காதலைப் பிறர் அறிந்து) தூற்றுதல்.
2. பாக்கியத்தால் - (அதனை) என் நல்வினைப் பயனால்; பலர் அறியார் - பலரும் அறியாமல் இருக்கின்றனர்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1142 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

அல்லகுறிப்பட்ட பிற்றைஞான்று வந்த தலைமகனைத் தோழி, அலர் கூறி வரைவுகடாயவழி அவன் கூறியது.

கூற்று விளக்கம்

அல்லகுறிப்பட்டதாலும் இடையீடுகளாலும் தலைவனைக் காண இயலாத நிலை ஏற்பட்டது. பிறகு அவனைக் கண்ட தோழி, ஊரார் அலர் கூறுவதைச் சொல்லி, தலைவியை அவன் மணந்து அப்பழிச்சொற்களை நீக்க வேண்டுமென்று கூறியபோது, தலைவன் அவளிடம் கூறியது.

மலர்அன்ன கண்ணாள் அருமை அறியா(து)
அலர்எமக்கு ஈந்ததுஇவ் ஊர்.

தெளிவுரை

பூப்போன்ற கண்களைக் கொண்ட என் அழகிய காதலியை நான் அடைவதற்குள்ள அருமையை அறியாமல், இவ்வூரார், பழிச்சொற்களை எமக்குக் கொடுத்துள்ளனர்.

கருத்து

என் காதலியின் அருமை அறியாது ஊரார் பழிச்சொற்களை எமக்குத் தந்துள்ளனர்.

விளக்கம்

ஊரார் அலர் தூற்றுவதில் ஈடுபட்டிருப்பது, தனக்கு விரைவில் திருமணம் நிகழத் துணை புரிந்திருக்கிறது என்று தலைவன் தோழியிடம் கூறினான்.

குறிப்பு

மகளின் காதலை அறிந்த பெற்றோர் அவளைத் தனக்கு மணம் முடித்துத் தருவர் என்பது தலைவன் நம்பிக்கை.

சொற்பொருள்

1. மலர் அன்ன கண்ணாள் - பூப் போன்ற கண்களைக் கொண்ட தலைவியை; அருமை அறியாது - அடைவதற்குள்ள அருமையை அறியாமல்.
2. இவ் வூர் - இவ் ஊரார்; அலர் எமக்கு ஈந்தது - (இவனோடு இவளுக்கு நட்புண்டு என்னும்) பழிச்சொற்களை எமக்குக் கொடுத்துள்ளனர்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1143 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

அல்லகுறிப்பட்ட பிற்றைஞான்று வந்த தலைமகனைத் தோழி, அலர் கூறி வரைவுகடாயவழி அவன் சொல்லியது.

கூற்று விளக்கம்

அல்லகுறிப்பட்டதாலும் இடையீடுகளாலும் தலைவனைக் காண இயலாத நிலை ஏற்பட்டது. பிறகு அவனைக் கண்ட தோழி, ஊரார் அலர் கூறுவதைச் சொல்லி, அவன் தலைவியை மணந்து அப்பழிச்சொற்களை நீக்க வேண்டுமென்று கூறியபோது, தலைவன் அவளிடம் கூறியது.

உறாஅதோ ஊர்அறிந்த கௌவை? அதனைப்
பெறாஅது பெற்றன்ன நீர்த்து.

தெளிவுரை

எங்கள் கூட்டமுண்மைபற்றி, ஊரார் அறிந்து பழி தூற்றும் சொற்கள் எனக்குப் பொருத்தமானவையே. ஏனெனில், என் மனம் அச்சொற்களைக் கேட்கும்போது அவள் கூட்டத்தைப் பெறாமலிருந்தாலும் பெற்றதுபோன்ற தன்மையைத் தருகின்றது.

கருத்து

ஊரார் அலர் கூறுவதால் என் உயிர் நிலைத்து நிற்கிறது.

விளக்கம்

ஊரார் கூறும் பழிச்சொற்களைக் கேட்கும்போது தலைவியைப் பெற்றது போன்ற இன்பத்தைத் தான் அடைவதால், அச்சொற்கள் தனக்குப் பயன் தருவனவாய் உள்ளன எனத் தலைவன் கூறுகின்றான்.

குறிப்பு

தலைவியின் கூட்டத்தை நினைக்கும்போதே தலைவனுக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. அந்நினைவை அலர் மிகுதிப்படுத்தலால் அது தனக்குப் பொருந்துவதே என்கிறான். தலைவியுடன் தன் பெயர் இணைத்துப் பேசப்படுவதைத் தலைவன் விரும்புகின்றான்.

சொற்பொருள்

1. **ஊர் அறிந்த கௌவை** - (எங்கள் கூட்டமுண்மையை) இவ்வூர் அறிந்ததால் உண்டான பழிச்சொற்கள்; **உறாஅதோ** - எனக்குப் பொருந்தாதோ? (பொருந்தும்).

1-2. **அதனைப் பெறாஅது** - (ஏனெனில், அச்சொற்கள்) சேர்க்கையைப் பெறாத போதே; **பெற்று அன்ன** - பெற்றது போன்ற (இன்பத்தைத் தரும்); **நீர்த்து** - தன்மை கொண்டது.

தலைவன் கூற்று

திருக்குறள் 1144 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

அல்லகுறிப்பட்ட பிற்றைஞான்று வந்த தலைமகனைத் தோழி, அலர் கூறி வரைவுகடாயவழி அவன் கூறியது.

கூற்று விளக்கம்

அல்லகுறிப்பட்டதாலும் இடையீடுகளாலும் தலைவனைக் காண இயலாத நிலை ஏற்பட்டது. பிறகு அவனைக் கண்ட தோழி, ஊரார் அலர் கூறுவதைச் சொல்லி, அவன் தலைவியை மணந்து அப்பழிச்சொற்களை நீக்க வேண்டுமென்று கூறியபோது, தலைவன் அவளிடம் கூறியது.

கவ்வையால் கவ்விது காமம் அதுஇன்றேல்
தவ்என்னும் தன்மை இழந்து.

தெளிவுரை

ஊராரின் அலர் தூற்றுதலால், என் காதல் வளர்வதாயிற்று; அவ்வலர் தூற்றுதல் இல்லையென்றால், அது தன் இயல்பு இழந்து சுருங்கிவிடும்.

கருத்து

அலர் என் காம இன்பத்தை வளர்க்கிறது; இல்லாவிட்டால் காமம் தன் தன்மை இழந்து சுருங்கிவிடும்.

விளக்கம்

அலர் இல்லாவிடில் காதல் சுருங்கிவிடும் என்பதைத் தலைவன் தோழிக்கு உணர்த்தி, வரைவுக்கான முயற்சியை மேற்கொள்ளுமாறு வற்புறுத்துகிறான்.

சொற்பொருள்

1. காமம் - என் காமம்; கவ்வையால் - இவ்வூரில் உண்டான அலரால்; கவ்விது - வளர்வதாயிற்று; அது - அவ்வூர்; இன்றேல் - இல்லாவிட்டால்.
2. தன்மை இழந்து - காமம் தன் தன்மையை இழந்து; தவ் என்னும் - சுருங்கிவிடும். (தவ்வுதல் - தாழ்தல், சுருங்குதல்).

தலைவன் கூற்று

திருக்குறள் 1145 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

அல்லகுறிப்பட்ட பிற்றைஞான்று வந்த தலைமகனைத் தோழி, அலர் கூறி வரைவுகடாயவழி அவன் கூறியது.

கூற்று விளக்கம்

அல்லகுறிப்பட்டதாலும் இடையீடுகளாலும் தலைவனைக் காண இயலாத நிலை ஏற்பட்டது. பிறகு அவனைக் கண்ட தோழி, ஊரார் அலர் கூறுவதைச் சொல்லி, அவன் தலைவியை மணந்து அப்பழிச்சொற்களை நீக்க வேண்டுமென்று கூறியபோது தலைவன் அவளிடம் கூறியது.

களித்தொறும் கள்உண்டல் வேட்டற்றால் காமம்
வெளிப்படும் தோறும் இனிது.

தெளிவுரை

கள்ளுண்பவன் கள்ளுண்டலின்மூலம் களிப்பு (போதை) வெளிப்பட வெளிப்பட அக்கள்ளுண்பது அவனுக்கு இனிமை யாவதுபோல, ஊரார் அலர் தூற்றத் தூற்ற எனது காதலின் பத்தின் நினைவும் வெளிப்பட்டு, எனக்கு இனிமை பயக்கிறது.

கருத்து

கள்ளுண்பவனுக்கு அதைக் குடிக்கும் போதெல்லாம் மயக்கம் கிட்டுவதைப்போல, அலர் கூறப்படும்பொழுதெல்லாம் எனக்குக் காதல் இனிதாகிறது.

விளக்கம்

காதல் மிகுதியால் பழிச்சொல்லும் இன்பமாம்.

குறிப்பு

தோழி! எம் காதல் இன்பம் நிலைக்கத் திருமணத்திற்கான வழிவகைகளைச் செய். (நீ அறத்தொடு நில்.)

சொற்பொருள்

1-2.காமம் வெளிப்படும்தோறும் - காதல் அலரால் வெளிப்பட; இனிது - உண்டாகும் இன்பம்.

1. களித்தொறும் - கள்ளைக் குடித்து மயங்குந்தோறும்; கள்ளுண்டல் - கள் உண்பதில்; வேட்டற்று - விருப்பம் மிகுவதைப் போன்றது.

தலைவி கூற்று

திருக்குறள் 1146 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இடையீடுகளானும் அல்லகுறியானும் தலைமகனை எய்தப்பெறாத தலைமகள், அவன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய் அலரறிவுறீஇ வரைவு கடாயது.

கூற்று விளக்கம்

இடையூறுகளாலும் குறியிடம் தவறுவதாலும் தலைவியை அடைய இயலாத தலைவன் சிறைப்புறத்தேயிருக்க, அவன் கேட்குமாறு, தலைவன் விரைவில் தன்னை மணம் செய்துகொள்ள வேண்டும் என்று தலைவி தோழியிடம் கூறியது.

கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று.

தெளிவுரை

காதலரை நான் கண்டது ஒரே ஒருநாள்தான்; அதனால் ஊரார் உண்டாக்கப்பட்ட அலர் தூற்றும் செய்தி, திங்களைப் பாம்பு பற்றுதல் (கிரகணம்) உலகமெங்கும் தெரிதல்போல, ஊரெங்கும் பரவியுள்ளது.

கருத்து

களவுப் புணர்ச்சி பற்றிய அலர் ஊரெங்கும் பரவி விரிந்துள்ளது.

குறிப்பு

தலைவன் மறைந்து வந்து செல்லுவது பற்றி அறிந்து ஊரெல்லாம் பரவி யுள்ள பழிச்சொல் நீங்க வேண்டுமானால் தன்னை அவன் மணம் செய்து கொள்ள வேண்டும் என்பதைத் தலைவி குறிப்பால் புலப்படுத்துகிறாள்.

சொற்பொருள்

1. கண்டது ஒரு நாள் - தலைவனை நான் கண்டது ஒரே ஒரு நாள்; அலர் - (அதனால் எழுந்த) தூற்றுதல் (பழிச்சொல்).
2. திங்களைப் பாம்பு கொண்டற்று - திங்களைப் பாம்பு பற்றுவது (கிரகணம்) போன்றதாய் (உலகெங்கும் தெரியும்படி) பரவியுள்ளது.



சிலம்பொலி...

செந்தமிழர் செவிகளுக்குத் தேனொலி;
செம்மாந்த சிந்தனையின் பேரொளி;
நன்னெறியாளர்; நுண்ணறிவாளர்;
தன்னலம் கருதாத் தமிழ்ப்பேரறிஞர்.
சங்கத்தமிழின் ஆழம்கண்ட வேழம் இவர்.

சங்க இலக்கியங்கள், பழந்தமிழர் வாழ்வியலின்
பண்பாட்டுக் களஞ்சியங்கள்;

சாதாரண வரிக்குக் கூட மெருகூட்டி மிளிரச் செய்யும்
மேதை சிலம்பொலியின் முத்தான உரைகளோடு
தமிழுக்கு ஓர் அருங்கொடையாய்த்
தன் வாழ்நாளின் ஒப்பற்ற சாதனையாய்ப்

பதினான்கு தொகுதிகளாக வெளிவருகின்றன.
சிலம்பொலி செதுக்கியுள்ள உரைச்சிற்பங்கள் இவை
வெறும் பொழிப்புரைகள் அன்று, பொன்னுரைகள்.

தமிழ் கூறு நல்லுலகம்
சிலம்பொலியின் சீர்மிகு படைப்புக்குச்
சிவப்புக் கம்பள வரவேற்பு நல்கிப்
பெரிதும் பயன்பெறும்; அவரைப்
போற்றிப் பாராட்டும்.

இலக்கியவீதி இனியவன்

ஆறாயிரம் பக்கங்களில் பதினான்கு தொகுப்புகளாகச் சிலம்பொலி செல்லப்பனார் வடித்திருக்கும் "செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்", தமிழின் அக இலக்கிய உலகிற்கு அருளப்பட்டிருக்கின்ற அரும்பெரும் கொடை. ஐம்பதாண்டுக் காலத்திற்குமேல் தமிழின் அக இலக்கியங்களில் ஆழ்ந்து தவமிருந்து, சிலம்பொலியார் அயராமல் உழைத்ததன் காரணமாக, நமது இளம்தலைமுறையினருக்கு இப்படியோர் வரம் கிடைத்திருக்கிறது. தவமிருந்தவர் சிலம்பொலியார்; வரம் பெற்றவர்களோ தமிழர்கள்.

தமிழைத் திரட்டித் திரட்டி நிகழ்காலத்தின் கரங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற இந்நூல் வரிசை, என்றென்றைக்கும் நமது அகநூல்களுக்கான களஞ்சியமாகவும், அவற்றுக்கான அரணாகவும், அவற்றை நோக்கிப் பயணிக்க உதவுகின்ற பண்பட்ட பாதையாகவும் திகழும். இப்படைப்பு வரிசை உலகெங்கும் விரிந்து பரவுகின்ற உயிர்த்தன்மை மிக்க, உண்மைத்தன்மை மிக்க, படிப்போரை உயர்த்தும் தன்மை மிக்கவை. வணங்குவதற்கு மட்டுமன்று; நன்றி கூறவும் கைகூப்புவோம், சிலம்பொலியாரை நோக்கி.

கவிஞர் ஜெயபாஸ்கரன்

Set of 14 Books
ISBN: 978-81-8379-767-2
9 788183 797672

Vol-4
ISBN: 978-81-8379-771-9
9 788183 797719

விலை ரூ. 7200/-